# ருபின்ஸன் குரூஸோ
# சரித்திரம்

இஃது

துரைத்தன வித்தியாவகுப்பில் துவிபாஷிகராகிய

வீ. விசுவநாதபிள்ளை அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது

டேனியல் (போ

OFFICE OF THE ... MADRAS

14 AUG 1929

64

புதிய பதிப்பு

சென்னபட்டணம்:

கிறிஸ்த கல்வி அபிவிர்த்தி சங்கத்தாராற்

பிரசுரிக்கப்பட்டது

1906

O111,3LDD,R
31N06

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS

1906

142593

THE LIFE AND ADVENTURES

OF

# ROBINSON CRUSOE

TRANSLATED INTO TAMIL

BY

V. VISVANATHA PILLAI

*Translator in the Department of Public Instruction*

3423
894.8113

OFFICE OF ... 14 AUG 19.. MADRAS

**NEW EDITION**

THE CHRISTIAN LITERATURE SOCIETY

MADRAS, COLOMBO AND LONDON

1906

REPUBLISHED BY PERMISSION

OF THE MADRAS SCHOOL BOOK SOCIETY.

Daniel (Doe Foe)
Robinson Crusoe
OFFICE OF ... 14 AUG ... MADRAS

# பாயிரம்.

## கடவுள் வணக்கம்.

### வெண்பா.

சீர்படைத்த தீரந் திகழ்றாபின் ஸன்குறுஸோ
பேர்படைத்த காதைமொழி பேர்க்கவே—பார்படைத்த
போத மலர்த்தும் புனிதந் றொழுவனவன்
பாத மலர்க்கீழ்ப் பணிந்து.

---

## சரித்திர வரலாறு.

*இருபத்து நான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.*

1. **ஏ**ரோங்கு வீரறா பின்ஸனுங் குறுஸோ
விருங்கடற் புவனத்திலே
யியலா யிரத்தொரறு நூற்றொடெண் ணான்காண்டி
னேய்ந்தசெப் டெம்பர்நாவலந்
திசைதேதி யிங்கிலாந் தியோர்க்குநக ரத்திலோ
ரிகழ்விலா மரபிற்சனித்
தேற்றபரு வத்தினிற் கல்விதேர்ந் திதரநா
டேகுபெரு நசைமேற்கொளீஇச்

சீரோங்கு தாய்தந்தை யுள்ளன்பி னுற்சொலுஞ்
செம்மொழியை மீறியொன்று
தீர்ந்தவைந் நான்குவய திற்றனித் தோடிமிகு
சேய்மைக்க ணுள்ளதேயஞ்
செலுமரக் கலமேறி வீசுபுய லாற்கலந்
தெண்கடலின் மூழ்கலுந்தண்
டிணைப்பரவை யோடமவ ரோடமெற் றொருகலச்
சிற்றோட மேலிவர்ந்து

சூரோங்கி யார்மத் தெனுங்களை யடைந்துபடு
துன்பத்தை யெண்ணியேனுஞ்
சுற்றமொடு தேசவாழ் வெண்ணது கினியாத்
தொடர்ந்ததிலு மினிதிராமற்
றுள்ளுதிரை யார்கலியி லேகுகையி லக்கடற்
சோரர்கைப் பட்டடிமையாய்த்
தொலவுண்டு குற்றேவல் செய்துசம யங்கண்டு
துன்பகல வோடமேறி

நீரோங்க கடனடு விடுக்கணுறு காவலவா
ணிபவஸ்து வேற்றியேகு
நீளுநா வாயின்மா லுமிமன மிரங்கியதி
லேற்றப் பிரேஜில்கரையை
நேர்ந்துநற் புகையிலைப் பயிர்விளைத் தபிவிர்த்தி
நேர்மையி னடைந்துசிறிதும்
நிலையிலா வறிவினல் மீண்டுகினி யாச்செல்ல
நெடுவங்க மேறினனே.

2. இந்தநா வாய்மணற் குன்றினற் றடையுண்ண
விருபஃதோ டாறுவயதி
லிலகுதெற் குள்ளவமெ ரிக்காவின் வடகிழக்
கின்றிசையி லொருமனுஷனு
மிலதெனுந் தீவினெரு கரைமிசைப் புரளவல
யெழுச்சியி னடைந்துவருட
மெழுநான்கு மேலுமிரு திங்களொரு பத்தோன்ப
தெல்லைநா ளாங்குமேவி

மூந்துபல துயருழந் துஞ்சித்த மெலியாமன்
முழுமனத் தோடுநிலைமை
முன்னிமெய்க் கடவுளடி யேத்திநற் சித்தனும்
மொழியில்ல றத்தோன்பெறும்

முறைமையின் படிவீடு வாசலுப கரணநில
மொய்த்தபயிர் பச்சைமுதலா
மொழியுமெல் லாச்செல்வ மும்பெற்று நாய்பூவண
முதுமொழி யெழிற்கிளிமுதற்

பந்தியில் விலங்குவாழ்க் கைத்துணைக் கொண்டுதுப்
பாக்கிசுடு வெடிமருந்து
பகர்குண்டு ரவையாடை மரமொடரி வாள்வாய்
பரந்தகோ டரிமுதலவாம்
பலபொருள்க ளும்பார் தடுத்துடைந் திடுமுருப்
பார்த்தெடுத் தவையுமுன்றன்
பயின்றுத்தி யாற்செய்பல கருவியுந் தன்னைநற்
பாதுகாக் குந்துணையெனச்

சிந்தைகொடு வாழ்நாளில் நரமாமி சந்தனைத்
தின்பவர்கள் வந்தணுகலும்
சீரிய வுபாயமாய் விலகியன் னோர்களிற்
சிலர்தமைத் துப்பாக்கியாற்
செற்றுமற் றோர்களை வெருட்டித் துரத்திமெய்த்
தேவனரு ளாலொருகலன்
சேரவர வதிலேறி யிங்கிலாந் தென்னுநகர்
சேர்ந்தனன் மீண்டுமாதோ.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

3. ஓராயி ரத்தொ ரறுநூற்றெ டெண்பத் தேழென் றுளாவருடம்
பேரார் ஜன்மா தத்திலெங்கும் பேசு மிங்கி லாந்தடைந்தான்
சீரார் ருபின் ஸன்குறுஸோ சிறந்த வெற்றி யாளனெனன்பர்
ஏரா ரிதுசெந் தமிழ்மொழியி னெடுத்து நாமிங் கியம்புவாம்.

# ரூபின்ஸன் குரூஸோ

## 1. அத்தியாயம்.

எனது ஜனன வரலாறும் வமிச வரலாறும். பத்தொன்பது பருவத்தில் நான் கடல் யாத்திரை செய்ய நினைத்தது. தாய் தந்தையர் புத்தி சொல்லித் தடுத்தது. சகபாடி ஒருவனுடன் ஒளித்தோடிப்போய்க் கப்பலேறியது. புயல் அடித்ததும் எனக்குத் திகிலுண்டானதும். கப்பல் முழுகியது. நானும், மற்றக் கடலோடிகளும் வேறொரு கப்பலைச்சேர்ந்த ஓடத்தில் ஏறி, யார்மத் கரைக்குச் சமீபத்தில் இறங்கியது. அங்கே என் தோழன் தகப்பன் என்னைக் கண்டதும், இனிச் சமுத்திர யாத்திரை போகவேண்டாமென்று அவர் சொல்லிய நற்புத்தியை நான் அலட்சியஞ் செய்ததும்.

நான் 1632–ஆ யோர்க் நகரத்திற் சற்றுக் கௌரவமான குடும்பத்திற் பிறந்தேன். அக்குடும்பத்தார் யோர்க் நாட்டாரல்ல. எனது தந்தையின் ஜனன தேசம் வ்ரீயென். அவர் முதலில் ஹல் நகரத்திற்குப்போய், வர்த்தகஞ் செய்து, திரண்ட சொத்துச் சம்பாதித்தபின், வர்த்தகத்தொழிலை விட்டு, யோர்க் நகரத்திற்குச் சென்று, அங்கே வாசமாயிருந்தார். என் தந்தை பெயர் குறுத்ஸ்நேர். அங்கிருக்கையில், என் தந்தைக்கும் தாய்க்கும் விவாகம் நிறைவேறிற்று. எனது தாய் குடும்பத்திற்குப் பெயர் ரூபின்ஸன். அது யோர்க்ஷயர் என்னும் மாகாணத்தில் மிக்க கௌரவமுள்ள குடும்பம். அக்குடும்பப் பெயரும், என் தந்தை குடும்பத்தின் பெயரும் சேர்ந்து, என் பெயர் ரூபின்ஸன் குறுத்ஸ்நேர் என வழங்கியது. அங்கிலேய பாஷையில் ஒரு சொல் மற்றொன்றாய் மருவிவரும் வண்ணம், குறுத்ஸ்நேர் என்பது காலக்கிரமத்திற் குறூஸோ என மருவியது. இப்பொழுது எங்கள் குடும்பத்தின் பெயர் குறூஸோ என்றும், என் பெயர் ரூபின்ஸன் குறூஸோ என்றும் வழங்கிவருகின்றன.

எனது தாய் தந்தையருக்குப் புத்திரர் மூன்று பெயர். அம்மூவரில் நான் கனிஷ்டன். எனது மூத்த சகோதரர்

முன்பு கீர்த்திபெற்ற கர்னல் லக்ஹார்ட் துரை உத்தியோகம் செய்த அங்கிலேய பதாதிப்பட்டாளமொன்றிற் சேர்ந்து, வ்லாண்டர்ஸ் தேசத்தில் லெவ்டினன்ட் கர்னல உத்தியோகம் செய்துவருகையில், டன்கேர்க்கிற்குச் சமீபத்தில் அங்கிலேயருக்கும் ஸ்பானியருக்கு முண்டான யுத்தத்திற் கொல்லப்பட்டார். என் னிளைய தமயனுருக்கு வந்த கதி என்னவென்று இந்நாள்வரையில் எனக்குத் தெரியாது. அவ்வண்ணமே எனக்கு நேர்ந்த கதி கஷ்ட நஷ்ட முதலியவைகளைக் குறித்து என் தாய் தந்தையரும் அறியார்கள்.

கனிஷ்ட புத்திரனுகிய நான் ஏதாயினும் தொழில் பயிலாதிருந்ததனுல், சிறு பருவந் தொடங்கி அந்நிய தேசங்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்று எனக்கு அளவற்ற ஆசையுண்டாயிற்று. விருத்த தசை யடைந்த என் தகப்பனுர் வீட்டிலும், அயலிலுள்ள தர்மப் பாடசாலையிலும் மூலாதாரக் கல்விகளை எனக்கு ஒருவாறு நன்ருய்ப் பயிற்றுவித்திருந்தனர்; மேலும் பருவம் வரும்பொழுது, எனக்குத் தர்ம சாஸ்திரங் கற்பிக்க நினைத்திருந்தார். கப்பலேறி அந்நிய தேசங்களுக்குப் போவதொழிய, வேருெரு முயற்சியும் எனக்கிஷ்டமா யிருக்கவில்லை. இவ்வாசை என்னுள்ளத்திற் குடிகொண்டிருந்ததனுல், நான் தகப்பனுருடைய விருப்பத்திற்கு மாருய் நடந்து, அவர் சொல்லைக் கடந்து, என் தாயும் மற்றும் சுற்றத்தவர்களும் சொன்ன புத்திமதிகளை எண்ணுதிருந்தேன். இப்பெயர்ப்பட்ட விபரீத நினைவு எனக்குண்டாயிருந்ததனுல், கேடு வருமுன் மதி கெட்டு வருமென்று தோன்றிற்று.

விவேகமும் பாரதூர யோசனையுமுள்ள என் தகப்பனுர் எனது அபிப்பிராயம் இன்னதென்று நாளாவர்த்தியிலறிந்து, அதைத் தடுக்கும்பொருட்டுப் பற்பல நற்புத்திகளைச் சொல்லிக்கொண்டுவந்தார். சந்துவாதம் என்னும் வியாதி கண்டு, அவர் ஓட உலாவ நிர்வாகமின்றிப் படுத்திருக்கையில், ஒருநாட் காலையில் என்னை அழைத்து, என்னெண்ணம் எவ்விதத்திலும் தகாதென்று பலவாறு நியாயமெடுத்துக் காட்டினுர்: மேலும், அவர்: "மகனே, நீ உனது

ஜனன தேசத்திலிருந்து, நன்முயற்சி செய்து, ஜாக்கிரதையாய் நாட்கழிப்பாயானால், வரவரக் கனமும் தனமும் பெற்று, சலிப்பற்றுச் சுகமாய் வாழ்ந்திருக்கலாமே. தேசாந்தரம் போகவேண்டுமென வியர்த்தமான ஆசையைக் கடைப்பிடியாய்க்கொண்டு, வீட்டையும் நீ பிறந்த தேசத்தையும் விட்டு நீங்குவது புத்தியல்ல. தந்தேசத்தில் இடம், பொருள், ஏவல் முதலிய ஆதாவுகள் சிறிதுமில்லாதவர்கள் கடலேறி மலையேறித் தூரதேசங்களுக்குப் போய்வருந்தி உழைத்துப் பொருள் சம்பாதிக்கக் கருதுவார்கள். ஒருவிதத்திலுங் குறைவில்லாத சீமான்கள் அந்நிய தேசங்களுக்குப் போய், தம்மைப்போலும் செல்வர்களுக்குரிய பிரதாபமான அருந்தொழில்களைச் செய்து, கீர்த்திபெற நாடுவார்கள். நீ இடம், பொருள், ஏவல் சிறிதுமில்லாத அகதியுமல்ல; திரண்ட செல்வமுள்ள சீமானுமல்ல. இவ்விருதிறத்தாருக்கும் மத்திமமான ஸ்திதியில் இருக்கிறாய். மத்திய நிலைமையில் இருப்பவர்கள்தான் மனக்கவலையின்றி நாட்கழிக்கப் பக்குவசாலிகள். அவர்கள் எளியோர்களைப்போல அன்றன்று வருந்தி உழைத்து, அன்னவஸ்திராதிகளுக்குத் தகுந்த வருவழியின்றிச் சிறுமைப்படவேண்டுவதுமில்லை; சீமான்களைப் போலச் செல்வமிகுதியால் கர்வங்கொண்டு, பேராசையுடையவர்களாய்ப் பிறர் வாழ்வைக்குறித்துப் பொறாமை யடைய வேண்டுவதுமில்லை. செல்வர் வறிஞர் ஆகிய இருதிறத்தாரும் மத்திம நிலையை அபேக்ஷிக்கிறார்கள். மத்திம நிலைமையில் இருப்பவர்கள்தான் மனப்பாக்கியமுள்ளவர்கள் என்பதற்கு இதுவே தகுதியான சாட்சியென்றறி. வையகத்தை யாளும் வேந்தர்கள் தமது மேம்பாட்டால் வரும் துன்பங்களை எண்ணி, பெரும்பாலும் புலம்பி, தாம் பெரியோராகவாயினும் சிறியோராகவாயினும் பிறவாமல், மத்திய நிலைமையோராய்ப் பிறந்தால் எத்தனை சௌக்கியமாயிருக்குமென்று வருந்துகிறார்கள். “தரித்திரத்தையாகிலும் செல்வத்தையாகிலும் எனக்குத் தரவேண்டாம்” என்று பிரார்த்தனை செய்த ஞானசிகாமணியாகிய சாலோமோன் என்பவர் மத்திய ஸ்திதியில் இருப்பவர்களே மெய்ப்பாக்கியமுடையவர்கள் என்பதற்குச் சாட்சி பகர்ந்தார்.

நன்றாய் விசாரித்துப்பார். இம்மைக்குரிய ஆபத்துக்களுக்குச் செல்வரும் வறிஞரும் ஆளாகிறார்கள். மத்திய ஸ்திதியில் இருப்பவர்களுக்கு வரும் துயரம் சொற்பம்; சுக துக்கங்களில் அத்தனை மாறுதலுமில்லை. செல்வருக்குத் துன்மார்க்கத்தினாலும், சுகபோகங்களினாலும், ஆராதுரித்தனத்தினாலும் பற்பல மனத்துயரங்களும் பிணிகளும் உண்டாகும். வறியோர் மிக வருந்தி உழைப்பதனாலும், அன்ன வஸ்திர முதலிய ஜீவனாதாரப் பொருள்களில்லாமையினாலும், சுகத்திற்கடாத எளிய போஜனத்தை உண்பதனாலும், திருப்தியான போஜனஞ் செய்ய இடமில்லாமையினாலும் எப்பொழுதும் மனத்துன்பப்படுவதுமன்றி, கொடிய வியாதி கண்டு உபத்திரவப்படுவதுமுண்டு. இவ்வித துன்ப துயரங்கள் மத்திய நிலைமையோராகிய சாதாரண ஜனங்களுக்கில்லை. அவர்களே சர்வ சற்குணராய், நானாவித அனுபவங்களையும் எளிதில் அடைவார்கள். சமாதானமும் பரிபூரணமும் அவர்களுக்குத் தொண்டுசெய்யும். மதுவிலக்கு, மன அடக்கம், அமைதி, சுகம், ஜனசங்காத்தம், நானாவித நற்காலக்ஷேபம், இச்சிக்கத்தகும் சகல இன்பங்கள், இவைகளெல்லாம் மத்திய நிலைமையிலிருப்பவர்களுக்குரிய நல்வரங்கள். இவ்வகுப்பார் பூலோகத்திற் சஞ்சலமின்றிச் சாந்தமாய்ச் சஞ்சரிப்பார்கள். அவர்கள் சரீரம் வருந்தியாவது மனம் வருந்தியாவது உழைத்து, அன்றன்று ஆகாரத்திற்கு அடிமைத்தொழில் செய்கிறதில்லை; மனதிற்குச் சமாதானமும், சரீரத்திற்காவதலுமில்லாமல், உடலையும் உயிரையும் வருத்தும் ஆபத்து அவர்களுக்கு வராது; பொறாமையின் மூர்க்கவெறி உண்டாகாது; பெருந்தகைமை படைதற்குரிய போராசை என்னும் தீ அவர்கள் உள்ளத்தில் மூளாது. அவர்கள் சுகமாய் வாழ்ந்து, பூலோக பிரயாணத்திற் சங்கடமின்றிச் சென்று, சகல சுகானுபவங்களையுந் தடையின்றி அனுபவித்து, தாங்கள் மனப்பாக்கியமுள்ளவர்களென்று சாட்சிபூர்வமாய்க் கண்டறிவார்கள்" என்று சொன்னார்.

பின்னும் என் தகப்பனார் எனக்கு மிகவும் பட்சமாய் வற்புறுத்திப் பின்வருமாறு கூறினார்: "அப்பா மகனே, சிறு

பிள்ளைப் புத்தியைக் காட்டாதே. நீ பிறந்து வளர்ந்த குடும்பத்தின் நிலைமைக்கும் பூலோக வியற்கைக்கும் அந்நியமான நிர்ப்பந்தங்களை வலிய வருவித்துக்கொள்ளாதே. உனக்கு அன்னவஸ்திராதிகளுக்குக் குறையில்லை. நான் உனக்கு ஒருவிதத்திலுங் குறை வராதபடி செய்து, உத்தம நிலைமையென்று இதுவரையிலுவந்து சொன்ன மத்திய நிலைமையில் நீ தளர்ச்சியின்றி யிருக்க வகைசெய்வேன். இவ்வளவு தூரம் நான் உனக்குப் புகட்டிய சற்புத்திகளைக் கேளாமல் அதிக்கிரமித்து நடந்து துன்பப்படுவாயானால், என்மேற் பழியில்லை. அது உன் குற்றத்தின் பயனேதவிர, வேறல்ல. உனக்குத் தீங்காய் விளையுமென்றறிந்த செய்கைகளையும் முயற்சிகளையும் கைக்கொள்ள வேண்டாமென்று பலவாறு எச்சரித்துச் சொன்னேன். இவ்வளவில் என் கடமை நிறைவேறிற்று. சொன்னதைச் சுருக்கி, இரண்டொரு வாக்கியத்திற் பின்னும் சொல்லுகிறேன். என் சொற்படி நீ உன் ஜனன தேசத்தில் வாசமாயிருப்பாயானால், என்னாலாகும் சகாயங்கள் அனைத்தும் செய்வேன். தேசாந்தரம் போக உன்னைத் தூண்டிவிட்டு, பிறகு உனக்கு வரும் பழிக்கு நான் ஆளாகமாட்டேன். உன் மூத்த சகோதரன் அடைந்த கதியை நினைத்துப்பார். இராணுவத்திற் சேர்ந்து யுத்தத்திற்குப் போகவேண்டாமென்று, இப்பொழுது உனக்குச் சொன்னபடி, எத்தனையோ நியாயங்களை வற்புறுத்திச் சொல்லி, அவனைத் தடுக்கப்பார்த்தேன், அவன் கேட்கவில்லை. சிறுபருவத்தில் அவன் இச்சை சென்ற துறையிலிறங்கி, இராணுவ சேவகத்திற் சேர்ந்து, சண்டையில் இறந்துபோனான். நான் எப்பொழுதும் உனக்காகக் கடவுளைப் பிரார்த்திப்பேன்; ஆனாலும், புத்திகெட்டு உன் அபிப்பிராயத்தின்படி நடப்பாயானால், கடவுள் உனக்கு அனுக்கிரகஞ் செய்யமாட்டார். என் தந்தை சொல்லை மந்திரம் போல் எண்ணி நடந்தேனில்லையேயென்று இனிமேல் ஆபத்து வருங் காலத்தில் நினைத்துப் பரிதபிப்பாய். அவ்வேளையில் உனக்குச் சகாயம் செய்வார் எவரும் இல்லாதிருப்பாய்.”

எனது தந்தை கடைசியிற் சொல்லிய வாக்குத் தப்பாமல் நிறைவேறுமென்று அவர் அறியவில்லை; ஆனாலும், காரியத்

தளவில் தவறுமற் பலித்தது. அமர்க்களத்திலிறந்த என் சகோதரனைக்குறித்துப் பேசும்பொழுது, அவர் இருகண்ணிலும் நீர் சுரந்து, ததும்பி, முகத்தில் வழிந்தது. ஆபத்து வரும் காலத்தில் நீ சகாயரின்றிப் பரிதபிப்பாயென்று என்னைக்குறித்துப் பேசியபொழுது, அளவற்ற துக்கத்தாலுண்டான அழுகையை அடக்குவதற்கு அவராலாகவில்லை. துயரம் என்னுள்ளத்தில் நிறைந்திருப்பதனால் இனிப் பேசக்கூடாதென்று அவர் அம்மட்டில் பேச்சை நிறுத்திவிட்டார். மேற்சொல்லிய வரலாறுகளைக் கேட்டு, என் மனமுருகிற்று. அவைகளைக் கேட்கும் எவர் மனம் உருகாது? இனித் தேசாந்தரம் போகும் அபிப்பிராயத்தை விட்டு, தந்தை கருத்தின்வண்ணம் எனது ஜனன தேசத்திற் சஞ்சரிக்கத் தீர்மானித்தேன்; ஆனாலும், ஐயோ! என் தீர்மானம் சில தினங்களுக்குள் மாறிப்போயிற்று. பின்னும் தகப்பனார் புத்திசொல்லி என்னைத் தடுக்காதபடி, சில வாரம் கழிந்தபின் நான் அவரை விட்டு விலக நிச்சயித்தேன். இப்படி நிச்சயித்திருந்தும், பிறகு என் மனம் சற்று இளகிற்று. நான் ஆலோசனையின்றி வீட்டைவிட்டுப் புறப்படவில்லை. சற்று உல்லாசமாயிருந்த சமயம் அறிந்து, என் தாயிடத்திற்குப் போய்: "மாதாவே, நான் தேசாந்தரம் போய், அங்கங்குள்ள அதிசயங்களைப் பார்க்க உத்தேசித்திருக்கிறேன். ஏதும் தொழில் பயிலக் கருதித் தெளிவு பெறுமளவும் அதை விடாமற் பயிலத்தக்க நிர்ணயம் எனக்கு வராது. தகப்பனார் தடைசெய்யாமல், என் கருத்திற்கிசைந்து, எனக்குச் செலவுகொடுப்பது நல்லது. எனக்குப் பருவம் பதினெட்டாகிறதல்லவா? இனித் தொழில் பயில்வதற்காயினும், நியாயவாதியிடத்தில் தர்மசாஸ்திரங் கற்பதற்காயினும் சந்தர்ப்பப்படாது. தொழில் பயில, அல்லது தர்மசாஸ்திரங் கற்கப்புகுந்தால், கிரமமான காலவரையில் அதில் உறுதியாய் நிற்கமாட்டேன், இடையில் அதை விட்டு நீங்கி, கப்பற் சேவகத்திற்குப் போய்விடுவேன்; இது நிசம். ஒருமுறைமாத்திரம் கப்பல் யாத்திரை போய்வரத் தகப்பனாரிடத்திற் பேசி, எனக்குத்தரவு வாங்கிக் கொடும். திரும்பி வரும்பொழுது கப்பற்சேவக மிதமல்லவென்று கண்டால்,

அப்புறம் போகமாட்டேன். பிரயாணத்தில் வியர்த்தமாய்ப் போக்கடித்த காலநஷ்டத்திற்கு இருமடங்கு அதிக ஜாக்கிரதையுடன் ஏதாயினும் ஒரு தொழில் பயில வாக்குத்தத்தம் பண்ணுகிறேன்" என்று சொன்னேன்.

இதைக் கேட்டு, என் தாயாருக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. அன்னை என்னைப் பார்த்து: "சொல்லக் கேள், மைந்தா, இவ்விஷயத்தைக்குறித்து உன் தந்தையுடன் பேசி ஆவது ஒன்றுமில்லை. உனக்கு நன்மை யுண்டாகத்தக்க வழி இன்னதென்று அவருக்கு நன்றாய்த் தெரியும். தீமைக் கேதுவான உன் கருத்திற்கு அவர் உடன்படமாட்டார். உன் தகப்பனார் உனக்குச் சொல்லிய பற்பல நற்புத்திகளையும், நியாயங்களையும், பட்சமு முருக்கமுமான வசனங்களையும் கேட்டிருந்தும், நீ கொண்ட கருத்தைக் கைவிடாமற் பிடிவாதம் செய்கிறாயே; இது என்ன ஆச்சரியம்! உனக்கு நாசம் வருவித்துக்கொள்ள வேண்டுமென்றிருப்பாயானால், அதற்கு நிவிர்த்தி யாதுமில்லை. உன் எண்ணத்திற்கு நானு முடன்படேன், தகப்பனு மிணங்கார். இதை உறுதியாய் நம்பு. என்மட்டில் நான் உன் நாசத்திற்கு எள்ளளவும் பாத்தியப்படமாட்டேன். என் கருத்திற்குத் தகப்பன் சம்மதிக்கவில்லை, தாயார் சம்மதித்தாரென்று நீ இனிமேற் சொல்வதற்கு இடம் தருவேனோ" என்றார்.

நான் பிரார்த்தித்தபடி என் எண்ணத்தைத் தகப்பனாருக்குச் சொல்ல, தாயார் உடன்படாதிருந்தும், எனக்கும் தமக்கும் நடந்த சம்பாஷணையை அவர் தந்தைக்கு அறிக்கை செய்ததாகவும், தந்தை கேட்டு, தமக்குண்டான மிகுந்த விசனத்தை வெளியிட்டு, பெருமூச்செறிந்து, 'நமது சிறுவன் வீட்டிலே கிரமமாயிருப்பானானாற் சுகம் பெறுவான், தேசாந்தரம் போனாலோ, எவரும் படாத பாடுபட்டு வருந்துவான். அவன் தேசாந்தரம் போவது எனக்கு எள்ளளவும் சம்மதமல்ல' என்று சொன்னதாகவும் பிற்பாடு கேள்விப்பட்டேன்.

இதற்குப்பின் தாய் தந்தையர் சொல்லை மீறி, நான் வெளிப்படுவதற்குக் கொஞ்சங் குறைய ஒரு வருஷஞ் சென்

றது. அதுவரையில் தொழில் பயிலவேண்டுமென்று அவர்கள் சொன்ன புத்தியை நான் ஒருபொழுதும் செவிகொடுத்துக் கேட்கவில்லை. எனது உறுதியான மனக்கருத்து இன்ன தென்றறிந்தும், நீங்கள் இருவரும் ஒரு பிடியாய் நின்று தடைசெய்வது தகுதியல்லவென்று அடிக்கடி அவர்களுக்குச் சொன்னேன். இப்படி இருக்கையில், ஒருநாள் ஹல் நகரத்திற்கு நான் தற்செயலாய்ப் போனேன். ஆனால் நான் அவ்விடம் போனது தேசாந்தரம் போக நினைத்தல்ல. அங்கே கூடிய என் கூட்டாளிகளிலொருவன் தகப்பனுடைய கப்பலிலேறி லந்தன் நகரத்திற்குப் போக எத்தனப்பட்டான். அவர்கள் தங்களுடன் கப்பற் செலவின்றி என்னை வரும்படி சொன்னார்கள். கப்பற்காரர் இப்பெயர்ப்பட்ட ஆசை வார்த்தை சொல்லிச் சிறுவரைக் கப்பலிலேற்றிக் கொண்டுபோவது வழக்கந்தான். அவர்கள் இந்தக் கேள்வி கேட்டவுடனே நான் தாய் தந்தையர் சம்மதி கேட்க நினைக்கவுமில்லை, அவர்களுக்குச் செய்தி தெரிவிக்கவுமில்லை, தெரிவிப்பது அவசியமென் றெண்ணவுமில்லை. எனது காரியம் வாய்க்கும்படி கடவுளைப் பிரார்த்திக்காமலும், தகப்பனரிடத்தில் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளாமலும், காரியாகாரியங்களையாவது, பின்வரும் நன்மை தீமைகளையாவது சிந்திக்காமலும் அந்தக் கூட்டாளிகளுடன் போகத் தீர்மானித்து, 1651-ஆம் ஸெப்டெம்பர்மீ 1உ லந்தன் நகரத்திற்குப் பிரயாணப்படுங் கப்பலி லேறினேன். இறங்காத துறையில் இறங்குவார்போல எண்ணமின்றித் துணிவுற்று, எந்தக் கருமத்தையும் செய்யும் இளைஞரில் எவர்க்காவது கஷ்டதசை எனக்கு வந்ததுபோல் அத்தனை விரைவில் வந்ததுமில்லை, நாட்படத் தொலையாதிருந்ததுமில்லை. கப்பல் ஹம்பர் ஆற்று முகத்துவாரங் கடந்த க்ஷணமே கடுங்காற்றுக் கிளம்பியது; கடல் பொங்கியது. அதைக் கண்டு திகைத்தேன். முன்பு கப்பல் ஏறிப் பயின்றிராத எனக்கு அச்சமயத்தில் உண்டான வாய்க்குமட்டலும், தலைச்சுழற்சியும், திகிலும் இவ்வளவென்று சொல்ல என்னால் ஆகாது. பெற்றூர் சொற் கேளாமல் மதிகெட்டு நான் கப்பலேறினதை எண்ணித் துக்கித்தேன். தாய் தந்தையர் வீட்டினின்று நீங்கிக் கடமை

கைவிட்ட அதிக்கிரமத்தினிமித்தம் தெய்வ தண்டனை என்னைத் தொடர்ந்தது நியாயமென் றெண்ணினேன்; தாய் தந்தையர் சொன்ன சற்புத்தி, தகப்பனார் விட்ட கண்ணீர், விபரீத புத்தியை விடச்சொல்லித் தாயார் பரிந்துகேட்ட கேள்வி, இவையனைத்தும் கண்ணுக்கெதிரே கண்டு கேட்ட பாவனையாய் என் நினைவில் வந்தன. "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்" என்பது பழமொழி. இவ்வாறே என் மனம் வரவர நெகிழ்ச்சியின்றிக் கல்லாயிற்று. மந்திரத்திற்குச் சமானமாகிய தந்தை சொல்லை அலட்சியமாய்த் தள்ளி, கடவுளுக்கும் தந்தைக்கும் செய்யத்தகுங் கடமைகளைக் கைவிட்டதைப்பற்றி, அப்பொழுது முழுதும் கல்லாகாத என் நெஞ்சே என்னை வருத்தியது.

வரவரப் புயல் அதிகரிக்க, கடல் பின்னும் அதிகமாய்ப் புரண்டு கொந்தளித்தது. பிற்பாடு பலமுறை நான் கண்ட கடல் அலைப்புரட்சிக்கும், கேட்ட கர்ச்சனைக்கும் அது சமானமல்ல. எறும்பிற்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரமென்பார்கள். கடலோடிப் பயிலாத இளைஞனாகிய எனக்கு இப்புயலால் வந்த திகிலுக்கு இணையில்லை. அடுத்தடுத்துப் புரண்டுவந்த திரைக்குள் அமிழ்ந்திப்போவேனென்றும், மலைபோலெழுந்த அலைமுகட்டில் ஏறிய உரு அலைப்பெயர்ச்சியாலுண்டான ஆழ்ந்த பிளப்பில் விழுந்தபொழுதெல்லாம் இனிச் சமுத்திரத்தின் அடித்தரையே நமது கதியென்று மெண்ணிக் கலங்கினேன். என் மனம் இவ்வாறு அவஸ்தைப்படுகையில், இந்தப் பிரயாணத்திற் தேவகடாட்சத்தாற் பிராணுபாயத்திற்குத் தப்பிப் பிழைத்துக் கரைசேர இடம்பெறுவேனாைல், அங்கிங்கு நின்று காலகரணஞ் செய்யாமல் அந்த க்ஷணமே வீட்டுக்குப் போய்த் தந்தையைக் காண்பேனென்றும், அப்புறம் இவ்வுடலும் உயிரும் ஒன்றைவிட்டொன்று நீங்குமளவும் நான் கப்பலேறத் துணிவதில்லையென்றும், இவ்வித துர்க்கதிகளை வலியத் தொடர்ந்து வருவித்துக்கொள்ளாமல் தந்தை சொல்லைத் தலைமேற்கொண்டு நடப்பேனென்றும் பற்பல சங்கற்பங்களும் பிரதிக்கினைகளும் பண்ணினேன். செல்வர் வறிஞர் ஆகிய இவ்விரு வகுப்பிலும் சேராத நடுநிலைமையோரை என்

பிதா புகழ்ந்து சொன்ன சொன்னயம் எனக்கு விசித மாய்த் தோன்றிற்று. பிறந்த நாள்முதல் இதுவரையில் என் பிதாவிற்குக் கிலேசம் இல்லை, கவலை இல்லை, அவர் கடலிற் கடுங்காற்று மழைக்கு அகப்பட்டதில்லை, தரையிற் சஞ் சலத்திற் காளானதில்லையென்று பிரத்தியட்சமாய்க் கண் டேன். என் னுள்ளத்தில் உண்டான எண்ணங்களை ஒவ் வொன்றாய்ச் சொல்லிற் பெருகும். கூடா நட்புக் கூடி, கோலாகலமாய் நாட் கழித்து, பொருளைப் போக்கடித்துப் பரிதபிக்கும் மைந்தனைப்போலத் தந்தை வீட்டுக்குப் போகத் தீர்மானித்தேன்.

காற்றடித்து ஓய்கிறவரையிலும், ஓய்ந்தபின் சற்று நேரமளவும் என் புத்தி தெளிந்து, எனக்கு இவ்வித நல்லு ணர்ச்சி யுண்டாயிருந்தது. மற்ற நாள் காற்றமர்ந்து கடல் சாந்தப்படவே, எனக்கு அச்சம் தெளிந்தது. தலைச் சுழற்சியும், வாய்க்குமட்டலும் முற்றிலும் மாறவில்லை. அன்று பகல் முழுதும் ஊக்கமில்லாதவனா யிருந்தேன். சாய ரட்சையளவில் மப்பு மந்தாரம் நீங்கிக் காற்றுச் சுத்தமாய் அடங்கி மாலைவெயில் தோன்றிற்று. மற்றநாட் காலையிலும் பொழுதுமுகங் கண்டோம். காற்று அமர, அலைக்கிளர்ச்சி யின்றி வெயில் ஒளியில் விரிகடல் பளிங்குபோல் மினுங்கி யதைப் பார்த்து, ஆனந்தங்கொண்டேன்.

இராமுழுதும் மெய்மறந்து தூங்கினேன். தலைச்சுழற்சி யும் வாய்க்குமட்டலும் சுத்தமாயில்லை. நேற்றைத்தினம் கோஷித்துக் கொந்தளித்து அச்சுறுத்திய கடல் இத்தனை விரைவி லடங்கி, கண்ணுக்கழகாய்த் தோன்றுவது எத் தனை யாச்சரியமென்று எண்ணினேன். இப்படி இருக்கை யில், நான் செய்த சங்கற்பங்களுக் கிடையூறாக, முன்பு எனக்குத் துர்ப்புத்தி சொல்லி நயவஞ்சனையாய் என்னை யழைத்துவந்த தோழன் என்னிடத்திற்கு வந்து, முதுகில் தட்டிக்கொடுத்து, "நல்லது ரூபின், உன் அச்சந் தெளிந்த தா? இராத்திரி வீசிய காற்று ஒரு குடத்தில் விட்டடைக் கவும் போதாதே. அதற்கு நீ மிகவும் அச்சமுற்றிருந்தாயல் லவா" என்றான். நான்: "என்னென்று சொன்னாய், எவர்க்

கும் அச்சந்தரும் கடும்புயலைக் குடத்தில் விட்டடைக்கக்கூடிய காற்றென்று சொல்வது பொருந்துமா” என்றேன். அதற்கு அவன், “நன்றாய் இருக்கிறது! பித்தனுக்குத் தன் குணம் நூலினும் செம்மை. இதுதானா கடும்புயல்! சொல்லக்கேள்: வளமான கப்பலேறி, கரைக்குத் தூரத்தில் பார், களம் முதலிய பிரதிபந்தங்களில்லாத ஆழ்ந்த சமுத்திரத்திற் போவோமானால், நேற்றடித்த காற்று எங்களுக்கு எவ்வளவும் பெரிதல்ல; உனக்கு அனுபவமேது? ஓடமேறி ஆற்றைக் கடக்கவும், கரைத் தோணியிற் போக வரவும் உன்னாலாகும். இனி வா, உன் பயந்தீரும்படி ஒரு கிண்ணம் சாராயங் குடிப்போம். மப்பு மந்தாரமின்றி வெயில் காய்வது மிக இன்பமாயிருக்கிறதல்லவா” என்று சொன்னான். அதன்பின் நடந்த துக்க சங்கதிகளைச் சொல்லின் விரியும். கடலோடிகளின் வழக்கத்தின்பிரகாரம் சாராயங் குடித்தோம். எனக்குச் சற்று வெறியெடுத்தது. மது உண்ணவே, என் மதிகெட்ட நடையைக்குறித்து எனக்குண்டாயிருந்த மனஸ்தாபமும், நல்லுணர்ச்சிகளும், இனிமேற் சீர்ப்படுவதற்கு நான் செய்த பிரதிக்கினைகளும் வெயிலைக் கண்ட பனிபோலப் பற்றற ஒழிந்துபோயின. கோஷித்து உரங்கொண்ட கடற்காற்று அடங்கின க்ஷணமே உக்கிரந் தணிந்து சாந்தப்பட்டதுபோல, எனக்குண்டான தடுமாற்றமும், சமுத்திரம் அமிழ்த்துமென்றெண்ணிய என்னைப் பிடித்த திகிலும் நீங்கினவுடன், முன்பு என் னுள்ளத்திற் குடிகொண்ட ஆசைகள் மீண்டும் வந்தன. ஆபத்துக்காலத்தில் நான் செய்த சங்கற்பங்கள், பிரதிக்கினைக ளனைத்தையும் மறந்தேன். இடைக்கிடை எனக்கு நற்சிந்தனை யுண்டாகும் பொழுது, நான் அவைகளை உடலை வருத்தும் பிணிக்கொப்பாய் எண்ணி [illegible]; அப்புறம் உண்டாகாதபடி தோழருடன் கூடிக் குடித்துக் கொண்டாடினேன். இவ்விபரீதம் தகாதென்று என் னுள்ளம் எனக்குணர்த்தி, என்னை வருத்திற்று; ஆனாலும், நான் உறுதியாய் நின்று, ஐந்தாறு தினங்களில் அதை வசப்படுத்திக்கொண்டேன். என்னைப் பிடித்த பீடை இம்மாத்திரத்தில் விட்டுவிடவில்லை. துன்மார்க்கர் சீர்ப்படுவதற்குதவியாகக் கடவுள் அவர்களைப் பலவாறு

சோதிப்பது வழக்கம். முன்புண்டான அபாயத்திலும் மிகக் கொடிய வபாயம் எனக்குண்டாயிற்று. அதற்கும் தேவகாருண்யத்தால் ஒருபடி தப்பிப் பிழைத்தேன். கன்னெஞ்சுள்ள பாபிஷ்டனும் அவ்விதப் பிராணுபாயத்திற்குத் தப்பிப் பிழைத்திருப்பானுகில், ஒப்பற்ற தயையுள்ள தேவனைப் பிரார்த்தித்து நல்வழிப்படுவான்.

கப்பல் ஏறின ஆறும் நாள் யார்மத் துறை சேர்ந்தோம். காற்றடித்து விட்டபின் வளக்காற்றின்றி எதிர்காற்று வீசியதனுற், கப்பல் நெடுந்தூரம் ஓடவில்லை: ஆனதுபற்றி, அந்தத் துறையில் நங்கூரம் பாய்ச்சி நின்றோம். அன்று முதல் ஏழெட்டு நாள் வரையில் தென்மேற்குத் திசையினின்று எதிர்காற்றடித்தவண்ணமாயிருந்தது. வளக்காற்றுக் கண்டு ஆற்றி லிறங்குவதற்கு யார்மத் துறை வாய்ப்பான துறையாதலால், நியுகாஸில் என்னு மிடத்தினின்று பிரயாணப்பட்ட வேறனேக உருக்களும் அங்கே வந்து சேர்ந்தன.

காற்று வரவர உரத்து, நாலைந்து தினத்தில் மிகவு முக்கிரங்கொண்டு அடித்ததனுல், உருவை ஆற்றிற் செலுத்தியொதுக்க வளப்படவில்லை; ஆயினும், துறை வளமாயும், நங்கூரஸ்தானம் வசதியாயும், நங்கூர உறுதி யுபகரணங்கள் பலமாயுமிருந்ததனுல், மாலுமி முதலானவர்கள் அபாயமேதும் இல்லையென்று அச்சமற்றிருந்து, அவரவர் இஷ்டப் பிரகாரம் உல்லாசமாய் நாட்கழித்தார்கள். எட்டாம்நாட் காலையில் காற்றுப் பின்னு முரத்தது; அதனுல், கப்பல் தடுமாறிக் குலுங்காமல் உறுதியாய் நிற்கும்படி எல்லாரும் ஒருகையாய்ச் சேர்ந்து மேற்பாய்மரங்களை யிறக்கி, மற்றும் தடைகளை நீக்கினோம். நடுப்பகலளவிற் கடலலை எழுந்து புரண்டது. முன்னணியம் சற்று உயரவெழும்பிற்று. மாறி மாறித் திரை மோதி, உருவைத் தத்தளிக்கப்பண்ணிற்று. கப்பல் தடுமாறியது கண்டு, நங்கூரம் நிலைபெயர்ந்து கிளம்பிற்றென்று நினைத்தோம். உடனே மாலுமி பெரு நங்கூரம் போடுவித்தார்; ஆகவே, உருவின் முற்புறத்தில் இரண்டு நங்கூர மிடப்பட்டன. நங்கூர வடம் காற்று வாக்கில் திரும்பிற்று.

இத்தனை பக்குவங்கள் செய்வதற்குள் பிரசண்டமாருத மடித்தது. கடலோடிகளே அஞ்சித் திகைத்து, அறிவழிந்திருந்தார்களென்றால் என்னைக்குறித்துச் சொல்லவேண்டுவதென்னே? மாலுமி உற்ற சமயத்தில் உருவைக்காக்கும் முயற்சிகளை ஜாக்கிரதையாய்ச் செய்வித்தார். அவர் கப்பல் அறைக்குட் போகும்பொழுதும், அங்கிருந்து வெளிப்படும்பொழுதும் "ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! அருள் சுரந்து எங்கள் மீதிரங்கும்! எங்களுக்கு மீட்சியில்லை, மரணமே எங்கள் கதி!" என ஒருமுறையல்ல, பலகால் மெதுவாய்ப் பிரார்த்தித்த சத்தம் எனக்கொருவாறு கேட்டது. ஆரம்பத்தில் அனைவரும் விரைந்து அபாயத்திற்கு விலகும் முயற்சிகள் செய்துகொண்டிருக்கையில், நான் உருவின் முற்பக்கத் தறையிற் சிந்தனையின்றிப் படுத்திருந்தேன். முன்பு காற்றடித்தபொழுது என் கெடுமதியைக்குறித்து எனக்குண்டான நற்சிந்தனைகளை நான் அலட்சியமாய்த் தள்ளிவிட்டதனால், என் மனங் கல்லாய்ப்போயிற்று. இனி அச்சிந்தனைகள் வருந்தி அழைத்தாலும் வருமா? மரண பயவுபத்திரவம் இம்மட்டி லொழிந்ததென்றும், முன் அடித்த புயலுக்கு இது எம்மாத்திரமென்றும் எண்ணினேன். மீகாமன் என் பக்கத்தில் உலாவும்பொழுது நமக்கு இனி மீட்சி யில்லையென்று சொன்ன சத்தம் என் செவிப்பட்டவுடன், எனக்கு அத்தியந்த திகிலுண்டாயிற்று. துடித்துப் பதைத்தெழுந்து, கடலை எட்டிப்பார்த்தேன். கண்ட பரிதாபக் காட்சியைக் கண் சகிக்குமா? அலைத்திரள் மலை உயரத்திற்கு வளர்ந்து, மூன்று நாலு நிமிஷத்திற் கொருமுறை உருவில் வேகமாய் மோதி, அதிர்ச்சியாய் உடைந்தது. கண்ணுக் கெதிர்ப்பட்டனவெல்லாம் கடுந்துயரளித்தன. எங்கள் உருவுக்குச் சமீபத்தில் நங்கூரமிட்டிருந்த இரண்டு உருக்களில் அதிக சரக்கேறியதனால், கப்பலிலுள்ளோர் அடியோடே பாய்மரங்களைத் தறித்துப்போட்டார்கள். எங்களுக்கு முந்தி ஒரு மைல் தூரத்தில் நின்ற உரு வொன்று முழுகிப்போயிற்றென்று எங்கள் உருவிலிருந்தவர்கள் பரிதபித்துக் கூவினார்கள். வேறிரண்டுருக்கள் நங்கூர வடமறுந்து, பாய்மரம் ஒன்றுவது இல்லாமல் துறையைவிட்டுப் பெயர்ந்து, எட்டாக்

கடலில் ஓடிவிட்டன. மிதமாய்ச் சரக்கேற்றிய உருக்க ளுக்குமாத்திரம் அதிக ஆட்டமுமில்லை, கெடுதியுமில்லை. அவ்வுருக்கள் இரண்டு மூன்று காற்றோட்டமாய்த் திரும்பி அணியப் பாய்விரித்தோடி, எங்கள் உருவின் பக்கத்தில் வந்தன. அஸ்தமனகாலத்தில் உபமாலுமியும், முக்கிய நாவி கனும் முற்பாய்மரத்தை வெட்டி விழுத்தும்படி கேட்டதற்கு முதலில் மாலுமி சம்மதிக்கவில்லை. அப்புறம் முக்கிய நாவிகன் கப்பல் முழுகிப்போமென்று வற்புறுத்திச் சொல்ல, மாலுமி உடன்பட்டார். முன்னணியத்துப் பாய்மரம் தறிக் கப்பட்டபின் அடிப்பாய்மரம் உறுதியற்று நெகிழ்ந்ததனால், கப்பல் மிகக் குலுங்கியது கண்டு, அடிப்பாய்மரத்தையுந் தறித்தார்கள். அதன்மேல் அடித்தட்டிற் பிரதிபந்த மொன் றும் இல்லை.

கடலோடிப் பயின்றிராத இளைஞனும், முன்பு காற்ற டிக்கத் தொடங்கும்பொழுதே பதறி உதறிப் பதைத்தவனு மாகிய என்னுடைய மனம் அவ்வேளையில் என்ன பாடு படாது! அச்சமயத்தில் எனக்குண்டான மனோபத்திரவத்தை இவ்வளவுகாலம் சென்றபின் உள்ளவாறுரைப்பது அசாத் தியம். ஒருவாறு சொல்லின் முன் புயலடித்தபொழுது எனக்குண்டான நற்சிந்தனைகளைக் காற்றடித்து ஓய்ந்தவுடன் நான் அவமதிசெய்து, ஆதியில் என் துர்ப்புத்தியால் அனு சரித்த நிர்ணயங்களைக் கைக்கொண்டதை யெண்ணி, மரண உபத்திரவப்பட்டேன் என்றுமாத்திரங் கூறலாகும். இத னுடன் அடித்த காற்றினால் அச்சமுற்று அவதிப்பட்டது இவ்விதமென்று சொல்ல நாவெழவில்லை. எங்கள் அவஸ்தை இம்மாத்திரத்தில் தீரவில்லை. புயல் பின்னும் மூர்க்கமா யடித்தது. இத்தனை கடுங்காற்று இதற்குமுன் னடித்தது அறியோமென்று கடலோடிகளுங் கூறினர். எங்கள் உரு வில் ஏதும் பழுதில்லை. நிறைபாரமேற்றியதனால், அது நிலையற்றுத் தளம்பித் தள்ளாடிற்று. கடலோடிகள் இனி உருவுக்கு மீட்சி யில்லை; முழுகிப்போமென்று அடிக்கடி பரிதபித்துக் கூவினார்கள். முழுகிப்போமென்று அவர்கள் சொன்னது எனக்குப் புலப்படவில்லை. பிற்பாடு அது இன்னதென்று அவர்களைக் கேட்டறிந்து, துயரப்பட்டேன்.

புயல் வரவர உரத்தது. மாலுமியும், சற்று அறிவுள்ள வேறு சிலரும் ஜீவகாருண்யராகிய கடவுளுக்குப் பிரார்த்தனை செய்து, கப்பல் பட்ட பாட்டைக் கண்டு, அது விரைவில் அமிழ்ந்துமென்று ஏக்கமுற்றிருந்தனர். பெரும்பாலும் அவர்கள் பிரார்த்தனை செய்கிறதில்லை. அர்த்தராத்திரியில் யாவரும் அவஸ்தைப்படுகையில், ஒருவன் உருவின் அடியில் வெள்ளம் வந்தது வாராததை அறியும்படி இறங்கி, கப்பல் கம்பத்துக்கொண்டதென்று கூவினன். உடனே மற்றொருவன் "நாலடி ஆழத்திற்கு நீரேறியது" என்றனன். அந்த க்ஷணமே ஜலயந்திரத்தால் தண்ணீரை யிறைத்து வெளிப்படுத்த எல்லாரையும் அழைத்தார்கள். அது கேட்டவுடன் நான் உள்ளங் குன்றி, உணர்வழிந்து, பிரேதம்போலாயினேன்; உட்கார்ந்த படுக்கையில் மூர்ச்சித்து விழுந்தேன். இரண்டொருவர் வந்து என்னைத் தட்டி யெழுப்பி, "உனக்கு முன்பு ஒன்றும் தெரியாது; இப்பொழுது தண்ணீர் இறைக்கவாயினும் திராணி யில்லையா? வா!" என்று அழைக்க, நான் துடிதுடித்தெழுந்து, ஜலயந்திரத்தால் மூச்சுவிடாமல் இறைத்துக்கொண்டு நின்றேன். இப்படி இருக்கையில், பாரமேற்றாத நிலக்கரியுருக்கள் சில காற்றுக்காற்றாமல் நங்கூரந் தூக்கிக் கடலில் விரைந்தோடுவது கண்டு, மாலுமி அவைகளை நமக்குதவியாய் வரவழைக்கும்படி ஆபத்தினறிகுறியாகப் பீரங்கி வெடி தீரச் சொன்னார். அவர் சொன்னதொன்றும் எனக்குத் தெரியவில்லை. கப்பலுடைந்ததோ, ஏதும் பிராணபாயம் நேர்ந்ததோவென்று பிரமையடைந்து மூர்ச்சித்து விழுந்தேன். ஆபத்துக்காலத்தில் எவனும் தன்னுயிரை எண்ணுவதன்றி, பிறரைக்குறித்து நினைப்ப தியற்கையல்லவே. என் கதியை எவரு மெண்ணவில்லை. நான் விழுந்தவுடன் வேறொருவன் நீரிறைக்க வந்து, என்னைப் பிரேதமென்று காலால் தட்டி ஒதுக்கிவிட்டான். எனக்கு மயக்கந் தெளிய நெடுநேரஞ் சென்றது.

ஜலயந்திரத்திற் பிடித்தகை விடாமல் இறைத்தவண்ணமாயிருந்தும், இறைக்க இறைக்கத் தண்ணீரேறியதனால், உரு முழுகிப்போமென்று தோன்றிற்று. புயல் ஒருவாறு தணிந்தது. கப்பல் ஒரு துறையி லொதுங்குமளவும் ஓடுங்

தரமல்லவென் றறிந்து, மாலுமி பின்னும் பிராணுபாயக் குறிப்புப் பீரங்கி வெடிகளைத் தீர்வித்தார். எங்கள் உரு விற்குச் சற்று முந்தி நங்கூரம்போட்டுநின்ற வெறும் கப்பலில் இருந்தவர்கள் அச்சத்தைப் பாராட்டாமல் உயிர்த்துணை யாக ஒரு ஓடமனுப்பினுர்கள். அது எங்கள் உருவிற் கருகில் வரப் பிராணசங்கடப்பட்டது. அவ்வோடத்தில் நாங்கள் ஏறுவதும், அது உருவின் பக்கத்தில் வந்து நிற்ப தும் அசாத்தியமாயிருந்தன. ஓடக்காரர் உயிர்போனுலும் எங்களை யிரட்சிக்கக் கருதி, கை சலிக்கத் தண்டு வலித்துக் கொண்டு வந்தார்கள். ஒரு வடத்தில் மிதப்புக் கட்டி, பின் னணியத்தில் நின்று, ஓடத்திலிருந்தவர்களுக் கெட்ட வீசி ஞேம். அவர்கள் பிராணசங்கடப்பட்டு, அதை ஒருபடி பிடித்துக்கொள்ள, பின்னணியத்தை யடுத்து வரும்படி அவர் களை இழுத்து, எல்லாரு மோடத்திலேறித் தப்பினேம். ஓடமேறியபின், அதை அவர்கள் கப்பலுக்குத் திருப்பிச் செலுத்திக்கொண்டுபோக ஒருவிதத்திலும் முடியவில்லை. அதனுல் காற்று வாக்கில் செல்லவிட்டு, கூடியவளையிற் கரைக்கு நேரே தள்ளிக்கொண்டு போனேம். ஓடங் கரை தட்டி யுடைந்துபோனுல், அவர்களுடைய கப்பல் மாலு மிக்கு நஷ்டங் கட்டிக்கொடுப்பதாக எங்கள் மாலுமி வாக் குறுதி செய்தார். பின்பு பாதிவழிக்குத் தண்டு வலித் தும், பாதிவழிக்குச் செலுத்தியும், ஓடம் வடதிசை நாடிச் சென்று விண்டர்டன் நேஸ் என்னும் துறைக்குச் சமீபத் திற் கரைசார்ந்தோடிற்று.

உருவைவிட்டிறங்கிக் கால்மணிநேரஞ் செல்லுமுன், அது சமுத்திரத்தில் முழுகினது கண்டோம். கடலிற் கப் பல் முழுகுவதென்று சொல்வார்களே, அது இன்னதென்று அப்பொழுதே அறிந்தேன். உரு முழுகிப்போகிறதென்று கடலோடிகள் சொன்னபொழுது, நான் எட்டிப் பார்த்தும் என் கண்ணுக்கொன்றும் தெரியவில்லை. அவர்கள் என்னை ஓடத்தில் விட்ட நிமிஷந்தொடங்கி அச்சத்தினுலும், அத் தியந்த மனேபத்திரவத்தினுலும், இன்னும் என்னென்ன ஆபத்துக்கள் வருமோவென்று ஏங்கித் திகைத்ததனுலும் என்னுயிர் எனக்குளில்லை.

கரை நெருங்கி வரும்படி கைசலிக்காமல் தண்டு வலித்துக்கொண்டு வந்தார்கள். ஓடம் புரண்டெழுந்த அலையின் மீது ஏறும்பொழுது கரை காணப்பட்டது. திரளான ஜனங்கள் நாங் கரையேறும்பொழுது எங்களுக் குதவிசெய்ய எத்தனமாய் நின்றார்கள். வள்ளம் தீவிரகதியாய்ச் செல்லவில்லை. வின்டர்டன் தீபஸ்தம்பத்தைத் தாண்டிச் சற்றுத் தூரத்தில் க்ரோமர் என்னுமிடத்தில் மிக வருத்தப்பட்டு ஒருபடி கரையிலிறங்கினோம். அவ்விடத்தில் தரை மேற்குமுகமாய்க் கடலுக்குள் ஒற்றிவந்திருப்பதனால், காற்றுக் கடுமை சற்றே தணிந்தது. பின்பு யார்மத் நகரத்திற் போய்ச் சேர்ந்தோம். அங்கிருக்கும் மாஜிஸ்ட்ரேட் உத்தியோகஸ்தர்களும், சில வர்த்தகர்களும், கப்பற்காரர்களும் எங்களைக் கண்ட க்ஷணமே கடலில் அவஸ்தைப்பட்டுப் பிராணகண்டந் தப்பி வந்தவர்களென்று பரிதபித்து, இருக்க இடங்கொடுத்து ஆதரித்து, எங்கள் இஷ்டப்படி லந்தன் நகரத்திற்காவது, மீண்டும் ஹல் நகரத்திற்காவது போக வழிச்செலவிற்குப் பணங் கொடுத்தார்கள்.

இச்சமயத்தில் எள்ளளவாயினும் எனக்குப் புத்தியுண்டானால், நான் ஹல் நகரத்திற்குத் திரும்பி, நேரே வீட்டுக்குப் போவேனே. நானேறிய கப்பல் யார்மத் துறையில் முழுகிப்போயிற்றென்றும், நான் இறந்துபோனேனென்றும் செய்தி கேட்டுத் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்த என் தந்தை, மீண்டும் என்னைக் காணும்பொழுது, இறந்த மகன் வந்தானென்று ஆனந்தபரவசமடைந்து, என்னைத் தழுவிக் கொண்டாடுவாரல்லவா? நான் பிழைத்திருக்கும் செய்தி நெடுநாள்வரையில் அவருக்குத் தெரியாது.

என்னைப்போலும் நிர்ப்பாக்கியமுள்ளவர்களுக்கு நற்புத்தி வருமா? என் கெடுமதி என்னைத் தீவிரகதியாய்த் தீய வழியிற் செலுத்திக் கொண்டுபோயிற்று. அப்போதப்போது அடங்கியிருந்து என் நிலைமையைக்குறித்துத் தீர்க்காலோசனை செய்யும்பொழுது, என்னறிவு தெளிந்து இடித்திடித்துப் புத்திசொல்லி நல்வழிப்படுத்தும் இஷ்டனைப்போல் என்னைத் தூண்டிவிட்டது. அறிவின்வழியே செல்வதற்கு

என்னாலாகவில்லை. இனிமேல் எனக்கு என்னென்ன கொடிய ஆபத்துக்கள் நேரிடுமோ, எவ்வெவ்விடத்திற்குப் போய்க் கஷ்டப்படுவேனோ என்பதாக ஏக்கமுற்றிருந்தும், கண்ணுக்கெதிரே தோன்றும் பிராணாபாயத்திற்கு அஞ்சாமற் செல்லும் உன்மத்தனைப்போலும், தற்காப்பினிமித்தம் கைக்கொண்ட கூராயுதத்தாற் கழுத்தறுத்து இறக்கும் பித்தனைப்போலும் பகுத்தறிவின்றிக் கொண்ட கொள்கையைக் கைவிடாதிருந்தேன். இவ்வாறு யுக்தி புத்திக்கு விரோதமாய் என்னைத் துன்மார்க்கத்தில் செலுத்திக்கொண்டுபோனது மனோவாக்குகளால் நினைப்பதற்கும் சொல்வதற்குமரிய அந்தரங்கமான தெய்வ சங்கற்பமோவென் றையுற்றேன். ஆம், பிரயாணவாரம்பத்திலேயே அடுத்தடுத்து இரண்டுமுறை நேர்ந்த பிராணசங்கடத்திற்குத் தப்பிப் பிழைக்கும்படி கடவுள் அருள்புரிந்தும், உய்யும் வழியிற் செல்வதற்கு என்னுள்ளமுடன்படாததனால், எனக்கிந்த விபரீதமுண்டானது தெய்வ சங்கற்பத்தினாலென்றே சொல்லவேண்டும்.

முன்பு ஹல் நகரத்தில் எனக்கிதஞ்சொல்லி, என்னைக் கப்பலேற வுடன்படுத்தின தோழன் மாலுமி புத்திரன். இப்பொழுது யார்மத் நகரத்தில் சேர்ந்தபின் நான் அவனை இரண்டு மூன்றுநாள் வரையிற் காணவில்லை. வெவ்வேறிடங்களில் நாங்கள் தங்கினோம். ஒருநாள் இருவரும் எதிர்ப்பட்டபொழுது, அவன் என்னை முன்போலச் சீராட்டவில்லை. சற்று உபேட்சையாயிருந்து, ஒப்புக்கு க்ஷேமலாபம் விசாரித்தான். அவனுக்குள் ஏதோ என்னைக்குறித்துச் சிந்தனை யுண்டாயிருந்தது. என் பெயர் ஊர் வரலாறுகளையும், அதிசயம் பார்க்கும்படி தேசாந்தரம் போகக் கருதி நான் கப்பலேறினதையும் மாலுமிக்குச் சொன்னான். அவர் அந்தக்ஷணமே சிறிது மனம் பதைத்து, என்னைப் பார்த்து: "தம்பி, இனி நீ ஒருபொழுதுங் கடல் யாத்திரை போகாதே. கடலோடுந் தொழிலுக்கு நீ யோக்கியனல்லவென்று பிரத்தியட்சமாய்க் கண்டாயே" என்றார். அவர் சொன்னது எனக்கு மிகவு மாச்சரியமாயிருந்தது. நான்: "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்; நீர் இனிக் கடல் யாத்திரை போவதில்லையா?" என்று வினவ, மீகாமன்: "அப்படியா,

எனக்கும் உனக்கும் பேதமில்லையா? கடலோடுவதுதான் நான் பயின்ற தொழில். அதைக்கொண்டே ஜீவனம்பண்ண வேண்டும்; உன் தொழில் அதுவல்ல; கடல் யாத்திரை எப்படியிருக்குமென்று அறியக்கருதி வந்தாய். உனக்கும், கடலோடும் தொழிலுக்கும் பொருத்தமில்லையென்று கடவுள் மூலமாய்ச் சாட்சி பிறந்தது. இதை மறந்து பிடிவாதம் செய்வாயானல், இன்னும் உனக்குப் பாரமான இடையூறுகள் வரக்கூடும். இது மெய்யென்றறி. தெய்வ கட்டளைக்கு விரோதமாய்த் தர்ஸீஸின் கப்பலிலேறி யாத்திரைபோன யோனுவினிமித்தம் பெருங்காற்றினுல் அவ்வுருவிலிருந்த அனைவருக்கு மபாயம் நேர்ந்ததுபோல, எங்களுக்கு உன்னிமித்தம் இச்சங்கடம் வந்தாலும் வந்திருக்கலாம். நல்லது, நீ ஆர்? உன் பெயரென்ன? ஊர் எது? பெற்றூர் உற்ரூர் யாவர்? நீ கடல் யாத்திரை போகும் நோக்கம் யாது?" என என் வரலாறுகளை விசாரித்தனர். உடனே நான் என் வரலாறுகளை உள்ளவாறு கூறினேன். அது கேட்டவுடன் அவர் சீறிச்சினந்து, இருவிழியுஞ் சிவக்க, "இந்தச் சண்டாளத் துரோகி என் கப்பலிலேறுவதற்கு நான் என்ன பாதகஞ் செய்தேன்; கடவுள் விஷயத்தில் எப்படி அபசாரப்பட்டேன்; இலட்சம் வராகன் கொடுத்தாலும், இனி நீ போகுங் கப்பலில் நான் கனவிலு மடிவைக்க நினையேன்" என்று பதறிக் கூறினுர். இத்தனை கோபம் அவருக்குண்டானது கப்பல் சமுத்திரத்தில் முழுகிய ஆருத துயரத்தைக் குறித்தன்றி, முழுதும் என்நிமித்தமல்ல. அவர் மனம் புண்ணுயிருந்ததனுல் சற்று வரம்புகடந்து பேசினுர். வரவரக் கோபாவேசம் நீங்கியபின், அவர் சற்றுப் பயபக்தியாய்ப் பேசி, "தம்பி, நீ தேவபழியை வலியத் தேடி நாசமடையாதே. உன் தகப்பனுரிடத்திற்குப் போய்ச் சுகமாய் வாழ்ந்திரு. உன் மனம்போன போக்கு உனக்கெவ்வளவும் அனுகூலமல்ல. செவ்வையான மார்க்கத்தில் திரும்பவேண்டுமென்று கடவுள் உன் கண்ணுக்கெதிரே பிரசன்னமாகித் தமது கரத்தை நீட்டி உன்னைத் தடுப்பதாய் எண்ணிக்கொள். இளைஞனே, ஒன்றுகேள், உறுதிமொழி சொல்லுகின்றேன். நீ வீட்டுக்குப் போகாமல் மற்றெவ்விடத்திற்குச் சென்ருலும்,

அவ்விடங்கள்தோறும் உனக்கு இடரும், இடையூறுகளும், ஆபத்தும் வரும். உன் முயற்சி யொன்றும் பயன்படாது. உன் கருமமெல்லாம் சிதறும். இப்படி நாளாவர்த்தியில் உன்னரிய தந்தை பகர்ந்த சொல் தவறுமற் பலிக்கும்" என்று என்னை எச்சரித்தார்.

நான் ஒன்றும் பேசாமற் போய்விட்டேன். பின்பு நான் அவரைக் காணவுமில்லை, அவர் போன வழி எதென் றறி யவுமில்லை. வழிச்செலவுக்கு என் கையிற் பணம் கொஞ்ச மிருந்தது. கரைமார்க்கமாய் லந்தன் நகரத்திற்குப் போ னேன். போகும்பொழுது வழியிலும், போய்ச் சேர்ந்தபின் அந்நகரத்திலும் வீட்டுக்குப் போவதோ, கடல் யாத்திரை செய்வதோ எது உத்தமமென்று என் நெஞ்சில் தீரா விசார முண்டாயிருந்தது.

நேரே வீட்டுக்குப் போவதற்கு எனக்கொரு சிறிதும் மன மில்லை. தாய் தந்தையர் சொல்லைத் தட்டித் தேசாந்தரம் போக வீடுவிட்டு நீங்கியபின்னர், பெற்றூர் நகைக்க, உற்றூர் பழிக்க, உறவர் கேலிபண்ணிச் சிரிக்க, ஊரார் அவமதிக்க, மானமழிந்து, நாணங்கெட்டு, இன்னும் வீட்டுக்குப் போவதா என்று எனக்குள்ளே ரோசம் பிறந்தது. இப்படிச் செய்வதிலும் தற்கொலை புரிவதே உத்தமமென்றெண்ணி னேன். இத்தகைய வெண்ணமுடையவனுய் அங்கிருக்கை யில், மனுஷரிற் பெரும்பாலும் வாலிபராயுள்ளோர் அறிவு மயங்கித் தர்மா தர்மங்களுக்கும், நன்மை தீமைக்கும், இழிவு சிறப்புக்கும் தாரதம்மியம் பாராமல் தர்மத்தை விலக்கி, அதர் மத்தைக் கைக்கொண்டு, நன்மை செய்ய நாணி, தீமை செய் வதிற் சிந்தை வைத்து, அதுவே தமக்கு மேன்மையென்று கருதி விபரீதமாய் நடப்பதைக் கண்டேன்.

கொஞ்சக்காலவரையில் இன்னது செய்யவேண்டுமென் றும், இன்னமார்க்கத்தில் நாட்கழிக்கவேண்டுமென்றும் நா னுறுதிபண்ணுமற் சந்தேக ஸ்திதியிலிருந்தேன். வீட் டுக்குப் போவதற்கு எனக்குச் சற்றும் விருப்பமில்லை. எனக்குச் சம்பவித்த பாடுகளனைத்தையும் வரவர மறந் துபோனேன்; மறக்கவே, வீட்டுக்குத் திரும்பும் நினைவு

மொழிந்தது. கடல் யாத்திரை போக வளமான சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

என்னைப் பிடித்த துர்ப்புத்தியால் எனக்கு நேர்ந்த கேடொன்றா? முதலில் மதிமயங்கித் தாய் தந்தையர் வீட்டினின்று வெளிப்பட்டேன். திரவியமூல சாதனங்களும், யுத்தி புத்தித் திறமையுமின்றித் திரைகடலோடித் திரவியந் தேட நினைத்து, தடைக்கஞ்சாத விஷசர்ப்பத்தைப்போல, தர்மாத்மாவாகிய தந்தை சொல்லிய நற்புத்தி, பரிவுகூர்ந்து கேட்டகேள்வி, என் நன்மையைக் குறித்து விதித்த கற்பனை இவை எல்லாவற்றையும் தள்ளினேன். இவைகள் எனக்குச் செவிடன் காதிலோதிய மந்திரம்போலாயின. எனது துர்மதி இம்மாத்திரத்தில் ஒழிந்துபோகவில்லை; எவ்விதத்திலும் நிறைவேறாத அபிப்பிராயங்களையும், அபாயகரமான யோசனைகளையும் என் னுள்ளத்தில் உற்பத்தியாக்கிற்று. ஆபிரிக்காக் கண்டத்திற்குப் பிரயாணப்பட்ட கப்பலிலேறிப் போனேன். சாதாரண வழக்கப்படி கப்பற்காரர்கள் ஆபிரிக்காக கண்டத்தை கினியா என்பார்கள்.

இப்பிரயாணங்களில் ஒன்றிலாவது நான் சேவகத்தில் அமரவில்லை. கடலோடிகள் வகுப்பிற் சேவகத்தி லமர்ந்திருப்பேனானால். சற்று வருந்தி யுழைக்கப் பாத்தியப்பட்டிருப்பினும், அணியத்துப பாய்மரம் இறக்க ஏற்ற, பாய் தூக்க விரிக்க தணிக்க நன்றாய்ப் பயிலுவேன். நாளாவர்த்தியில் மாலுமித்தொழில் செய்யும் தரம் எனக்கு வாராதிருப்பினும், உபமாலுமித் தொழிற்காவது யோக்கியனாவேன். “வருந்தி அழைத்தாலும் வாராத வாரா” உவர்நிலத்தில் நல் விதை வித்திடினும், அது முளைத்து விளையாது. வளரும் பயிரை முளையிலே தெரியும். ஏதாயினும் தொழில் பயின்று மரியாதையாய்க் காலந் தள்ளும் முயற்சி எனக்கிருக்குமானால், வீட்டிலிருக்கும்பொழுதே என் ...ய் நல்வழியில் திரும்பாரா? ...கையில் நாலு பணமும், உடுக்க வஸ்திரமுமிருந்ததனால், நான் சேவகஞ்செய்ய நிமித்தமில்லையென்று பிரபுநடை நடக்கத் தலைப்பட்டேன்; ஆகவே, உருவில் எனக்கு வேலை ஒன்றுமில்லை, நான் எதையும் செய்யப் பயிலவுமில்லை.

## 2. அத்தியாயம்.

*வர்த்தகம் செய்யும்பொருட்டு கினியாவிற்குப் போய் லாபம் பெற்றது. மாலுமி இறந்தது. உபமாலுமியுடன் பின்னும் ஒரு பிரயாணஞ் செய்தது. தாய் தந்தையர் சொல்லைக் கடந்து அபசாரப்பட்டதினிமித்தம் தெய்வபழி என்னைச் சூழ்ந்தது. ஸல்லி துறையைச் சேர்ந்த கடற்கள்வர் எங்களைப் பிடித்துக்கொண்டுபோய், அடிமைகளாக விற்றது. எனது எஜமான் என்னை அடிக்கடி மீன் பிடிக்க அனுப்பினதும், ஒளித்தோடுவதற்கிசையுமென்று எனக்கு யுத்தி பிறந்ததும். ஒரு சிற்ரேடத்தில் ஏறி, நானும், முரஸ்கோ இளைஞன் ஒருவனும் ஒளித்தோடினது.*

பெரியோர் சொற்கேளாமல் தங்கள் கெடுமதியையே கடைப்பிடியாய்க்கொண்டு நெறி நீங்கித் தெறிகெட்டுத் திரியு மிளைஞருக்குப் பெரும்பாலும் சற்ஜனர் சகவாசம் அகப்படாது. அவர்கள் ஆரம்பத்திலேயே துஷ்டர் கேண்மையை விரும்பித் துராகிர்தஞ் செய்து, நாசப்படுவார்கள். எனக்கு ஏதோ நற்காலம் இருந்ததனால், லந்தன் நகரத்திலிருக்கையில் யோக்கியருடன் தோழமைகூட இடம் பெற்றேன். கினியா கரைக்குப் பிரயாணம் போய்வந்த கப்பல் மாலுமி ஒருவருக்கும் எனக்கும் முதலில் அறிமுகமுண்டாயிற்று. முதற் பயணத்தில் அவர் அதிகலாபம் பெற்றதனால், பின்னும் ஒருமுறை அவ்விடத்திற்குப் பிரயாணம்போக எண்ணங்கொண்டிருந்தார். என் பேச்சு அவருக்குச் சற்றுப பிரீதியாயிருந்தது. தேசாந்தரம் போய், அங்கங்குள்ள வதிசயங்களைப் பார்த்துவர அபேட்சிக்கிறேனென்று நான் சொல்லக் கேட்டு, மாலுமி: "நீ பிரயாணக்கூலி கொடுக்கவேண்டாம்; எனது உருவில் ஏறிவா, நான் உன்னை எனது நண்பனுயெண்ணி, கண்ணுக்கொப்பாய் ஆதரணை செய்வேன். ஆகார முதலிய சுகசாதனங்களனைத்தும் எனக்கு எப்படியோ, உனக்குமப்படியே தாழ்ச்சியின்றி நடக்கும். ஏதாயினும் வர்த்தகப்பொருள் கொண்டுவருவாயானல், நீ அதை விற்று, வரும் லாபத்தை முழுது மெடுத்துக்கொள். பிரயாணச்செலவைப்பற்றி நிமித்தமில்லை;

ஒருவேளை உனக்கு நற்காலம் வந்து அதிகலாபம் விளையினும் விளையும்" எனப் பரிவுகூர்ந்து சொன்னார்.

அவர் சொல்லிய மதுரவாக்கை மனங்குளிரக் கேட்டு, உருவிலேற வுடன்பட்டேன். மனக்கரவில்லா யதார்த்த வாதியாகிய மாலுமியும் நானும் பிராணசினேகரானோம். இதுநிற்க, நான் பந்துஜனங்கள் சிலருக்குக் கடிதமெழுதி, அவர்கள் வாக்கு வசீகரத்தால் என் தகப்பனாரிடத்திலோ, தாயாரிடத்திலோ முதற் பிரயாணத்திற்கு வாங்கி அனுப்பின பணம் நானூறு ரூபாய் என் வசமிருந்தது. இந்தச் சொற்ப தொகைக்கு மாலுமி சொல்லிய யுத்திப்படி சிறுவர் விளையாட்டுப்பொருள் முதலிய சில்லறைச் சரக்குகள் வாங்கி உருவிலேற்றிக்கொண்டு போனேன். தன் நயத்தை ஒரு பொருட்டாய் எண்ணாமல் என்னிடத்தில் உறவுபாராட்டி, எனக்குற்றதுணை செய்த நேர்சீருள்ள மாலுமியின் சகாயத்தால் இந்தச் சரக்கை விற்று, மிகுந்த லாபம் பெற்றேன்.

இதுதவிர, மற்றெந்தப் பிரயாணமும் எனக்கனுகூலிக்கவில்லை. இந்த லாபம் சத்தியம் தவறாத உத்தம புருஷனாகிய மாலுமி யுதவியால் உண்டானதன்றி மற்றப் படியல்ல. அவர் மூலமாய் எனக்கு விளைந்த பயன் இம்மாத்திரமா? கணித வித்தையிலும், மாலுமி சாஸ்திர விதிகளிலும் காரியசித்திக்கு வேண்டுமளவு அவர் எனக்குக் கற்பித்தார். உரு ஓட்டக் கணக்குப் பயிற்றினார். அப்போதப்போது கப்பல் நிற்கும் ஸ்தான வரையறையை வான சோதிகள் மூலமாய் நியதிசெய்யப் பயிற்றினார். கடலோடிகளுக் கின்றியமையாத சாதனங்களனைத்திலும் எனக்கு ஒருவாறு விற்பத்தி யுண்டாக்கினார். கற்பிக்கும் பிரீதி அவருக்கும், கற்குமபேட்சை எனக்கு மிருந்ததனால், எனக் கிவ்வளவு வித்தை யேறிற்று. சுருக்கிச் சொல்லில், இந்தப் பிரயாணத்தால் நான் கப்பலோட்டுந் தரமும், வர்த்தகஞ்செய்யும் நிர்வாகமு முடையவனாயினேன். இந்தப் பிரயாணத்தில் சரக்கு விற்றுத் தேறின பணத்திற்கு நான் வாங்கின மறு சரக்கு பொற்பொடி ஐந்திருத்தல் ஒன்

பது பலம். இதை ஏற்றிக் கொண்டுபோய், லந்தன் நகரத்தில் விற்றுத் தேறிய பணம் மொத்தம் மூவாயிரம் ரூபாய். இவ்வளவு திரவியம் இத்தனை விரைவில் எளிதிற் சிக்கியதனால், அடாது செய்தவர் படாது படுவர் என்பதுபோலும், திரண்ட லாபம் திருஷ்டியைக் கெடுக்கும் என்பதுபோலும் என் தரம் எனக்குத் தோன்ருது, எட்டாத முயற்சிகளிற் பிரவேசித்து, பிற்காலத்திற் சொல்வதற்கரிய கஷ்டதசையடைந்து பாடுபட்டு வருந்தினேன்.

மேற்படி பிரயாணத்தை மிகவும் புகழ்ந்து சொன்னேனே. அதிலும் எனக்கு ஆபத்து வராதிருக்கவில்லை. அபரிமித உஷ்ணத்தால் பித்தஜுரம் கண்டு, ஒழிவின்றி அழுந்தினேன். நாங்கள் போய் வர்த்தகஞ்செய்தது, பதினைந்தாவது உத்தராக்ஷ ரேகைக்கும், நிரக்ஷ ரேகைக்கும் மத்தியில் உள்ள கரைசார்ந்த அதி உஷ்ணப் பிரதேசம்.

இவ்வொரு பிரயாணத்தி னனுபவத்தால் கினியாவில் வர்த்தகம்செய்யும் திராணியும் துணிவும் எனக்குண்டாயின; எனது முக்கிய இஷ்டராகிய மாலுமி மூலமாய் எனக்கின்னும் பெரும்பேறுண்டாகுமென்றெண்ணி இன்புற்றிருந்தேன். லந்தன் கரை சேர்ந்து சில தினங்களில் அவரிறந்துபோனுர். அவரிறந்தும், என் மன மிளைக்கவில்லை. முந்தின பிரயாணத்தில் உபமாலுமி யுத்தியோகஞ்செய்தவர் இப்பொழுது அவ்வுருவின் மாலுமியானுர். நான் அவருடன் அவ்வுருவில் மீண்டும் பிரயாணப்பட்டேன். இடையில் ஒன்று சொல்ல மறந்துபோனேன். இறந்த மாலுமி மனைவி நல்ல யதார்த்தவாதி. அவள் என் மட்டில் எள்ளளவும் துரோகம் நினைக்கவில்லை: ஆனதுபற்றி, நான் எனது கையிருப்பில் இரண்டாயிரம் ரூபாயை அச்சமின்றி அவள் வசமொப்புவித்து, ஆயிரம் ரூபாய்க்குச் சரக்கு வாங்கி, ஏற்றிக்கொண்டு போனேன். இந்த இரண்டாவது பிரயாணத்தில் நானனுபவித்த கஷ்ட நஷ்டங்களைப்போல, எக்காலத்திலாயினும் எவரும் அனுபவித்ததில்லை. எங்களுரு கனேரி தீபகணத்திற்கு நேரேயல்ல, அத்தீவுக் கூட்டத்திற்கும், ஆபிரிக்க கரைக்கு மிடையிற் செல்லும்போது, ஸல்லி துறையிலுள்ள கடற்சூறையாடும்

மகமதியர் கப்பலொன்று சூரியோதயத்திற்கு முன் அதி காலையிற் சாங்கோபாங்கமாய்ப் பாய்விரித்து, எங்களைத் தொடர்ந்து, தீவிரகதியாய் வந்தது கண்டு, நாங்கள் பாய் மரக் கம்பமும், கிளைக்கொம்புகளும் தாங்கத் தக்கமட்டும் பாய்விரித்து, மிகவிரைவாய் உருவைச் செலுத்தி, எட்டாக் கையிலோடித் தப்பித்துக்கொள்ள வகைபார்த்தோம்; எங் கள் எண்ணம் பலிக்கவில்லை. கடற்சூறையாடுங் கப்பல் நெருங்கி வந்துவிட்டது. பின்னுஞ் சில நாழிகைமட்டும் உருவைச் செலுத்திக்கொண்டு போவோமானால், கள்வர் கப்பல் நம்மை அமர்த்திக்கொள்ளுமென்பதற் கையமில்லை: ஆகவே, உருவை நிறுத்திச் சண்டைக்கெத்தனித்தோம். எங்களுருவிலிருந்த பீரங்கி பன்னிரண்டு; கள்வ ருருவி லுள்ளவை பதினெட்டு. மதியந்திரும்பி மூன்றுமணிக்குச் சூறைக்கப்பல் நெருங்கி, எங்கள் கப்பலின் பின்னணிய மென்று வகைமோசமாய் அணியத்தைச்சார்ந்த பாரிசத் திற்கெதிராய் வந்தது. அந்தப் பாரிசத்தில் நாங்கள் எட் டுப் பீரங்கிகளை நிறுத்தி ஏககாலத்திற் குண்டுகளைப் பிரயோ கித்தோம். கள்வர் எதிர்க்குண்டு பிரயோகித்தார்கள். பின்பு அவ்வுருவிலிருந்த இருநூறு பெயரும் துப்பாக்கிக் குண்டு களையுஞ் செலுத்தி, உருவைத் திருப்பினார்கள். எங்களில் எவர்மேலும் குண்டு பாயவில்லை. எல்லாரும் நீக்கமின்றி, நெருங்கி நின்றோம். அவர்கள் மீண்டும் குண்டு மாரி பொழிய எத்தனித்தது கண்டு, தப்பித்துக்கொள்ள முயன் றோம். இந்த முறை கப்பலின் எதிர்ப்பாரிசத்தில் நாங் கள் நெருங்கி நிற்கும்படி அவர்கள் சூது செய்து, எங்களுரு வின் மேற்றட்டில் அறுபதுபெயர் ஏறி, தட்டுப் பலகை களையும், பாய்மரக் கயிறு முதலியவைகளையும் விரைவாய்க் கொத்தித் தறித்தார்கள். நாங்கள் சித்தஞ் சலித்து நிற்கா மல், விரைந்து அவர்கள்மேல் துப்பாக்கிக்குண்டு பிரயோ கித்தோம்; குறுஞ்சூலங்களாற் குத்தினோம். மருந்து, இருப் பாணி முதலியவை கெட்டிக்கப்பட்ட பெட்டிப்பீரங்கி வெடிதீர்த்தோம். இப்படிச் செய்து இரண்டுமுறை அவர் களை எங்கள் உருவினின்று விலக்கினோம். வயிறெரிந்து பதைக்கத்தக்க எங்கள் கதையைச் சொல்லிற் பெருகும்.

எங்கள் உரு கயிறு முதலிய அங்கங்களறுந்து சேதிக்கப் பட்டதனுலும், எங்களில் மூன்றுபெய ரிறந்து, எட்டுப் பெயர் காயம்பட்டதனுலும் நாம் திராணியற்றவர்களாய்க் கள்வர் கைவசமானேம். அவர்கள் எங்களைக் கைதுசெய்து ஸல்லி என்னும் தங்கள் துறையிற் கொண்டுபோய்ச் சேர்த் தார்கள்.

கைதியானவுடன் கள்வர் எனக்கு என்னென்ன நிஷ்டூ ரங்கள் செய்வார்களோவென்று நினைத்து ஏங்கினேன். எனக்கு அவர்கள் எவ்வித நிஷ்டூரமும் செய்யவில்லை. என் னைத்தவிர, மற்றெல்லாரும் சக்கரவர்த்தி சமஸ்தானத்திற் குக்கொண்டுபோகப்பட்டார்கள். சூறைக் கப்பல் மாலுமி இளைஞனும், சரீரம் சிறுத்து இறுகித் தீவிரகதியுடைய வனும், வேலைசெய்யும் திறமுள்ளவனுமாயிருந்த என்னைத் தன் பங்காய் நிறுத்தி, தனக்கு அடிமையாய் வைத்திருந் தான் "முன்னேரம் கப்பற்காரன், பின்னேரம் பிச்சைக் காரன்." என்பதுபோல, அதிகாலையில் அச்சமற்ற வர்த்த கனுயிருந்த நான் அஸ்தமன காலத்திற்குள் அதிஷ்டங் கெட்ட அடிமையாய்ப்போன அவஸ்தையை நினைத்து, ஆச்சரியப்பட்டு, துக்கசாகரத்தில் மூழ்கினேன். "இனி மேல் ஆபத்துவரும் காலத்தில் நான் சொன்ன புத்திமதி களை நினைத்துத் துக்கிப்பாய். அவ்வேளையில் உனக்குச் சகாயம் செய்வார் எவருமில்லாதிருப்பாய்" என என் தந்தை எதிர்கால திருஷ்டியாய்ச் சொன்ன வாக்கை நினைத்து, அது எழுத்தெழுத்தாய் நிறைவேறியது கண்டு, இதிலும் அதிக கேடு இனி என்ன வரப்போகிறது; தெய்வ சிட்சைக்குள்ளானேன்; இனி எனக்கு மீட்சி யில்லை யென்று பரிதபித்தேன். பின்வரும் சங்கதிகளை முன்னடி யறியும் வரம் எனக்குண்டானுல், எனக்கு இந்த ஆபத்து ஒரு விஷயமாய்த் தோன்ருது; நான் இவ்வளவு பரிதபிக்கவு மாட்டேன். எனக்கு வந்த கஷ்ட நஷ்டங்களுக்கும், நான டைந்த சிறுமைக்கும் இதுதான் ஆரம்பமாயிருந்ததென்று இனிச் சொல்லும் வரலாறுகளால் தோன்றும்.

என்னைச் சிறைபிடித்து வீட்டில் வைத்திருந்த மாலுமி மீண்டுங் கடல்யாத்திரை போகும்பொழுது உருவிலேற்

றிக் கொண்டுபோவானென்றும், அவனே ஸ்பானிய சண்டைக் கப்பலாவது, போர்த்துக்கேய சண்டைக் கப்பலாவது கைதுசெய்ய, எனக்குச் சிறைமீட்சி யுண்டாமென்றும் எண்ணி, எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்; என் எண்ணம் சிதறியது. மாலுமி மறுதரங் கப்பலேறியபொழுது, என்னை வீட்டிலிருந்து தோட்டவேலை செய்யவும், சாதாரணமாய் அடிமைகள் செய்தற்குரிய எளிய தொண்டுகள் செய்யவும் கற்பித்துப் போனான். அவன் சூறைத்தொழில் செய்யப் போய்த் திரும்பி வந்தபின், துறையில் நின்ற தன்னுருவிற்குக் காவலாக என்னை அதில் இருக்கச் சொன்னான்.

அங்கிருக்கையில், அந்தத் துரோகி வசத்தினின்று உபாயமாய் விலகும்பொருட்டு, நான் செய்யத்தக்க சாதனமென்னவென்று இரவும் பகலும் அதே சிந்தையாயிருந்தேன். எனது சிந்தையில் ஆகும்வகை யொன்றும் தோன்றவில்லை. இனி எனக்குச் சிறைமீட்சி யுண்டாமென்று எண்ணுவது சுத்தப் பைத்தியம்போலிருந்தது. என் கருத்தை வெளியிட்டு, எனக்குத் துணையாய்ச் சேர்த்துக் கொண்டு போவதற்கு இம்மாலுமியிடத்தில் என்னைத்தவிர வேறு அங்கிலேயனாவது, அயர்லாந்தனாவது, ஸ்கொத்தியனாவது அடிமைத்தொழில் செய்யவில்லை: ஆனதுபற்றி, இவ்வெண்ணம் இரண்டு வருஷவரையில் என்னுள்ளத்தில் உருப்பட்டிருந்ததொழிய, எண்ணியவாறு செய்வதற்கு எள்ளளவும் சரிப்படவில்லை.

முன்பின் இரண்டு வருஷம் சென்றதன்மேல் எனது அபிப்பிராயத்திற்கு அனுகூலமாய் அபூர்வமானவிதமாய் ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தது. எனது எசமான் கடலிற் சூறையாடப் போவதற்கு உருவை இணக்கி எத்தனஞ்செய்யாமல், நாட்பட வீட்டிலிருந்தார். கையிற் பணமின்மையால் அவர் கடலோடவில்லையென்று சத்தம் பிறந்தது. வாரத்திற்கு இரண்டொருமுறையும், காற்றுமழை யில்லாதிருந்தால் நாலைந்துமுறையும் அவர் இவ்வுருவைச்சேர்ந்த ஓடத்திலேறி, மீன் பிடிக்கப் போவதுண்டு. போம்பொழுது தண்டு வலிக்கும்படி என்னையும், முரஸ்கோ சிறுவன்

ஒருவனையும் அவர் ஏற்றிக்கொண்டு போவார். எங்கள்மூலமாய் அவருக்கு மிகுந்த உல்லாசமுண்டாயிற்று. மீன்பிடிக்குந் தொழிலில் என் கைத்திறத்தை அவர் பலகாற் கண்டு மெச்சியதனால், சிலவேளை என்னையும், மூரன் ஆகிய தமது பந்துக்களில் ஒருவனையும், மூரஸ்கோ சிறுவனையும் விற்கவல்ல, குடும்ப போஜனத்திற்கு மீன்பிடிக்க அனுப்புவார். ஒருநாட்காலையில் காற்றடங்கிக் கடல் சாந்தமாயிருக்கும்பொழுது, நான் அவருடன் ஓடமேறி, மீன்பிடிக்கப் போனேன். கரைக்கு ஒன்றரை மைல் தூரம் போவதற்குள் மூடுபனிப் படலத்தாற் கரை சுத்தமாய்த் தெரியவில்லை. திசைதெரியாது உத்தேசத்தின்பேரில் அன்று பகல் முழுதும், அடுத்த இராமுழுதும் கைசலிக்கத் தண்டு வலித்துக்கொண்டு போனோம். மற்றநாட் காலையில் பனிப் படலம் நீங்கியபொழுது, கரைக்கும், ஓடம் நின்ற விடத்திற்கும் ஆறு மைல் தூரமிருந்தது. பகலும் இரவும் நாங்கள் தண்டு வலித்துச் சென்றது கரைக்கல்ல, கடலுக்கு நேர்முகமாயென்று எங்கள் வகைமோசத்தை அப்பொழுதறிந்தோம்; அறிந்தும் அத்தனை கெடுதியில்லை. காலையிற் காற்றுச் சிறிது கிளம்பியதனாலும், கடும்பசியினாலும் சற்ற வதிப்பட்டு, கரை சேர்ந்தோம்.

"சூடுகண்ட பூனை அடுப்பங்கரையிற் சேராது" என்னும் மூதுரை பொய்க்குமா? எங்கள் எசமான் இனித் தாம் இவ்வோடத்தில் மீன்பிடிக்கப் போவதுமில்லை, ஒரு பகலும் இரவும் பட்ட இவ்வித அச்சத்தையும் அவஸ்தையையும் வலியத் தேடிக்கொள்வதுமில்லையென்றும், முன்பு எங்களுருவினின்று கொண்டுவந்த நெடுவள்ளத்தில் திசைகாட்டுங் கருவியும், போஜனபதார்த்தமும் ஏற்றிக்கொண்டுபோனாற் போகிறதென்றும் சபதஞ்சொல்லித் தீர்மானித்தார். தமது உருவில் தச்சுவேலை செய்த அங்கிலேய அடிமை ஒருவனையழைத்து, மேற்சொல்லிய நெடுவள்ளத்தின் மத்தியில் படவினறைக்குச் சமானமாக அழகான கீழறையொன்றும், அதன் பிற்பாகத்தில் சுக்கான் நிற்கவும், அடிக்கம்பத்தின் பாயை இழுத்துக் கட்டவும் தக்க தட்டொன்றும், முற்பாகத்தில் இரண்டொருவர் நின்று பாய் தூக்க, தணிக்க, சுருக்க

வசதியான அறையொன்றும் சமைக்கும்படி உத்தரவுசெய் தார். அவ்வள்ளம் முக்கோணவடிவான பாய் விரித்துச் செலுத்தப்படுவது. தச்சன் சமைத்தகீழறை சற்றுத்தாழ்ந்து, அடக்கமாயிருந்தது. அது மாலுமியும், இரண்டொரு அடி மைகளும் தாராளமாய்ப் படுத்திருக்கவும், பந்தி போஜனத் திற்கு மேசை வைக்கவுந் தக்கதாக இடமகன்றிருந்தது. அன்றியும், ரொட்டி, அரிசி, காப்பிக்கொட்டை முதலிய போஜனபதார்த்தங்களும், சாராயப்புட்டிகளும் வைக்கும்படி பூட்டுச் சாவியுள்ள சிற்றறைகளும் வகுக்கப்பட்டிருந்தன.

பெரும்பாலும் இவ்வள்ளத்திலேறி மீன்பிடிக்கப் போ னேம்; மீன்பிடிக்குஞ் சாமர்த்தியத்தில் எனக்குச் சமான ரில்லே. அதனல், மாலுமி எப்பொழுதும் என்னே யழைத் துக்கொண்டு போனர். ஒருநாட் சற்றுக் கௌரவமுள்ள மகமதியர் இரண்டு மூன்றுபெயர் மீன்பிடிக்கவோ, உல் லாசத்திற்காகவோ மாலுமியுடன் வள்ளத்திற் போக இருந் தார்கள். அவர்கள்நிமித்தம் விசேஷ போஜனபதார்த்தங் களேச் சேகரித்து, மாலுமி முன்னரே இராத்திரியில் வள்ளத் திற்கனுப்பினர். மேலும் உருவிலிருந்த குருவிக்குழாய்த் துப்பாக்கி மூன்றை எடுத்துத் துடைத்து மினுக்கி, மருந்து ரவையுடன் வள்ளத்திற் கொண்டுபோய் வைத்திருக்கக் கற்பித்தார். மாலுமியும் இஷ்டரும் மீன்பிடித்தற்கன்றி, பறவை குருவி சுட்டு வேட்டையாடுதற்கும் நாட்டமாயிருந் தார்கள்.

"உடையவன் சோற்படி கமுகடி களேபறி" என்பது போல, மாலுமி யிட்ட கட்டளேயைச் சட்டமாய் நிறை வேற்றி, மற்றநாள் அதிகாலேயில் வள்ளத்தைக் கழுவிச் சுத்தி செய்து, பின்னணியத்துத் துவஜமும், பாய்மர உச்சித் துவஜங்களுமேற்றி, விருந்தினர்க்குரிய எத்தனங்களேத் தும் செய்து, அவர்கள் வருகையை எதிர்பார்த்திருந்தேன், சற்று நாழிகை சென்றபின் மாலுமிமாத்திரம் வந்து, இன்று விருந்தினர் வரச் சந்தர்ப்பப்படவில்லே. நீ இங்குள்ள ஆட வன், இளேஞன் இருவருடன் வள்ளத்திற் போய், மீன் பிடித்து, நேரே வீட்டிற்குக் கொண்டுவா. இன்றிரவு எனது

இஷ்டர்கள் விருந்துண்ண வருவார்களென்று சொன்னார். அவர் சொற்படி செய்ய எத்தனித்தேன்.

பிரயாண உபகரணங்கள் குறையின்றிச் சேகரித்து வைத்திருந்த சிற்றுருவொன்றை மாலுமி என் வசம் ஒப்புவித்து, கடலில் மீன்பிடித்துவர உத்தரவு செய்தது, சிறைமீட்சி பெறுதற்கு என்னுள்ளத்தில் முன்பு உற்பத்தியான அபீஷ்டத்தை எளிதில் நிறைவேற்றக் கூடுமென்பதுபற்றி, கறந்த பாலில் கனிந்த பழம் நழுவி விழுந்ததுபோல, எனக்கு மிக இதமாயிருந்தது. எஜமான் போனபின், மீன்பிடிக்கவல்ல, பிரயாணம் போகப் பின்னும் வேண்டிய சாமக்கிரிகளைச் சேகரிக்க எத்தனித்தேன். போகுமிடம் இன்னது இனையதென்று நான் தீர்மானிக்கவில்லை. அவ்விடத்தினின்று மாத்திரம் நீங்கிக் கண்ணுக்கெட்டாத்தூரத்தில் எவ்விடத்திற்குப் போனாலும் எனக்கொன்றுதான.

பின்னும் போஜன பதார்த்தங்கள் சேகரிக்க முதலில் எளிய சூதொன்று செய்தேன். வள்ளத்திலிருந்த மகமதியனைப் பார்த்து, எஜமான் தமக்கும் சினேகருக்கும் வாங்கி வைத்த போஜன பதார்த்தங்களை நாம் பட்சிப்பது மரியாதையல்ல. நமக்கு ஏதாயினும் எளிய போஜனங் கொண்டு போகவேண்டுமென்றேன். மெய்தானென்று அவன் என் சொல்லை ஒப்புக்கொண்டு, ஒரு பெருங்கூடை நிறைய ஒரு வகைக் கோதுமை ரொட்டியும், மூன்று சாடிகளிற் சுத்த ஜலமும் வள்ளத்திற் கொண்டுவந்து வைத்தான். அவன் தண்ணீர் மொள்ளக் கரைக்குப் போனவுடன் ஏதோ அங்கிலேய கப்பலொன்றிற் கொள்ளையடித்துத் தமது உருவில் மாலுமி வைத்திருந்த சாராயப்புட்டிப் பெட்டியொன்றைத் திடீரென் றெடுத்துக் கொண்டுபோய் வள்ளத்தில் வைத்தேன். அது உருவிலிருந்ததென்றும், வள்ளத்திலிருந்ததென்றும் மகமதியனுக்கு விவரந் தெரியாது. அன்றியும், தேன்மெழுகு அறுபத்தாறு இறுத்தலும், முறுக்குநூல் ஒரு பந்தும், கைக்கோடரி, கருக்குவாள், சம்மட்டி இவை வகைக்கொன்றும் வள்ளத்தில் வைத்தேன். இவைகளனைத்தும் நாளாவர்த்தியில் எங்களுக்குபயோகப்பட்டன. முக்

கியமாய் மெழுகுவர்த்தி செய்வதற் கனுகூலித்தது. பின்னும் ஒரு சூது செய்து அம்மகமதியனை உடன்படுத்தினேன்; அது சூதென்று அவனறியான். அவன் பெயர் இஸ்மவேல். சாதாரணமாய் வழங்கும் பெயர் மோலி. நான் அவனைப் பார்த்து: "சொல்லக் கேள், மோலி! வள்ளத்தில் எஜமான் துப்பாக்கிகளிருக்கின்றன: மருந்து ரவை இல்லை. கடலில் உள்ளான் பக்ஷிகளைக் கண்டால், நமக்கு ஆகாரத்திற்குச் சுடலாம்; உருவில் மருந்து ரவைமுதலிய துப்பாக்கி யுபகாரணங்கள் உண்டு; கொஞ்சம் எடுத்துக்கொண்டு வருவாயா" என்று கேட்க, அவன் சம்மதித்துப்போய், பெருந் தோற்பை நிறைய மருந்தும், மற்றொன்றில் ரவையும், சில சிறிய குண்டுகளும் கொண்டுவந்து வைத்தான். மருந்து அரை இறுத்தல், சன்னம் ஐந்தாறிருத்தல்வரையிலுண்டு. உருவின் பெரிய அறைக்குள் வெடிமருந்திருந்தது. சாராயப்புட்டி யொன்றைத் திறந்து, சாராயத்தை மற்றொன்றில் ஊற்றி, வெறும் புட்டி நிறைய அம்மருந்தை யிட்டு, வள்ளத்தில் வைத்தேன். பிரயாணத்திற்கு ஆவசியகமான சாமக்கிரியையனைத்தும் இவ்வண்ணம் சேகரித்தபின்னர், மீன்பிடிக்கத் துறையை விட்டுக் கிளம்பினோம். துறைக் காவற்சேவகன் எங்கள் கருத்தை யறிந்ததனால், ஒன்றும் விசாரிக்கவில்லை. ஒருமைல் தூரம் ஓடிய பின், பாயிறக்கி, வள்ளத்தை நிறுத்தி, மீன்பிடிக்க வாரம்பித்தோம். வடகீழ் மூலையில் வடதிசையை நாடி வீசிய காற்று அந்தரங்கமான எனது அபிப்பிராயத்திற்கு அனுகூலிக்கவில்லை. தென்றல் வீசுமானால், ஸ்பானிய கரைக் காவது, அது தப்பினால் காடிஸ் கடற்குடாவிற்காவது காற்றோட்டத்திற் சந்தேகமின்றி எளிதிற் போய்ச் சேரலாம். வளக்காற்று வீசினும், எதிர்காற்று வீசினும் எவ்விதத்திலும் இந்தப் பாழ்ஞ் சிறையிருப்பினின்று நீங்கி, ஏதாயினும் ஒரு துறைபிடிக்க வேண்டுமென்று தீர்மானஞ்செய்திருந்தேன். வழியில் வரும் சங்கடத்திற்கு இறைவனுண்டென்று எண்ணினேன்.

தூண்டிலை வீசியபொழுதெல்லாம் மீன் அகப்பட்டது. அதை மகமதியன் காணுதிருக்கும்படி நான் தூண்டிலை

இழாமல், மீன் அகப்படவில்லையென்று அரைமணி நேரம் வரையில் தூண்டிலைப் பிடித்தவண்ணமாய் நின்று, அவனைப் பார்த்து: "நாம் இவ்வாறு காலகரணஞ் செய்தால், எஜமானுக்குக் கோபமுண்டாகும். இவ்விடத்தில் மீனகப்படாது. இன்னும் சற்றுத்தூரம் போனால், வேண்டுமட்டும் பிடித்துக்கொண்டு, சமயம் முந்துமுன் வீடு சேரலாம்" என்றேன். என் சொல்லில் ஏதும் வஞ்சகமில்லையென்று மோலி என்பவன் சம்மதித்துப் பாயைத் தூக்கினன். சுக்கான் பிடித்த நான் ஓடத்தைப் பின்னும் மூன்று மைல் தூரஞ் செலுத்தி, மீன்பிடிக்கக் கருதும் பாவனையாக நிறுத்தியபின், சிறுவனைச் சுக்கான் பிடிக்கச்சொல்லி, அணியத்தில் மோலியிடத்திற்குப் போய், அவன் புறத்தில் ஏதோ ஒன்றை எடுக்கும் பாவனையாய்க் குனிந்து, கோழிக் குஞ்சைப் பருந்து சடுதியில் விழுந்தடித்துக் கொண்டு போவதுபோல, விழித்த கண்ணிமைக்குமுன் மோலியைச் செந்தூக்காய்த் தூக்கிக் கடலில் வீசி யெறிந்துவிட்டு, ஓடத்தை விரைவிற் செலுத்திக்கொண்டு போனேன். மோலி முழுகிப் போகவில்லை; மிக விரைவாய் நீந்தி, ஓடத்தைத் தொடர்ந்து, பூலோகத்தில் எவ்விடத்திற்குப் போனாலும் உன்னுடன் வருவேன்; என்னை இப்படி நட்டாற்றிற் கைவிடாமல் ஓடத்தி லேற்றிக்கொள்ளென்று ஆவலாய்க் கேட்டான். காற்றுத் தணிந்துபோனதனால், ஓடம் விரைந் தோடவில்லை. மோலி வேகமாய் நீந்தி நெருங்கிவந்தது கண்டு, நான் கீழறையிலிருந்த துப்பாக்கி யொன்றை நொடிக்குள்ளெடுத்து, அவன் தலைக்கு நேரிலக்காய்ப் பிடித்து: "மோலி, நான் உனக்குத் தீங்கொன்றும் செய்யவில்லை; பேசாதிருப்பாயானால், இனிச் செய்வதுமில்லை; நீ இங்கிருந்து நீந்திப் போய்க் கரைசேர மாட்டுவாய்; அலைக் கிளர்ச்சியின்றிக் கடல் சாந்தமாயிருக்கின்றது; தாமதமின்றிக் கூடிய விரைவில் நீந்திப்போ; தீங்கொன்றும் செய்யேன்; நான் ஒளித்தோடிச் சுவாதீனனாயிருக்கப் பிரதிக்கினை பண்ணியிருக்கிறேன்; புத்தி கெட்டு ஓடத்திற்குச் சமீபத்தில் வருவாயானால், உன் தலையைத் துளைக்கும்படி ஒரு குண்டு பிரயோகித்து, இச்சமுத்திரத்தில் உன்னைப் பிரேதமாக விழுத்து

வேன்; பிராணன் தப்பித்துக்கொள்ள வகைபார்" என்று அச்சங்காட்டி வற்புறுத்தினேன். உடனே அவன் மனத் தீரமழிந்து, திரும்பி, கரைக்கு நேர்முகமாய் நீந்திப் போனான். நீந்துவதில் அருந்திறமுடையவனுதலால், அவன் க்ஷேமமாய்க் கரைசேர்ந்திருப்பானென்பதற் கையமில்லை.

சிறுவனைக் கடலில் தூக்கிப் போட்டுவிட்டு, மோலியை எனக்குத் துணையாய்க் கொண்டுபோக நினைத்தும், அவனிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஏதாயினும் மோசம் பண்ணுவானென்று இப்படிச் செய்தேன். சிறுவன் பெயர் சூரி. பின்பு நான் அவனை நோக்கி: "சூரி, இங்கே வா! நீ எனக்கு விசுவாச காதகஞ் செய்யாதிருப்பாயானுல், நான் உன்னை அன்பாயாதரித்து, நாலுபெயரும் மதிக்கத்தக்க பெரிய மனுஷனுக்குவேன். எனக்குத் துரோகம் நினைக்காதிருப்பாயானுல், உன் *முகத்தை வருடிப் பிரமாணிக்கம் பண்ணு. அப்படிப் பிரமாணிக்கஞ் செய்யாதிருப்பாயானுல் மோலிக்கு வந்த கதிதான் உனக்கும் வருமென்றெண்ணிக் கொள்" என வற்புறுத்திச் சொன்னது கேட்டு, சிறுவன் முகத்திற் குறுநகை தோன்ற, தினையளவுந் துரோகம் நினையாதவன்போல, அவன்: "எனக்குத் தாயும் நீர், தந்தையும் நீர். அகதியானேன், உம்மைத்தவிர எனக்கு வேறு கதியில்லை; நீர் போகுமெத்தேசத்திற்கும் உம்முடன் வருவேன்" என்று பிரமாணிக்கத்துடன் சொன்னுன். எனக்கு அவனிடத்தில் எள்ளளவும் சந்தேக விபரீதமுண்டாகவில்லை.

மோலி தலைக்கறுப்பு மறையவில்லை. அவன் கரைக்கு நீந்திப்போவது கண்டு, ஓடத்தை நெடுங்கடலுக்கு நேர்முகமாய்த் திருப்பி, ஜல சங்கட முகத்துவாரத்தை நாடிச் சென்றேனென்று மாலுமி முதலானவர்கள் எண்ணத்தக்கதாக, சற்றே காற்றுவாக்கிற் சாய்த்துச் செலுத்தினேன். சித்தம் தெளிந்த எவனும் இப்படித்தான் எண்ணுவான். வள்ளத்தில் வந்து நம்மை வதைக்கத்தக்க திரளான மிலேச்சராகிய

---

* முகத்தை வருடுவது, மகமதியருக்குள் மகமதுவையும் தந்தையையுங்கொண்டு பிரமாணிக்கஞ்செய்வதற்கு அடையாளமாம்.

நிகிரோவர் சஞ்சரிக்குங் கரைக்குத் தெற்குமுகமாய் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போனேனென்று யுத்தி புத்தியுள்ள எவரும் எண்ணமாட்டார். அன்றியும், கரையிலிறங்கின க்ஷணமே துஷ்ட மிருகங்கள் பட்சிக்கும். அது தப்பினால், ஜீவகாருண்யஞ் சிறிதுமில்லாத விலங்குகளோடொத்த மிலேச்சருக்குப் பட்சணமாவோம்: ஆனதுபற்றி, தென்றிசை முகமாய் எங்களோடம் சென்றதென்று எவராவது சொப்பனத்திலும் நினையார்.

பொழுது அஸ்தமித்து, மாலை இருள்சேர்ந்த க்ஷணமே நான் ஓடத்தைத் திருப்பிக் கரை நெருங்கும்படி கீழ்த்திசையை நாடி நேர் தெற்குமுகமாய்ச் செலுத்தினேன்; வளக்காற்று நன்றாய் வீசியமையாலும், ஏரிநீர்போல எறிதிரையின்றிக் கடல் சாந்தமாயிருந்தமையாலும், ஓடம் வாயுவேகமாய்ப் பறந்தது. மற்றநாள் மதியந் திரும்பி, மூன்று மணிக்குக் கரை தென்பட்டது. அவ்விடத்திற்கும், ஸல்லி துறைக்கும் தூரம் முந்நூற்றைம்பது மைலுண்டென்று என் மதிப்பில் தோன்றிற்று. மேலும், அவ்விடம் மொரக்கோ சக்கரவர்த்தியின் அதிகார வெல்லைக்குட் சேர்ந்ததுமல்ல, மற்றெந்த அரசனுடைய ஆக்கினைக்குட்பட்டதுமல்ல. கரையில் மனுஷர் ஒருவரையுங் காணவில்லை.

நான் மகமதியருக்கு மிகவும் பயப்பட்டதனாலும், ஒருவேளை என்னைத் தொடர்ந்து அகப்படுத்துவார்களென் றேக்கமுற்றதனாலும், ஓடத்தை நிறுத்தவாயினும், கரையிலிறங்கவாயினும், நங்கூரம்போட்டு நிற்கவாயினும் என் மனமுடன்படவில்லை. வளக்காற்று விடாமல் வீசிக்கொண்டிருந்தமையால், ஐந்துநாள் வரையில் எனது சிற்றுருவைச் செலுத்திக்கொண்டு போனேன். ஐந்துநாள் முடிவிற் காற்றுத் தெற்கே திரும்பியது: ஆனதுபற்றி, மகமதிய வுருக்கள் என்னைத் தொடர்ந்து வந்திருப்பினும், இனி முடியாதென்றெண்ணித் திரும்பிவிடுமென்று உறுதியாய் நம்பி, துணிவு கைவிடாமல் ஓடத்தைக் கரை நெருங்கத் திருப்பிவிட்டு, சிறுநதியொன்றின் முகத்துவாரத்தில் நங்கூரம்போட்ட வளமான விடம் பார்த்து நின்றேன். அந்நதியின் பெயர்,

அவ்விடக் குறிப்பு, அத்தேசத்தின் பெயர், அங்கிருக்கும் ஜன விவரம் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை: நான் எவ ரையுங் காணவுமில்லை, காணக் கருதவுமில்லை. முக்கியமாய் எனக்குச் சுத்த ஜலம் வேண்டியிருந்தது. அஸ்தமன காலத் தில் மேற்சொல்லிய நதிமுகத் தீரத்தின் ஒதுக்கில் நாங் கள் சேர்ந்தபின், மாலை வெளிச்சமகன்றவுடன் நீந்திக் கரைசேர்ந்து உலாவிப் பார்த்து, நீர்நிலை கண்டு தண்ணீர் மொள்ள வெண்ணியிருந்தோம். இப்படியிருக்கையில், இருட் டின க்ஷணமே துஷ்ட விலங்குகள் குலைப்பதும், கர்ச்சிப் பதும், ஊளையிடுவதும் செவியதிரக் கேட்டு, திடுக்கிட்டுத் திகைத்தோம். அவை எவ்வித விலங்குகளென்று எங்க ளுக்கு விவரம் தெரியவில்லை. விளுத்தெரியாத பாலனு கிய சூரி அச்சத்தாற் சோர்ந்து செயலழிந்து, விடியற்கால மாமளவும் ஓடத்தை விட்டிறங்காதிருக்க என்னைப் பிரார்த் தித்தனன். அதுகேட்டு: "ஆகட்டும், சூரி, நானிறங்கவில்லை; சூரியோதயமானபின் கரைப்படுவோமானால், கர்ச்சிக்கும் மிருகேந்திரனுகிய சிங்கத்திலும் கொடிய விக்கினம் செய் யத்தக்க மானிடர் எதிர்ப்படினும் எதிர்ப்படுவார்களே; அதற்குபாயமென்ன" என்று கேட்டேன். உடனே சூரி கைகொட்டி நகைத்து: "வேறு உபாயமென்ன, துப்பாக்கி யெடுத்து ஒரு வெடி தீர்வோமானுல், குலை குலைந்து, பதறி உதறி நொடிக்குள்ளே ஓடித் தப்பிவிடுவார்கள்" என்றுல் லாசமாய்க் கூறினுன். அங்கிலேய பாஷையில் அவ னுக்கு நன்ருய்ப் பேச்சு வராது. மாலுமிக் கடிமைத் தொழில் செய்த எங்கள் பேச்சைத் தினம் தினம் கேட்டுப் பயின்றதனுல், அவனுக்கொருவாறு மதலைவாக்கு வந்தது. அவனுல்லாசத்தைக் கண்டு மகிழ்கூர்ந்து, பின்னும் ஊக் கம் பிறக்கும்படி ஒரு திராம் சாராயம் குடிக்கக் கொடுத் தேன். இளைஞன் புத்தியானுலும், ஏற்கும் புத்தியைத் தள்ள வொண்ணுது. இராக்காலத்திற் கரைப்பட்டால், ஏதும் விபத்து நேரிடுமென்று சூரி சொன்னது எதார்த்தமென் றெண்ணி, சூரியோதய காலபரியந்தம் நங்கூரமிட்டு அடங் கியிருந்தோம்; சிறிது முறக்கம் வரவில்லை. இரண்டு மூன்று மணிநேரஞ் செல்லுமுன் பிரமாண்டமான பலஜாதி மிரு

கங்கள் (பெயர் விவரம் அறியோம்) திரண்டு நெருங்கி, ஜலத்திலிறங்கி, முழுகி, முக்குளித்து, வெப்பந் தணியும் படி உல்லாசமாய் நீந்தி விளையாடியதுமன்றி, பேய்க்கோல மாய் ஊளையிட்டுக் கர்ச்சித்துக்கொண்டிருந்தன. பிறந்த நாள்முதல் அதுவனையில் நான் அத்தனை திகிலுள்ள முழக் கொலி கேட்டதில்லை.

இடியொலி கேட்ட சர்ப்பம்போல, சூரி அத்தியந்த திகி லடைந்து ஸ்மரணை தப்பியிருந்தான்; எனது கதியும் அது வே. இப்படி இருக்கையில், அதிசய பலமுள்ள ராக்ஷத பரிமாணமான விலங்கொன்று எங்கள் ஓடத்திற்கு நெருங்கி நீந்திவரும் அதிர்ச்சி கேட்டு, பின்னுமச்சத்தால் நெஞ் சதிர்ந்து நிலை குலைந்தோம். அதை நாங்கள் கண்ணுற் காண வில்லை. அதன் கர்ச்சனை மேக முழக்கத்திற்குச் சமானமா யிருந்ததனால், அது விசேஷ உக்கிரமுள்ள பிரமாண்டமான துஷ்டமிருகமென் றெண்ணினோம். அது சிங்கமென்று சூரி சொன்னான்; சிங்கமாயிருப்பினும் இருக்கலாம். சூரிக் குண்டான தடுமாற்றம் இவ்வளவென்றில்லை. நங்கூரந் தூக்கித் தண்டு வலித்தோடுவோமென்று சூரி அழுதழுது சொல்ல, நானதை மறுத்து: "அப்படி யல்ல, நங்கூர வட முனையில் மிதப்புக் கட்டி, அவ்விடத்திற் குறிப்பாய் வடத் தைப் போட்டுவிட்டு, ஓடத்தைத் திருப்பிச் சற்று எட்ட ஓடுவோம். இவ்விலங்குகள் அத்தனைதூரம் நம்மைத் தொட ரத்தக்கவையல்ல" என்று சொன்னேன். அதற்குள் அந்த மிருகம் ஓடத்திற்கு நெருங்கி, இரண்டு தண்டுப் பரிமாண தூரத்திற் கிட்டியது கண்டு, சற்றுத் திடுக்கிட்டும், துணிவு கைவிடாமல் மருந்து கெட்டித்திருந்த துப்பாக்கியை யெடுத்து ஒரு வெடி தீர்த்தேன். அந்த க்ஷணமே விலங்கு புறங் காட்டிக் கரைக்கு நீந்திப் போய்விட்டது. வெடியதிர்ச்சி கேட்டவுடன் கடற்கரையிலும், நடுக்காட்டிலுமுள்ள துஷ்ட மிருகஜாதிகள் திறம்பாத ஆண்மையுள்ள திட புருஷருந் திகைக்கும்படி பிளிறி, குலைத்து, கூவி, கர்ச்சித்து, ஊளையிட்டது இத்தன்மைத்தென்று எவ்வளவேனும் விவ ரிப்ப தசாத்தியம். இதற்குமுன் அவ்விலங்குகள் இத் தனை அதிர்ச்சியாய் ஊளையிட்டதில்லையென்று எண்ணுகி

றேன். இராக்காலத்திற் கரைப்படுவது பிராணுபாயமென்று தேவேத்தனமாய் எனக்கிந்தச் சாட்சி பிறந்தது. பட்டப் பகலிற் கரைப்படத் துணிவதும் விபரீதமாகவே தோன் றிற்று. இரவிற் கரையிறங்கி, சிங்கம், புலி, கரடி முத லிய துஷ்ட மிருகங்களுக்குப் பட்சணமாவதும், பகலில் விலங்கினுங் கொடிய பரம துஷ்டராகிய மிலேச்சர் கை வசப்படுவதும் ஒன்றுதானே. இருவிதத்திலும் பிராணு பாய முண்டாமென்று எங்களெண்ணத்தில் உறுதியாய்ப் பட்டது.

எத்தனை சங்கடம் நேரிடினும், என்னென்ன வபாய மெதிர்ப்படினும் ஓடத்தில் ஒரு துளி தண்ணீருமில்லாத தனுல், தண்ணீர் மொள்ளுவதற்காயினுங் கட்டாயமாய்க் கரையிலிறங்க வேண்டியிருந்தது. நான் கரைக்குச் சென்று, ஏரி, குளம், குட்டை, ஆறு, தரவு முதலிய நீர் நிலைக ளைத் தேடிப்பார்த்து, தனணீர் மொண்டு கொண்டுவரட்டுமா வென்று சூரி கேட்டான். அதற்கு நான்: "நீ போகவேண்டிய தென்ன? நீ இங்கிருக்க, நான் போய்த் தண்ணீர் மொண்டு வருகிறேன்; அதற்கென்ன சொல்லுகிருய்" என்று அவன் கருத்தறியும்படி உசாவினேன். அதற்கவன்: "நன்றி மறப்பது நன்றன்று; நீர் எனக்குச் செய்த சகாயம் என் னுயிர் உள்ளளவும் மறக்கத்தக்கதல்ல. எனக்கொரு தீங்கு வரினும், உம்மைப் பிரதிபாலிப்பது எனது பாரம். வன சரராகிய துஷ்ட மிலேச்சர் எதிர்ப்படின், நான் அவர்களுக் குப் பட்சணமாக, நீர் தப்பித்துக்கொள்ளலாமே: ஆனது பற்றி, நானே கரைக்குப்போவது உத்தமம்" என்ருன். அவன் சொல் என் செவிக்கு அத்தியந்த மதுரமாயிருந்தது. அது கேட்டவுடன் என் மனம் அன்பினுலுருகி மகிழ்கூர்ந் தது. அன்றுமுதல் நான் அவனை என் கண்மணிபோலப் பிரதிபாலனஞ் செய்து நேசித்துக்கொண்டு வந்தேன். பின்பு நான்: "ஒரு உபாயம் சொல்லக்கேள். நாமிருவரும் போவோம். வனவாசிகளாகிய மிலேச்சரைக் கண்டால், வதைசெய்து இருவருந் தப்பித்துக்கொள்வோம்" என்று அவனுக்குத் தேறுதல் சொல்லி, ஒரு ரொட்டியும், ஒரு கிண்ணஞ் சாராயமுங் கொடுத்தபின், ஓடத்தைக் கரையை

நெருங்கத் தள்ளி, துப்பாக்கிப் படைக்கலங்களும், தண்ணீர் மொள்ளச் சாடிகளிரண்டும் எடுத்துக்கொண்டு இறங்கிக் கரைக்கு நடந்து போனோம்.

ஆற்றில் மிலேச்சர் ஒருக்கால் ஓடஞ்செலுத்தி வருவார்களோவென் றையுற்று ஓடம் மறையுந் தூரத்திற்கு நான் போகத் துணியவில்லை. ஒரு மைல் தூரத்தில் பள்ளத்தரை யிருப்பது கண்டு, சூரி அவ்விடத்திற்குப் போய்ச் சற்றுநாழிகை சென்று துரிதமா யோடிவந்தான். மிலேச்சர் தொடர்வதனாலோ, துஷ்ட மிருகத்தைக் கண்டு அச்சமுற்றோ ஓடிவருவதாக நினைத்து, அவனுக்குதவிசெய்ய விரைந்து சென்றேன். இருவரும் நெருங்கியபின், அவன் தோளில் துப்பாக்கியாற் சுட்டு விழுத்தின ஏதோ ஒரு விலங்கைச் சுமந்துகொண்டு வந்தான் அது முசலின் சாயலுள்ளது; நிறம் வேறு; கால்கள் சற்று நீண்டிருந்தன. அவன் சந்துஷ்டியாய் விரைந்தோடி வந்தது, அவ்விடத்தில் துஷ்ட மனிதரில்லையென்றும், சுத்த ஜலமிருக்கிறதென்றும் எனக்குச் சொல்வதற்குத்தான். அவன் கொண்டு வந்த விலங்கின் மாமிசம் மிக ருசிகரமாயிருந்தது.

கடற்பெருக்குவேளை கழிந்தபின், கரைக்குச் சற்றுத் தூரத்தில் ஆற்று ஜலம் முத்துப்போலத் தெளிந்து தாகசாந்திக்குச் சிறிதும் உவர்ப்பின்றி உத்கிர்ஷ்டமாயிருந்தது கண்டு, சூரி போன அவ்வளவு தூரத்திற்குத் தண்ணீர் மொள்ளப் போகவேண்டுவதில்லையென் றறிந்தோம். ஆற்றிற் றண்ணீர்மொண்டு, இறைச்சியைச் சமைத்துப் புசித்தபின் அச்சமின்றிப் பிரயாணப்படவெத்தனித்தோம். நாங்களிறங்கின இடத்தில் மனுஷர் அடிச்சுவடு காணவேயில்லை.

அந்தக் கரைக்கு நான் முன்னும் ஒரு பிரயாணம் போனதனால், கனேரிஸ் தீவுகளும், கேப் டீவேர்ட் தீவுகளும் சமீபத்திலிருப்பதை அறிவேன். நாங்கள நின்ற ஸ்தானத்தை இன்னதென்று வரையறுக்கும் யந்திரங்கள் கொண்டு வாராமையானும், அவ்விடத்தின் விவரம் ஐயந்திரிபற எனக்குத் தோன்றாமையானும், மேற்சொல்லிய தீவுகளின் ஸ்தான

விவரம் எனக்குத் திட்டமாய்த் தெரியாமையானும், அவைக ளுக்கு நேர்முகமாய்ச் செல்வதற்கு ஓடத்தை விரிகடலில் திருப்பிவிடுங் காலக்குறிப்பு விளங்காமையானும் இத்தீவு களில் சிலவற்றையாயினும் எளிதிற் காணக்கூடாதிருந்தது. அங்கிலேயர் வர்த்தகஞ்செய்யும் துறை கிட்டுமளவும் கரைக்கணித்தாய் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போ னால், வர்த்தகர் உருக்களைக் காணலாமென்றும், அவர்கள் எங்களைத் தங்கள் உருவில் ஏற்றி உதவிபுரிவார்களென்றும் எண்ணினேன்.

மொரக்கோ சக்கரவர்த்தியின் எல்லைக்கும், நிகிரோவர் நாட்டின் எல்லைக்கும் மத்தியில் ஒரு பிரதேசம் இருக்கின் றதே. அதுதான் நாங்கள் இப்பொழுது நின்ற கரையை யடுத்த தேசமென்று, சிந்தித்துப் பார்க்குமளவில், என் எண்ணத்திற் பட்டது. இந்தப் பிரதேசம் துஷ்ட மிருகங் கள் சஞ்சரிக்கும் நிர்மானுஷிய வனம். முற்காலத்தில் இங் கிருந்த நிகிரோவர்கள் மகமதியருக்கஞ்சிக் குடியெழுந்து, தெற்கே வெகுதூரத்திற் கப்புறம் போய்விட்டார்கள். நிலம் விவசாயத்திற்கு வளப்படாது; செழுமை சிறிதுமில்லை: ஆனதுபற்றி, மகமதியர் இப்பிரதேசத்திற் குடியேற நாட வில்லை. அன்றியும், உபயபட்சத்தார்களும் இந்நாட்டைக் கைவிட்டதற்கு முக்கியமான காரணம் இது. சிங்கம், வேங்கை, செம்புலி முதலிய துஷ்ட வினவிலங்குகள் இவ்வா ரணியத்தில் மிகு திரளாய்ச் சஞ்சரிக்கின்றன. அப்போதப் போது மகமதியர் இரண்டாயிரம் மூவாயிரம்பெயர் ஒன் றாய்ச் சேர்ந்து, ஆயுதபாணிகளாய் இவ்வனத்திற்கு வேட் டையாட வருவதுண்டு. கரை சார்ந்த இந்நாடு நூறு மைல் தூரவரையில் நிர்மானுஷியமான பாழ்ந்தரையாயிருந் தது. ஓடத்தில் செல்லும்பொழுது, பகலிற் பார்த்த இடமெல் லாம் பாழ்நிலம். இரவிற் கேட்ட ஒலி எல்லாம் துஷ்ட மிருகங்களின் குளிறொலியும் கர்ச்சனையும்.

கனேரிஸ் தீவில் உள்ள தேனரிப் பர்வதத்தின் உன்னத சிகரம் பகற்காலத்தில் இரண்டொருமுறை என் கண்ணுக் குத் தோன்றியதுபோல் இருந்தது. அத்தீவிற் சேரும்படி

ஆழ்ந்த சமுத்திரத்தில் ஓடத்தைத் திருப்பிச் செலுத்தத் துணிந்தும், எதிர்காற்றடித்ததனுலும், குமுறிக் கொந் தளித்த சமுத்திரத்தில் எனது சிற்ருரு ஓடும் தரமல்லாதத னுலும் மீண்டும் திரும்பி, முன் எண்ணியபடி அங்கிலேய வர்த்தகர் உருக்கள் எதிர்ப்படுமென்று கரையை அடுத் தோடத் தீர்மானித்தேன்.

மேற்குறித்த கடற்குடாவினின்று பெயர்ந்தபின் தண்ணீர் மொள்ள அங்கங்கே அனேகம் தரம் கரைக்கு இறங்கினேம். ஒருநாள் அதிகாலையில் மேட்டுத்தரை கடலிற் சிறிது ஒற்றி வந்திருக்கும் ஒதுக்கில் நங்கூரம் போட எத்தனித்து, பெருக் குவேளையாயிருந்ததனுல், பின்னும் கரை நெருங்கப் போக லாமென்று பொறுத்து நின்ருேம். பெரும்பாலும் தன் உயி ரைக் காக்கும்விஷயத்திற் கண்ணுயிருந்த சூரி (எனக்கு அத்தனை அக்கறை பிறக்கவில்லை) மெதுவாய் என்னைக் கூப்பிட்டு: "நாங்கள் கரை தெரியாமல் சமுத்திரத்திற்கு ஓடத்தைத் திருப்பிவிடுவது நல்லது. அதோ பாரும், அம் மலைச்சாரலில் அஞ்சாத் துணிவுடையோரையும் கர்ப்பம் கலக்கித் துணுக்குறச் செய்யும் பிரமாண்ட மிருகமொன்று படுத்து அயர்ந்து தூங்குகிறது" என்று சொல்ல, நான் அவன் குறிப்பித்த இடத்தில் அவன் சொல்லியபடி பார்த்த கண் பஞ்சாடி நெஞ்சு அதிரத்தக்க பயங்கரமான துஷ்ட மிருகம் ஒன்றைக் கண்டேன். மிகப் பருத்து உயர்ந்த ஆண்சிங்கம் ஒன்று கடற்கரைப் பக்கத்திற் சற்றுப் புடைத் துக் கவிந்திருந்த மலைக்குவட்டு நிழலிற் படுத்திருந்தது. "சூரி, நீ போய் அவ்விலங்கைச் சுட்டு விழுத்து" என்று நான் சொல்ல, சூரி அஞ்சித் தடுமாறி: "அவ்விலங்கைச் சுட்டு விழுத்த நான் எம்மாத்திரம்! ஒரு கவ்வில் உச்சி நின்று உள்ளங்கால்பரியந்தம் அது என்னை விழுங்கிப் பட் சிக்குமே!" என்ருன். அப்புறம் நான் அவனைப் போகச் சொல்லவில்லை. பேசாமல் படுத்துக்கொள்ளச்சொல்லி, பெருங்குழாய்த் துப்பாக்கியை எடுத்து, அண்டாகிருதி யான இரட்டைக் குண்டும் மருந்தும் இட்டுக் கெட்டித்து வைத்துவிட்டு, வேருெரு துப்பாக்கியிற் சமானிய குண்டு இரண்டும், பின்னும் ஒரு துப்பாக்கியில் சிறு குண்டு ஐந்

தும் கெட்டித்து வைத்தபின், பெருந்துப்பாக்கியை எடுத்து, அவ்விலங்கின் தலைக்குத் தவருது இலக்குக் குறிப்பு வைத்து வெடிதீர்த்தேன். அந்தத் துஷ்ட பிராணி மூக்குக்குச் சற்றுமேல் காலை அழுந்த வைத்துக்கொண்டு படுத்திருந்ததனால், குண்டுகள் தலையைத் துளைக்காமல் முழங்தாளின்கீழ்ப் பட்டு, காலெலும்பு ஒடிந்துபோயிற்று. உடனே சிங்கமானது உக்கிரங்கொண்டு சீறி, உறுமிக்கொண்டெழுந்து, உறுதியாய் நிற்கக் காலெலும்பு ஒடிந்ததனுற் பொத்தென்று விழுந்து, மூன்று காலில் எழுந்து நின்று, கேட்குமெவர்களும் திடுக்குற்றுத் திகைத்து விழும்படி உரத்துக் கர்ச்சித்தது. இத்தனை அதிர்ச்சியான இரைச்சலை நான் என்றும் கேட்டதில்லை. நான் பிரயோகித்த குண்டு சிங்கத்தின் தலையில் ஏறுமற்போனது ஆச்சரியந்தான். காயம்பட்ட சிங்கம் நகர்ந்து அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்தது. மற்றத் துப்பாக்கியை எடுத்து வெடிதீர்த்தேன். குண்டு தலையிற் பாயவே, விலங்கரசு அடியற்ற மரம்போல் அயர்ந்து விழுந்து, கழுத்தறுத்த கோழி துடிப்பதுபோலச் சுழன்று பதறிப் பதைத்தது. அப்பொழுதுதான் சூரி அச்சந் தெளிந்து மனந் தேறிக் கரைக்குப் போக உத்தரவுகேட்டான்; போகச்சொன்னேன். அவன் கடலில் குதித்து, ஒரு கையில் துப்பாக்கிகொண்டு, ஒரு கைவீச்சால் நீந்திக் கரைசேர்ந்து, மரணத்தறுவாயிலிருந்த சிங்கத்திற்குக் கிட்டப்போய், துப்பாக்கிக் குழாய்வாயை அதன் செவித் துளையோடு அழுந்த வைத்து, பின்னும் ஒரு குண்டு பாய்ச்சினுன். அம்மட்டில் அதன் குறைப்பிராணன் போய்விட்டது.

சிங்கத்தைச் சுட்டு விழுத்தினது நமக்கு உல்லாசமாயிருந்தது. அதன் மாமிசம் ஆகாரத்திற்குதவாதே. வியர்த்தமாய் மூன்று வெடி மருந்து குண்டு ரவைகளைப் போக்கடித்ததைப்பற்றி விசனப்பட்டேன். சூரி அதன் தலையைத் தறித்துக் கொண்டுவரக் கருதி, ஓடத்திற்கு நீந்தி வந்து, கோடரி கேட்டு வாங்கிக் கொண்டுபோய்த் தறிக்கப் பார்த்தான். கோடரி வாய் அதன் தலையில் அணுவும் ஏறவில்லை. ஒரு பாதத்தைத் தறித்துக் கொண்டுவந்தான்.

அது மிகவும் அகன்றிருந்தது. சிங்கத்தோல் எங்களுக்கு உபயோகப்படுமென்று சூரியும் நானும் போய் உரித்தோம். சூரி பதருமல் உரித்தான். எனக்குக் கை வழங்கவில்லே. தோல் உரிக்க அன்று பகல் முழுதும் சென்றது. சாயரக்ஷையாகுமுன் பழுதின்றித் தோலேப் பத்திரமாய் உரித்து, ஓடத்தின் அறைவீட்டு முகட்டில் உலரும்படி விரித்துவைத்தோம். இரண்டுநாள் வெயிலில் அது ஈரமுலர்ந்து நன்ருய்க் காய்ந்தது. பிற்பாடு அது எனக்குப் படுத்துறங்க உதவிற்று.

# 3. அத்தியாயம்.

*ஐரோப்பிய கப்பல் எதிர்ப்படும் என்ற ஆசையினல் ஓடத்தைத் தெற்கு முகமாய்ச் செலுத்திக் கொண்டுபோனது. கரையில் மிலேச்சரைக் கண்டது. பெரிய செம்புலி ஒன்றைச் சுட்டுக் கொன்றது. சமுத்திரத்தில் எதிர்ப்பட்ட வர்த்தக மரக்கலத்தின் மாலுமி எங்களைத் தனது உருவிலேற்றிக் கொண்டுபோனது. ப்ரேஜில் கரையிற் சேர்ந்து, அங்கே கிரயத்திற்கு நிலம் வாங்கித் தோட்டம் செய்தது. உள்ளது போதுமென்று திருப்தியடையாமல், திரண்ட திரவியம் சம்பாதிக்கும் ஆசையால் கடல் யாத்திரை செய்தது. பெயர் அறியாத தேசத்திற்குச் சமீபத்தில் மரக்கலம் மணற்குன்று தட்டிப் பொறுத்து நின்றது. என்னைத்தவிர மற்றெல்லாரும் மாண்டது. நான்மாத்திரம் குறைப்பிராணியாய் அலேயால் எற்றுண்டு கரையடைந்தது.*

பின்பு நங்கூரம் தூக்கிப் பத்துப் பன்னிரண்டு நாள் வரையில் ஓரிடத்திலும் நிற்காமல், ஓடத்தை நேர்தெற்கே செலுத்திக்கொண்டு போனேம். எங்கள் வசம் இருந்த போஜனபதார்த்தங்கள் வரவரக் குறைந்துபோனதனுல், வயிற்றைக் கட்டிச் சற்று மிதமாய் உண்டுவந்தோம். சுத்த ஜலம் வேண்டும்பொழுதுமாத்திரம் கரையில் இறங்கினேம். தெற்குமுகமாய்ப் போனல் டீவேர்ட் முனே நாட்டுக்குச் சமீபத்தில் கம்பியா நதியாவது, சேனிகல் நதியாவது கிட்டுமென்றும், அங்கே ஏதாயினும் ஒரு சீமைக்கப்பலேக் காணலாமென்றும் எண்ணினேன்; காணுதிருக்கச் சம்ப

வித்தால், அப்புறம் செய்வது இன்னதென்று எனக்குத் தோன்றவில்லை. தீவைத் தேடிப் போய்ப் பிழைத்தாலும் பிழைக்கலாம், அங்கிருக்கும் நிகிரோவர் வசப்பட்டு இறந் தாலும் இறக்கலாமென்று நினைத்தேன். ஐரோப்பாவினின்று கினிய கரைக்காவது, ப்ரேஜில் துறைக்காவது, கிழக்கிந்திய தீவுகளுக்காவது பிரயாணப்படும் உருக்கள் அனைத்தும் டீவேர்ட் முனையை, அல்லது கனேரிஸ் தீவுகளைக் கண்டு போவது அறிவேன்; விரித்துச் சொல்லவேண்டுவதென்ன? சீமை உருவைக் காண்பேனாகில், அச்சமில்லை. அது என் அதிஷ்டந்தான்; காணாதுபோனால், எனக்கு மரண கதியன்றி வேறு கதி இல்லையென்று உறுதியாய் நினைத் தேன்.

இவ்வெண்ணத்தைச் சிந்தையில் வைத்துப் பின்னும் பத்துநாள்வரையில் ஓடினேன். உரு ஓடிய கரையை அடுத்த பிரதேசம் மனுஷர் சஞ்சரிப்பதென்று பிரத்தியட்சமாய்க் கண்டோம். இரண்டு மூன்று இடங்களில் கடற்கரையில் மனுஷர் கூடி, எங்களைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் சுத்த நிர்வாணிகள். அவர்கள் மேனி காரிருள் போலக் கறுத்திருந்தது. இறங்கிக் கரைக்குப் போய், அவர் களைக் கண்டு பேச எண்ணினேன்; இளைஞனாயினும் சூரிக்கு வந்த புத்தி எனக்கு வரவில்லை. அவன்: "கரையில் இறங்க வேண்டாம், இறங்கவேண்டாம்" என்று அழுத்திச் சொன் னான். இறங்காதிருப்பினும் அவர்களுடன் சம்பாஷிக்கும் பொருட்டு, ஓடத்தைக் கரை நெருங்கச் செலுத்தினேன்; ஓடம் செல்லச் செல்ல, அவர்களும் கரையோரமாய் நெடுந் தூரம் ஓடி வந்தார்கள்: அவர்கள் கையில் ஆயுதவர்க்கம் இல்லை. ஒருவன்மாத்திரம் நெடுங்கோல் ஒன்று வைத் திருந்தான். அக்கோல் ஈட்டியென்றும், குறித்த இலக்கில் அணுவும் தப்பாமல் தைக்கும்படி நெடுந்தூரத்தினின்று அவர்கள் அதை எறியமாட்டுவார்களென்றும் சூரி சொன் னான்: ஆனதுபற்றி, நான் ஓடத்தைச் சற்று எட்ட விட்டு, கூடியவரையிற் கைச்சமிக்கையால் அவர்களுடன் வார்த் தையாடினேன். முக்கியமாய் ஆகாரத்திற்கு ஏதாயினும் வேண்டுமென்று குறிப்பித்தேன்; என் குறிப்பறிந்து

அவர்கள் ஓடத்தை நிறுத்தினால், போஜனபதார்த்தங் கொண்டுவந்து கொடுப்பதாகக் கைக்கோரணி காட்டினார்கள். உடனே மேற்பாயைத் தணித்து, ஓடத்தை நிறுத்தினேன்; அதுகண்டு, இரண்டு பெயர் தங்கள் கிராமத்திற்கு விரைந்தோடி, முன்பின் ஒரு நாழிகை நேரத்தில் மாமிசவற்றல் இரண்டு துண்டும், அவர்கள் நாட்டில் விளையும் தானியம் கொஞ்சமும் கொண்டுவந்தார்கள். அப்பொருள் விவரம் அறியாதிருந்தும், வாங்க விரும்பினேம். வாங்குவதற்கு வகை தெரியவில்லை. கரைக்கு இறங்கிப் போய் வாங்க எனக்குத் துணிவு வரவுமில்லை, எங்களுடன் நெருங்கி வர, அவர்களைப் பிடித்த ஏக்கம் விடவுமில்லை. அவர்கள் இருதிறத்தாருக்கும் விக்கினமில்லாத ஓர் உபாயம் செய்தார்கள். மேற்சொல்லிய பதார்த்தங்களைக் கரையோரத்திற் கொண்டுவந்து வைத்துவிட்டு, நெடுந்தூரத்திற் போய் நிற்க, நாங்கள் இறங்கி அப்பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு மீண்டும் ஓடமேறியபின் நெருங்கி வந்தார்கள்.

சமயத்திற் செய்த இந்நன்றிக்கு அவர்களுக்குக் கைமாறு செய்ய எங்கள் வசம் ஒன்றும் இல்லாததுபற்றி, சிரக்கம்பத்தினாலும் கரக்கம்பத்தினாலும் வந்தனம் சொன்னேம்; ஆயினும், அவர்கள் செய்த உபகாரத்திற்குப் பதின்மடங்கதிகமான பேருபகாரம் செய்யும்படி, க்ஷணப்பொழுதிற் சந்தர்ப்பப்பட்டது. நாங்கள் கரை நெருங்க ஓடத்தை நிறுத்திக்கொண்டிருக்கையில், பராக்கிரமமுள்ள விலங்குகள் இரண்டு மலைநாட்டினின்று கடற்கரைக்குச் சொல்வதற்கரிய உக்கிரத்துடன் ஓடி வந்தன: ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று வந்ததனால், அவை ஆணும் பெண்ணுமோ? உல்லாசத்திற்கு விளையாடிக்கொண்டு வந்தனவோ? உக்கிரத்துடன் சண்டையிட்டு வந்தனவோ? அவை இவ்வாறு வருவது வழக்கமோ? அபூர்வமோ? எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அர்த்தாபத்திப் பிரமாணத்தால் ஒன்று உறுதியாய் அறிந்தோம். துஷ்ட வனவிலங்குகள் இராக்காலத்திலன்றி, பட்டப்பகலில் வெளிப்படுகிறதில்லை. அன்றியும், கரையிற் கூடிநின்ற ஜனங்கள் (முக்கியமாய் ஸ்திரீகள்) அவ்விலங்கு

களைக் கண்டவுடன் திகைத்தார்கள்; ஆதலால், இவ்விதத் துஷ்ட மிருகங்கள் பகற்காலத்தில் அளையை விட்டுப் பெயர்ந்து, கடற்கரைக்கு வருவது அபூர்வமென்று நம்பு கிறேன். ஈட்டி வைத்திருந்த ஒருவன்தவிர, மற்றெல்லா ரும் ஓட்டம் பிடித்தார்கள். அவ்விலங்குகள் நேரே கட லில் இறங்க ஓடிவருகையில், எதிர்ப்பட்ட நிகிரோவர் களில் எவரையாவது பாய்ந்தடிக்க நினைக்காமல், கடலி லிறங்கி முழுகி, நீந்தி, விளையாடிக் காலக்ஷேபம் செய்தன. சற்றுநாழிகை சென்றபின், ஒன்று ஓடத்திற்கு நெருங்கி வந்தது. அத்தனை கிட்ட வருமென்று நான் ஆரம்பத்தில் எண்ணவில்லை; எண்ணுதிருந்தும் என்ன? பிரமாதம் ஒன் றுமில்லை. கூடிய விரைவில் ஒரு துப்பாக்கியிற் குண்டு மருந்து கெட்டித்து, ஒரு கை பார்க்கலாமென்று துணிந்து வெடிதீர்க்க எத்தனமாய் நின்றேன். அன்றியும், மற்றி ரண்டு துப்பாக்கிகளையும் தாணித்து வைக்கும்படி சூரிக் குச் சொன்னேன். குண்டு பாயுந் தூரத்தில் நெருங்கிய க்ஷணமே ஒரு வெடி தீர்த்தேன். இலக்குத் தப்பாமற் குண்டு தலையிற் பாய்ந்ததனுல், அவ்விலங்கு உடனே ஜலத்தில் அமிழ்ந்தி, அப்புறம் அடுத்தடுத்து மிதப்பதும் தாழ்வது மாயிருந்தது. இவ்வாறு அது பிராணவஸ்தைப் பட்டுக் கரைக்குத் திரும்பி, கரையேற ஒரு அடித்தூரமாத்திர மிருக்கையில், இறந்துபோயிற்று. பிராணுபாயமான காயம் பட்டதனுலும், தண்ணீர் குடித்துத் திக்குமுக்காடியதனுலும் அதற்கு அத்தனை விரைவிற் பிராணன் போனது.

வெடி அதிர்ச்சி கேட்டும், துப்பாக்கி மருந்து வாயில் நெருப்புப்பற்றிய ஒளியைக் கண்டும், பேதைகளாகிய அம்மி லேச்சருக்குண்டான பிரமை இவ்வளவென்று சொல்வ தற்கு என்னுல் ஆகாது. சிலர் அச்சத்தால் அறிவு கலங்கி விழுந்து, பிரேதங்கள்போலக் கிடந்தார்கள். குண்டு பட்ட விலங்கு இறந்து ஜலத்தில் முழுகியதையும், அச்சமின்றிக் கரைக்கு நெருங்கி வரும்படி நான் கைச்சமிக்கை செய்த தையும் கண்டபொழுது, அவர்கள் அறிவு தெளிந்து, மனந் தேறி எழுந்து, கரைக்கு வந்து, அமிழ்ந்தின மிருகத்தைத் தேடிப் பார்த்தார்கள். விலங்கு அமிழ்ந்திய இடத்தில் நீர்

ரத்தமயமாயிருந்ததனுல், இடக்குறிப்பறிந்து, ஒரு வடத்தை வீசி, அவ்விலங்கைச் சுருக்கில் மாட்டி, அடிக்கயிற்றைக் கரையில் எறிந்தேன். அதைப் பிடித்து, நிகிரோவர் விலங்கை இழுத்துக் கரைப்படுத்தினர்கள். அது அழகிய புள்ளியும், மினுக்கான மேனியுமுள்ள அதிசயமான செம்புலி. நான் அதைக் கொன்ற அபூர்வ படைக்கலத்தைக் குறித்து மனங்கொள்ளாத ஆச்சரியமுள்ளவர்களாய், நிகிரோவர் தங்கள் கைகளை உயர்த்தி மரம்போல் விறைத்து நின்றூர்கள்.

இறந்த விலங்கின் கூட்டாளி துப்பாக்கி வெடி அதிர்ச்சியையும், பளிச்சென்று மருந்து பற்றியதையும் செவி அதிரக் கேட்டு, பார்த்த கண் பஞ்சடையக் கண்டு, திகைத்து விரைந்து நீந்திக் கரையேறி, நேரே மலைநாட்டிற்கு ஓடிப் போயிற்று. அது என்னஜாதி விலங்கென்று அத்தனைதூரத்தில் எனக்குப் புலப்படவில்லை. இறந்த செம்புலியின் மாமிசத்தை நிகிரோவர் அடிக்குள்ளே புசிக்க நாடினர்கள். அதுகண்டு, இந்த உபகாரத்தை அவர்களுக்குச் செய்யக் கருதி, எடுத்துக்கொள்ளும்படி சமிக்கை காட்டினேன். அதனிமித்தம் எனக்கு வந்தனம் சொல்லும் குறி அவர்கள் முகத்தில் விளங்கிற்று. அந்த நிமிஷமே அவர்கள் கூர்ந்த குச்சு ஒன்றினல் சிவிங்கித்தோலை மிக எளிதாய் உரித்தார்கள். கத்தி முதலிய கருவிகள் அவர்கள் வசம் இல்லை; நாங்கள் கத்தியினலாவது அவர்களைப்போல அத்தனை விரைவில் அவ்விலங்கின் தோலை உரிப்பது அசாத்தியம். உரித்தபின் அதன் ஒரு தொடையைப் பிய்த்து எனக்குக் கொடுக்கவந்தார்கள். நான் அதை மறுத்து, அவர்களையே எடுத்துக்கொள்ளச் சொல்லி, தோலைமாத்திரம் எனக்குத் தரும்படி குறிப்பித்தேன். அதை அவர்கள் மனப்பூர்வமாய்க் கொடுத்ததுமன்றி, பின்னும் போஜனபதார்த்தங்கள் திரளாய்க் கொண்டுவந்து கொடுத்தார்கள். பதார்த்த விவரம் அறியாதிருந்தும், கொடுத்ததை வாங்கிக்கொண்டேன். பிற்பாடு வெறுஞ் சாடி ஒன்றை எடுத்துக் கவிழ்த்துப் பிடித்து, அதிற் சுத்த ஜலம் இல்லையென்றும், அது நிறையச் சுத்த ஜலம் வேண்டுமென்றும் அவர்களுக்குக் குறிப்பினல் தெரிவித்தேன். உடனே

அவர்கள் கிராமத்திற்குப் போய், இரண்டு ஸ்திரீகளிடத்தில் தண்ணீர் கொடுத்தனுப்பினார்கள். இவர்கள் ஒரு பெரிய மட்பாண்டத்திற் தண்ணீர் கொண்டுவந்து, கரையில் வைத்துவிட்டு, முன்போலச் சற்றுத் தூரத்திற் போய் நின்றார்கள். அம்மட்பாண்டம் வனைந்தவுடன் சூளையிற் சுட்டதல்ல; வெயிலில் உலர்ந்து இறுகியதென்று எண்ணுகிறேன். எனது மூன்று சாடிகளையும் சூரியிடத்திற் கொடுத்தனுப்ப, அவன் பாண்டத்திலுள்ள தண்ணீரைச் சாடிகளில் விட்டு நிறைத்து, ஓடத்திற் கொண்டுவந்து சேர்த்தான். ஆடவரைப்போல நிகிரோவ ஸ்திரீகளும் சுத்த நிர்வாணிகளே.

பெயர் விவரம், பிரயோக விவரம் தெரியாதிருப்பினும், கிழங்குகளும், தானியமும், சுத்த ஜலமும் தாராளமாய் மேற் சொல்லியவாறு சேகரித்துக்கொண்டதனால், என்னுடன் நண்புகூடிய நிகிரோவரிடத்திற் செலவு பெற்றுப் பதினொரு நாள்வரையிற் கரைக்கு எட்ட ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போனேன். பன்னிரண்டு பதினைந்து மைல் தூரத்தில் தேசத்தின் முனை கடலில் ஒற்றி வந்திருக்கக் கண்டேன். அதுவரையில் நான் ஓடத்தைக் கரை நெருங்க விடவில்லை. அம்முனை கிட்டுமளவும் ஆழ்ந்த சமுத்திரத்தில் ஓடி, முனை நெருங்கியபின் கரைக்கு ஆறு மைல் தூரத்தில் அம்முனையை வளைந்து செலுத்திக்கொண்டு போகையில், கடலுக்கு எதிர்ப்பக்கத்திலும் கரை தெரிந்தது. ஆனதுபற்றி, அம்முனை டிவேர்ட் முனையென்றும், கரை அதன் சமீபத்தில் அந்தப் பெயர் வழங்கும் தீவுகளென்றும் உத்தேசித்தேன்; என் உத்தேசம் தப்பல்ல; ஆனாலும், அவைகள் மிகத் தூரமாயிருந்தன. இன்னபடிச் செய்வது உத்தமமென்று எனக்குத் தோன்றவில்லை. ஓடும்பொழுது உரத்த காற்று அடிக்குமானால், இருகரையில் எக்கரை பிடிப்பதும் அசாத்தியந்தான்.

இச்சங்கடத்தை எண்ணி எண்ணி மனம் சோர்ந்து, கீழறையிற் போயிருந்தேன்; இருக்கையில், சுக்கான் பிடித்துக்கொண்டிருந்த சூரி சடிதியில்: "எசமானவர்களே, ஐயா! உரு ஒன்று பாய் தூக்கி ஓடிவருகின்றது!" எனச் சற்றுப்

பதறிக் கூவி, என்னை அழைத்தான். அவன் அதைக் கண்டவுடன், அது எங்கள் இருவரையும் தொடர்ந்து கண்டு கைதுசெய்து வரும்படி, எஜமான் மாலுமி அனுப்பிய மரக்கலமென்று உறுதியாய் நம்பி, மனந் தடுமாறித் திகைத்து, நாக்குளறினான். அந்த முட்டாள் இப்படி வியர்த்தமாய் எண்ணிக் கலங்குவதற்கு நிமித்தமில்லையே. மாலுமி முதலானவர்கள் எங்களைத் தொடர்ந்து வரத்தக்க இடத்திற்கு எட்டாக்கையில் வந்து சேர்ந்தோமென்று நான் அறிவேன். சூரி சொன்னது கேட்டு, நான் எழுந்து, மேற்றட்டிற் போனவுடன் ஒரு உருவைக் கண்டேன். அது போர்த்துகேய கப்பல்; நிகிரோவர் அடிமை வர்த்தகத்தின்பொருட்டு, கினிய கரைக்குப் போகிறதென்று என் எண்ணத்திற்பட்டது. அது கரையை நாடி வரவில்லை. வேறு மார்க்கமாய்ச் சென்றது. அதனால், அதில் இருப்பவர்களுடன் இரண்டொரு வார்த்தை பேசும்பொருட்டு, ஓடத்தைத் திருப்பி அவ்வுருவைத் தொடர்ந்தேன்.

இருந்த பாய்கள் எல்லாவற்றையும் விரித்தோடியும், உருவைப் பிடிப்பது அசாத்தியமென்றும், நாங்கள் அதில் இருந்தவர்களுக்கு ஏதாயினும் குறிப்புக் காட்டுமுன், அவர்கள் கப்பல் எங்களைத் தாண்டி ஓடிவிடுமென்றும் எண்ணினேன். பாய்கள் எல்லாம் விரித்தோடியும், எனது அபிப்பிராயம் நிறைவேறுதென்று மனத்தளர்ச்சியடைந்திருக்கையில், அவர்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் எங்கள் ஓடத்தைக் கண்டு, அது சமுத்திரத்தில் உடைந்துபோன ஏதோ சீமை உருவைச் சேர்ந்த ஓடமென்றெண்ணி, ஓடம் உருவிற்கு நெருங்கி வரும்படி பாயைத் தணித்தார்கள். பாய் தணித்தது கண்டு, மேற்சொல்லியவண்ணம் நினைத்திருப்பார்களென்று நான் உத்தேசித்து, சற்று மனந்தேறி, பாய் மரத்து முனையில் ஆபத்துச் சின்னக்கொடி ஏற்றி, துப்பாக்கி வெடி தீர்த்தேன். ஏற்றிய கொடியையும், மருந்துபற்றிய புகையையுங் கண்டு, அவர்கள் எங்கள்மீதிரங்கி, உருவை நிறுத்தி, ஓடம் எதிர்ப்படுமளவும் பொறுத்து நின்றார்கள். மூன்று மணி நேரத்திற்குள் எங்கள் ஓடம் அவ்வுருவிற்கு நெருங்கிச் சேர்ந்தது. புகை தெரிந்ததொழிய, வெடி

யதிர்ச்சி கேட்கவில்லையென்று பிறகு அவர்கள் சொல்லக் கேட்டேன்.

பேசக்கூடிய தூரத்திற் கிட்டியபின் அவர்கள் எனது பெயர், ஊர் முதலிய வரலாறுகள் என்னவென்று முதலிற் போர்த்துகேய பாஷையிற் கேட்டார்கள்; அது எனக்குத் தெரியாது. அப்புறம் ஸ்பானிய பாஷையில் விசாரித்தார்கள்; அதுவும் அறியேன். மூன்ருந்தரம் பிரான்சிய பாஷையில் வினவினுர்கள்; அதில் ஒரு சொல்லும் எனக்குப் புலப்படவில்லை. அதன்மேல் அவ்வுருவில் இருந்த ஸ்கொத்திய கடலோடி ஒருவன் என்னைக் கூப்பிட்டு: "நீ ஆர்? உன் ஊர் எது? எங்கே போகிருய்?" என்று கேட்டான். அதற்கு: "நான் அங்கிலேயன். ஸல்லி துறையில் மகமதியன் ஒருவன், என்னைச் சிறைபிடித்து வைத்திருந்தான். அவனைக் காணுமல் ஒளித்தோடி வருகிறேன்" என்று உத்தரம் சொன்னேன். இச்செய்தி கேட்டவுடன் அவர்கள் என்னையும், சிறுவனையும் உருவில் ஏற்றிக்கொண்டார்கள். எனது சரக்கு, சாமான் எல்லாவற்றையும் எடுத்து உருவில் வைக்க இடங் கொடுத்தார்கள்.

தஞ்சமின்றி நெஞ்சு கலங்கி, நிர்ப்பந்தமான ஸ்திதியிற் பரிதபித்துழன்ற எனக்கு அவ்வேளையில் உண்டான சந்துஷ்டி இவ்வளவென்று சொல்லவேண்டுமா? சொல்வது சாத்தியமா? என்னை இவ்வாறு இரட்சித்த பேருபகாரத்திற்கு ஈடாக என் சொத்து முழுதையும் ஏற்கும்படி மாலுமிக்குச் சொன்னேன். அவ்வுதார புருஷர் அதற்கு உடன்படவில்லை. ப்ரேஜில் கரையிற் சேரும்பொழுது, ஒன்றும் குறையாமல் என் சொத்து முழுதும் என் வசம் ஒப்புவிக்கப்படுமென்று சொன்னுர். மேலும், "ஏதாயினும் கைமாறு பெறக் கருதிப் பிராணசங்கடப்படும் உம்மை நான் இரட்சித்ததென்று எண்ணுதிரும். உம்மைப்போல நான் நடுக்கடலில் ஆதரவின்றி அவஸ்தைப்படச் சம்பவித்தால், எதிர்ப்படும் உருவில் இருப்பவர்கள் என்னைத் தம் உருவில் ஏற்றிக்கொண்டுபோய்க் கரைசேர்க்கவேண்டுமென்று விரும்புவேனல்லவா? அவ்வண்ணம் உம்மை என் உருவில் ஏற்றிக் கரைப்

படுத்தும் சந்துஷ்டிதான் எனக்குப் பிரதியுபகாரம். எனக்கு இவ்விதக் கஷ்ட தசை வருவதற்கு நாட்படுமா? அதுநிற்க, உமது ஜனன தேசத்திற்கும், ப்ரேஜில் நாட்டுக்கும் வெகு தூரம். அந்தத் தூரதேசத்தில் உம்மைக் கொண்டுபோய் விட்டபின், உமது சொத்தை வாங்கிக்கொள்வேனாகில், பசி பட்டினியால் இறப்பதொழிய, உமக்கு வேறென்ன கதி இருக்கிறது? கரைகாணுச் சமுத்திரத்திற் பிராணசங்கடப் படும் உம்மைக் கண்டு, உமக்கு உயிர் கொடுத்துக் கரைசேர்த் தபின், உமது உயிர்த்துணையான சொத்தைக் கவர்ந்துகொள் வேனுல், கொடுத்த உயிரை மீண்டும் வாங்கிக்கொள்ளும் பரமதுரோகி யாவேனே. இல்லை, இல்லை. இந்தப் பாதகத் திற்கு ஒருபொழுதும் ஆளாகமாட்டேன். சொல்லக் கேளும், அங்கிலேய துரையே, நான் உம்மைத் தர்மத்திற்கு எனது உருவில் ஏற்றிக்கொண்டுபோய்க் கரைசேர்ப்பேன். இந் தச் சொத்துகள் பிற தேசத்தில் இருக்கும்பொழுது, உமக்கு ஜீவனோபாயத்திற்கும், ஜனனதேசப் பிரயாணச்செலவிற் கும் உதவும்" என்றூர்.

அந்தப் புண்ணியபுருஷர் சொல்லிய வாக்கைத் தவறு மல் நிறைவேற்றினுர்; என் சொத்தை எவரும் தீண்டக்கூடா தென்று அவர் கடலோடிகளுக்குத் திட்டமாய்ச் சொன் னதுமன்றி, எல்லாவற்றையும் தமது வசத்தில் ஒப்புக் கொண்டு, அததற்கு விவரங் கண்டு பற்றுச்சீட்டு எழுதிக் கொடுத்தார். சுத்த ஜலம் வைத்திருந்த மட்சாடிகள்முத லாய்க் கணக்கில் பதிவுசெய்யப்பட்டன.

எனது ஓடம் மிக நாணயமானது. அது மாலுமிக்கும் தெரியும். தமது உருவிற்கு உபயோகமாய் அதைக் கிரயம் கொடுத்து வாங்க இஷ்டமாயிருக்கிறதென்று வெளியிட்டு, அவர் ஓடத்திற்கு என்ன கிரயம் சொல்லுகிறீரென்று கேட் டார். அதற்கு நான்: "பலவாறு பேருதவிகள் செய்து, என்னை இரட்சித்த உமக்கு நான் விலை சொல்லமாட்டேன். உமது மதிப்பில் என்ன கிரயம் கொடுக்கலாமென்று தோன் றுகிறதோ, அதுவே எனக்குச் சம்மதி" என்றேன். அது கேட்டு, மாலுமி ப்ரேஜில் கரையிற் சேரும்பொழுது ஓடத்

திற்குக் கிரயம் நூற்று நாற்பத்துநாலு ரூபா கொடுப்பதாகக் கடன்பத்திரம் எழுதித் தருகிறேன். அங்கே போய்ச் சேர்ந்தபின் எவராவது அவ்விலைக்கதிகம் கேட்டால், அதை நானே கூட்டிக் கொடுப்பேன் என்றார்; அன்றியும் சூரிக்குக் கிரயம் நூற்றெட்டு ரூபா கொடுப்பதாகச் சொன்னார். சூரியை விற்க என் மனம் சம்மதிக்கவில்லை. அவனை மாலுமிக்கு விற்கக்கூடாதென்றல்ல, என் சிறை மீளும்படி எனக்குக் கபடமின்றி உதவிசெய்த அகதியாகிய அச்சிறுவன் சுவாதீனமின்றிச் சிறையிருப்பதற்கு நான் அவனை விற்பது தர்மமல்லவென்று நினைத்தேன். இந்த நியாயத்தை மாலுமிக்குத் தெரியச்சொன்னேன். அவர் அதைச் சரியென்று ஒப்புக்கொண்டு: "நல்லது, மரணபரியந்தம் அவன் என்னிடத்திற் சிறையிருக்க வேண்டுவதில்லை; கிறிஸ்து சமயத்தை அனுசரித்துக்கொள்வானாகில், பத்து வருஷ முடிவில் அவனை விடுதலை செய்வதாக உடன்படிக்கை எழுதிக்கொடுப்பேன்" என்றார். அவர் சொல் எனக்குச் சமாதானமாயிருந்ததனாலும், அவரிடத்தில் ஏவல் செய்யச் சூரிக்குச் சம்மதமாயிருந்ததனாலும் அவனை அவருக்கு விற்க உடன்பட்டேன்.

பின்பு இருபத்திரண்டு தினத்தில் ப்ரேஜில் துறையாகிய ஆல் ஸேன்ஸ் பே என்னும் கடற்குடாவிற் சிந்தாயாத்திரையாய்ப் போய்ச் சேர்ந்தோம். இவ்வாறு அத்தியந்த நிர்ப்பந்தமான சீரினின்று மீண்டும் ஒரு முறை கடைத்தேறினேன்; இனி நடக்கும் வகை இன்னதென்று எனக்கு விசாரமுண்டாயிற்று.

உற்றிடத்து உதவிய மகானுபாவராகிய மாலுமி செய்த உபகாரத்திற்கு இணையில்லை. அது இவ்வளவென்று மதிப்பிடுவதற்கு நான் நிர்வாகியல்ல. அவர் என்னிடத்திற் பிரயாணக்கூலி வாங்க உடன்படவில்லை; நான் ஓடத்தில் வைத்திருந்த செம்புலித் தோலுக்கு நாற்பத்தைந்து ரூபாவும், சிங்கத் தோலுக்குத் தொண்ணூறு ரூபாவும் கிரயங் கொடுத்து வாங்கினார்; என் சாமான் தட்டுமுட்டுகள் அனைத்தையும் தவறாமல் ஒப்புவித்தார்; புட்டிகள் வைக்கப்பட்டிருந்த பெட்டி ஒன்று, துப்பாக்கி இரண்டு,

தேன் மெழுகுக் கட்டி ஒன்று இவைகளையும், இன்னும் சில அற்ப சாமான்களையும் என் கருத்தறிந்து, அவர் கிரயங்கொடுத்து வாங்கினார். சொத்து விற்றுத் தேறின ரொக்கம் மொத்தம் முந்நூற்றுத் தொண்ணூற்றைந்து ரூபா; நான் ப்ரேஜில் கரையில் இறங்கினபொழுது, என் வசம் இவ்வளவு முதல் இருந்தது.

சில தினங் கழிந்தபின் மாலுமி தம்மைப்போலச் சுகுணமும் நேர்மையுமுள்ள ஒருவருக்கு என்னைக்குறித்து வியந்து எழுதியனுப்பினார். அவர் கரும்புத்தோட்டம் செய்வித்து, ஆலையாட்டிச் சர்க்கரை உண்டாக்குவித்து விற்கும் வர்த்தகர். நான் கொஞ்சக்காலம் அவருடன் வாசமாயிருந்து, கரும்புத்தோட்டம் பயிரிடும் வரலாறுகளையும், சர்க்கரை காய்ச்சிச் சுத்திசெய்யும் முறையையும் கண்டு பயின்றேன். அன்றியும், அங்குள்ள வர்த்தகர்கள் சம்பிரமமாய் வாழ்ந்திருப்பதையும், விரைவில் தனுஷ்டிகராவதையும் கண்டு, அத்தேசத்திற் சுகவாசிக் குடிச்சுதந்தரம் பெறக்கூடுமானால், கரும்புத்தோட்டமுதலிய வைத்து, வர்த்தகம் செய்ய நினைத்தேன். அது தொடங்குமுன் லந்தன் நகரத்தில் மாலுமி ஒருவருடைய மனைவி வசத்தில் நம்பிக்கைக்கு ஒப்புவித்திருந்த பணத்தை அழைப்பிக்கும்படி, ஏதாயினும் உபாயம் செய்யத் தீர்மானித்தேன். பிற்பாடு சுகவாசிக் குடிச்சுதந்தர அதிகாரபத்திரம் பெற்று, அப்பொழுது என் கையில் இருந்த பணத்திற்குப் பண்படாத நிலம் வாங்கிப் பயிர் செய்விப்பதற்கு எத்தனப்பட்டேன். இங்கிலாந்தினின்று தருவிக்கக் கருதிய திரவிய முதலுக்குத் தக்க கரும்புத்தோட்டம் செய்விப்பதற்கு முயன்றேன்.

நான் வாங்கின தோட்ட நிலத்திற்கு அயலிலுள்ள தோட்டக்காரன் போர்த்துகேய ராஜதானியாகிய **லிஸ்பன்** நகரத்தினின்று வந்த **வேல்ஸ்** துரை. அவர் தாய்தந்தையர் அங்கிலேயர். எனக்கும் அவருக்கும் நாளாவர்த்தியில் அதிக சகவாசம் உண்டாயிற்று. என்னைப்போல் அவருக்கும் கைமுதல் அதிகமில்லை.

"சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையா
னூழி யரிசிக்கே நாம்"

என்பதுபோல, இரண்டு வருஷவரையில் எங்கள் தோட்டத்தின் பிரயோஜனம் ஆகாரத்திற்குமாத்திரம் கட்டிவந்தது. அதன்மேல் நிலத்திற்கு உரம் ஏற ஏற, அதன் விளைச்சல் அன்னவஸ்திரத்திற்குக் கண்டு மிஞ்சியதனால், எங்கள் கையிற் பணம் தங்கியது. மூன்றும் வருஷம் புகையிலைத்தோட்டம் வைத்தோம். பிறக்கும் வருஷம் கரும்புத்தோட்டம் செய்யும்படி இருவரும் சற்று விஸ்தாரமான நிலத்தைப் பண்படுத்தினோம். கையுதவிக்கு ஆள் இல்லாததனால், இருவரும் மெய்வருந்தி உழைத்தோம். எனது கையாளாகிய சூரியை விக்கிரயஞ்செய்தது பிசகென்று அப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது.

"பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்."

எதையும் திறந் தெரிந்து செவ்வையாகச் செய்யும் அனுபவம் சிறிதுமில்லாத நான் செய்வதெல்லாம் பிழைபடுவது சகசந்தானே; அதிசயமல்லவே. எனது துர்மதியால் வந்த சங்கடத்திற்கு அத்தூரதேசத்தில் நிவிர்த்தி ஏது. தந்தை சொல்லிய சற்புத்தியைக் கேளாமல் எனது ஜனன தேசத்தை விட்டு நீங்கி, நான் நாடிவந்த தொழில் ஒன்று. ப்ரேஜில் நாட்டில் அமர்ந்த தொழில் ஒன்று. அதற்கும் இதற்கும் எவ்வளவேனும் சம்பந்தமில்லை; அது எனக்கு இதமான தொழிலுமல்ல. கவலைமிஞ்சும் செல்வர் நிலைமைக்கும், கஷ்டமதிகரிக்கும் வறிஞர் நிலைமைக்கும் வேறாகிய சுகானுபவமுள்ள நடு நிலைமையே நாடத்தகுமென்று என் பிதா எனக்கு இடித்துரைத்த ஸ்திதியே எனது கதியாயிற்று. இந்த நற்சீரில் நாள்கழிக்கச் சங்கற்பம் செய்திருப்பேனானால், கடலேறிக் காடேறி, இவ்வளவு கஷ்ட நஷ்டப்படுவதற்கு நிமித்தமில்லையே. வீட்டிலிருந்து, பெற்றார் உற்றார் ஊராருடன் கலந்து, சீமானாகச் சுகித்து

வாழலாமே. இப்பொழுது நான் ஊர்தேசத்தை விட்டு, ஐயாயிரம் மைல் தூரத்தில் முகம் அறியாதவர்களுடனும், மிலேச்சருடனும் சஞ்சரிக்கும்படி நேர்ந்ததே. பூலோகத்தில் என்னை அறிந்த எவரிடத்தினின்றுவது செய்தி வரப்பெறுதற்கிசையாத தூரதேசத்தில் வந்திருக்கிறேனேயென்று பெரும்பாலும் நினைத்து வருந்தினேன்.

இவ்வண்ணம் எனது சீரை நினைத்து நினைத்து, ஆறாத் துயரில் அமிழ்ந்தினேன். மேற்சொல்லிய துரை ஒருவர் தவிர, என் துக்கத்தைச் சொல்லி ஆறுவதற்கு எனக்கு எவருமில்லை. எப்பொழுதும் மெய்வருந்தி உழைப்ப தொழிய, வேறு வேலை இல்லை. நிர்மானுஷியமான பாழ்ந் தீவில் கடல் அலையாற் றள்ளுண்டு, ஒதுங்கி, ஏகாந்தமாயிருந்து, தடுமாறித் தத்தளிக்கும் அகதிக்கு ஒப்பாயிருக்கிறேனேயென்று எண்ணிப் பிரலாபித்தேன். ப்ரேஜில் நாட்டில் எனது நிலைமை எவ்வளவேனும் நிர்ப்பந்தமானதல்ல. நான் பொறுத்திருந்து பதைப்பின்றி என் கைம்முதலைப் புத்திபூர்வமாய்ச் செலவு செய்து வர்த்தகம் பண்ணுவேனுகில், காலக்கிரமத்தில் திரண்ட செல்வமும் சுகமும் பெற்று வாழ்வேனென்பதற்கு ஐயமில்லை. மனுஷர் தமக்குள்ள சுகத்தை மறந்து, துன்பத்தைப் பாராட்டி, தம்மிலுமிழிந்த ஸ்திதியில் இருப்பவர்களோடு தம்மைச் சமானராகப் பாவித்து, தமக்கு வியர்த்தமாய் மிகுந்த மனவருத்தத்தை வருவித்துக்கொள்ளும்பொழுது, கடவுள் நிர்கிமித்தமாய் அவர்களுக் குண்டாகும் மனக்குறையைக் கண்டு, அவர்களைப் பின்னுமிழிந்த ஸ்திதியில் விட்டு, வருத்துவது நியாயந்தான். அணுவுந் தவறுமல் இவ்வாறே எனக்குச் சம்பவித்தது. எனது மனேபாவனை வாஸ்தவமாய்ப் பலித்தது.

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்."

ஆழ்ந்த கடலிற் பிராணசங்கடப்படுவது கண்டு, என்னைத் தம்முருவிலேற்றி இரட்சித்த எனது இஷ்டராகிய மாலுமி

சீமைக்குப் பிரயாணப்படுமுன் என் தோட்டமுயற்சி ஒருவாறு நடந்தேறிற்று. அவர் கப்பலிற் சரக்குவாங்கி ஏற்றுவதற்கும், பிரயாணத்திற்குரிய எத்தனங்கள் செய்வதற்கும் மூன்று மாசவளவாயிற் சென்றது; லந்தன் நகரத்தில் ஒரு துரைசானிவசம் நான் ஒப்புவித்திருந்த அற்பரொக்க சங்கதியை நான் அவருக்குச் சொன்னபொழுது, அவர் எனது க்ஷேமத்திற்கு அனுகூலமும் நிஷ்கபடமுமான புத்திசொன்னார்: "அங்கிலேயதுரையே, நீர் எனக்கு முறைமையான அதிகாரபத்திரம் எழுதிக்கொடுத்து, லந்தன் நகரத்தில் உமது ரொக்கம் வைத்திருக்கும் துரைசானி லிஸ்பன் நகரத்தில் நான் குறிக்கும் பெயரிடத்தில் வந்து சேரும்படி அந்த ரொக்கத்திற்கு இத்தேசத்தில் விற்கத்தக்க சரக்குகள் வாங்கி அனுப்பும்படி விவரங்கண்டு கடிதமெழுதிக் கொடுப்பீரானால், இந்தத் துறைக்கு நான் மறுபயணம் வரும்பொழுது திருவுள்ளத்தின் சகாயமிருந்தால், சரக்கைத் தவறுமற் கொண்டுவந்து கொடுப்பேன். எதையும் சிந்தித்துச் சீர்தூக்கிச் செய்யவேண்டும்: இன்றிருந்தாரை நாளைக்குக் காணோம். இனி ஏதேது ஆபத்துகள் நேரிடுமோ அறியோம். எண்ணிச் செய்வது செட்டு, எண்ணுமற் செய்வது வேளாண்மை. துரைசானியிடத்தில் உமது ரொக்கம் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறதென்றீரே; அதில் ஆயிரம் ரூபாயைமாத்திரம் முதலி லனுப்பும்படி சீட்டெழுதிக் கொடும். பத்திரமாய் வந்து சேர்வது சேராததைப் பார்ப்போம். உமக்கு நற்காலமிருந்து ஆடங்கமின்றி அது பத்திரமாய் வந்து சேருமானல்; அப்புறம் அச்சமின்றி, மீந்த பாதி ரொக்கத்தையும் அவ்வாறே தருவித்துக்கொள்ளலாம். வந்து சேராதுபோனலும் பெரிதல்ல. மற்றப் பாதி ரொக்கமாவது உமக்கு உதவும்படி துரைசானி வசம் மீந்திருக்குமே" என மாலுமி எனக்கு யுக்தி சொன்னர்.

எவரேனும் கெடுபுத்தி சொன்னல், அதைப் பொறுத்து யோசிக்கத்தான்வேண்டும். மாலுமி சொல்லிய இனிய வாக்கு என்னை ஈடேற்றும் வாக்கு: ஆனதுபற்றி, அவர் சொல்லியவாறே செய்யத் தகுமென்று ஐயந்திரிபறக் கண்டு,

மேற்சொல்லிய துரைசானிக்கு விவரமாய்க் கடிதம் எழுதியதுந்தவிர, போர்த்துகேய மாலுமிக்கு, அவர் சொன்ன யுக்திப்படி அதிகாரபத்திரமும் எழுதிக்கொடுத்தேன்.

அக்கடிதத்தில் என் பிரயாண வரலாறு, நான் சிறைபிடிக்கப்பட்டது, உபாயமாய் ஒளித்தோடிச் சிறை மீண்டது, சமுத்திரத்திற் போர்த்துகேய கப்பல் மாலுமி என்னைக் கண்டது, அவர் என்மீது பரிவுற்று, என்னைத் தம் உருவிலேற்றிக் கரைப்படுத்தி, எண்ணுதற்கரிய பேருபகாரம் செய்தது, எனது தற்கால ஸ்திதி, எனது ரொக்கத்தை இன்ன ரூபமாய் அனுப்பவேண்டுமென்பது, இவை எல்லாவற்றிற்கும் விவரங்கண்டு எழுதிக்கொடுத்தேன். நெறி தவறாத நேர்மையுள்ள இம்மாலுமி **லிஸ்பன்** நகரத்திற் சேர்ந்தபின், அவர் அங்கிருக்கும் அங்கிலேய வர்த்தகர் சிலர் மூலமாய் **லந்தன்** நகரத்து வர்த்தகர் ஒருவருக்கு நான் எழுதிக்கொடுத்த உண்டியையும், எனது சங்கதி வரலாறுகளை விளக்கிய நிருபமொன்றையும் அனுப்பினார். அவ்வர்த்தகர் மேற்படி துரைசானிக்கு ஆதியோடந்தமாய்க் காரிய விவரத்தைத் தவறாமல் தெரிவிக்க, அந்தச் சீமாட்டி பணத்தை ஒப்புவித்ததுமன்றி, தர்மசீலராகிய மாலுமி எனக்குச் செய்த உபகாரத்தின்பொருட்டு, அவருக்கு மிகச் சிறந்த வெகுமதியுங் கொடுத்தனுப்பினாள்.

மேலே குறிப்பித்த **லந்தன்** வர்த்தகர் துரைசானியிடத்தில் வாங்கின ஆயிரம் ரூபாய்க்கு மாலுமி கடிதத்திற் கண்ட சரக்குகளை **லந்தன்** நகரத்தில் வாங்கி, **லிஸ்பன்** நகரத்தில் மாலுமியிடத்திற் சேரும்படி அனுப்பினார். சேர்ந்த சரக்குகளை மாலுமி **ப்ரேஜில்** துறையிற் கொண்டுவந்து, என் வசம் ஒப்புவித்தார். அன்றியும், அவர் எனது தோட்டத்திற்கு உபயோகமான நானாவிதக் கருவிகள், இருப்பு யந்திரங்கள், உபகரணங்கள் யாவும் வாங்கிக்கொண்டுவந்து, ஒப்புவித்தார். இக்கருவி முதலானவைகள் எனக்குதவுமென்று நான் முன்பு எண்ணவுமில்லை, வாங்கிவரும்படி மாலுமிக்கு எழுதவுமில்லை. தோட்ட முயற்சியில் அனுபவ முதிருமுன் இத்தன்மையான முற்புத்தி எனக்கு வருமா?

மேற்சொல்லிய சரக்குவகை வந்து சேர்ந்தபொழுது, எனக்கு அளவற்ற சந்தோஷமுண்டாயிற்று. எனக்கு அதிஷ்டம் பிறந்ததென்று எண்ணினேன். புண்ணியத்திற்கு எனது காரியகர்த்தராக உடன்பட்ட மாலுமிக்கு லந்தன் நகரத்திலிருக்கும் துரைசானி அனுப்பிய வெகுமதி ரூபாய் ஐம்பது. அம்மகானுபாவர் ஆறு வருஷச் சேவகத்திற்கு உடன்படிக்கைப்பத்திரம் எழுதி வாங்கி, அந்த ரொக்கத்திற்கு எனக்கு ஒரு கையாளை அமர்த்திக் கொண்டுவந்து கொடுத்தார். அவர் சேகரித்துக்கொடுத்த வேலைக்காரனுக்கு என்னிடத்திற் கிரயம் வாங்கச் சம்மதிக்கவில்லை. என் நிலத்தில் விளைந்த புகையிலைமாத்திரம் கொஞ்சம் ஏற்றுக்கொண்டார்.

அவர் எனக்குச் செய்த உதவி இம்மாத்திரமல்ல; எனக்கு மாலுமி வாங்கிவந்த பலவகைச் சவளி முதலிய சரக்குகள் நாணயமான சீமைச் சரக்குகளானதனாலும், ப்ரேஜில் நாட்டார் அவ்விதச் சரக்குகளை விரும்பி, பணத்தைப் பொருள்செய்யாமல் என்ன கிரயம் சொன்னாலும் கொடுத்து வாங்குவார்களாதலாலும், நான் அவைகளை எளிதில் விற்று, திரண்ட லாபம் பெற்றேன். விற்றுத்தேறின லாபம் வாங்கின விலைக்கு நான்மடங்கதிகம். இந்த லாபம் பெற்றபின், எனக்கும் அயற்றோட்டம் செய்வித்த துரைக்கும் தோட்டப்பயிர் விர்த்திவிஷயத்தில் மிகுந்த பேதமுண்டாயிற்று. மாலுமி லிஸ்பன் நகரத்தினின்று எனக்குக் கொண்டுவந்து ஒப்புவித்த வேலைக்காரன் ஒருவனுடன் நானும் ஐரோப்பிய சேவகன் ஒருவனை அமர்த்தினேன். அன்றியும் நிகிரோவன் ஒருவனைக் கிரயங்கொடுத்து அடிமையாக வாங்கினேன். ஆகவே எனது கையாட்கள் மூன்று பெயர்.

"அஃகமும் காசும் சிக்கெனத் தேடு" என ஔவை சொல்லிய நீதியை மறந்து, கையிற் சிக்கிய பொருளைக் கண்போலக் காத்து வரவர விர்த்தி செய்யாமல், தமக்கிசையாத முயற்சிகளில் எண்ணமின்றித் துணிந்து இறைப்பவர்கள் பெரும்பாலும் தரித்திரதசையடைந்து உபத்திரவப்படுவார்களென்பதை எனது அனுபவத்தா லறிந்தேன்.

அடுத்தவருஷம் எனது தோட்டப்பயிர் நல்விளைவு கண்டது. நான் அறுத்த புகையிலையில் அன்னவஸ்திராதிகளின் பொருட்டு அயலவர்களுக்கு விற்றதுபோக, பக்குவஞ்செய்யத் தகுந்ததாகத் தேறியது ஐம்பது கட்டு; கட்டொன்றுக்கு இருத்தல் நூற்றுப் பன்னிரண்டு. இந்தப் புகையிலை முழுவதையும் பக்குவமாய்ப் பதஞ்செய்து. லிஸ்பன் நகரத்தினின்று கப்பல் வருமளவும் அடுக்கி வைத்திருந்தேன். வர்த்தகம் அதிகரித்து வரும்படி ஏற ஏற, எனக்கெட்டாத முயற்சிகளும் எண்ணங்களும் என்னுள்ளத்திற் குடிகொண்டன. லட்சம் ரூபாய் முதல் வைத்து வர்த்தகஞ் செய்பவர்கள் தாமும் விர்த்திக்கும்பொழுது இவ்வித விபரீதமான துறைகளில் இறங்கி யாசகராவது அறிவோமே.

ப்ரேஜில் தேசத்தில் எனது நிலைமை எதுவோ, அதுதான் முன்பு தந்தை பரிவுற்று உவந்து சொல்லிய பக்குவமான நடு நிலைமை. அதை விட்டு நீங்காதிருப்பேனாகில், வரவர விர்த்தியடைந்து, சொல்வதற்கரிய சுகானுபவமுடையவனுவேனென்பதற்கு ஐயமில்லை; ஆனாலும், எனது சித்தம் ஸ்திரப்படவில்லை; பல நினைவுகளாற் சஞ்சலித்துத் தடுமாறிற்று. எனக்கு வந்த பீடைகளனைத்தையும் நானே வலிய வருவித்துக்கொண்டேன். எனது யுக்தி புத்தி சாமர்த்தியங்களுக்கும், இம்மைக்குரிய சர்வ சுகானுகூலத்திற்கும், சுபாவ தர்மத்திற்கும், திருவுளத்தின் செயலுக்கும் ஏற்கும் தொழில் இன்னதென்று அனுபவசித்தமாய் அங்கையில் நெல்லிக்கனிபோலக் கண்டிருந்தும், அதைக் கைவிட்டு வீணாய் நிலையற்றுத் தேசாந்தரம் போகவேண்டுமென்னும் ஆசை எனது துர்மதியால் நிரந்தரமாய் வளர்ந்தது. தமது கெடு மதியாற் கஷ்டதசையடைந்து வருந்துவோர்க்கு அக்கெடு மதி சமயத்திற் றேன்றுது. வருந்தும்பொழுது தோன்றி, அவர்களைப் பின்னும் வருத்தும். எனதுவிஷயத்திலும் இவ்வாறே பலித்தது.

பெற்றவர்களையும், நான் பிறந்து வளர்ந்த தேசத்தையும் விட்டு நீங்கும்படி என்னைத் தூண்டிவிட்டது எனது நிலைமைக்கும் இயற்கைக்கும் பொருந்தாத பேராசை; எளி

திற் பெருமையடைந்து வாழ்ந்திருக்கலாகுமென்னும் வியர்த்தமான துணிவு. இந்த வீணாசையும் துணிவும் ப்ரேஜில் தேசத்திற் சேர்ந்து, தேவ கடாட்சத்தால் ஒருவாறு சுகம் பெற்ற பின்னாவது என்னைவிட்டு நீங்கினவா? இல்லை, இல்லை. நான் இன்னும் வீணாசையின் வசப்பட்டு, எனது சுகசெல்வங்களை மறந்து, எவரும் படாத பெருந் துன்பமென்னும் ஆழ்ந்த கடலில் வேணுமென்று குதித்து மூழ்கினேன்.

இனி என் துக்க சங்கதிகளைத் தோரணையாய்ச் சொல்வேன்: ப்ரேஜில் நாட்டிற் சேர்ந்து நாலு வருஷத்திற்குள் எனது தோட்டம் வரவரச் சேஷ்டித்து, நல் விளைச்சல் கொடுத்தது. அத்தேசத்தவர்கள் பேசும் பாஷையை நாளாவர்த்தியிற் கற்றுக்கொண்டேன். இதரமான தோட்டக்காரருக்கும் எனக்கும் சிநேகமுண்டாயிற்று. ஸாந்து ஸல்வேடோர் துறையை அடுத்த அவ்விடத்திலுள்ள பாரிய வர்த்தகர்களுடனும் சிநேகம்பண்ணிக்கொண்டேன். அப்போதப்போது அவர்களுடன் கலந்து சம்பாஷிக்கையில், கினியகரைக்கு நான் இரண்டுதரம் பிரயாணம்போன வரலாறுகளையும், நிகிரோவருடன் வியாபாரம்செய்யும் விதத்தையும் சொன்னதுண்டு. பளிங்குமணி, விளையாட்டுக் கருவிகள், கத்தி வகை, கத்தரிக்கோல், கைக்கோடரி, உடைந்த கண்ணாடித்துண்டு முதலிய அற்ப வஸ்துக்கள் கொடுத்து, நிகிரோவரிடத்திற் பொற்பொடி, தானிய வர்க்கம், யானைத் தந்தம் முதலிய விலையுயர்ந்த சரக்குகளையும் ப்ரேஜில் பிரதேசத்தில் வேலைசெய்வதற்குத் திரளான நிகிரோவர்களையும் எளிதில் வாங்கிக்கொள்ளலாகுமென்றும் சொன்னேன்.

இவ்விஷயங்களைக்குறித்துச் சொல்லும்பொழுதெல்லாம் அவர்கள் கருத்தாய்க் கேட்பார்கள். நிகிரோவரைக் கிரயத்திற்கு வாங்குவதைப்பற்றி நான் சொன்னது கேட்டு, அவர்களுக்கு மிகுந்த சிந்தனை உண்டாயிற்று. அக்காலத்தில் நிகிரோவர் அடிமை வர்த்தகம் விஸ்தாரமாய் நடக்கவில்லை. அவ்வர்த்தகம் செய்தவர்கள் சிலர். அவர்கள் ஸ்பானிய போர்த்துக்கேய அரசர்களின் உத்தரவுபெற்று

வாணிகம் செய்தார்கள். மேலும், ஒருவர் இருவர் நிகிரோ வர்களை மொத்தக் கிரயத்திற்கு வாங்கி, மிகுந்த லாபம் வைத்துச் சில்லறையாய் விற்றார்கள். அதனால், இவ்வர்த் தகம் விஸ்தாரமாய் நடக்கவில்லை.

ஒருநாள் இரவு நானும், எனக்கு அறிமுகமான சில வர்த்தகரும், தோட்டக்காரரும் கூடியிருக்கையில், இவ்வி யாபார விஷயத்தைக்குறித்துச் சற்று மனம் கவிந்து பேசினோம். மற்றநாள் அதிகாலையில் அவர்களில் மூன்று பெயர் என்னிடத்திற்கு வந்து: "இராத்திரி நீர் சொன்ன சங்கதிகளைச் சற்று அழுத்தி யோசித்தோம். உமக்கு ஒரு அந்தரங்கமான பேச்சுச் சொல்லி, உமது கருத் தறிய வந்திருக்கிறோம்; அதை எவருக்கும் சொல்லவேண் டாம். கினிய கரைக்குச் சரக்கேற்றிக்கொண்டு ஒரு பிர யாணம் போய்வர நாட்டமாயிருக்கிறது. உம்மைப்போல நாங்களும் தோட்டம் வைத்திருந்து வேலைசெய்யக் கை யாளில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறோமே. அதிகார பத்திரம் பெறாமல் வெளியாய் நிகிரோவர் அடிமை வர்த் தகஞ்செய்வதற்கு இசையாதிருப்பதனால், ஒரு பயணம் போய் நிகிரோவரைக் கொண்டுவந்து, அந்தரங்கமாய்க் கரைப்படுத்தி, பங்கு விகிதம் வைத்து, தோட்டமொன்றுக்கு இத்தனை பெயரென்று பிரித்துக்கொள்வோம். நல்லது இனி ஒரு கேள்வி கேட்கிறோம். நீர் எங்கள் காரியகர்த்தராய்க் கினிய கரைக்குப் போய்ச் சரக்கு விற்று, எங்கள் கருத் துப்பிரகாரம் நிறைவேற்றிக்கொண்டு வருவீரா? இதற்குச் சம்மதிப்பீரானால், இவ்வர்த்தகத்தில் நீர் ஏதும் முதலிட வேண்டாம். எங்கள் பங்கு விகிதம்போலவே உமக்கும் நிகிரோவர்பங்கு கொடுக்கிறோம்" என்று எனது அபிப் பிராயங் கேட்டார்கள்.

பயிர்த்தொழில், வர்த்தகத்தொழில் முதலிய முயற்சி யொன்றிலும் தலையிடாமல், செயலின்றி வியர்த்தமாய் நாட் கழிக்கும் வீணருக்கு இந்தக் கேள்வி நியாயமானதாயிருக் கும். அவ்வகுப்பினர் இதற்கு உடன்பட்டுப் போவார்க ளானாற் பிரயோசனமுண்டு. எனது ஸ்திதிக்கும், மேற்

படி வர்த்தகர் கேட்ட கேள்விக்கும் இசைந்து வருமா? நான் எனது நிர்வாகத்திற்குத் தக்க முதலிட்டுப் பயிர்த் தொழில் செய்துவந்தேன். தெய்வ கடாட்சத்தால் அது வரவர விர்த்தியாயிற்று. உடையவன் பாராப் பயிர் உருப்படுமோ? அதை நானே பத்திரமாய்ப் பாதுகாத்துவரு வேனாகில், இங்கிலாந்தில் மேற்சொல்லிய பெருமாட்டி வசமிருக்கும் மீதி ரொக்கம் ஆயிரம் ரூபாவைத் தருவித்து, அதற்கும் நிலம் வாங்கி, இன்னும் மூன்று நாலு வருஷவரையில் தோட்டம் செய்துகொண்டு வருவேனாயின், முப்பதினாயிரம் நாற்பதினாயிரம் ரூபாய்வரையிற் சேருமென்பதற்கு ஐயமில்லை. அவ்வளவு ஸ்திதிவந்தனாகும் பொழுது எனக்குக் குறை யென்ன? கைக்கொண்ட ரொக்கம்போல இத்தனை திரண்ட லாபம் கைக்கெட்டிய தூரத்தில் என் கண்ணுக்கெதிரே இருக்க, இதை உபேட்சித்து, வர்த்தகர் சொல்லை ஒப்புக்கொண்டு, கினியாவிற்குப் போக உடன்படுவேனானால், என்னைப்போலும் மதிகேடருண்டா?

வளரும் பயிரை முளையிலே தெரியும். ஈடேறும் புத்தி எனக்கிருக்குமானால், பாலியத்தில் தர்மசீலராகிய பெருந்தகைமையுள்ள எனது தந்தை சொல்லிய சற்புத்தியைத் தள்ளி, ஜனனதேசத்தை விட்டுத் தேசாந்தரம் வருவேனா? கெடுமதியைத் தலைமேற்கொண்டு, கேடுவருவிக்கும் விபரீதமே யுருவாய் வந்த எனக்குப் பிழைக்கும் புத்தி எவ்விதத்திலும் வராது. நான் திரும்பி வருமளவும் என் தோட்டத்தை உங்கள் சொத்தைப்போலப் பழுதின்றிப் பாதுகாத்து, வழியில் தெய்வச்செயலாய் என்னுயிருக்கு ஏதும் இடையூறு சம்பவிக்குமாயின், என்சொத்தை விற்று நான் குறிக்கும் பெயர்களுக்குக் கிரமமாய் ஒப்புவிக்க நீங்கள் உடன்படுகிற பட்சத்தில், உங்கள் சொற்படி மனப்பூர்வமாய் கினியாவிற்குப் பிரயாணம்போய் வருகிறேனென்று வர்த்தகருக்குச் சொன்னேன். இவ்வண்ணம் தவறின்றிச் செய்யச் சம்மதித்து, அவர்கள் உடன்படிக்கைப்பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். நடுக்கடலில் என்னைக் கண்டு இரட்சித்துக் கரை சேர்த்த மாலுமியை எனது சொத்திற்குச் சர்வ சுதந்தர

காரியகர்த்தனுப் ஏற்படுத்தி, நான் முறைமையான மரண சாதனமொன்று எழுதிவைத்தேன். அதில், நான் இறந்து போனால், எனது சொத்திற்குச் சர்வ சுதந்தர காரியகர்த் தனுகிய மாலுமி சொத்து முழுமையும் விற்று, தேறும் ரொக்கத்திற் பாதியைத் தாமே எடுத்துக்கொண்டு, பாதியை இங்கிலாந்திற்கு அனுப்பக்கடவரென்று கண்டு எழுதினேன்.

செய்தது எல்லாவற்றையும் சொல்லின் விரியும். சுருக் கிச் சொல்லுகிறேன். தோட்டத்தை விட்டுவிடாமல் விர்த்தி செய்துகொண்டு வருதற்கும், சொத்துகளைப் பங்கப்படுத் தாமற் பாதுகாத்தற்கும் கூடியவரையில் ஜாக்கிரதையாய்த் திட்டமேற்படுத்தி வைத்தேன். இதிற் பாதி விவேகமாயினும் செலுத்தி, என் சொந்த நயத்திற் கண்ணுயிருந்து, இன்னது செய்யத்தகும், இன்னது செய்யத்தகாதெனப் பகுத்தறிந்து, யுக்தி புத்திக்கிசைய நடந்து வருவேனுகில், வலியவரும் செல்வத்தை உபேட்சித்து, அதன் வருவழியைக் கைவிட்டு, கஷ்ட நஷ்டங்களுக்கும் பிராணுபாயத்திற்கும் சாதனமாகிய கடல்யாத்திரை போகத் துணிவேனு? அல்லது முக்கியமாய்க் கடல்யாத்திரை என் சுகத்திற்கு எள்ளளவும் ஏற்காதென்று ஒருதரத்திற்கு இரண்டுதரம் அனுபவசித்தமாயறிந்தபின்னும் உருவில் அடிவைக்க எனக்குத் துணிவு வருமா?

எனது அறிவு உணர்த்திய துறையிலிறங்காமல், கைலாகு கொடுப்பவன் போகும் வழியில் நடக்கும் பிறவிக்குருடனைப் போல ஆசையின் வசத்தனுகி, அதன் வழியில் விரைந்தோடி னேன். மேலே குறிப்பித்த உடன்படிக்கைப்பத்திரம், மரண சாதனம் எல்லாம் எழுதி நிறைவேற்றி, கப்பலிற் சரக் கேற்றி, பிரயாண முஸ்திப்புகளனைத்தும் செய்யப்பட்டபின், 1659–ஆ செப்டெம்பர்மீ 1உ பிரயாணஞ் செய்யத்தகாத காலத்தில் மீண்டுங் கப்பலேறினேன். முன்பு ஹல் நகரத்தில் என் தாய்தந்தையர் சொல்லைக் கடந்து, பிழைக்கும் புத்தி கைவிட்டு, அவர்கள் சமுகத்தினின்று விலகி அன்று பூர்த்தி யாய் எட்டு வருஷம்.

நான் ஏறிய கப்பல் நூற்றிருபது தன் நிறைச் சரக் கேறும் பரிமாணமுள்ளது. அதில் ஏற்றிய பீரங்கிகள் ஆறு.

கடலோடிகள் பதினன்குபெயர். அன்றியும், மாலுமி, அவர் கையாள், நான் இம்மூன்றுபெயருடன் ஆக உருவிலிருந் தவர்கள் பதினேழுபெயர். நாணயமான சரக்கொன்றும் நாங் கள் ஏற்றவில்லை. ஏற்றப்பட்டவைகள் நிகிரோவருடன் வியாபாரம் செய்தற்குரிய பளிங்குமணி, உடைந்த கண்ணு டித்துண்டு, கிளிஞ்சில், சிறிய முகக்கண்ணுடி, கத்தி, கத்தரிக் கோல் முதலிய உதவாத அற்ப வஸ்துக்களே. கப்பலேறின அன்றே பாய் வலித்து, எங்கள் கரைக்கெட்ட வடக்குமுக மாய் ஓடினேம். பத்தாவது பன்னிரண்டாவது உத்தராட்ச பாகை மட்டத்திற் செல்லும்பொழுது, ஆபிரிக்க கரைக்கு நேர்முகமாய்த் திருப்பி ஓட நினைத்தோம். அக்காலத்திற் கட லோடிகள் செல்லும் மார்க்கம் இதுதான். ப்ரேஜில் கரை மறையுந் தூரமளவும் வளக்காற்று வீசியது. ஸாந்து ஆகஸ் டினே முனை காணுமளவும் உஷ்ணம்மாத்திரம் அதி தீட் சணமாயிருந்தது. அம்முனை கண்டு, கப்பலை ஆழ்ந்த கடலிற் செலுத்திப் போகப்போக, கரை மறைந்தது. அப்புறம் பேர் ஞண்ட்டி நோரோன் ஹா என்னும் தீவுக்கு நேர்முகமாய் மதிப்புவைத்து, கப்பலைச் சற்று வடதிசையை நாடி, வட கீழ்த்திசை முகமாய்த் திருப்பிவிட்டோம். ஓடும்பொழுது, அத்தீவுகள் உருவிற்குக் கிழக்கே தோன்றின. அவ்வோட் டத்திற் பன்னிரண்டு தினத்திற்குள் நிரட்சரேகையைத் தாண் டினேம். கடைசியாய்ப் பார்த்தபொழுது, உரு உத்தராட்ச ரேகை ஏழு பாகை இருபத்திரண்டு கலைமட்டத்தில் நின் றது. அவ்விடத்திற் செல்லும்பொழுது, சடிதியிற் கடுங் காற்றுக் கிளம்பி மோதி அடித்தது. அத்தனை விரைவிற் காற்றடிக்கத் தொடங்குமென்று எங்களுக்குத் தோன்ற வில்லை. முதலில் அடித்த காற்று சோழகக் கொண்டல். அதுநிற்க, வாடைக்கச்சான் மேலிட்டது. அது அமர, வாடைக்கொண்டல் கலைப்பட்டது. அந்தக் காற்றுப் பன் னிரண்டு நாள்வரையில் தணியாமல், வரவர உக்கிரங் கொண்டு, சண்டமாருதமாய் அடித்தது. எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இறைவன் செயலால் உரு சேரு மிடத்திற் சேரட்டுமென்று காற்று வாட்டத்திற் செலுத் திக்கொண்டு போனேம். அப்பன்னிரண்டு நாள்வரையில்

அன்றன்று கடலில் முழுகிப்போவேனென்று நினைத்து ஏங்கினேன். உருவிலிருந்த எவனாவது அந்தக் கண்டம் தப்பிப் பிழைக்கலாகுமென்று சொப்பனத்திலும் எண்ணியிருக்கவில்லை.

இந்த ஆபத்தில் அடித்த புயலுக்கு நாங்கள் அஞ்சித் துன்பப்படுகையில், கடலோடிகளிலொருவன் பித்தஜுரங் கண்டு இறந்தான். மற்றொருவனையும் மாலுமி கையாளையும் அலை அடித்துக்கொண்டு போய்விட்டது. பன்னிரண்டாம் நாளளவில் காற்றுச் சற்றுத் தணிந்திருக்கையில், மாலுமி ஸ்தானமதிப்புப் பார்த்து, உரு உத்தராட்ச பாகை பதினொன்றில் ஸாந்து ஆகஸ்டினோ முனைக்கு மேற்கே ஆயிரத்தைந்நூற்று இருபத்தொன்பது மைல் தூரத்தில் நிற்கிறதென்று கண்டார். ஆகவே, உரு ப்ரேஜிலின் வடகரையில் கினிய கரை நெருங்கி, அமேஜோன் நதி முகத்துவாரத் திற்கப்புறம் மகா நதியென்று சாதாரணமாய்ப் பெயர் வழங்கும் ஓரானோகோ நதி முகத்திற்கெதிரே ஓடுவதறிந்து, இனிப் போகவேண்டிய மார்க்கமெதுவென்று என்னுடன் யோசிக்கத் தொடங்கினார். கப்பல் கம்பத்துக்கொண்டு ஓடும் திறம் இல்லாதிருந்தது: ஆனதுபற்றி, ப்ரேஜில் கரைக்கு நேர் முகமாய் மாலுமி உருவைத் திருப்பிவிட்டார்.

எனக்குச் சிறிதும் அது சமாதானமல்ல. நாங்கள் இருவரும் அமெரிக்க கரை யடுத்த சமுத்திரத்தின் படங்களைக் கருத்தாய்ப் பார்த்து, கரிப்பி தீவுகள் கிட்டுமளவும் போயடைவதற்கு மனுஷர் சஞ்சரிக்குந் தேசமில்லையென்று கண்டு, பார்பேடோஸ் தீவின் இலக்கை மதிப்பில் வைத்து, உருவைத் திருப்பி, ஏறச் செலுத்தத் தீர்மானித்தோம். மெக்ஸிகோ கடற்குடாவின் அலைக் கருஷணையால் கரையில் ஒதுங்காதபடி உருவைச் சமுத்திரத்தில் ஏறவிட்டுச் செலுத்தினால், முன்பின் பதினைந்து தினத்தில் அது பார்பேடோஸ் தீவுக் கரையிற் சுகமாய்ப் போய்ச் சேருமென்று நம்பினோம். உருவைக் கம்பத்துப் பாராமலும், நாங்கள் உதவிபெறாமலும் ஆபிரிக்க கரைக்கோடுவதற்கோ ஒருவிதத்திலும் இசையவில்லை.

ஆதலால், உருவைத் திருப்பி, அங்கிலேயருக்கு அதீன மாகிய தீவுகளில் ஒன்றின் கரையிலடைந்தால், சகாயம் பெறுவோமென்றெண்ணி மேற்குத்திசையைச் சார்ந்து, வடமேற்குமுகமாய்ச் செலுத்திக்கொண்டு போனோம். நாங்கள் கருதிப்போன துறை ஒன்று, கடைசியில் உரு அடைந்த துறை ஒன்றாய் முடிந்தது. அட்சபாகை பன்னிரண்டு, கலை பதினெட்டில் ஓடும்போது மீண்டும் சண்டமாருதமடித்து, மிகு வேகமாய் உருவை மேற்குத்திசையை நோக்கித் தள்ளிக்கொண்டுபோய் மனுஷர் சஞ்சாரம், போக்குவரவு சிறிதுமில்லாத விடத்தில் ஒதுக்கிவிட்டது. நாங்களனைவரும் சமுத்திரத்திலுண்டான ஆபத்திற்குத் தப்பித்துக்கொண்டாலும், அவ்விடத்தில் துஷ்ட மிலேச்சராற் பட்சிக்கப்படுவதொழிய, எங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போகவே கூடாது.

காற்று உரமாய் அடித்துக்கொண்டேயிருந்தது. எங்கள் அவஸ்தை தீரவில்லை. இப்படி யிருக்கையில், ஒரு நாள் அதிகாலையில் உருவிலிருந்த ஒருவன்: ''கரை தெரிகிறது!'' என்று கூவினான். அதுகேட்டு, அறைக்குள்ளிருந்த நாங்கள் அனைவரும் எந்தக் கரையென்றறியும்படி அவனுடன் மேற்றட்டிலேறவும், உரு மணற்குன்று தட்டிப் பொறுத்துப்போயிற்று. விரைந்தோடின உரு அத்தனை சடிதியிற் பொறுத்துநின்ற அதிர்ச்சியினால், அலை முறிந்து கிளர்ந்து மோதிற்று. உடனே உரு முழுகிப்போமென்றெண்ணினோம். கடல் நுரையும், சிதறிய அலைத்திவலையும் எங்கள்மேல் இறைத்தவண்ணமாயிருந்ததனால், அதற்கொதுங்கி மறைவில் இருந்தோம்.

இவ்வித ஆபத்தை அனுபவித்தவர்களன்றி, மற்றெவர்களாவது அவ்வேளையில் எங்களுக்குண்டான திகில் இவ்வளவென்று சொல்லவுமாட்டார்கள், சொன்னால் அறியவுமாட்டார்கள். நாங்கள் போய்ச் சேர்ந்த இடக்குறிப்பு, உரு ஒதுங்கிய கரையின் பெயர் விவரம், அது தீவோ, கண்டமோ, மனுஷர் சஞ்சரிப்பதோ, நிர்மானுஷியமான பாழ்ந்தரையோ என்னும் விவரம் ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை; முன்னிருந்ததற்குச் சற்றுத் தணிந்தும், காற்று

இன்னும் உக்கிரமாயடித்துக்கொண்டிருந்ததனால், நொடிக்குள்ளே அது அற்புதமாய்ப் பெயராதிருக்கச் சம்பவித்தால், கப்பல் உடைந்து சின்னுபின்னமாய்ச் சிதறிப்போவதொழிய, இனித் தப்பமாட்டாதென்று நினைத்தோம். இப்படி நினைந்து, மனந் தளர்ந்து, இந்த நிமிஷமோ, அடுத்த நிமிஷமோ எங்களுக்குத் தடையின்றி மரணம் வருமென்று ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணமாயிருந்தோம். அப்புறம் இம்மைக்குரிய செயல் ஏது? எண்ணம் ஏது? யாவரும் பரகதியைப்பற்றிச் சிந்தையாயிருந்தோம். கப்பல் எங்கள் எண்ணத்தின்பிரகாரம் விரைவில் உடைந்துபோகாதிருந்ததே. அதுவும், காற்றுக்கடுமை வரவரத் தணிகிறதென்று மாலுமி சொன்னதுந்தான் அவ்வேளையில் எங்களுக்குண்டான ஆறுதல். அது ஒன்றொழிய, வேறு சுகமறியோம்.

காற்றுச் சற்று அமர்ந்தது கண்டும், உரு மணற்களந் தட்டிப் பொறுத்து நின்று சற்றும் அசையாதிருந்ததனால், எங்கள் சீர் அஞ்சிப் பரிதபிக்கத் தக்கதாயிருந்தது. அவரவரே தங்கள் பிராணனைக் காக்க வகை பார்ப்பதொழிய, மற்றொன்றிலும் எவர் கருத்தாவது செல்லவில்லை. காற்றடிக்கத் தொடங்குமுன் பின்னணியத்தில் வைத்திருந்த வள்ளமொன்று சுக்கானில் முட்டி வெடித்து, அப்புறம் சின்னுபின்னமாய் உடைந்துபோயிற்று. அது சமுத்திரத்தில் முழுகியதோ, அலையினுற்றள்ளுண்டு ஒதுங்கியதோ அறியோம். ஆதலால், அவ்வள்ளம் நமக்குதவுமென்னும் எண்ணம் அவ்வளவில் ஒழிந்தது. மற்றொரு வள்ளமும் உருவிலிருந்தது. அதைக் கடலிலிறக்க வகைதெரியாமல் மயங்கினோம். மயங்கினும், பேசிக்கொண்டிருப்பதற்கு அது சமயமா? நொடிக்குள்ளே கப்பல் உடைந்து உருக்குலைந்து போமென்று ஏக்கமுற்றிருந்தோம். அது உடைந்துபோயிற்றென்று சிலர் சொன்னார்கள்.

இப்படி யாவரும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில், உபமாலுமி வள்ளத்தைப் பெயர்க்க, மற்றவர்களும் போய்த் தூக்கி, உருவின் பக்கத்திலிறக்கிவிட்டு, இறங்கி, கோஷிக்கும் இச்சமுத்திரத்தில் நமக்குத் தேவ காருண்யமே கதியென்று

வள்ளத்தைச் சென்ற திக்கில் விட்டோம். அதிலிறங்கினவர்கள் பதினொருபெயர். காற்று முன் அடித்ததற்கு மிகவும் தணிந்தும், கடலலை பொங்கி யெழுந்து கரையில் மோதிற்று. புயலடிக்கும்பொழுது இவ்வண்ணம் பொங்கிப் புரளும் கடலை உலாந்தர் உக்கிர சமுத்திரமென்பார்கள்.

இப்பொழுது எங்கள் சீர் மிகவும் திகைத்துப் பரிதபிக்கத் தக்கதாயிருந்தது. கடலலை பொங்கிப் புரண்டதனால், வள்ளம் கவிழ்ந்துபோமென்றும், நாங்கள் தடையின்றி அமிழ்ந்திப்போவோமென்றும் பரிஷ்காரமாய்க் கண்டோம். தூக்குவதற்குப் பாயுமில்லை, இருந்தாலும் இசையாது; அதனால், பிராணதண்டனையடைவதற்குப் போகும் கைதிகளைப்போலச் சிந்தை கலங்கிச் சோர்வுற்றிருந்தும், வள்ளத்தைக் கரைக்கு நேரே திருப்பி, தண்டு வலித்துக்கொண்டு போனோம். கரை நெருங்கும்பொழுது, திரை மோதுமதிர்ச்சியால் வள்ளமுடைந்து சின்னபின்னமாய்ச் சிதறுமென்று எங்கள் உத்தேசத்திற் பட்டது. என்ன இடையூறுவரினும், ஈசனறியாமல் வராதென்று எங்கள் ஜீவனை அவர் பாதகமலத்தில் ஒப்புவித்தோம். காற்றுக் கரைக்கெதிரே வள்ளத்தை வேகமாய்த் தள்ளிக்கொண்டு போக, நாங்களும் அதைக் கூடியவரையில் தரைக்கு நேராய்த் தண்டுவலித்துக் கொண்டுபோனோம். எங்கள் செய்கையே எங்களுக்கு நாசத்தை விரைவில் வலிய வருவித்துக்கொள்வதாய் முடிந்தது.

கரை பாரோ, மணலோ, செங்குத்தோ, களமோ, எத்தன்மை யுள்ளதென்று நாங்கள் அறியவில்லை. ஒருவேளை எங்களுக்கு நற்காலமிருந்து கடற்குடாவிலாயினும், ஆற்று முகத்திலாயினும் வள்ளம் போய்ச் சேருமானால், அதைப் பக்குவமாய்க் காற்றொதுக்கிற் செலுத்தி நிறுத்தியாவது, அலைக்கிளர்ச்சியில்லாத கரையில் விட்டாவது தப்பிப் பிழைக்கலாமென்ற அற்ப நம்பிக்கைமாத்திரம் எங்களுக்குண்டாயிருந்தது. அதற்கு ஆதாரம் ஒன்றுந் தோன்றவில்லை; கரை நெருங்க நெருங்க, தரை கடலினும் அஞ்சத்தக்கதாய்க் காணப்பட்டது.

வியர்த்தமான இவ்வெண்ணத்துடன் எங்கள் மதிப்பில் நாலரை மைல் தூரமட்டும் ஓடியபின், மலைபோலெழுந்து

உக்கிரங்கொண்டு, வள்ளத்தின் பின்னணியத்திற் கெதிராய் வரும் திரை யொன்றைக் கண்டு, இனி இதற்குத் தப்பிப் பிழைப்பதில்லையென்றெண்ணிக் கலங்கினோம். கலங்கித் திகைத்திருக்கையில், ஒரு நொடிக்குள் அத்திரை நெருங்கிப் புரண்டதனால், வள்ளங் கவிழ்ந்து முழுகிற்று. "ஈசனே!" என்று ஒரு சொல்லாவது சொல்ல எங்களுக்கு அவகாசப் படவில்லை. கைநொடி நேரத்திற்குள் எல்லாரும் ஆளொரு திக்காய்ச் சிதறி முழுகிப்போனோம்.

ஜலத்தில் முழுகியபொழுது, என் னுள்ளந் தடுமாறியது இவ்வண்ணமென்று வாக்கினால் மொழிவது அசாத்தியம்; நான் நன்றாய் நீந்தப் பயின்றிருந்தேன். இருந்தும், புரளு மலைக்கு மேலே தலை நிமிர்த்தி மூச்சு வாங்குவதற்கு வளப் படவேயில்லை. திரை என்னை அடித்துத் தள்ளிக்கொண்டு போய், நெடுந்தூரத்தில் வெறுந்தரையில் விட்டபின், வேகங் குறைந்து மடங்கிப் பின்னிட்டது. அவ்வேளையில் நான் குடித்த தண்ணீரால் வயிறுப்பி, குறைப்பிராணனு டையவன்போலச் சோர்ந்துபோனேன். இன்னும் சற்றுத் துணிவும், மூச்சுப்பலமுமிருந்ததனாலும், கரை சமீபித் திருந்ததனாலும் திடீரென்றெழுந்து, மறுஅலை வந்து மூடிக் கொள்ளுமுன், இயன்றமாத்திரம் கரைக்கு விரைந்து ஓடி னேன். ஓடவும், பகைவர் படையெடுத்து வருவதுபோலச் சினந்து, மறுதிரை மலைப்பரிமாணமாய்ப் பொங்கிப் புரண்டு வருவது கண்டு, இனி என்னால் ஆற்றாதென் றெண்ணி, அது வரும்பொழுது மூச்சடக்கி மிதந்து நீந்தி மூச்சு வாங்கவேண்டுமென்றும், இவ்வாறு கரை யடுத்துப் போக வேண்டுமென்றும் என் னுள்ளத்தில் உறுதி செய்தேன். அன் றியும், வேகமாய் வரும் அலை என்னைக் கரை நெருங்கத் தள்ளிக்கொண்டுபோய், வேகங் குன்றி மடங்கிப் பின்னி டும்பொழுது, அது என்னை மீண்டும் கடலுக்கு அடித்துக் கொண்டு போகாதபடி உபாயஞ் செய்யவேண்டுமென்று விசா ரமாயிருந்தேன்.

உடனே திரைக்குள் இருபது முப்பது அடி ஆழத்தில் மூழ்கினேன். அது என்னைக் கரை நெருங்க அடித்துத் தள்

ளிக்கொண்டு போவதாக எனக்குத் தோன்றிற்று. நான் வேணுமென்று மூச்சடக்கி, வயிறு வெடிக்க எத்தனமாயிருந்த வேளையில், திரை முகத்தில் மிதந்து மூச்சுவிட்டு, சற்றுக் களை தெளிந்து, துணிவு கூட்டினேன். இரண்டு நொடிப்பொழுதில் வேறு அலை வந்து, என்னை மீண்டும் மூடித் தள்ளிக்கொண்டுபோய் மடங்கிப் பின்னிடும்பொழுது, நான் அதன் கவர்ச்சிக்ககப்படாமல் விசைகூட்டி, உறுதியாய் நின்றேன். இரண்டு மூன்று நிமிஷம் நின்று, உச்சுவாச நிச்சுவாசம் செய்து இளைப்பாறியபின், இருந்த பலத்திற்குத் தக்கதாய்க் கரைக்கோடினேன். பின்னும் திரை வந்து மூடிக்கொண்டது. கரை களமாயிருந்ததனால், சீக்கிரத்திற் கிட்டவில்லை. இப்படி நாலுமுறை என்னைத் திரை அமிழ்த்திற்று.

கடைசிமுறை ஒரு மயிரிடை தப்பினால், என் பிராணன் போய்விடுமென்பதற்கு ஐயமில்லை. திரண்டு புரண்டு வந்த அலையானது என்னை வேகமாய் ஏற்றிக்கொண்டு போக, எதிர்ப்பட்ட ஒரு பாரில் என் விலாவும் மார்பும் அதிர்ச்சியாய் முட்டினதனால், சற்றுவேளை மூர்ச்சித்திருந்தேன். மூச்சுப்பேச்சு ஒன்றுமில்லை. அந்தப் பாரில் தடைப்பட்டு நிற்கையில், போன அலை மடங்கி விரைந்து திரும்பிற்றானால், அது என்னை விழுத்தி அடித்துக்கொண்டு போக, நான் தண்ணீர் குடித்துத் திக்குமுக்காடி இறந்து போவேன். குறித்த பார் ஒரு சிறு தூண்போலிருந்தது. அதை நான் உறுதியாய்ப் பிடித்துக்கொண்டிருந்து, திரை மடங்கிச் சென்றபின், களை தீர்ந்து பின்னும் ஒரு முறை ஓடினேன். ஓடுகையில், மற்றொரு திரை வந்தது. கரை மிகவும் கிட்டியிருந்ததனால், அது வேகமாய் அடிக்கவுமில்லை, என்னை அதிகம் அமிழ்த்தவுமில்லை. அது மடங்கி மறுதிரை வருமுன், ஓடித் தரையிற் சேர்ந்து, அலைமோதுமிடத்திற்குச் சற்று எட்டப்போய், புல்லுள்ள பசுந்தரையில் அச்சந் தெளிந்து உட்கார்ந்து களையாறினேன்.

இவ்வண்ணம் க்ஷேமமாய்க் கரைசேர்ந்தபின், கால் நாழிகைக்குமுன் எனக்குண்டான பிராணசங்கடத்தினின்று

என்னை அற்புதமாய்த் தப்புவித்துக் கரைசேர்த்த காருண்ய பகவானுக்கு ஸ்துதி செலுத்தினேன். நிச்சயமாய் இறந்து போவானென்று எவரும் கைவிட்ட ஒருவன் மரண அவஸ்தைக்குத் தப்பிப் பிழைப்பானாகில், அவனுக்குண்டாகும் ஆனந்த பரவசம் இத்தன்மையதென்று உள்ளபடி வர்ணிக்கக் கூடாதே. எனக்குண்டான பூரண சந்துஷ்டியும் பரவசமும் அவ்வண்ணமே இருந்தன. கொலைசெய்து பிராணதண்டனைத் தீர்ப்புப்பெற்ற ஒருவன் தூக்குமரத்திலேறி, அவன் கழுத்திற் கயிறிட்டு இறுக்கி, அடிப்பலகை பொறிக்கப்பட எத்தனமாயிருக்கும் அந்த நிமிஷத்தில் அவனைப் பிராணதண்டனைக்கு விலக்கும்படி உத்தரவு பிறந்ததென்ற சத்தம் அவன் செவிப்படும்பொழுது, துக்கசாகரத்தில் மூழ்கிய அவன் அச்சந்தோஷத்தைத் தாங்கிப் பிழைத்திருக்க மாட்டானென்றல்லவா அந்த க்ஷணமே அவனுக்கு இரத்தங்குத்தி வாங்கும்படி ரணவைத்தியனை அனுப்புகிறார்கள்; இது அதிசயமல்ல. சடிதியில் உண்டாம் துன்பத்தைப்போல் இன்பமும் ஆரம்பத்தில் மனந்தடுமாறித் திகைக்கப்பண்ணும்.

எனக்கு நேரிட்ட ஆபத்திற்கு நான் அற்புதமாய்த் தப்பிப் பிழைத்துக் கரையேறியதைப்பற்றிய சிந்தனையில் மெய்மறந்து மூழ்கி, கைகளை ஏற்றி, கரையில் உலாவி, என் புண்ணான நெஞ்சில் எழுந்த எண்ணங்களுக்கேற்கப் பலவித அங்கசேஷ்டைகள் பண்ணினேன். அவைகளை விவரிக்கும் நிர்வாகம் எனக்கில்லை. என் கூட்டாளிகள் அனைவரும் முழுகி இறந்துபோனதையும், நான் ஒருவன்மாத்திரம் அதிசயமாய்ப் பிராணரட்சை பெற்றதையும் அழுந்த நினைத்து ஆச்சரியப்பட்டேன். பின் ஒருபொழுதும் அவர்களைக் காணாததனால் இறந்துபோனார்களென்று நிச்சயித்தேன். அவர்கள் தரித்திருந்த நெடுங் குல்லா மூன்றும், குறுங் குல்லா ஒன்றும், இட்டிருந்த பாதரட்சைகளில் ஒன்றுக்கொன்று ஜதை அல்லாதவைகள் இரண்டுந்தவிர, வேறெந்த அடையாளத்தையும் நான் காணவில்லை.

மணற்குன்று தட்டிப் பொறுத்த உரு தெரிகிறதாவென்று ஏறிட்டுப் பார்த்தேன். எறிதிரையும் சிதறிய நுரையும்

நெருங்கி இருட்படலம்போன்றிருந்ததனால், தூரத்தில் நின்ற கப்பல் எனக்குத் தோன்றவில்லை. எப்பொருட்குமிறைவனே! நான் கரையேறப்பெற்றது எப்படி என்று பிரமையடைந்தேன்.

மேற்சொல்லியபடி நான் பெற்ற சுகத்தை எண்ணி மனந் தேறியபின், அவ்விடம் எத்தன்மையதென்று நான்கு திக்கையும் பார்த்து, இனிச் செய்வதென்னவென்று சிந்தித்தேன். சிந்திக்குமளவில், என் மனம் துன்பப்பட்டது. ஆபத்து நீங்கியும், அச்சந் தணியவில்லை. உடுத்திருந்த வஸ்திரம் நனைந்து, சரீரம் மரம்போல் விறைத்துப்போயிற்று; அதைக் களைந்தால், உடுத்துக்கொள்வதற்கு உலர்ந்த மாற்று வஸ்திரமில்லை. போஜனபானம் பண்ணிப் பசிக்களை தெளிவதற்கு ஒன்றுமில்லை; பட்டினியால் இறந்துபோவது, அது தப்பினால், துஷ்ட மிருகத்திற்கு இரையாவதொழிய மற்றொரு கதியுந் தோன்றவில்லை; உணவிற்குரிய ஜந்துக்களைக் கொன்று தின்று பிழைக்கவாயினும், என்னைக் கொன்று பட்சிக்கக் கருதும் துஷ்ட மிருகங்களை வதைசெய்து, எனது உயிரைக் காக்கவாயினும் ஏற்ற அஸ்திர சஸ்திரங்கள் ஏதுமில்லை. இதை நினைக்க நினைக்க, என் மனோபத்திரவம் பின்னு மதிகரித்தது. கத்தி ஒன்று, சுங்கான் ஒன்று, ஒரு சிமிளில் புகையிலை கொஞ்சம், இவைகள்தவிர வேறொன்றும் என் வசமில்லை. ஆனதுபற்றி, பித்தங்கொண்டவன்போல மனத்துன்பத்தால் மதிமயங்கித் திரிந்தேன். இறங்குபொழுதைக் காணவே என் மனங்குன்றியது. இராத்திரிகாலத்தில் துஷ்ட விலங்குகள் வெளிப்பட்டு இரைதேடி வருமானால். நான் அவைகளுக்குத் தப்பிப் பிழைக்கும் வகை என்னவென்று எண்ணி விசாரப்பட்டேன்.

தேவதாருவைப்போலக் கிளைகள் அடர்ந்து பருத்த முள்ளுள்ள விருட்சமொன்று பக்கத்தில் நின்றது கண்டு, அன்றிரா முழுதும் அதில் ஏறியிருந்து, பிழைக்கும் வகை ஒன்றும் என் புத்திக்குத் தோன்றாததனால், மற்றநாள் நேர்ந்தபடி இறந்துபோகலாமென்று சங்கற்பஞ் செய்தேன். தாகமாயிருந்ததனால் நீர்நிலை தேடிப் போய். கடற்கரைக்கு அரைக்கால் மைல் தூரத்திற் கண்டு, மொண்டு

பருகி, பசி எடாதிருக்கும்படி ஒரு துண்டு புகையிலையை வாய்க்குள் இட்டுக்கொண்டு வந்து மாத்திலேறி, கைக்குதவியாகக் குறுந்தடி யொன்று வெட்டி வைத்துக்கொண்டு, தூக்கத்தில் விழுந்துபோகாமற் பக்குவமாய்ப் படுத்திருந்தேன். ஆயாசபபட்டவர்களுக்குத் தூக்கம் வர நாழிகை செல்லுமா? இரா முழுதும் அயர்ந்து ஆரோக்கியமாய் நித்திரை செய்தேன். எனது நிலைமையில் இருக்கும் எவர்களுக்காயினும் அச்சம் தெளிந்து நித்திரை வருமென்று நான் நினைக்கவில்லை.

## 4. அத்தியாயம்.

மணற்குன்று தட்டிப் பொறுத்துநின்ற மரக்கலமும் தேசத்தின் கரையும் மற்ற நாள் எனக்குத் தோன்றியது. நீந்திப் போய் மரக்கலமேறி, அதில் இருந்த வஸ்துக்கள் பலவற்றைத் தகுதியான யுக்தி செய்து கொண்டுவந்து சேர்த்தது. ஒரு பட்சியைக் கண்டு சுட்டது. அது ஆகாரத்திற்குதவாதென்று கண்டது. எனது நிலைமையைக் குறித்து நினைக்க நினைக்க, எனக்கு அறிவு வந்தது. கப்பல் கரைக்குத் தூரமாய் அடித்துக்கொண்டு போகப்பட்டு, கண்ணுக்கெட்டாத தூரத்திற் சேர்ந்தது. குடியிருக்க வளமான இடம்பார்த்துத் திரிந்தது. எனக்குத் துயரமான சிந்தனைகள் உண்டானது.

தூக்கந் தெளிந்து நான் எழுந்திருக்கச் சூரியோதயமாகி நெடும்பொழுது சென்றது. ஆகாயத்தில் மப்பு மந்தாரமின்றி, அடித்த காற்று அமர்ந்தது; சமுத்திரம் முன்போலப் பொங்கிக் கோஷிக்கவில்லை. மணற்குன்றிலே தட்டிப் பொறுத்து நின்ற மாக்கலம் இராத்திரிக் கடற்பெருக்கு வேளையில் அலை வீச்சினுற் கிளம்பி, அவ்விடத்தினின்று பெயர்ந்து, முதல் நாள் விலாவில் முட்டி என்னைக் காயப்படுத்தின பார் இருக்கும் இடத்தில் வந்து நின்றது கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டேன். அலைவாய்க்கரைக்கும், கப்பல் நின்ற விடத்திற்கும் தூரம் ஒரு மைலுக்கு உட்பட்டிருந்ததனுலும், கப்பல் ஆட்டமின்றி நிமிர்ந்து பொறுத்துநின்றதனுலும், எனது

உபயோகத்திற் கின்றியமையாத சில வஸ்துக்களையாவது எடுத்துவரும்படி கப்பலுக்குப் போக இசையுமானால், என் பாக்கியந்தானென்றெண்ணினேன்.

கோட்டில் வாழ் விலங்கைப்போல் அன்றிரவு நான் பள்ளி கொண்ட மரத்தினின்று இறங்கி, நான்குதிக்கிலும் பார்த்தேன். முதலில் என் கண்ணுக் கெதிர்ப்பட்ட பொருள் காற்றும் திரையும் அடித்துக்கொண்டுவந்து கரையி லொதுக்கிவிட்ட ஓடமே. அது எனக்கு வலப்புறத்திற் சுமார் இரண்டு மைல் தூரத்தி லிருந்தது. அதைப் பார்க்கும்படி கரையோரமாய்ச் சற்றுத் தூரம் போனேன். போகையில் எனக்கும் ஓடமிருந்த விடத்திற்கும் இடையில் அரை மைல் தூரமகன்ற ஒரு நீரோடை யிருந்தது. ஆனது பற்றி, அப்பொழுது ஓடத்திற்குப் போக இசையாதென்று திரும்பினேன். தற்கால சம்ரட்சணையின்பொருட்டு ஏதாயினுங் கண்டு எடுத்துவரும்படி கப்பலுக்குப் போகவேண்டுமென்றே என் மனம் முக்கியமாய் நாடிற்று.

சற்று மதியந் திரும்பியபின் கடல் அலைக்கிளர்ச்சியின்றிச் சாந்தப்பட்டு, வற்றுவேலையாயிருந்தது. கப்பலுக்குக் கால்மைல் தூரமட்டும் நான் நடந்துபோனேன்; போகையில், ஆறின புண்ணிற் கோலிட்டதுபோல, அடங்கின துக்கம் மீண்டும் என் நெஞ்சில் மேலிட்டது. உருவைவிட்டிறங்காதிருப்போமானால், நாங்களனைவரும் தப்பிப் பிழைத்து க்ஷேமமாய்க் கரையேறுவோமே. மனுஷர் சகவாசமின்றி, நான் அகதியாய் இப்படி நிர்ப்பந்தப்பட நேரிடாதேயென்பதாகச் சற்று அழுத்தி நினைக்க, என் நெஞ்சு கலங்கிக் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அழுது பயனென்ன? கூடுமானால் கப்பலுக்குப் போகவேண்டுமென்று தீர்மானித்து, வெயில் அதி தீக்ஷணமாய்க் காய்ந்ததனால், மேலங்கி முதலிய வஸ்திரங்களைக் களைந்து வைத்துவிட்டு, கடலிலிறங்கி நீந்திப்போனேன். கப்பல் தரையிற் பொறுத்து, நீர்மட்டத்திற்குமேல் மிகவும் உயரமாயிருந்தது. நான் தாவிப் பிடித்து அதன்மேல் ஏறுவதற்கு ஒன்று மகப்படவில்லை. இரண்டு முறை உருவைச் சுற்றி நீந்தி வந்தேன். இரண்டாந்தரம் நீந்திவருகையில், உருவின் முன்னணியத்தில் ஒரு சிறு வடம்

நான் தாவிப் பிடிக்கத் தக்க சமீபத்தில் தொங்கியிருப்பது கண்டேன். அது முதல்முறை என் கண்ணுக்குத் தப்பியது ஆச்சரியம். இனி என் சங்கடம் தீர்ந்ததென்று வடத்தை எட்டிப் பிடித்து ஏறி முன்னணியத்திற் சேர்ந்தேன். உருவின் அடிப்பலகை பிரிந்து, கீழறையில் நீரூறிப் பிரவாகமாய் நின்றது. வயிரமான மணற்குன்றின் அணையில் உருவின் ஒரு பக்கம் பொறுத்து, அபரம் அவ்வணைமேல் தங்கி உயர்ந்தும், அணியம் நீர்மட்டமளவிற்குச் சரிந்தும் இருந்தன. இந்த ஸ்திதியில் இருந்ததனால், அதன் மேற்றட்டின் பின்னணியத்திற் பிரதிபந்தம் ஒன்றுமில்லை. அங்கிருந்த சரக்குகளெல்லாம் தண்ணீரில் நனைந்து பழுதாகாதிருந்தன. பழுதுபட்ட சாமான்கள் இன்னின்னவையென்றும், பழுதுபடாதவைகள் இன்னின்னவையென்றும் காதலுடன் பரீட்சித்ததுதான் நான் முதலிற் செய்த முக்கியமான வேலை. போஜனபதார்த்தங்கள் யாவும் வெள்ளத்திற்குத் தப்பிப் பதங்கெடாதிருந்தன. ரொட்டி அறைக்குப் போய், பிஸ்கிட் ரொட்டிகள் எடுத்து, அங்கியுறை நிறைய இட்டு, தின்றபடியே வேறு வஸ்துக்களைப் பார்வையிட்டேன். பொறுத்திருந்து போஜனம் பண்ணுவதற்கு அச்சமயத்தில் அவகாசமேது? பெரிய அறையில் றம் சாராயம் இருந்ததுகண்டு, இன்னும் என்னென்ன விபத்து வருமோவென்றெண்ணி, இளைக்காதிருக்கும்படி ஊக்கம் உண்டாகத்தக்கதாகப் பூர்த்தியாய்க் குடித்தேன். எனது சம்ரட்சணைக்கு வேண்டிய வஸ்துக்கள் அநேகமிருந்தன. அவைகளைப் பத்திரமாய் இறக்கிக்கொண்டு போய்ச் சேர்க்கும்படி ஒரு ஓடம் இல்லாத குறையன்றி, அவ்வேளையில் எனக்கு மற்றொரு குறையுமில்லை.

செயலொழிந்திருந்து எட்டாதபொருளை இச்சிப்பதனால், அது கிட்டுமா? உற்ற சமயத்திற் சர்வ முட்டாளுக்கும் யுத்தி உண்டாகுமென்பதுபோல, சமயோசிதமான உபாயமொன்று எனக்குத் தோன்றிற்று. உருவில் சமயத்திற்குதவுமென்று பாய் தாங்குங் கொம்புகள் சில, பெரு மரங்கள் இரண்டு மூன்று, மேற்பாய்மரம் இரண்டொன்று வைத்திருந்தோமே. ஆடங்கமின்றி அவற்றில் நான் தூக்கத் தக்கனவகளை எடுத்து, ஒவ்வொன்றிலும் கயிறு தொடுத்துக் கடலிற் போட்டேன்.

பின்பு நானிறங்கி, உருவின் பக்கத்தில் நின்று அந்தக் கொம்புகளில் நாலை இழுத்து வரிசையாய் அடுத்துவைத்து, இரு முனைகளிலுங் கயிற்றால் இசைத்து இறுக்கி ஒரு தெப்பங் கட்டினேன். அப்புறம் குறுகிய பலகைத் துண்டுகள் இரண்டு மூன்றைக் குறுக்கே வைத்தேன். வைத்தபின் நான் தெப்பத்தின்மேலேறி அபாயமின்றி உலாவக்கூடியதாயிருந்தது. பலகைத் துண்டுகள் இலேசாயிருந்ததனால், அதிக பளு தாங்கும் தரமானவைகளல்ல. அதற்கும் ஒரு உபாயஞ் செய்தேன். கையிருப்பாய் வைத்திருந்த மேற்பாய்மரமொன்றை வாளால் மூன்று துண்டாய் அறுத்து, அத்துண்டுகளையும் எத்தனையோ சங்கடப்பட்டுத் தெப்பத்திலிசைத்து, ஒருவாறு கட்டினேன். இத்தனை பக்குவங்கள் செய்து வீண்காலங்கழிக்க வேண்டுவதில்லை. பின்னொருசமயத்தில் மனம்போலே செய்வதற்கிசையும்; ஆனாலும் வேண்டிய பொருளனைத்தும் ஒரேமுறையில் எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று விரும்பியதனால், தெப்பத்தை இவ்வாறு பலப்படுத்தினேன்.

நான் கட்டிய தெப்பம் தகுந்த அளவிற்கேற்றும் எந்தப் பாரத்தையும் தாங்கும் பலமுடைத்தாயிருந்தது. இனி அதில் என்ன சரக்கேற்றவேண்டுமென்றும், ஏற்றுஞ் சரக்கு ஏறிதிரைபட்டு நனைந்துபோகாதபடி என்ன பக்குவம் செய்யவேண்டுமென்றும் சற்றுநேரம் சிந்தித்து, அதற்கு மொரு யுத்திசெய்தேன். முதலில், அகப்பட்ட பலகைகளனைத்தையும் தெப்பத்திலிறக்கிவைத்து, எனக்கு அவசியம் வேண்டிய வஸ்துக்கள் இன்னின்னவென்று தீர்க்காலோசனை செய்தபின், கடலோடிகளுடைய பெட்டிகளில் மூன்றைத் திறந்து, உள்ளிருந்த பொருளை வெளிப்படுத்தி, அம்மூன்று வெறும் பெட்டிகளையும் தெப்பத்திலிறக்கிவைத்தேன். அதன்மேல் ஒரு பெட்டிக்குள் ரொட்டி, அரிசி, உலர்ந்த பாலடைக்கட்டி மூன்று, உருவிலிருந்தபொழுது எங்களுக்கு ஆகாரமாகிய வெள்ளாட்டிறைச்சி வற்றல் ஐந்து பெருந்துண்டு முதலிய போஜனபதார்த்தங்களை அடுக்கினேன். அன்றியும், உருவில் ஏற்றிய சில கோழிகளுக்கு இரையாகக் கொண்டுவந்த ஐரோப்பிய தானியங் கொஞ்சம் மீந்திருந்தது. அக்கோழிகளை நாங்கள் நாளாவர்த்தியில் அடித்துப் புசித்தோம். அவைகள் தின்றுமீந்த

தானியத்தையும் அந்தப் பெட்டிக்குள் வைத்தேன். வாற் கோதுமையும், கோதுமையும் உருவிலிருந்த ஞாபகத்தைப் பற்றித் தேடிப் பார்த்தபொழுது, அவை எனக்குக் கிட்ட வில்லை. பாதியை எலிகள் பட்சித்துவிட்டன; பாதியைப் பழுதாக்கின. அநேக பெட்டிகளிற் சாராயப்புட்டிக ளிருந் தன. அச்சாராயம் முழுதும் மாலுமியுடையது. சில புட்டி களில் மனோசுகத்திற்கனுகூலமான மதுரபானவர்க்கங்களிருந் தன. சாராயம் ஐந்து ஆறு கலனுக்கு அதிகமுண்டு. இவை எல்லாவற்றையு மெடுத்து, தெப்பத்திற் பிரத்தியேகமாய் அடுக் கினேன். பெட்டிக்குள் வைப்பது அவசியமுமல்ல, வைத்தா லும் அவைகள் அதற்குளடங்கா. இவைகளை அடுக்கிக் கொண்டிருக்கையில், கடல் பெருகும் வேளையாயிற்று. அலைக் கிளர்ச்சி யில்லை. அலைவாய்க்கரைப்புறத்தில் நான் களைந்து வைத்த மேலங்கியும், உள்ளங்கியும், மார்பங்கியும் அலையில் அகப்பட்டு மிதந்தோடுவது கண்டு விசனப்பட்டேன். முழந் தாள்வரையிலிட்டிருந்த குறுங் காற்சட்டை சணனூல் நெச விடமாதலால், நீர் சுவருதென்று அதையும் பாதகோசங் களையும் முன்பு நான் கரையிற் களைந்து வைக்கவில்லை. இட்டிருந்தபடியே நீந்தி வந்தேன். இனி வஸ்திரத்திற்கு வழி என்னவென்றெண்ணி, உருவில் எவருடைய வஸ் திரமாயினுமிருக்குமெனவுத்தேசித்துத் தேடிப்பார்த்தேன். என்னைப்போல இன்னும் நான்குபெயர் உடுக்கத்தக்க வஸ்தி ரங்கள் இருந்தன. முக்கியமாய் என் கண்ணுக்கு நாட்ட மான வஸ்துக்கள் பின்னும் அநேகமிருந்ததனால், தற்சமயத் திற்கு வேண்டிய வஸ்திரங்களைமாத்திர மெடுத்தேன். கரையி லிறங்கியபின் தச்சவேலை செய்வதற்கேற்ற கருவிகள் எனக் குப் பிரதானமாய் வேண்டும். சற்றுநேரம் ஆவலாய்த் தேடிப் பார்த்துவருகையில், அக்கருவிகள் வைத்திருக்கும் பெட்டி யொன்றைக் கண்டேன். அதைப்போல் எனக்குதவியான பேறு மற்றொன்றுமில்லை. அவ்வேளையில் கப்பல் நிறையப் பொன் கொடுத்தாலும், அது அவ்வொரு பெட்டிக்கீடாகாது. அதற்குள்ளிருந்த ஆயுதவர்க்கங்களின் விவரம் அறிவேன்: ஆதலால் திறந்துபார்த்து வீண்பொழுது கழிக்காமல், பெட் டியை யிறக்கிப் புணையில் வைத்தேன்.

அப்புறம் குண்டு மருந்துமுதலிய துப்பாக்கி உபகரணங்களும், துப்பாக்கிமுதலிய படைக்கலங்களும் வேண்டுமென்று எனக்கு விசாரமுண்டாயிற்று. உருவின் பெரிய கீழறையில் முதன்மையான குருவிக்குழாய்த் துப்பாக்கிக ளிரண்டும், கைத்துப்பாக்கிக ளிரண்டும் இருந்தன. முதலில் அவைகளையும் சில வெடிமருந்துக் கொம்புகளையும், ரவைஇட்ட பையொன்றையும், தேய்ந்து கறைபிடித்திருந்த கத்திக ளிரண்டையும் பத்திரமாய் எடுத்துக்கொண்டுபோய் வைத்தேன். உருவில் மூன்று பீப்பா மருந்து இருந்தது தெரியும். துப்பாக்கிப் படைக்கல விசாரணை உத்தியோகஸ்தன் அவைகளை வைத்த இடம் ஏதென்றறியேன். வெகுநேரம் அங்கும் இங்கும் ஆராய்ந்து பார்த்துக்கொண்டுவருகையில், அவைகள் என் கண்ணுக் கெதிர்ப்பட்டன. இரண்டு பீப்பா மருந்து பழுதற்றிருந்தது. தண்ணீர் ஒரு துளியும் அதில் ஏறவில்லை. ஒரு பீப்பா மருந்து நனைந்து பழுதாய்ப்போயிற்று. அந்த இரண்டு பீப்பாவையும், துப்பாக்கி முதலியவைகளையும் தெப்பத்திற் கொண்டுபோய் வைத்தேன். இதற்கு மிஞ்சிய பாரத்தைத் தெப்பந் தாங்காதென்று நினைத்து, இவைகளைக்கொண்டு கரை சேரவேண்டுமே; இதற்கு உபாயமென்னவென்று எனக்குச் சிந்தனையுண்டாயிற்று. தெப்பத்திற்குப் பாயில்லை, தண்டில்லை, சுக்கான் கிடையாது. அற்பமாவது காற்றடிக்குமானால், தெப்பம் கவிழ்ந்து, சரக்குகளனைத்தும் முழுகிப் போவது நிஜம்.

அச்சமயத்தில் மூன்று காரணங்களால் அச்சமற்று என் மனந்தேறிற்று: 1-வது. ஏரிநீர்போலக் கடல் ஒப்பமும் சாந்தமுமாயிருந்தது; 2-வ்து. நீர்ப்பெருக்குப் போகப்போக வேகம் தணிந்து, கரையை நோக்கிச் சென்றது; 3-வது. காற்று உரத்து அடிக்கவில்லை; கரைவாட்டமாய் வீசிற்று. இது நிற்க, ஓடத்தைச்சேர்ந்த உடைந்த தண்டுகள் இரண்டு மூன்றைக் கண்டெடுத்தேன். பெட்டிக்குள்ளிருந்த கருவிகளன்றி, பின்னும் மரமரியும் வாள் இரண்டு, கோடரி ஒன்று, சம்மட்டி ஒன்று அகப்பட்டன. இவைகளையுமேற்றிப் புணையைக் கரைக்குத் திருப்பிவிட்டேன். சுமார் ஒருமைல் தூரமட்டும் மிதவை தடையின்றி விரைந்தோடிற்று. முன்பு நான்

கரையேறிய விடத்திற்கல்ல, சற்று விலகிச் சென்றது. அத ஞல், கடற்குடாவாயினும், ஆற்று முகத்துவாரமாயினும் சமீ பத்திலிருக்குமென்றும், இருந்தால் அதுவே என் சரக்குக ளுக்கு வளமான இறங்குதுறையாகுமென்றும் எண்ணினேன்.

எண்ணியவாறே முடிந்தது; தெப்பத்திற்கெதிரிற் சிறுகுடா வொன்று இருப்பதும், அதற்கு நேர்வாட்டமாய் நீரோடுவதுங் கண்டு, கூடுமளவிற் தெப்பத்தை அதன் மத்தியிற் செலுத்திப் போகப் பார்த்தேன்; இவ்விடத்தில் எனக்குப் பின்னும் ஒரு தரம் பிராணசங்கடம் நேர்ந்தது. இம்முறை எனது தெப்பம் கவிழ்ந்தாயினும் பிரிந்தாயினும் சேதப்படுமாஞல் மனந் தளர்ந்து நிலேகுலேவதொழிய, அப்புறம் நான் கடைத்தேறுவ தில்லே. அந்தக் கரை இத்தன்மையுள்ளதென்று நான் அறிந் தவனல்லவே. தெப்பத்தின் ஒருமுனே சடிதியிற் களந்தட் டிப் பொறுத்துநிற்க, அவ்வதிர்ச்சியால் அங்கிருந்த வஸ்துக் கள் அனேத்தும் நிலேபெயர்ந்து சரிந்து, எதிர்முனேவழியாய்க் கடலில் விழுமுன், பெட்டிகளே மூச்சடக்கி, ஒருபடி என் முதுகினுல் தாங்கிக்கொண்டிருந்தேன். எனது பலம் முழு தும் செலுத்தித் தெப்பத்தைத் தள்ளினுலும், அது சிறிதும் களம் விட்டுப் பெயராது. நின்றநிலே விட்டுப் பெயராமல் அரைமணி நேரவரையிற் பெட்டிகளே முதுகினுல் உரமாய்த் தாங்கிக்கொண்டிருந்தேன். அதற்குள்ளே கடற்பெருக்குச் சற்று அதிகப்பட்டதனுல், சரிந்த தெப்பத்தின் முனே கிளம்பி இருபுறமும் ஒருவாறு சமமாயிருந்தன. பின்னும் கொஞ் சநேரத்திற்குள் பெருக்கு மிஞ்ச, தெப்பம் நிலேபெயர்ந்து நீந்திற்று. நான் தண்டினுல் அதைக் கால்வாயில் திருப்பி விட்டுச் சற்றுத்தூரஞ் செலுத்திக்கொண்டுபோய், ஒரு சிறு நதியின் முகத்துவாரத்திற் சேர்ந்தேன். அதன் இரு கரை களும் நெருங்கியிருந்தன. நீரோட்டம் நேர்வாட்டமாயிருந் தது. எக்கரையிலாவது இறங்குவதற்குத் தகுதியானவிடம் பார்த்தேன். கரைக்கு எவ்வளவும் சமீபத்திலிருந்தால், காலக்கிரமத்திற் கடலில் வரும் உருக்களேக் காணு மாசையி ஞல் ஆற்றில் நெடுந்தூரம் ஓட என் மன மிசையவில்லே.

இப்படியிருக்கையில், குடாவின் வலப்புறத்துக் கரை யிற் சற்றுத்தூரத்தில் ஒரு சிறு கோடி என் கண்ணுக்குத்

தட்டுப்பட்டது. எத்தனையோ சங்கடப்பட்டு, வருத்தத்தைப் பாராட்டாமல், தெப்பத்தை அக்கோடிக்கு நேரே திருப்பிக்கொண்டுபோய்ச் சமீபத்தில் சேர்ந்து, தரை தண்டுக்கு எட்டியதனால், தண்டூன்றித் தெப்பத்தைக் கரையேற்ற எண்ணங்கொண்டிருக்கையில், இவ்விடத்திலும் என் சரக்கு முழுதும் ஜலத்தில் முழுகிப்போகும்படியான அபாயம் நேர்ந்தது. கரை ஒப்பமின்றி இறக்கமாயிருந்ததனால், தெப்பத்தை நிறுத்திச் சரக்குகளை யிறக்க வளப்படவில்லை. தெப்பத்தின் ஒருமுனை கரையிலேறினால், எதிர்முனை ஜலத்திற் செங்குத்தாய்ச் சரிந்து நிற்க, அதிலேறிய சரக்குகளனைத்தும் கடலில் விழுந்துபோம். ஆதலால், தண்டூன்றித் தெப்பத்தை நிறுத்தி, அதன் பக்கத்தை ஒப்பமாயிருந்த ஓரிடத்திற் கெதிரில் திருப்பிவிட்டு, பெருக்கு ஏறுமளவும் காத்துநின்றேன். எனது தெப்பம் ஒரு அடி ஆழமுள்ள ஜலத்தில் ஓடுந் தரமுள்ளது. போந்தமட்டும் பெருக்கேறியபொழுது, நான் மேற்சொல்லிய சமமான தரையில் தெப்பத்தை ஏற்றி, முறிந்த தண்டுகள் இரண்டை அதன் இருமுனைகளிலும் அடுத்துத் தரையிற் கடாவி நிறுத்தினேன். தண்ணீர் வடிகிறவரையிலிருந்து அப்புறம் தெப்பத்தை விட்டிறங்கினேன். இவ்வாறு தெப்பமும், அதிலேறிய சரக்கும் இடையூறின்றிக் கரைசேர்ந்தன.

அப்புறம் நாட்டில் உலாவி, வாசம்பண்ணுவதற்கும், எனது பண்டபதார்த்தங்களை அச்சமின்றிப் பத்திரமாய் வைத்துக் காப்பதற்கும் வசதியான விடம் பார்க்கவேண்டியிருந்தது. நானிறங்கிய தேசம் கண்டமோ, தீவோ, மனுஷர் குடியேறிய நாடோ, நிர்மானுஷியமான வனமோ, துஷ்டமிருகங்கள் சஞ்சரிப்பதோ, அல்லவோ, எத்தன்மையுள்ளதென்று அப்பொழுது நான் அறியேன். நான் இறங்கிய கரைக்கு ஒருமைல் தூரத்திற்குள் செங்குத்தாய் உயர்ந்த ஒரு குன்றிருந்தது. அதன் கீழே வடக்குத் தெற்காய்த் தொடர்ந்த சிறு குன்றுகள் சில காணப்பட்டன. குருவிக் குழாய்த் துப்பாக்கி ஒன்று, கைத்துப்பாக்கி ஒன்று, வெடிமருந்துக் கொம்பு ஒன்று, ஆக இம்மூன்று படைக்கலங்களு மெடுத்துக்கொண்டு, மலைவளம் பார்த்துவரும்படி அக்

குன்றின் சிகரமட்டும் மிக வருத்தப்பட் டேறினேன். சிக ரத்தினின்று பார்த்தபொழுது, நான்கு திக்கிலும் கடல் சூழ்ந் திருந்தது. தரை காணப்படவில்லை. நெடுந்தூரத்திற் சில மலைகளிருந்தன. மேற்கே முன்பின் ஒன்பதுமைல் தூரத் திற் சிறிய தீவுகளிரண்டு தோன்றின. கடைசியில் எனது கதி இப்படி முடிந்ததாவென்று நினைத்துப் பரிதபித்தேன்.

மேலும் நானடைந்த தீவு பாழ்நிலமாயிருந்தது. அங்கே துஷ்ட மிருகங்களன்றி, மனுஷர் சஞ்சாரமில்லை யென்பதற் குச் சாட்சி கண்டேன். துஷ்ட வனவிலங்குகள் என் கண் ணுக் கெதிர்ப்படவில்லை. பட்சிகளைத் திரளாய்க் கண்டேன். அவைகள் ஜாதி விவரம் அறியேன். கொன்று விழுத்தினு லும் ஆகாரத்திற்கு இன்னது யோக்கியம், இன்னது அயோக் கியமென்று எனக்குத் தெரியாது. திரும்பி வரும்பொழுது மாமடர்ந்த ஒரு காட்டின் பக்கத்திற் பெரிய பட்சியொன்று ஒரு விருட்சத்தி லிருந்தது கண்டு சுட்டேன். பூலோக சிருஷ்டிக் காலமுதல் அந்நாளளவும் அந்தத் தீவில் துப்பாக் கிப் பிரயோகம் சுத்தமாய் இல்லையென்று நம்புகிறேன். துப் பாக்கி வெடிதீர்த்த க்ஷணமே காடெங்கும் பல ஜாதிப் பட்சி ஜாலங்கள் கிளைகிளையா யெழுந்து, ஜாதித் தன்மைப்படி காது செவிடுபடக் கிளைகூட்டிக் கீச்சிட்டுக் கூவிக் கத்தி மிரண்டு பறந்தன. நானறிந்த பட்சிவர்க்கம் அவற்றுள் ஒன்றுவ தில்லை. சுட்டுவிழுத்தின பட்சி நிறவிசேஷத்திலும், மூக்கின் வடிவத்திலும் ஒருவகைப் பருந்துபோலிருந்தது. அதன் கால் நகங்கள் பருந்து நகம்போலல்ல சாமானிய பட்சி நகம் போலிருந்தன. அதன் மாமிசம் பதங்கெட்டு ஒன்றுக்கு முதவாமற்போயிற்று.

தேசவளத்தைக்குறித்து அறிந்த இம்மட்டில் திருப்தி யடைந்து, தெப்பம் நின்ற விடத்திற்குத் திரும்பி வந்து, அதிலேற்றிய சாமான்களை இறக்கிக் கரைப்படுத்தத் தொடங் கினேன். அவ்வேலை முடிய அஸ்தமனகாலபரியந்தம் சென் றது. இராத்திரிகாலத்தில் என்ன செய்வதென்றும், எவ் விடத்தில் தங்குவதென்றும் எனக்குப் புலப்படவில்லை; ஏதா யினும் துஷ்ட வனவிலங்கு வந்து என்னைப் பட்சித்தாலும் பட்சிக்குமேயென்றெண்ணி, தரையிற் படுத்திருக்கப் பயப்

பட்டேன். அந்தத் தீவில் துஷ்ட மிருகங்களால் அபாய முண்டாமென்று அஞ்சுதற்கு நிமித்தமில்லையென நாளாவர்த்தியில் எனக்குத் தெரியவந்தது.

எப்படியும் சமயம் இடம் காலத்திற்கு ஏற்க ஒருபாயஞ் செய்தேன். தெப்பத்திற் கொண்டுபோன பெட்டிகளையும் பலகைகளையும் நான்கு பக்கத்திலும் வைத்தடுக்கி, இராத் தங்குவதற்கு ஒரு சிறு குடிசைபோல் அடைத்தேன். ஆகாரத்திற்கு உபாயந் தோன்றவில்லை. முன்பு பட்சி சுட்ட காட்டினின்று முசலைப்போலும் ஜந்துகள் இரண்டு மூன்று வெளிப்பட்டது கண்டதனால், அவைகள் ஒருவேளை எனக்குப் போஜனத்திற் குதவுமென்று நினைத்தேன்.

எனக்குபயோகமான வஸ்துக்கள் பின்னும் அநேகம் உருவி லிருந்ததனால், அவைகளையும் விசேஷமாய் அங்கிருந்த கப்பற் கயிறுகள், பாய்கள், கரைக்குக் கொண்டு வரத்தக்க வஸ்துக்கள் அனைத்தையும் இன்னு மொருமுறை போய்த் தெப்பத்தில் ஏற்றிவரத் தீர்மானித்தேன். இனியடிக்கும் புயலில் உரு உடைந்து சின்னபின்னப்படுவது வாஸ்தவமென்றறிந்து, கூடியவரையில் உருவில் எனக்கு வேண்டும் பொருள் யாவையும் எடுத்துக் கரைப்படுத்துமுன் மற்றெந்த முயற்சியுஞ் செய்வதில்லையென்று எனக்குள் உறுதி செய்தேன். அப்புறம் நான் சற்றுவேளை என் சிந்தையை ஒருவழிப்படுத்தி, தெப்பத்தை உருவினிடத்திற்குத் திருப்பிக் கொண்டுபோவது யுத்தியா, அல்லவாவென்று தீர்க்காலோசனை செய்தவளவில் அது அசாத்தியமென்று கண்டதனால், கடல் நீர் வற்றும் சமயம் பார்த்து முன்போலக் கால் நடையாய்ப் போகத் தீர்மானித்து, உடுத்த வஸ்திரங்களில் இறுக்கமான உள்ளங்கியும், சணனூற் காற்சட்டையும், இலேசான பாதரட்சைகளுந் தவிர மற்றவைகளைக் களைந்து குடிசைக்குள் வைத்துவிட்டுப் போனேன்.

போய், தொங்கின கயிற்றைத் தாவிப்பிடித்து உருவிலேறி வேறொரு தெப்பங் கட்டினேன். முதல்முறை பட்ட பாடுகளை எண்ணி தெப்பத்தைக் கூடியவரையில் அடக்கமாய்க் கட்டி அதிக பளு ஏற்றாமல் மிதமாயேற்றினேன்.

மிதமாயினும், எனக் குதவியான வஸ்துக்கள் அநேகம் ஏற்றிக் கொண்டுவந்தேன். தச்சர் சாமான்கள் இருக்கு மிடத்தில் இருப்பாணி, மரவாணிப்பை இரண்டு மூன்று, பாரம் கிளப்பும் பாரிய யந்திரமொன்று, கைக்கோடரி இருபது இருபத்துநாலு, எனது உபயோகத்திற்கு இன்றியமையாத சக்கரச் சாணைக்கல் ஒன்று இவைகளையும், துப்பாக்கி உபகரணங்களில் கட்டப்பாரை இரண்டு மூன்று, துப்பாக்கிக் குண்டுப் பீப்பா இரண்டு மூன்று, துப்பாக்கி ஏழு, குருவிக்குழாய்த் துப்பாக்கி ஒன்று, கொஞ்சம் மருந்து, சிறு சன்னப் பை ஒன்று இவை எல்லாவற்றையுங் கண்டு எடுத்து வைத்தேன். காரீயப் பெருஞ்சுருள் ஒன்று அதிக பளுவாயிருந்ததனால், அதைக் கிளப்பித் தூக்கி மிதவையி லிறக்கி வைக்கக் கூடாதென்று விட்டுவிட்டேன்.

இந்த வஸ்துக்களன்றி, என் கண்ணுக் கெதிர்ப்பட்ட கடலோடிகள் வஸ்திரங்க ளனைத்தையும், ஆபத்திற் குதவும்படி வைத்திருந்த மேற்பாய் ஒன்றையும், தூங்கு மஞ்சம் ஒன்றையும், படுக்கும் மெத்தைகள் சிலவற்றையும் எடுத்துத் தெப்பத்திலேற்றி, இம்முறை இடையூறின்றி எனது சாமான் எல்லாவற்றையும் சுகமாய்க் கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

நான் உருவிற்குப் போயிருந்த சமயத்தில், கரையில் வைத்த போஜனபதார்த்தங்களை ஒருவேளை மிருகங்கள் கண்டு பட்சிக்குமென்று சிறிது அச்சமுற்றிருந்தும், கரைக்குப் போய்ப் பார்த்தபொழுது, அவைகளனைத்தும் எவரும் தீண்டாதிருந்தன. காட்டுப்பூனைக்குச் சமானமாகிய ஒரு விலங்கு மாத்திரம் அங்கிருந்த பெட்டி யொன்றில் உட்காந்திருந்தது. நான் நெருங்கிப் போகவும் அது சற்றுத்தூர மோடி, ஒரு நிலையாய் நின்று, அச்சமின்றி என் முகத்தை ஏறிட்டுப் பார்த்தது. என்னுடன் பழக அதற்கிச்சை யுண்டாயிருந்ததாக அதன் முகக்குறியாற் கண்டு, மிரட்டும் பாவனையாகத் துப்பாக்கியை யெடுத்து அதற் கிலக்காய்ப் பிடித்தேன். குறிப்பறியாததனால் அது பதறுமல் நின்றது. பிஸ்கிட் ரொட்டி ஒன்றை ஒடித்து அதற்கு எட்டும்படி ஒரு துண்டெறிந்தேன். என் வசமிருந்த ரொட்டி அதிகமல்ல; ஆனது

பற்றி நான் கைகொண்டமட்டும் அதற்குப் போடவில்லை. போட்ட துண்டைக் கண்டவுடன் கிட்டப்போய் மோந்து பார்த்து, தின்றபின் திருப்தியடைந்து பின்னும் போடுவே னென்று என் முகத்தைப் பார்த்தவண்ணமாய் நின்றது. இனிக் கொடுப்பதற் கிசையாததனால் நான் அதைப் பாராம லிருக்க அது போய்விட்டது.

இரண்டாம்முறை ஏற்றிவந்த சாமான்களைக் கரைசேர்த் தபின் வெடிமருந்துப் பீப்பாக்கள் பெரியவைகளானதனால், அவைகளை உடைத்து மருந்தைச் சிறிய மூட்டைகளாய்க் கட்டிக் கொண்டுபோம்படி எண்ணினேன்; எண்ணியும், முதலில் என் வசமிருந்த பாய்களினாலும், நான் தறித்த கொம்புகளினாலும் அடக்கமாய் ஒரு கூடாரஞ் சமைக்கத் தொடங்கினேன். சமைத்து முடிந்தபின், மழையிலாவது வெயிலிலாவது கெட்டுப்போகத்தக்க வஸ்துக்க ளனைத்தை யும் கூடாரத்துக்குட் கொண்டுபோய்ச் சேர்த்து, மனுஷரா யினும் விலங்குகளாயினும் சடிதியில் வந்து, என் கூடா ரத்தை நாசஞ்செய்யாதபடி கோட்டை மதில்போல, அதற்கு நான்குபுறத்திலும் வெறும் பெட்டிகளையும் பீப்பாக்களையும் பணிக்காப் அடுக்கினேன்.

இவ்வேலை முடிந்தபின், கூடாரத்து வாசலி னுட்புறத்திற் சில பலகைகள் வைத்தடைத்து, புறத்தில் வெறும் பெட்டி யொன்றை நிறுத்திவைத்து, தரையில் ஒரு மெத்தைப்பாயை விரித்து, தலைமாட்டில் இரண்டு கைத்துப்பாக்கிகளும், ஒரு பக்கத்திற் பெருந் துப்பாக்கி யொன்றும் வைத்துப் படுத்திருந் தேன். பகல் முழுதும் உழைத்து இளைப்புற்றிருந்ததனாலும் முதனாளிரவு கண்ணோடு கண் மூடாததனாலும் இராத்திரி நன்றாய் அயர்ந்து தூங்கினேன்.

மனுஷர் சகவாசமின்றி ஏகாந்தமாயிருந்த எவனாவது என்னைப்போல் இத்துணைத் திரளாய்ப் பண்டபதார்த்தங்கள் சேர்த்துவைத்ததை அறியேன். இன்னும் என் மனம் திருப் திப்படவில்லை. களந்தட்டி நிமிர்ந்துநின்ற கப்பல் காற்றடித் துக் கவிழ்ந்தாயினும் உடைந்தாயினும் அதிலிருந்த சரக் குகள் வியர்த்தமாய்க் கெட்டுப்போகுமுன், ஆம் வகை

யனைத்துஞ் செய்து, நான் அவைகளை எடுத்துக் கொண்டு வந்து சேர்க்கக் கருதிப் பிரதிதினமும் பெருக்கில்லாத சமயம் பார்த்துப் போய், அப்போதப்போது என் மனதிற் குவந்தவைகளை எடுத்துக் கொண்டுவந்தேன். முக்கியமாய் மூன்றும்முறை உருவின் வடங்களையும், சிறு கயிறுகளையும், முறுக்குக் கயிறுகளையும், பாய் கிழிந்தால் வெட்டித் தைக்கும்படி வைத்திருந்த இரட்டுத்துணிச் சுருளொன்றையும் எடுத்துக் கொண்டுவந்தேன். கப்பற் பாய்களில் ஒன்றையாவது நான் விடவில்லை. அப்போதப்போது நான் கொண்டுவரத்தக்க அளவு கிழித்துச் சுருட்டிக் கொண்டுவந்து சேர்த்தேன். கிழித்துப் பங்கப்படுத்தியதனுற் கெடுதி யொன்றுமில்லை; எனக்கு வேண்டுவது இரட்டுத்துணிதானே. உருக்குலையாமல் வைத்திருக்க நிமித்தமென்ன?

ஐந்து ஆறு பிரயாணம் போய் அகப்பட்ட பொருளனைத்தையுங் கரைப்படுத்தியபின், இனி எனக்குதவும் பொருள் உருவிலில்லையென்று பின்னுமொருமுறை சற்று உபேட்சையாய்ப்போனபொழுது, ஒரு பெரும்பீப்பா நிறைய ரொட்டியும், மூன்று பீப்பா சாராயமும், ஒரு பெட்டி சர்க்கரையும், ஒரு பீப்பா கோதுமைமாவும் இருந்தது கண்டு, மிகுந்த ஆச்சரியமும் சந்துஷ்டியு மடைந்தேன். பீப்பாவை உடைத்து ரொட்டியைப் பாய்த்துண்டுகளில் வைத்து, சிறு மூட்டைகளாய்க் கட்டி, எல்லாவற்றையும் பழுதின்றிப் பத்திரமாய்க் கரையிற் சேர்த்தேன்.

மற்றநாளும் ஒருமுறை போய்ப் பின்னும் உருவிலிருந்த வஸ்துகளில் எடுத்துக் கொண்டுபோகத் தக்கவைகளை எடுத்து வைத்தபின், கம்பாகங்களைக் கையாடிப் பெரிய கம்பாகத்தைப் பெயர்த்தெடுக்கத்தக்க துண்டுகளாகத் துணித்தேன். இவ்வாறு கரைசேர்க்கும்படி நான் துண்டுசெய்த பெரிய கம்பாகங்கள் இரண்டு, சிறியது ஒன்று. என் கைக்கெட்டிய இருப்பு யந்திரமுதலானவைக ளனைத்தையும் எடுத்து வைத்தேன். முற்பாய்மரக் கொம்பையும், பிற்பாய்மரக் கொம்பையும், பின்னுந் தறிக்கப் பக்குவமான எவ்விதக் கொம்புகளையுந் தறித்து, இடமகன்ற தெப்பமொன்று கட்டி, மேற்சொல்லிய பளுவான சாமான்கள் யாவையும் அதிலேற்றிக்

கொண்டு கரைக்குப் புறப்பட்டேன். இதுவரையில் நானடைந்த சௌபாக்கியம் இம்முறை என்னைவிட்டு நீங்கத் தொடங்கிற்று. இந்தத் தெப்பம் எளிதில் திருப்பவாயினும் செலுத்தவாயினும்கூடாதபடி மிகப்பெரிதாயும், அளவிற் கதிக பாரம் ஏறியதாயும் இருந்ததனால், நான் முன்பு சரக்குப் பறித்த சிறு கோடியிற் சேர்ந்தபொழுது, அது கவிழ்ந்து போயிற்று. சாமான்களனைத்தும் ஜலத்தில் அமிழ்ந்தின. கரை நெருங்கியிருந்ததனால் எனக்கு அபாயமில்லை. சாமான்களில் அநேகம் (முக்கியமாய் எனக்குப் பெரும்பாலும் உபயோகமாகத்தக்க இரும்பு) கெட்டுப்போயின. போயும், கடற்பெருக் கொழிந்தபின் கம்பாகத் துண்டுகளில் அநேகத்தையும், மிக வருந்திக் கொஞ்ச இரும்பையுந் தள்ளிக் கொண்டு போய்க் கரைசேர்த்தேன். இரும்பைத் தேடி யெடுப்பதற்குத் தண்ணீரில் மூழ்கி, மூச்சடக்கியிருந்ததனால் மிகவு மிளைப்புற்றேன்.

இதற்குப்பின் பிரதிதினமுங் கப்பலேறி அகப்பட்ட பொருள் எதையும் எடுத்துக் கொண்டுவந்தேன்.

மேற்சொல்லிய தீவின் கரையில் நான் தெய்வச்செயலாய்ச் சேர்ந்து, பதின்மூன்று தினமாவதற்குள் பதினொருமுறை கப்பலுக்குப் போய்வந்தேன். இப்பதினொருமுறையில் ஒருவன் தனிமையாய் எடுத்துவரத்தக்க பொருளெவ்வளவோ, அவ்வளவு மெடுத்துக் கரைப்படுத்தினேன். அடித்துவிட்ட காற்றுப் பின்னும் சிலநாள்வரையிற் கிளம்பாதிருக்கச் சம்பவித்தால், சரக்குகளைமாத்திரமல்ல, உரு முழுதையும் உறுப்புறுப்பாய்ப் பிரித்துக் கொண்டுபோய்க் கரையிற் சேர்க்கமாட்டுவேனென்று உறுதியாய் நம்புகிறேன். பன்னிரண்டாம்முறை கப்பலுக்குப் போய்வர எத்தனப்படுகையில், தூங்கின காற்றுக் கிளம்பிற்று. அதை நான் விஷயமாய் எண்ணவில்லை. பெருக்கில்லாத சமயம்பார்த்துக் கப்பலுக்குப் போய், அதனறையிற் சேர்ந்து, அங்குள்ள உபயோகமான பொருளனைத்தும் முன்னடி எடுத்துக்கொண்டு போய்விட்டதனால், இனி உதவக்கூடிய பொருள் எதுவுமில்லையென்று எண்ணங்கொண்டிருக்கையில், பூட்டத் திறக்கக்கூடிய ஒரு பெட்டியினறைக்குட் சவரகன் கத்திகள்

இரண்டு மூன்றும், பெருங் கத்தரிக்கோல் ஒன்றும், நாணய மான கத்திகள் முட்கள் பத்துப் பன்னிரண்டும் இருந்தது கண்டேன். மற்றோரறைக்குள் முந்நூற்றறுபது ரூபாய் விலை யுள்ள ஐரோப்பிய நாணயமும் பிரேஜிலிய நாணயமும் வகைக் குக் கொஞ்சமும், எட்டுமாற்றுத் தங்க நாணயங்கள் சில வும், பொன் வெள்ளி சிறிதுமிருந்தன.

பணத்தைக் கண்டவுடன் எனக்குக் குறு நகை யுண்டா யிற்று. நான் அதைப் பார்த்து: "ஆ, திரணமே! நீ எதற்கு தவுவாய்? எனக்கு உன்னாலாகத்தக்க பயன் ஒன்றுமில்லை; உன்னைக் குனிந்தெடுத்துப் பார்ப்பினும் கை வலிப்பதொழி யச் சிறிதும் பயனில்லை. அக்கத்திகளில் ஒன்றுக்கு, குப்பலா யிருக்கின்ற இப்பணமுழுதும் ஈடாகாது. உன்னைத்தொட்டு எனக்குபயோகம் ஒன்றுமில்லை; நீ இருக்குமிடத்தில் இன்னு மிருந்து பிராணவுதவி பெறுதற்கு அபாத்திரமான ஜந்துவைப் போலப் பாதாளத்தில் முழுகிப்போ" என்பதாக உரத்த சத்த மாய்ச் சொன்னேன். பிறகு எடுத்துக்கொண்டுபோய் வைத் திருந்தால் எதற்காயினு முதவுமென்று என் எண்ணத்திற் பட்டதனால் நான் அப்பணத்தை யெடுத்து, இரட்டுத்துணிக் குள் வைத்து அடக்கிச் சுருட்டி முடிந்தபின், பின்னும் ஒரு தெப்பங்கட்ட நினைத்து எத்தனப்படுகையில், ஆகாயத்தில் மப்பு மந்தார முண்டாயிற்று. கார்மேகம் நெருங்கக் கடுங் காற்றடித்தது. கால்மணி நேரமாகுமுன் கரையினின்று கடல்முகமாயடித்த புயல் உரத்தது. காற்றுக் கடலுக் கெதிர் முகமாய் அடிப்பதனால், தெப்பங்கட்டி ஆம்பயனில்லை, நீர்ப்பெருக்கு எடுக்குமுன் நான் கரைசேரவேண்டும். இப் பொழுதே சேராவிடில், அப்புறம் சேரலாகுமென்று சொப் பனத்திலும் எண்ணக்கூடாதென நினைத்து, கடலிலிறங்கி உருநின்ற விடத்திற்கும் மணற்குன்றுக்கு மிடையிலுள்ள கால்வாய் மார்க்கமாய் மிக வருந்தி நீந்திப்போனேன். நான் வைத்திருந்த சாமான்களின் பளுவினாலும், காற்று உரக்க உரக்க அலை பொங்கியதனாலும் எனக்கு இத்தனை வருத்த முண்டாயிற்று. பெருக்கேறுமுன் பிரசண்டமாருத மடித்தது.

நான் ஒருபடி கரையேறி, எனது சிறிய கூடாரத்திற் போய்ச்சேர்ந்தேன். எனக்குள்ள சொத்துக்கள் சமஸ்தமும்

அதிற் பழுதின்றி யிருந்தன. இராமுழுதும் கடும்புயல் அடித் தவண்ணமாயிருந்தது. மற்றநாட் காலையிற் கடலில் உருவைக் காணவில்லை. எனக்குச் சற்றுநேரம் அதைப்பற்றிப் பிரமை யுண்டாயிற்று. உண்டாயும் ஆடங்கமின்றி உருவி லிருந்த உபயோகமான எவ்விதப் பொருளையும் துரிதமா யெடுத்துக்கொண்டுவந்து சேர்த்தேனே. இனி அவகாசமிருப் பினும், எனக்குதவியான பொருள் ஒன்றையும் நான் விட்டு விடவில்லையே யென்றெண்ணி, என்னுள்ளங் குளிரப் பிரமை தெளிந்து திருப்தியடைந்தேன்.

அதன்மேல் நான் கப்பலைக் குறித்தாவது, அதிலுள்ள எவ் விதப் பொருளைக் குறித்தாவது சிந்தனைகொள்ளவில்லை. அது உடைந்தபின் அலையொதுக்கும் சரக்கு ஏதாயினும் கரை யடைந்நாற் பார்க்கலாமென் றிருந்தேன். உரு உடைந்த துண்டுப் பலகைகள் அநேகம் நான் எண்ணியவண்ணம் கரை சேர்ந்தன. சேர்ந்தும், அவற்றால் எனக் குதவியில்லை.

இத்தீவில் வேடரைக் கண்டால் அவர்களுக்கும் துஷ்ட வன விலங்குகள் சஞ்சரித்தால் அவைகளுக்கும் தப்பிப் பிழைக்க வகைசெய்யும் விசாரமொன்றே அன்றுமுதல் என் னுள்ளத்திற் குடிகொண்டது. இதன்பொருட்டு நிலத்தை அகழ்ந்து குகை யுண்டாக்கி அதிற் சஞ்சரிப்பதோ, கூடார மடித்து அதில் வசிப்பதோ எது உத்தமமென்று தீர்க்காலோ சனை செய்தபின் இவ்விருவித முயற்சிகளையும் நிறைவேற்று வது ஆவசியகமென்று கண்டு செய்யத் தொடங்கினேன். அவற்றின் தன்மை வரலாறுகளைச் சுருக்கித் தெரிவிக்கிறேன்.

நான் இறங்கின இடம் கடற்கரையடுத்த சதுப்பான பள் ளத்தரை. அது சௌக்கியத்திற் கனுகூலப்படாது. அன்றி யும் சமீபத்திற் சுத்த ஜலமில்லை. ஆதலால் அவ்விடம் குடி யிருக்க வளமானதல்லவென்று கண்டு, சுகவிர்த்திக்குரிய வச தியான ஓரிடத்தைத் தேடிக் காணத் தீர்மானித்தேன்.

பின் சொல்லப்படும் நாலு இலட்சணங்களும் பொருந்திய ஸ்தலம் என் கண்ணுக்குத் தட்டுப்படுமானால் அதுவே உத் தம வாசஸ்தானமாய்க் கொள்ளத்தகுமென் றெண்ணினேன். 1—வது. சுகவளம், சுத்த ஜலவளம்; 2—வது. வெயில் ஒதுக்

கான நிழல்வளம்; 3–வது. துஷ்ட மனுஷராலாவது, வன விலங்குகளாலாவது அபாய முண்டாகாதிருக்கும்படியான அரண்வளம்; 4–வது. திருவுள்ளச்செயல் உதவியால் எந்த உருவாயினும் இத்தீவின் கரையை யடுத்தோடுமானுல், நான் அதிலேறி இச்சிறையிருப்பினின்று நீங்கும்பொருட்டு அது என் கண்ணுக்குத் தோன்றும்படியான வெளிவளம். எப்பொழுதாயினும் எனக்கு மீட்சி யுண்டாமென்று நாளது வரையில் எண்ணமிட்டிருந்தேன். அவ்வெண்ணம் வியர்த்தமென்று தள்ளுவதற்கு என் மன மிசையவில்லை.

வாசஞ்செய்வதற்கு வளமான விடம்பார்த்துப் போகும் பொழுது, ஒரு உயர்ந்த மலைச்சாரலிற் சிறிய மைதானமொன் றிருந்தது. அம்மலை சாய்ந்த வீட்டுக்கூரைக் கொப்பாகச் செங்குத்தாய்ச் சரிந்திருந்தது. அதனுல், மலைச்சிகரத்தினின்று எவராயினும், எவ்வித விலங்காயினும் மைதானத்திற்கு இறங்கி வருவதற்கு இசையாதிருந்தது. மைதானத்திற்கு எதிரான மலைப்பக்கத்தில் குகைவாயில்போலச் சற்றுக் குழிந்த ஓர் இடம் இருந்தது. அது குகையேயல்ல; மலைக்குட் செல்லும் மார்க்கமுமல்ல.

இம்மலைக்குழாய்க்கு எதிரிலுள்ள பசும்புல்லடர்ந்த மைதானத்திற் கூடாரமடித்துக் குடியிருக்கத் தீர்மானித்தேன். இதன் அகலம் முன்பின் நூறு கஜம், நீளம் இருநூறு. மேற்சொல்லிய குகைவாயிலுக் கெதிரேயுள்ள பசுமையான இச்சமபூமி மூன்று பக்கத்திலும் வரவரச் சாய்ந்து, கடற்கரையை அடுத்த பள்ளத்தரையிற் பொருந்தியிருந்தது. மைதானம் மலையின் வடமேற்குச் சாரலிலிருந்ததனுல், சூரியன் சற்றுத் தென்றிசையை நாடி மேற்றிசையில் வருமளவும், அது வெயிலுக்கு ஒதுங்கியிருந்தது. மேற்குறித்த திசையிற் சேரும்பொழுதே அத்தேசங்களிற் சூரியன் அஸ்தமிப்பது வழக்கம்.

கூடாரம் அடிக்குமுன் மலைக்குழாய்க் கெதிரில் மண்டலார்த்த வடிவாய்த் தரையிற் குறிப்பிட்டேன். அதன் விட்டார்த்தத்தின் நீளம் மலை அடியினின்று பத்துக்கஜம். ஆகவே, ஆதியோடந்தமாய் விட்டத்தின் நீளம் இருபது கஜம்.

பாதி வட்டத்தின் வடிவாய்க் குறிப்பிட்ட எல்லையில் ஒன்றுக்கொன்று ஆறு அங்குல தூரத்திற் பலமான இரண்டு நிரைக் கொம்புகளைத் தரையில் நாட்டி உரப்பித்தேன். அக் கொம்புகள் தரைக்குமேல் ஐந்தரை அடி மட்டத்திற்கு யர்ந்து, முனையிற் கூர்மையாயிருந்தன.

பிற்பாடு, துண்டு துண்டாய் உருவில் தறித்துவைத்த அமார்களை மேற்சொல்லிய இரண்டு நிரைக் கொம்புகளி னிடையில் ஒன்றின்மேலொன்று கொம்பு முனை மட்டத்திற்கு நெருக்கி அடுக்கி, உள் நிரைக் கொம்புகளுக்குறுதியாகத் தரைக்குமேல் இரண்டரை அடி உயரத்தில் தூண் தாங்கும் தறிகள்போன்ற வேறு கொம்புகளைச் சார்பாய் வைத்து முட் டுக்கொடுத்தேன். நானடைத்த இவ்வேலிக்கு அதிகபலம் ஏறிற்று. மனுஷராவது விலங்குகளாவது அதை முறித்துக் கொண்டு உட்செல்வதும் அதைத் தாண்டி வருவதும் அசாத் தியமே. இவ்வேலை முடிப்பதற்கு வெகுநேரமட்டுங் கஷ்டப் பட்டுழைத்தேன். முக்கியமாய்க் காட்டுக்கொம்பு வெட்டிச் சுமந்துவந்து தரையில் நாட்டுவதற்குச்சென்ற காலமும், நான் பட்ட வருத்தமும் அதிகம்.

இவ்வடைப்புக்குட் செல்வதற்கு நான் வாசல் வைக்க வில்லை. குறுகிய ஏணி ஒன்று அடைப்பின் வெளிப்புறத் தில் வேலியிற் சார்த்தி ஏறி உட்சென்றேன். அடைப்புக் குள்ளிருக்கும்பொழுது, நான் ஏணியை யெடுத்து உள்ளே வைத்துக்கொள்வது வழக்கம். இவ்வாறு எவரும் காணுத படி அரணுன கோட்டைக்குச் சமானமாகிய அடைப்புக் குள் அச்சமின்றி இருந்ததனுல், இராக்காலத்தில் எனக் கபாயம் ஏதுமில்லையென்று கிலேசமற்றுத் தூங்கினேன். கஷ்டப்பட்டு இந்த உபாயம் செய்து நிறைவேற்றுதிருப்பேனு கில், கண்ணிமைப்பொழுதாயினும் எனக்கு உறக்கம் வருமா? இவ்வளவு சாவதானமாயிருப்பதற்கு நிமித்தமில்லை. எனக்கு அபாயம் செய்யத்தக்க மிலேச்சராவது, வனவிலங்குகளா வது அத்தீவிலில்லையென்று காலக்கிரமத்திலறிந்தேன்.

இந்தக் கோட்டைக்குள் மேற்சொல்லிய போஜன பதார்த் தங்கள், படைக்கலங்கள், தொழிற்கருவிகள், உபகரணங் கள் முதலிய என் சொத்துகளனைத்தையும் கொண்டுபோய்ச்

சேர்த்தேன். எனது தீவில் வருடந்தோறும் நாலைந்து மாச வரையில் விடாமழை பெய்வது வழக்கம். ஆனதுபற்றி நான் கோட்டைக்குள் அகத்திலொன்றும் புறத்திலொன்றுமாக இரண்டு கூடாரங்களை அடித்து, புறக்கூடாரத்திற்கு உருவி னின்று கொண்டுவந்த கீல் பூசிய கித்தானால் உறையிட்டேன். இவ்விரட்டைக் கூடாரம் மழைக்கு ஒதுங்கியிருப்பதற்கு வளமான வாசஸ்தானமாயிற்று.

நான் கப்பலிலிருந்து எடுத்துவந்த மெத்தையில் கொஞ் சக்காலவரையிற் படுக்கவில்லை. உப மாலுமியுடைய தூங்கு மஞ்சமொன்று கொண்டுவந்ததாக முன் குறிப்பித்தேனே; நாணயமான அம்மஞ்சத்தில் படுத்துத் தூங்கினேன்.

இந்தக் கூடாரத்திற்குள் எனது போஜன திரவியங்களை யும், மழையில் நனைந்து பழுதாகத்தக்க சமஸ்த வஸ்துக்களை யும் கொண்டுபோய் வளைத்து அடுக்கிப் பத்திரப்படுத்தின பின், அவைகளைக் கொண்டுவரும்படி திறந்துவிட்ட வாசலை அடைத்து, மேற்சொல்லியவாறு ஏணி வைத்தேறிப் போக்கு வரவு செய்தேன்.

கோட்டைக்குப் புறத்திலுள்ள வேலைகள் முடிந்தபின், மலையைக் குடைந்து அகழ்ந்த மண்ணையும், கல்லையும் எனது கூடாரத்தலத்தின் மார்க்கமாய் எடுத்துக் கொண்டுபோய் மதிலுட் போட்டு, ஒன்றரை அடி உயரத்திற்கு ஒரு மேடை கட்டினேன். கூடாரத்தின் பிற்புறத்தில் மலையிலகழ்ந்த குகை எனது வீட்டிற்கு நிலவறையாயிற்று.

இவ்வேலைகளெல்லாம் நிறைவேறுதற்கு வெகு நாட்சென் றது; மிக வருத்தப்பட்டேன். இதுநிற்க, இடையிற் சம்ப வித்து, எனக்குக் கிலேசம் வருவித்த சில சங்கதிகளைச் சொல் லுகிறேன். கூடாரமடிப்பதற்கும் குகை அகழ்வதற்கும் யுத் திசெய்து முடிந்தபின், மேகங் கறுத்து நெருங்கிச் சோனு மாரியாக வருஷித்து, சடிதியிற் பளிச்சென்று மின்னியது. அதற்குப்பின் மிகுந்த இடிமுழக்கமுண்டாயிற்று. மேகம் மின்னியதைப்பற்றி எனக்கு அத்தனை அச்சமில்லை. வெடி மருந்தின் ஞாபகம் மின்னைப்போல விரைந்து என் னுள்ளத்தி லுண்டாகவே அச்சமுற்றறிவழிந்தேன். என்னைப் பிராணு

பாயமின்றிக் காக்கும் உபகரணமும், ஆகாரம் சேகரிப்பதற்குச் சாதனமுமாகிய என் மருந்து முழுதும் ஒரு முறையில் நாசமாய்ப் போகுமேயென நினைத்தவுடன் என் மனம் மயங்கிச் சோர்ந்தது. மருந்தில் ஒளிபட்டு நெருப்புப்பற்றச் சம்பவித்தால், ஒரு நொடிக்குள் நான் எரிந்து சாம்பலாவதற்கு ஐயமில்லை. இப்படி இருந்தும், மருந்தைப்பற்றி எனக்குண்டான கவலையில் லக்ஷத்தில் ஒரு பங்காவது எனக்கு வரும் பிராணபாயத்தைக் குறித்துண்டாகவில்லை.

நான் இவ்வாறு கெடிகலங்கியிருந்ததனால் மழை விட்டபின் கட்டுவேலைகள் அனைத்தையும் நிறுத்தி, பீப்பாவிற்குள்ளிருந்த மருந்தைச் சிறிது சிறிதாய்ச் சிப்பஞ்செய்து வைக்கும்படி தாமதமின்றிப் பை தைக்கவும் பெட்டி செய்யவும் தொடங்கினேன். அவை முடிந்தபின், அப்பைகளிலும் பெட்டிகளிலும் மருந்தை நிறைத்து, அவைகளை ஒன்றுக்கொன்று தூரமாய் வைத்தேன். ஏதாயினும் இடையூறு சம்பவித்தால் மருந்து முழுதும் எரிந்துபோகாதிருப்பதற்கும் ஒரு சிப்பத்தில் பற்றும் நெருப்பு மற்றவைகளில் தாவாதிருப்பதற்கும் இந்த உபாயம் செய்தேன். இவ்வேலை முடிய இரண்டு வாரம் சென்றது. மருந்து இருத்தல் மொத்தம் சுமார் இருநூற்று நாற்பது. அதைப் பிரித்து நூறு சிப்பங்களாய்க் கட்டி வைத்தேன். நனைந்த பீப்பாவினால் அபாயமுண்டாகாதென்றெண்ணி, சமையல் அறையாகப் பாவித்த புதுக்குகைக்குள் அதை எடுத்து வைத்தேன். மற்றவைகளை மலையிலுள்ள சிறு குழிகளில் ஈரமேறாத விடம் பார்த்து, அங்கும் இங்கும் வைத்துப் பத்திரப்படுத்தினேன்.

இவ்வேலை நடந்தேறுங்காலத்தில் பிரதிதினமும் அதமம் ஒரு முறையாவது காலக்ஷேபத்திற்காகவும் ஆகாரத்திற்கேற்ற ஜந்துக்களைக் கண்டால் சுட்டுக் கொன்று எடுத்து வருதற்காகவும் துப்பாக்கிகொண்டு வெளிப்பட்டேன். அத்தீவின் விளைபொருள் வகை விலங்குவகை முதலிய இன்னின்னவையென்று விவரமறியும்பொருட்டுக் கூடியவளாயில் நெடுந்தூரம் செல்லாமல், சமீபத்தி லுலாவினேன். முதல் முறை நான் வெளிப்பட்டவுடன் வெள்ளாடுகளைக் கண்டு

சந்துஷ்டியானேன்; ஆயும், அவைகள் அதிக மிரட்சியும், சூதும், ஓட்டத்தில் விரைவுமுள்ளவைகளாயிருந்ததனால், அவைகளை அகப்படுத்துவது கஷ்டமாயிருந்தது. எப்படி யிருந்தும், என் மனம் தளரவில்லை. ஓடிப் பிடித்தற்கு இசை யாதாயினும், அப்போதப்போது துப்பாக்கியினாற் சுட்டுக் கொல்லுதற் கிசையுமென்று உறுதியா யெண்ணினேன். நான் எண்ணியவாறு சில தினங்களில் அனுகூலித்தது. அவ்வெள் ளாடுகள் சஞ்சரிக்கு மிடக்குறிப்பறிந்தபின், நான் பின் வருமாறு பதிவிருந்து சுட்டு விழுத்தினேன். அவைகள் மலை யில் நிற்கும்பொழுது, பள்ளத்தரையில் என்னைக் கண்டால், கண்ட க்ஷணமே கெடிகலங்கி விரைந்தோடும். பள்ளத்தரை யிற் புல் மேயும்பொழுது, மலையில் நான் நின்றால், என்னைப் பாராமல் தங்கள்பாட்டில் மேய்ந்துகொண்டு நிற்கும். இந்த இயற்கையை நான் நாளாவர்த்தியில் கண்டறிந்ததனால், திருஷ்டி ஸ்தானபேதத்தினாலே அவைகளுக்குக் கீழ்ப்பார்வை யன்றி, மேற்பார்வை அத்தனை தெளிவாயில்லையென்று அனு மிதிசெய்தேன். ஆனதுபற்றி நான் முதலில் மலை ஏறி, பள் ளத்தரையிற் புல் மேயும் ஆடுகளைப் பெரும்பாலும் இலக்குத் தப்பாமல் சுட்டு விழுத்தினேன். ஆதியில் நான் சுட்டது ஒரு பெண்ணாடு. அச்சமயத்தில் அது தன் சிறு குட்டிக்குப் பால் கொடுத்து நின்றது கண்டு, என்னுள்ளம் பதைத்தது. தாயாடு விழவும், குட்டி அதன் பக்கத்தில் மரம்போல விறைத்து நின் றது. நான் இறங்கிப்போய் விழுந்த ஆட்டை எடுத்துத் தோளிலேற்றிச் சுமந்துகொண்டு வீட்டுக்குப் போக, குட்டி என்னைத் தொடர்ந்தது. அது கண்டு, தாயாட்டை மதில டைப்புக்குட் போட்டுவிட்டு, குட்டியை வளர்த்து வசப்ப டுத்த நினைத்து, எடுத்துக்கொண்டு ஏணி வழியாய் மதிலேறி உட்சென்றேன். பின்பு நான் கொடுத்த இரை யொன்றும் தின்னாமல் அது வரவர மெலிவுற்றதனால், நான் அதை அடித் துப் புசித்தேன். தாய் குட்டி இவ்விரண்டின் மாமிசமும் நாட்பட எனக்கு ஆகாரத்திற் குதவின. மாமிசத்தையாவது ரொட்டி முதலிய போஜன திரவியங்களையாவது கூடியவரை யில் நான் மிதமாய் உண்டதனால், நெடுநாளளவும் ஆகாரத் திற்குக் கஷ்டப்படாதிருந்தேன்.

குடியிருக்க வசதியான கட்டடம் சமைத்தபின், சமையல் வீட்டுக்கும், அடுப்பெரிக்க விறகுக்கும் ஏதாயினு முபாயம் செய்வது ஆவசியகமாயிருந்தது; அதற்கு நான் செய்த உபாய வரலாறுகளையும், என் குகையைப் பின்னும் விசாலமாய் அகழ்ந்த விவரத்தையும், வேறு ஏதேது வசதிகள் உண்டாக்கினேனோ அவற்றையும் அததற்குரிய விடத்தில் விசிதமாய்ச் சொல்வேன். இப்பொழுது எனது ஸ்திதியைக் குறித்தும், எனக்குண்டான இல்வாழ்க்கைக்குரிய திரளான அபிப்பிராயங்களைக்குறித்தும் சிறிது சொல்வேன்.

எனது ஸ்திதியைக்குறித்து நினைக்க நினைக்க என் மனந் தளர்ந்து, எனக்கொன்றும் தோன்றவில்லை. என்னை இந்தத் தீவில் எவராவது கொண்டுவந்து விட்டவரல்லவே. நான் ஒரு தேசத்திற்கென்று கப்பலேறிப் போக, கடும்புயலடித்து, கனவிலும் நினையாத இத்தீவில் என்னை ஒதுக்கிவிட்டது. மனுஷர் சாதாரணமாய் வர்த்தகத்தின்பொருட்டு யாத்திரை போகும் மார்க்கத்திற்கு இது மிகத் தூரமான தீவு. ஆதலின் மனுஷர் சஞ்சாரமில்லாத இவ்விடத்தில் வாழ்நாளறுதிவரையில் நான் அகதியாயிருக்கவேண்டுமென்பது தேவ சங்கற்பந் தானென்று என் சிந்தையிற் பரிஷ்காரமாய்த் தோன்றிற்று. இவ்விதச் சிந்தனைகளுண்டாகும்பொழுது, எனது இருகண்களினின்று பெருகிய கண்ணீர் வெள்ளம் கொஞ்சமல்ல. கடவுள் மனுஷரை இப்படிச் சிறுமைப்படுத்தி, வருத்தி, திக்கற்றவர்களாக்கி, கலங்கவைப்பதற்கு முகாந்தரமென்ன? இவ்வித நிர்ப்பந்தத்திற்குட்பட்டவர்கள் இதுவே தமக்குச் சுகமென்றெண்ணி, கடவுளுக்குத் துதிசெலுத்துவதற்கு அவர்கள் யுத்தி புத்தி இசைந்துவருமா வென்பதாகச் சிறுபான்மை எனக்குள் விசாரணை யுண்டாயிற்று.

ஆனாலும் இச்சிந்தனைகளைச் சடிதியில் நிறுத்தி, இவை தகாதவைகளென் றென்னைக் கண்டிக்கும் ஏதாயினும் ஒரு நினைவுண்டாவதெப்பொழுது மியற்கையே. முக்கியமாய் ஒருநாள் துப்பாக்கி கொண்டு கடற்கரை மார்க்கமாய்ப் போகையில், எனது தற்கால நிர்வாக விஷயத்தைக்குறித்து உளமழுந்தச் சிந்தித்தேன். அச்சமயத்தில் எனக்குள் விவேகம் பிறந்து, மேலே நான் வெளியிட்ட நியாயத்தைப் பின்

வருமாறு ஆட்சேபித்தது:— "நீ கதியற்றிருப்பது வாஸ்தவந் தான்; ஒன்றை நினைத்துப்பார்; உன்னுடன் கப்பலேறினவர் கள் எங்கே? நீங்கள் பதினொருபெயர் அல்லவா கப்பலேறி னீர்கள்? பத்துப்பெயரும் எங்கே? அவர்கள் தப்பிப்பிழைக் காதிருக்க, நீ இறந்துபோகாத முகாந்தரமென்ன? நீமாத்திரம் பிழைத்திருக்க இடம்பெற்றதேன்? இத்தீவிற் பிழைத்திருப் பதா, இதோ சமுத்திரத்தில் முழுகி இறந்து போவதா, எது நலம்?" உடனே நான் சமுத்திரத்தை ஏறிட்டுப் பார்த்தேன். எவனும் தான் அனுபவிக்குந் தீமைகளை எண்ணும்பொழுது, அவற்றிலுள்ள நன்மைகளையும், அவற்றினுங் கொடிய தீமை களையுங்கூடச் சிந்திக்கவேண்டும்.

பின்னும் எனக்குள்ளே பிறந்த சிந்தனைகளாவன:— எனக்கு அன்னவஸ்திராதிகளுக்குக் குறையொன்றுமில்லையே. மணற்குன்று தட்டிப் பொறுத்த கப்பல் நிலைபெயர்ந்து கரை நெருங்கி வந்து நிற்க, அதிலுள்ள சரக்குகளனைத்தையும் எடுத்து என் சுவாதீனத்தில் வைத்திருக்க இடம்பெற்றேனே. என்னைப்போல் இந்தப் பேறடைந்தவர் லக்ஷத்திற்கு ஒருவ ராயினுமுண்டா? நல்லது, கப்பல் அற்புதமாய்க் கரைக்குச் சமீபத்தில் வந்து நிற்காதிருந்தால், எனது கதி என்னவாகும்? முதலில் நான் கரையடைந்தபொழுது, அன்ன வஸ்திராதி களாயினும், அவைகளைச் சேகரித்தற்குரிய சாதனங்களாயி னும் ஒரு சிறிது மில்லாதிருந்தேனே. இதுவரையில் அவை கள் எனக்குக் கிட்டாதிருக்கச் சம்பவித்தால், எவ்வளவு நிர்ப்பந்தப்படுவேன்? பின்பு நான் உரத்துக் கூவி "துப்பாக்கி வெடிமருந்து குண்டு முதலிய உபகரணங்கள், தொழிற்கரு விகள், உடுக்க வஸ்திரம், படுக்க மெத்தை, வசிக்கக் கூடா ரம், வேறு வித ஒதுக்கிடம் ஒன்றுமில்லாதிருந்தால், நான் என்ன செய்வேன்?" என்று பரிதபித்துச் சொன்னேன். இப்பொழுதோ இவைகள் அனைத்தும் என் செலவிற்கு வேண்டுமட்டும் வைத்திருக்கிறேன். குண்டுமருந்து முதலா னவைகள் செலவழிந்துபோனாலும், துப்பாக்கி யில்லாமல் எளிதில் ஜீவனம்பண்ணத்தக்க வகை அறிந்திருக்கிறேன். அதனால், ஆயுள்பரியந்தம் அன்னவஸ்திராதிகளுக்குக் கஷ் டப்படாதிருக்கலாமே. குண்டு மருந்து முதலியவை செல

வழிந்தபின் மாத்திரமல்ல, சரீரபலம் குன்றிச் சௌக்கியத் தாழ்வடைந்தபின்னும் உண்டாகும் ஆபத்துகளை நிவிர்த்திக்கும் வகையும், போஜனாதிகள் சேகரிக்கும் வகையும் இன்னவை இனையவையென்று ஆரம்பம் தொடங்கித் தீர்க்காலோசனை செய்து, எனக்குள் உறுதி பண்ணியிருந்தேன்.

கூடாரத்தில் வைத்திருந்த வெடிமருந்து இடிவிழுந் தெரிந்துபோகுமென்று நான் எவ்வளவு மெண்ணியிருக்க வில்லை. அதனாலேதான் மேகம் மின்னி முழங்கியபொழுது, மேற்சொல்லியவாறு வெடிமருந்தைக்குறித்து எனக்கு மிகுந்த திகிலும் பிரமையுமுண்டாயின.

இனிப் பூலோகத்தில் இதற்குமுன் எவரும் கேட்டிரா வண்ணம் இத்தீவில் ஏகாந்தமாய் நாட்கழித்த எனது துயரமான சங்கதிகளை ஆதியோடந்தமாய்க் கிரமப்படுத்திச் சொல்வேன். கோரமான இத்தீவில் மேற்சொல்லியவாறு நான் இறங்கியது என் கணக்குப்படி செப்டெம்பர்ீ 30௳. அக்காலத்தில் ஆதித்தன் விசுபதத்தில் நிற்கையால், மத்தியானத்தில் அதைக் கொஞ்சங்குறைய உச்சிக்கு நேரே கண்டேன். நானிருந்த இடக்குறிப்பு நிரட்சரேகைக்கு வடக்கே ஒன்பது பாகை, இருபத்திரண்டு கலை.

தீவிற்சேர்ந்து பத்துப் பன்னிரண்டுநாட்கள் சென்றபின், எழுதக் காகிதமும், இறகும், மையும் இல்லாதிருக்குங்காலத்தில் காலக்கணக்குப் பிசகுமென்றும், ஓய்வுநாள் இது, உழைத்தற்குரிய நாட்கள் இவை என்னும் பகுத்தறிவை மறந்துபோவேனென்றுமெண்ணி, இதற்கோருபாயஞ் செய்தேன். சதுரவடிவான பெருந் தூண் ஒன்றில் "1659-௵ செப்டெம்பர்ீ 30௳ நான் இக்கரை சேர்ந்தேன்" என்னும் வாக்கியத்தை எனது கத்தியால் அட்சரசுத்தியாய் விளக்கமாய் வரைந்து, அத்தூணைப் பெருஞ் சிலுவை ரூபமாயிசைத்துக் கரையில் நான் முதலிலிறங்கின விடத்தில் நாட்டினேன். இச்சதுர ஸ்தம்பத்தின் பக்கங்களில் அன்றன்று ஒவ்வொரு புள்ளி வரைந்து, தினக்கணக்கு வைத்தேன். ஏழாந் தினமாகிய ஓய்வுநாளைக் குறிக்கும் புள்ளியை மற்றவைகளின் நீளத்திற்கு இரட்டியாகவும், பிரதி மாச

வாரம்ப தினத்தின் புள்ளியை ஓய்வுநாட் குறிப்புப் புள்ளி யின் நீளத்திற்கு இரட்டியாகவும் வரைந்தேன். இந்தப் புள்ளிக்குறிப்பே எனக்கு வாரம், மாசம், வருஷமுதலிய காலவிவரமுணர்த்தும் பஞ்சாங்கமாயிற்று.

அன்றியும், மேற்சொல்லியவாறு நான் பலமுறை போய்க் கப்பலிற் கண்டு எடுத்துவந்து கரைசேர்த்த திரளான வஸ் துக்களில் முக்கியமானவைகளைமாத்திரம் பெயர் விவரங் கண்டு முன்னே குறிப்பித்தேனே. குறிப்பிக்கப்படாதவற் றுட் சில எனக்கு மிகவு முபயோகப்பட்டன. அவை எவை யென்று இவ்விடத்திற் சொல்லுகிறேன். இறகு மை காகி தம், மாலுமி வசத்திலும் உப மாலுமியிடத்திலும் பீரங்கி உத்தியோகஸ்தன் விசாரணைக்குள்ளும் தச்சன் வசத்திலு மிருந்த சிப்பங்கள் சில, மூன்று நாலு கவராசங்கள், கணி தக் கருவிகள் சில, சூரிய கடிகாரங்கள், தூரதிருஷ்டிக் கண்ணுடிகள், கடலோடிகள் படம், மாலுமி வித்தியா புத் தகங்கள் இவை எல்லாவற்றையும் பகுப்பின்றி ஒரு குப்ப லாய்ப் போட்டுவைத்திருந்தேன். அன்றியும், இங்கிலாந்தி னின்று என் பெயருக்கு வந்த சரக்கு வகைக்குள் நாணய மான கிறிஸ்துவேத புத்தகங்கள் மூன்றிருந்தன. அவை களையும், போர்த்துகேய புத்தகங்கள் சிலவற்றையும், பின் னும் சில புத்தகங்களையும் எனது சாமான் மூட்டையிற் கட்டி வைத்திருந்தேன். போர்த்துகேய புத்தகங்களில் இரண்டு மூன்று ரோமான் மதத்தர்களின் ஜெபப்புத்தகங்களாயிருந் தன. இம்மூட்டையும் எனக்ககப்பட்டது. ஒன்றுசொல்ல மறந்துபோனேன். எங்கள் உருவில் நாயொன்றும் பூனைகள் இரண்டு மிருந்தன. அறிவுள்ள அந்த ஜந்துகளின் சரித் திரத்தைச் சமயத்திற் சொல்வேன். பூனைகள் இரண்டை யும் நான் உருவிலிருந்து பிடித்துக் கொண்டுபோனேன். நாயைக் கொண்டுபோகவில்லை. முதல் முறை நான் உருவி லிருந்து சரக்கெடுத்துக்கொண்டு கரைப்பட்ட மற்றநாள் அது கடலில் தானுகப் பாய்ந்து நீந்திக் கரைக்கு வந்து பல வருஷமட்டும் எனக்குண்மையான தொண்டனுயிருந் தது. அதனுலாகத்தக்க உதவி ஒன்றும் அது எனக்குச் செய்யாதிருக்கவில்லை. அது என்னுடன் பேசாதகுறை

ஒன்றுதவிர, மற்றப்படி எவ்விதத்திலும் எனக்குத் தோழனுகவே யிருந்தது. எனக்குக் கிட்டிய இறகையும், மையையும், கடிதத்தையும் வீண்செலவு செய்யாமல், மிதமாய் வைத்திருந்து உபயோகப்படுத்தினேன். மை இருக்கிறவளாயில் எவ்வரலாறுகளேயும் நுட்பமாய் எழுதிவைத்தேன். அது செலவானபின், எழுதுதற் கிசையவில்லே. மை சேர்க்கும்படி நான் செய்த உபாயங்களனைத்தும் வியர்த்தமாயின.

இத்தனை திரளாய்ப் பொருள் சேர்த்திருந்தும், எனக்கு வேண்டும் பொருள் பின்னுமனேகமுண்டென்று கண்டேன். அவற்றுள் ஒன்று மை. அன்றியும், நிலம் அகழ்வதற்கும், மண் எடுப்பதற்கும் பாரை, ஒருதலேக் குந்தாலி, சோழியப்பாரை, ஊசி, குண்டூசி, நூல் இவைகளும் வேண்டியிருந்தன. சணனூற் துணியில்லாத குறை எனக்கு விரைவில் மிகவெளிதாய்த் தெரியவந்தது.

அந்தந்த வேலேக்குரிய கருவிகளில்லாததனுல், அததுசமயத்தில் முடியாமல் தடைப்பட்டிருந்தது. எனது வீட்டைச்சுற்றி அடைக்கத் தொடங்கின கிராதிவேலேக்குப் பூர்த்தியாய் ஒரு வருஷஞ் சென்றது. காட்டில் வெட்டின தூண் ஒவ்வொன்றும் முன்பின் ஒரு ஆட்சுமை. அவைகளே நான் வெட்டிப் பணிக்காக்குவதற்கும் வீட்டிற் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் வெகுகாலஞ் சென்றது. சிலவேளே ஒரு தூணே வெட்டி எடுத்துவர இரண்டுநாளும், தரையில் நாட்ட ஒருநாளும் செல்லும். தூண் நாட்டும்படி முதலில் ஒரு குறுந்தடியால் நிலத்தை அகழ்ந்தேன். பின்பு கட்டப்பாரை இருந்ததென்று என் ஞாபகத்தில் வந்தது. அதனுற் குழி பறிக்கத் தொடங்கியபின்னும், கிராதிக்கொம்புகளே நடுவது வெகு கஷ்டமாயிருந்தது.

வேண்டுமளவிற்கு அவகாசமிருந்ததனுல், எந்த வேலேயாவது விரைவில் முடியாதென்று எனக்கு விசாரமுண்டாவதற்கு நிமித்தமில்லேயே. அன்றியும், கிராதியடைக்கும் வேலே ஒன்று தவிர, எனக்கு வேறு வேலே என்ன? போஜனத்திற்கு ஏதுஞ் சேகரித்து வரும்படி தீவில் அங்கங்கே போகவேண்டியிருந்தது மெய்தான். அதற்குப் பிரதிதினமும் ஏறவும் தாழவும் அவகாசமுண்டு.

பிற்பாடு நான் எனது நிலைமையைக்குறித்தும், எனக்கு வந்த கஷ்ட தசையைக்குறித்தும் உள்ளபடி தீர்க்கசிந்தனை செய்யத் தொடங்கி, அவைகளைப்பற்றி விவரமாய்க் கடிதத்தில் எழுதினேன். எனது பிற்சந்ததியார் வாசிக்கவேண்டுமென்றல்ல; ஏகாந்தமாயிருக்கும் எனக்குச் சந்ததி ஏது? பிரதிதினமும் நினைத்து நினைத்து என் நெஞ்சை வருத்தாமல், பளுவான பாரம் சுமப்பவன் அதைச் சுமைதாங்கியில் இறக்கிவைத்து ஆறுவதுபோல, என் னுள்ளத்தில் நிகழும் துயரமான சிந்தனைகளைக் கடிதத்தில் எழுதி வெளிப்படுத்தினேன். மேலும், எனக்குள் விவேகம் பிறந்து, என் மனத்தளர்ச்சியை மேற்கொண்டதனால், நான் தேறித் தெளிந்து, என் நிலைமைக்கும், என்னிலும் அதிக சிறுமையடைந்தோர் நிலைமைக்கும் தாரதம்மியமறியும்பொருட்டு, எனக்குவந்த நன்மைகளை ஒரு பந்தியிலும், தீமைகளை ஒரு பந்தியிலும் இணையாய் எழுதிவைக்கத் தொடங்கினேன். கொடுக்கல் வாங்கற் கணக்கெழுதுவதுபோல, நான் அனுபவிக்கும் சுகத்தை வரவுக்கணக்குப் பந்தியிலும், துக்கத்தைச் செலவுக்கணக்குப் பந்தியிலும் பட்சபாதமின்றி, உள்ளபடி எழுதிவைத்தேன். அது வருமாறு:—

| துன்பம். | இன்பம். |
| --- | --- |
| விலகுமுபாயம் சிறிதுமின்றிக் கோரமான பாழ்ந்தீவில் ஒதுக்கி விடப்பட்டேன். | என்னுடன் உருவில் ஏறினவர்களைப்போல நான் கடலில் முழுகி இறந்துபோகாமல், பிழைத்திருக்கிறேன். |
| பூலோகத்தில் வாழும் கோடா கோடி மனுஷருள் எனக்குமாத்திரம் இக்கஷ்ட தசை சம்பவித்தது. | உரு ஏறிய மனுஷர் அனைவருக்குள்ளும் நான் ஒருவன்மாத்திரம் ஜீவனோடிருக்கப் பெற்றேன்; என்னை மரணத்திற்குவிலக்கிக் காத்த அற்புதமூர்த்தி இந்நிலைமையினின்று விடுதலை செய்வதற்கும் வல்லவர். |
| மனுஷர் சமுகத்தினின்று விலக்கி, ஏகாங்கியாய் இவ்விடத்தில் விடப்பட்டிருக்கிறேன். | போஜன பதார்த்தம் ஒன்றும் இல்லாத பாலைவனத்தில் நான் பட்டினியிருந்து சாகவில்லை. |

| | |
|---|---|
| எனக்கு உடுக்க வஸ்திரமில்லை. | நான் இருப்பது உஷ்ணதேசம். இங்கே எனக்கு வஸ்திரம் இருந்தாலும், அதை உடுத்துத் தாங்க மாட்டேன். |
| துராகிர்தம் செய்யும் மனுஷருக்கும், துஷ்ட விலங்குகளுக்கும் தப்பிப் பிழைக்க வகை இல்லாதவனானேன். | ஆபிரிக்ககரையிற்கண்ட துஷ்ட வனவிலங்குகளை நான் இருக்கும் தீவிற் காணேனே. கப்பல் சேதப்பட்டு அக்கரையி லடைந்தேனானால், எனது கதி என்னவாகும்? |
| என் குறையைச் சொல்லி ஆறுவதற்காயினும், நயம் சொல்லி என்னை ஆற்றுவதற்காயினும் இங்கு எவருமில்லை. | காருண்ய பகவான் கப்பலை அற்புதமாய்க் கரையடைவித்து, என் குறை தீர்க்கும் பல பொருள்களை நான் எடுத்துக்கொள்வதற்கும், எனது ஆயுள்பரியந்தம் ஆகாரம் சேகரிக்கும் சாதனங்களைக் கைக்கொள்வதற்கும் எனக்கு இடஞ்செய்தருளினார். |

சுருக்கிச் சொல்லில், எவ்வளவு நிர்ப்பந்தமான நிலைமையில் இருப்பவர்களுக்கும், அந்நிலைமையில் வாஸ்தவரூபமான நன்மையுமுண்டு, அபாவரூபமான நன்மையுமுண்டென்பதற்கு, நான் எழுதிய கணக்கைத் தவறாத சாட்சியாய்க் கண்டேன். வாஸ்தவரூபமான நன்மையென்பது, அனுபவிக்கும் நன்மை; அபாவரூபமான நன்மையென்பது, அனுபவிக்காத தீமை. எந்த நிலைமையிலிருப்பவர்களும் அதில் தமது மனநோவை ஆற்றித் தம்மைத் தேற்றத்தக்க நன்மை தீமைகளைக் கண்டு, அவ்விரண்டையும் வரவுக் கணக்குப் பந்தியில் எழுதலாகும். இது அத்தியந்த நிர்ப்பந்தமான ஸ்திதியில் அழுந்தி வருந்திய எனது அனுபவத்தாற் பிறந்த சித்தாந்தமென்று எவருமறியக்கடவர்.

இவ்வாறு நான் துன்பத்தை மறந்து, எனது ஸ்திதி இன்பமுள்ளதென்று கண்டு, கடலில் ஏதாயினும் உருவைக் காணலாமென்று பார்த்துக்கொண்டிருப்பதை விட்டு, எனது ஸ்திதிக்குத் தக்க சுகானுபவங்களைத் தேட முயன்றேன்.

மலைச்சார்பிற் கூடாரவீடு கட்டி, அதைச் சூழக் கொம்பினாலும் கப்பல் வடத்தினாலும் பலமான கிராதியிட்டதைக்

குறித்து விவரமாய்ச் சொன்னேனே. அதன் புறத்தில் இரண்டடி அகலம் கிராதிமட்டத்திற் கடுத்துக் கழுப்பறறை யடுக்கி மதில் எழுப்பினேன். ஆனதுபற்றி, அது கிராதி யல்ல மதிலென்று சொல்லத்தகும். பின்னும் ஒன்றரை வருஷம் சென்றபின், மதிலுச்சியினின்று மலைப்புறத்தில் வரிசையாய்க் கைமரம் வைத்துத் தாழ்வாரமிறக்கி, மழை உட்செல்லாதபடி தழை குழை கொம்பு முதலியவற்றால வேய்ந்தேன். நானிருந்த தீவில் வருஷந்தோறும் சில மாசவரையில் மழை அடைத்துச் சோனாமாரியாக வருஷிப்பது வழக்கம்.

என் சொத்துகளனைத்தையும் கிராதிக்குள்ளும், கூடாரத்தின் பின்புறத்தில் அகழ்ந்த குகைக்குள்ளும் கொண்டுபோய்ச் சேர்த்ததாகச் சொன்னேனே. முதலில் நான் அவைகளைத் தாறுமாறாய் அங்கும் இங்கும் வைத்ததனால், எனக்கு இருக்க, படுக்க, உலாவ இடம் மிஞ்சவில்லை. ஆதலால், குகையைப் பின்னும் விசாலமாக்கி, தரையைச் சற்று ஆழமாய்த் தோண்டினேன். அம்மலை மணற்பாங்கு; அதை அகழ்வது எளிது. துஷ்ட வனவிலங்குகளால் எனக்கு அபாயமில்லையென்று கண்டு, எனது வலப்புறத்தில் மலையைப் பக்கவாட்டமாய்க் குடைந்து, என் கோட்டை மதிலுக்கப்புறம் வெளிப்படுவதற்குத் தரையில் வாசல் வைத்தேன்.

தரையின்கீழ் அகழ்ந்த இவ்வழி கூடாரத்திற்கும், எனது களஞ்சியத்திற்கும் போக வரப் புறக்கடைவாயிலாயிருந்ததுமன்றி, எனது பண்டபதார்த்தங்களை வைக்கவுமுதவிற்று.

இவ்வேலை முடிந்தபின், எனக்கு மிகவும் ஆவசியகமான தட்டுமுட்டுகளைச் செய்யத் தொடங்கினேன். முதலில் நான் செய்தவை நாற்காலி ஒன்று, போஜனபீடம் ஒன்று. பூலோகத்தார் அனுபவிக்கும் சுகானுபவங்கள் பலவற்றுள் நான் அனுபவிக்கப் பெற்றவைகள் மிகச் சில. அச்சில சுகானுபவங்களாவது நாற்காலியும் பீடமுமின்றி எனக்குப் பிரயோஜனப்படுவது அசாத்தியம். பீடமின்றி எழுதுவதற்காயினும், போஜனம் செய்வதற்காயினும், மற்றனேக வேலைகள் செய்வதற்காயினும் இசையுமா? அதில் என்ன சுகமிருக்கிறது?

ஆகவே, ஆலசியமின்றி வேலையைத் தொடங்கினேன்; இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிக்கவேண்டும். விவேகமே கணிதவித்தையின் சாரமும் மூலமுமாயிருப்பதனால், ஒவ்வொன்றையும் விவேகத்தாற் கிரமப்படுத்தி, அளந்து, காரியாகாரியங்களை நுட்பமாய்ப் பகுத்தறியும் எவனும் காலக்கிரமத்தில் எவ்வகைக் கைத்தொழிலையும் பயின்று கைதேர்ந்தவனுவான். நான் இதுவரையிற் தொழிற்கருவி ஒன்றுவது எடுத்தறியேன். அதில் எனக்குக் கைவழக்கமில்லை. இல்லாதிருந்தும், நாளாவர்த்தியில் முயற்சிசெய்து வழக்கப்படுத்தி, புத்திசெலுத்தி உழைத்ததனுல், தகுதியான கருவிகள் இருந்தால், எனக்கு வேண்டிய சமஸ்த சாமான் தட்டுமுட்டுகளையும் பணிக்காய்ச்செய்யும் திறமுடையவனுனேன். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாமென்பதுபோல, வாச்சியும் கோடரியும்கொண்டு, எவரும் செய்தற்கரிய வேலைகளை நான் அவ்விரண்டு கருவிகளாற் செய்து முடித்தேன். எவ்வகைக் கருவியுமில்லாமல் நான் செய்த வேலைகள திரளாயுண்டு. எனக்குப் பலகை வேண்டும்பொழுது, முதலில் மரந்தறித்து விழுத்தி, அதை மேலும் கீழும் கோடரியாற் கொத்தி, மட்டமாக்கி, அது பலகையளவு கனமுள்ளதாய் வந்தபின், அதிலுள்ள மேடுபள்ளத்தை வாச்சியாற் செதுக்கி மெருகிடுவேன். இம்மாதிரியாக வெட்டினுல், ஒரு மாதத்திற்கு ஒரு பலகை மாத்திரந் தேறும். அதற்கு நிவிர்த்தி என்ன? எவ்வளவு வருத்தமிருந்தாலும், காலம் சென்றுலும் அவைகளைப் பாராட்டாமல் வருந்தி உழைக்கத்தான் வேண்டும். ஒரு பலகை மேற்சொல்லியவாறு வெட்டி முடிக்கக் காலமும் உழைப்பும் அதிகம் சென்றன. சென்றும், அவை எனக்கன்றி, மற்றெவர்க்கும் உபயோகப்படாதிருந்ததனுற் பெரிதல்ல. எந்தவேலை செய்யினும் எனக்கொன்றுதான்.

எப்படியும் உருவிலிருந்தெடுத்துத் தெப்பத்திலேற்றிக் கொண்டுவந்த பலகைத்துண்டுகளால் முதலில் ஒரு பீடமும், நாற்காலியும் செய்தேன். அப்புறம் மேற்சொல்லியவாறு மரந்தறித்து வெட்டிய பலகைகளைக் குகையின் பக்கத்திலுள்ள அணைசுவரில் அடுக்குத்தட்டுகளாய் இசைத்து, அத்

தட்டுகளில் எனது தொழிற்கருவிகள், ஆணிகள், இருப்பாயுதங்கள் முதலியவைகளை வேண்டும்பொழுது எளிதில் எடுக்கத்தக்கதாகப் பிரத்தியேகமாய் வைத்தேன். இத்தட்டுப்பலகைகளின் அகலம் ஒன்றரை அடி. மேலும், குடைந்த மலைவழிச்சுவரில் மரவாணிகள் கடாவி, அவற்றிற் கயிறு கட்டி, தூக்கத்தக்க துப்பாக்கிமுதலிய சமஸ்த கருவிகளையுந் தூக்கினேன்.

ஆகவே, எனது குகையைப் பார்ப்பவர்களுக்கு அது ஆவசியகமான பொருளனைத்தும் சேகரித்து வைக்கப்பட்ட பண்டசாலையாகத் தோன்றும். என் சொத்துகளெல்லாம் எளிதிற் கையாடத்தக்கதாகக் கிரமமாய் வகுத்து வைக்கப்பட்டிருப்பதையும், வேண்டும்பொருள் யாவும் திரளாயிருப்பதையும் பார்த்து ஆனந்தங்கொண்டேன்.

இவ்வேலை முடிந்தபின்புதான் நான் அன்றன்று செய்த அலுவல்களைப்பற்றித் தினவர்த்தமான பத்திரமொன்று எழுதிவைக்கத் தீர்மானித்தேன். இதற்குமுன் நான் சபல சித்தனாய் எதையும் ஒழுங்கின்றிப் பதைப்புடன் செய்ததனால், அவற்றைக் கிரமப்படுத்தி எழுதுவதற் கிசையாதே. எழுதினும், பின்வருமாறு விஷயங்கள் நயமின்றிச் சாரமற்றிருக்குமேதவிர, மற்றப்படி அல்ல:—செப்டெம்பர்மீ 30உ சமுத்திரத்தில் முழுகி இறந்துபோகாமல் திருவுள்ளத்தின் செயலாற் கரையேறியபின், எனக்கு இரட்சிப்பளித்த ஈஸ்வரனை நினைத்து, நான் அவருக்குத் துதிசெலுத்தவில்லை. கடலில் விலாப்புடைக்கக் குடித்த உப்புநீரெல்லாம் வாந்திசெய்தேன். சோகம் தெளிந்தபின் பரிதாபத்தாற் கையொடு கை பிசைந்து, தலையிலும் வாயிலும் அடித்துக்கொண்டு பித்தம் பிடித்தவன்போல, இலக்கற்றுக் கரையிலோடி, எனது துர்க்கதியை நினைத்துப் பதைபதைத்துக் கூவி: "ஐயோ! கெட்டேன், உய்யும் வகையின்றி உலைந்தேன்" எனப் பிரலாபித்து, இளைப்புற்று, விழுந்து, பிரக்ஞைதப்பிக் கிடந்தேன். துஷ்ட மிருகங்கள் பட்சிக்குமென்னும் அச்சத்தால் தூக்கம்வரவில்லை.

சிலநாட்சென்று நான் கப்பலுக்குப் போய், கிட்டிய பொருளனைத்தையும் இஷ்டமாய் எடுத்துக்கொண்டுவந்து சேர்த்

தபின்னும், என் பதைப்புத் தீரவில்லை. கடலில் எதாயி னும் உரு ஓடுவது தெரியுமென்று அங்குள்ள ஒரு சிறு மலைச் சிகரத்திலேறி நின்று பார்த்தேன். நெடுந்தூரத்திற் கப்பற் பாயொன்று தோன்றுவதுபோலிருந்தது. சற்றுச் சென் றாற் கிட்டுமென்று எனக்குள்ளுவந்து உற்றுப்பார்த்தவண்ண மாய் நின்றேன். நெடுநேரஞ் சென்றது. பார்த்தகண் இரண் டும் பூத்துப்போயின. எனக்கொன்றுந் தெரியவில்லை. உட் காந்திருந்து விரகறியாத பாலனைப்போல மார்பளவுங் கண் ணீர் வடிய அழுது, மௌட்டியத்தால் என் நெஞ்சைப் பின் னும் வருத்தினேன்.

இம்மனவருத்தம் ஒருவாறு தீர்ந்து, குடியிருக்க வீடுகட்டி, என் சொத்துக்களை அங்கங்கே கிரமமாய் வைத்து, ஒரு பீடமும் நாற்காலியும் செய்து எல்லாவற்றையும் பணிக்காய் வகுத்தபின், தினவர்த்தமான பத்திரம் எழுதத் தொடங்கி னேன். அதில் மேற்குறித்த சங்கதிகளெல்லாம் காலக்கிர மமாய்ச் சொல்லப்படும். நான் வைத்திருந்த மை செல வாய்ப்போகவே மை தேட நிர்வாகமின்றி, வர்த்தமானம் எழுதுவதை அவ்வளவில் நிறுத்தினேன்.

## 5. அத்தியாயம்.

தினவர்த்தமானம் எழுதத் தொடங்கினது. நான் இறங்கிய தீவுக்குத் துய ரத்திற்குறைவிடமான தீவென்று நாமதாரணஞ் செய்தது. தொழிற் கருவிகள், கூடைகள் முதலியவைகளைப் பலவாறு யுத்திசெய்துண் டாக்கி, வீடு கட்டத் தொடங்கியது. இரவில் விளக்கெரிக்க வகை தெரியாமல் அதற்கும் ஒரு யுத்திபண்ணினது. தானியத்தை அற்புத மாய்க் கண்டது. பயங்கரமான பூகம்பமுண்டானதும் புயலடித் ததும்.

### தினவர்த்தமான பத்திரம்.

1659–ஆம் செப்டெம்பர்மீ 30உ.

ரூபின்ஸன் குறூஸோ என்னும் ஏழையும் நிர்ப்பந்தனு மாகிய நான் ஆழ்ந்த கடலில் உக்கிரங்கொண்டு உரத்தடித்த புயலிற் கப்பற்சேதமடைந்து, இன்றைத்தினம் இந்தத்

தீவிற் கரையேறினேன். இது மனுஷரனுபவிக்கும் சுகானுபவ சாதனங்கள் சிறிதுமில்லாத பாழ்ந்தீவு. ஆனது பற்றி நான் இதற்குத் துயரத்திற் குறைவிடமான தீவென்று பெயரிட்டேன். என்னுடன் கப்பலேறிய கடலோடிகளனைவரும் சமுத்திரத்தில் முழுகி இறந்துபோக, நான்மாத்திரம் குறைப்பிராணியாய்க் கரையடைந்தேன்.

எனக்கு உண்பதற்காகாரமாவது, குடியிருக்க வீடாவது, உடுக்க வஸ்திரமாவது, கையுதவிக் காயுதமாவது, ஒதுங்கப் புகலிடமாவது, மற்றெவ்விதசகாயமாவது இல்லையென்று கண்டு ஏங்கித் துயரடைந்தேன். துஷ்டமிருகங்களாற் பட்சிக்கப்பட்டாயினும், குரூர கிருத்தியம் செய்யும் மிலேச்சராற் கொலைசெய்யப்பட்டாயினும், அன்னத்திற்கு வழியின்றிப் பட்டினியால் மெலிவுற்று வருந்தியாயினும் இறப்பதொழிய, வேறு கதி யொன்றும் எனக்குத் தோன்றவில்லை. இந்தத் துர்க்கதியை எண்ணி எண்ணி அன்று முழுதும் மனோபத்திரவப்பட்டேன். பொழுது அஸ்தமிக்கவும், வனவிலங்குகள் வருமென்றஞ்சி, ஒரு மரத்திலேறி, இராமுழுதும் மழைபெய்தும், சுவாரணையின்றித் தூங்கினேன்.

அக்டோபர்மீ 1உ.—மணற்குன்று தட்டிப் பொருத்து நின்ற கப்பல் கடற்பெருக்குவேளையில் நிலைபெயர்ந்து, அலையாற் றள்ளுண்டு, காலையிற் கரை நெருங்க வந்து நின்றது கண்டு மிகவு மாச்சரியப்பட்டேன். அது சின்னபின்னமாய் உடைந்துபோகாமல் உருக்குலையாதிருந்ததனால், காற்றுத் தணியும்பொழுது, நான் அதிலேறி, அங்கிருந்த போஜனபதார்த்தங்களையும், பின்னும் எனக்குதவியான பொருள்களையும் எடுத்துவரலாகுமென்றெண்ணி மனந்தேறினேன். தேறியும் என் கூட்டாளிகள் கப்பலை விட்டிறங்காதிருக்கச் சம்பவித்தால், எல்லாருங் கூடிய பிரயத்தனஞ் செய்து, அதைப் பழுதின்றிக் காத்துக்கொள்ளக்கூடுமே; கூடாதாயினும், அவர்கள் முழுகி இறந்துபோகமாட்டார்களே; உடையுங் கப்பலின் துண்டுப் பலகைகளாற் சிறிய படவொன்று செய்து, அதிலேறி, மனுஷர் சஞ்சரிக்கும் எந்தக் கரையிலாவது எல்லாரும் சிந்தாயாத்திரையாய்ப் போய்ச் சேர்வோமே

யென்று நினைக்க, வகைமோசமாய் அவர்களிறந்ததைப் பற்றி முன்பு ஆறின துக்கம் மீண்டும் ஏறிற்று. அன்று பகல் நெடுநேரமளவும் பெயர்த்துப் பெயர்த்து இவைகளை நினைத்துக் கலக்கமுற்றிருக்கையில், கடற்பெருக்கு வற்றி உருவின் அதிகபாகம் நீர்மட்டத்திற்குமேல் வெளிப்பட்டிருந்தது கண்டு, நான் கூடியமட்டும் நெருங்கிக் கால் நடையாய்ப் போய், அப்புறம் நீந்தி உருவிலேறினேன். அன்று பகலும் மழை ஓயாமாரியாகப் பெய்தது. காற்றுச் சுத்தமாய் இல்லை.

அக்டோபர்மீ 1௳ தொடங்கி, 24௳ வரையில்.—இந்தத் தினங்களில் நான் பலதரம் கப்பலுக்குப் போய்க் கிட்டிய பொருளனைத்தையுமெடுத்து, தெப்பத்திலேற்றிப் பெருக்கு வேளையிற் கரையிற் கொண்டுவந்து சேர்த்தேன். இத்தனை நாளும் மழை நன்றாய் அடித்துப் பெய்வதும் இடைக்கிடை விட்டு ஆகாயத்தில் வெளுப்பேறுவதுமாயிருந்தது; இது மழைக்காலமென்றெண்ணுகிறேன்.

அக்டோபர்மீ 20௳.—எனது தெப்பம் கவிழ்ந்து, அதிலேற்றிய சாமானெல்லாம் முழுகிப்போயின; ஆனாலும், நீர் வற்றியபின் சாமான்கள் பளுவாயும், அவை முழுகின விடங் களமாயுமிருந்ததனால் அவற்றிலநேகம் அகப்பட்டன.

அக்டோபர்மீ 25௳.—பகலும் இரவும் அடைமழை பெய்து இடைக்கிடை காற்றுப் பலமாயடித்தது. அதனால், கப்பலுடைந்து துண்டு துண்டாய்ச் சிதறுண்டுபோயிற்று. அதன் அடிக்கட்டடம் மாத்திரம் வற்றுவேளையிற் காணப் பட்டது. மற்ற உறுப்புகளொன்றும் என் கண்ணுக்கெதிர்ப் படவில்லை. இந்தத் தினமுழுதும் மழையில் நனைந்து கெட்டுப்போகாமல் எனது சாமான்களை மூடிவைத்துப் பத்திரப் படுத்தினேன்.

அக்டோபர்மீ 26௳.—இராக்காலத்திற் துஷ்டமிருகங்களாலாவது மனுஷராலாவது அபாயம் நேரிடாதிருக்கும்படி பக்குவமான விடத்தில் வாசஞ்செய்வது முக்கியமென்றெண்ணி, இன்று பகற்பொழுது சாய்கிறவரையில் அங்கங்கே யுலாவி இடம் பார்த்தேன். அஸ்தமிக்கச் சற்றுமுன் ஒரு சிறு

மலைச்சாரலிலுள்ள வெளிநிலமே குடிநிலத்திற்கு வளமான ஸ்தானமென்று குறித்து, கூடாரமடிப்பதற்கு அர்த்த மண்டலாகாரமாய் எல்லை வரைந்து, அவ்வெல்லையில் இரண்டு நிரைக் கொம்பு நாட்டி, இடையிற் கப்பல் வடம் பொதிந்து, புறத்திற் கழுப்பறறை அடுக்கி மதில் எழுப்பினேன்.

26௳ முதல், 30௳ வரையில்.—சொத்துகளனைத்தையும் புது வீட்டிற்குட் கொண்டுபோய் வைக்க இத்தனைநாள் சென்றது. சிலவேளை மழை மிக உரத்துப் பெய்தும் நான் வருத்தத்தைப் பாராமல் என் வேலையிற் கண்ணுயிருந்தேன்.

31௳.—உதயத்தில் உணவிற்குரிய ஜந்துக்களைக் கண்டாற் சுடவும், நாட்டுவளம் பார்க்கவும் துப்பாக்கிகொண்டு தீவி லுலாவினேன்; ஒரு வெள்ளாட்டு மறியைச் சுட்டு எடுத்துக் கொண்டுவர, அதன் குட்டி என்னைத் தொடர்ந்து வீட்டுக்கு வந்தது. நான் அதைப் பிடித்து வளர்க்க நினைத்தும் கொடுத்த இரையைத் தின்னுததனுல், அடித்துப் புசித்தேன்.

நவம்பர்மீ 1௳.—மலைப்புறத்திற் கூடியவரையில் அதிக இடங்கொள்ளக் கூடாரமடித்து அதற்குட் பலமான கொம்புகள் நாட்டி எனது மஞ்சத்தைத் தூக்கி, முதலில் இன்றிரவுதான் கூடாரத்தில் நித்திரைசெய்தேன்.

நவம்பர்மீ 2௳.—மதிலெழுப்பக் குறித்த எல்லைக்குச் சற்றுள்ளிட்டு எனது பெட்டிகள், பலகைகள், தெப்பங் கட்டிய நெடும் பலகைகள் எல்லாவற்றையு மடுக்கி வேலியடைத்தேன்.

நவம்பர்மீ 3௳.—துப்பாக்கி யெடுத்துக் கொண்டுபோய், குள்ளவாத்தின் சாயலான பட்சிகளிரண்டு சுட்டுக்கொண்டு வந்து புசித்தேன். அவற்றின் மாமிசம் மிக ருசிகரமாயிருந்தது.

நவம்பர்மீ 4௳.—இன்று காலையில் வேலைசெய்வதற்கும், துப்பாக்கிகொண்டு வெளியே போவதற்கும், நித்திரை செய்வதற்கும், காலக்ஷேபத்திற்கும் தகுந்தபடி காலக்கிரமங் குறித்தேன். அதன் விவரமாவது:—பிரதிதினமும் காலையில் மழை இல்லாதிருக்கும்பொழுது இரண்டு மூன்றுமணி நேரமட்டும் துப்பாக்கி எடுத்துக்கொண்டு வெளியி லுலாவுவேன்; பிற்

பாடு பதினொரு மணிவரையில் வேலைசெய்வேன்; அதன் மேல் உள்ள போஜனத்தை உண்பேன்; அப்புறம் பன்னிரண்டுமணி தொடங்கி இரண்டுமணி வரையில் உஷ்ணம் அதி தீட்சணமாயிருந்ததனால், படுத்து நித்திரைசெய்வேன்; இரண்டுமணிக்கெழுந்து பொழுதுபடுமளவும் வேலைசெய்வேன். நாலாம் ஐந்தாம் திகதிகளில் வேலைக்குக் குறித்த காலமுழுதும் பீடம் செய்துகொண்டிருந்தேன். தச்சவேலையில் நான் கைபடிந்தவனல்லவே: ஆதலால், இவ்வளவுகாலம் சென்றது. எனக்கு வேண்டும் தட்டுமுட்டுகளை நானே செய்யப் பாத்தியப்பட்டதனால், நாளாவர்த்தியில் கை திருந்தி, கைத்தொழில் வித்தையில் பயிற்றுவா ருதவிபெருத நிபுணனானேன். எனது ஸ்திதியில் எவரும் என்னைப்போல் கைச்சித்திரமுடையவராவாரென்று நம்புகிறேன்.

நவம்பர்மீ 5உ.—இன்றைத்தினம் துப்பாக்கிகொண்டு வெளிப்பட்டு, ஒரு காட்டுப்பூனை சுட்டேன். எனது நாயும் என்னுடன் வந்தது; அந்தப் பூனைத்தோல் சற்று மிருதுவாயிருந்ததாயினும் மாமிசம் ஒன்றுக்குமுதவாது. நான் சுட்டு விழுத்தின விலங்குஜாதிகள் எல்லாவற்றின் தோலையும் உரித்துப் பத்திரப்படுத்தினேன். கடற்கரை மார்க்கமாய்த் திரும்பி வரும்பொழுது பல ஜாதியான கடற்பறவைகளைக் கண்டேன். அவை இன்னவை இணையவையென்று எனக்குத் தெரியாது. இரண்டு மூன்று நீர்நாய்களைக் கண்டு, ஆச்சரியப்பட்டு, அச்சமுற்று, அவை என்ன மிருகஜாதியென்றறியாமல் உற்றுப்பார்த்துக்கொண்டு நிற்கையில், அவை கடலுக்குள் ளோடி மறைந்தன அப்புறங் காணப்படவில்லை.

நவம்பர்மீ 6உ.—காலையில் உலாவி வந்தபின், குறைவேலையாயிருந்த பீடத்தைச் செய்து முடித்தேன். அதன் வேலைப்பாடு எனக்கு உவப்பாயிருக்கவில்லை. நெடுநாட் செல்லுமுன் நான் அதிலுள்ள குற்றங் குறைகளைக் கண்டு திருத்தப் பயின்றேன்.

நவம்பர்மீ 7உ. — மழைகாலமொழிந்து வேனிற்காலமாயிற்று. 7உ, 8உ, 9உ, 10உ இந்நாலு நாளும், 12உயிற் பாதி நாளும் வேறு வேலைகளில் தலையிடாமல் நாற்காலி

யொன்று செய்து மிக வருத்தப்பட்டு முடித்தேன். முடித்தும், அது என் மனதிற்கு ரம்மியமாயிருக்கவில்லை; செய்யும்பொழுது எத்தனையோதரம் அதை உறுப்புறுப்பாய்க் குலைத்துத் திருப்பி இசைத்தேன். 11௳ ஞாயிற்றுக்கிழமையானதால் அன்று நான் ஒருவேலையுஞ் செய்யவில்லை. பின்பு நாளாவர்த்தியில் ஓய்வுநாள் கைக்கொள்வதை விட்டுவிட்டேன்; பஞ்சாங்க ஸ்தம்பத்தில் ஓய்வுநாட் புள்ளியை வகைமோசமாய்த் தப்பவிட்டதனால், நாள் விவரமறியாதிருந்தேன்.

நவம்பர்மீ 13௳.—இன்று நிலங்குளிர மழை பெய்ததனால் எனக்கு மிகவும் ஆரோக்கியமாயிருந்தது. மழை பெய்யும்பொழுது மேகம் கர்னகடூரமாய் முழங்கி மின்னியதனால், வெடிமருந்து எரிந்துபோகுமென்று அத்தியந்த திகிலடைந்தேன். மழை விட்டவுடன் இனிமேல் மருந்துக்கேதும் கெடுதிவராமல், அதைப் பல சிறிய மூட்டைகளிற் கட்டி வெவ்வேறிடத்தில் வைக்கத் தீர்மானித்தேன்.

நவம்பர்மீ 14௳, 15௳, 16௳.—இம்மூன்றுநாளும் இரண்டோரிருத்தல் கொள்ளத்தக்க சதுரவடிவான சிறிய பெட்டிகள் செய்வதிற் கழிந்தன; அப்பெட்டிகளில் வெடிமருந்தைக் கொட்டி, அவைகளை ஒன்றுக்கொன்று தூரமாய்ப் பக்குவமான இடம்பார்த்து வைத்தேன். மேற்சொல்லிய மூன்றுநாளில் ஒருநாள் ஒரு பெரிய பட்சியைச் சுட்டு விழுத்தி, அதன் இறைச்சியைத் தின்றேன். அதன் பெயர் அறியேன். இறைச்சி ருசியாயிருந்தது.

நவம்பர்மீ 17௳. — பண்ட பதார்த்தங்கள் வைக்கப் பின்னும் வசதி யுண்டாம்பொருட்டு, கூடாரத்தின் பின்புறத்தில் மலைக்குள் நிலத்தை அகழத் தொடங்கினேன். ஒருதலைக் குந்தாலி ஒன்று, சோழியப்பாரை ஒன்று, தனிச்சக்கரவண்டி அல்லது கூடை ஒன்று, இம்மூன்று கருவிகளும் மலையை யகழ்வதற்கு எனக்கு ஆவசியகமாயிருந்தன; அதனால், வேலை தொடங்காமல் இந்தக் குறைக்கு என்ன நிவிர்த்தி செய்வதென்று சிந்திக்கவும், சிந்தையில் தோன்றியபடி கருவிகள் செய்யவும் தொடங்கினேன். நான் வைத்திருந்த கட்டப்பாரைகள் சற்றுப் பளுவாயிருந்தும்,

குறித்த வேலைக்குரியவைகளானதால், ஒருதலைக் குந்தாலிக் கீடாய் உதவின. இனி எனக்கு வேண்டுவது பாரை. பாரை இல்லாதிருந்தால் வேலைசெய்ய முடியாது. எவ்விதப் பாரை செய்யவேண்டுமென்று விவரமறியாதிருந்தேன்.

நவம்பர்மீ 18௳. — மற்றநாள் வளமான மரம் பார்த்துத் தறிக்கக் காட்டுக்குப் போயிருக்கையில், பாலைமரத்திற் கொப்பான ஒரு மரத்தைக் கண்டேன். இம்மரம் அதிக உறுதியாயிருத்தலால், இதை ப்ரேஜில் நாட்டார் இருப்பு மரமென்பார்கள். இதில் ஒரு துண்டு தறித்துக் கொண்டு போகப் பார்த்தேன். கோடரி முனை வெட்ட வெட்ட மடிந்து, சற்றுமேறவில்லை. எப்படியும் வருந்தித் தறித்து ஒரு துண்டு விழுத்திப் பிரயாசத்துடன் எடுத்துக் கொண்டு போய் வீடு சேர்த்தேன். அது மிகவும் பளுவாயிருந்தது.

பாரைக்கு வேறு வழி யில்லாதிருந்ததனால், கெட்டியான இம்மரத்தை வெட்டிப் பாரையாக்குவதற்கு அதிக காலம் சென்றது. சிறிது சிறிதாய் வெட்டி, ஒருவாறு உருவாக்கினேன். அங்கிலேய பாரைகளின் கைப்பிடிபோலப் பக்குவமான கைப்பிடி செய்தேன். பிடியின் அகன்ற அடிக்கு இருப்புத் தகடு பதிக்கவில்லை. அதனால், இப்பாரை நாட்பட இராது; ஆயினும், என் வேலைக்குதவிற்று. இதற்கு முன் இந்த ரூபமான பாரையைக் கண்டதுயில்லை, பாரை செய்வதற்கு இவ்வளவுகாலம் சென்றதுமில்லை.

இவ்வளவில் என் குறை தீரவில்லை. ஒரு கூடையாவது தனிச்சக்கர வண்டியாவது எனக்கு வேண்டியிருந்தது; பிரம்புபோல் வளையத்தக்க வளார் அகப்படாததனால், கூடை பின்னுவதற்கு ஒருவிதத்திலு மனுகூலப்படவில்லை. தனிச் சக்கரவண்டி செய்வதற்கோ, சக்கரம் தவிர்ந்த மற்ற உறுப்புகளனைத்தும் செய்யமாட்டுவேனென்று நினைத்தேன். சக்கரஞ்செய்யும் வகை எனக்குப் புலப்படவில்லை; அன்றியும் அச்சு நுழையும் இருப்புக்குழாய்கள் செய்வது எவ்விதத்திலும் அசாத்தியமாயிருந்தது. ஆதலால், அகழ்ந்த மண்ணை அள்ளிக்கொண்டு போவதற்கு, சிற்பருக்குச் சிற்றாள்வேலை செய்பவர்கள் சாந்துகொண்டுபோய்க் கொடுக்கும் பத்தலுக்கு ஒப்பான கருவி ஒன்று செய்தேன்.

எனக்கு இவ்வேலை பாளை செய்வதுபோல் அத்தனை கஷ்டமா யிருக்கவில்லை; ஆனாலும், இதையும் பாளையையும் செய்வதற்கும், வியர்த்தமாய்த் தனிச் சக்கர வண்டிசெய்யப் பிரயத்தனப்படுவதற்கும் சரியாய் நாலு நாட் சென்றது. பிரதிதினமும் காலையில் துப்பாக்கி கொண்டு வெளியிலுலாவும் வழக்கத்தை நான் விட்டுவிடவில்லை; ஆகாரத்திற்குப் பட்சிமுதலிய ஜந்து எதாயினும் சுட்டுக்கொண்டு வாராதிருக்கவுமில்லை.

நவம்பர்ஸ்ரீ 23உ.—மேற்சொல்லிய கருவிகளைச் செய்து முடிக்கிறவளாயிற் குகை அகழ்வதை நிறுத்திவிட்டேன். முடித்தபின், என் சொத்துகளை வசதியாய் வைக்கும்படி குகையை ஆழமாய் அகழ்ந்து போந்தமட்டும் விசாலமாக்குவதற்குப் பதினெட்டு நாட் சென்றது. அன்றன்று எனது அவகாசத்திற்கும், சரீர பலத்திற்குந் தக்கபடி உழைத்தேன்.

குறிப்பு.—இப்பதினெட்டு நாளும் நான் அகழ்ந்து விசாலமாக்கின குகை எனக்குப் பண்டசாலையானதுமன்றி, மடைப்பள்ளியும், போஜனசாலையும், நிலவறையுமாயிற்று. எனது வாசஸ்தானம் கூடாரம். மாரிகாலத்தில் மழை உரத்துப் பெய்யும்பொழுது, கூடாரத்தின் சுற்றிலும் நனைந்ததனால், மலைப்பக்கத்துடன் அடுத்து மதிலுச்சியிற் கைமரங்கள் வைத்துத் தாழ்வாரமிறக்கி, கோரைப் புல்லினாலும், தழை குழைகளாலும் வேய்ந்தேன்.

டிஸெம்பர்ஸ்ரீ 10உ.—குகை அகழும் வேலை பணிக்காய் நிறைவேறிற்றென்றெண்ணிச் சந்துஷ்டியாயிருக்கையில், சடிதியிற் குகையின் முகட்டிலும், ஒரு பக்கத்திலுமுள்ள மண் கண்டம் இடிந்து படைபடையாய் விழுந்தது கண்டு, அச்சமுற்றேங்கினேன். எனக்கு நிர்நிமித்தமாய் ஏக்கமுண்டாகவில்லை. மண்ணிடிந்து விழும்பொழுது நான் குகைக்குள்ளிருந்தேனானால், எனதுடலைப் புதைப்பதற்கு எவருங் குழி தோண்ட வேண்டுவதில்லை. குகையை அளவிற்கதிக விசாலமாய் அகழ்ந்தது தவறு. இந்த ஆபத்துச் சம்பவித்ததைப் பற்றி, நான் திரும்பவும் வருந்தி யுழைக்க வேண்டியிருந்தது. இடிந்து விழுந்த மண்ணை வெளிப்படுத்துவதற்கன்றிக் குகை

யின் இருபுறத்தணையையும் முகட்டையும் திரும்ப இடிந்து விழாமல் அணைகொடுத்துப் பலப்படுத்துவதற்கும் பாத்தியப்பட்டேன்.

டிஸெம்பர்மீ 11௳.—இன்று வேலை தொடங்கினேன். தாங்குதூண் இரண்டு நிறுத்தி, அவற்றினுச்சியிற் துண்டுப் பலகை யிரண்டு குறுக்காய் வைத்துக் குகை முகட்டைத் தாங்கி நிற்கப்பண்ணினேன். இவ்வேலை மற்றநாள் முடிந்தது. இவ்வாறே வேறு தூண்களும் நிறுத்தி, இனி முகட்டிற் கச்சமில்லையென்னும்படி ஒரு வாரத்திற்குள் அதைப் பலப்படுத்தினேன். தூண்களனைத்தும் நிரை நிரையாய் நாட்டப்பட்டிருந்ததனால், நந்நான்கு தூண்களின் இடைவெளியை அறைகளாய் வகுத்தேன்.

டிஸெம்பர்மீ 17௳.—இன்று தொடங்கி, 20௳ வரையில் அடுக்குத்தட்டுப் பலகைகளிசைத்து, தூக்கத்தக்க கருவி முதலானவைகளைக் கட்டித் தூக்கும்படி தூண்களில் ஆணியறைந்தேன். இவை எல்லாம் நிறைவேறியபின், என் வீட்டின் உள்ளிடத்தில் யாவுங் கிரமமாயிருந்தன.

டிஸெம்பர்மீ 20௳.—சமஸ்த வஸ்துக்களையும் குகைக்குள், ளெடுத்துக் கொண்டுபோய், அததற்குரிய விடத்தில் வைத்து, போஜன பதார்த்தங்கள் வைத்து எத்தனப்படுத்துந் தட்டொன்றைப் பலகைகளால் மூட்டினேன். அன்றியும், வேறொரு பீடமுஞ் செய்தேன். அதனால், என் வசமிருந்த பலகைகளெல்லாம் செலவாய்ப்போயின.

டிஸெம்பர்மீ 24௳.—இராப்பகல் இடையின்றி மழை பெய்தது; நான் வீட்டுக்கு முற்றம் வெளிப்படவில்லை.

டிஸெம்பர்மீ 25௳.—பகல் முழுதும் மழை வருஷித்தது.

டிஸெம்பர்மீ 26௳.—மழை இல்லை. பூமி முன்னிலுமதிகமாய்க் குளிர்ந்து, பயிர் பச்சைகள் கண்ணுக்குப் பசுமையாய்த் தோன்றின.

டிஸெம்பர்மீ 27௳. — வெள்ளாட்டுக்குட்டி யொன்று சுட்டு விழுத்தினேன். மற்றொன்றைக் காயப்படுத்தி முடமாக்கிப் பிடித்துக் கழுத்திற் கயிறிட்டு, வீட்டுக்குக் கொண்டு

போனேன். வீடு சேர்ந்தபின், ஒடிந்த காலைப் பற்றுவைத்துக் கட்டினேன். இம்முட ஆட்டைக் கருத்தாய்ப் பாதுகாத்துக்கொண்டுவந்ததனால், அது தப்பிப் பிழைத்ததுமன்றி, ஒடிந்த எலும்புங் கூடி, கால் என்றும்போ லுறுதியாயிற்று. நாட்படக் கைத்தீன் கொடுத்து வளர்த்ததனால், அது என்னுடன் பழகி எனது வாசலுக்கெதிர் வெளியிற் பசும் புல் மேய்ந்து என்னை விட்டுப் பிரியாதிருந்தது. வெடிமருந்தும் ரவையும் செலவழிந்தபின், எனக்கு ஆகாரத்திற்காக ஆடு முதலிய ஜந்துகளைப் பிடித்து வளர்த்துப் பயிற்றக்கூடுமென்று இதனாலறிந்தேன்.

டிஸெம்பர்மீ 28உ, 29உ, 30உ.—இம்மூன்று நாளும் உஷ்ணமதிகம். காற்றுச் சுத்தமாயில்லை; அதனால், பகல் முழுதும் அடங்கியிருந்து, சாயரட்சை ஆகாரந் தேடுவதற்கு வெளிப்பட்டேன். வீட்டிலிருக்கும்பொழுது, எனது சாமான்களை அங்கங்கே அடுக்கி ஒழுங்குபடுத்தினேன்.

ஜனுவரிமீ 1உ. — உஷ்ணம் இன்னுந் தணியவில்லை. காலை மாலை இருபொழுதுந் துப்பாக்கிகொண்டு வெளிப்பட்டு, உலாவி வந்தேன். நடுப்பகலில் வீட்டிலிருந்தேன். இன்று சாயரட்சை தீவின் மத்தியிலுள்ள பள்ளத்தரையிற் சற்று நெடுந்தூரம் போனபொழுது, வெள்ளாடுகளைத் திரளாய்க் கண்டேன். அவைகள் என்னைக் கண்டு மிரண்டோடின. அவைகளை ஓடிப் பிடிப்பது கஷ்டம். எப்படியும் இனி வரும்பொழுது எனது நாயைக் கொண்டுவந்துவிட்டுக் கூடுமானால் துரத்திப் பிடிக்கத் தீர்மானித்தேன்.

ஜனுவரிமீ 2உ. — தீர்மானித்தபடி மற்றநாள் நாய் கொண்டுபோய், அதற்கு வெள்ளாடுகளைக் காட்டி ஏவிவிட்டேன். நாய் துணிந்து நெருங்கி, அவைகளை மறிக்குமென்று நான் எண்ணினது தப்பு. ஆடுகளெல்லாம் எதிர்த்துநின்று, நாய்மேற் பாய எத்தனித்தன. தனக்கு அபாயம் வருமென்றஞ்சி, நாய் நெருங்கிப் போகத் துணியாமற் பின்னிட்டது.

ஜனுவரிமீ 3உ.—எவராவது இடித்து உட்செல்லக்கூடுமென்றெண்ணி, என் மதிலைப் பின்னும் அதிக கனமும் உரமுமுள்ளதாய்க் கட்ட வாரம்பித்தேன்.

இம்மதிலைப்பற்றிய வரலாறுகளை எனது தினவர்த்தமான பத்திரத்தில் இதற்குமுன் சொன்னதனால், திருப்பிச் சொல்வது ஆவசியகமல்லவென்று விட்டுவிடுகிறேன். ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன். மதில் அர்த்தசந்திராகிர்தியுள்ளது. அதன் இரு முனைகளும் மலையடியிற் பொருந்தியிருந்தன. அதன் நீளம் இருபத்துநாலு கஜம். மதில் மையத்திற்கும் மலையடிக்கும் தூர மெட்டுக்கஜம். குகைவாயில் மலையின் பின்புறத்தடியின் மையத்தில் வைக்கப்பட்டிருந்தது. இம்மதிலை மேற்சொல்லியவாறு அதிக கனமும் உறுதியுமுள்ளதாக்கி முடிக்க ஜனுவரிமீ 3உ தொடங்கி; பெப்ருவரி 14உ வரையிற் சென்றது.

மேற்சொல்லிய காலவரையில் மிக வருத்தப்பட்டுழைத்தேன். சிலவேளை பல நாள்வரையிலும் இரண்டு மூன்று வாரங்கள் வரையிலும் மழை அடைத்துப் பெய்ததனால் வேலையை நிறுத்திவிடும்படி சம்பவித்தது. என்ன தடை நேரிட்டாலும், தொடங்கின வேலையை முடிக்கிறவரையில் நான் அச்சமற்று அபாயமின்றி யிருப்பது அசாத்தியமென்றெண்ணினேன்; நான் செய்த வேலைகளை மிக வருத்தத்துடன் செய்து முடித்தேன். எனது உழைப்பை உள்ளபடி சொன்னாற் கேட்பவர்கள் எளிதில் நம்பார்கள். முக்கியமாய் நான் காட்டில் வெட்டிச் சுமந்துவந்த தூண்கள் மிகப் பருத்தவைகள். அத்தனை பாரிய தூணுக்குச் செலவில்லை. அவைகளைக் காட்டிலிருந்து கொண்டுவந்து தரையில் நாட்டி உரப்படுத்த வெகு அவஸ்தைப்பட்டேன். இம்மதில் வேலை முடித்து, இதன் புறத்தில் இரண்டடுக்குக் கழுப்பற்றை அணைசுவர் வைத்தெழுப்பியபின், இனி எவராவது கரையில் இவ்விடத்துக்குச் சமீபத்தில் வரச் சம்பவிப்பினும், மனுஷர் குடியிருக்கும் வீட்டுக் குறிப்பு அவர்களுக்குப் புலப்படாது. இத்தனை பாடுபட்டு நானெழுப்பிய மதிலின் அரும்பயன் ஒரு சமயத்தில் விளங்கிற்று. அதை இனிமேற் சொல்வேன்.

இக்காலத்தில் மழை யில்லாதிருக்கும்பொழுது, பிரதி தினமும் வேட்டையாடுவதற்குக் காட்டுக்குப் போய் வந்தேன். போம்பொழுது ஏதாயினும் எனக்கனுகூலமான ஜந்து

களை அப்போதப்போது கண்டு அகப்படுத்தினதுண்டு. நான் கண்டவற்றுள் விசேஷமானவை ஒருவகைக் காட்டுப்புறாக் கள். அவை காட்டுப்புறாக்களைப்போல மரத்திலல்ல, வீட் டுப்புறாக்களைப்போல மலைப் பொந்துகளிற் கூடுகட்டி யிருந் தன. ஒருநாள் கூட்டிற் சில குஞ்சுகள் பிடித்துக் கொண்டு வந்து வளர்த்து, வசப்படுத்தப் பார்த்தேன். இறகு முளைத்து வளர்ந்தபின், அவை பறந்தோடிவிட்டன. இரை கொடுக்க என்னிடத்தில் ஒன்றுமில்லாததனால், அவை பறந்துபோயின வென்றெண்ணுகிறேன். பெரும்பாலும் நான் புறாக்கூடுகள் கண்டு குஞ்சுகளைப் பிடித்து வந்து அடித்துப் புசித்தேன். புறாவிறைச்சி நாவிறகு மிக வி[illegible]யிருந்தது.

இனி வீட்டு விசாரணை தவறாமல் நடத்திவருதற்குச் சாமான தட்டுமுட்டுகள் அநேகம் எனக்கில்லாதிருந்தன. அவைகளைச் செய்ய நான் நிர்வாகி யல்லவென்று நினைத்தேன். எத்தனையோ பிரயத்தனங்கள் செய்தும், ஒரு பீப்பா மூட் டுவதற்கு எவ்விதத்திலும் என்னாலாகவில்லை. சிறிய பீப்பாக் கள் இரண்டொன்று என் வசமிருந்தன. அவைகளை மாதிரி யாய்க்கொண்டு, ஒரு பெரும் பீப்பா செய்வதற்கு அநேக வாரமட்டு முழைத்தேன். உழைத்தும், எனக்கு வகை தெரிய வில்லை. பீப்பாவின் இரு பக்கங்களை யிசைப்பதற்கும், தண் ணீர் பொசியாமற் பலகைகளை நன்றாய்ப் பொருத்தி மூட்டுவ தற்கும் எனக்கு புத்தி வாராததனால் இவ்வேலை என்னால் முடியாதென்று விட்டுவிட்டேன்.

தீபமேற்றுவதற்கு மெழுகுவர்த்திக்கும் வழியில்லை: ஆத லால், சூரியன் அஸ்தமித்து ஏழு மணியளவில் இருட்டாக வே, நான் பெரும்பாலும் படுத்து நித்திரைசெய்தேன். நான் ஆபிரிக்காவுக்குப் பிரயாணம் போயிருந்தபொழுது, தேன் மெழுகுவர்த்தி செய்து விளக்கெரித்ததை மறந்துபோகவில்லை. இவ்விடத்தில் நான் தேன்மெழுகு வைத்திருக்கவில்லையே. இதற்கு ஒரு யுத்தி செய்தேன். வெள்ளாடடித்தபொழுது எடுத்து வைத்திருந்த நிணத்தை உருக்கி, களிமண்ணிற் செய்து வெயிலிற் காயவைத்த தகழியில் விட்டு, பழங்கயிற் றுப் புரி குலைத்துத் திரித்த வர்த்தியிட்டு விளக்கெரித்தேன். இவ்விளக்கு ஒளி மெழுகுவர்த்தியைப்போலப் பிரகாசிக்கா

திருந்தும், என் காரியத்திற் குதவிற்று. எனது வேலைகள் நடந்தேறி வருங்காலத்தில், ஒருநாள் என் பண்டங்களைப் பிரித்துப் பார்த்தபொழுது, கோழி வாத்து முதலியவை களுக்குத் தானியம் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு பையைக் கண்டேன். அதில் தானியம் வைக்கப்பட்டது இந்தப் பிர யாணத்திலல்ல, கப்பல் **லிஸ்பன்** துறையினின்று பிரயாணப் பட்டபொழுதென்று நினைக்கிறேன். செலவழிந்தது போக, மீந்திருந்த சொற்ப தானியத்தை எலிகள் பட்சித்தன வென்று முன்னேரிடத்திற் சொன்னேனே; பைக்குள் வெற் றுமியும் மண்ணுமிருந்தன. மேகத்தில் மின்னுண்டாம் பொழுது வெடிமருந்து எரிந்துபோகாதபடி அதை வெவ் வேறு பைகளிலும் பெட்டிகளிலும் பிரித்து வைத்தேனே. மருந்து போட்டு வைப்பதற்கோ, வேறு எதற்கோ நான் அந்தப் பையை எடுத்து அதற்குள்ளிருந்த உமியையும் மண் ணையும் என் கோட்டை மதிலின் ஒரு பக்கத்தில் உதறிக் கொட்டினேன்.

நான் அதை உதறிக் கொட்டினது மேற்சொல்லிய பெரு மழை வரச் சில தினங்களுக்குமுன். கொட்டப்பட்டவை களை நான் கவனிக்கவுமில்லை, பிறகு அதைக்குறித்து எனக்கு ஞாபகம் வரவுமில்லை. ஒரு மாசமளவு சென்றபின் ஏதோ பசுமையான பயிர் தரையில் முளைத்து வளர்ந்திருக்கக் கண்டு, அதன் விவரம் எனக்குத் தெரியாதென்றிருந்தேன். பின் னும் சிலநாட்கள் சென்றபின் பத்துப் பன்னிரண்டு பைங் கதிர்களைக் கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டேன். நான் கண்டது ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலுமுள்ள யவை வர்க்கம்.

அவ்வேளையில் எனக்குண்டான ஆச்சரியமும், மனமலை வும் இவ்வளவென்று சொல்லக்கூடாது. நான் இதுவரை யில் பரத்திற்குரிய சிந்தனைகொண்டு நடக்கவுமில்லை. தெய் வபக்தி இன்னதென்று எனக்குத் தெரியவுமில்லை. எனக்கு வரும் நன்மை தீமைகளனைத்தும் தற்செயலாயாவது, மனு ஷர் சிந்தனையின்றிச் சொல்வதுபோலத் திருவுளத்தின் செ யலாயாவது வருகின்றனவென்று எண்ணியிருந்தேன். கட வுள் மனுஷருக்கு நன்மை தீமை வருவிக்கும் காரணம் இன்ன

தென்றாயினும், பிரபஞ்சத்தைத் தமது சித்தத்திற்கிசைய நடத்தும் கிரமம் இப்பெயர்ப்பட்டதென்றாயினும் நான் விசாரித்ததேயில்லை. பிறதேசத்தில் விளையும் யவை அத்தீவில் தன் நிலம்போல முளைத்துச் செழித்து விளைந்ததைக் கண்டு, அது எவர் மூலமாய் உற்பத்தியானதென்று விவரந் தெரியாமல் மயங்கினபின், இவ்வாரணியத்தில் மனுஷர் முகங் காணுமல் நிர்ப்பந்தப்படு மேழையாகிய என் மீதிரங்கி, ஜீவ காருண்ணிய பகவான் எனது சம்ரட்சணையின்பொருட்டு அதை வித்தின்றி அற்புதமாய்த் தோற்றுவித்தாரென்று நினைத்தேன்.

இவ்வாறு நினைத்து, உள்ளமுருகிக் கண்ணீர் விட்டழுதேன். அற்ப புழுவிற்குச் சமானனுகிய என்னை இரட்சிக்கும்பொருட்டுச் சர்வத்திற்கும் வல்ல அற்புதமூர்த்தி எனக்கு இத்தனை சகாயஞ் செய்தது பின்னும் என் பாக்கியந்தானென்று களிகூர்ந்தேன். அன்றியும், யவைக்குச் சமீபத்தில் மலைச்சார்பில் நெற்பயிர் வளர்ந்து மதர்த்திருக்கக் கண்டு, மேலுமேலும் ஆச்சரியப்பட்டேன். நான் ஆபிரிக்கா கரையில் இறங்கியபொழுது வளரும் நெற்பயிரைப் பார்த்திருந்ததனுல், இந்தப் பயிரைக் கண்டவுடன் நெர்பயிரென்றறிந்தேன்.

எனது ஆதாரணைக்காக இந்தத் தானிய வர்க்கங்கள் தேவகதியா யுற்பத்தியாயினவென்று நான் எண்ணியதுமன்றி, தீவிற் பின்னும் பயிர்வகை யுண்டெனத் துணிவுற்று, நான் முன்னுலாவிய விடங்களுக்கு மீண்டும் போய், கோடிகள், குடாக்கள், மலைச்சார்புநிலம் எங்கும் பார்த்தேன். பயிர் என் கண்ணுக்கெதிர்ப்படவில்லை. பிறகு ஒருநாள் கோழிக்குஞ்சுகளுக்குத் தானிய இரை வைத்திருந்த கோணிப் பையை உதறின ஞாபகம் எனக்கு வரவே, எனது பிரமை தெளிந்தது. அதனுடன் கடவுள் எனக்கு அற்புதமாய்ச் செய்த நன்றியையும் மறந்து, இதெல்லாம் உலக வியற்கைதானென் றெண்ணினேன். நினையாதிருக்கும் வேளையில் ஆச்சரியமானவிதமாய் எனக்காகாரத்திற்குதவும் விளைபயிர் தோன்றியதைப்பற்றி, நான் கடவுளுக்குத் துதிசெலுத்துவதல்லவா

முறைமை? எலியரித்துப் பழுதாக்கின வுமிக்குள் பத்துப் பன்னிரண்டு தானியம் பழுதற்றிருக்கவும், மலைநிழல் படியு மிடத்தில் நான் அதை உதறிவிடவும், அது உடனே முளைத்து வளர்ந்து விளையவும் செய்தது தெய்வச்செயலன்றி வேறென்ன? வெற்றுமிக்குட் பத்துப் பன்னிரண்டு தானியம் ஒட்டியிருந்து தரையில் உதறிக் கொட்டிவிடப்பட்டாலு மென்ன? வானத்தினின்று தேவகதியாய் விழுந்தாலுமென்ன? இருவிதமு மற்புதந்தானே. மேலும், நானுதறின மணி நிழலொதுக்கில்லாத விடத்தில் விழுந்திருக்குமானால், அது எரிந்து நாசமாய்ப்போமே.

அறுக்கும் பருவமறிந்து, ஜூன் மாச முடிவில் நான் கதிரறுத்து, ஒரு மணியையும் போக்கடிக்காமல் பத்திரமாய் வைத்திருந்து விதைக்கும் பருவத்தில் விதைத்தால், காலக்கிரமத்தில் எனதாகாரச் செலவிற்கு வேண்டுமட்டும் தானியம் விளையுமென்றெண்ணியிருந்தேன். விதைப்புக்கால விவரமறியாமல், வேனிற்காலந் தொடங்கச் சற்றுமுன் தானியத்தை விதைத்தேன். அது நன்றாய்ச் சேஷ்டிக்கவில்லை. இப்படி மூன்றுவருஷ வரையில் விளைந்த தானியம் விதை மணிக் குதவியதன்றி, எனக்குச் சோற்றுக்கு மிஞ்சவில்லை. நாலாம் வருஷத்து விளைச்சலில்மாத்திரம் சிறிது மிஞ்சியது. அதுவும் பசியடங்க உண்ணுதற்குப் போதாது. அதை வைத்திருந்து மிதமாயுண்டு நாட்கழித்தேன். இவ்வரலாறுகளை முறைமையானவிடத்திற் சொல்வேன்.

யவையன்றி, நான் முதலிற் கண்ட நெற்பயிர் இருபது முப்பது. விளைந்த நெல்லை யறுத்து விதைமணிக்கு வைத்திருந்து, மேற்சொல்லியவாறு வருஷந்தோறும் விதைத்தேன். அதுவும் எனக்குப் போஜனத்திற் குதவிற்று. முதலிற் சில காலம் ரொட்டி சுட்டுத் தின்றேன். அப்புறம் சோறு சமைக்கும் முறை தெரியவந்தது. இனி விட்ட குறையினின்று தினவர்த்தமான மெழுதவேண்டுமே.

இந்த மூன்று நாலு மாசவரையில் அலுப்பற்றுழைத்தேன். இது குடியிருக்கும் வீடென்று புறத்திலேதும் அடையாளந் தோன்றாவண்ணம் ஏப்பிரில்மீ 14உ நான் மதிலின்

வாயிலே யடைத்து, ஏணி வைத்தேறி உட்செல்வதும் வெளிப் படுவதுமாயிருந்தேன்.

ஏப்பிரில்மீ 16வ.—இன்றைக்கு ஏணிவேலை முடிந்தது. மதிற்புறத்தில் ஏணியைச் சார்த்தி ஏறியபின், அதைத் தூக்கி மதிலின் உட்புறத்திற் சார்த்தி இறங்கினேன். மதிலில் எங் கும் வாசலில்லை. அதனுள் எனக்கு இருக்க, படுக்க, உலாவ, வேலைசெய்ய இடம் விஸ்தாரமாயிருந்தது. மதில் ஏறினு லன்றி, எவராவது எந்த விலங்காவது புறத்தினின்று உட் செல்லக் கூடாதிருந்தது.

மதில்வேலை முடிந்த மற்றநாள் நான் பட்ட பாடெல்லாம் வியர்த்தமாகி, எனக்கும் பிராணுபாயங் கிட்டியிருந்தது. சம்பவித்த ஆபத்து இது, — கூடாரத்தின் புறக்கடையில் குகைவாயிலில் நான் எனது வேலைப்பாட்டி விருக்கும்பொ ழுது, எனக்கு மிகுந்த திகிலும் ஆச்சரியமு முண்டாகத் தக்கதாக, மதில் முகட்டு மண்கண்டம் சடிதியிலிடிந்து விழுந்தது. மலை உச்சியின் ஓரத்தினின்றும் மண்ணிடிந்து என் தலைக்கு நேரே விழுந்தது. குகைக்குள் நிறுத்தின தூண்கள் வெடித்துச் சிதறின. உடனே என்னுள்ளங் கலங் கித் திகைத்தது. முன் ஒரு முறை சம்பவித்தபடி குகை முகடிடிந்து விழுந்ததன்றி, வேறேதுங் காரணமுண்டென்று நா னெண்ணவில்லை. இடிந்த மண்கண்டத்தில் அகப்பட்டு இறந்து போகாதபடி, ஏணி சார்த்தியிருக்குமிடத்திற்கு விரைந்தோ டினேன். அங்கே நின்றாலும் மலை இடிந்து என் தலைமேற் சரிந்து விழுமென்றஞ்சி, மதில் ஏறினேன். மதிற்புறத்தரை யில் இறங்கினவுடன் பூமி மிகவும் அதிர்ச்சியாய்க் கம்பித்த தென்று அறிந்தேன். மிகப் பலமான கட்டடமும் நிலை பெயர்ந்து விழத்தக்க அதிர்ச்சியுடன் எட்டு நிமிஷத்திற் கொருமுறை மூன்றுதரம் கம்பித்தது. கடற்கரையை யடுத்து எனக்கு அரைமைல் தூரத்திலுள்ள ஒரு மலை யின் சிகரம் இடிந்து விழுந்தது. காது செவிடுபடத்தக்க அத்தனை பயங்கரமான பெரு முழக்கத்தை நான் பிறந்த நாள்முதல் இதுவரையிற் கேட்டறியேன். பூமி அதிர்ச் சியினுற் கடலும் நிலையற்றுக் கலங்கித் தேங்கிற்று. தீவுத்

தரைக்கீழ் அதிர்ச்சியிலும், கடலின் அடித்தரைக்கீழ் அதிர்ச்சி அதிகமென்று நம்புகிறேன்.

முன் ஒருபொழுதும் பூகம்பமுண்டானது அறியாததனு லும், அறிந்தவர்கள் சொல்லக் கேட்டிராததனுலும் அவ்வே ளையில் நான் திகைத்துக் கலங்கி அறிவழிந்து, பிரேதத்திற் கொப்பானேன். சமுத்திரத்தில் அலைக் கிளர்ச்சியினுற் கப் பல் நிலையற்றுத் தத்தளிக்கும்பொழுது, அதில் இருப்பவர்க ளுக்கு எப்படியோ, அப்படியே எனக்கும் பூமி அதிர்ச்சியி னுற் குடல் புரண்டு, வாய்க்குமட்ட லுண்டாயிற்று. தூங்கு பவன் சடிதியில் ஏதும் சத்தங்கேட்டு விழிப்பதுபோல, திகைத்து மயங்கியிருந்த நான் மலை சரிந்து விழுந்த சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திகிலடைந்தேன். எனது கூடாரத் தின்மேல் மலை விழ, அதுவும், அதற்குள்ளிருந்த வீட்டுத் தட்டுமுட்டுகள் சாமான்களனைத்தும் முழுகிப்போமென்னும் நினைவு தவிர, என் மனம் மற்றொன்றையு மெண்ணவில்லை. இப்படியே இந்த இரண்டாம்முறையும் என் மனம் சோர்ந்து குன்றிப்போயிற்று.

மூன்று முறை பூமி அதிர்ந்ததன்மேல், அப்புறம் சற்று நேரமட்டும் அதிர்ச்சி யுண்டாகாததனுல், நான் சற்று மனந் தேறினேன். தேறியும், ஜீவனோடே முழுகிப்போவே னென்று பயந்து மதிலேறி உட்செல்ல எனக்குத் துணிவு வரவில்லை. மனத்தளர்ச்சியடைந்து கலக்கமுற்று என்ன செய்வதென்று அறியாமல், தரையி லுட்கார்ந்தபடி யிருந் தேன். இத்தனை பிராணசங்கடம் உண்டானபொழுது, இயற்கையாய் எவரும் நினைப்பதுபோல், "ஈசனே என்மீது இரங்கியருளும்!" என்னும் நினைவொன்றொழிய, வேறு பர மார்த்த சிந்தனை கிஞ்சித்தும் எனக்குண்டாகவில்லை. வந்த ஆபத்து நீங்கவே, அந்த நினைவு மகன்றது.

நான் உட்கார்ந்தவண்ணமா யிருக்கையில், ஆகாயத்தில் மேகம் நெருங்கிக் கறுத்து மழைக்கோல முண்டாயிற்று; அடுத் துக் காற்றுக் கிளம்பி வரவர உரக்க, அரைமணி நேரத்திற் குள் பயங்கரமான புயலடித்தது. சடிதியிற் கடல் கோஷி த்து நுரை சிதற அலை புரண்டு கரையடுத்த தரையிற் பெரு

கிற்று. விருக்ஷங்கள் வேர் பாறி விழுந்தன. அடித்த புயல் மிகப் பயங்கரமானதாயிருந்தது. மூன்று மணிநேரம் சென்றபின், அதன் உக்கிரம் தணிந்து, அப்புறம் இரண்டு மணிநேரஞ் சென்று காற்றுச் சுத்தமா யடங்க, சோனுமாரியாக மழை வருஷித்தது.

இவ்வளவு நேரமட்டும் நான் அஞ்சி ஒடுங்கி நிலத்தில் உட்கார்ந்தபடியிருந்தேன். இருக்கையில், பூமி அதிர்ச்சி உண்டானதனுற் காற்றடித்து மழை பெய்தது. இனிப் பூமி அதிருமென்று அஞ்சவேண்டுவதில்லை; மதிலேறிக் குகைக்குட் போகலாமெனச் சடிதியில் எனக்குள் எண்ணம் பிறந்தது. இவ்வெண்ணம் பிறக்கவே, மனத்தளர்ச்சி நீங்கித் துணிவு வந்தது. எனது எண்ணத்திற்கு மழையும் அனுகூலமாயிருந்ததனுல், நான் உட்சென்று கூடாரத்திற்குள் இருந்தேன். கூடாரத்தைத் தரைமட்டமாய் அடித்து விழுத்தும்படி அத்தனை உரத்து மழை பெய்தது. ஆனதுபற்றி, குகை இடிந்து தலைமேல் விழுமென்று மிகவும் அஞ்சிக் கிலேசப்பட்டிருந்தும், குகைக்குட் சென்று ஒதுங்கினேன். அதைவிட வேறு கதி இல்லையே.

இவ்வாறு உரத்துப் பெருமழை பெய்ததனுல், வரவர அதிகரித்த வெள்ளத்திற் குகை முழுகிப்போகாமல் நீரோடி வற்றும்படி மதில் அடியைத் தொளைத்து மதகு வைக்கவேண்டியிருந்தது. சற்றுநேரங் குகைக்குள்ளிருந்து, அப்புறம் பூமியதிர்ச்சி இல்லையென்று கண்டு, அச்சந் தெளிந்து மனந் தேறினேன். எனக்குச் சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும்படி பண்டசாலைக்குப் போய், ஒரு கிண்ணம் சாராயங் குடித்தேன். கைக்குக் கிட்டின சாராயம் செலவானதன்மேல் பின்னுங் கிடையாதென்றெண்ணி, நான் குடிக்கும்பொழுதெல்லாம் மிக மிதமாய்க் குடிப்பது வழக்கம்.

அன்றிரா முழுதுமன்றி, மற்றநாட் பகலும் மதியந் திரும்பிச் சற்றுநேரம் செல்லுகிறவரையில் மழை ஓயாமற் பெய்தது. நான் வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பப்படவில்லை. வரவரக் கிலேசம் நீங்கியதனுல், இனி என்ன உபாயம் செய்யவேண்டுமென்று யோசிக்கத் தொடங்கினேன். இத்தீவில்

அப்போதப்போது பூமி கம்பிப்பதுண்டானல், இந்தக் குகையில் வாசஞ்செய்வது எனதுயிருக்கு அபாயமாய் முடியும். என்றேனும் ஒருநாள் நான் முழுகி இறத்தற்கு ஐயமில்லை: ஆதலால், எங்கேயாயினும் ஒரு வெளியிற் குடிசை கட்டியிருந்து, அதைச் சுற்றிலும் இம்மதிலுக்கொப்பாய் அரணை மதில் எழுப்பி, துஷ்டர் பயமும், துஷ்ட விலங்குகள் பயமும் இல்லாதிருக்க வேண்டுமென்று நினைத்தேன்.

இப்படி நினைத்து, செங்குத்தாய் வளர்ந்து கவிந்திருந்த மலையொதுக்கின் அடித்தரையில் நான் அடித்த கூடாரத்தை வேறு இடத்திற்குப் பெயர்த்துக் கொண்டுபோகத் தீர்மானஞ் செய்தேன். இன்னும் ஒருமுறை பூமியதிர்ச்சி யுண்டாமானல், அம்மலை என் கூடாரத்தின்மீது விழுவது நிசம். மற்ற நாள் எப்பிரில்மீ 19உ. அன்றைத்தினமும், அடுத்த தினமும் கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோகும் வகையைக்குறித்தும், இட நிதானத்தைக்குறித்தும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தேன்.

துடிக்கப் பதைக்கப் பூமிக்குள் முழுகிப்போவேனென்று அஞ்சியிருந்ததுபற்றி, எனக்கு அயர்ந்த நித்திரை வரவேயில்லை. அடைப்பில்லாத வெளியிலிருப்பதும் அபாயமாய் முடியுமென்று ஏக்கமுற்றிருந்தேன்; ஆனாலும், எனது வாசஸ்தானத்தைக் கண்ணோடிப்பார்த்து, என் சொத்துகள் அனைத்தும் அங்கங்கே ஒழுங்காய் வகுத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு, நான் மதிலடைப்புக்குட் கிலேசமற்றிருந்ததை எண்ணியபொழுது, கூடாரத்தைப் பெயர்த்துக் குடியெழும்பிப் போக எனக்கு மனம் வரவில்லை.

இப்படி இருக்கையில், எனக்குள் இன்னும் ஒரு எண்ணம் பிறந்தது. கூடாரத்தைப் பெயர்த்துக் கொண்டுபோய் அடித்து மதில் எழுப்புவதற்கு நெடுநாட் செல்லும். இவ்விடத்திலேயே இன்னு மிருந்துகொண்டு, மற்றோரிடத்திற் கூடாரமடித்து, மதில் வளைத்து முடிந்தபின், அக்கூடாரத்திற் போய் வாசஞ்செய்யலாமென்பதாகத் தீர்மானித்து, மனக்கலக்கமின்றிக் கூடிய சீக்கிரத்திற் பக்குவமான இடம் பார்த்து,

விருத்தாகாரமாய் இரண்டு நிரைக் கொம்பு நாட்டி, கப்பல் வடம் பொதிந்து, மதில் கட்டிப் பலப்படுத்தியபின், அதிற் கூடாரமடிக்க வேண்டுமென்று சித்தஞ்செய்தேன். நான் இந்தப்பிரகாரம் சித்தஞ்செய்தது, 21உ.

ஏப்பிரில்மீ 22உ.—மற்ற நாட் காலையில் எனது சங்கற்பத்தை நிறைவேற்றுதற்குரிய சாதனங்களைச் சிந்திக்கத் தொடங்கினேன். கருவிகளில்லை. பெருங் கோடரிகள் மூன்றும், இந்தியருக்கு விற்கக் கொண்டுபோன கைக்கோடரிகள் திரளானவைகளும் இருந்தன. பெரும்பாலும் கணுவும் உறுதியுமுள்ள மாமுதலியவைகளைத் தறித்துக் கொம்பு வெட்டியதனால், கைக்கோடரிகளின் கூர் மழுங்கி, வாய்த்தாரைகள் இடைக்கிடை மடிந்துபோயின. சாணைக் கல் ஒன்றிருந்தது; அதை இயக்கி ஆயுதங்களுக்குச் சாணை பிடிக்க இசையவில்லை. ராஜதர்ம நிபுணர் முக்கியமான அரசாட்சி விஷயங்களைக்குறித்துச் சிந்திப்பதுபோலும், நீதிபதிகள் ஒருவனுடைய ஜீவனையும் மரணத்தையும்பற்றிய விவகாரத்தைத் தீர்க்க விசாரணை செய்வதுபோலும் நான் சாணைக்கல்லை உபயோகப்படுத்தும் வகையைக்குறித்துப் பெயர்த்துப் பெயர்த்து அழுத்தி நினைத்தேன். நினைத்து வருமளவில் ஒரு சக்கரத்திற் கயிறு சுற்றி, அக்கயிற்றின் முனையைக் காலில் மாட்டி இழுத்தால், சக்கரம் சுழலுமென்றும், சுழலும் கல்லில் இருகையினாலும் ஆயுதங்களைச் சாணைபிடிக்கலாமென்றும் எனக்குள் யுக்தி பிறந்தது.— குறிப்பு. இம்மாதிரியான யந்திரத்தை நான் இங்கிலாந்தில் முன் ஒருபொழுதும் பார்க்கவுமில்லை, ஒருவேளை பார்த்திருப்பினும், அதன் வேலைப்பாட்டைக் கவனிக்கவுமில்லை. சீமையில் அது மிகவும் சாதாரணமான யந்திரமென்று பிறகறிந்தேன். எனது சாணைக்கல் மிகப் பெரிதும் பளுவுமாயிருந்தது. இந்த யந்திரத்தைச் செய்து முடிக்கச் சரியாய் ஒரு வாரஞ் சென்றது.

ஏப்பிரில்மீ 28, 29உ.—இந்த இரண்டுநாள் முழுதும் எனது ஆயுதங்களைச் சாணைபிடித்தேன். சாணைக்கல் வியக்கும் யந்திரம் தடையின்றி உபயோகப்பட்டது.

எப்பிரில்மீ 30உ.—ரொட்டி வரவரச செலவாய்ப்போன தறிந்து, இன்னும் இவ்வளவு இருக்கிறதென்று கண்டு, எனது உண்டியைச் சுருக்கி, நாளுக்கு ஒரு பிஸ்கிட் விகிதம் தின்றுவந்தேன். இதைக்குறித்து எனக்கு மிகுந்த வியசனம் உண்டாயிற்று.

## 6. அத்தியாயம்.

கப்பல் மேற்சொல்லிய புயல் அடித்த காலத்தில் தள்ளுண்டு சமீபத்தில் வந்து தரையிற் பொறுத்தது. அதில் இருந்த ஆவசியகமான வஸ்துக்கள் பலவற்றை நான் இறக்கிக் கொண்டுவந்தது. பெரிய கடல் ஆமை ஒன்று பிடித்தது. எனக்குச் சுரமும் நளிர் சுரமும் கண்டது. பயங்கரமான சொப்பனம் கண்டதும், அதைக்குறித்துப் பலத்த சிந்தனைகள் உண்டானதும். கரையில் அடைந்த சடலோடிகள் பெட்டி ஒன்றில் கிறிஸ்துவேத புத்தகம் ஒன்றைக் கண்டெடுத்து வாசித்து விசனம் தெளிந்தது.

மேமீ 1உ.—இன்று காலையில் கடற்கரையைப் பார்த்தேன். அப்பொழுது பெருக்குவேளை அல்ல. கண்ணுக்குப் பொலிவான ஏதோ ஒரு பொருள் கரையிலிருந்தது. அது ஒரு பீப்பாவைப்போலக் காணப்பட்டது. கிட்டப்போய்ப் பார்த்தேன். சிறிய பீப்பா ஒன்றும், சமீபகாலத்தில் அடித்த புயலாற் கரையிலொதுங்கிய உடைந்த கப்பற் பலகைத் துண்டுகள் இரண்டு மூன்று மிருந்தன. அக்கப்பல் மணற்குன்று தட்டிநின்ற எங்கள் உரு. உடைந்த கப்பல் நின்ற இடத்தைப் பார்த்தேன். அது முன்னிலும் அதிகமாய் நீர்மட்டத்திற்குமேல் கிளம்பியதாகத் தோன்றிற்று. பீப்பாவைத் தரையில் உருட்டிக் கொண்டுவந்து பரீட்சை பார்த்தேன். அது வெடிமருந்துப் பீப்பா. அதற்குள் நீர் ஏறிச் சுவறியதனால், மருந்து நனைந்து இறுகிக் கற்போல் உரத்திருந்தது. ஆனாலும் பெரிதல்லவென்றெண்ணி, பீப்பாவைப் பின்னும் சற்றுத்தூரம் உருட்டிக் கொண்டுவந்துவிட்டபின், சேதப்பட்ட கப்பலில் இன்னும் பீப்பா இருக்குமோவென்று பார்க்கும்படி மணல்மேற் போகக் கூடியவரையிற்

போனேன். கிட்டப்போய்ப் பார்த்து, அது நிலைபெயர்ந்திருக் கக் கண்டு, ஆச்சரியப்பட்டேன். முன்பு மணலிற் புதைந் திருந்த முன்னணியம் ஆறு அடி வரையிற் கிளம்பியிருந்தது. நான் பலதரம் போய்ப் பண்டபதார்த்தங்கள் எடுத்துக் கொண்டுவந்தபின், மோதும் அலையின் அதிர்ச்சியால் துண்டு துண்டாய் உடைந்து உருக்குலைந்த பின்னணியம் மேலே எற்றுண்டு ஒஞ்சரித்துக் கிடந்தது. பின்னணியத்திற்கடுத்த பக்கத்தில் மண்ணடைந்து அணைபோல் வளர்ந்திருந்தது. முன்பு நான் கப்பலுக்குப் போகும்பொழுதெல்லாம் கால் மைல் தூரமட்டும் நீந்திப் போகும்படி நீர் ஆழமாயிருந்த தென்று சொன்னேனே; இப்பொழுது வற்றுவேளையில் தாராளமாய் நடந்துபோகக் கூடியதாய் மணலணை வளர்ந் திருக்கக் கண்டு, முதலில் இது என்ன ஆச்சரியமென் றெண் ணினேன். பிறகு பூமி அதிர்ச்சியால் இப்படியானதென்று எனக்குள்ளே சமாதானம் பண்ணினேன். மேலும், பூமி யதிர்ச்சியால் உருக்குலையாதிருந்த கப்பலின் அம்சம் பின்னும் உடைந்துபோக, நிலைபெயர்ந்த துண்டு முதலானவைகளை அலையும் காற்றும் அடித்து, நாளுக்குநாள் கரையி லொதுக்கி விட்டனவென்று நினைத்தேன்.

எனது கூடாரத்தைப் பெயர்த்து வேறிடத்தில் அடிக்க வேண்டுமென்று எண்ணிய எண்ணத்தை இந்தச் சங்கதியி னால் மறந்துபோனேன். கப்பலுக்குட் போவதற்கு அனுகூ லப்படுமோவென்று அன்றைத்தினம் என்னால் ஆகத்தக்க உபாயங்களெல்லாம் செய்து பார்த்தேன். கப்பலின் உள் ளிடமுழுதும் மண் ஏறியிருந்ததனால், அதற்குட் போகக் கருதுவது வியர்த்தமென்று கண்டேன். வரும் ஆபத்துக்க ளனைத்தையும் தாங்கி மனம் தளராதிருக்கப் பயின்றதனால், அவ்வுருவில் எனக்கு அகப்படுவதெல்லாம் எதற்காயினும் உதவுமென்றெண்ணி, பிரித்தெடுக்கத் தக்கவைகளை எடுக்கத் தீர்மானித்தேன்.

மேமீ 3உ.—வாள் கொண்டுபோய் ஒருத்திரத்தை முடிய அறுத்தேன். அதில் உருவின் மேற்பாகத்திற் சில உறுப்பு கள் இசைக்கப்பட்டிருந்தனவென்று எண்ணினேன். உத்தி ரம் அறுத்து முடிந்தபின், உயர்ந்திருந்த கப்பற் பக்கத்தின்

உள்ளிடத்தில் அடைந்த மணலை என்னால் ஆமளவிற்கு தோண்டி வெளிப்படுத்தினேன். நீர்ப்பெருக்குண்டாகவே இனிமேல் வந்து பார்க்கலாமென்று விட்டுவிட்டேன்.

மேமீ 4௳.—இன்றைக்கு மீன் பிடிக்கப் போனேன். ஆ ரத்திற்குதவிய ஒரு மீனாவது நெடுநேரவளவாயி லகப்படவில்லை அலுப்புற்றுக் கை சலித்துத் திரும்பிப்போகவிருந்த சமய தில் ஒரு கடற்பன்றிக்குட்டி அகப்பட்டது. வடத்தின் பு யினால் தூண்டிற் கயிறு திரித்து வைத்திருந்தேன். தூண்டி கிடைக்கவில்லை. எப்படியும் எனக்கு ஆகாரத்துக்கு வே டியவளவு பெரும்பாலும் அந்தக் கயிற்றால் உபாயமாய் மீ பிடித்தேன். பிடித்த மீனெல்லாவற்றையும் வெயிலிற் காய போட்டுக் கருவாடாக்கிப் புசித்தேன்.

மேமீ 5௳.—கப்பலுக்குப் போய், ஒரு உத்திரத்தை குறுக்கே யறுத்து, அடித்தட்டினின்று பெரிய தேவதார பலகைகள் மூன்றைப் பிரித்தெடுத்து, ஒன்றாய்த் தொடுத் விட்டேன். நீர் பெருகியபொழுது, அவை ஓடிக் கரையி ஒதுங்கின.

மேமீ 6௳.—கப்பலுக்குப் போய், இருப்புச்சலாகை மு லியவைகளை வெகு பிரயாசத்துடன் கழற்றி எடுத்துக்கொண் மிகவும் அலுப்புற்று, இனி இந்த உழைப்பு வேண்டாமென் திரும்பிவந்து வீடு சேர்ந்தேன்.

மேமீ 7௳. — இன்றைக்கும் உருவுக்குப் போனே வருந்தி உழைக்கக் கருதியல்ல. கப்பல் பளுவினாற் பிரிந் போயிருந்தது. உத்திரங்கள் அறுக்கப்படவே, கப்பற் ப கை முதலிய உறுப்புகள் அநேகம் பொருத்துக் குலைந் போயிருந்தன. உருவின் உள்ளிடம் என் கண்ணுக்கு ந ாய்த் தெரிந்தது. அதில் அதிகபாகத்தில் நீர் ஏறி ம அடைந்திருந்தது.

மேமீ 8௳.—தண்ணீரும் மண்ணுமின்றி வெளியாயிரு கப்பலின் மேற்றட்டுப் பலகைகளை நெகிழ்த்துப் பிரித் எடுத்துவரும்படி கட்டப்பாரை கொண்டுபோய், இரண்டு ப கைகளைப் பிரித்தெடுத்து, பெருக்குவேளையிற் கரைப்

காண்டுவந்து சேர்த்தேன். மற்றநாள் வேலைக்கு வேண்டு மென்று கட்டப்பாரையை உருவில் வைத்துவிட்டு வந்தேன்.

மேமீ 9உ.-கப்பலுக்குப் போய், கவைக் கட்டப்பாரை ய அதற்குட் புகுத்தி, அநேக பீப்பாக்கள் தட்டுப்பட்ட கா ண்டு, அவைகளை நெகிழ்க்கேன். உடைத்து எடுக்க முடி யில்லை. அன்றியும், அங்கிலேய் காரீயத் தகட்டுச் சுருளுந் ட்டுப்பட்டது. பளுவாயிருந்ததனால், அதைப் பெயர்த்துத் ள்ளுவதற்கு என்னால் ஆகவில்லை.

மேமீ 10, 11, 12, 13, 14உ.—இவ்வைந்துநாளும் ருவுக்குப் போனேன். அநேக துண்டுமரங்கள், பலகைகள், னத்த பலகை, இரும்பு இருநூறு முந்நூறு இறுத்தல் அகப் ட்டன.

மேமீ 15உ.—ஒரு கைக்கோடரியின் வாயைக் காரீயத் கட்டுச் சுருள்மேல் வைத்து, மற்றக் கோடரிப் பிடங்கினால் டித்து, ஒரு துண்டுத் தகடு வெட்டலாமென்று கைக்கோடரி ் இரண்டு கொண்டுபோனேன். தகட்டுச் சுருள் தண்ணீ க்குள் ஒன்றரை அடி ஆழ்ந்திருந்தது; ஆனதுபற்றி, கோட யின் வாய்த்தாரை தகட்டிற் பொருந்தும்படி அடிக்கச் சந் ப்பப்படவில்லை.

மேமீ 16உ.—இராத்திரி கடும் புயல் அடித்தது. உரு ன் எஞ்சிய பாகம் நீர் மோதிப் பின்னும் உடைந்ததாய்க் ணப்பட்டது. நான் புறாச் சுடக் காட்டுக்குப் போய் நாழி க சென்றதனால், உருவுக்குப் போவதற்கு முந்தி நீர்ப்பெ க்கு வேளையாயிற்று. அன்று போகவில்லை.

மேமீ 17உ.-எனக்கு இரண்டுமைல் தூரத்தில் உடைந்த ப்பலினுறுப்புகள் சில கரையில் ஒதுங்கியிருக்கக் கண்டு, பாய்ப் பார்த்தேன். முன்னணியத்து முளை யுறுப்பொன்று ருந்தது. அதிக பளுவாயிருந்ததனால், நான் அதை எடுத் க்கொண்டு வரவில்லை.

மேமீ 24உ.—18உ முதல், 24உ வரையில் பிரதிதின ம் நான் உருவுக்குப் போய், அதிக பிரயாசத்துடன் கவைக் ட்டப்பாரையாற் சில பீப்பாக்களையும், கடலோடிகள் பெட்டி

இரண்டையும் நிலைவிட்டுப் பெயர்த்தேன். நீர்ப்பெருக்குத் தொடங்கவே, அவை மிதந்தன. கரையினின்று எதிர்காற்றடித்ததனால், அன்றைத்தினம் கரைப்படவில்லை. சில துண்டு மரங்களும், ப்ரேஜிலிய பன்றி இறைச்சிப் பீப்பா ஒன்றும் மாத்திரம் கரையடைந்தன. உவர்நீர் சுவறி மண்ணடைந்து இறைச்சி பழுதாய்ப்போயிற்று.

அன்றுமுதல் ஜூன்மீ 15உ வரையிற் பிரதிதினமும் நீர்ப்பெருக்கு வேளையில் ஆகாரத்திற்காக வனத்திற் பட்சி முதலிய சுட்டுக் கொண்டுவந்து, நீர்வற்றத் தொடங்கும் சமயம் பார்த்து, கப்பலுக்குப் போய், எடுக்கக் கூடியவைகளை எடுத்துவந்தேன். ஜூன்மீ 15உக்குள் பலமான சிறு படவு செய்யப் போந்தமட்டும் மரமும், பலகையும், இரும்பும் அகப்பட்டன. படவுசெய்யத் தெரியாத குறை ஒன்றுதவிர, உபகரணங்களில் ஒரு குறையுமில்லை. அன்றியும், அப்போதப்போது துண்டு துண்டாய் எனக்கு அகப்பட்ட காரீயத் தகடு நூற்றுப் பன்னிரண்டு இருத்தல் வரையிலுமுண்டு.

ஜூன்மீ 16உ.—கடற்கரைக்குப் போய், பெரிய ஆமையொன்றைக் கண்டேன்; அவ்விடத்தில் ஆமைகளுக்குக் குறையில்லை. அதற்குமுன் அவை என் கண்ணுக்கெதிர்படாதது எனது அதிஷ்டக்குறைதான். தீவின் எதிர்க்கரையில் இருப்பேனானல், பிரதிதினமும் ஆமைகளை நூற்றுக்கணக்காய்க் காணலாமென்று பிற்பாடு திருஷ்டாந்தமாயறிந்தேன். அவைகளைக் கண்டது எனக்கே வினையாய் முடிந்தது.

ஜூன்மீ 17உ.—இன்று முழுதும் அந்த ஆமையை அறுத்துப் பக்குவமாய்ச் சமைப்பதில் கழிந்தது. அதன் வயிற்றில் அறுபது முட்டைகளிருந்தன. இந்தக் கோரமான தீவிற் சேர்ந்தபின் வெள்ளாட்டிறைச்சியும், பட்சி யிறைச்சியுமன்றி வேறு இறைச்சி வகை ஒன்றும் தின்றறியாத என் வாய்க்கு ஆமை இறைச்சி மிக இதமும் இன்பமுமாயிருந்தது. அத்தனை ருசிகரமான மாமிசம் நான் என்றும் தின்றதில்லை.

ஜூன்மீ 18உ.—பகல் முழுதும் மழை பெய்ததனால், நான் வெளிப்படவில்லை. எனக்குக் குளிரோடி விறைத்தது.

அத்தேசத்தில் குளிருண்டாதற்கு நிமித்தமில்லையே, இது என்ன விபரீதமென்றெண்ணினேன்.

ஜூன்மீ 19௨.—வியாதியாய்ப் படுத்திருந்தேன். மிகக் குளிர்காலத்திலுண்டாகும்வண்ணம் சரீரம் விறைத்து நடுக்கமெடுத்தது.

ஜூன்மீ 20௨.—இராமுழுதும் கண்ணோடு கண் மூடவேயில்லை. ஜுரம் காய்ந்து தலைவலி உபத்திரவம் சகிக்கக்கூடாதிருந்தது.

ஜூன்மீ 21௨.—எனக்கு மிகுந்த அசௌக்கியம் உண்டாயிருந்தது. வியாதியாயிருக்கும்பொழுது எனக்குச் சகாயஞ் செய்வார் எவருமில்லையேயென்று எண்ணி, ஏக்கம் பிடித்து அறிவழிந்து பிரேதம்போலாகி, கடவுளைப் பிரார்த்தித்தேன். ஹல் துறையிற் புயலடித்ததற்குப்பின் இதுவரையில் நான் பிரார்த்தனை செய்ததேயில்லை. நான் செய்த பிரார்த்தனை இன்னதென்றாயினும், எதற்காகப் பிரார்த்தித்ததென்றாயினும் அறியேன். என் மனம் திகைத்து மயங்கியிருந்தது.

ஜூன்மீ 22௨.-முன் இருந்ததற்குச் சற்றுச் சௌக்கியம். வியாதிக்கு அஞ்சும் அச்சத்தின் உபத்திரவம் அதிகரித்தது.

ஜூன்மீ 23௨.—வியாதி மறுதலித்தது. குளிரும் நடுக்கமு முண்டாயின. தலைநோ தாங்கக்கூடாதிருந்தது.

ஜூன்மீ 24௨.—அதிக சௌக்கியம்.

ஜூன்மீ 25௨.—நளிர் சுரங் கடுமை; ஏழுமணி நோவரையில் நெருப்புப்போல சுரம் காய்ந்து, சரீரம் உதறிற்று. அப்புறம் ஸ்மாணை தப்பி எங்கும் வெயர்த்தது.

ஜூன்மீ 26௨.—சௌக்கியப்பட்டேன்; போஜனத்திற்கு ஒன்றும் இல்லாததனால், துப்பாக்கிகொண்டு வேட்டைக்குப் போனேன். துர்ப்பலத்தாற் கைகால் வழங்கவில்லை; ஆனாலும், ஒருபடி வெள்ளாட்டுமறி ஒன்று சுட்டு, வீட்டுக்குக் கொண்டுவந்து, அதன் மாமிசத்திற் கொஞ்சத்தை வேகவைத்துப் புசித்தேன். கொஞ்சத்தை வறுக்கவும் ஒரு சாறு வைக்கவும் இஷ்டமாயிருந்தது; ஆனாற் பாத்திரமில்லை.

ஜூன்மீ 27வ.—நளிர் சுரம் மீண்டும் அதிகரித்தது. படுத்த படுக்கையினின்று பகல் முழுதும் எழுந்திருக்கவு மில்லை, அன்னந் தண்ணீருமில்லை. வாய் வறண்டு மிகத் தாகமெடுத்தது. எழுந்து நிற்கவாயினும், தண்ணீர் மொண்டு வரவாயினும் சக்தியில்லாதிருந்தேன். திரும்பவும் தேவனைப் பிரார்த்தித்தேன். என் சித்தம் பிரமித்திருந்தது. பிரமை தெளிந்திருக்கும்பொழுது, சுத்த மூடனாதலால் பிரார்த்திக்கும் வகை எனக்குத் தெரியவில்லை. படுத்த படுக்கையில், "கடவுளே, என்னைக் கடாட்சித்தருளும்! தேவனே, என் பரிதாபத்தைப் பார்த்தருளும்! இறைவனே, என்மீது இரங்கும்!" என்று உளறினேன். இரண்டு மூன்று மணி நேரமளவும் இவ்வாறு ஜெபித்தவண்ணமாயிருந்து, காய்ச்சல் விடவும் அயர்ந்து தூங்கி, அர்த்தராத்திரியில் விழித்தேன். விழிக்கும்பொழுது எனக்குச் சற்று ஆரோக்கியமாயிருந்தது. பலங் குன்றித் தாகம் மேலிட்டது. வீட்டிலே ஜலம் இல்லாததனாற், பொழுது விடியுமட்டும் பதைப்பின்றிப் படுத்திருந்து, திரும்பவும் தூங்கினேன். இரண்டாந்தரம் தூங்கியபொழுது, பின்வரும் பயங்கரமான சொப்பனத்தைக் கண்டேன்:

பூமியதிர்ச்சி உண்டானபின் புயலடித்தபொழுது, நான் உட்கார்ந்திருந்த மதிற்புறத்து நிலத்தில் உட்கார்ந்திருந்ததாகவும், சுவாலிக்கும் நெருப்பு வடிவுள்ள ஒருவர் விஸ்தாரமான கார்மேகத்தினின்றிறங்கித் தரையில் வந்து நின்றதாகவுங் கண்டேன். அவர் சர்வாங்கமும் அக்கினிச்சுவாலை மயமாயிருந்தது. அவரை உற்றுப்பார்க்க என் இரு கண்களும் கூசின. அவர் முகத்தில் விளங்கிய சினக்குறிப்பை நாவினால் விவரிக்க நான் நிர்வாகியல்ல. அவர் அடி பெயர்த்து நடக்க, முன்பு அதிர்ந்தபடி பூமி கிடுகிடென நடுங்கிற்று. ஏக்கமுற்றிருந்த என் கண்ணுக்கு ஆகாயம் எங்கும் பளிச்சென்று மின்னுவதுபோலத் தோன்றியது.

அவர் தரையில் இறங்கிய க்ஷணமே வேலாயுதங் கைக்கொண்டு என்னைக் கொல்ல நெருங்கிவந்தார். சற்றுத் தூரத்தில் அவர் திடர்நிலத்திற் சேர்ந்தபொழுது, எனக்கு வார்த்தை சொல்லத் தொடங்கினார். அவர் சத்தம் கேட்டு எனக்கு

மிகுந்த அச்சமுண்டாயிற்று. அது இத்தன்மையதென்று சொல்வது அசாத்தியம். அவர் சொன்ன சொல்லில் எனக்குப் புலப்பட்டது இது: "இவை எல்லாவற்றையுங் கண்டும் நீ மனம் திரும்பாததனால், இனி இறந்துபோகக்கடவாய்!" இவ்வார்த்தைகளைச் சொல்லி, அவர் என்னைக் கொல்லும்படி கைக்கொண்ட ஈட்டியை ஓங்கினதுபோலிருந்தது.

இதை வாசிக்குமெவராயினும் இச்சொப்பனம் கண்டபொழுது, எனக்குண்டான அத்தியந்த திகிலை நான் சொல்லமாட்டுவேனென்று எண்ணார். கனவு காணும்பொழுதே என் உள்ளம் பதைபதைத்தது. நித்திரை தெளிந்து, நான் கண்டது சொப்பனமென்று அறிந்தபொழுதும் என் மனமாறவில்லை. என் துயரம் இவ்வளவென்று சொல்வது அசாத்தியம்.

ஞானவுணர்ச்சி சிறிதுமில்லாத நிர்ப்பாக்கியனானேன்! எனது தந்தை புகட்டிய சற்புத்திகளால் எனக்குண்டான ஞானவுணர்ச்சி எட்டு வருஷகாலமாய்த் துன்மார்க்கரும், என்னைப்போலத் தர்மாபவாதிகளாய் லௌகிக வியாபாரத்திலுழல்வோருமாகிய கடலோடிகளுடன் சகவாசஞ்செய்து, அவர்கள் வழிப்படும் செயற்கைவாசனையால் பற்றற ஒழிந்துபோயிற்று. நான் கடவுளைக் குறித்தாயினும், எனது நிலைமையைக் குறித்தாயினும் சொப்பனத்திலும் சிந்திக்கவில்லை. எனதுள்ளம் உணர்வழிந்து நன்மையை விரும்பாமலும், தீமைக்கஞ்சாமலும் நிர்மூடமாயிருந்தது. சிந்தனையின்றி அதிக்கிரமித்து நடக்கும் கன்னெஞ்சராகிய சாமானிய கடலோடிகளைப்போல, ஆபத்து வருங்காலத்தில் அற்பமாயினும் தேவபயமில்லாதவனாகவும், வந்த ஆபத்து நீங்கும்பொழுது கடவுளுக்குத் துதி செலுத்தாதவனாகவும் இருந்தேன்.

இதற்குமுன் சொல்லிய எனது சரித்திரத்தில் எவரும் எளிதில் நம்பத்தக்கது இது:—நாளதுவரையில் ஒன்றன்பின்னொன்றாய்ப் பலவித இடர்களும் ஆபத்துக்களும் என்னைச் சூழ்ந்தும், மந்திரம்போலும் தகைமையுள்ள தந்தை சொல்லைக் கேளாமற் பலவாறு அதிக்கிரமித்து நடந்ததனால், இவையனைத்தும் கடவுள்மூலமாய் எனக்கு விதிக்கப்பட்ட நியா

யமான தண்டனைகளென்று நான் எள்ளளவும் எண்ணவில்லை. ஆபிரிக்காவின் பாலைவனமடுத்த கரைக்கு வீணாசையின் வசப்பட்டு, நான் வர்த்தக முகாந்தரமாய்ப் போயிருந்தபொழுது, எனக்கு வரும் கதியைக்குறித்து நான் எண்ணவுமில்லை. எனக்கு வழிகாட்டி, தகுதியான இடத்தில் என்னை க்ஷேமமாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கும்படியாவது, நான்கு திக்கிலும் சூழ்ந்திருந்த பட்சிக்கும் வனவிலங்குகளுக்கும், குரூரகுணமுள்ள மிலேச்சருக்கும் என்னைத் தப்புவித்துக் காக்கும்படியாவது நான் கடவுளைப் பிரார்த்திக்கவுமில்லை. கடவுள் ஒருவர் உண்டென்றாயினும், அவர் கட்டளைப்பிரகாரம் பிரபஞ்சம் நடந்துவருகிறதென்றாயினும் நான் ஒருபொழுதும் சிந்திக்கவேயில்லை. அததற்குரிய இயற்கையறிவுள்ள ஆடுமாடு முதலிய விலங்குகளைப்போல் நடந்தேன். மனுஷர் அனைவருக்கும் இருக்கவேண்டிய சாமானிய புத்தியையாயினும் நான் கடைப்பிடியாய்க் கொள்ளவில்லை.

சமுத்திரத்திற் றத்தளிக்கும்போது போர்த்துகேய மாலுமி என்னைக் கண்டு, தன் உருவிலேற்றிப் பாதுகாத்து, உபசரித்து, பின்னும் எத்தனையோ சகாயம் செய்தாரே. அவர் செய்த பேருபகாரத்தைக் குறித்தாயினும் எனக்குச் சிந்தனையுண்டாகவில்லை.

நான் ஏறிய கப்பல் மணற்குன்று தட்டி அவஸ்தைப்பட, நான் படவிலிறங்கி இத்தீவின் கரைக்குச் சமீபத்தில் முழுகி, இறத்தற்குரிய ஆபத்தடைந்தபொழுதும் இதெல்லாம் என் அதிக்கிரமத்தின் பயனாய் விளைந்த பழியென்று நினைக்கவேயில்லை. நாயினுங் கடையனாய்ப் பிறந்த எனக்கு வரும் பாடு இம்மாத்திரமா? இறக்குமளவும் எண்ணிறந்த பாடுகளுண்டாமென்று பெரும்பாலும் சொல்லிக்கொண்டதுண்டு.

ஒன்றுமாத்திரம் வாஸ்தவம். நான் முதலில் இக்கரையடைந்து தப்பிப் பிழைத்திருக்க, என்னுடன் உரு ஏறிய கடலோடிகள் யாவரும் சமுத்திரத்தி லமிழ்ந்து இறந்ததை நினைத்தவுடன் பரவசமானேன். எனக்கு ஒருவகை ஆனந்தமுண்டாயிற்று. அவ்வேளையிற் றேவானுக்கிரகத்தின் சகாயம்பெற்றால், கடவுள் செய்த அந்த நன்றியை மனப்பூர்வமா

யறிக்கைசெய்து மறவாதிருப்பேனே. எனது உயிர் தப்பிப் பிழைத்ததைப்பற்றி எனக்குண்டான சந்தோஷம் சாமானிய சந்தோஷரூபமாய் அவ்வளவி லொழிந்துபோயிற்று. மற்றவர்கள் இறந்துபோக, என்னைமாத்திரம் இரட்சித்துக் கரையேறச்செய்த விசேஷ ஈச்சுர கடாட்சத்தைப்பற்றி என்னுள்ளத்தில் அற்பமாயினும் சிந்தனையுண்டாகவில்லை. தேவன் தயைகூர்ந்து என்னை இவ்வாறு இரட்சித்த முகாந்தரமென்னவென்று எனக்குள் விசாரணை யுண்டாகவுமில்லை. ஏறிய கப்பல் சமுத்திரத்தில் முழுக, எவ்வாறுவது தப்பிப் பிழைத்துக் கரைசேரும் கடலோடிகளுக்கு அந்தக்ஷணமே தாம் பிழைத்ததைப்பற்றி ஒருவகைச் சந்தோஷமுண்டாவதும், ஒரு கிண்ணம் சாராயங் குடிக்கவே அச்சந்தோஷத்தைப்பற்றிய நினைவை அவர்கள் மறந்துபோவது மியற்கை. எனது இயற்கையும் வாழ்நாள் அறுதிபரியந்தம் அவ்வாறே இருந்தது.

பின்பு தீர்க்காலோசனை செய்து, எனது நிலைமை இன்னதென்று கண்டு, மனுஷருக்கு எட்டாக்கையில் எவர் சகாயமுமில்லாதவனாய், இறக்குமளவும் இந்தப் பாழ்ந்தீவில் அச்சமுற்றிருந்து, அவஸ்தைப்படும் அகதியாய்ப் பிறந்தேனேயென்று எண்ணிப் பரிதபிக்கையில், பசியாறிக் காலந் தள்ளுவதற்குரிய சாதனங்களுண்டென்று கண்டறிந்தேன். அறிந்தக்ஷணமே என் மனோபத்திரவந் தீர்ந்தது. நான் ஆறித் தேறியிருந்து ஜீவனோபாயங்களைத் தேடி உழைத்தேன். நான் செய்த அக்கிரமத்திற்குக் கடவுள் என்னை இந்த நிலைமையிற் கொண்டுவந்து பிரத்தியட்சமாய்த் தண்டிக்கிறாரென்று சொப்பனத்திலு மெண்ணவில்லை.

தினவர்த்தமான பத்திரத்திற் சொல்லியபடி யவையும் நெல்லும் அற்புதமாய் முளைத்து வளர்ந்தது கண்டபொழுது ஆரம்பத்திற் பயபக்தியான சிந்தனைகள் எனக்குண்டானது மெய். அவை முளைத்தது அற்புதமல்லவென்றும், அவ்விடத்தில் வித்து விழுந்த காரணம் இன்னதென்றும் எனது ஞாபகத்தில் வரவே, அச்சிந்தனைகள் புறக்குடத்தில் விழும் நீர்த் துளிபோல நிலையற்று என்னுள்ளத்தினின்று நீங்கின.

பூகம்பத்தைப்போல் அச்சுறுத்துவதும், அரூபியாகிய பரப்பொருளை நினைக்கும்படி மனுஷர் சிந்தனைகளைத் தடையின்றித் திருப்புவதும் மற்றொன்றில்லை. இவ்விதப் பயங்கரமான பூகம்பத்தைக் கண்டும், சமயத்திலுண்டான நடுக்கமும் அச்சமுந் தீரவே, பயபக்தி சிந்தனைகள் ஒழிந்துபோயின. அப்புறம் நான் கடவுளைக்குறித்து நினைக்கவுமில்லை, தேவதண்டனையை எண்ணவுமில்லை, நான் செய்த வினையின் பயனாய் விளைந்த துர்க்கதியை உபத்திரவமென் றுணாவுமில்லை. எனது நிலைமைக்கும், சுகித்திருக்கும் செல்வர் நிலைமைக்குமுள்ள பேதம் எனக்குத் தோன்றாதிருந்தது.

அப்புறம் எனக்கு வியாதி கண்டு மரணோபத்திரவங்கள் என் கண்ணுக் கெதிர்ப்பட்டாற்போலத் தோன்றவே, வியாதி உபத்திரவத்தால் நான் தீரமழிந்து கடுஞ் சுரத்தால் மெலிவுற்றிருந்தேன். இப்படி இருக்கையில், இதுபரியந்த முறங்கின என்னுள்ளம் உறக்கமொழிந்து என்னைக் கண்டிக்கத் தொடங்கிற்று. நினைத்தற்கரிய நிஷ்டூரம் செய்து அதிக்கிரமித்து நடந்ததினால், தேவகடாட்சத்தை இழந்தேன். எனக்கு இக் கொடிய தண்டனைகளைக் கடவுள் விதித்தது நியாயந்தான். தேவபழி என்னைச் சூழும்படி பல கொடிய துரோகங்கள் செய்தேனேயென நானே என்னைக் கண்டித்தேன்.

சுரங்கண்ட இரண்டாம்நாள் மூன்றாம்நாள் தொடங்கி இந்தச் சிந்தனைகளால் என் மனம் வருந்திற்று. சுரம் வரவரத் தீட்சணமாய்க் காய, நான் செய்த தீவினைகளைக் குறித்து என் நெஞ்சு என்னைக் கண்டித்து வருத்த, தேவனைப் பிரார்த்திக்கும் பாவனையான சொற்கள் சில என் வாக்கினின்று பிறந்தன. நான் மனப்பூர்வமாய்த் தேவஅருளை விரும்பிப் பிரார்த்தித்தவனல்ல. என்னை வருத்திய அச்சத்தினாலும் உபத்திரவத்தினாலும் அவ்வார்த்தைகள் என் வாக்கினின்று பிறந்தன. என் மனம் மலைவுற்றுச் சிந்தனைகள் கலைந்தன. நான் செய்ததெல்லாம் துரோகமென்றுணர்ந்து வருந்தினேன். இந்தப் பரிதாபமான ஸ்திதியிலிருந்து துயரடைந்து இறந்துபோவேனென்று எனக்கு அத்தியந்த திகில் உண்டானதால், உபத்திரவத்தினிமித்தம் மயக்கமான சிந்த

னைகள் எனக்குத் தோன்றின. இவ்வாறு என் சித்தம் சலித்துக் கலக்கமுற்றிருக்கையில், நாவினால் எதை உளறினேனோ அறியேன். "கடவுளே! என்னைப்போலும் நிர்ப்பந்தர் உண்டா! நான் வியாதிகண்டு அழுந்தினால் உதவியற்று இறந்து போவேனே! இறந்தபின் எனக்கு என்ன வருமோ!" என இத்தன்மையான பரிதாபச் சொற்களைப் பதைத்துச் சொல்லியிருப்பேன். இப்படிச் சொல்லவும், எனது கண் கலங்கித் திக்குமுக்காடி எனக்கு அழுகை வந்தது. அப்புறம் சற்று நேரமட்டும் ஏதும் சொல்வதற்கு நா வெழவில்லை.

இச்சமயத்தில் தந்தை சொல்லிய நற்புத்தியும், "புத்தி கெட்டு உன் அபிப்பிராயத்தின்படி நடப்பாயானால் கடவுள் உனக்கு அனுக்கிரகஞ் செய்யமாட்டார்; என் தந்தை சொல்லை மந்திரம்போல் எண்ணி நடந்தேனில்லையேயென்று இனிமேல் ஆபத்து வரும்காலத்தில் நினைத்துப் பரிதபிப்பாய். அவ்வேளையில் உனக்குச் சகாயம் செய்வார் எவருமில்லாதிருப்பாய்" எனக் கூறிய எச்சரிப்பும் எனது ஞாபகத்தில் வந்தன. வரவே, நான் வாய்விட்டலறி, "எனது அரிய தகப்பனார் சொன்ன வாக்குப் பலிக்கின்றது; கடவுள் என்னை நீதிப்படி தண்டிக்கிறார்; எனக்கு உதவிபுரிவார் எவருமில்லை; என் பரிதாபத்தைச் சொல்லக் கேட்பாரில்லை; ஈஸ்வரன் என்மீதிரங்கி, சுகித்திருந்து வாழ்வடையத்தக்க ஸ்திதியில் என்னை வைத்தார். அதை எண்ணாமல் தள்ளிவிட்டேன். அந்த ஸ்திதியின் மேன்மையை நான் கண்டறியக் கருதவுமில்லை, அதன் சுகத்தைத் தாய் தந்தையர் புகட்டிய புத்தி போதனைகளால் அறியப் பயிலவுமில்லை. அவர்கள் என் மதிகேட்டை நினைத்துப் புலம்ப, மதிகெட்டு நடந்ததனால் விளைந்த துன்பத்திலழுந்தி நானும் புலம்பும்படியாயிற்று. அவர்கள் என்னைப் பூலோகத்தில் ஆளாக்கி, எனக்குச் சகல சுகானுபவங்களு முண்டாம்படி உதவிபுரிதற்கும், சகாயஞ் செய்தற்கும் உடன்பட்டு என்னை வருந்திக் கேட்டார்கள். அவர்கள் சொல்லைப் பொருள்செய்யாமல் தள்ளினேன். அதனால், இப்பொழுது எவரும் படாத அரும்பாடுபட்டு வருந்துகிறேன். இவை மனுஷர் தாங்கத்தக்க பாடுகளல்ல. எனக்குச் சகாயம் செய்வாரில்லை, உதவுவாரில்லை, என்னைத் தேற்றுவாரில்லை,

எனக்குப் புத்திமதி சொல்லுவாரில்லை இச்சமயத்திலெனக்குத் துணை நிற்கும் தேவனே! எனக்குத் தயை செய்தருளும். தாங்குதற்கரிய துன்பக்கடலில் மூழ்கி அவஸ்தைப்படுகிறேன்" என்பதாகப் பதைத்துக் கூவினேன்.

பிரார்த்தனையென்று சொல்வது பொருந்துமானால், தேசாந்தரம் போனபின் நான் செய்த முதற் பிரார்த்தனை இது தான். இனி விட்ட குறையினின்று தினவர்த்தமானத்தைச் சொல்லுகிறேன்.

ஜூன்மீ 28உ.—அயர்ந்து தூங்கி ஆரோக்கியமடைந்து, சுரக்களை தெளிந்து எழுந்திருந்தேன். சொப்பனத்தைப் பற்றி உண்டான திகில் மேலிட்டிருந்தும், அதைப் பாராட்டாமல், மற்றநாள் நளிர் சுரம் வருமென்றெண்ணி, அதைத் தாங்கும்படி ஏதாயினும் தின்று பசியாறுவதற்கு இதுதான் சமயமென்று முயற்சி செய்தேன். முதலில் சதுர உறையுள்ள பெரும் புட்டி ஒன்றில் தண்ணீர் நிறைத்து, மஞ்சத்திற் படுத்திருந்து எட்டி எடுக்கத்தக்க தூரத்திற் பீடத்தின் மேல் வைத்தேன். தண்ணீரிலுள்ள சுரக் குணத்தை மாற்றும்படி கால் பைண்ட் ரம் சாராயம் அதற்குள் விட்டுக் கலந்தேன். பின்பு வெள்ளாட்டு மாமிசம் ஒரு துண்டு அறுத்துச் சுட்டுத்தின்றேன். வாய்க்கு இதமாயிராததனால், அதிகம் செல்லவில்லை. அப்புறம் சற்று உலாவினேன். எனக்கு மிகவும் பலவீனமாயிருந்தது. மற்றநாள் சுரம் காயுமென்று எண்ணி அச்சமுற்றிருந்ததனால், என் மனம் தூங்கித் துயரப்பட்டது. இராத்திரி ஆமை முட்டைகளில் மூன்றை அடுப்புச் சுடுசாம்பலுக்குள் புதைத்து, வெந்தபின் எடுத்துத் தட்டியுடைத்து, ஓட்டுப் பாத்திரத்திலேயே வைத்திருந்து, பிரார்த்தனைசெய்து புசித்தேன். நான் பிறந்த நாள்முதல் இது வரையில் ஒருநாளாவது போஜனகாலத்தில் தேவாசீர்வாதம் பெறும்பொருட்டுப் பிரார்த்தனை செய்ததில்லை.

போஜனம் செய்தபின், வழக்கப்பிரகாரம் துப்பாக்கி எடுத்துக்கொண்டு வெளியில் உலாவப் போனேன். பலவீனத்தால் துப்பாக்கிப் பளுவைத் தாங்க என்னாலாகவில்லை. சற்றுத்தூரம் போனபின் கடலுக்கெதிரே தரையில் உட்

கார்ந்தேன். அலைக்கிளர்ச்சியின்றிக் கடல் மிகச் சாந்தமாயிருந்தது. உட்காரந்திருப் [illegible] வடியில் வரும் சிந்தனைகள் என்னுள்ளத்தி லுண்டாயின:

நான் இத்தனைகாலம் கண்டறிந்து பயின்ற சமுத்திரம் சூழ்ந்த பூமியாவது என்ன? அது எங்கிருந்து உண்டாயிற்று? நான் யாவன்? மற்ற மனுஷர், வனவிலங்கு, மனுஷருடன் பயின்ற ஊர்விலங்கு முதலிய ஜீவகோடிகள் எத்தன்மையானவைகள்? எங்கள் உற்பத்திக்குக் காரணமென்ன?

சர்வ சக்தியுள்ள அந்தரங்கமான பரம்பொருளால் நாமனைவரும் சிருஷ்டிக்கப்பட்டோம். அவரே பூமியையும், அதைச் சூழ்ந்த கடலையும், ஆகாயத்தையும், அதிலுலாவும் வாயுவையும் தோற்றுவித்தார். அவர் யாவர்?

அப்புறம் என் மனதில் இந்த ஞானம் பிறந்தது:—சமஸ்த வஸ்துக்களையும் சிருஷ்டித்தவர் கடவுள். அதன்மேல் எனக்குண்டான விபரீத விசாரமாவது: நல்லது, கடவுள் சர்வத்தையும் படைத்தது மெய்யானல், அவரே அவைகளையும், அவைகளுக்குரிய யாவையும் ஆண்டு நடத்திக்கொண்டு வருகிறார். சமஸ்த வஸ்துக்களையும் சிருஷ்டிக்க வல்லவருக்கு அவைகளை ஆண்டு நடத்தும் சக்தி இருக்கவேண்டுமே.

இப்படியானல், அவர் சிருஷ்டித்த எண்ணிறந்த ஜீவகோடி முதலியவைகளுக்கு அவர் அறியாமலும் விதிக்காமலும் ஒன்றும் நடவாது; ஒரு துரும்பும் அசையாது.

அவர் அறியாமல் ஏதும் சம்பவிக்காதாயின், நான் இந்த ஸ்திதியிலிருந்து தடுமாறிப் பரிதபிப்பதும் அவருக்குத் தெரியும். அவர் விதிக்காமல் ஒன்றும் நடவாதாயின், நான் பட்ட ஆபத்துகளும் அவஸ்தைகளும் அவரால் விதிக்கப்பட்டன.

இவ்வனுமிதிகளுக்கு ஆட்சேபமாய் எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. ஆனதுபற்றி, இந்தத் துன்பங்களெல்லாம் தெய்வ சங்கற்பத்தால் எனக்குண்டாயினவென்றும், அவர் கட்டளைப்படி எனக்கு இந்தத் துர்க்கதி வந்ததென்றும், எனக்கன்றிப் பூலோகத்தில் எவர்க்குமுண்டாகும் சுகதுக்கங்களை

வருவிக்கும் சர்வ சக்தி அவர் ஒருவருக்கே யுண்டென்றும் என் நெஞ்சில் உறுதியாய்ப் பதிந்தது. பதிந்தவுடன் பின் வருமாறு விசாரிக்கத் தொடங்கினேன்.

கடவுள் எனக்கு இக்கஷ்டதசையை வருவித்த காரண மென்ன? நான் என்ன துரோகம் செய்தேன்?

அந்த க்ஷணமே என் நெஞ்சு பதைப்புற்று, இவ்வாறு தேவதூஷணம் சொல்வது தகாதென்று என்னைத் தடுத்து, பின்வரும் வாக்கியங்களை எனக்கு அசரீரியாய்ச் சொன்னதுபோலிருந்தது: "பாபிஷ்டா! நீ செய்த துரோகமென்ன வென்று கேட்க, உனக்குத் துணிவு வந்ததா? நீ விபரீதமாய்ப் போக்கடித்தகாலத்திற் செய்த அதிக்கிரமங்களை நினைத்து, பின்பு நான் என்ன துரோகம் செய்தேனென்று கேள்? நெடுங்காலத்திற்குமுன் நான் நாசமாய்ப்போகாமல், நாளது வரையில் பிழைத்திருப்பதற்கு நிமித்தமென்ன? யார்மத் துறையில் நான் முழுகி இறந்துபோகாதது ஏன்? ஸல்லி துறைச் சூறைக் கப்பற்காரர் எங்கள் உருவைக் கொள்ளையடித்தபொழுதுண்டான சண்டையில் அவர்கள் என்னைக் கொல்லாத காரணமென்ன? ஆபிரிக்க கரையில் துஷ்டவன விலங்குகள் என்னை ஏன் பட்சிக்கவில்லை? இந்தத் துறையில் என்னுடன் வந்த யாவரும் ஜலகண்ட மரணமடைய, நான் ஒருவன்மாத்திரம் தப்பிப் பிழைத்திருப்பதேனென்று கேள். நான் என்ன துரோகம் செய்தேனென்று நீயா கேட்கத் துணிந்தாய்?"

இச்சிந்தனைகளுண்டாகவே, நான் பிரமித்து ஏக்கம் பிடித்திருந்தேன். உத்தரம் சொல்வதற்கு ஒன்றுமறியாதிருந்தேன். என்ன உத்தரத்தைச் சொல்லலாம்? துயரத்தால் மனஞ் சோர்ந்து, எழுந்து, எனது இருப்பிடத்திற்குப் போய், மதிலேறி உட்சென்று, படுத்து நித்திரைசெய்யப் போனேன். விசாரத்தால் தூக்கம் வரவில்லை. வரவர இருண்டதுபற்றி, தீபமேற்றி நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். சுரம் வருமென்று எண்ணித் திகைத்திருக்கையில், பிரேஜில் பிரதேசத்தார் எவ்வகை வியாதிக்கும் புகையிலை ஒன்றையே ஔடதமாய்ப் பிரயோகிப்பது வழக்கமென்று என் ஞாபகத்தில் வந்தது. என் பெட்டிகளில் ஒன்றில் பதஞ்செய்த புகை

யிலைச் சுருள் ஒன்றும், நன்றாய்ப் பதஞ்செய்யப்படாத பசும் புகையிலைச் சுருள்கள் சிலவுமிருந்தன.

நான் எழுந்துபோய் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது, அதற்குள் என் சரீர வியாதிக்கன்றி, ஆத்ம வியாதிக்குமேற்ற ஔடதங்களைக் கண்டேன். ஆனதுபற்றி, கடவுள்தாமே பெட்டியைத் திறந்து பார்க்கும்படி என்னை ஏவிவிட்டாரென்பதற்கு ஐயம் இல்லை. நான் பெட்டியைத் திறந்து, புகையிலைச் சுருளையும், என் கண்ணுக்கு எதிர்ப்பட்ட புத்தகங்கள் சிலவற்றுள் கிறிஸ்து வேத புத்தகம் ஒன்றையும் எடுத்து, பீடத்தண்டை கொண்டுபோனேன். பெட்டிக்குள் வேத புஸ்தகங்கள் வைத்திருந்த சங்கதி முன்பு சொன்னேனே. நாளதுவரையில் அப்புத்தகத்தைத் திறந்து பார்க்க எனக்கு அவகாசம் இருக்கவுமில்லை, அபேட்சை யுண்டாகவுமில்லை.

என் வியாதிக்குப் புகையிலையை எந்த ரூபமாய் ஔடத பாகம் செய்வதென்று எனக்குத் தெரியாது. அது சிகிச்சை ஆகும் ஆகாதென்றும் அறியேன்; ஆயினும், ஏதாயினும் ஒரு விதத்தில் அது வியாதியைக் கண்டிக்குமென்றெண்ணி, நாலைந்து விதங்களில் பரீட்சை வகையாய்ப் பிரயோகித்தேன்; முதலில் ஒரு துண்டு புகையிலையை வாய்க்குட் போட்டுமென்றேன். அது காரமுள்ள பசும் புகையிலையானதனாலும், நான் புகையிலை மென்று பயின்றிராததனாலும் எனக்குச் சற்று மயக்கமுண்டாயிற்று; பின்பு கொஞ்சப் புகையிலையை இரண்டொரு மணிநேரம் ரம்சாராயத்தில் ஊறவைத்து, படுத்துக்கொள்ளும்பொழுது இறுத்து, அந்தக் கஷாயத்திற் கொஞ்சங் குடித்தேன். கடைசியாய் ஒரு துண்டு இலையை எரிதழலிற் பிடித்து, அது நெருப்புப் பற்றிப் புகைந்தபொழுது, அப்புகை நாசித்துவாரத்திலேறி எனக்குத் திக்குமுக்காடுமளவும் மூக்கிற்கெதிரே பிடித்துக்கொண்டிருந்தேன்; உஷ்ணம் ஏறுவதற்கும், அதன் சாரம் உட்செல்வதற்கும் இப்படிச் செய்தேன்.

இந்தப் பரீட்சை செய்துகொண்டிருக்கையில், வேத புத்தகத்தை எடுத்துச் சற்றுநேரம் வாசிக்கத் தொடங்கினேன். புகையிலைக் காரமேறித் தலை கிறுகிறென்று சுற்றுவதுபோ

விருந்ததனுல், அவ்வேளையில் வாசிக்க என்னுலாகவில்லை. புத்தகத்தைத் திறந்தவுடன்: "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்; நீ என் மகிமையைப் பிரகாசிக்கப்பண்ணுவாயாக" என்னும் வாக்கியம் முதலில் தற்செயலாய் என் கண்ணுக்கெதிர்ப்பட்டது.

எனது சீருக்குப் பொருந்திய இந்தத் திருவாய்மொழிகளை வாசிக்கையில், அவை என் சிந்தையிற் சற்று அழுந்தின; ஆயினும், உன்னை விடுவிப்பேன் என்னும் உறுதிமொழி எனக்குப் பிரவர்த்திக்காதென்று எண்ணியதனுல், மேற்படி வாக்கியம் கொஞ்சக்காலம் சென்றபின் என்னுள்ளத்திற் பதிந்ததுபோல, அந்தச் சமயத்திற் பதியவில்லை. நான் விடுதலை பெறுவது அசாத்தியமென்றும், சமீபத்தில் எனக்கு மீட்சியில்லையென்றும் நினைத்து, போஜனத்திற்கு மாமிசம் தருவதாக இஸ்ரவேலருக்குக் கடவுள் வாக்குத்தத்தம் செய்தபொழுது, அவர்கள்: "தேவன் வனத்திலே நமக்குப் போசனத்தை ஆயத்தப்படுத்தித் தரக்கூடுமா" என்று சொன்னதுபோல, "கடவுள்தாமே பிரசன்னராகி என்னை இங்கிருந்து விடுதலைசெய்வாரா?" எனச் சொல்லத் தொடங்கினேன். அநேக வருஷவரையில் எனக்கு மீட்சி யுண்டாமென்று தோன்ருததனுல், அடிக்கடி இச்சந்தேகம் என் நெஞ்சில் தலைப்பட்டது. தலைப்பட்டிருந்தும், மேற்சொல்லிய திருவாய்மொழிகள் வரவர என் நெஞ்சில் அழுந்தியதுபற்றி, நான் அடிக்கடி அவைகளை ஊன்றி நினைத்தேன். இராத்திரி நெடுநேரம் சென்றது. புகையிலைப் புகை உட்சென்றதனுல், தலை கிறுகிறுத்துத் தூக்கம் வந்தது. இரவில் ஏதும் வேண்டுமானுல், எளிதி லெடுக்கும்பொருட்டுத் தீபத்தை அவிக்காமல் குகையில் வைத்தபின், நித்திரைசெய்யும்படி மஞ்சத்திற்குப் போய், படுக்குமுன் நான் முழந்தாள் மடக்கி நின்று, ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிட்டால், நான் உன்னை விடுவிப்பேனென்று சொல்லிய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி கடவுளைப் பிரார்த்தித்தேன். நித்திரைசெய்யப் போகும்பொழுது, இதற்குமுன் நான் பிரார்த்தனை செய்ததில்லை. சிறுவர் மழலைபோலத் தொடர்ச்சியற்றுக் குறை குற்றமுள்ளதாயிருந்த இவ்விண்ணப்பத்தைச் செய்தபின், புகையிலைக்

காரமேறிய சாராயக் கஷாயத்தைக் குடித்தேன். காரம் மேலிட்டிருந்ததுபற்றி, கஷாயம் என் தொண்டைக்குள் எளிதிலிறங்கவில்லை. ஒருவாறு மூச்சடக்கிக் குடித்தவுடன் படுத்திருந்தேன். புகையிலைக்காரம் தலைக்கேறிற்று. மற்றநாட் பகல் மதியந் திரும்பி மூன்று மணியளவும் அயர்ந்த நித்திரை செய்தேன். மற்றநாட் பகல் முழுதும், இரவும் அடுத்த பகற் பின்னேரம் மூன்றுமணிவரையிலும் விழித்து எழுந்திருக்கவில்லை யென்பதாக நினைக்கிறேன். இப்படித்தான் இருக்கும். அப்படியில்லாவிடின், சில வருஷம் சென்றபின் வாரத்தின் தினக்கணக்கில் ஒருநாள் பிசகிற்றென்று நான் கண்டதற்கு ஏதுவில்லை. கணக்குவரைக்குத் திரும்பத் திரும்ப இரண்டு தரம் குறுக்குவரை இட்டதனால் இந்தப் பிசகு நேரிட்டதென்று கொள்ளில், ஒருநாள் அல்ல, வெகுநாள் பிசகவேண்டும்: என் கணக்கில் ஒருநாள் பிசகினது நிசம்; எவ்வாறு பிசகிற்றோ அறியேன்.

கணக்குப் பிசகு வந்தவகை எதாயிருப்பினும் இருக்கட்டும், பெரிதல்ல; தூக்கம் தெளிந்தபொழுது, எனக்கு மிகவும் ஆரோக்கியமாயிருந்தது. உற்சாகமும் உல்லாசமுமுடையவனானேன். முதல்நாள் இருந்த பலவீனமில்லை. வயிறு சொஸ்தமாயிருந்தது. பசித்தீபனமுண்டாயிற்று. மற்றநாள் சுரம் வரவில்லை. முன்னிலும் அதிக சொஸ்தமடைந்தேன். இது ஜூன்மீ 29௨.

ஜூன்மீ 30௨.—பூரண சௌக்கியமடைந்ததனால், துப்பாக்கி எடுத்துக்கொண்டு சமீபத்திற் போய், காட்டு வாத்தின் சாயலான இரண்டொரு கடற்பட்சிகளைச் சுட்டுக்கொண்டுவந்தேன். இப்பட்சிகளின் இறைச்சியில் எனக்கு நாட்டமாயிருக்கவில்லை. நாவிற்கிதமாயிருந்த ஆமை முட்டைகளில் பின்னும் இரண்டொன்று தின்றேன். புகையிலைக் கஷாயத்திற் குணமிருக்கிறதென்று கண்டதனால், இன்று சாயரட்சையும் கொஞ்சக் கஷாயம் இறுத்துக் குடித்தேன். புகையிலையை வாயிலிட்டு மெல்லவுமில்லை, புகை வேது பிடிக்கவுமில்லை. மற்றநாள் ஜூலைமீ 1௨ அற்ப நளிர் சுரம் கண்டதனால், நான் எண்ணியிருந்தபடி எனக்குப் பூரண சௌக்கியமில்லை.

ஜுலை மீ 2உ.—இன்றைக்கு மேற்சொல்லிய மூன்று சிகிச்சைகளும் செய்தேன். முதலில் சற்று மயக்கமுண்டாயிற்று. கஷாயம் முன் குடித்ததற்கு இரட்டிப்பங்கு குடித்தேன்.

ஜுலை மீ 3உ.—இன்றைக்கு எனக்கு நளிர் சுரம் தீர்ப்பாய் இல்லாதிருந்தும், முன்னுள்ள சரீரபலம் உண்டாதற்கு இரண்டு மூன்று வாரம் சென்றது. பலம் ஏற ஏற, "நான் உன்னை விடுவிப்பேன்" என்னும் வேதவாக்கியத்தை ஓயாமல் நினைத்து, எனக்கு விடுதலை உண்டாவது அசாத்தியமென்றெண்ணினேன். எண்ண எண்ண, என் மனம் தளர்ந்தது. இப்படியிருக்கையில், எனது பிரதான உபத்திரவ ஸ்திதியினின்று விடுதலை பெறுவதைப்பற்றி மனம் அழுந்த நினைத்து, நான் பெற்ற விடுதலையைச் சிந்திக்காதிருந்தேனென்று எனது நினைவில் தோன்றிற்று. தோன்றவே, பின்வரும் கேள்விகளைக் கேட்டேன்:—எனக்குண்டான வியாதி உபத்திரவத்தினின்று நான் அதிசயமாய் விடுதலை பெறவில்லையா? திகைத்து ஏங்கிப் பரிதபிக்கத்தக்க மிக்க துயருள்ள ஸ்திதியினின்று நான் விடுதலை பெறவில்லையா? இந்த நன்றியை நான் மறவாதபடி என்ன செய்தேன்? நான் செய்யவேண்டுவதைச் செய்தேனா? கடவுள் என்னை விடுவித்தார், நானோ அவரை மகிமைப்படுத்தவில்லை யென்றால், நான் இவ்விடுதலையை அறிக்கைசெய்து, உள்ளத்தில் இருத்தி, அவருக்குத் துதி சொல்லவில்லை; இதனிலும் பெரிய உபத்திரவத்தினின்று அவர் என்னை விடுவிப்பாரென்று நான் எண்ணுவதற்கு நியாயமென்ன?

இச்சிந்தனைகள் என் நெஞ்சை வருத்த, உடனே நான் முழந்தாளில் நின்று, எனக்கு வந்த பிணியைத் தீர்த்துச் சொஸ்தம் கொடுத்தருளியதற்காகப் பிரார்த்தனைசெய்து கடவுளைத் துத்தியம்பண்ணினேன்.

ஜுலை மீ 4உ.—காலையில் வேத புத்தகத்தை எடுத்து, புது ஏற்பாட்டின் ஆரம்பத்தினின்று காலை மாலை இருபொழுதும் மனங் கொண்டமட்டும் கிரமமாய் வாசித்து வரவேண்டுமென்று பிரதிக்கினைசெய்து, அதிவிநய பயபக்தியுடன் சில நாள்வரையில் வாசித்துக்கொண்டு வரும்பொழுது, நான் செய்த அதிக்கிரமத்தைக்குறித்து என் நெஞ்சிற் பாரமான

சிந்தனைகள் உண்டாயின. எனது சொப்பனத்தைப்பற்றிய ஞாபகம் வந்தது. "இவை எல்லாவற்றையுங் கண்டும், நீ மனம் திரும்பவில்லை" என்னும் சொற்கள் என்னுள்ளத்தில் அழுந்தி உறைத்தன. என் மனதைத் திருப்பவேண்டுமென்று மனமும் வாக்கும் ஒத்து, கடவுளை வருந்திக் கேட்டேன். கேட்ட அன்றே வேதபுத்தகம் வாசித்துக்கொண்டிருக்கையில், "மனம் திரும்புதலையும், பாவ மன்னிப்பையும் கொடுப்பதற்கு அவர் ராஜனுகவும் இரட்சகராகவும் உயர்த்தப்பட்டார்" என்னும் வாக்கியம் தெய்வச்செயலாய் வந்தது. அந்த க்ஷணமே நான் புத்தகத்தை வைத்துவிட்டு, ஆனந்த பரவசமடைந்து, வானத்தை நோக்கி, என் இருகரங்களையும் உயர்த்தி, கடவுள் திருவடிகள் எனது இருதய கமலத்திற் பொருந்த, "யேசுவே, தாவீதின் மைந்தனே! யேசுவே, உயர்த்தப்பட்ட ராஜாவே! இரட்சகரே, மனம் திரும்புதலை எனக்கு ஈந்தருளும்!" என்று ஓலமிட்டேன்.

நான் பிறந்தநாள்முதல் இதுவரையிற் செய்த பிரார்த்தனைகளில் இதுதான் சரியான பிரார்த்தனை. என் நிலைமையை நினைத்து, திருவாய்மொழியின் சாரத்தை என் மனம் தேறுவதற்கு ஆதாரமாய்க்கொண்டு, அதிற் கண்டபடி எனக்கு வேண்டுவது இன்னதென்று அறிந்து, இந்தப் பிரார்த்தனையைச் செய்தேன். இதுமுதல் எனது விண்ணப்பம் கடவுள் திருச்செவிகளில் ஏறுமென்று நம்பி, என் மனம் தேறத் தொடங்கியது.

"என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்" என்னும் வாக்கியத்திற்கு இதுவரையிற் சொன்ன அர்த்தம் அல்ல, வேறு அர்த்தம்பண்ணத் தொடங்கினேன். எனது சிறையிருப்பினின்று நீங்குவதுதான் விடுதலையென்று எண்ணியிருந்தேன். மற்றப்படி விடுதலையாவது என்னவென்று எனக்குப் புலப்படவில்லை. நான் இத்தீவிற் பந்திக்கப்படாமல், எனது இஷ்டப்பிரகாரம் உலாவித்திரிய இடம் பெற்றிருந்தும், இது எனக்கு நிர்ப்பந்தமான சிறைச்சாலையாயிருந்தது. விடுதலையென்பதற்கு இதல்ல, வேறு அர்த்தமுண்டென்று இப்பொழுது கண்டறிந்தேன். நான் செய்த அக்கிரமங்களை நினைத்துத் திகிலடைந்தேன். எனது தீவினை

கள் பயங்கரமானவைகளாய்த் தோன்றின. என்மீது அழுந்தி, என் சுகத்தை நசியச்செய்கின்ற பாவச்சுமையை இறக்கி, என்னை விடுவிப்பதொன்றே எனக்கு வேண்டுமென்று மனப் பூர்வமாய்க் கடவுளைப் பிரார்த்தித்தேன். ஏகாந்தமாயிருப் பது எனக்குப் பாரமாய்த் தோன்றவில்லை. இந்த ஸ்திதியி னின்று என்னை விடுவிக்கவேண்டுமென்று நான் விண்ணப் பஞ் செய்யவுமில்லை, இதைக்குறித்துச் சிந்திக்கவுமில்லை. என் பாவச்சுமைக்கு இது எம்மாத்திரம்? விஷயங்களின் பொ ருளை உள்ளபடி காண்பவர்களுக்குச் சரீர உபத்திரவத்தி னின்று விடுதலை பெறுவதிலும், பாவத்தினின்று விடுதலை பெறுவது மிகவும் மேலான வரமாய்த் தோன்றுமென்று இதை வாசிப்பவர்களுக்கு உணர்த்தும்பொருட்டு இந்த அம்சத் தைச் சொன்னேன்.

இனி இதை விட்டு, தினவர்த்தமானத்தை எழுதுகிறேன்.

முன்போல் இன்னும் நிர்ப்பந்தமாகவே நாள்கழித்து வந் தும், எனது ஸ்திதியைக்குறித்து என் மனம் வருந்தாதொ ழிந்தது; வேத புத்தகத்தை விட்டுவிடாமற் கிரமமாய் வா சித்ததனாலும், பிரார்த்தனை செய்ததனாலும் நான் மேலான ஞான விஷயங்களிற் சிந்தை வைத்து, மிகுந்த மனோசுகம் பெற்றேன். இதற்குமுன் என் மனம் சுகமறியாது. மே லும், சரீரந் தேறிப் பலம் ஏறவே, எனக்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் முயற்சியாய் உழைத்துத் தேடி, தடுமாற்ற மின்றிக் கிரமமாய் நாள்கழிக்க வகைசெய்தேன்.

ஜூலை மீ 4உ முதல் 14உ வரையில்.—வியாதி கண்டு எனது உடல் மிகவும் மெலிந்து ஒடுங்கியதுபற்றி, நான் இந் தத் தினங்களில் முக்கியமாய்த் துப்பாக்கிகொண்டு, அப் போதப்போது சற்றுத்தூரம் அங்கங்கே உலாவி வந்தேன். நளிர் சுரத்திற்கு நான் செய்த சிகிச்சை நூதன சிகிச்சை. இதை ஒருவேளை எவரும் முன் பிரயோகித்திரார். இதை எவராவது ஔடதமாய்க் கொள்ளத் தகுமென்று நான் சொல் லவுமாட்டேன். இம்மருந்து சுரத்தைத் தீர்த்தும், சரீரத்தை மெலிவித்தது. கொஞ்சக்காலவரையில் எனக்கு இரத்த தாதுக்களிலும், கை கால் முதலிய உறுப்புகளிலும் அடிக் கடி வலிகண்டது.

மேலும், முக்கியமாய்க் கடுங் காற்றடித்துச் சோனமாரி யாய் மழை வருஷிக்கும்பொழுது, வெளியில் உலாவித் திரிவது சௌக்கியத்திற்கு நாசமென்று அனுபவசித்தியாய்க் கண்டறிந்தேன். செப்டெம்பர், அக்டோபர் மாசங்களில் வருஷிக்கும் மழையில் தோஷம் இல்லை. அப்பொழுது பெரும்பாலும் புயல் அடியாது. வேனிற்காலத்து மழை பெரும்பாலும் கடுங்காற்றுடன் கூடி வரும். அது மிகவும் அபாயகரமானது.

நான் இந்தத் துன்பத்தீவில் வந்தடைந்து பத்து மாசத்திற்குச் சற்று அதிகம் சென்றது. எவ்விதத்திலும் இந்த ஸ்திதியினின்று எனக்கு மீட்சியில்லையென்று காணப்பட்டது; எனக்குமுன் இவ்விடத்தில் மனுஷர் அடிவைத்ததில்லையென்று உறுதியாய் நம்பினேன். நான் குடியிருக்குமிடத்தை என் மனதிற்குத் திருப்தியானமட்டும் அரணாக்கி முடிந்ததனால், தீவு எங்கும் உலாவிப் பார்த்து, அதில் என்னென்ன விளைபொருள்கள் உண்டென்று அறிவதற்கு அபேட்சித்தேன். விளைபொருள் விவரம் ஒன்றும் இதுவரையில் எனக்குத் தெரியாது.

## 7. அத்தியாயம்.

தீவின் வளத்தை உலாவிப் பார்க்கத் தொடங்கியது. மனுஷர் முகத்தைக் காணவேயில்லை. புகையிலை, திராட்சக்கொடி, எலுமிச்சை, கரும்பு முதலியவைகளைத் திரளாய்க் கண்டது. இவைகளை எனக்கு வேண்டுமளவிற்குப் பறித்து மழைக்காலத்திற்கு ஆகாரத்திற்காக வைத்திருக்கத் தீர்மானித்தது. இறந்துபோயிற்றென்று நான் எண்ணியிருந்த பூனை குட்டிகளுடன் திரும்பி வந்தது. போஜனகால விவர நிர்ணயம் செய்து மழைக்காலத்தில் எங்கும் வெளிப்படாதிருந்தது. தானியம் விதைத்ததும், அது சாவியாய்ப் போனதும். சாவியாய்ப் போனதற்கு நிமித்தம் இன்னதென்று கண்டு, இனி அப்படி ஆகாதிருக்க உபாயம் செய்தது. காலபேத நுட்பம் அறிந்தது.

நான் தீவில் உலாவி, அதன் வளத்தை விவரமாய்க் கண்டறியத் தொடங்கினது ஜூலை௴ 15௳. முன்பு ஓடத்தைச் செலுத்திக் கரைசேர்த்த நீரோடையிருக்கும் இடத்திற்கு

முதலிற் போனேன். அதில் இரண்டுமைல் தூரமட்டும் நீர் ஓடியது. அப்புறம் நீர்ப்பெருக்கு இல்லை. அது ஒரு சிற்ருறு. ஜலம் உவர்ப்புச் சிறிதுமின்றித் திவ்யமாயிருந்தது. வேனிற்காலமாதலாற் சில விடங்களில் தப்புத் தண்ணீரொழிய, ஓடுவதற்குப் போதியதாயில்லை.

இவ்வாற்றங்கரையில் கண்ணுக்குக் குளிர்ச்சியான அநேக மைதானங்களைக் கண்டேன்; பசும்புல் லடர்ந்த தரை ஒப்பமாயிருந்தது. ஆறு பெருகும்பொழுது வெள்ளம் ஏருத மேட்டுநிலத்தின் சார்பில் புகையிலைச் செடி திரளாய் வளர்ந்து பருத்துப் பசுமையாயிருந்தது. நான் அறியாத வேறு அநேக பயிர் வகைகளையுங் கண்டேன். அவற்றின் குணுகுணம் பயன் முதலியவை இன்னின்னவென்று எனக்குத் தெரியாது.

ஆபிரிக்கதேசத்திலும், மேற்கு இந்திய தீவுகளிலும் வசிக்கும் இந்தியர்கள் மா அரைத்து அப்பம் சுடுகிற கச்சாவா என்னுங் கிழங்கு இத்தீவில் இருக்குமென்று தேடியும் காணேன். பெருந் தாழைகளைக் கண்டேன். அவற்றின் விவரம் எனக்குத் தெரியவில்லை. கரும்பு தானே முளைத்து வளர்ந்திருந்தது. நிலத்தைப் பண்படுத்தி மனுஷர் கைப்பாகம் செய்யாததனுல், அது நாணயமானதல்ல. இன்றைக்கு இவ்வளவு கண்டது போதுமென்று திருப்தியடைந்து, வீட்டுக்குத் திரும்பி வருகையில், நான் காணும் கனிவகை பயிர் செடி வகைகளின் குணுகுணங்களையும், பயனையும் அறிந்து, நிச்சயிப்பதற்குச் செய்யத்தகும் உபாயம் இன்னதென்று எனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு வந்தேன். இன்னது செய்யவேண்டுமென்று சிறிதும் எனக்குத் தோன்றவில்லை. காரணம் இதுதான். பிரேஜில் பிரதேசத்தில் இருந்தபொழுது எதையும் கருத்தாய்ப் பார்த்து விசாரணை செய்யாததனுல், பயிர் செடி வர்க்கத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆபத்துக்காலத்தில் எனக்குதவத்தக்க கனி, காய், கிழங்கு முதலியவற்றின் விசேஷம் சிறிதும் அறியாதிருந்தேன்.

மற்றநாள், ஜுலைமீ 16உ, அந்த மார்க்கமாய்ப் பின்னும் சற்றுத் தூரம் போனேன். அதற்கப்பால் ஆறும் இல்லை,

மைதானமும் இல்லை. வரவரக் காடு அடர்ந்திருந்தது. அவ்விடத்திற் காய் கனிகளுக்குக் குறைவில்லை. நிலத்திற் கொம்மட்டிக்காய்களும், மரங்களில் திராட்சப்பழக் குலைகளும் திரளாயிருந்தன. திராட்சக்கொடி மரங்களிற் படர்ந்து, பழக் குலைகள் கனிந்து நீர்ப்பிடியுள்ளவைகளாயிருந்தன. ஆச்சரியமாய் என் கண்ணுக்கு எதிர்ப்பட்ட திராட்சப்பழத்தைக் குறித்து மிகக் களிகூர்ந்தேன். நான் பார்பேரிக் கரையில் இறங்கியிருந்தபொழுது, அங்கே அடிமைத்தொழில் செய்த அங்கிலேயர் சிலர் விலாப்புடைக்கத் திராட்சப்பழம் தின்று, பேதியும் சுரமும் கண்டு இறந்துபோனதை நினைத்து, இப்பொழுது மிதமாய்ப் பறித்துத் தின்றேன். அன்றியும், அவைகளைப் பறித்து, வெயிலில் உலர்த்தி, வற்றலாக்கி வைத்திருந்தால், திராட்சப்பழக் காலம் கழிந்தபின், அவைகள் எனக்குதவுமென்று அறிந்தேன். திராட்சப்பழ வற்றல் நாவிற்கிதமும், சுகத்திற்கு அனுகூலமுமாமென்று நான் அப்பொழுது எண்ணியவாறே வரவர எனக்கு அனுபவப் பட்டது.

சாயரட்சை வீட்டுக்குப் போகாமல், அன்றிரவு அவ்விடத்திலேயே தங்கினேன். அதற்குமுன் இராத்திரிகாலத்தில் நான் வீட்டைவிட்டு நீங்கி வெளியிற் படுத்ததில்லை. இருண்டபின் படுத்து நித்திரைசெய்வதற்கு உபாயமேதென்று நினைத்து, ஒரு மரத்தில் ஏறிப் படுத்திருந்து, நன்றாய்த் தூங்கி, மற்றநாட் காலையில் எழுந்து இறங்கிப் பள்ளத்தரை மார்க்கமாய் உத்தேசம் நாலுமைல் தூரமட்டும் நேர் வடக்குமுகமாய்ப் போனேன். எனக்கு வடக்கு தெற்கு இருதிக்கிலும் மலைத்தொடர் இருந்தது.

நாலு மைல் தூரம் போனபின் ஒரு வெளியிற் சேர்ந்தேன். அங்கிருந்து மேற்கே போகப் போக, நிலம் இறக்கமாயிருந்தது. எனக்குச் சமீபத்திலுள்ள மலைச்சாரலிற் சிற்றாறொன்று உற்பத்தியாகி, நேர் கிழக்காய் ஓடிற்று. தேசம் செழுமையும் பசுமையுமான செடி கொடி வர்க்கங்கள் திரளாயுள்ள சிங்காரவனத்திற் கொப்பாகச் சிறந்து தோன்றியது.

இவ்வின்பமான பள்ளத்தரையின் பக்கத்தில் இறங்கிக் கண்ணும் மனமும் குளிர நான்கு திக்கிலும் பார்த்து, இவை

யெல்லாம் என் சொத்து, இத்தேசத்திற்கு நானே வேந்தனும் பூபதியுமானேன். இதை என் வசத்தினின்று எவரும் அபகரித்துக் கொள்ளக்கூடாது. சுவாதீன சுதந்தரம் எனதே. இதற்குப் பத்திரம் எழுதக்கூடுமானால், அங்கிலேய பிரபுக்களின் மானியக் கிராமங்களைப்போல, இது என்றும் என் சந்ததியை விட்டு நீங்காதிருக்குமெனப் பாவித்துக் களிகூர்ந்தேன். வேறு துயரமான சிந்தனைகளும் ஒரு பக்கத்தில் உண்டாயின. காட்டுத்தெங்கு, கிச்சிலி, எலுமிச்சை, நாரத்தை முதலிய மரங்கள் செடிகள் திரளாயிருந்தன. கனி அதிகமில்லை. எலுமிச்சம் பிஞ்சுகளைக் கண்டு, பறித்துத் தின்றேன். அவை சுவையும் சுகானுகூலமுமானவைகள். பின்பு தண்ணீரில் சாற்றைப் பிழிந்து, பானம் பண்ணினேன். இந்தப் பானம் சௌக்கிய விர்த்திக்கும், உஷ்ண சாந்திக்கும், சரீர புஷ்டிக்கும் ஏற்ற அவிழ்தம். மழைக்காலம் வருமுன் திராட்சப்பழம், எலுமிச்சங்காய், நாரத்தங்காய் முதலியவைகளைப் பறித்துக் கொண்டுபோய் வீட்டிற் பத்திரமாய் வைத்திருந்தால், அவை எனக்குதவுமென்றெண்ணிப் பறிக்கத் தொடங்கினேன்.

ஓரிடத்தில் திராட்சக்குலைகளைப் பறித்து, பெரிய குப்பலாய்ப் போட்டுவைத்தேன். மற்றோரிடத்திலும் சிறிய குவியலாய்க் குவித்துவைத்தேன். வேறோரிடத்தில் எலுமிச்சங்காயும், நாரத்தங்காயும் பறித்து, திரளாய்ச் சேர்த்துவைத்தேன். பின்பு வகைக்குக் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய், ஒரு கூடையாவது, பையாவது, மற்றேதும் கொள்கலமாவது கொண்டுவந்து, மற்றவைகளையும் எடுத்துக் கொண்டுபோகத் தீர்மானித்தேன்.

மேற்சொல்லியவாறே இந்தப் பிரயாணத்தில் மூன்றுநாட் கழிந்தபின் வீடு சேர்ந்தேன். வீடென்பது கூடாரமும் குகையும். வீட்டிற் போய்ச் சேருமுன் திராட்சப்பழங்கள் கெட்டுப்போயின. அதிக ரசம் ஏறிப் புஷ்டியாயிருந்ததனால், அவை வெடித்து, சாறிறங்கி, ஒன்றுக்குமுதவாமற்போயின. எலுமிச்சம்பழம் பழுதாகவில்லை. கொண்டுவந்தது கொஞ்சந்தான்.

மற்றநாள் 19உ, பறித்து வைத்த பழங்களை எடுத்து வரும்படி சிறிய பை இரண்டு கொண்டுபோனேன். போன பொழுது, நான் குவித்துவைத்த புஷ்டியான சிறந்த திராட்சப்பழங்கள் எங்கும் சிதறுண்டு, காலால் மிதிபட்டு, அலங்கோலமாயிருந்தன. திரளான பழங்களை ஏதோ பட்சித்துப் போட்டது. இந்த விபரீதத்தைக் கண்டு, சமீபத்தில் வன விலங்குகளுண்டென்றும், அவைகள்தான் இப்படிச் செய்தனவென்றும் எனக்குச் சித்தாந்தப்பட்டது. அவ்விலங்குகளின் விவரமறியேன்.

இனித் திராட்சப்பழங்களைக் குப்பலாய் ஓரிடத்தில் குவித்துவைத்தால், வனவிலங்குகள் பட்சித்து நாசப்படுத்துமென்றும், பையிலிட்டுச் சுமந்து கொண்டுபோனால், அடிப்படையிலுள்ளவைகளெல்லாம் தகர்ந்து, சாறு வடிந்து பழுதாய்ப் போகுமென்றும் திருஷ்டாந்தபூர்வமாய்க் கண்டு, என் மனங் கொண்டமட்டும் குலைகளைப் பறித்து, மரங்களின் புறக்கொம்புகளில் தூக்கி, வெயிலிலுலர்ந்து வற்றற் பதத்திற்கு வரும்படி விட்டேன். எலுமிச்சம்பழங்களையும், நாரத்தம்பழங்களையும் நான் சுமக்கத்தக்க அளவு பையிலிட்டுக் கொண்டுபோனேன்.

வீடு சேர்ந்தபின் அப்பள்ளத்தரையின் செழுமையையும், ஸ்தான வளத்தையும், ஆற்றுக்கப்புறம் புயலினால் அபாயம் உண்டாகாதிருப்பதையும், காடு நெருங்கியிருப்பதையும் நினைத்துக் களிகூர்ந்து, நான் வீடு கட்டியிருக்கும் இடம் சிறிதாயினும் அனுகூலமானதல்லவென்று கண்டு, இன்பமும் செழுமையுமான பள்ளத்தரையில் நான் இப்பொழுது இருக்குமிடத்திற்குச் சமானமாகிய ஒதுக்கிடம் பார்த்து, இக்கூடாரத்தைப் பெயர்த்து அவ்விடத்திற் கொண்டுபோய் அடித்திருப்பது உத்தமமென்று எனக்குள்ளே சிந்தனை ஓடிற்று.

மேற்சொல்லிய பள்ளத்தரையின் சிங்காரத்தையும் செழுமையையுங் கண்டு மயங்கியதனால், இந்தச் சிந்தனை கொஞ்சக் காலவரையில் என்னுள்ளத்தை விட்டு நீங்கவில்லை. இவ்விஷயத்தைத் தீர்க்காலோசனைசெய்து பார்த்தவளவில் எனது அபிப்பிராயம் தப்பென்று கண்டேன். என் சிந்தனைகள்

வேறு வழிபட்டன. நான் இப்பொழுது சஞ்சரிக்குமிடம் கடற்கரை யடுத்திருப்பது. இங்கே எனக்கு எவ்வாருயினும் அதிர்ஷ்டம் பிறக்கவுங்கூடும். என்னைப்போலும் துர்ப்பாக்கியர் எவராவது கஷ்டதசை யடைந்து, இவ்விடம் சேர்ந்து, எனக்குத் துணைவராகினுமாவார். இவ்விதச் சகாயம் எதுமுண்டாமென்று எண்ணுவதற்கு இடமில்லாதிருந்தும், இவ்விடத்தை விட்டு நீங்கி, தீவின் மத்தியில் குன்றுகளுக்கிடையில் காடடர்ந்த விடத்திற் போயிருந்தால், என் சிறை மீளுவதற்கு உபாயமென்ன? எப்பொழுதும் நான் அந்தச் சிறைச்சாலையிலிருந்து வருந்தவேண்டுமே. ஆனதுபற்றி, எனது அபிப்பிராயம் விபரீதம். எவ்விதத்திலும் நான் இவ்விடத்தை விட்டுப் பெயரக்கூடாதென்று தீர்மானித்தேன்.

எப்படியும், பள்ளத்தரையின் அழகைக் கண்டு மயங்கியதனல், ஜுலை மாசம் முடியுமளவும் பெரும்பாலும் அவ்விடத்திலேயே சஞ்சரித்தேன். குகையையும் கூடாரத்தையும் விட்டு வேறிடத்திற் குடியிருப்பதில்லையென்று பிரதிக்கினை செய்திருந்தும், சிறு வீடொன்று கட்டி, சற்றுத் தூரத்தில் அதைச் சூழ இரண்டு நிரைக்கொம்புகள் நாட்டி, இரட்டை வேலி யடைத்து, அவற்றினிடையில் மரக்கிளைகளை அடர்த்தியாய் வைத்துப் பொதிந்து, பலப்படுத்தினேன். சிலவேளை மலை வீட்டுக்குப் போகாமல், அடுத்து இரண்டு மூன்றிராத்திரி இவ்விடத்திற்றனே அச்சமின்றித் தங்கியிருந்ததுமுண்டு. ஏணி வைத்து வேலி ஏறி உட்செல்வதும், வெளிப்படுவதுமாயிருந்தேன். ஆகவே, எனக்குக் கடற்கரை சார்ந்த விடத்தில் இருந்த வீடு ஒன்றுடன் நாட்டிலும் இந்த மண்டபமிருந்தது. இவ்வேலை முடிய ஆகஸ்டு மாதம் பிறந்தது.

வேலி அடைத்து முடிந்து, நான் மெய்வருந்தி உழைத்ததனல் பெற்ற சுகத்தை அனுபவிக்கத் தொடங்கவும், மழைக்காலம் அடுத்தது. அதனல், முன் இருந்த வீட்டுக்குப் போய், அதை விட்டு நீங்காதிருந்தேன். பள்ளத்தரையில் சமைத்த வீடும் இரட்டுத்துணியால் மூடிய கூடாரமேயானலும், காற்று மழைக்கு அச்சமற்றிருப்பதற்கு அங்கே மலையொதுக்கமில்லை; பெருமழை வரும்பொழுது புகலடைவதற்குப் புறக்கடையிற் குகையுமில்லை.

மேற்சொல்லியபடி ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் நாட்டிற் கட்டிய வீட்டுவேலை முடிந்து, அதிற் சுகமாய் வாசஞ்செய்யத் தொடங்கினேன். மரக்கொப்புகளில் தூக்கி வைத்த திராட்சப்பழங்கள் ஆகஸ்டுமீ 3உ அளவில் வெயிலில் நன்ருய் உலர்ந்து திவ்யமான வற்றலாயின. ஆதலால், நான் அவைகளை அவிழ்த்து இறக்கி வைத்தேன். சற்று அஜாக்கிரதையா யிருந்தேனுனல், அவைகள் மழையில் நனைந்து ஒன்றுக்கு முதவாமற்போம். மழைக்காலத்திற்கு நான் சேர்த்துவைத்த போஜனபதார்த்தங்களுள் முக்கியம் இவ்வற்றல்தானே. உலர்த்தின திராட்சப்பழப் பெருங்குலை இருநூற்றுக்கு அதிகமுண்டு. நான் அவைகளை இறக்கி, அவற்றின் அதிக பாகத்தைக் குகைவீட்டிற் கொண்டுபோய்ச் சேர்க்கவும், மழை பெய்யத் தொடங்கிற்று. அன்று தொடங்கி (ஆகஸ்டுமீ 14உ) அக்டோபர்மீ 15உ வரையில், ஏறவும் தாழவும் பிரதிதினமும் மழை பெய்தது. குகையினின்று வெளிப்படக்கூடாதபடி நாலைந்து நாள்வரையில் அடைத்துப் பெய்ததுமுண்டு.

இம்மாரிகாலத்தில் என் குடும்பத்தின் அபிவிர்த்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். நான் வளர்த்த பூனைகளிலொன்று என்னை விட்டு ஓடிக் காணுமற்போனமைபற்றி அது இறந்துபோயிற்றென்றெண்ணி, மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருந்தேன். அதைக்குறித்து எனக்குச் செய்தி ஒன்றும் பிறக்கவில்லை. இப்படியிருக்கையில், ஆகஸ்டு மாத முடிவில் அந்தப் பூனை மூன்று குட்டிகளுடன் என் வீட்டுக்கு வந்து சேர்ந்ததைக் கண்டு, விசனத்தை மறந்து மிகுந்த ஆச்சரியப்பட்டேன். நான் வளர்த்த பூனை இரண்டும் சீமைப் பெண் பூனைகள். ஆண் பூனை இல்லை. தீவில் பூனைகளிருக்குமாளுல், அவை சீமைச்சாதியல்ல, காட்டுப்பூனைகள். காட்டுப்பூனை ஒன்றைக் கண்டு துப்பாக்கியினுற் சுட்டுக் கொன்றேனே. இப்பொழுது வந்த குட்டிகள் தாயைப் போல வீட்டுப்பூனைகளின் சாயலாயிருந்தன. ஆனதுபற்றி, எனது பூனை தன் சாதிக் குட்டிபோட்ட வகை ஏதென்றெண்ணி, பின்னும் ஆச்சரியமடைந்தேன். இதுநிற்க, இந்த மூன்று பூனைகள் நாளாவர்த்தியில் விர்த்தியாகி, என்

வீடெங்கும் பூனைமயமாயிருந்தது. இப்பூனைகள் எனக்கு வருவித்த சங்கடத்தினிமித்தம் எலி, புழு, வனவிலங்கு முத லியவைகளைக் கொல்வதுபோல, நான் அவைகளி லனேகத் தை அடித்துக் கொன்றேன். அநேகத்தை மிரட்டித் துரத்தி விட்டேன்.

ஆகஸ்டுமீ 14௳ தொடங்கி, 24௳ வரையில் அடை மழை பெய்ததினிமித்தம், மழையில் நனைந்தால் சுரம் உண்டாமென்று நான் எங்கும் வெளிப்படாமல் வீட்டி லிருந்து போஜனத்திற்குச் சற்றுக் கஷ்டப்பட்டேன். பசி வருத்தத்தால் மழையைப் பாராட்டாமல் இரண்டுமுறை வெளிப்பட்டு, ஒருநாள் ஒரு வெள்ளாடு சுட்டுக் கொண்டு வந்தேன்.

ஆகஸ்டுமீ 26௳ பெரிய ஆமை ஒன்று அகப்பட்டது. அதன் மாமிசம் எனக்குச் சம்பிரமமான விருந்துக்குச் சமான மாயிருந்தது. பகலும் இரவும் நானுண்ட உணவின் விவர மாவது: காலைப்போஜனம் திராட்சப்பழ வற்றல் ஒரு குலை; பகற்போஜனம் ஆட்டிறைச்சியாவது, ஆமை இறைச்சியா வது; அதை வறுத்தாயினும், முதிர வேகவைத்தாயினும் பாகஞ்செய்வதற்குப் பாண்டமில்லாததனால், சுட்டுத் தின் றேன். மாலைப்போஜனம் ஆமை முட்டை இரண்டு மூன்று.

அடைமழை பெய்து ஓய்கிறவரையில் நான் எனது புக லிடத்தில் ஒதுங்கியிருந்து, பிரதிதினமும் இரண்டு மூன்று மணி நேரமட்டும் குகையைப் பின்னும் அகழ்ந்து பெரிதாக்கி னேன். ஒரே பக்கத்தைச் சார்ந்து அகழ்ந்துகொண்டு போனதனால், குன்றடியின் ஒரு முனை சீக்கிரத்தில் வெளிப் பட்டது. அது வேலிமட்டத்திற்கு அப்புறத்திலிருந்தது: ஆதலால், மதில் ஏறுமற் குகைக்குள்ளே போகவும், அங் கிருந்து வெளிப்படவும் இந்தத் துவாரம் புறக்கடை வாசலா யிற்று. முன்பு எனது வீடு வாசலில் எவரும் வாராதபடி அரணான மதிற்காவல் வைத்திருந்தேன். இப்பொழுது மதி லேறுமல் மேற்சொல்லிய புறக்கடை வாயில்வழியாய் எவரா வது உட்செல்லக் கூடுமென்றெண்ணி, சற்று மனம் தடுமாறி னேன்; ஆனாலும், வெள்ளாட்டினும் பெரிய விலங்கொன்றை

யும் இத்தீவில் நான் கண்டிராததனுல், வனவிலங்குகளால் தீங்குண்டாமென்று அஞ்சிப் பதைக்க நிமித்தமில்லையே யென்பதாக நினைத்தேன்.

செப்டெம்பர்ம௴ 30௳.—நான் இத்தீவிலிறங்கிய அமங்கலதினம் தொடங்கி நாளதுவரையிற் சரியாய் ஒரு வருஷம். பஞ்சாங்க ஸ்தம்பத்திலிட்டிருந்த தினப்புள்ளிக் கணக்கைக் கூட்டிப் பார்த்தபொழுது, குறையாமல் முந்நூற்றறுபத்தைந்து நாள் தொகை ஏறிற்று. இன்று பகல் முழுதும் உபவாசமிருந்து, தெய்வ சிந்தனைசெய்து, மிகுந்த மனத்தாழ்மையுடன் எனது குற்றங் குறைகளைக் கடவுளுக்கறிக்கையிட்டு, நான் செய்த பாபத்தினிமித்தம் அவர் எனக்கு விதித்த தண்டனைகள் நியாயமானவைகளென்று வெளியிட்டு, யேசுக்கிறிஸ்துவின் மூலமாய் என்மீது இரங்கப் பிரார்த்தித்தேன். உதயாதி அஸ்தமனபரியந்தம் பன்னிரண்டு மணி நேரவரையில் ஒன்றும் புசியாதிருந்து, இருண்டபின் பிஸ்கிட் ரொட்டி ஒன்றும், ஒரு குலை திராட்சப்பழமும் தின்று பசியாறி, படுத்து நித்திரைசெய்தேன். இன்று பகல் நான் எந்த வேலையும் செய்யவில்லை.

இதுவரையில் நான் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரித்தறியேன். அதற்கு நியாயம் இது:—ஆரம்பத்தில் எனக்குத் தெய்வ சிந்தனை சிறிதுமில்லை. ஆனதுபற்றி, நீண்ட புள்ளியிட்டு ஓய்வுநாளுக்கும், மற்றத் தினங்களுக்கும் விவரம் கண்டு, பகுத்தறியும் வழக்கத்தை விட்டுவிட்டேன். ஆகவே, புள்ளிகளைக்கொண்டு தின விவரமறியக் கூடாதாயிற்று. இப்பொழுது புள்ளிக் கணக்கைக் கூட்டித் தொகை கண்டு, நான் இந்தத் தீவிற்கு வந்து ஒரு வருஷமாயிற்றென்று அறிந்ததனுல், இவ்வருஷத்தை ஐம்பத்திரண்டு வாரங்களாகப் பிரித்து, ஆரம்பம் தொடங்கித் தினப் புள்ளிகளை எண்ணி, ஏழாமிடத்துப் புள்ளிகளனைத்தையும் ஓய்வுநாளென்று வைத்துக்கொண்டேன். கணக்கு முடிவில் இரண்டொரு தினங்கள் பிசகின.

பின்னும் சிலநாட் சென்றபின், எழுதும் மை குறைந்து வருவது கண்டு, முன்போலத் தினவர்த்தமானத்தை விவரண

மாய் எழுதாமல், முக்கியமான சங்கதிகளைமாத்திரம் சுருக்கி எழுதிக்கொண்டுவந்தேன்.

மாரிகாலம் இது, கோடைகாலம் இது என்பதாக இப்பொழுது நான் விவரம் கண்டறியவும், அததற்கு வேண்டும் பிரயத்தனங்களைச் சமயத்தில் ஜாக்கிரதையாய்ச் செய்யவும் நிர்வாகியானேன். பட்டால் அறிவன் சண்டாளன், மழை பெய்தால் அறிவன் வேளாளன் என்பதுபோல, நான் அறிந்ததெல்லாம் பட்ட அவஸ்தைகளின் மூலமாய் அறிந்ததொழிய, மற்றப்படியல்ல. எனக்கு மிகுந்த மனத்தளர்ச்சி யுண்டாதற்கு நிமித்தமாய் முடிந்த பரீட்சை யொன்றை இவ்விடத்திற் சுருக்கிச் சொல்லுகிறேன். யவையும் நெல்லும் அற்புதமாய் முளைத்து வளர்ந்து விளைந்ததைக் கண்டதும், அவை வலிய முளைத்தனவென்று நான் எண்ணியதும், யவைக்கதிரும் நெற்கதிரும் விதைத் தானியத்திற்கு வேண்டுமென்று வைத்திருந்ததுமாகிய வாலாறுகளை முன் ஓரிடத்திற் சொன்னேனே. முளைத்து வளர்ந்த யவைப்பயிர் இருபது, நெற்பயிர் முப்பது. சூரியன் உச்சிக்கு நேரே ஆகாயத்தின் மத்தியினின்று பெயர்ந்து தட்சிணாயனத்திற் சென்றதனால், மழைக்காலமொழிய விதைக்கும் பருவமாகுமென்று நினைத்தேன்.

இவ்வண்ணம் உத்தேசித்து, பாரையினால் ஒரு துண்டு நிலத்தைக் கூடியவரையில் அகழ்ந்து புரட்டி ஒப்பமாக்கி, இரண்டு தளைகளாய்ப் பிரித்து, வரம்பு கட்டியபின், தானியத்தை விதைத்தேன். விதைக்கும்பொழுது, விதைப்புக் கால விவரம் ஐயந்திரிபற விளங்காததனால், தானியம் முழுதையும் விதைக்கப்படாதென்று தற்செயலாய் யெண்ணினேன். எண்ணி, விதைத்த தானியம் போக மீந்ததை வைத்திருந்தேன். விதைத்தது இரண்டு பங்கு, மீந்தது ஒரு பங்கு. மீந்த தானியம் வகைக்கு ஒரு கை நிறையுமளவிற்குண்டு.

புத்திபூர்வமாய் இப்படிச் செய்தது அனுகூலமென்று நாளடைவிற் கண்டு, மனந் தேறினேன். விதைத்த மணி ஒன்றுவது முளைக்கவில்லை. வேனிற்காலத்தில் மழை யில்லாததனால், தானியம் உலர்ந்த நிலத்தில் வேர் பற்றாதிருந்து, மீண்

டும் மழைக்காலம் தொடங்கவே, அப்பொழுது விதைத்த மணிபோல முளைத்துப் பயிரேறி வளர்ந்தது.

முதல் விதைத்த மணி முளைக்காதது கண்டு, வேனிற் காலமாதலால், அது முளைக்கவில்லையென்றெண்ணி, தீவின் மத்தியிற் சமைத்த புதுவீட்டுக்குச் சமீபத்தில் ஈரநிலம் பார்த்து, அதைப் பாரையாற் கிண்டி, மேஷாயனத்திற்குச் சற்றுமுன் பெப்ருவரி மாசத்தில் மீந்த தானியத்தைப் பரீட்சைவகையாய் விதைத்தேன். அடுத்த மார்ச்சு எப்பிரில் இரண்டு மாசமும் மழை வருஷிக்குங் காலமாதலால், விதைத்த தானியம் தன் நிலம்போல முளைத்து, சுகித்து வளர்ந்து, நல் விளைச்சல் கண்டது. வைத்திருந்த தானியம் மிகக் கொஞ்சமாதலாலும், அதிலும் சிறிதைப் பின்னும் பிடித்து வைத்திருந்ததனாலும் விளைந்தது வகைக்கு அரை மரக்காலுக் கதிகமில்லை.

இந்தப் பரீட்சையினால் வேளாண்மைத் தொழில்வண்மை யறிந்த நிபுணனானேன். வளமான விதைப்புக்கால மின்ன தென்றும், வருஷத்தில் விதைக்கும் பருவம் இரண்டு, அறுக்கும் பருவம் இரண்டென்றும் திட்டமாய் அறிந்தேன்.

இந்தப் பயிர் வளரும்பொழுது, நான் கண்டறிந்த ஒரு அற்ப விஷயம் பிற்பாடு எனக்குப் பிரயோசனப்பட்டது. நவம்பர் மாசத்தில் மழை விட்டு மாரிகாலமொழிந்தவுடன், நாட்டில் எனது வாசஸ்தானத்திற்குப் போனேன். இரண்டு மூன்று மாசகாலவரையில் நான் போய் அவ்விடத்தைப் பார்க்காதிருந்தும், முன்பு நான் கண்டபடி யாவும் பழுதின்றி அணிகுலையாதிருந்தன. மண்டலாகாரமாய் நானடைத்த இரண்டடுக்கு வேலி உரத்து உருக்குலையாதிருந்தது. அன்றியும், சமீபத்தில் நின்ற விருட்சங்களில் வெட்டி நட்ட கொம்புகளெல்லாம் துளிர்த்துத் தழைத்துக் கிளையோடி, மொட்டையாய்க் கிளை தறிக்கப்பட்ட அலரிச்செடி ஒரு வருஷகாலத்தில் தழைத்துக் கிளைவிட்டு அடர்ந்திருக்குமள விற்குப் படர்ந்து அடர்ந்திருந்தன. மேற்சொல்லிய கொம்புகள் தறிக்கப்பட்ட மரத்தின் பெயர் எனக்குத் தெரியாது. அவை ஓங்கி வளர்ந்து செழித்திருக்கக் கண்டு, ஆச்சரிய

மடைந்து சந்துஷ்டியானேன். அவற்றின் பக்கக் கிளைகளை நறுக்கி, ஒன்றுக்கொன்று சமானமாய் ஓங்கி வளரவிட்டேன். மூன்று வருஷத்திற்குள் வளர்ந்து செழித்திருந்த அக்கொம்புகளின் அழகு பார்த்த எனக்கன்றி, மற்றவர்களுக்குச் சொல்லித் தெரிவிக்கத்தக்கதல்ல. விருத்தாகாரமான வேலியின் உள்ளிடத்து விட்டம் இருபத்தைந்துகஜ தூரமாயிருந்தும், கிளையோடிப் படர்ந்து பெரு மரங்களான கொம்புகள் கூடாரம்போல வேலியின் உள்ளிடத்தைக் கவிந்த கிளைகளால் மூடி நிழலிட்டிருந்தன. வேனிற்காலம் முழுதும் வெயிலுக்கு ஒதுங்குவதற்கு வேலியின் உள்ளிடம் மிக வசதியாயிருந்தது.

இதைக் கண்டு, பின்னும் சில கொம்புகள் வெட்டி, கடற்கரையடுத்த எனது வீட்டைச் சூழ்ந்த மதிலின் புறத்தில் எட்டுகஜ தூரத்தில் அர்த்தசந்திராகிர்தியாய் இவ்வேலிக்குச் சமானமாய் இரண்டடுக்கு வேலி அடைத்தேன். அவ்வேலிக் கொம்புகள் தடையின்றி வளர்ந்து கிளையோடி, என் வீட்டுக்குச் சிறந்த ஒதுக்காயிருந்ததுமன்றி, பிற்பாடு பக்கத் துணைக்காவல் அரணுமாயின. இதைக்குறித்துக் கிரமமான இடத்திற் சொல்வேன்.

ஐரோப்பாவில் இருப்பவர்களுக்குப் பெரும்பாலும் வருஷத்திற் கோடைகாலம், மாரிகாலம் எனப் பருவம் இரண்டு. நானிருந்த இத்தீவில் அப்படி அல்ல, மாரிகாலம் இரண்டு, கோடைகாலம் இரண்டு என நான்கு பருவம் உண்டென்று அறிந்தேன். அவற்றின் விவரம்:—

| | |
|---|---|
| பெப்ரவரி மாசத்திற் பாதி.<br>மார்ச்சு...........................<br>எப்பிரில் பாதி.................. | மழைக்காலம், சூரியனது நிலை விசுவம், அல்லது அதன் சமீபம். |
| எப்பிரில் பாதி ....................<br>மே ...................................<br>ஜூன் ..............................<br>ஜூலை.............................<br>ஆகஸ்டு பாதி.................... | வேனிற்காலம், சூரியன் நிற்கும் ஸ்தானம் கிரட்சரேகைக்கு வடக்கு. |
| ஆகஸ்டு பாதி....................<br>செப்டெம்பர் ....................<br>அக்டோபர் பாதி................ | மழைக்காலம், சூரியன் மீட்சி. |

| | |
|---|---|
| அக்டோபர் பாதி............. நவம்பர் ........................ டிசெம்பர் ........................ ஜனவரி ........................ பெப்ரவரி பாதி............... | வேனிற்காலம், சூரியன் நிலை நிர ட்சரேகைக்குத் தெற்கு. |

காற்றடிக்கும் கால அளவின்படி மழைக்காலம் நீடிப்பதும் குறுகுவதுமுண்டு. சாதாரணமாய் நான் கண்டறிந்தது மேற்சொல்லிய கிரமமே. மழையில் நனைந்து திரிவதனால் விளையுந் துன்பத்தை அனுபவித்தறிந்தபின், மழைக்காலத்தில் வெளிப்படுதற்கு ஏது வில்லாதபடி எனக்கு வேண்டும் போஜனப்தார்த்தங்களை முன்னடிப் புத்திபூர்வமாய்ச் சேகரித்துவைத்துக் கூடியவரையில் வீட்டைவிட்டு வெளிப்படாதிருந்தேன். மழைக்கு ஒதுங்கியிருக்கு மிக்காலத்தில் அடுத்து முயன்று வருந்தி உழைப்பதனலன்றி, வேறு சாதனங்களால் தேடுதற்கரிய அவசியமான அநேக சாமான் தட்டுமுட்டுகளை உண்டாக்கினேன். வீட்டில் அடங்கியிருக்கும்பொழுது, இவ்வேலை என் மனதிற்கு ஏற்ற வேலையாயிருந்தது. முக்கியமாய் ஒரு கூடை பின்னுவதற்குப் பலவாறு பிரயத்தனஞ் செய்தேன். என் கைக்கெட்டிய வளார்களனைத்தும் எளிதில் ஒடியத்தக்க நொய்யவைகளா யிருந்ததனல் வேலைக்குப் பிரயோஜனப்படவில்லை. நான் சிறுவனயிருந்தபொழுது, எங்கள் ஊரிற் கூடை பின்னி விற்று ஜீவனம்பண்ணும் ஒருவன் வீட்டுக்குப் போய், அவன் வேலை செய்வதைக் கருத்தாய்ப் பார்த்து, அவ்வேலைக்குரிய அற்ப பணிகளை நானே செய்து, சில வேளை நானும் அவனுக்கு அவ்வேலையிற் கையுதவி செய்து, கூடை பின்னப் பயின்றிருந்தது எனக்கு மிக வனுகூலமாய் முடிந்தது. துவளத்தக்க வளாரில்லாத குறை ஒழிய, இப்பொழுது கூடை பின்னுவதற்கு வேறு குறை இல்லை. நான் கொம்பு வெட்டின மரத்தின் வளார் இங்கிலாந்திற் கூடை பின்னும் அலரிச்செடி வர்க்கத்தின் வளாரைப்போல், ஒடியாமல் எளிதில் வளையும் தன்மையுள்ளதாயிருக்குமென்று நினைத்துப் பரீட்சைபார்க்கத் தீர்மானித்தேன்.

மற்றநாள் எனது நாட்டு வீட்டுக்குப் போய், சிறு வளார் வெட்டி, வளைத்துப் பின்னிப் பார்த்தவளவில், அவை எனது காரியத்திற் கனுகூலப்படுமென்று கண்டு சந்துஷ்டி யடைந்து, குன்றடுத்த கூடாரத்திற்குத் திரும்பினேன். பிறகு ஒருநாள் கைக்கோடரி கொண்டுபோய், திரளாயிருந்த வளாரில் எனக்கு வேண்டுமட்டும் வெட்டி, அடைப்புக்குள் உலரப்போட்டு, அவை பின்னுவதற்குப் பதமாய் உலர்ந்த பின் அவைகளை எனது குகைக்கு எடுத்துக் கொண்டுபோய் வைத்திருந்து, மறுதரம் மழைக்காலமானபொழுது, மண் ணெடுத்துக் கொண்டுபோவதற்கும், மற்றேதாயினும் வைப்ப தற்கும், வைத்துக் கொண்டுபோவதற்கும் வளமான கூடை கள் அநேகம் முடைந்தேன். முடைந்த கூடைகளின் வேலைப்பாடு நன்று யிருக்கவில்லை; ஆனாலும், என் காரியத் திற்கு அவைகள் பூர்த்தியாய் உதவும். அதன்மேல் பழங் கூடைகள் தேயத்தேய, வேறு புதுக்கூடைகளைச் சமயத் திற் பின்னினேன். கூடையினால் எனக்குக் குறை இல்லை. முக்கியமாய்த் தானியம் அதிகம் விளைந்தால், அதை வைத் திருக்கும்படி கோணிப்பை உதவாதென்று நினைத்து, பல மான பெருங் கூடைகள் பின்னிவைத்தேன்.

வளமான வளார் இன்னதென்று கண்டு, பக்குவமாய்க் கூடை பின்னப் பயின்று, கூடை இல்லாத குறையை நிவிர்த் திக்க நெடுநாட் சென்றது. இக்குறை தீர்ந்தபின் பின்னும் இரண்டு குறைகளிருந்தன. அவை நீர்கொள் கலமில்லாத குறையும், சுங்கானில்லாத குறையுந்தான். சிறிய பீப்பாக் கள் இரண்டும், சாமானிய பரிமாணமுள்ள சில பீங்கான் புட்டிகளும், தண்ணீர், சாராயம் முதலிய வைத்திருக்கும் உறையிட்ட சில சதுரப் புட்டிகளுந்தவிர, நீர்த்தன்மை யுள்ள வஸ்துக்கள் எதுவும் வைத்திருப்பதற்கு வேறு பாண் டங்கள் என் வசத்திலில்லை. போஜனம் சமைப்பதற்கு வள மான பாண்டம் ஒன்றுங் கிடையாது. கப்பலிலிருந்து எடுத் துக் கொண்டுவந்த பெருங் கொப்பரை ஒன்றிருந்தது. அது சாறு வைக்கவாயினும், மாமிசம் சமைக்கவாயினும் கைக்கு அடக்கமான பாண்டமல்ல. இதுநிற்க, புகையிலையிட்டுப் புகை பிடிப்பதற்குப் பக்குவமான சுங்கான் ஒன்று வேண்டு

மென்று விரும்பியும், அது செய்வதற்கு இசையாததனால், கடைசியில் அதற்கும் ஒரு உபாயம் பண்ணினேன்.

மதிற்புறத்தில் நூதனமாய் இரண்டடுக்கு வேலியடைத்து முடிக்கவும், வளாராற் கூடை பின்னி முடிக்கவும் வேனிற் காலம் முழுதும் சென்றது. பிற்பாடு மற்றொரு வேலையிற் பின்னும் அதிககாலம் சென்றது. அத்தனை காலத்தை அதிற் கழித்தது எனது அவகாசத்தினளவிற்குப் பொருந்தாதென்று எண்ணுகிறேன்.

# 8. அத்தியாயம்.

*தீவின் வளம் அறியும்பொருட்டு இரண்டாவது பிரயாணம் செய்தது. ஒரு கிளிக்குஞ்சு பிடித்து, அதற்குப் பேச்சுப் பழக்கினது. இராத்திரிகாலத்தில் நான் நித்திரைசெய்யும் முறை. தீவில் நான் சஞ்சரித்தவிடத்திற்கு எதிரான பக்கத்திற் கடலாமையும் கடற் பட்சிஜாதிகளும் மலிந்திருக்கவும், அவ்விடம் கண்ணுக்கலங்காரமாயிருக்கவும் கண்டது. ஒரு வெள்ளாட்டுக்குட்டி பிடித்து வசப்படுத்தி வளர்த்தது. பழைய வீட்டிற்குத் திரும்பிப் போனது. விளைந்த தானியத்தைப் பட்சிகள் பட்சித்து, எனக்கு மிகுந்த நஷ்டம் வருவித்தது.*

எங்கும் உலாவிப் பார்த்துத் தீவின் வளத்தைக் கண்டறிவதற்கு எனக்கு மிகுந்த அபேட்சை யுண்டாயிருந்ததையும், சிற்றூற்றங்கரை மார்க்கமாய்ச் சென்று, அதற்குச் சற்றப்புறத்தில் நூதனமாய் ஒரு பன்னசாலை சமைத்ததையும், அங்கிருந்து தீவின் எதிர்முனை பரியந்தமெட்டிய பெரு மைதானத்தைக் கண்டதையும் முன்பு வெளியிட்டேனே. அம் மைதானத்தை ஊடறுத்துச் சென்று, கடற்கரை வரையிற் போய்ப் பார்க்கத் தீர்மானித்து, துப்பாக்கியும், கைக்கோடரியும், அதிக வெடிமருந்தும் ரவையும், வழிக்குப் பிஸ்கிட் ரொட்டி இரண்டும் அங்கி உறையிலிடும் தோற்பைக்குட் பெரிய திராட்சப்பழக்குலை ஒன்றும் எடுத்துக்கொண்டு, எனது நாயையும் என்னுடன் இட்டுக்கொண்டு பிரயாணம் செய்யத் தொடங்கினேன். மேற்சொல்லிய புது வீடு கட்டிய

பள்ளத்தரையைத் தாண்டிச் சென்றபின், மேற்குக் கடற்கரை தெரிந்தது. ஆகாயத்தில் மப்பு மந்தாரமின்றி வெளுப்பேறியிருந்ததனால், கடலின் அக்கரை எனக்குத் தெளிவாய்த் தோன்றிற்று. அது தீவோ, கண்டமோ, விவரந் தெரியவில்லை. அது வெகுதூரத்தில் மேற்கேயிருந்து தென்மேற்குத் திசையில் சற்று மேற்குச்சார்பாய் விஸ்தரித்து மிகவும் உயர்ந்திருந்தது. உத்தேசம் சொல்லில், அதன் தூரம் ஐம்பது அறுபது மைலுக்குக் குறையாது.

அது அமெரிக்காவின் ஒரு பாகமாயிருக்கவேண்டுமென்று நினைத்தேன். அல்லாவிடில் எத்தேசமென்று எனக்குத் தெரியவில்லை. நான் கண்ட பல திருஷ்டாந்தங்களால் அத்தேசம் ஸ்பாணிய துரைத்தன எல்லைக்குச் சமீபத்தில் இருக்குமென்றும், அது மிலேச்சர் சஞ்சரிக்கும் தேசமென்றும் அனுமிதிசெய்தேன். இத்தீவின் கரையில் தேவேத்தனமாய்ச் சேராமல், அத்தேசத்திற் சேர்ந்திருப்பேனாகில், எனது நிலைமை பின்னும் நிர்ப்பந்தமுள்ளதாயிருக்குமேயென்று உறுதியாயெண்ணி, திருவுள்ளத்தின் செயலெதுவோ அதுவே எனது பாக்கியமென்றும், கடவுள்மூலமாய் வரும் துன்பங்களனைத்தும் கடைசியில் இன்பமாகவே முடியுமென்றும் மனப்பூர்வமாய் நம்பி, அத்தேசத்திற் சேரவேண்டுமென்று வியர்த்தமாய் இச்சித்து என் நெஞ்சை வருத்திப் புண்ணுக்காமல், இந்த நிலைமையே எனக்கு இன்பமான நிலைமையென்று திருப்தியடைந்திருந்தேன்.

மேலும், இவ்விஷயத்தைச் சிறிது சீர்தூக்கிப் பார்த்தபின், நான் காணும் தேசம் ஸ்பானியர் துரைத்தனஞ் செய்யும் சமுத்திரக் கரையடுத்த தேசமேயானால், எப்பொழுதாயினும் அத்தேசத்திற்குப் போக்குவரவு செய்யுங் கப்பல்களைச் சமுத்திரத்திற் சந்தேகமின்றிக் காண்பேனென்றும், அது ஸ்பானிய துரைத்தன நாடல்லாதிருக்குமானால், அவர்கள் நாட்டுக்கும், ப்ரேஜில் பிரதேசத்திற்குமிடையில் அகப்படும் மனுஷரை வதைத்துப் பட்சிக்கும் பரம துஷ்டராகிய நரமாமிச பட்சணிகள் சஞ்சரிக்கும் தேசமென்றும் எனக்குச் சிந்தனை ஓடிற்று.

இச்சிந்தனைகள் என்னுள்ளத்திற் குடிகொண்டிருக்க, துரிதமின்றிச் சாவகாசமாய் நடந்துபோனேன். போகப்போக, நான் வீடு கட்டிச் சஞ்சரித்த இடங்களுக்கு அவ்விடம் மிகவும் இன்பகரமாயிருந்தது. சிறந்த புஷ்பங்களும், பசும் புல்லும், அழகிய சிறு விருட்சங்களடர்ந்த காடும் திரளாயுள்ள அம்மைதானம் கண்ணுக்கு அலங்காரமாயிருந்தது. நான் கண்ட கிளிப்பட்சிகளுக்குக் கணக்கில்லை. வைத்து வளர்த்து வசப்படுத்தி என்னுடன் பேசப் பழக்கும்பொருட்டு, எவ்விதத்திலும் ஒரு கிளி பிடிக்க அபேட்சித்தேன். மரக்கிளையிலிருந்த கிளிக்குஞ்சு ஒன்றை ஒரு கொம்பினுல் தட்டி விழுத்தி, ஒருபடி அகப்படுத்தி, வீட்டுக்குக் கொண்டு போனேன். அதற்கு நான் பேச்சுப் பழக்க நாலைந்து வருஷம் சென்றது. கடைசியில் அது தன் ஜாதிப் பாஷை பேசுவதுபோலத் தடையற என்னைப் பெயர் சொல்லி அழைக்கப் பயின்றது. பின்பு அதற்குச் சம்பவித்த விபத்தின் வரலாறு அற்பமாயிருப்பினும், சங்கதித் தொடர்ச்சிக்கிரமத்தில் விநோதமாயிருக்குமாதலால், அதைச் சமயத்திற் சொல்வேன்.

இந்தப் பிரயாணத்திற் கண்டனவெல்லாம் எனக்கு விநோதமாயிருந்தன. பள்ளத்தரையில் முயல்களையும் குழிநரிகளையுந் திரளாய்க் கண்டேன். நான் முன்னறிந்த அந்த ஜாதி விலங்குகளின் சாயலுக்கும், இவைகளின் சாயலுக்கும் அதிக பேதமுண்டு. இவ்விலங்குகளில் அநேகத்தைக் கொன்றேன். இவற்றின் மாமிசத்தைப் புசிக்க என் மன மொப்பவில்லை. வந்தது வரட்டுமென்று துணிந்து புசிக்க நிமித்தமில்லையே. எனக்கு ஆகாரத்தாற் குறையென்ன? நான் உண்டதெல்லாம் நல்ல உணவு. முக்கியமாய் இறைச்சி வகை மூன்று, வெள்ளாட்டிறைச்சி, புறுவிறைச்சி, ஆமையிறைச்சி; இவற்றுடன் கனி வகை ஒன்று, திராட்சப்பழம். இங்கிலாந்தில் நானுவித பண்டபதார்த்தங்களும் விக்கிரயம் செய்யப்படும் பெயர்பெற்ற கடை லேட்டன் ஹால் மார்க்கேட் என்பது. எனது ஆகார வர்க்கங்களிலும் உசிதமானவைகள் எவர்க்காவது அந்தக் கடையிலும் அகப்படா. பொதுவாய் எனது ஸ்திதி பரிதபிக்கத் தக்கதாயிருந்தும், ஆகாரத்திற்குச்

சிறிதாயினுங் கஷ்டமின்றிப் பூர்த்தியாய் உண்ணவும், மிக ருசிகரமான பதார்த்தங்களைத் தின்று மகிழ்ந்திருக்கவும் இடம் பெற்றேன். இந்த நன்றியை மறவாமல் இதற்காகக் கடவுளுக்குத் துதிசெலுத்துவது நியாயமே.

நான் இந்தப் பிரயாணத்தில் நாளொன்றுக்கு இரண்டு மைலுக்கதிகம் போகவில்லை. அதிசயம் பார்த்துத் தேசத்தின் வளத்தை அறியும்பொருட்டு, ஒருகாற் போனவழியிற் பலகாற் சென்று, கால் சலித்து இளைப்புற்றுச் சோருமிடத்தில் இராத்தங்க நினைத்து, மரத்தில் ஏறி நித்திரைசெய்வேன்; அல்லது ஒரு மரத்தினின்று மற்றொரு மரம்வரையிற் கொம்புகளை நிறுத்தியாவது, அரவமின்றி வனவிலங்குகள் என்மேல் வந்து விழாதபடி வேறு எவ்விதமாய் வைத்தாவது அடைப்புண்டாக்கி, அதற்குள் படுத்துத் தூங்குவேன்.

நான் கடற்கரையிற் சேர்ந்து எண்ணிறந்த ஆமைகளைக் கண்டவுடன், இதுவரையில் இக்கரையைக் காணுமல் நான் இறங்கிய கரையிற் சஞ்சரித்த துரதிஷ்டத்தை எண்ணி, ஆச்சரியப்பட்டேன். நான் இறங்கிய கரையில் ஆமைகள் அபூர்வம். ஒன்றரை வருஷத்தில் என் கண்ணுக்கெதிர்ப்பட்டவைகள் ஆக மூன்று. இக்கரையிலோ ஆமையன்றி, எண்ணிறந்த பட்சிசாலங்களுமுண்டு. அவற்றுட் சில ஜாதிகளை நான் முன்பு கண்டதில்லை. ஆகாரத்திற் குசிதமானவைகள் அநேகம் இருந்தன. சிறகைப்புள் ஒன்றுதவிர, மற்றப் பட்சிகளின் பெயர் விவரம் எனக்குத் தெரியாது.

சுடவேண்டுமானல் எத்தனை பட்சிகளும் சுடலாம். மருந்தும் ரவையும் செலவழிந்துபோமென்று நான் பட்சிகளைச் சுடவில்லை. பட்சி மாமிசத்திலும் பெண்ணாட்டின் மாமிசம் எனக்கு மிகப் பிரீதியாயிருந்ததனுற், கூடிய பிரயத்தனம் செய்து, ஒரு பெண்ணாடு சுடக் கருத்துக்கொண்டேன். தீவின் அக்கரையிலும் இக்கரையிற் சஞ்சரிக்கும் ஆடுகள் அநேகம். நிலம் மேடு பள்ளமின்றி எங்கும் சமமாயிருந்ததனுல், ஆடுகள் தூரத்தில் என்னைக் கண்டவுடன் ஓட்டம் பிடித்தன. அவைகளிடத்திற்கு நெருங்கிப்போவது மிக அருமையாயிருந்தது. வெள்ளாட்டிற்கு மேற்பார்

வை அதிகமில்லாததுபற்றி, மலைச்சிகரத்திலேறி எளிதிற் சுட்டேனென்று முன்பு சொன்னேனே. இக்கரையில் மலை யொதுக்கில்லாததனால் எளிதிற் சுட்டு விழுத்தக் கூடா திருந்தது.

தீவின் இந்தப் பாகம் நான் சஞ்சரித்த இடத்தைப்பார்க் கிலும் அதிக சௌக்கியகரமாயிருந்தது வாஸ்தவமே; ஆனா லும், நான் குடியெழும்பி இங்கே வந்திருக்கச் சிறிதும் நினைக் கவேயில்லை. அவ்விடத்திற் குடியேறி நாட்பட்டதனால், அதுவே எனது ஜனன தேசம்போலாயிற்று. இக்கரையில் வந்திருக்கிறவரையில் வீடுவிட்டுத் தூர தேசத்திற்குப் பிர யாணம் போயிருப்பவனைப்போல் எனக்கு வீட்டின்மேற் காதலுண்டாயிருந்தது. இருந்தும், கடற்கரை மார்க்கமாய்க் கிழக்குமுகமாய்ப் பன்னிரண்டு மைல் தூரவரையிற் போய், அவ்விடத்தில் எல்லை ஸ்தம்பம் ஒன்று நாட்டி வீட்டுக்குத் திரும்பிப் போகவும், மறுதரம் பிரயாணப்படும்பொழுது எனது வீட்டிற்குக் கிழக்கே தீவின் எதிர்ப்பக்கத்தில் கடற் கரை மார்க்கமாய் இந்த ஸ்தம்பம் நிற்குமிடத்திற்கு வரவும் தீர்மானித்தேன். அந்தப் பிரயாணத்தைக் குறித்துச் சங் கதித் தொடர்ச்சி வரும்பொழுது சொல்வேன்.

முன்பு வந்த மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கமாய் வீட்டுக்குத் திரும்பினால், தீவு முழுதையும் நாளாவர்த்தியிற் கண்டறியலாமென்றும், தீவை முழுக்கூறாய்க் காண்பதனால் முதலில் நான் குடியிருந்த வீட்டுக்கு வரும் வழியைத் தப்ப விட்டுத் திகைக்கமாட்டேனென்றும் நினைத்து, புது வழி பிடித்துப் போனேன். எனது எண்ணம் பிசகிற்று. இரண்டு மூன்று மைல் தூரம் போனபின், மிக விஸ்தாரமான பள்ளத் தரை வந்தது. அதன் நான்கு திக்கிலும் மலைகள் அடர்ந் திருந்தன. அம்மலைகளிற் காடு செறிந்திருந்தது; ஆனது பற்றி, செல்லவேண்டிய மார்க்கம் ஏதென்று எனக்குத் தெரிய வில்லை. பகலில் இத்தனை மணி நேரத்திற் சூரியன் இன்ன விடத்தில் நிற்குமென்று நிதானமாய் அறிந்து, எனது வீட் டுக்கு மார்க்கம் பிடித்துப் போனாற் போகலாமேதவிர மற் றப்படி போவது அசாத்தியமாயிருந்தது.

"ஆவீன மழைபொழிய வில்லம் வீழ
வகத்தினேய் தனில்வருந்த வடிமை சாக,
மாவீரம் போகுதென்று விரைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளாத விருந்துவரச் சர்ப்பந் தீண்ட,
கோவேந்தர் தமதுரிமைப் பகுதி கேட்பக்
குருக்கள் வந்து தட்சணைக்குக் குறுக்கிட்டாரே"

என்பதுபோல, மரம் அடர்ந்த மலை மதில் சூழ்ந்த விஸ்தார மான பள்ளத்தரையில் வழிதெரியாமல் மயங்கித் திகைத்து நின்று, ஆதித்தன் நிலை அறிந்து போனாற்போகலாமென் றெண்ணி, என் மனக்கவலையை ஒருவாறு ஆற்றிக்கொண்டி ருக்கையில், அதுவும் அற்பமாயினுந் தோன்றாதபடி மூன்று நாலு நாள்வரையில் மூடுபனி பெய்து, ஆபத்தின்மேல் ஆபத்து வந்தது. இதற்கு நான் செய்யத்தக்க பரிகாரமென்ன? கோலுதவியில்லாத குருடனைப்போல மனந்தளர்ந்து, துயரம் முதிர்ந்து, மனம்போன போக்கில் இலக்கின்றித் திரிந்து, கடைசியிற் கடற்கரைக்குத் திரும்பிப்போய், எல்லைக் குறிப் பாய் நாட்டிய தூணைக்கண்டு, முன்போன மார்க்கமாய்த் திரும்பினேன். வெயில் மிகவும் தீட்சணமாய்க் காய்ந்தது. துப்பாக்கி வெடிமருந்து, கைக்கோடரி முதலிய சாமான் கள் மிகப் பளுவாயிருந்தன; ஆனதுபற்றி, அங்கங்கே அடிக் கடி தங்கி மெதுவாய்ப் போனேன்.

போகும் மார்க்கத்தில் எனது நாய் சடிதியில் ஒரு வெள் ளாட்டுக்குட்டியைக் கண்டு ஓடி, மறித்துப் பிடிக்க எத்தன மாயிருக்கையில், நான் விரைந்தோடி, நாய் கடிக்குமுன் குட் டியை அகப்படுத்தினேன். இரண்டொரு ஆட்டுக்குட்டி களைப் பிடித்து வசப்படுத்தி வளர்த்தால், அவைகள் காலக்கி ரமத்தில் விர்த்தியாகி, வெடிமருந்து ரவை செலவழிந்தபின் எனக்கு ஆகாரத்திற் குதவுமென்று நான் பெரும்பாலும் எண் ணியிருந்த எண்ணத்திற்கனுகூலமாய் அகப்பட்ட இவ்வாட் டுக்குட்டியை வீட்டுக்குக் கொண்டுபோய் வளர்க்க ஆசை கூர்ந்தேன். இவ்விளங் குட்டிக்குக் கழுத்துப்பட்டை செய்து

கழுத்தில் இட்டு, நான் வைத்திருந்த கயிற்றுப்புரி நூலால் மெல்லிய கயிறு திரித்துக் கட்டி, ஒருவாறு நடத்திக் கொண்டுபோனேன். கொண்டுபோய், பன்னசாலையைச் சூழ்ந்த அடைப்புக்குள் விட்டு, வாசலை யடைத்தபின், குகை வீட்டைவிட்டு நீங்கி ஒரு மாசத்திற்கதிகம் சென்றதனால், மிகவும் காதலுடன் அவ்வீட்டுக்குப் போனேன்.

முயலை விட்டு வளர்க்குங் கூட்டுக்கு ஒப்பாயிருப்பினும், எனது வீட்டில் க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்து, அங்குள்ள தூங்குமஞ்சத்திற் படுத்திருந்தபொழுது, எனக்குண்டான ஆனந்தத்தை என்னென்று சொல்வேன். இந்தப் பிரயாணத்தில் இலக்கின்றித் திரிந்து, இளைப்பாற வீடுவாச வில்லாமற் பல கவலைகளுக்காளாகி, கடைசியில் எனது இருப்பிடத்திற்கு வந்ததனால், இங்கே எனக்கு மக்கள் மனுஷரில்லாதிருந்தும், இக்குடிசை ஜனவளமுள்ள நகரத்திற்குச் சமானமாயிருந்தது. அன்றியும், எனக்கு ஒருவிதத்திலுங் குறையின்றிச் சகல சுகானுபவங்களும் உண்டாயிருந்ததனால், இந்தத் தீவிலிருக்கிறவரையில் நான் இனித் தூரப்பிரயாணம் போவதில்லையென்று பிரதிக்கினை செய்தேன்.

பிரயாணகாலத்திலுண்டான ஆயாசம் தீர்ந்து, மனக்கவலை யாறும்படி ஒரு வாரமளவும் இங்கே இருந்தேன். இவ்வாரத்தில் எனது கிளிக்குக் கூடுகட்டும் பிரதான வேலையில் நாலைந்துநாள் சென்றது. அது இதற்குள் என்னுடன் நன்றாய்ப் பழகி, வீட்டைவிட்டு நீங்காதிருந்தது. பின்பு மற்ற வீட்டைச் சூழ்ந்த அடைப்புக்குள் விட்ட ஆட்டுக்குட்டியை இங்கே கொண்டுவந்து இரை கொடுக்கவேண்டுமென்று போய்ப் பார்த்தேன். விட்ட இடத்தில் இரை இல்லாததனால் அது மெலிந்து நின்றது. தழைகளும், கண்ணுக்கெதிர்ப்பட்ட செடிகளின் கிளைகளும் வெட்டி அடைப்புக்குட் போட்டு, அது தின்றபின், முன்போலக் கயிறுகட்டிப் பிடித்துக் கொண்டுபோனேன். பசியினால் மெலிந்து மிரட்சி அடங்கி வசப்பட்டது கண்டு, கட்டவிழ்த்துவிட்டேன். வளர்த்த நாய் தொடர்வதுபோல, அது என்னைத் தொடர்ந்து வந்தது. அன்று தொடங்கி எப்பொழுதும் நான் அதற்கு இரைகொடுத்து வளர்த்ததனால், வரவரச் சாதுவாகி, என்மேற் பற்று

வைத்து, என்னைச் சார்ந்து, கிளியைப்போல், அதுவும் என் குடும்பத்தின் ஓர் உறுப்பாயிற்று. பின்பு அது ஒருபொழுதும் என்னைவிட்டு நீங்கவில்லை.

துலாயனம் அடுத்து வரும் மழைக்காலம் தொடங்கியது. செப்டெம்பர்மீ 30உ நான் இத்தீவிலிறங்கிய இரண்டாவது வருஷோற்சவதினங் கொண்டாடினேன். பூர்த்தியாய் இரண்டு வருஷம் சென்றும், முதலிலிறங்கின அன்று இருந்தபடியே இன்றளவும் எனது மீட்சிக்கு ஏதும் வகை தோன்றாதிருந்தது. நான் இந்தத் தினமுழுதும் அடங்கியிருந்து, ஏகாங்கியாய் இவ்விடத்தில் நாட்கழிக்கும் என்னைச் சொல்வதற்கரிய துன்பத்திற்கும் ஆபத்திற்கும் ஆளாக்காமல், என்மீதிரங்கி, எனக்குப் பற்பல அதிசயமான ஆதரவுகள் செய்து, என்னைப் பிரதிபாலித்த கடவுளை மனத்தாழ்மையாய் நினைத்து அவர் நாமத்தைக் கீர்த்தனஞ் செய்தேன். நான் மனுஷர் மக்களுடன் கூடியிருந்து, இகத்திற்குரிய சுகானுபவங்களனைத்தையும் அடைவதற்கு இடம்பெற்றால், எனக்குண்டாகத்தக்க சந்தோஷத்திலும் அதிக சந்தோஷத்தை நிர்மானுஷியமான இத்தீவிற் கடவுள் எனக்குண்டாக்கத் திராணியுள்ளவரென்றும், அவர்தாமே என்னுடன்கூட இருந்து, இம்மையில் எனக்குச் சகாயம் செய்வாரென உறுதியாய் நம்பிக் கிலேசமற்றிருக்கவும், மறுமையில் தமது நித்திய சந்நிதானத்தில் என்னைச் சேர்த்துக்கொள்வாரென விசுவாசிக்கவும் தக்கதாக என்னை ஆற்றித் தேற்றி, என் நெஞ்சைத் திடப்படுத்தி, மனுஷசகவாச மில்லாதிருப்பதனால் எனக்குண்டாகுங் குறைகளனைத்தையும் பூர்த்தியாய்த் தீர்க்க வல்லவரென்றும் எனக்குத் திருஷ்டாந்தபூர்வமாய் விளக்கியதைப்பற்றி, நான் மிகத் தாழ்ந்து பணிந்து மனப்பூர்வமாய்க் கடவுளுக்குத் துதி செலுத்தினேன்.

இளம்பருவத்தில் நான் அதிக்கிரமித்து, நெறிதவறி, இவன் பரம துஷ்டனென்று எவர்களும் பழிக்கும்படி நடந்தபொழுது எனக்குண்டாயிருந்த சீரினும், தற்காலத்திற் பற்பல நிர்ப்பந்தங்களுக்காளாகியும், எனது சீர் மிக மனப்பாக்கியமுள்ளதென்று இப்பொழுதுதான் பரிஷ்காரமாய்க் கண்டறிந்தேன். மேற்சொல்லியவாறு நான் என் சுக துக்கங்

களை மாற்றவே, எனது ஆசை இச்சைகள் முன்பு சென்ற துறையைவிட்டு விலகி, வேறு வழிப்பட்டன. என் மனம் முன்பு பற்றிய விஷயங்களை விட்டு, வேறு விஷயங்களிற் படிந்தது. நான் இத்தீவி விறங்கிய நாள்முதற் கழிந்த இரண்டு வருஷபரியந்தம் எனக்கு இன்பகரமாயிருந்தவை கள் இப்பொழுது உபேட்சையாகவும், வேறு விஷயங்கள் உவப்பாகவுமிருந்தன.

முன்பு வேட்டையாடுதற்காயினும், தேசவளத்தைக் கண் டறிதற்காயினும் நான் தீவில் உலாவித் திரியும் சமயங்களில் எனது ஆபத்தைப்பற்றி நினைத்த க்ஷணமே என்னுள்ளம் விச னத்தாற் கரைந்து வருந்திற்று. அன்றியும், காடு செடிகளை யும், மலைகளையும், வனாந்தரங்களையுங் கண்டு, சமுத்திரம் சூழ்ந்த நிர்மானுஷியமான இவ்வனச் சிறைச்சாலையில் என் றும் மீட்சியில்லாத கைதியாயிருந்து வருந்த நேர்ந்ததை எண்ணியபொழுது, என் மனம் குன்றிச் சோர்ந்து உணர் வழிந்தது. நான் சோர்வு தெளிந்து, ஆறித் தேறியிருக்கும் பொழுது, சடிதியில் உண்டாம் சண்டமாருதம்போல, இந்த நினைவு என்னுள்ளத்திற் பிறந்து என்னை வருத்தவே, விச னம் தாங்கக் கூடாதவனாய் எனது கைகளைப் பிசைந்து, சிறு குழந்தையைப்போல வாய்விட்டலறினேன். வேலைசெய்து கொண்டிருக்கும்பொழுது, சிலவேளை மேற்சொல்லிய சிந் தனைகளுண்டானதுபற்றிக் கைசோர்ந்து, வேலையை நிறுத்திப் பெருமூச்செறிந்து, இரண்டொரு மணிநேரம் தலை கவிழ்ந்து தரையைப் பார்த்தவண்ணமாயிருந்தேன். அப்பொழுது என் மனம் ஆறாத் துயரடைந்தது. கண்ணீர்விட்டு அழுதா யினும், என் துக்கத்தைச் சொல்லியாயினும் ஆற்றுவேனாகில், எனக்கு இவ்வளவு பதைப்புண்டாகாது.

இப்பொழுதோ, மேற்சொல்லிய சிந்தனைகளை மறந்து, வேறு சிந்தனைகளில் என் மனதைச் செலுத்தினேன். பிரதி தினமும் திருவாக்கு நூலாகிய சத்திய வேத புத்தகத்தை வாசித்து, அதில் எனது நிலைமையில் இருப்பவர்களுக்குத் தேறுதலாகச் சொல்லிய வாக்கியங்களைச் சிந்தித்து, என் மனப்புண்ணை ஆற்றினேன். துக்கம் மீறியிருக்கையில் ஒரு

நாட் காலையில் நான் வேத புத்தகத்தை வாசிக்கக் கருதித் திறந்தவுடன் "நான் ஒருபொழுதும் உன்னைப் பிரியவும், உன்னைக் கைவிடவும் மாட்டேன்!" என்னும் வாக்கியம் எதிர்ப்பட்டது. தேவனாலும் மனுஷராலும் கைவிடப்பட்டேனென்றெண்ணி, சொல்வதற்கரிய என் துக்க ஸ்திதியை நினைத்துத் துயரடைந்திருக்கையில், ஆச்சரியமானவிதமாய் இத்திருவசனம் என் கண்ணுக்கெதிர்ப்பட்டதனால், இது கடவுள் தாமே பிரசன்னராகி எனக்குச் சொல்லிய வாக்கியமென்று தட்சணமே நினைத்தேன். "நல்லது, கடவுள் என்னைக் கைவிடாதிருந்தால், மனுஷர் அனைவரும் கைவிடினுமென்ன? என்ன தீங்கு விளையும்? ஆனாலும், பூலோகத்தை முழுதுங் கைவசப்படுத்தி, தேவகாருணியத்தையும் அனுக்கிரகத்தையும் பெறாதிருப்பேனாகில், எனக்கு வரும் நஷ்டத்திற்குச் சமானமில்லையே" என்று சொன்னேன்.

பூலோகத்தில் நான் எவ்வகை நற்சீரிலிருப்பினும், எனக்குண்டாகத்தக்க மனப்பாக்கியத்திலும் சகாயமற்று ஏகாங்கியாயிருக்கும் இந்தத் துர்க்கதியில் மிகுந்த மனப்பாக்கியமுண்டானாலும் ஆகக்கூடுமென்று இந்த நிமிஷமுதல் என் மனதில் அனுமிதிசெய்து, இவ்விடத்திற்கு என்னை வருவித்த நன்றியை நினைத்துக் கடவுளுக்குத் துதிசெலுத்தப் போனேன்.

பிரார்த்தனை செய்ய எத்தனமாயிருக்கையில், ஏதோ என்னுள்ளம் அதிரும்படி என்னை அதட்டியது. நான் பிரார்த்தனை செய்யத் துணியவில்லை. "வஞ்சகனே! வந்ததற்கென்ன செய்வேனென்று மனந்தேறி ஒருவாறு நீ திருப்தியடைந்திருப்பது வாஸ்தவந்தான்; ஆனாலும், இக்கஷ்ட தசையினின்று உன்னை விலக்கி இரட்சிக்கவேண்டுமென்று மனப்பூர்வமாய் நீ தேவனைப் பிரார்த்திப்பாயல்லவா? இதை எண்ணாமல், இச்சீரில் உன்னை வைத்ததற்காக நீ கடவுளுக்குத் துதிசெலுத்த முயன்றது என்ன மாயம்" என்பதாக நான் வாய்திறந்து எனக்குச் சொன்னேன். ஆனதுபற்றி, பிரார்த்தனையை [illegible]வளவில் நிறுத்தினேன்; ஆனாலும், மேற்படி [illegible] போய்ச் சேர்ந்து வாசமாயிருந்ததைப் பற்றி, நான் கடவுளைத் துதித்தேனென்று சொல்வது பொருந்தாது. என் சீர்கெட்ட நிலை

மையைக் கண்டறியவும், எனது அதிக்கிரமத்தை நினைத்துப் புலம்பி மனந்திரும்பவும் தக்கதாக, எனக்கு எவ்வகைத் துன்ப துயரங்களை வருவித்தாயினும் என் மனக்கண்ணைத் திறந்ததுபற்றி, நான் வாக்கும் மனமுமொத்துக் கடவுளைத் துதித்தேன். எனது சிநேகர் இங்கிலாந்தினின்று எனக்கனுப்பிய சரக்குச் சிப்பத்தில் வேத புத்தகமொன்று வைத்தனுப்ப வேண்டுமென்று நான் கேட்கவில்லை. தானாய் ஒரு புத்தகத்தை அதற்குள் வைத்து அனுப்பும்படி கடவுள் அவர் எண்ணத்தில் தோற்றுவித்தார். அன்றியும், நான் ஏறிய கப்பலுடைந்து சேதப்பட்டபின், அதற்குள்ளிருந்த சாமான்களில் அப்புத்தகத்தைக் கண்டு எடுத்து வைத்திருக்கும்படி எனக்கு உதவி புரிந்தார். இந்த நன்றியை நான் மறந்துபோகவில்லை. வாசிக்கும்படி வேதபுத்தகத்தைத் திறக்கும் சமயந்தோறும், வாசித்தபின் மூடும் சமயந்தோறும் என்னுள்ளமுருகி உவந்து கடவுளை வாழ்த்தாதொழிந்ததில்லை.

நான் இந்தத் தீவிற் சேர்ந்து இரண்டு வருடம் நிறைவேறி, மூன்றுவது வருடம் நடக்கத் தொடங்கியபொழுது, என் மனோபாவனைகள் இத்தன்மையவாயிருந்தன. முதல் வருடத்தில் நான் செய்த வேலை முதலியவைகளைக்குறித்து விவரணமாய் எழுதினேன். இரண்டாம் வருடத்து வரலாறுகளை அத்தனை நுட்பமாய் எழுதாதிருந்தும், நான் செயலற்றுச் சோம்பியிருந்து, அதை வியர்த்தமாய்க் கழிக்க வில்லையென்று சொல்லமாட்டுவேன். காலவரையறை செய்து, பிரதிதினமும் நான் செய்த வேலை முதலியவைகளின் விவரம் இது: — 1–வது. முறைமைப்படி கடவுளைப் பிரார்த்திப்பதும், காலை உச்சி மாலை அன்றன்று மூன்று முறை தவறாமல் வேத புத்தகம் வாசிப்பதும்; 2–வது. மழை இல்லாதிருக்கும்பொழுது காலைதோறும் மூன்று மணி நேரம் ஆகாரத்திற் கேதாவது சுட்டுக் கொண்டுவரும்படி துப்பாக்கிகொண்டு வெளியில் உலாவி வருவது. சுட்டுக் கொன்ற பட்சி முதலியவைகளையும் அகப்படுத்தியவைகளையும் அறுத்து உரித்து, இறைச்சிக்கு உப்பிட்டு, அன்று ஆகாரத்திற்கு வேண்டியமட்டும் சமைத்து, மிச்சதசையைக் காற்றிற்போட்டு வைப்பது. இவ்வேலைகளைச் செய்து முடிக்கப் பகலில் நெடுநேரம் செல்லும்.

அன்றியும், ஆதித்தன் ஆகாயத்தின் மத்தியில் தலைக்கு நேரே வரும்பொழுது, மத்தியானகாலத்தில் உஷ்ணம் அதி தீட்சண மாயிருக்குமாதலால், வேலைமுகாந்தரமாய் வெளிப்படுவதற் கிசையாது. ஆனதுபற்றி, அக்காலத்திற் சாயங்காலம் நாலு மணி வேளைமாத்திரம் வேலை செய்வேன். சிலவேளை வேலை யின் காலக்கிரமத்தை மாற்றி, காலையில் வேலை செய்து, சாயங்காலம் வேட்டைக்குப் போவதுமுண்டு.

மேற்சொல்லியபடி வேலைக்குக் குறித்தகாலம் குறுகியதா யிருந்தும், நான் செய்த வேலைகள் கஷ்டசாத்தியமானவை களாயிருந்தன. தகுதியான கருவிகளும், கைத்துணையும், பயிற்சித்திறமும் இல்லாததனால், நான் செய்தவைகளைச் செய்து முடிக்கக் காலம் அதிகஞ் சென்றது. இதற்குத் திருஷ் டாந்தம்: மலைக்குகையில் ஒரு நீளமான பலகைத்தட்டுச் செய்து வைக்கப் பூர்த்தியாய் நாற்பத்திரண்டு நாட்கள் சென் றன. தகுதியான வாள் முதலிய கருவிகளும், மரம் அறுக் குங் குழியுமிருக்குமானால், இரண்டு வாட்காரர் ஒரே மாத் தில் அந்தப் பலகையின் பரிமாணமுள்ள ஆறு பலகைகளை அரைநாளில் அறுக்கமாட்டுவார்கள்.

என் வேலைச் சங்கடத்தைச் சற்று விவரணமாய்ச் சொல் லுகிறேன்:—எனக்கு அகலப்பலகை வேண்டியிருந்ததனால், சிறு மரம் உதவாது. பெரு மரந் தறிக்கவேண்டியிருந்தது. தகுதியான மரம் பார்த்து, அதைத் தறித்து விழுத்த மூன்று நாளும், அதன் கிளைகளைக் களைந்து வெட்டிச் சீர்ப்படுத்தப் பின்னு மிரண்டுநாளும் சென்றன. சொல்வதற்கரிய கஷ் டப்பட்டு, கிளைகளை வெட்டிக் கொத்திக் களைந்தபின், மரத்தி னிருபுறத்திலும் அதன் கனத்தைச் சிம்பு சிம்பாய் வெட்டிக் குறைக்க, அது எளிதிற் பெயர்த்துக் கொண்டுபோகும்படி கூடியமட்டும் இலேசாயிற்று. பின்பு நான் அதைப் புரட்டி, அதன் ஒரு பக்கத்தை அடிதொடங்கி நுனிவரையிற் பல கைபோல மட்டமாய் வெட்டி, மேடு பள்ளமின்றி ஒப்பமாக் கினேன். அதன்மேல் அப்பக்கத்தைத் தரையிலழுந்தப் புரட்டி, நிமிர்ந்த எதிர்ப்பக்கத்தையும் மட்டமாய் வெட்டிச் சமப்படுத்தினேன். கடைசியில் அம்மரம் இருபுறமு மொப்

பமும், மூன்றங்குலங் கனமுமுள்ள பலகையாயிற்று. இப் பெயர்ப்பட்ட கஷ்டவேலையில் நான் எவ்வளவு கைவருந்தி யுழைத்திருக்கவேண்டுமென்று இதை வாசிக்கு மெவர்களும் நிதானிக்கமாட்டுவார்கள்; ஆனாலும், நான் மனம்பொறுத்து வருந்தி உழைத்த வேலை இது ஒன்றோ? அல்ல; பின்னும் எத்தனையோ உண்டு. இத்தனை சொற்பவேலையில் நான் வெகுகாலம் செலுத்தியதற்கு நிமித்தம் இன்னதென்று வெளி யிடும்பொருட்டு இது ஒன்றைமாத்திரந் திருஷ்டாந்தமாய்ச் சொன்னேன். கையுதவியுங் கருவிகளு முள்ளவர்களுக்குச் சொற்ப வேலை, உதவியும் கருவியுமின்றி வெறுங்கையால் வருந்தி யுழைத்த எனக்குப் பாரமான வேலையாயிருந்தது. அதைச் செய்து முடிக்க மிகுந்தகாலஞ் சென்றது.

எப்படியும் பின்னும் அநேக வேலைகளைப் பதைப்பின்றி மனம் பொறுத்துக் கஷ்டப்பட்டுச் செய்தேன். நிர்ப்பந்த மான எனது ஸ்திதிக்கு ஆவசியகமானவைகள் ஏதேதோ, அவையனைத்தையும் இவ்வாறே செய்து முடித்தேன். இது பின்வரும் சங்கதிகளால் தெளிவாய்த் தோன்றும்.

மேற்சொல்லிய வேலை செய்து முடித்த காலவிவரம் நவம்பர் மாசமும் டிஸெம்பர் மாசமும். இக்காலத்தில் நான் விதைத்த யவையும் நெல்லும் நன்றாய்ப் பலித்து விளைந் தன. நான் அகழ்ந்து புரட்டி எருவிட்டு அவைகளை விதைத்த நிலம் சொற்பந்தான். வேனிற்காலத்தில் விதைத் ததனால், விதைமணிக்கும் வழியின்றிப் பயிர் அழிந்து போனதுபற்றி, நான் இம்முறை விதைத்த மணி ஆக அரைக் கால் புஷல் என்று முன்பு சொன்னேனே. நல் விளைச்சல் காணுமென்று நம்பியிருக்கையில், பலவகைச் சத்துருக்க ளால் அவ்விளைச்சல் முழுதும் நாசமாய்ப்போமென்று சடிதி யிற் கண்டேன். அச்சத்துருக்களை நிவிர்த்திப்பது அசாத்தி யமாயிருந்தது. ஆரம்பத்தில் வெள்ளாடுகளும், முயலுக்குச் சமானமாகத் தோன்றிய ஒரு ஜாதி விலங்கும் நான் விதைத்த தானியம் முளைத்து இளம் பயிரானபொழுது, அதைத் தின்று ருசிகண்டதனால், இரவும் பகலும் கழனியை விட்டு நீங்காதி ருந்து, பயிரைத் தேறவிடாமற், தரைமட்டமாய் மேய்ந்து, அழிவு செய்துகொண்டு வந்தன.

இப்படி நாளாவர்த்தியில் அவைகள் பயிரழிவு செய்து கொண்டு வருவது கண்டு, தீவிரகதியாய் என் கழனியைச் சுற்றி வேலி அடைத்தாலன்றி, இதற்கு நிவிர்த்தியில்லையென் றெண்ணி, வருத்தத்தைப் பாராட்டாமல் மிகுந்த பிரயாசை யுடன் வேலியடைத்தேன். விதை நிலம் சொற்பந்தானே. மூன்று வாரத்திற்குள் நன்றாய் வேலியடைத்து முடிந்தது. அன்றியும், பகற்காலத்தில் அவ்விலங்குகளிற் சிலவற்றைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றதுந்தவிர, இராக்காலத்திற் காவல் காக்கும்படி அடைப்புக்குட் செல்லும் வாசலில் எனது நாயையுங் கட்டிவைத்தேன். அது தூங்காமல் நின்று, இராமுழுதும் குலைத்தவண்ணமாயிருந்தது. ஆகவே, கொஞ் சக்காலத்திற்குள் அம்மிருகங்கள் தொலைந்துபோக, பயிர் ஓங்கி வளர்ந்து சேஷ்டித்து, விரைவில் விளைந்தது.

இவ்வளவிற் சங்கடம் நீங்கவில்லை. பயிரேறும் பருவத் தில் விலங்குஜாதிகள் அதற்கு நாசமாகத் தலைப்பட்டதுபோல கதிர் முதிர்ந்து விளையும் பருவத்திற் பட்சிஜாதிகள் அதைப் பட்சிக்கத் தலைப்பட்டன. முதலில் இது எனக்குத் தெரிய வந்த வகை சொல்லுகிறேன். ஒருநாள் வயல்பார்க்கப் போன பொழுது, பலஜாதிக் குருவிகள் அதைச் சூழ்ந்திருக்கக் கண்டேன். அவை நான் திரும்புமளவும் கதிரைப் பட்சிக் கச் சமயம் பார்த்திருப்பதுபோலக் காணப்பட்டன. அந்த க்ஷணமே துப்பாக்கியால் ஒரு வெடி தீர்த்தேன். வீட்டி னின்று வெளிப்படும்பொழுதெல்லாம் துப்பாக்கி கொண்டு போவது என் வழக்கம். வெடி அதிர்ச்சி கேட்டவுடன் ஒரு சேனைக் குருவிகள் கழனிக்குள்ளிருந்து எழுந்து, ஆகாயத்திற் சிறு மேகம்போல் அடர்ந்து பறந்தன. வேலிப்புறத்திலிருந்த குருவிகளையன்றி, கழனிக்குள்ளிருந்தவைகளை நான் முன்பு காணவேயில்லை.

இதைக் கண்டவுடன் என் மனம் பதறிற்று. இன்னும் சில தினங்களிற் குருவிகளால் என் விளைச்சல் நாசமாய்ப் போமென்றும், பட்டினியால் வருந்துவதன்றி எனக்கு வேறு கதி இல்லையென்றும், இனிப் பயிர் செய்வதற்கு விதைமணி கிடையாதென்றும் நினைத்து வருத்தப்பட்டேன். இதற்கு

நிவிர்த்தி என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இரவும் பகலும் இளைக்காமல் நானே விளைச்சலைக் காக்கவரினும் காப்பதொழிய, கூடியவரையில் அதைக் கைவிடக்கூடா தென்று எனக்குள்ளே மனவுறுதி செய்தபின், குருவிகளால ழிந்த விளைச்சல் எவ்வளவென்றறியும்படி போய்ப் பார்த் தேன். பார்த்தவளவில், அதிக தானியம் பட்சிக்கப்பட்ட தென்று கண்டேன். கதிர் பழுப்பேறாமல் இன்னும் பசுமை யாயிருந்ததனால், அதைப் பழுதின்றிக் காத்துக்கொள்ளில் விளைச்சல் தாழ்ச்சியாகாதென்று காணப்பட்டது.

கழனிக்கரையில் நின்று, துப்பாக்கியில் மருந்து ரவை இட்டுக் கெட்டித்துத் திரும்பிவருகையில், நான் போகும் சமயம் பார்த்துக் கதிரைப் பட்சிக்கக்கருதிய பாவனையாகக் குருவிகள் மரங்களிற் பதிவிருந்தன. வீட்டுக்குத் திரும்பிப் போகிறவன்போல நான் பின்னும் சற்றுத்தூரம் போக, என் தலை மறைந்தவுடன் அவைகள் ஒவ்வொன்றாய்ப் பறந்து, மீண்டும் கழனியிற் புகுந்தன. அதைக் கண்டு எனக்குண் டான கோபம் இவ்வளவென்றில்லை. சற்றுச் சென்றால், பின்னும் அநேக குருவிகள் வந்து சேர்ந்து தானியத்தைப் பட்சிக்கும். அவை பட்சிக்கும் ஒவ்வொரு மணியும் காலக் கிரமத்தில் எனக்குஒருமரக்கால் தானியமாகுமென்றெண்ணித் திரும்பிப்போய், வேலிக்குப் புறத்தில் நின்று, பின்னும் வெடி தீர்த்தேன். மூன்று குருவிகள் விழுந்தன. நான் கருதிய வாறு விழுந்ததனால், அவைகளை எடுத்து, இங்கிலாந்தில் கள் வருக்கு அச்சமுண்டாம்படி பெயர்பெற்ற கள்வரை விலங் கிட்டுத் தூக்கிற் போடுவதுபோலத் தூக்கினேன். எனது தாற்பரியந் தவறாமற் பலித்தது கண்டு, ஆச்சரியப்பட்டேன். குருவிகள் அன்றுதொடங்கிக் கழனிக்கு வராதொழிந்ததுந் தவிர, அந்தத் திக்கில் சஞ்சரிப்பதை விட்டு, வேறிடத்திற்குப் பறந்துபோயின. நான் தூக்கிய குருவிகள் இருக்கிறவரை யில், அவ்விடத்திற்குச் சமீபத்திற் குருவிகளை மருந்துக்கும் காணவில்லை.

இதைக்குறித்து எனக்குண்டான சந்தோஷம் இவ்வள வென்று சொல்லவேண்டுமோ. இரண்டாம்போகத்து விளைச்

சல் ஒப்படை செய்யப்படும் டிஸெம்பர் மாசக் கடைசியில் அறுப்பறுத்தேன்.

விளைந்த தானியத்தை அறுப்பதற்கு அரிவாள் இல்லாத குறை பெருங்குறையாயிருந்தது; ஆனாலும் என்ன செய்யலாம்? கப்பலிலிருந்த ஆயுத வர்க்கங்களுள் நான் எடுத்து வைத்த [illegible]களில் ஒன்றைக் கூடியவரையில் அரிவாளாக உருவாக்கி விளைந்த [illegible]த்தின் தாளைத் தரைமட்டமாய் அடியோடு அறுமல், கதிரைமாத்திரங் கொய்து, நான் முடைந்து வைத்திருந்த பெரிய கூடைக்குள் வைத்துக்கொண்டுபோய், கையாற் கசக்கி மணியாக்கினேன். விதைத்த தானியம் கொஞ்சமாதலாற், கதிர் கொய்வது எனக்குக் கஷ்டமாயிருக்கவில்லை. இருவகைத் தானியமும் கசக்கி முடிந்தபின், நான் என் மதிப்பிற்கண்ட விளைச்சல் நெல் இரண்டு புஷல்; யவை இரண்டரைப் புஷல். விதைத்த நெல் ஆக அரைக்கால் புஷல். மன நிதானத்திற்கு மதிப்புச் செய்வதொழிய, அளவிடை செய்வதற்கு மரக்கால் முதலிய கருவிகள் என்னிடத்திலில்லை.

விளைந்த தானியம் சொற்பமாயினும், அது விதைத்ததற்கு மிக அதிகமாயிருந்ததனால், எனக்கு மிகுந்த உற்சாகம் பிறந்தது. கடவுள் கடாட்சம் இருந்தால், காலக்கிரமத்தில் எனக்கு அன்னத்திற்குத் தாழ்ச்சி யில்லாதிருக்குமென்று எண்ணி மனந்தேறினேன். தேறியும், தானியத்தைக் குத்தி அரிசி வேறு உமி வேறுக்குவதற்காயினும், அரைத்து அல்லது இடித்து மாவாக்குவதற்காயினும் வகை தெரியாமற் பின்னுந் தடுமாறினேன். மாவாக்கினாலும், அதைப் பிசைந்து ரொட்டி சுடுவதற்கு வழி அறியாதிருந்தேன். இந்தச் சங்கடங்களுடன், கூடியவரையில் விதைமணி அதிகம் வைத்திருந்து, வருஷந்தோறும் விதைத்துத் திரளான தானியத்தைச் சேர்த்துக்கொள்ளும் அபேட்சையும் எனக்குண்டாயிருந்ததனால், இம்முறை விளைந்த தானியத்தில் ஆகாரத்திற்குக் கொஞ்சமும் செலவழியாமல், மற்ற முறை விதைப்பதற்காக வைத்திருக்கவும், இனி விதைப்புக்காலம் வருமுன் தானியம் விளைவிக்கவும், விளைந்த தானியத்தை மாவாக்கி, ரொட்டி முதலிய

போஜனபாகம் செய்வதற்குக் கூடிய முயற்சியும், தகுதியான கருவிகளும் செய்யவும் தீர்மானித்தேன்.

இக்காலத்திலேயே நான் வாய்ச்சோற்றுக்கு வருந்தி உழைத்தேனென்று சொல்லத்தகும். ஆகாரத்தின்பொருட்டுத் தானிய விதைமுதல் சேகரித்து, விதைத்து, விளைவித்து, அறுத்து, மிதித்து, அரிசி குத்தி, மாவரைத்து. போஜனபாகம் செய்வதற்கு ஆவசியகமான [illegible] ற்ப ஏதுகள் கருவிகள் மிகத் திரளாயிருப்பது எனக்கு ஆச்சரியமாகத் தோற்றுகின்றது. பெரும்பாலும் மனுஷர் இதைக்குறித்து நினைக்கிறதில்லை.

மனுஷ சகவாசமாயினும், சீர்திருத்தமுள்ள தேசத்தவர்கள் வழங்கும் தொழிற்கருவிகளின் உதவியாயினுமின்றி, கேவலம் பிறந்தகோலமாயிருந்த நான் மேற்குறித்த குறைவின் பயனைப் பிரதிதினமுங் கண்டு, மனச்சோர்வடைந்தேன். ஆதியில் நினைத்திராதபிரகாரம் ஆச்சரியமான விதமாய்க் கைநிறைந்த தானிய விதைமுதல் எனக்குக் கிடைத்தபின்னும் இக்குறைகளை இடைவிடாமல் நினைத்து மனந் தடுமாறினேன்.

முதலில் நிலம் உழுவதற்கு ஏர் இல்லை; அகழ்வதற்குப் பாரையில்லை. மரத்தினால் ஒரு பாரை செய்து இந்தக் குறையை நிவிர்த்தித்ததாக முன்பு சொன்னேனே; ஆனாலும் இரும்புக் கருவியாற் செய்யவேண்டிய வேலையை அதனாலும், மரக்கருவியாற் செய்யவேண்டிய வேலையை அதனாலும் செய்தாலல்லவா வாய்க்கும். ஆனதுபற்றி, நான் மரப்பாரையினால் நிலத்தை அகழ்ந்தது ஏருழுததுபோல அனுகூலப்படவில்லை. ஒரு பாரை செய்து முடிக்கப் பலநாள்வரையிற் சென்றும், இருப்புமுனை யில்லாததனாற், சீக்கிரத்தில் தேய்ந்துபோயிற்று. அன்றியும், அதனால் நிலத்தை யகழ்வது மிகக் கடினமாயிருந்தது; அதைக்கொண்டு செய்த வேலையும் அவலட்சணமாய் முடிந்தது.

சித்தம் சலிக்காமல் இதையும் என் மனம் தாங்கிற்று. மனப்பூர்வமாய்ப் பொறுத்திருந்து உழைத்தேன். செய்த வேலை அவலட்சணமாயிருந்தும், பெரிதல்லவென்று நினைத்

துத் திருப்தியடைந்திருந்தேன். தானியம் விதைத்தபின் நிலத்தை ஒப்பமாக்குவதற்குப் பாம்பு இல்லை. அதற்குப் பதிலாகப் பளுவான மாக்கிளை யொன்றை நானே இழுத்துக் கொண்டுபோனேன். அது மண்ணாங்கட்டியைத் தகர்த்து, நிலத்தைச் சமமாக்கி, விதைத்த மணியை மண்ணுக்குள் மறைக்குமா? முள்ளாற் கீறுவதுபோல நிலத்தைக் கீறிற்று. வேறு கதி இல்லாததுபற்றி இப்படிச் செய்தேன்.

விதைத்த தானியம்முளைத்துவளரும்பொழுதும், வளர்ந்து விளைந்தபின்னும் வேலி யடைப்பதற்கும், விளைச்சலைக் காப்பதற்கும், அறுப்பதற்கும், வாடப்போட்டு வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கும், போரடிப்பதற்கும், தூற்றி மணி வேறு பதர் வேறாக்குவதற்கும், தானியத்தைப் பத்திரமாய் வைத்திருப்பதற்கும் எத்தனையோ கருவிகள், சாதனங்கள் எனக்கில்லா திருந்தனவென்று முன்பு சொன்னேனே. பிறகு மா அரைப்பதற்கு யந்திரமில்லை; அரிப்பதற்குச் சல்லடை இல்லை; அப்பம் சுடுவதற்கு உப்பும் புளித்தமாவுமில்லை; அதை வைத்துச் சுடுவதற்குத் தகுந்த கருவி இல்லை. இல்லாதிருந்தும், எப்படியோ ஒருவாறு மாவரைத்து, அரித்து, பிசைபிட்டு, உப்புப்போட்டு, புளிப்பேற்றி, அப்பம் சுட்டேன். இதைக்குறித்துப் பின்பு சொல்வேன். இத்தனை குறைவுகளிருந்தும், விளைந்த தானியம் என் சுகத்திற்குரிய பெரும்பேறுகவும், பிரயோஜனகரமாகவு மிருந்தது. மேற்சொல்லிய கருவிகளில்லாததனுல், இவ்வேலைகள் அனைத்தும் எனக்குக் கஷ்டமாகவும் தாமசமாகவுமிருந்தன என்றேனே; ஆனாலும், அதற்கு என்ன பரிகாரம்? இதனுல் எனக்குக் காலநஷ்டம் உண்டாயிற்றென்று சொல்லவேண்டுவதில்லை. பிரதிதினமும் இன்னதற்கு இவ்வளவு காலமென்று கிரமமாய் வரையறை செய்திருந்ததனுல், இப்பெயர்ப்பட்ட வேலைகள் செய்வதற்கு அன்றன்று போந்தமட்டும் நேரமிருந்தது. பின்னும் அதிக தானியம் விளைகிறவரையில் மேற்சொல்லிய சொற்ப தானியத்தை விதைமணிக்கு வைத்திருப்பதொழிய, பட்சணைக்குச் செலவு செய்வதில்லையென்று நிர்ணயம் செய்திருந்ததனுல், விளையுந் தானியத்தைப் போஜனத்திற் குபயோகப்படுத்தும்பொருட்டு, ஏதேது பிரயோ

கம்செய்வது ஆவசியகமோ, அப்பிரயோகங்களுக்குத் தகுதியான கருவிகளைச் செய்யும் வகையைச் சூழ்ச்சியா யறிந்து செய்வதற்கு அடுத்துவரும் ஆறுமாச முழுதும் எனக்கு அவகாசமிருந்தது.

ஆனாலும், முதலில் பின்னும் அதிக நிலத்தைச் சாகுபடிக்குப் பண்படுத்த வேண்டியிருந்தது. ஒரு ஏக்கருக்கு அதிகமான நிலத்தில் விதைக்கப் போதுமான விதை மணி இருந்ததே. நிலம் பண்படுத்தத் தொடங்குமுன் ஒரு பாரை செய்து முடிக்க அதமம் ஒரு வாரம் சென்றது. அது சற்றுவது நாணயமானதல்ல. அதிக பளுவாயிருந்தது. அதைக் கொண்டு வேலை செய்யிற், பின்னும் ஒரு பங்கு உழைக்க வேண்டியிருந்தது. படவேண்டிய கஷ்டமனைத்தையும் பதறுமற் பட்டு, எனது வீட்டுக்குச் சற்றுச் சமீபத்திற் பக்குவமான நிலம் பார்த்து, ஒப்பமும் விஸ்தாரமுமான இரண்டு துண்டு நிலத்தில் விதைத்து, நன்றாய் வளருமென்று நான் முன்பு நாட்டின விருட்சவனத்தில் வெட்டிய கொம்புகளை நாட்டி, பலமான வேலி அடைத்தேன். அவ்வேலிக்கொம்புகள் ஒரு வருஷத்திற்குள் நன்றாய்த் தழைத்து வளர்ந்து உரத்திருந்ததனால், அப்புறம் வேலி பழுதுபடாதிருக்குமென்று கண்டேன். மேற்சொல்லிய வேலைகள் மழைக்காலத்திற் செய்யப்பட்டதனால், கொஞ்சங் கொஞ்சமாய்ச் செய்து முடிக்கப் பூர்த்தியாய் மூன்று மாசம் சென்றது.

மழை பெய்யும்பொழுது நான் வெளிப்படாமல் வீட்டிலிருந்து வேலை செய்தேன். இதன் அடியிற் குறிக்கப்படும் ஏதுக்களைப்பற்றி எனக்குத் தகுதியான வேலை உண்டாயிற்று. வீட்டிலிருந்து வேலை செய்யும்பொழுதெல்லாம் நான் வளர்த்த கிளிக்குப் பேச்சுப் பழக்கினேன். அது எனக்கு இதமான காலக்ஷேபம். அதற்கு நான் கொடுத்த பெயர் பால். இது தன் பெயரென்று அறிவதற்கும், பால், பால் என்றுரத்துச் சொல்வதற்கும் நான் அதற்குச் சீக்கிரத்திற் பயிற்றினேன். அந்தத் தீவில் நான் போய்ச் சேர்ந்தபின், என் சொல் தவிர, எந்த ஜீவபிராணியின் வாக்கினின்றுவது பிறந்ததாக நான் முதலிற் கேட்ட சொல் இதுதான். கிளிக்குப் பேச்சுப் பயிற்

றியது எனது வேலை அல்ல, வேலைக்கு உதவியான சாதன மாயிருந்தது. இக்காலத்தில் சற்றுப் பாரமான தொழில் ஒன்றைக் கைபிட்டிருந்தேன். அதன் விவரம்: — எனக்கு மட்கலமில்லாத குறை பெருங் குறையானதுபற்றி, என்ன உபாயம் செய்தாயினும் மட்கலம் வனையப் பார்த்தேன். அதற்கு வழி துறை தெரியவில்லை. தேசத்தில் உஷ்ணம் அமிதமாயிருந்ததனால், பக்குவமான களிமண் அகப்படுமா னால், அதைக்கொண்டு கைமட்டத்திற்குப் பரும்படியாய்க் கலங்கள் வனைந்து, வெயிலிற் காயவைத்து, காய்ந்து இறு கிப் பலத்தபின், தானியமுதலிய நீர்ப்பிடிப்பில்லாத வஸ்துக் களை அவைகளிற் போட்டு வைத்திருக்கலாமென்று எண்ணி னேன். தானியம், மா முதலியவைகளை எத்தனஞ் செய் வதற்குக் கலம் ஆவசியகமாயிருந்ததுபற்றி, சாடிகளைப்போல நிறுத்தி, பண்டங்கள் போட்டு வைக்கத்தக்க பெரிய பாண் டங்கள் சிலவற்றைச் செய்யத் தீர்மானித்தேன்.

# 9. அத்தியாயம்.

மட்பாண்டங்களை வனைந்ததும், அவைகள் வளமாய் அமைந்ததும். ரொட்டி சுட்ட வகை. ஓடம் செய்யத் தொடங்கினது. வேலை முடிந்தபின், அதைக் கடலில் இறக்கச் சக்தியில்லாதிருந்தது. பாரமான சிந்தனைகள் உண்டானது. எழுதும் மையும் பிஸ்கிட் ரொட்டியும் செலவழிந்தது. வஸ்திரங்கள் கந்தையாய்ப் போனது. சருமத்தால் ஆடை செய்தது.

களிமண்ணைப் பதப்படுத்திப் பசையுள்ளதாக்குவதற்கு நான் அனுசரித்த பயனற்ற சாதனங்கள் எத்தனை? வனைந்த கலங்கள் எவ்வளவு விகாரமும், விரூபமும், அவலட்சணமு மானவைகள்? மண்ணில் பளுத் தாங்கத்தக்க பசைத்தன்மை யில்லாததுபற்றி, வனைந்தவுடன் பிண்டு விழுந்து உருவழிந் தவைகள் எத்தனை? நிழலிலிருந்து இறுகுமுன் அதி தீக்ஷண மான வெயிலிற் காயவைத்ததனால், காய்ந்து முறுகி வெடித்த வைகள் எத்தனை? காயுமுன்னும், காய்ந்தபின்னும் எடுத்துக் கொண்டு போம்பொழுதே விழுந்து உடைந்து சின்னபின்னப்

பட்டவைகள் எத்தனை? சுருக்கிச் சொல்லில், மிக வருந்திக் களிமண் இருக்குமிடங் கண்டு, அதை அகழ்ந்தெடுத்து, பதப்படுத்தி, வீட்டுக்குக் கொண்டுவந்து, குழைத்து, இதற்கெல்லாம் இரண்டு மாசவளையிற் சிரமப்பட்டு, உழைத்து, கடைசியில் வனைந்த விகாரமான பருங் கலங்கள் எத்தனை? ஆக இரண்டுதானே. நான் அவைகளைச் சாடியென்று சொல்லமாட்டேன். எனது வெட்கக்கேட்டைச் சொன்னால், கேட்பவர்கள் என்னை இகழ்ந்து நகைப்பார்கள், அல்லது "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப் பேதை வினைமேற் கொளின்" என்று என்னைக்குறித்துப் பரிதபிப்பார்கள்.

ஆயினும், ஒருபடி அக்கலங்கள் இரண்டும் வெயிலில் நன்றாய்க் காய்ந்து இறுகியபின், நான் அவைகளை மெதுவாய்த் தூக்கி, படர்கொடிகளால் முடைந்த இரண்டு பெருங் கூடைகளுக்குள் உடைந்துபோகாமல் வைத்து, கலத்திற்கும் கூடைக்கு மிடையிலுள்ள வெற்றிடத்தில் நெல் வைக்கோலும், யவை வைக்கோலும் பொதிந்தேன். இக்கலங்கள் எப்பொழுதும் நீர்ப்பிடிப்பில்லாதிருக்குமாதலால், தானியமும், அரைக்கப்படும் மாவும் வைக்க உதவுமென்று நினைத்தேன்.

பெரும் பானைகள் வனைவதில் மேற்சொல்லியவாறு பிசகு நேரிட்டதொழிய, சிறு கலங்கள் பல வனைவதில் நான் எள்ளளவும் பிசகவில்லை. பணிக்கான சிறு வட்டக் கலங்களும், தட்டைக் கிண்ணங்களும், குடங்களும், சிறு கலயங்களும், பின்னும் என் கைக்கு வசப்பட்ட எத்தனையோ பாண்டங்களும் வனைந்தேன். அவை வெயிலிற் காய்ந்து கற்போல் இறுகின.

நீர்முதலிய திரவபதார்த்தங்களை அடுப்பிற் காய்ச்சும்படி தகுதியான மட்பாண்டம் ஒன்று எனக்கு மிகவும் ஆவசியகமாய் வேண்டியிருந்தது. நான் செய்த கலங்களில் ஒன்றும் அதற்குதவாது. அவை தண்ணீர் பட்டாற் கரைந்துபோம்; சூட்டடுப்பில் வைத்தால் வெடித்துப்போம். சிலநாள் சென்றபின், ஒருநாள் அடுப்பில் நெருப்பு மூட்டி, சற்றுச் சுவாலித்து எரியும்படி வளர்த்து, இறைச்சி சமைத்தபின் அந்நெருப்பை அவிக்கப்போனேன். போனபொழுது, முன்

னுடைந்த கலவோடொன்று அடுப்பிற்குள் பழுக்கக் காய்ந்து, கற்போலிறுகி, தட்டோடுபோலச் சிவந்திருந்தது. அதைக் கண்டு, ஆச்சரியப்பட்டு, ஆனந்தங்கொண்டேன். உடைந்த கலவோடு இப்படி நெருப்பில் வேகுமானால், முழுக் கலங்கள் பழுதின்றி வேகுமென்பதற்கு இனி வேறு சாட்சி வேண்டுவதில்லையென்று சித்தாந்தப்பட்டது.

இவ்வுறுதியைச் சார்ந்து, நான் வனையும் மட்கலங்களைச் சுடுவதற்குச் சூளைவைப்பது எவ்வகையென்று விசாரிக்கத் தொடங்கினேன். குலாலர் மட்கலம் சுடும் சூளை எத்தன்மையானதென்றாயினும், அக்கலங்களுக்கு ஈயம் பூசி மினுக்கிடுவது எவ்வகையென்றாயினும் அறியேன். என் வசத்திற் காரீயங் கொஞ்சம் இருந்தது; இருந்தும் பயன் என்ன? ஆனாலும், ஒருவாறு உத்தேசித்து, பெருங் கலங்கள் மூன்றும், பானைகள் இரண்டு மூன்றும் ஒன்றின்மேலொன்றாக அடுக்கி வைத்து, சுற்றிலும் விறகு கட்டைகளை அடர்த்தியாய் அடுக்கி, அக்கட்டைகளின்கீழ் எரிதழலிட்டு, விறகு எரிய எரிய, சுற்றுப்புறத்திலும் மேற்புறத்திலும் பின்னும் விறகு வைத்து, நெருப்பை வளர்த்து, நான் அடுக்கிய கலங்கள் அனைத்தும் பூர்த்தியாய்ப் பழுக்கக் காய்கிறவரையில் எரித்தேன். அவைகள் சிறிதும் வெடிக்கவில்லை. எரிதழல்போலக் காய்ந்து சிவந்தபின், ஐந்து ஆறு மணிநேரவரையில் அனலிலிருக்க விட்டேன். அக்கலங்களில் ஒன்று வெடிக்காமல் உருகித் தண்ணீர்போலப் பெருகிற்று. களிமண்ணுடன் மணல் கலந்திருந்ததனால், அது கடுமையான வெப்பத்தாற் காரீயம்போல் உருகியது. பின்னும் நெருப்பு வளர்த்துக்கொண்டிருப்பேனாகில், அது உருகிப் பெருகிக் கண்ணாடியாகும். ஆனதுபற்றி, நான் நெருப்பை வரவரத் தணிக்க, பாண்டங்களின் சிவந்த நிறம் சிறிது சிறிதாய் மங்கிற்று. நெருப்பு விரைவில் தணியாதபடி இராமுழுதும் விழித்திருந்து, அதற்கு வேண்டிய பக்குவங்கள் செய்தேன். காலையில் நாணயமான கலயங்கள் மூன்றும், வேறு இரண்டு பானைகளும் நன்றாய் வெந்து இறுகியிருந்தன. அக்கலயங்கள் அத்தனை சிறந்தவைகளல்ல. மணல் உருகிப் பெருகியதனால், பானைகளில் ஒன்றிற் கண்ணாடிபோல மினுக்கேறியிருந்தது.

இவ்வாறு செய்த பரீட்சை அனுகூலித்தபின், எனக்கு உபயோகமான மட்பாண்ட வகைக அனைத்தும் எளிதிற் சேகரித்தேனென்று சொல்லவேண்டுமா? நான் வனைந்த கலங்களின் உருவம் விகாரமாய்த்தான் இருந்தது. மண்ணிற் பணிகாரம் செய்யும் சிறு பிள்ளைகளைப்போலும், மாவைப் பிசைந்து பசையாக்கும் வகைதெரியாமற் பணிகாரம் செய்யத் துணியும் ஸ்திரீயைப்போலும் கைபடியாமல், கலம் வனையத் தலைப்பட்ட எனக்கு அவைகள் விதம் விதமான சிறந்த உருவுடையவைகளாய் அமையுமா?

இவ்வித அற்ப விஷயத்தைக்குறித்து என்னைப்போல் அதிக மகிழ்ச்சி யடைந்தவர் எவருமில்லை. எரிநெருப்பைத் தாங்கத்தக்க மண்பாண்டம் வளமாய்ச் செய்ததை யெண்ணி, இன்பமடைந்தேன். வெந்த பாண்டங்கள் ஆறின க்ஷணமே அவற்றில் ஒன்றில் தண்ணீர் விட்டு, அதை அடுப்பில் வைத்து இறைச்சி சமைத்துப் பார்த்தேன். சமையல் அப்பாண்டத்திற் பக்குவமாய் நிறைவேறிற்று. பின்னும் ஒரு துண்டு ஆட்டுக்குட்டி மாமிசத்தில் மிக ருசிகரமான சாறு வைத்தேன். ஓத் மா முதலிய சம்பாரங்கள் உண்டானால், அது பின்னும் ரஞ்சிதமாயிருக்கும்.

அதன்மேல் நெல்லுக்குத்த ஒரு கல்லுரல் வேண்டுமென்று எனக்கு விசாரமுண்டாயிற்று. ஒருவன் தனித்து மா அரைப்பதற்கு யந்திரம் செய்யும் நுண்ணிய வறிவு எனக்கு வரவில்லை. கல்லுரல் சேகரிப்பது எவ்வகையென்று எனக்கு ஒருவிதத்திலுந் தோன்றவில்லை. உலகத்தில் வழங்கிய கைத்தொழில் வகை பலவற்றுள் ஒன்றுமறியாத எனக்குக் கல்லுளித் தச்சர் வேலையைக்குறித்து என்ன தெரியும்? அதற்குரிய கருவிகள் எனக்கேது? அதுநிற்க, குழி அடித்து உரலாகப் பிரயோகிக்கத்தக்க பெருங்கல் ஒன்று வேண்டுமென்று பலநாள்வரையில் மனம்சலிக்காமல் பார்த்துத் திரிந்தேன். மலைக்கல்லொழிய, மற்றொன்றையும் நான் காணவில்லை. மலைக்கல்லை வெட்டிப் பிளந்து கொண்டுவருவதற்காயினும், அகழ்ந்து எடுப்பதற்காயினும் வகை யாதுமறியேன். அறிந்தாலும் பயனில்லை. அத்தீவின் மலைக்கல் வைரமானதல்ல.

எளிதில் உதிரத்தக்க மணற்பாங்கான கல். அதிற் செய்யப் படும் உரல் பளுவான உலக்கையால் குத்தும்பொழுது, அதன் அதிர்ச்சியைத் தாங்காது; வெடித்து உதிர்ந்துபோம். வெடிக்காதிருப்பினும், குத்தும் அரிசியுடன் மணல் உதிர்ந்து கலக்கும். வைரக்கல் தேடியும் நெடுநாள்வரையில் அகப் படாதிருந்ததனால், கல்லுரலைக் குறித்த நினைவைத் தள்ளி விட்டு, வைரமான மரம் ஒன்று சேகரித்து உரல் செய்யத் தீர்மானித்தேன். மர உரலுக்கு வளமான மரத்துண்டு எளி தில் அகப்பட்டது. நான் பெயர்த்துக்கொண்டு வரத்தக்க பருமமுள்ள மரத்துண்டு ஒன்றை வெட்டித் திரட்டி, எனது கோடரியினாலும், கைக்கோடரியினாலும் அதை உரலின் சாங்கமாய் அமைத்து, ப்ரேஜில் பிரதேசத்து இந்தியர் சிற் றோடம் குடையும்வண்ணம் நெருப்பினாற் சுட்டு, மிக வருந்தி, அவ்வுரலிற் குழியுண்டாக்கினேன். பிறகு பாலைமரத்திற் கன தியும் பருமனுமான உலக்கை ஒன்று செய்து, அடுத்துவரும் போகத்தில் விளையுந் தானியத்தைக் குத்தி இடித்து மாவாக் குதற் குதவுமென்று அவ்வுரலையும் உலக்கையையும் பத்திர மாய் வைத்திருந்தேன்.

அப்புறம் உமியையும் தவிட்டையுங் கொழித்துத் தள்ளி மா அரிக்கும்படி ஒரு சல்லடை எனக்கு மிகவும் ஆவசிய கமாய் வேண்டியிருந்தது. சல்லடையின்றி ஆகாரத்திற்கு ரொட்டி சுடுவது அசாத்தியமாய்க் காணப்பட்டது; ஆனா லும், சல்லடை செய்வதற்கு எனக்கு உபகரணங்கள் ஏது? அதைக்குறித்து நினைப்பதுகூட அசாத்தியமாயிருந்தது. மாவரிப்பதற்கு வளமான மெல்லிய ரெட்டுத்துணியாவது, இழை நீக்கமான ஆட்டு ரோம வஸ்திரமாவது இல்லாமல், சல்லடை செய்வதெப்படி? இவ்வகைத் துணி என்னிடத் தில் ஓரிழையுங் கிடையாது. ஆனதுகொண்டு, அநேக மாச வரையில் நான் இவ்விஷயத்தைக் கனவிலும் நினைக்கவில்லை. நினைப்பதும் வியர்த்தமே. செய்வதின்னதென்று எனக்குச் சுத்தமாய்த் தோன்றவில்லை. என் வசமிருந்த சணனூல் வஸ் திரங்களெல்லாம் கிழிந்து கந்தையாய்ப் போயின. ஆட்டு ரோமம் வைத்திருந்தேன்; அதைச் சுத்திசெய்து துணி நெய்ய அறியேன்; அறிந்திருப்பினும், அத்தொழிற்குரிய கருவிகள்

இல்லையே; இதற்கு ஒரு யுத்தி செய்தேன். கப்பலில் நான் கண்டு எடுத்து வைத்திருந்த கடலோடிகள் வஸ்திரங்களுக்குள் கவணிக் கழுத்துக் குட்டைகள் சில இருந்த ஞாபகம் எனக்கு வந்தது. அக்கவணித் துணியில் மூன்று சல்லடைகள் செய்து, சில வருஷவரையில் அவைகளைக் கொண்டு காலந் தள்ளிவந்தேன். அச்சல்லடைகள் பணிக்கானவைகளல்ல; என் காரியத்திற்குதவின.

இச்சங்கடம் தொலைந்தபின், ரொட்டி செய்வதும் சுடுவதும் எப்படியென்று யோசிக்கத் தொடங்கினேன். முதலிற் புளித்த மா தேடுவது கஷ்டசாத்தியமாயிருந்தது; ஆதலால் அதைக்குறித்துச் சிந்தியாமல் விட்டு, அடுப்புச் செய்வதைப் பற்றி அழுத்தி நினைத்து, அதற்கும் ஒரு யுத்தி பண்ணினேன். ஏறக்குறைய இரண்டடி குறுக்களவும், ஒன்பது அங்குலம் குழிவுமுள்ள வாய் அகன்ற தட்டைக் கலங்கள் சிலவற்றை வனைந்து சுட்டு வைத்தேன். அன்றியும், நான் செய்து சுட்டு வைத்திருந்த சில சதுரத் தட்டோடுகள் பதித்துப் பணிக்காய் உண்டாக்கின அடுப்பில் வேண்டும்பொழுது நெருப்பு மூட்டி, பின் சொல்லப்படுமாறு ரொட்டி சுட்டேன். சதுரத் தட்டோடுகள் என்றேனே, அவை சதுரமானவைகளல்ல.

அடுப்பிலிட்ட விறகு கட்டை எரிந்து தணலானபின், அத்தணல்களை முன்னடுப்பிற் பெயர்த்து எங்கும் பரவி, அடுப்பில் அதிக சூடேறுமளவும் அப்படியே இருக்கவிட்டேன். சூடேறியபின் தணலைப் பெருக்கித் தள்ளிவிட்டு, ரொட்டிக்குப் பிசைந்த மாவை அடுப்பில் வைத்து, மேற்சொல்லிய கலத்தை அதன்மேற் கவிழ்த்து அழுத்தி, தணலை அக்கலப்புறத்தில் எங்கும் பரவி, புறத்தினின்றும் ரொட்டியிற் சூடேறும்படி செய்தேன். இவ்வாறே கை படியப் படிய, பலகாரவகை செய்வதிற் பக்குவசாலியானேன். நான் செய்த யவை ரொட்டிகள் மிகவும் நாணயமானவைகள்.

நான் இத்தீவில் இறங்கிய மூன்றாவது வருஷத்தின் அதிக பாகம் மேற்சொல்லிய வேலைமுயற்சியிற் கழிந்தது. அவ்வேலைகளுக்கு இத்தனைகாலம் வேண்டுவது ஏனென்று எவ

ரும் ஆச்சரியப்படுதற்கு நிமித்தமில்லை. இடையில் வயல் உழுது, விதைத்து, காத்து, தானியம் விளைந்தபின் அதை அறுத்து, வீட்டுக்குக் கொண்டுபோய், பெருங் கூடைகளில் வைத்து, அவகாசங் கண்டு, கசக்கி மணியாக்கினேன். போரடிக்கக் களமாவது, கருவியாவது இல்லாததுபற்றிக் கஷ்டப்பட்டுக் கதிரைக் கசக்கும்படி நேரிட்டது.

வர வர, வருஷம் ஒருவண்ணமாய் விளைச்சல் அதிகரித்தது. விளையும் தானியத்தை வைக்கப் பண்டசாலையைப் பெரிதாய்க் கட்டவேண்டியிருந்தது. விளைந்த யவை இருபது புஷல்; நெல் இருபதும் காணும்; அதற்கு அதிகமுமுண்டு. நான் முன் வைத்திருந்த ரொட்டி செலவழிந்து நாட்பட்டதனால், இனி வயிற்றை வாயைக் கட்டாமல் தாராளமாய்க் கைகொண்டமட்டும் செலவு செய்து, சாப்பிடத் தீர்மானித்தேன். மேலும், வருஷவாரி எனது ஆகாரத்திற்குச் செல்லுந் தானியம் இவ்வளவென்று திட்டமாய் அறியவும், வருஷத்திற்கு ஒரு போகமாத்திரம் சாகுபடி செய்யவும் தீர்மானித்தேன்.

மேற்சொல்லிய நாற்பது புஷல் யவையும் நெல்லும் வருஷவாரி எனது ஆகாரத்திற்குச் செல்லும் செலவிற்குக் கண்டு, மீந்துமிருக்குமென்று நாளாவர்த்தியில் மதிப்பிட்டு அறிந்தேன். ஆனதுபற்றி, இவ்வளவு தானியம் எனது ஆகார முதலியவற்றின் செலவிற்குப் பூர்த்தியாய்க் கட்டிவருமென்றெண்ணி, இனிப் பிரதிவருஷமும் சென்ற வருஷம் பயிர் செய்த அவ்வளவு நிலத்தில்மாத்திரம் சாகுபடி செய்ய நிர்ணயித்தேன்.

இவ்வேலைகளைச் செய்துகொண்டு வருங்காலத்தில், முன்பு இத்தீவின் எதிர்க்கரையில் நின்று பார்த்தபொழுது, கடலுக்கு அப்புறம் தோன்றிய தேசத்தைக்குறித்துப் பெரும்பாலும் எனது நினைவோடிற்று. அத்தேசம் மனுஷர் குடியேறிய விஸ்தாரமான கண்டமாயிருப்பதனால், நான் கடலைத் தாண்டி அக்கரைப்படுவேனாகில், தேசத்தில் எட்டாக்கையில் போவதற்கு ஏதும் உபாயம் செய்து, இந்த நிர்ப்பந்த ஸ்திதியினின்று விடுதலை பெறலாமேயென்று எனது உள்ளத்தில் ஆசை மூண்டதுமுண்டு.

இவ்வாசை என் உள்ளத்தில் உற்பத்தியாகி வளர்ந்து வருகையில், அத்தேசத்திற்குப் போவதனால் நேரிடும் அபாயங்களைக்குறித்தும், ஆபிரிக்க கண்டத்துச் சிங்கத்திலும் வேங்கையிலும் அதிக துஷ்டத்தனமுள்ள மிலேச்சர் கையில் அகப்படுவேனாகில், அதற்கு நிவிர்த்தி ஏதென்பதைக் குறித்தும் நான் நினைத்துக் கிலேசப்படவில்லை. நான் அவர்கள் வசப்படுவேனாகில், அவர்கள் தப்பாமல் என்னைக் கொன்று பட்சிப்பார்கள். கரிபியன் கரை நாட்டிற் சஞ்சரிப்பவர்கள் நரமாமிசபட்சிணிகளென்று கேட்டிருக்கிறேனே. அட்சரேகைத் திட்டத்தைப் பார்த்து, நான் போகக் கருதும் இடம் கரிபியன் கரைக்குச் சமீபந்தானென்று அறிந்தேன். அவர்கள் நரமாமிச பட்சிணிகளல்லாதிருப்பினும், என்னை வதை செய்வதற்கு ஐயமில்லை. பத்துப் பெயர் இருபது பெயர் ஒன்றாகச் சேர்ந்து போய், அவர்கள் கையில் அகப்பட்ட அநேக ஐரோப்பியர்களைக் கொலைசெய்த அந்தக் கொடிய மிலேச்சர்கள், அச்சமும் அபாயமுமின்றித் தப்பித்துக்கொள்ளத் திறமையில்லாத என்னைத் தனிமையாய்க் கண்டால், தடையின்றிக் கொல்வார்கள். இச்சிந்தனைகள் எல்லாம் என் நெஞ்சிற் பின்னிட்டு உண்டாயின. முதலில் நான் இவைகளை அழுத்தி நினைக்கவுமில்லை, நினைத்து ஏங்கவுமில்லை. கடல் தாண்டி அக்கரை சேரவேண்டுமென்பதே இரவும் பகலும் என் நெஞ்சிற் குடிகொண்டிருந்த ஆசை.

இச்சமயத்தில் அல்லவோ எனது சிறுவன் சூரியும், ஆபிரிக்க கரையடுத்த சமுத்திரத்தில் ஆயிரம் மைலுக்கு அதிக தூரம் நான் செலுத்திக்கொண்டுபோன பாரிய ஓடமும் என் வசத்தில் இருக்கவேண்டுமென்றெண்ணி, மனப்பால் குடித்தேன். எட்டாத ஒன்று எண்ணியதனாற் கிட்டுமோ? முதலிற் புயலடித்து, கப்பல் முழுகி, நாங்கள் அவதிப்பட்டபொழுது, நெடுந்தூரமட்டும் அலையினால் தள்ளூண்டு, கரையிலொதுங்கிய ஓடத்தைப் போய்ப் பார்த்தேன். அது முன்னிருந்த இடத்திற்குச் சற்று விலகி, மோதும் அலையின் அதிர்ச்சியாலும், காற்றின் பலத்தாலும் கடற்கரையில் அடர்ந்த பருமணல் மேட்டில் கவிழ்ந்திருந்தது. அவ்விடத்தில் முன்போலத் தரை வறட்சியாயிருந்தது.

அதிலுள்ள உடைவு சிதைவு முதலிய பழுதுகளை நீக்கி, பக்குவப்படுத்தி, கடலில் தள்ளிவிடுவதற்கு எனக்குக் கையாள் உதவி கிடைக்குமானால், நான் அச்சமின்றி அதில் ஏறி, பிரேஜில் பிரதேசத்திற்கு எளிதிற் போய்ச் சேரக்கூடும்; ஆனாலும், உதவியற்ற என்னால் ஆகத்தக்கதென்ன? நான் இருந்த தீவை அவ்விடத்தினின்று பெயர்த்தாலும் பெயர்க்கலாம், கவிழ்ந்த அவ்வோடத்தைப் பெயர்க்கவும் நிமிர்த்தவும் என்னாலாகாது. ஓடத்தை நிமிர்த்தி, மணல் மேட்டினின்று இறக்கக்கூடுமானால், அதிலுள்ள பழுதுகளைச் சங்கடமின்றி நிவிர்த்தித்து, அச்சமின்றி அதில் ஏறிப் பிரயாணப்படலாமென்றெண்ணி, என்னால் ஆகும் முயற்சிகளைச் செய்யக் கருதி, காட்டுக்குப் போய், ஓடத்தை நெம்புவதற்கும், பெயர்த்துத் தள்ளுவதற்கும் மிண்டிகளும் உருளைகளும் வெட்டிக் கொண்டுவந்தேன்.

வெட்டிக் கொண்டுவந்து, பக்குவம்பண்ணுவதாகிய இவ்வியர்த்தமான வேலையில் மூன்று நாலு வாரம் சென்றது. துரும்புபோல் இருக்கும் எனது சொற்ப பலத்தால் அவ்வோடத்தைப் பெயர்க்கலாகுமா? கடைசியில் எனது உழைப்பெல்லாம் வியர்த்தமாய் முடிந்தது. அப்புறம் மணல் மேட்டை அடியினின்று வெட்டிப் பெயர்த்து, ஓடத்தை விழுத்த நினைத்து, மணலை அகழ்ந்தேன். ஓடம் அங்கிங்கு விலகாமல் நேரே விழும்படி மர முளைகளை அங்கங்கே அழுந்தக் கடாவினேன்.

ஒருபடி மேட்டை வெட்டிப் பிரிக்க, ஓடம் விழுந்தது. விழுந்தும், அதை நிமிர்த்திப் பெயர்க்கவாயினும், அதன் கீழே போகவாயினும், அதைக் கடலுக்கு நேரே தள்ளிக் கொண்டு போகவாயினும் என்னால் முடியவில்லை. ஆனதுபற்றி அவ்வேலையை அவ்வளவில் நிறுத்திவிட்டேன். இப்படி ஓடத்தின் உதவியால் பிரயாணப்படலாகுமென்னும் நம்பிக்கை ஒழிந்தும், கடலின் அக்கரையிற் கண்ட தேசத்திற்கு எவ்விதத்திலும் துணிந்து போவதற்கு உபாயம் செய்யவேண்டுமென்று என்னுள்ளத்திற் பிறந்த ஆசை தணியவில்லை; வரவர வளர்ந்தது. ஆசையின் வழி செல்வதற்குரிய சாதனங்களோ அசாத்தியமாய்க் காணப்பட்டன.

அத்தேசப் புறங்களிற் சஞ்சரிக்குங் குடிகள் தொழிற் கருவிகளில்லாமலும், கையுதவியில்லாமலும் ஒருவிதப் பெரு மரத்தைக் கோதி, வளமான சிற்றோடங்கள் செய்யும் வழக்கத்தை எண்ணி, அப்படிச் செய்வது என்னுல் எளிதில் அமையுமென்று கண்டேன். அவ்வித ஓடம் செய்வதற்கு நிகிரோவருக்காயினும், இந்தியருக்காயினும், எனக்குள்ள வசதி இல்லையென்று உத்தேசித்து, ஓடம் செய்வதைப்பற்றி எனது உள்ளம் மகிழ்ந்தது. பெருங்குறை ஒன்றுமாத்திரம் இருந்தது. அது என் சிந்தனையில் வரவில்லை. அது ஓடம் செய்து முடிந்தபின், அதைத் தள்ளிக்கொண்டுபோய்க் கடலிலிறக்குவதற்கு ஆள்துணையில்லாத குறைதான். கருவியில்லாத குறைக்கு இந்தியர் ஏதாயினு முபாயஞ் செய்து தங்கள் கருமத்தைச் சிதறவிடாதிருப்பினும், ஆளில்லாத குறைக்கு நிவிர்த்திசெய்வதோ எனக்கு அசாத்தியமாயிருந்தது. தகுதியான பரு மரம் பார்த்துத் தறிப்பதும், கிளைகளை நறுக்கி, மரத்தை ஓடத்தின் சாயலாய் வெட்டுவதும், அதன் உள் வைரத்தை வெட்டியாவது சுட்டாவது கோதுவதும் எனக்குப் பாரமாகத் தோன்றவில்லை. இவ்வேலைகள் செய்து முடிந்து, ஓடம் நாணயமானதா யமைந்தபின், அதை ஒரு மயிரிழை தள்ளுவதற்காயினும் என்னுல் ஆகுமா? இருந்தவிடத்தில் இருக்க விடுவதொழிய, பெயர்த்துத் தள்ளிக் கடலிலிறக்குந் திறம் எனக்குச் சிறிதுமில்லை.

இவ்வோடத்தை நான் சமைக்குங்காலத்தில் எனது நிர்ப்பந்தமான நிலைமையை மறந்து, ஓடத்தைத் கடலி லிறக்கும் வகை ஏதென்று எப்பொழுதும் எனக்குள்ளே தீர்க்க விசாரணை செய்வேனென்று எவர்களும் எண்ணுவார்களே. எனது சிந்தனை அதல்ல; ஓடத்தைக் கடலில் இறக்கும் வகையைப்பற்றி நான் கனவிலு மெண்ணவில்லை. ஓடத்தில் ஏறிப் பிரயாணம் செய்வதைப்பற்றிய எண்ணமே என்னுள்ளத்தைக் கவர்ந்தது. அவ்வோடம் இருந்த விடத்திற்கும் கடலுக்கும் தூரம் ஆக நாற்பத்தைந்து பாகம். நான் இருந்த தீவுக் கரைக்கும், நான் போகக் கருதிய தேசத்தின் கரைக்கும் இடையிலுள்ள கடலின் தூரம் நாற்பத்தைந்து மைல். இந்த நாற்பத்தைந்து மைல் தூரம் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு

போவதல்ல, நாற்பத்தைந்து பாகமளவு சொற்ப தூரத்திற்கு அதைப் பெயர்த்துத் தள்ளிக்கொண்டுபோய் ஜலத்தி லிறக்கு வதே மிகப் பாரமாயிருந்தது.

அறிவுகெட்ட மூடனைப்போல முன்பின் யோசிக்காமல், ஓடம் செய்யத் தொடங்கினேன். அதில் ஏறி, நாடிய இடத்திற் போய்ச் சேரலாமென்று நினைத்து மகிழ்ந்ததொழிய, ஓடமேறுமுன் செய்தற்கு உரியவைகள் அனைத்தையும் செய்ய எனக்கு நிர்வாகமுண்டோவென்று நான் சிந்தித்துச் சீர்தூக்கி நிதானிக்கவில்லை. ஓடத்தைக் கடலி லிறக்கும் சங்கடத்தைப்பற்றிய நினைவு அடிக்கடி எனக்குண்டாகாதிருக்கவில்லை. உண்டாம்பொழுதெல்லாம் "ஓடம் செய்து முடியட்டும், முடிந்தபின் அதைப் பெயர்த்துக் கொண்டுபோய்க் கடலி லிறக்குவதற்கு ஏதாயினும் ஒரு வழி தவறாமற் தோன்றும்" என்று சொல்லிக்கொண்டு வந்தேன். அவிவேகிகள் சொல்லும் இச்சொல்லைக் கடைப்பிடியாய்க்கொண்டு, ஓடத்தை ஜலத்தில் இறக்குதற்குரியவுபாயங்களைச் சிந்தியாமல் விட்டேன்.

ஆசையின் வசத்தனாகி, இவ்விபரீத யுக்தியைத் தலைமேற்கொண்டு, ஓடம் செய்யும்பொருட்டுத் தேவதாரு ஒன்றைத் தறித்தேன். எருசலேமில் தேவாலயம் சமைப்பதற்குப் பூர்வ காலத்திற் சாலோமோன் அரசனுக்கும் அவ்வித நாணயமான விருட்சம் அகப்பட்டதென்று நான் எண்ணவில்லை. அதன் அடியின் குறுக்களவு ஐந்து அடி பத்து அங்குலம். வரவரச் சிறுத்து, இருபத்திரண்டு அடிதூரத்தில் அதன் குறுக்களவு நாலு அடி பதினொரு அங்குலம். அதன்மேல் சற்றுத் தூரமட்டும் பின்னும் சிறுத்துக் கிளையோடியது. அதைத் தறிப்பதற்கு நான் பட்ட சிரமம் இவ்வளவென்றில்லை. நான் அதைத் தறித்து விழுத்தி, அடியை மட்டமாய் வெட்டிச் செவ்வையாக்குவதற்கு இருபதுநாள [illegible]றது. கொம்புகளையும், சிறிய கிளைகளையும், அதன் படர்ந்த [illegible]ரியையும் எனது கோடரியினாலும், கைக்கோடரியினாலும் சொ[illegible]கற்கரிய வருத்தத்தோடு வெட்டி, கொத்தி, எடுக்கப் பின்னும் பதினாலுநாட்கள் சென்றன. பின்பு அதைத் தகுதியான பரிமா

ணத்திற்கு வெட்டி, ஓடத்தின் உருவுடையதாக்கிக் கடலிற் கவிழாமல் நிமிர்ந்து நீந்தும்படி, அதன் அடிப்புறத்தைப் பக்குவப்படுத்த ஒரு மாசஞ் சென்றது. அதன்மேல் அதன் உள்ளிடத்தைக் குடைந்து உருப்படுத்தச் சற்றுக் குறைய மூன்று மாசம் சென்றது. நான் அதை நெருப்பினுற் சுட்டல்ல, கொட்டாப்புளியினுலுஞ் சிற்றுளியினுலு மடித்து, பொறுத்து வருந்தி யுழைத்துக் கோதினேன். இவ்வேலை நிறைவேறியபின் ஓடம் மிகச் சிறப்பாய் அமைந்தது. அது இருபத்தாறு பெயர் ஏறத்தக்க வசதியுள்ளதாயிற்று. ஆகவே எனக்கும், எனது சரக்குகளுக்கும் அதில் தாராளமாய் இடமிருந்தது.

ஓடம் சமைத்து முடிந்தபொழுது, நான் அதைப் பார்த்து, மகிழ்ச்சியடைந்தேன். தனிமரத்தில் அமைந்த அத்தனை பாரிய ஓடத்தை நான் எப்பொழுதுங் கண்டதில்லை. நான் அதை வளமாய் உருவாக்கும்பொருட்டுப் பலநாள் வரையில் பட்ட வருத்தமும், ஆயாசமும் இவ்வளவென்று சொல்ல வேண்டியதில்லை. இதை வாசிப்பவர்களுக்குத் தானுய்த் தோன்றும். இனி அதைக் கடலில் இறக்குவதொழிய, வேறு குறைவேலை ஒன்றுமில்லை. அதைக் கடலில் இறக்குவதற்கு இடம் பெற்றிருந்தேனுனல், நான் அதிலேறி, யுத்தி புத்தியுள்ள எவரும் இதுவரையிற் கனவிலும் எண்ணுத விபரீதமான பிரயாணஞ் செய்திருப்பே னென்பதற்கு ஐயமில்லை.

ஆயினும், அளவற்ற சிரமப்பட்டுழைத்தும், அதைக் கடலில் இறக்கிவிட என்னுல் முடியவில்லை. நான் செய்த உபாயங்கள் அனைத்தும் பிரதிகூலமாய்ப் போயின. அலைவாய்க் கரைக்கும், ஓடமிருந்த இடத்திற்கும உள்ள தூரம் ஆக நூறு கெஜம். அவ்விடத்தினின்று இறங்குந்துறைக்குப் போகப் போகத் தரை மேடாக இருந்தது. இந்தப் பிரதிபந்தத்தை நிவிர்த்திக்கும்படி அலைவாய்க் கரைபரியந்தம் தரையை வாட்டசரிவாய் அகழ்ந்து, அந்த மார்க்கமாய் ஓடத்தைத் தள்ளிக் கொண்டுபோய்ச் சேர்க்க நினைத்து, மிகுந்த சிரமப்பட்டேன். சிறைச்சாலையிலிருந்து நிர்ப்பந்தப்படும் கைதி மீட்சி பெற நாடுவானுகில், அதன்பொருட்டுச் செய்

யும் எவ்வகைப் பிரயத்தனங்களையும் உபாயங்களையும் வருத்தம் பாராட்டாமல் உற்சாகமாய்ச் செய்வான் அல்லவா? அவ்வாறே நான் அலுப்பின்றித் தரையை அகழ்ந்து சார்வாக்கி, மேற்சொல்லிய தடையை விலக்கியபின், மற்றொரு தடை நேர்ந்தது. முன் குறித்த உருவின் படவைப்போல இவ்வோடத்தையும் இருந்தவிடம் விட்டுப் பெயர்க்க எனக்குப் பலம் போதாதிருந்தது.

ஓடத்தைத் தள்ளிக் கொண்டுபோய் ஜலத்திற் சேர்க்கக் கூடாமையினால், ஓடமிருக்கும் இடமட்டத்திற்குக் கால்வாய் வெட்டி ஜலத்தைக் கொண்டுவரக் கருதி, தரையை அளந்து தூரம் இவ்வளவென்று கண்டு, கால்வாய் வெட்டத் தொடங்கினேன். தொடங்கி, அதன் ஆழம், அகலம் இவ்வளவென்றும், மண்ணை அள்ளி வெளிப்படுத்தும் வகை இன்னதென்றும் தீர்க்காலோசனை செய்தபொழுது, எனக்குக் கையாள் உதவியில்லாததனால், இவ்வேலை முழுதும் நான் எனது கையாற் செய்து முடிக்கப் பத்துப் பன்னிரண்டு வருஷம் செல்லுமென்று கண்டேன். கடற்கரை போகப் போக உயர்ந்திருந்தது. மிக உயர்ந்த இடத்திற் கால்வாய் இருபதடி ஆழத்திற்கு வெட்டவேண்டும். கஷ்டசாத்தியமாயிருந்த இந்தச் சங்கடத்தை நினைத்து, என்ன செய்வதென்று மனஸ்தாபத்துடனே இவ்வேலையை நிறுத்திவிட்டேன்.

இதனால் என் மனம் மிகுந்த துக்கத்தில் மூழ்கிற்று. எந்த வேலையையும் செய்யத் தொடங்குமுன், அதற்குச் செல்லும் செலவென்னவென்றும், அதை முற்ற முடியச் செய்யத் தக்க பலம் நமக்குண்டோவென்றும் சிந்தித்துச் சீர்தூக்கி நிதானிப்பது முக்கியமென்பதாகவும், இப்படி நிதானிக்காமல் தொடங்குவது மௌட்டியமென்பதாகவும் இப்பொழுதுதான் கண்டேன். இந்தப் புத்தி எனக்குச் சமயத்தில் வராதேபோயிற்று.

இவ்வேலை செய்து பாதிவரையில் முடிகிற சமயத்தில், நான் தீவாந்தரம் போய்ச் சேர்ந்த நாலாவது வருஷம் முடிவு பெற்றதனால், முன்போலப் பயபக்தியுடன் மனந்தேறி, வருஷோற்சவ தினத்தைக் கொண்டாடினேன். திருவாக்காகிய

சத்தியவேத புத்தகத்தைப் பிரதிதினமும் வாசித்து, பத்தி முத்தியாய் அதன் பொருளைச் சிந்தித்து, அதன் வழிச் சென் றதனாலும், தேவ அனுக்கிரகத்தின் சகாயத்தினாலும் எனக்கு முன் இருந்த அறிவு போக, நூதன அறிவுண்டாயிற்று. காரியாகாரியங்களைக் குறித்து நான் முன்பு நினைத்தது ஒரு விதம், இப்பொழுது நினைத்தது ஒருவிதமாயிருந்தது. இவ் வுலகம் எனக்குத் தூரசம்பந்தமானதாகவும், அதற்கும் எனக்கும் உறவில்லை யென்பதாகவும், அதனால் எனக்கு விளை யத்தக்க சுகானுபவம் ஒன்றுமில்லை யென்பதாகவும், அதை நான் இச்சிக்க வேண்டுவதில்லை யென்பதாகவும், சுருக்கிச் சொல்லில், தற்காலத்திலாயினும் பிற்காலத்திலாயினும் உலகத் திற்கும் எனக்கும் சம்பந்தம் சிறிதுமில்லையென்பதாகவும் நினைத்தேன். இறந்தவர்கள் இவ்வுலகத்தைக் கண்டால், இது தாமிருந்த வுலகமென்றும், இப்பொழுது இதை விட்டு நீங்கியதனால், இனி இதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை யென்றும் எண்ணுவார்களே. உலகத்தைப்பற்றி எனது நினை வும் அவ்வண்ணம் இருந்தது; "எனக்கும் உனக்கும் இடை யில் பெரும் பிளப்பு நிலைத்திருக்கிறது" என்பதாக விசுவா சிகளின் தந்தையாகிய ஆபிரகாம் நரகத்திற் சேர்ந்து வேத னைப்பட்ட ஐசுவரியவானுக்குச் சொன்னபடி, நானும் உலகத் திற்குச் சொல்லத்தக்க சிந்தையுடையவனா யிருந்தேன்.

முதலாவது, இம்மைக்குரிய அதிக்கிரமங்க ளனைத்திற் கும் நான் விலகியிருந்தேன். எனக்கு மாமிச இச்சையா வது, கண்களி னிச்சையாவது, ஜீவனத்தின் பெருமையாவது இல்லை. நான் இச்சித்து வாஞ்சையுடன் தேடுதற்குரிய பொருள் ஒன்றுமில்லை. அனுபவிக்கத்தக்க பேறுகளனைத் தையும் பெற்றிருந்தேன். தீவு முழுதும் எனது காணியாட் சியாயிருந்தது. என் சுவாதீனத்திலிருந்த அந்தப் பிரதேசத் திற்கு நானே சக்கரவர்த்தியெனினுந் தகும். எனக்கு எதிரி களில்லை. நான் தாங்கும் ராச்சியபாரத்திற் காகவாயினும், எனது அதிகாரத்திற் காகவாயினும் சண்டை தொடுப்பதற்கு தாயாதிக்காரராவது, பங்காளிகளாவது இல்லை. அநேக கப் பல்களில் ஏற்றத்தக்க திரளான தானியத்தை விளைவிப்ப தற்கு நிர்வாகியாயிருந்தேன்; இருந்தும், எனக்கு அவ்வளவு

தானியத்திற்குச் செலவில்லை; செலவுக்குப் போந்தமட்டும் விளைவித்தேன். வேண்டுமானால், எனக்கு எத்தனை ஆமைகளும் அகப்படும்; அப்போதைக்கப்போது எனது உபயோகத்திற்கு ஒன்றுக்கதிகம் வேண்டுவதில்லை. ஒரு கூட்டம் மரக்கலம் செய்வதற்குப் போதுமான விருட்சக்காடும், அம் மரக்கலங்களிற் பூர்த்தியாய் ஏற்றுமதி செய்யப் போதுமான திராட்சரசபானமும் திராட்சவற்றலும் உண்டாக்கத்தக்க எண்ணிறந்த திராட்சக்குலைகளு மிருந்தன.

எவ்வளவிருந்தும், எனக்குபயோகமாகத் தக்கவைகளன்றி, மற்றவைகள் எனக்குத் திரணத்திற்குச் சமானமாயிருந்தன. ஒருவிதத்திலுங் குறைவின்றி உண்ண உடுக்க வேண்டுமளவிற்குச் சொத்துடையவனு யிருந்தேன். இதற்கு மிஞ்ச எத்தனை திரண்ட சொத்துகளிருந்தும், அவை எதற்காகும்? நான் கொல்லும் மிருகத்தின் மாமிசத்தைத் தின்று மிஞ்சினால், அது நாய்க்கிரையாகவேண்டும்; அல்லது எலி முதலிய ஜந்துக்களாற் பட்சிக்கப்படவேண்டும். ஆகாரத்திற்கு வேண்டுமளவிற்கு அதிக தானியம் விளைந்தால், அது வியர்த்தமாய்க் கெட்டுப்போவதொழிய, அதற்குச் செலவில்லை. நான் வெட்டின மரங்கள் நிலத்தில் வீணுயிருந்து நாளாவர்த்தியில் உட்கிப்போயின. அவை எனக்கு விறகுக்குத் தவிர, மற்றொன்றுக்கு முதவா. போஜனபாகஞ் செய்வதற்கொழிய, மற்றொன்றுக்கும் எனக்கு விறகு வேண்டுவதில்லை.

பதார்த்த தர்மங்களையும், எனது அனுபவத்தையும்பற்றி நுணுக்கமாய்ச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்தவளவில், இம்மைக்குரிய நல்வரங்களனைத்தும் நமக்குபயோகப்படுமளவிற்கு மிஞ்ச ஒன்றும் பெறுதவைகளா யிருக்கின்றனவென்றும், பிறருக்குக் கொடுக்கும்பொருட்டு நாம் எவ்வளவு திரண்ட திரவியத்தைச் சம்பாதித்து வைத்திருப்பினும், அதில் நமக்குபயோகப்படும் அவ்வளவு மாத்திரமே நம்மால் அனுபவிக்கப்படுகிறதென்றும் எனக்கு உறுதியாய்த் தெரியவந்தது. அநியாயமாய்ப் பணந்தேடும் அதிக பொருளாசைக்காரனும் எனது ஸ்திதியிலிருப்பானுகில், அவ்வாசை என்னும் அதிக்கிரமத்தை அவன் விட்டு விலகுவான். என்

சுவாதீனத்திலிருந்த சொத்துகளுள் எனக்கு உபயோகப் படுத்தும்வகை தெரியாதிருந்தவைகள் எண்ணிறந்தவைகள். எனக்கு இல்லாத வஸ்துக்கள் மிக உபயோகமாகத் தக்கவை களாயிருப்பினும், அற்ப வஸ்துக்களாயிருந்தன. அவைகளை யன்றி, மற்றெந்தப் பொருளேயும் பெற்றுக்கொள்ளும்படி ஆசைப்படுவதற்கு நிமித்தமில்லாதிருந்தது. முன் ஓரிடத் திற் சொல்லியபடி, தங்க நாணயமும் வெள்ளி நாணயமும் ஆக முந்நூற்றறுபது ரூபாய்வரையில் ஒரு சாக்கிற் கட்டி வைத்திருந்தேன். அது என்னத்திற்குதவும்? அற்பமும், திர ணமும், நிஷ்பிரயோஜனமுமான அந்தக் குப்பை எனக்கு ஒருவிதத்திலும் உபயோகப்படவில்லை. நூறு நூற்றைம்பது சுங்கான்கள் அகப்படுமானல், அவற்றையாவது, மா அரைப் பதற்குக் கையந்திரம் அகப்படுமானல், அதையாவது இரு கை நிறைந்த பணங்கொடுத்தும் வாங்கலாமேயென்று எண்ணினேன். அன்றியும், கால் ரூபாய்க் கிரயமுள்ள இரண்டொரு சீமைக்கிழங்கு வகைகளாவது, ஒரு கை நிறைந்த பயறு அவரை வர்க்கங்களும், ஒரு புட்டி எழுதும் மையுமாவது கிடைக்குமானல், என் வசத்திலிருந்த ரொக் கம் முழுதையுங் கொடுத்துவிடுவேன். அது எனக்கு ஒரு விதத்திலும் பயன்படாதிருந்தது. அதனல் அற்ப பிரயோ ஜனமுமில்லை. அது அறைக்குட் பாழாயிருந்து மழைக்காலத் தில் மலைக்குகையிற் சுவறிய ஈரத்தாற் பூஞ்சணங் கட்டிற்று. நான் அவ்வறை நிறைய வைர ரத்தினம் வைத்திருந்தாலும், அதுவும் எனக்குப் பயன்படாதாகையால், ஒன்றும் பெறுத திரணத்திற்குச் சமானமாகவே இருக்கும்.

வர வர நான் மிக எளிதில் ஜீவனம்பண்ணி, நாட் கழிக்கப் பயின்றேன். எனது ஜீவனோபாயம் மனோசுகத்திற் கும், சரீரசுகத்திற்கும் பொருந்தியதாயிருந்தது. பெரும்பா லும் போஜனம்செய்யத் தொடங்கும்பொழுது, தேவனுக்குத் துதி செலுத்தி, இவ்வாறு வனத்தில் எனக்குப் போஜனத்தை ஆயத்தப்படுத்தித் தந்தருளிய அவருடைய திருக்கரத்தை வியந்து போற்றினேன். சந்திரனுக்குப் பக்ஷம் இரண்டு, சுக் கிலபக்ஷம், கிருஷ்ணபக்ஷம். அவ்வாறே யாவருடைய நிலை மைக்கும் இரண்டு பக்ஷங்களுண்டு. ஒன்று ஒளிப்பக்ஷம்,

மற்றது இருட்பக்ஷம். அவரவர் அனுபவிக்கும் சுகானுபவங் களனைத்தும் ஒளிப்பக்ஷத்திலும், துன்பங்கள் அனைத்தும் இருட்பக்ஷத்திலும் சேரும். நான் பெரும்பாலும் எனது நிலைமையின் இருட்பக்ஷத்தை அல்ல, ஒளிப்பக்ஷத்தைப் பார்க் கவும், எனக்கு அனுபவப்படாத நன்மைகளையல்ல, அனுப வித்து அறிந்தவைகளைச் சிந்திக்கவும் பயின்றேன். இப் படிப் பயின்றதனால், என்னுள்ளம் மிகவுந் தேறிக் களிகூர்ந் தது. அதற்குண்டான திருப்தியைத் திட்டமாய் வெளியிடு வது அசாத்தியம். சில மனுஷர்கள் கடவுள் தமக்கு அனுக் கிரகஞ்செய்யாத நன்மைகளை அடைவதற்கு ஆசைப்படு வதனால், தாம் பெற்ற நன்மைகளைத் திருப்தியாய் அனுப விக்க நிர்வாகமில்லாதவர்களாய் எப்பொழுதும் மனக்குறை யடைந்து வருத்தப்படுவதுமுண்டு. அவர்களுக்கு அறிவு வருவிக்கும்படி எனது அனுபவத்தை இப்படிக் குறிப்பித் தேன். நாம் அனுபவிக்கும் நல்வரங்களைக் கடவுள் நமக் கருளிய நன்றியை மறப்பதனாலேதான் நமக்கில்லாத நன்மை களைக் குறித்து மனக்குறையுண்டாவதாக எனக்குத் தோன் றிற்று.

ஆதியில் நான் ஏறிய உரு ஜீவகாருண்யராகிய கடவுள் கிருபையினால் அதிசயமாய்க் கரைக்குச் சமீபத்தில் தள் ளுண்டு வந்து நிற்கவும், கடலில் முழுகி அவதிப்பட்டுக் கரையடைந்து ஆதரவற்றிருந்த நான் எளிதில் நீந்திப்போய், அவ்வுருவில் ஏறி, தொழில் செய்வதற்குக் கருவிகள், தற் காப்பிற்குரிய ஆயுதவர்க்கங்கள், ஆகாரந் தேடுவதற்கு வெடிமருந்து, ரவை முதலிய சாதனங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டுவந்து சுகித்திருக்கவுந் தக்கதாக இடம் பெறு திருப்பேனானால், எனது ஸ்திதி எவ்வளவு பரிதபிக்கத் தக்க நிர்ப்பந்தமானதாயிருக்கும். அவ்வித அஞ்சத்தகும் நிர்ப்பந்தமான நிலைமைக்கும், எனது தற்கால ஸ்திதிக்கும் தாரதம்மியமறியும்படி அவ்விரண்டையும் மனத்தராசில் தூக் கிப் பார்த்து, சிந்தனை செய்தேன். இச்சிந்தனை எனக்கு மிக வும் அனுகூலித்தது. என்னைப்போலும் இடர்படுமெவர்க்கும் இவ்வாறு சிந்தனை செய்வது பிரயோஜனகரமாய் முடியு மென்பதற்குச் சந்தேகமில்லை.

மேற்சொல்லியவாறு உருவில் எனக்கு ஒன்றும் அகப் படாதிருக்குமானல், நான் ஜீவனத்திற் கென்னசெய்வேன்? மச்சமும் ஆமையும் தவிர, எனக்கு ஆகாரம் மற்றென்றுங் கிடையாதே; அவைகளையும் நான் கண்டுபிடிக்க நாட்பட் டதனல், அதற்குள்ளே இறந்துபோவேனே; தப்பிப் பிழைத் திருப்பினும் நாகரீகமற்ற வனவேடர் சஞ்சரித்து நாட்கழிக் கும்வண்ணம் இருந்து சீரழிவேனே; ஏதாயினும் உபாயம் செய்து வெள்ளாடாவது பட்சியாவது கொல்வேனுகில், அவற் றைக் கீறித் தோல் உரிக்கவாயினும், தோல் வேறு, குடல் வேறு, மாமிசம் வேருக வெட்டிக் கீறிப் பிரித்தெடுக்கவாயி னும் வகையில்லாமல், வனவிலங்குகளைப்போலப் பல்லால் மென்று, நகத்தாற் கிழித்துச் சிறுமைப்படுவேனே யென்ப தாக ஒரு நாளல்ல, பலநாள் வரையில் மிகத் தெளிவாய்த் தீர்க்க விசாரணைசெய்து பார்த்தேன்.

இவ்வாறு சிந்தனை செய்தஅளவில், கடவுள் எனக்குச் செய்த நன்மையை நான் எனது உள்ளங் குளிரக் கண்ட றிந்து, பலவிதக் கஸ்திகளும் ஆபத்துகளும் உடைத்தாயிருப் பினும், எனது தற்கால ஸ்திதியை நினைத்துக் கடவுளுக்குத் துதி செலுத்தினேன். தாம் அனுபவிக்கும் ஆபத்தை எண்ணி, "எவர் படும் இடராவது எனது இடருக்கு ஈடாகுமா?" என மனம் வருந்தி அலறும் பெயர்கள் மேற்சொல்லியவாறு சிந்தனை செய்வார்களானல், பிரயோஜனமுண்டென்று வற் புறுத்திச் சொல்லாமல் விடுவதற்கு என் மனமிசையவில்லை. அப்பெயர்ப்பட்டவர்கள் தம்மிலும் அதிக ஆபத்திற்காளா யிருக்கும் சிலருடைய நிலைமையைக் குறித்துச் சிந்திக்கக் கடவர்கள். தேவ நியமத்தால் தங்களுக்குப் பின்னும் அதிக ஆபத்துவரச் சம்பவித்தால், தாங்கள் படுந் துயரம் எவ்வள வதிகமாயிருக்குமென்று யோசிக்கக்கடவர்கள்.

அன்றியும், எனது தற்கால ஸ்திதிக்கும், அதிக்கிரமம் செய்தவனுகிய எனக்குத் துஷ்ட நிக்கிரகஞ்செய்யுங் கட வுள் நீதிப்படி வருவித்து என்னைத் தண்டிக்கத்தகும் ஸ்திதி எதுவோ, அதற்குமுள்ள தாரதம்மியத்தைப் பார்த்தேன்; பார்க்குமளவில், என்னுள்ளத்திற் பிறந்த நற்சிந்தனைகளால்

எனக்கு நம்பிக்கையும் ஆறுதலு முண்டாயின. நான் கடவுளை அறிந்து, அவர் திருவடிகளை வணங்காமலும், அவருக்கு அஞ்சாமலும் துஷ்டனாய் நடந்தேன். என் தாய்தந்தையர்கள் எனக்கு இளமையிற் கல்வி கற்பித்திருந்தார்கள். அவர்கள் கடவுளை நேசித்து, கனம்பண்ணி, அவருக்கு அஞ்சவேண்டுமென்று எனது இளநெஞ்சில் அறிவு புகட்டாமலும், நான் செய்யத்தகும் கடமை இன்னதென்று எனக்குணர்த்தாமலும், இம்மையில் எனது இயற்கை இன்னதென்றும், அவ்வியற்கை யுள்ளவனாய் நான் சிருஷ்டிக்கப்பட்ட காரணகாரிய தாற்பரியம் இன்னின்னவென்றும் எனக்குத் தெரிவிக்காமலு மிருக்கவில்லை. எனது துரோகத்தை என்னென்று சொல்வேன்! தேவ உக்கிரத்தை விளக்குங் குறிகளை எப்பொழுதுங் கண்ணுக்கெதிரே கண்டும், தேவபயம் சிறிதாயினு மில்லாதிருக்கின்ற கடலோடிகள் செய்யுந் தொழிலை இளமையிற் கைக்கொண்டேன். இளம்பருவத்திலேயே கடலோடத் தொடங்கி, கடலோடிகள் கூட்டத்திற் சேர்ந்ததனால், தெய்வபக்தியைக்குறித்து என்னுள்ளத்தில் உற்பத்தியாயிருந்த அற்ப உணர்ச்சியை எனது கூட்டாளிகள் கண்டு, என்னைப் பரியாசம்பண்ணி நகைக்கவே, நான் அதை மறந்துவிட்டேன். வர வர என் மனங் கல்லாகி, அபாயங்களை எண்ணாமலும், மரணபயமில்லாமலும், என்னைப்போலச் சீர்கெட்ட பெயருடனன்றி, பிறருடன் சம்பாஷிக்கவாயினும், நற்காரியங்களை அல்லது நன்மைக்குச் சாதனமாகிய வாக்கியங்களைக் கேட்கவாயினும் நாட்பட அவகாசமில்லாமலு மிருந்ததனால், அவ்வுணர்ச்சி பரிச்சேதமாய் ஒழிந்துபோயிற்று.

எவ்வித நற்குண நற்செய்கையாவது என்னிடத்திற் சுத்தமாய் இல்லாதொழிந்தது. எனது தற்கால ஸ்திதியைக் குறித்தாயினும், பிற்கால ஸ்திதியைக் குறித்தாயினும் நான் கிஞ்சித்தும் நினைக்கவில்லை: ஆனதுபற்றி, ஸல்லி துறையினின்று தப்பியோட இடம்பெற்றது; போர்த்துகேய கப்பல் மாலுமி என்னைச் சமுத்திர மார்க்கத்திற் கண்டு தன்னுருவில் ஏற்றிக்கொண்டுபோனது; பிரேஜில் பிரதேசத்தில் நான் இறங்கித் தாழ்ச்சியற்ற நிலைமையிலிருந்து ஜீவனம்பண்ண இடம்

பெற்றது; இங்கிலாந்தினின்று எனக்குச் சரக்கனுப்பப்பட்டு வந்து சேர்ந்தது முதலிய பற்பல பிராணுபாய நிவிர்த்தி களையும், பேருதவிகளையும் அடுத்தடுத்து நான் பெற்று அனுப வித்தும், அவைகளை நினைத்துக் கடவுளுக்குத் துதிசொல்ல நான் கனவிலும் எண்ணவில்லை. எனக்கு மிகக் கொடிய ஆபத்து நேர்ந்தகாலத்திலும் நான் கடவுளைப் பிரார்த்திக்க நினைக்கவுமில்லை. "இறைவனே! என்மீதிரங்கும்!" என இரண்டொரு சொல்லாவது சொல்லவுமில்லை. வீணுணை யிடும்பொழுதும், தேவதூஷணம் சொல்லும்பொழுதுமன்றி, மற்றொருபொழுதாயினும் கடவுள் திருநாமத்தை நான் உச்ச ரித்ததில்லை.

இதற்குமுன் ஓரிடத்திற் சொல்லியபடி, நான் சிந்தனை யற்று அதிக்கிரமித்து நடந்ததைப்பற்றி, பல மாசவரையில் நினைத்து, திகிலடைந்திருந்தேன். இத்தீவில் வந்து சேர்ந்த பின் அப்போதப்போது எனக்கு வந்த ஆபத்தையும், கடவுள் எனக்குச் செய்த சகாயத்தையும், என்னைத் தண்டிக்கத் தகு மளவிற்குத் தண்டியாமல் விட்டதுமன்றி, அவர் எனக்கு ஆவசியகமான சுகானுபவங்களைச் சம்பூரணமாய்க் கொடுத் திருப்பதையுஞ் சிந்தித்தேன். என் பச்சாத்தாபத்தைக் கட வுள் அங்கிகரித்தாரென்றும், அவர் இன்னும் என்மீதிரங்கி, எனக்குதவி செய்வாரென்றும் இதனுல் அறிந்து, நம்பிக்கை கைவிடாதிருந்தேன்.

இவ்வாறு எனக்குண்டான சிந்தனைகளி னுதவியால் நான் என்னுள்ளத்தைத் தேற்றி, இந்த நற்சீரில் என்னை நிலைப்படுத்திய தேவனுடைய திருச் சித்தத்திற்கு மனக்குறை யின்றி அமைந்து நடக்கவும், இதற்காக அவருக்கு மனப் பூர்வமாய்த் துதி செலுத்தவுந் தீர்மானித்தேன். அவர் நான் செய்த அக்கிரமங்களுக் கேற்றபடி எனக்குத் தண்டனை வரு விக்காமல், என்னை ஜீவனோடு வைத்துக் காத்து, இவ்விடத் திற் பெறுதற்கரிய பற்பல நன்மைகளை என்மீதிரங்கி எனக் குக் கொடுத்ததனுல், நான் மனக்குறை கொள்ளத்தகா தென்றும், இனி ஒருபொழுதும் எனது நிலைமையைக் குறித் துப் பரிதபித் தேங்காமல் மகிழ்கூர்ந்து, ஆச்சரியமானவித

மாய்ப் பிரதிதினமும் கடவுள் எனக்குக் கொடுக்கும் ஆகாரத்திற்காக அன்றன்று நான் அவருக்குத் துதி செலுத்தவேண்டுமென்றும், எலியா என்பவனைக் காக்காய்களாற் போஷித்தவண்ணம் கடவுள் ஒருவிதத்திலல்ல, அடுத்தடுத்துப் பலவிதத்தில் அற்புதமாய் என்னைப் போஷித்துவருவதை நான் மறந்துவிடாமல் நினைக்கவேண்டுமென்றும் பிரதிக்கினை செய்தேன். மேலும் நிர்மானுஷியமான இத்தீவில் என்னைக் கொண்டுவந்து சேர்த்தது ஒருவிதத்தில் எனக்குத் துன்பந்தான். இங்கே உக்கிரமுள்ள கோநாய், வேங்கை முதலிய துஷ்ட வனவிலங்குகளில்லை. அவை இருந்தால், என் ஜீவனுக்கு அபாயமுண்டாகும்; விஷமுள்ள ஜந்துக்களாவது, விஷப்பூண்டுகளாவது இல்லை; இருந்தால், நான் அவைகளைத் தின்று இறந்துபோவேன்; வனவேடர் முதலிய மிலேச்சர் இல்லை; அவர்கள் சஞ்சரித்தால், என்னைக் கொன்று பட்சிப்பார்கள். ஆகவே, இத்தீவைப்போலும் எனக்கு அனுகூலமான தீவு எங்குமில்லையென்று திருஷ்டாந்தபூர்வமாய்க் கண்டேன்.

சுருக்கிச் சொல்லில், ஒருவிதத்தில் எனது ஸ்திதி சஞ்சலம் நிறைந்ததாகவும், மற்றொருவிதத்தில் தேவ அனுக்கிரகத்தாற் குறைவற்றதாகவும் இருந்தது; கடவுள் எனக்குச் செய்த நன்மைகளையும், இந்த ஸ்திதியில் அவர் என்னை இடையூறின்றிப் பரிபாலித்துவருவதையு முணர்ந்து, அவ்வுணர்ச்சியினாலே என் நெஞ்சைச் சஞ்சலமின்றித் தேற்றும் நிர்வாகம் எனக்கிருக்குமானால், இங்கிருந்து நான் சுகமனுபவிப்பதற்குத் தடை யொன்றுமில்லை. மேற்சொல்லிய பற்பல சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, என்னுள்ளத்தை நேராக்கியபின்பு, நான் துயரை மறந்து சோர்வொழிந்திருந்தேன்.

நான் தீவாந்தரம் போய்ச் சேர்ந்து நாட்பட்டதனால், எனக்குதவுமென்று உருவினின்று எடுத்துப்போய்க் கரைசேர்த்த பொருள்களிற் சில சிதைந்து கெட்டுப்போயின; சில தேய்ந்து உதவாமற்போயின; சில கொஞ்சங் குறையச் செலவழிந்துபோயின.

எழுதும் மை கொஞ்சக்காலத்திற்கு முன் செலவாய்ப் போயிற்றென்று சொன்னேனே. மிகவுங் கொஞ்சம்மாத்திரம்

இருந்தது. அதில் அப்போதப்போது நீர் விட்டுக் கலந்து எழுதிக்கொண்டு வந்தேன். வர வர, அது கருமை குன்றி வெளிறியது. எழுதும் எழுத்துக் கடிதத்தில் துலங்கவில்லை. மை இருக்கிறவரையில் ஏதாயினும் விசேஷ சங்கதி சம்பவித்த மாசம் தேதியைமாத்திரங் குறித்துவைத்தேன். நான் எழுதிய தினசரிதைக் கணக்குப் புத்தகத்தைக் கிரமமாய்ப் பார்வையிட்டபொழுது, எனக்குச் சம்பவித்த பற்பல ஆபத்து முதலியவைகள் உண்டான தினங்கள் ஆச்சரியமானவிதமாய் ஒத்திருந்தன. மூடபக்தியுள்ளவர்களைப்போல நானும் தினங்களின் சுபாசுபங்களை எண்ணி நடப்பவனு யிருப்பேனுனல், மிகவும் ஆச்சரியப்படுதற் கேதுவுண்டாகும்.

முதலாவது, எனது தாய் தந்தையரையும் சுற்றத்தாரையும் விட்டுப் பிரிந்து, கப்பலேறித் தேசாந்தரம் போகும்படி ஹல் நகரத்திற்கு நான் ஓடிப்போன மாசம் தேதி எதுவோ, அடுத்த வருஷம் அந்த மாசம் தேதியிற்றுனே ஸல்லி துறைச் சண்டைக் கப்பற்காரர் என்னைப் பிடித்து அடிமையாக்கினுர்கள்.

யார்மத் துறையிற் சேதப்பட்ட கப்பலினின்று நான் தப்பித்துக்கொண்ட மாசம் தேதி எதுவோ, அடுத்த வருஷம் அந்த மாசம் அந்தத் தேதியிலேயே ஸல்லி துறையினின்று ஓடமேறிச் சிறையிருப்பு நீங்கினேன்.

எனது ஜனன தினம் செப்டெம்பர்மீ 30உ. நான் பிறந்த இருபத்தாரும் வருஷம் சமுத்திரத்தில் முழுகி, அற்புதமாய் என்னை இத்தீவின் கரையில் அலை ஒதுக்கிவிட, நான் கரை ஏறித் தப்பிப் பிழைத்ததும் செப்டெம்பர்மீ 30உ. ஆகவே, எனது தீயொழுக்கத்தின் ஆரம்ப தினமாகிய ஜனன தினமும், இத்தீவில் நான் ஏகாந்தமாய் நாட்கழிக்கத் தொடங்கிய தினமும் ஒரே மாசம், ஒரே தேதி.

வரவர, மை செலவாய்ப்போனதுந் தவிர, உருவினின்று கொண்டுவந்த பிஸ்கிட் ரொட்டியும் செலவழிந்து போயிற்று. நான் அதைக் கூடியவரையில் வயிற்றை வாயைக் கட்டி, குறைத்துச் செலவு செய்தேன். ஒரு வருஷத்திற்கதிகம் நாள் ஒன்றுக்கு ஒரு ரொட்டி விழுக்காடு தின்றேன். அது முழு

தும் செலவழிந்தபின், நான் விதைத்த தானியம் விளைந்து எனக்கு ஆகாரத்திற் குதவுகிறவரையில் ஒருவருஷம் ரொட்டி இல்லாதிருந்தேன். முதலில் தானியம் எனக்கு அற்புதமாய் அகப்பட்டதனாலே, நான் அதை விதைத்து விளைவித்துப் பயனனுபவிக்க இடம் பெற்றதற்காகக் கடவுளுக்குத் துதி சொல்வது நியாயமே. முதலில் தானியமகப்பட்ட தோரணை களை முன்பு சொன்னேனே.

வஸ்திரமும் வர வரக் கிழிந்துபோயிற்று. சணனால் வஸ்திரம் கொஞ்சக்காலவரையில் முற்றிலுமில்லை. மற்றக் கடலோடிகளுடைய பெட்டிகளிற் கண்டெடுத்த பல வர்ண முள்ள சில உள்ளங்கிகள் மாத்திரமிருந்தன. அவைகளைப் பழுதாக்காமல் பத்திரமாய் க்ஷேமித்து வைத்தேன். பெரும் பாலும் உள்ளங்கி ஒன்று தவிர, வேறு வஸ்திரங்கள் உடுப் பதற்கு இசையாவே. கடலோடிகள் வஸ்திரங்களுக்குள்ளி ருந்த உள்ளங்கிகள் சுமார் முப்பத்தாறு. அவை எனக்கு மிகவு முதவியாயின.

கடலோடிகள் காவல் செய்யும்பொழுது தரித்துக்கொள் ளும் ரெட்டு மேலங்கிகளும் சில இருந்தன. அவை மிக உஷ்ணமாயிருந்ததனால், நான் அவைகளைத் தரித்துக்கொள்ள வில்லை. நான் இருந்த தீவில் உஷ்ணம் அதிகம். வஸ்திரம் வேண்டுவதேயில்லை. நிர்வாணமாய்த் திரிவது எனக்கு வெட் கமாயிருந்தது. நான் ஏகாங்கியாயிருந்ததனால், நிர்வாணி யாய்த் திரியினும் பிரமாதமில்லை. நிர்வாணியாயிருக்கும் எண் ணத்தைக்கூட என் மனஞ்சகியாது.

நான் முழுதும் நிர்வாணியாயிருக்கக் கூடாதென்றேனே, அதற்குஒரு முகாந்தரம் இது: வஸ்திரந் தரித்திருக்கும்பொழு தன்றி, நிர்வாணமாயிருக்கும்பொழுது வெயிலின் வெப்பத் தை என்னுடம்பு தாங்காது. பெரும்பாலும் வெப்பத்தினால் எனது உடம்பு கொப்புளித்தது. உள்ளங்கி தரித்துக்கொண்டு உலாவும்பொழுதோ, காற்றும் உலாவி, அங்கிக்குள்ளே இரைந் ததனாற், பின்னுமொரு பங்கு அதிக குளிர்ச்சியுண்டாயிற்று. மேலும், குறுங் குல்லாவாயினும், நெடுங் குல்லாவாயினுந் தரிக்காமல் வெயிலி லுலாவுவதற்கு என்னாலாற்றாது. அத் தேச பாகத்தில் தலைக்கு நேரே ஆதித்த கிரணம் அதி தீக்ஷண

மாய்ப் பாய்வதனால், வெறுந்தலையாய் வெளிப்படும் க்ஷணமே தலைநோவுண்டாகும். குல்லா இட்டுக்கொண்டாலோ, வெப்பம் நீங்கும்.

இந்த யோசனைகளைச் சிந்தையில் வைத்து, என்னிடத்தி லுள்ள கந்தைகளை ஒருவாறு தைத்து, மூட்ட நினைத்தேன். எனது மார்பங்கிகள் எல்லாங் கிழிந்து கந்தையாய்ப்போயின. ஆனதுபற்றி, என் வசமிருந்த பாரிய ரெட்டு மேலங்கிகளையும், பின்னுமுள்ள வஸ்திரங்களையும் அழித்து, மார்ச்சட்டை தைக்கத் தொடங்கினேன். தையல் வேலையில் என் கை வழக்கப்படாததனால், எனக்குத் தோன்றியபடி சரவையாய்த் தைத்தேன். தையல் வாய்க்கவில்லை. எப்படியும் இரண்டு மூன்று மார்ச்சட்டைகள் தைத்தேன். அவை எனக்கு நெடுங்காலம் உதவுமென்றெண்ணினேன். காற்சட்டைத் தையல் கெட்டுப்போயிற்று. கை திருந்த நாட்பட்டது.

நான் சுட்டுக் கொன்ற நாற்கால் விலங்குகள் எல்லாவற்றின் தோலையும் வெயிலிற் கொம்பு நாட்டி விரித்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்ததாகச் சொன்னேனே. அவைகளிற் சில முறுகக் காய்ந்து விறைத்து உபயோகமற்றுப்போயின. சில மிகவும் உபயோகமுள்ளவைகளாய்க் காணப்பட்டன. முதலில் தோலினால் சிரசுக்கு ஒரு பெருங்குல்லா வுண்டாக்கினேன். மழைத்துளி அதைத்துச் சிதறும்படியாக ரோமப்புறம் குல்லாவின் புறத்திலிருக்கும்படி அமைத்தேன். குல்லாவேலை பணிக்காய் நிறைவேறியதனால், பின்பு அத்தோலினாலேயே சற்று நெகிழ்ச்சியான மார்ச்சட்டை யொன்றும், காற்சட்டையும் செய்தேன். காற்சட்டை முழந்தாள் மட்டமாய் வெட்டித் தைக்கப்பட்டது. சரீரத்திற்கு உஷ்ணமல்ல, காற்று உலாவிக் குளிருண்டாம்படி இப்படிச் செய்தேன். இவ்வஸ்திர மிரண்டும் அவலட்சணமாய்த் தைக்கப்பட்டன. தச்சர் வேலையில் எனக்குக் கைத்திற மில்லையென்றால், தையல் வேலையிற் பின்னும் திறமில்லையென்று சொல்லலாம். இத்தோலாடைகளை உடுத்து ஒருபடி காலந் தள்ளினேன். நான் வெளியில் உலாவும்பொழுது மழை பெய்கையில் குல்லாவின் புறத்திலும், மேலங்கியின் புறத்திலும் ரோம மடர்ந்திருந்ததனால், தலையிலாவது உடம்பிலாவது ஈரஞ் சுவறவில்லை.

இதன்மேல் ஒரு குடை உண்டாக்குவதற்கு அதிககால மும் உழைப்பும் சென்றன. குடையில்லாத பெருங்குறை யை நினைத்து ஒன்று செய்யவேண்டுமென்றிருந்தேன். உஷ் ணம் அமிதமான பிரேஜீல் நாட்டார் குடை செய்தது பார்த் திருந்தேன். அந்நாட்டில் குடைகள் மிக உபயோகமான வைகள். அந்நாட்டைப்போல் இத்தீவிலும் வெப்பம் மேலிட் டிருந்தது. விசுவத்துக்குச் சமீபமாதலால், உஷ்ணம் பின் னும் அதிகமாயிருந்தது. அன்றியும், நான் பெரும்பாலும் வெளியிற் போக்குவரவு செய்ய நேரிட்டதனுல், வெயிலுக் கன்றி, மழைக்குங் குடை உபயோகப்படும். குடை யுண் டாக்குவதற்கு நான் பட்ட சிரமங் கொஞ்சமல்ல. பரீட்சை வகையாய்ச் செய்து கெடுத்த குடைகள் அநேகம். குடை செய்யும் வகை எனக்கு அமைந்ததென்றெண்ணித் திருப்தி யடைந்தபின்னும் இரண்டு மூன்று குடைகள் பழுதாய்ப் போயின. கடைசியில் என் மனதிற்கேற்ற வளமான குடை யமைந்தது; ஆனாலும், நாணயமானதல்ல. குடையைச் சுருக்குவதற்கு உபாயஞ்செய்வது மிக வருத்தமாயிருந்தது. அது எளிதில் விரிந்தது. சுருங்காமல் விரிந்தபடி இருக்கு மானுல், எப்பொழுதும் அதைச் சிரசின்மேற் பிடித்துக் கொண்டு போவதொழிய, சுருக்கிக்கொண்டு போவதற்கு முடியாது. கடைசியில் ஒன்று சுருங்க விரியத்தக்கதா யமைந்தது. ரோமமுள்ள புறம் வெளியில் நிற்கும்படி அந் தக் குடைக்குத் தோலுறை யிட்டேன்; ஆனதனுல், அதை விரித்துப் பிடித்துக்கொண்டு போம்பொழுது மழை பெய்த வேளைகளில், வீட்டுச் சுவரோடடுத்து இறக்கிய தாழ்வாரத் தில் விழும் மழை வழிந்தோடும்வண்ணம், மழைத்துளி தோலிற் சுவருமல் ரோமத்திற் பட்டுத் தெறித்தோடிற்று. அன்றியும், உஷ்ணகாலத்தில் குடை பிடித்துக்கொண்டு போம்பொழுது, குளிர்காலத்திலுள்ள ஆரோக்கியத்திலும் அதிக ஆரோக்கியமான நிழலுண்டாயிற்று. குடைக்குத் தேவையில்லா திருக்கும்பொழுது, நான் அதைச் சுருக்கிக் கக்கத்தில் வைத்துக்கொண்டுபோனேன்.

தேவ சித்தத்திற்கமைந்து, இணங்கி மனந்தேறி, திரு வுளச்செயலால் ஏதேது சம்பவிக்குமோ, அதுவே எனக்கு

நன்மையென்று மனப்பூர்வமா யெண்ணி, சுகித்து வாழ்ந்தேன். மனுஷருடன் சகவாசஞ் செய்வதிலும், இப்படி ஏகாந்தமாயிருப்பது எனக்கின்பமாயிருந்தது. எனக்குள்ள குறை நிறை முதலியவைகளைக் குறித்துச் சம்பாஷிப்பதற்கு இங்கெவரு மில்லையே யென்றெண்ணி, என் மனம் விசனப்பட்டது முண்டு. அவ்வேளைகளில் நானும், எனது நெஞ்சும் அன்னியோன்னிய சம்பாஷணை செய்வதும், அடிக்கடி ஜெப சிந்தையாயிருந்து பிரார்த்தனை செய்வதனாலே, தேவனுடன் கலந்து சம்பாஷணை செய்வதும், பூலோகத்தில் மனுஷருடன் சகவாசஞ் செய்வதனாலுண்டாகத்தக்க இன்பத்திலும் அதிக பூர்த்தியான இன்பமல்லவா வென்பதாக எனக்குள்ளே வினாவி உற்சாகமடைந்தேன்.

இதன்பின் ஐந்துவருஷவரையில் எனக்கு எவ்வகை ஆபத்தாயினும் வரவில்லை. யாதொரு மாறுதலுமின்றி முன்னிருந்த ஸ்தானத்திலும் நிலைமையிலுமிருந்து நாட்கழித்து வந்தேன். வருஷந்தோறும் யவையும் நெல்லும் விதைத்து, விளைவித்து, ஆகாரத்திற்கு வேண்டுமளவிற்குத் தானியஞ் சேர்த்து வைத்ததும், திராட்சப்பழங்களைப் பருவத்திலறுத்துச் செலவிற்குப் போந்தமட்டும் வற்றல்போட்டு வைத்ததும், பிரதிதினமுந் துப்பாக்கிகொண்டு வெளியில் உலாவிப் பட்சி முதலியவைகளைச் சுட்டதுந்தவிர, பின்னும் ஒரு முக்கியமான வேலை எனக்கிருந்தது. அது ஓடமொன்று செய்வது தான். அவ்வேலையைத் தொடங்கிச் சலிப்பற்றுச் செய்து, கடைசியில் ஒருபடி நிறைவேற்றினேன். அப்புறம் ஆறடி அகலம், நாலடி ஆழமுள்ள கால்வாய் ஒன்றை அரைமைல் தூரமட்டும் வெட்டிக் கடலிற் பொருத்தி, அதன் வழியாய் ஓடத்தைக் கடலி விறக்கினேன். முன் செய்த ஓடம் பிரமாண்டமானதாயிருந்தது. நான் அதை யோசனையின்றிச் செய்து எவ்வாறாவது கடலி விறக்க எனக்குச் சக்தியில்லாமற் போனதனால், இனி எனக்குப் புத்தி வருவிக்கும் ஞாபகமுத்திரையாக அதை அவ்விடத்திலேயே இருக்கவிடப் பாத்தியப்பட்டேன். இரண்டாந்தரம் ஓடம் செய்யத் தொடங்கிய பொழுதும், எனக்குத் தகுதியான மரமகப்படவுமில்லை; அரைமைல் தூரத்திற்குக் கால்வாய் வெட்டாமல் ஓடத்தைக்

கடலி லிறக்குவது சாத்தியமாயிருக்கவுமில்லை. எப்படியும் இவ்வேலை எனக்குச் சாத்தியப்படுமென்று கண்டதனால், நான் தொடங்கின கருமத்தைச் சோரவிடாமல், நேர்ந்த சிரமத்தைக்குறித்து மனஞ்சலிக்காமல், சென்றகாலத்தைச் சிந்தையில் வைக்காமல், கிட்டத்தட்ட இரண்டு வருஷத்திற்குள் வளமான ஓடமொன்று செய்து முடித்தேன்.

## 10. அத்தியாயம்.

*நான் சிற்றோடத்தை ஒருபடி கடலில் இறக்கியபின், இத்தீவில் அரசாளத் தொடங்கிய (சிறையிருக்கவெனினும் அமையும்.) ஆறாவது வருஷத்திற் பிரயாணப்பட்டது. ஓடம் நீர்ப்பெருக்குடன் விரைந்தோடி, நெடுங்கடலிற் சேர்ந்தது. மிகுந்த வருத்தப்பட்டு ஓடத்தைத் திருப்பிச் செலுத்திக் கரையடைந்தது. அயர்ந்து தூங்குகையில், எவரோ என்னைப் பெயர் சொல்லி அழைக்குஞ் சத்தங் கேட்டு, திடுக்கிட்டு விழித்தது. காட்டாடுகளைப் பிடித்துப் பழக்கப் பலவுபாயங்கள் செய்ததும் ஒன்று பலித்ததும்.*

நான் செய்யத் தொடங்கிய சிற்றோட வேலை முடிந்தபின், ஆதியிற் கருதியபடி நாற்பது மைல்வரையில் அகன்ற சமுத்திரக் கால்வாயைத் தாண்டி அக்கரைப்படுவதற்கு அச்சிற்றோடம் உதவாதென்று கண்டு, அந்த அபிப்பிராயத்தை விட்டு, அதிலேறித் தீவைச் சுற்றிவர எனக்குத் தாற்பரியமுண்டாயிற்று. நான் முன்பு கரைவழியாய்ப் போய்த் தீவின் ஒரு அந்தத்தைக் கண்ட அளவில், அந்தப் பயணத்தில் தீவின் சில வளங்கள் எனக்குத் தெரியவந்ததனால், அதன் கரையடுத்த மற்றப் பாகங்களையும் பார்த்துவர ஆவலாயிருந்தேன். வளமான ஓடமொன்று என் வசத்திலிருந்ததே, அதிலேறித் தீவைச் சுற்றி வருவதனாலன்றி, வேறொரு விதத்தாலும் என் கருத்துப் பூர்த்தியாய் அனுகூலப்படாதென் றறிந்தேன்.

எதையும் சிந்தித்துப் புத்திபூர்வமாய்ச் செய்யவேண்டுமே; ஆதலால், என் கருத்திற்கனுகூலமாய் ஓடத்திற்குச் சிறிய பாய்மரமொன்று செய்து, முன்பு உருவினின்று திர

ளாய் எடுத்துவந்து வைத்திருந்த பாய்த் துண்டுகளிற் சில வற்றை வெட்டி, அளவான பாயொன்று தைத்தேன்.

பின்பு ஓடத்திலேறி, பாய்மரம் நாட்டி, பாய் தூக்கி, பரீட்சைவகையாய்ச் சற்றுத்தூரம் அதைச் செலுத்திப் பார்த்த வளவில், அது பக்குவமாய் ஓடிற்று. பிறகு போஜனபதார்த்த முதலிய ஜீவனுவசியகமான வஸ்துக்களையும், ஆயுதவர்க்க முதலிய வழித்துணைப் பொருள்களையும் மழையிலாவது, காற்றிற் சிதறித் தெறிக்கும் அலைத் திவலைகளிலாவது நனை யாமல், பத்திரமாய் வைத்திருக்கும்படி ஓடத்தின் அணியத் திலும், அபாத்திலும், பூட்டுள்ள சிற்றறைகளும் பெட்டிக ளும் செய்தேன். அன்றியும், ஓடத்தின் அ..த்தில் துப் பாக்கி வைக்கும்படி நீண்டொடுங்கிய குழாயொன்று செய்து, அதில் தண்ணீர் தெறிக்காதபடி மறைவுத் திரைத்தொங்கல் கட்டினேன்.

மேலும், அபாத்தின் ஒரு ..யில் எனது குடையை நிறுத்தி விரித்து, அதன் காம்பின் அடியைப் பாய்மாத்தின் அடிபோல் உறுதியாய் நிற்கும்படி இறுக்கினேன். இக்குடை எனது சிரசில் வெயிற்படாமற் காக்கும் விதானத்திற்கொப் பாயிருந்தது. பிற்பாடு அப்போதப்போது நான் சற்றுத் தூரம் பிரயாணம்போய் வந்தேன். கரைக்கெட்டாக்கையிற் போகவுமில்லை, சிறிய துறைக்கு வெகுதூரம் செல்லவு மில்லை. இப்படிச் சிலகாலம் பிரயாணம் போய்வந்தபின், கடல்சூழ்ந்த எனது சிறிய இராச்சியத்தின் சுற்றுப்புறத்தைப் பார்த்துவர அபேட்சித்து, பிரயாணப்படக் கருதி, பின் சொல்லப்படும் போஜனபதார்த்த முதலியவைகளை ஓடத்தில் ஏற்றினேன்:—யவை மாவிற் சுட்ட பணிகாரம் இருபத்துநாலு; ஒரு மட்கலம் நிறைந்த நெற்பொரி. இது எவ்வளவு தின்று லும் என் மனந் தெகிட்டாது; றம்சாராயம் ஒரு புட்டி; இறைச்சி ஒரு வெள்ளாட்டிற் பாதி; பின்னும் வெள்ளாடு சுடுவதற்கு வெடிமருந்து ரவை; கடலோடிகளின் பெட்டி களிற் கண்டெடுத்து வைத்திருந்த பாரிய காவற்சேவகர் மே லங்கிகளிற் படுத்துக்கொள்வதற்கு ஒன்று, இராக்காலத்தில் தரித்துக்கொள்வதற்கு ஒன்று.

நான் இவ்வித எத்தனங்கள் செய்து பிரயாணப்பட்டது, இத்தீவில் ராச்சியபாரந் தாங்கத் தொடங்கிய, அல்லது சிறை யிருக்கத் தொடங்கிய (இவ்விருவிதத்தில் எப்படிச் சொல்லி னும் பொருந்தும்.) ஆறுவது வருஷம் நவம்பர்மீ 6வ. பிரயா ணத்தில் அதிககாலம் சென்றது; அவ்வளவு செல்லுமென்று நான் எண்ணியிருக்கவில்லை. தீவு அத்தனை பெரியதல்லவே. பிரயாணம் நீடித்ததற்குக் காரணம் இது: தீவின் கீழ்க்கரை யில் பார் வளர்ந்து சமுத்திரத்தில் ஆறு மைல் தூரமட்டுந் தொடர்ச்சியாயிருந்தது. அத்தொடர்களிற் சில ஜலமுகத் தின்மேல் வெளிப்பட்டும், சில ஜலத்திற்குள் மறைந்துமிருந் தன. பார்த்தொடருக்கு அப்புறம் மூன்று மைல் தூரவரை யில் ஜலமுகத்தின்மேல் மணற்களம் விஸ்தரித்திருந்தது. ஆன துபற்றி, அதைச் சுற்றி வரும்படி நான் நெடுங்கடலில் வெகு தூரம் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போனேன்.

முதலில் நான் அவைகளைக் கண்டபொழுது மனம் சலித்து, அவைகள் நெடுங்கடலில் எவ்வளவுதூரம் தொ டர்ந்திருக்குமென்று அறியாததனாலும், திரும்பி வருவது சங் கடமென்று சந்தேகப்பட்டதனாலும், நான் செய்யத்தொடங் கிய கருமத்தை அவ்வளவில் நிறுத்திவிட நினைத்து, உருவி னின்று எடுத்துவந்த ஓர் உடைந்த நங்கூரத்துண்டினாற் செய்துவைத்திருந்த ஒருவித நங்கூரத்தை இறக்கி, ஓடத்தை நிறுத்தினேன்.

ஓடத்திற்கு நங்கூரம் போட்டபின், துப்பாக்கி எடுத் துக்கொண்டு கரையில் இறங்கி, அங்கிருந்த உன்னதமான குன்றின்மேலேறி நின்று பார்த்தபொழுது, மேற்சொல்லிய களம் முழுதும் எனக்குத் தெரிந்தது. ஆதலால், அச்சமின்றி ஓடமேறிப்போக நிர்ணயித்தேன்.

அந்தக் குன்றின்மேல் நின்று கடலைப் பார்க்கையில், நீர்ப்பெருக்கு மிகுந்த வேகமாய்க் கிழக்குமுகமாயோடுவது கண்டேன். அது அத்துறைக்கு நெருங்கியுஞ் சென்றது. எனது ஓடம் அந்த நீர்ப்பெருக்கில் அகப்படுமானால், அது ஓடத்தைப் பலமாய் அடித்துக்கொண்டுபோய் நெடுங்கட லில் விடுமென்றும், அப்புறம் நான் இத்தீவுக்கு வந்து சேர்

வது கூடாதென்றும் பின்வரும் அபாயத்தை முன்னதாகக் கண்டதனுல், மேற்சொல்லிய நீர்ப்பெருக்கை விசேஷமாய்க் கவனித்தேன். ஓடத்தை நிறுத்தி, நான் இம்மலையி லேறு திருக்கச் சம்பவித்தால், மேற்சொல்லியவாறு நீர்ப்பெருக்கு என்னையும் ஓடத்தையும் அடித்துக் கொண்டுபோய்விடு மென்று நம்புகிறேன். தீவின் எதிர்ப்பக்கத்திலும் அவ் வண்ணமே நீர் பெருகி யோடியது. அது சற்று அதிகதூரத் திற் சென்றது. மேலும், கரைக்குச் சமீபத்திற் பலமான நீர்ச் சுழியையுங் கண்டேன். ஆகவே, முதலாவது நீர்ப்பெருக் கைத் தாண்டினவுடன் அந்தச் சுழியில் அகப்படுவேனென்ப தற் கையமில்லை.

தென்கீழ்த் திசையினின்று சற்றே கீழ்த்திசையைச் சார்ந்து மேற்சொல்லிய நீர்ப்பெருக்குக் கெதிராய்க் காற்று ஒருவாறு உரத்து அடித்ததனுல், அவ்விடத்தில் அலை உக்கி ரங்கொண்டு புரண்டு மடங்கிற்று. அதனிமித்தம் கரை நெருங்கியோடுவதும் அபாயம், நீர்ப்பெருக்கினிமித்தம் கரைக்கு எட்டப்போவதும் அபாயமேயாம். ஆனதுபற்றி, ஓடத்தை நிறுத்திய விடத்திலேயே இரண்டு நாள் வரையில் தங்கினேன்.

மூன்றும்நாட் காலையிற் கடல் சாந்தப்பட்டது. காற்று விடியற்காலத்திற்கு முன்னமே தணிந்தது. அதுகண்டு, நான் நங்கூரந் தூக்கி, ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போ னேன். எனக்கு நேரிட்ட கொடிய ஆபத்தை நினைக்க, என் மனம் திகைக்கின்றது. தீர்க்க சிந்தனையில்லாத நிர் மூடராகிய மானுமிகளுக்கு எச்சரிப்புண்டாகும்படி நானே ஒரு ஞாபகக் குறியென்று சொல்லத்தகும். நான் மேற் குறித்த விடத்திற் சேர்ந்தவுடன் கரைக்கும் எனக்குமுள்ள தூரம் ஓடத்தின் நீளமளவாயினு மில்லாதிருக்கையில், எனது ஓடம் அகாதமான ஜலத்தி லிறங்கியது. யந்திரத் தின் சக்கரத்தை இயக்கும் மடை திறந்த நீர்போல் அத்தனை வேகமாய்ப் பெருகியோடிய நீர் எனது ஓடத்தை அதிவிரை வாய் அடித்துக்கொண்டு போயிற்று. அதை நிறுத்தும்படி நான் செய்த உபாயமொன்றும் பலிக்கவில்லை. எனக்கு

இடதுபக்கத்திலிருந்த நீர்ச்சுழியினின்று ஓடம் வர வர விலகி, எட்டாக்கையி லோடிற்று. காற்றடிக்குமானல், ஓடம் செல்லும் வேகம் சற்றுக் குறையும். காற்றுச் சிறிதாயினும் உலாவவில்லை. ஓடத்தைத் திருப்பும்படி நான் கை சலிக்கத் தண்டு வலித்தும், அது அற்பமாயினுந் திரும்பவில்லை. ஆனதுபற்றி, எனக்கு மீட்சியில்லையென்று உற்சாகங் கைவிட்டேன். தீவின் இருபக்கங்களிலும் நீரோட்டமிருந்ததனுல், பின்னும் பத்துப் பதினைந்துமைல் தூரம் செல்லுமுன் அவ்விரு நீரோட்டமும் சந்திக்குமிடத்திற் சேர்ந்தால், அதன்மேல் எனது பிராணன் தப்பும்வகை யில்லையென் றறிந்தேன். அதிற் சேராதபடி தவிர்க்கு முபாயம் செய்வது அசாத்தியமாகத் தோன்றிற்று. கடல் மிகவும் சாந்தமாயிருந்தது; ஆதலால், ஓடம் கவிழ்ந்து அமிழ்ந்துமென்று நானஞ்சவில்லை. பட்டினியாற் சோர்ந்து இறந்துபோவேனென்றெண்ணிப் பரிதபித்தேன். முன்பு கரையில் நான் தூக்கத்தக்க சிறிய கடலாமை யொன்றைக் கண்டுபிடித்து, ஓடத்திற் போட்டு வைத்திருந்தேன். அன்றியும், எனது மட்கலங்களில் ஒன்று நிறையச் சுத்தஜல மிருந்தது. அதமம் மூவாயிரம் மைல் தூரவரையிற் கரை காணுதிருக்கும் விஸ்தாரமான பெருஞ் சமுத்திரத்தில் எனது ஓடம் சேருமானல், அந்த ஆமையும், ஒரு குடந் தண்ணீரும் எனது ஜீவாதாரத்திற்கு எம்மாத்திரம்!

மிகவும் நிர்ப்பந்தமான நிலைமையிற் பீடிக்கப்படுவோரைப் பின்னுமதிகமாய்ப் பீடிப்பது கடவுளுக்கு எத்தனை எளிதென்று கண்டேன். நான் ஏகாங்கியாயிருந்து நாட்கழித்த குடியில்லாத் தீவைத் திரும்பிப் பார்த்து, இதைப் போலும் இன்பமான ஸ்தலம் இவ்வுலகி லில்லையென்றும், இவ்விடத்தில் வந்துசேர இன்னும் இடம்பெறுவேனுகில், எனக்கு அதிலும் அதிக சந்துஷ்டி யில்லையென்றும் எண்ணினேன். நான் மிகுந்த ஆவலுடன் என் கரங்களை அத்தீவிற்கு நேரே நீட்டி: "மனப்பாக்கியந் தரும் வனந்தரமே! இனி ஒருபொழுதும் நான் உன்னைக் காண்பதில்லை! நிர்ப்பந்தனேன்! நான் செல்லுமிடம் எவ்விடமென் றறியேன்!" என மனம் பதறி ஓலமிட்டேன். பின்பு நான் பெற்று அனுப

வித்த நன்மைகளை எண்ணி, கடவுளுக்குத் துதி செலுத்தாத துரோகியென்றும், ஏகாந்தமாயிருந்தபொழுது, அதைக்குறித்து மனக்குறையடைந்தவனென்றும் என்னைத்தான் கடிந்துகொண்டேன். இனி நான் அத்தீவின் கரை சேர்வதற்கு என்னசெய்யலாம்? எதைக் கொடுக்கலாம்? நமது நிலைமை இத்தன்மையதென்று அதன் எதிர்நிலைமையைக் கண்டாலன்றி, நமக்குத் திட்டமாய்த் தோன்றாது; அன்றியும், நாம் அனுபவிக்கும் சுகத்தை இழந்தாலன்றி, அச்சுகத்தின் அருமை நமக்குப் புலப்படாது. என் கஷ்டகாலத்தில் எனக்கு மிகப் பிரீதியுள்ளதாய் விளங்கிய தீவினின்று விலகி, பெருஞ் சமுத்திரத்தில் ஆறு மைல் தூரமளவிற் சேர்ந்து, இனி அத்தீவிற்குப் போவது அசாத்தியமென்று கண்டு, மனவருத்தமடைந்திருக்கையில், எனக்குண்டான திகில் இவ்வளவென்று நான் ஒருவனன்றி, மற்றவர்களறிவது அசாத்தியம்; ஆனாலும், எனது பலங் குன்றுமளவும் நான் சலிக்காமல் தண்டு வலித்து, சுழியிருந்த நீரோட்டத்தின் பக்கத்தைச் சார்ந்து, கூடியவரையில் வடக்குமுகமாய் ஓடத்தைச் செலுத்திக் கொண்டு போனேன். மதியந் திரும்பியபொழுது தென்றிசையை நாடி, தென்கிழக்கினின்று இளங்காற்றுக் கிளம்பி, சிறிது உலாவியதுபோலிருந்தது. துயரடைந்த என்னுள்ளத்திற்கு இதனாற் சற்று ஆறுதலுண்டாயிற்று. இன்னும் அரை மணி நேரஞ் சென்றபின் இளங்காற்றுச் சற்று அதிகமாய் வீசியதனால், ஒருவாறு மனந்தேறினேன். இதற்குள் ஓடம் தீவிற்கு வெகுதூரத்திற் சேர்ந்தது. கார்மேகமாவது, ஆகாயத்தில் மப்பாவது உண்டாகச் சம்பவித்தால், எனக்கு வேறு விதத்தில் ஆபத்து நேரிடுவதற் கையமில்லை. நான் திசையறி கருவி கொண்டுபோகவில்லை; ஆனதுபற்றி, எனது கண்ணுக்குத் தீவு மறைந்தால், மறுபடி அதற்கு நேரே ஓடத்தைத் திருப்பிச் செலுத்துவதற் கிசையாது. மப்பு மந்தாரமின்றி, ஆகாயம் வெளுத்திருந்தது. பாய்மரத்தை நிறுத்தி, பாய் தூக்கி, நீரோட்டத்தினின்று விலகும்படி கூடியவரையில் வடதிசையைச் சார்ந்தோடினேன்.

பாய்மரம் நிறுத்திப் பாய் தூக்கி, எனது சிற்றோடம் அகலச் செல்லும்பொழுது ஜலம் சற்றுத் தெளிவாயிருந்ததனால்,

நீரோட்டத்தின் வேகந் தணிந்ததென்று அறிந்தேன். அது வேகமாய் ஓடும்பொழுது, நீர் கலங்கியிருந்தது. அப்புறம் சற்றுநேரத்திற்குள் கிழக்கே அரைமைல் தூரத்திற் கடல் அலை சில பார்களிற் ருக்கி மறிந்தது கண்டேன். பாரிற் ருக்கியதனால், நீரோட்டம் பின்னு மிரண்டு கிளைகளாய்ப் பிரிந்தது. அப்பார்களிருந்த விடம் வடகீழ்த்திசை. வேகமாயோடிய வெள்ளத்தின் பிரிவு தென்றிசையை நோக்கிச் சென்றது. மற்றக் கிளை பாரின் பிரதிகதியாற் றிரும்பி, பலமான நீர்ச்சுழியாகி, மடங்கி, வடமேற்குமுகமாய் மிக விரைந்தோடிற்று.

நீர்ச்சுழியைக் கண்டபொழுது, எனக்குண்டான ஆனந்தத்தி னதிசயத்தையும், அதில் நான் ஓடத்தைச் செலுத்திய வுல்லாசத்தையும் சொல்லிப் பிரயோஜனமென்ன? அதை யார் தா னறியுந் தரமானவர்கள். தூக்குமரத்திற் பிராணதண்டனையடைவதற்குப் படியேறியபின் தண்டனைத்தீர்ப்பு விலக்கப்பட்டு விடுதலை பெற்றவர்களும், கொலைசெய்வதற் கெத்தனிக்கும் கள்வர் கைவசப்பட்டபின், அவர்கள் வசத்தினின்று விலக்கப்பட்டவர்களும், இவ்வித வேருபத்துகளுக்கு ஆளாகி மீட்சி யடைந்தவர்களும் மாத்திரமே எனக்குண்டான அதிசய சந்தோஷத்தை ஒருவாறு இத்தன்மையதென்று கிரகிக்க வல்லவர்கள். இதனுடன் வளக்காற்றுங் கிளம்பியது; ஆதலாற், பாயை வளமாய்த் தூக்கி, அந்தப் பலமான நீரோட்டம் சேர்ந்த சுழியிற் காற்று வாட்டத்தில் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போனேன்.

அந்த நீர்ச்சுழி தீவிற்கு நேரே திரும்பிப் போகும் மார்க்கத்தில் மூன்று மைல் தூரமளவிற்கு ஓடத்தைச் செலுத்திக் கொண்டு போயிற்று. முதலில் ஓடத்தை அடித்துக்கொண்டு போன நீர்ப்பெருக்கிருந்த விடத்திற்கு வடக்கே ஆறு மைல் தூரத்தில் ஓடம் சேர்ந்தது. தீவின் கரைக்கு நெருங்கிவந்த பொழுது, எனக்கெதிரே அதன் வடகரை கிட்டிற்று. வடகரை என்ருல், நான் முன்பு பிரயாணப்பட்ட இடத்திற்கு எதிர்ப்பக்கம்.

இந்த வேகமான நீரோட்டத்தி னுதவியால் மூன்று மூன்றரை மைல் தூரம் போகவும், ஓடுநீர் வேக மொழிந்தது.

அப்புறம் அதனுல் எனக்குதவியில்லை. தென்புறத்தில் எனது ஓடத்தை விரைவாய் நெடுந்தூரம் செலுத்திக்கொண்டு போன நீரோட்டத்திற்கும் எதிர்ப்பக்கத்தில் ஆறு மைல் தூரத்திலுள்ள மற்ற நீரோட்டத்திற்கு மிடையில் தீவின் மேற்குத்திசையில் ஓடம் நின்றது. கடல் அமைதியாயிருந்தது. எத்திசையிலாவது நீரோட்டமில்லை. இளங்காற்று இன்னும் வளமாய் வீசியது. ஆனதுபற்றி, தீவுக்கு நேரே உருவை ஓட்டிக்கொண்டு போனேன். முன்போல் அத்தனை விரைவில் வழி தொலையவில்லை.

பின்நேரம் நாலு மணியளவில் ஓடம் சேர்ந்த விடத்திற்கும் தீவிற்கும் தூரம் சுமார் மூன்று மைல். இத்தூரத்தை மேற்சொல்லியவாறு தெற்குமுகமாய்த் தொலையாதிருக்கும்படி செய்த பார் முனையைக் கண்டேன். அம்முனை நீரோட்டத்தை அதிகம் தெற்கை நாடி விலக்கிற்று. அதனுல், வடக்கே மற்ருெரு சுழி யுண்டாயிற்று. அச்சுழி அடங்காத வேகமுள்ளதாயிருந்தது. நான் சென்ற திக்கு நேர்மேற்கு. அச்சுழியோடிய திக்கு வடக்கு; ஆனதுபற்றி, எனது மார்க்கமும் அச்சுழியோடும் மார்க்கமும் ஒத்திருக்கவில்லை. காற்றுக் கிளம்பியதனுற், சுழிநீரை ஊடறுத்து, வடமேற்கைச் சார்ந்து ஓடத்தைச் செலுத்தினேன். ஒரு மணி நேரத்திற்குள் கரை நெருங்க வோடினேன்; அப்புறம் கரைக்கு ஒரு மைல் தூரமிருந்தது. அலைக்கிளர்ச்சி யில்லாததனுல், அதிசீக்கிரத்திற் கரையேறினேன்.

ஓடத்தை விட்டிறங்கிக் கரைசேர்ந்தபின் முழந்தாளில் நின்று, நேர்ந்த அபாயத்தை நிவிர்த்தித்து, என்னை யிரட்சித்ததற்காகக் கடவுளுக்குத் துதி செலுத்தினேன். இச்சிற்ருேடமேறி, மனுஷர் சஞ்சரிக்கும் எத்தேசத்திலாயினும் சேரலாகுமென்னு மெண்ணத்தை இனி மறந்துவிடத் தீர்மானித்தேன். பின்பு நான் வைத்திருந்த பதார்த்தங்களைத் தின்று பசியாறி, ஓடத்தைக் கரைமட்டமாய்த் தள்ளி, சில விருட்சங்களின் ஒதுக்கிலிருந்த சிறு கோடியில் நிறுத்தி, பிரயாணத்திற்பட்ட பாடுகளாலுண்டான ஆயாசந் தீரும்படி அதிற் படுத்து நித்திரை செய்தேன்.

இனி ஓடமேறி எந்தமார்க்கமாய் வீடு சேர்வதென்று எனக்குத் தெரியவேயில்லை. எனக்கு நேர்ந்த அபாயங்களை யும், அவற்றின் காரணத்தையும் நினைத்து, முன்போன வழியாய்ப் போவதற்கு நான் துணியவில்லை. நானிருந்த விடத்திற்கு எதிர்ப்பக்கமாகிய மேற்குப் பக்கத்தில் ஏதேது விளையுமென்று நான் அறியவில்லை. இனிமேல் வந்தது வரட்டுமென்று துணிந்து செல்ல என் மன மொப்பவுமில்லை. காலையிலெழுந்து கரை நெருங்க மேற்குமுகமாய் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போகவேண்டுமென்றும், போகும் மார்க் கத்தில் ஏதாயினும் ஒதுக்கு; அல்லது நீரோடை யெதிர்ப் பட்டால், அதில் எனது உருவைக் கட்டி வைத்து, வேண் டும்பொழுது எளிதிற் கைக்கொள்ளலாமென்றும் நினைத்துப் போனேன். மூன்று மைல் தூரமளவு போனபின், ஒரு வளமான சிறிய குடாவிருந்தது. அதன் நீளம் சுமார் ஒரு மைல். அது வர வர ஒடுங்கிச் சிற்றாறுயிற்று. அதில் நான் ஓடத்தைக் கட்டி, கரையிலிறங்கி, அவ்விடம் எவ் விடமென்றுலாவிப் பார்த்தேன்.

பார்த்தவளவில்; முன்பு கால்நடையாய்ப் பிரயாணஞ் செய்த கரைக்கு அவ்விடம் சற்றுத் தூரமென்று கண்டேன். வெயில் அதிக தீக்ஷணமாய்க் காய்ந்தது; ஆதலாற், குடை யையுந் துப்பாக்கியையும்மாத்திர மெடுத்துக்கொண்டு நடந்து போனேன். கடலில் அலைந்துலைந்து ஆயாசப்பட்டுவந்த எனக்கு அவ்வழிநடை சற்று ஆரோக்கியமாயிருந்தது. சாய ரட்சை நான் எனது பழைய பன்னசாலைக்குப் போய்ச் சேர்ந்தேன். அது அழிவு சிதைவின்றி முன்னுள்ளபடி யிருந்தது. நான் அதை எனது நாட்டு மாளிகையாகப் பாவித்து, கிரமத்தாழ்வின்றிப் பணிக்காய் வைத்திருந்ததாக முன்பு சொன்னேனே.

வேலியைத் தாண்டி உட்சென்று, இளைப்பாறும்படி நிழலிற் படுத்து நித்திரையாய்ப் போனேன். நித்திரை செய்கையில்: "ரூபின்! ரூபின்! ரூபின் குரூஸோ! ஏழை ரூபின் குரூஸோ! நீ எங்கே இருக்கிறாய் ரூபின் குரூஸோ? நீ எங்கிருக்கின்றாய்! எவ்விடத்திற்குப் போயிருந்தாய்?" எனச் சடிதியிற் பிறந்த சத்தங் கேட்டு, திடீரென விழித்

தேன். அப்பொழுது என் பெயர் சொல்லியழைத்த அச்சத்தம் செவிப்பட்டதைப்பற்றி, எனக்குண்டான ஆச்சரியம் இவ்வளவென்று நான் சொல்லவேண்டுவதில்லை. இச்சரித்திரத்தை வாசிப்பவர்கள் தாமே நிதானித்தறியலாம்.

முன்னேரங் கை சலிக்கத் தண்டு வலித்தும், பின்னேரம் வழி நடந்தும் கை மெய்யயர்ந்து பிரேதம்போலத் தூங்கியதனால், இச்சத்தங் கேட்டபொழுது எனக்கு நித்திரை தெளியவில்லை. பாதி யுறக்கமும், பாதி விழிப்புமான வவஸ்தையில் இருந்ததனால், முதலில் அது சொப்பனமென்று எண்ணினேன். "ருபின் குறூஸோ! ருபின் குறூஸோ!" என விட்டுவிடாமல் தொடர்ச்சியாய் மேற்படி சத்தங் கேட்டதனால், எனக்கு நித்திரை மயக்கம் பூர்த்தியாய்த் தெளிந்தது. அத்தியந்த திகிலடைந்து, துடித்துப் பதைத்தெழுந்தேன். நான் விழித்துப் பார்த்தவுடன், பால் என்னும் எனது கிளி வேலிமீதிருந்தது கண்டு, மேற்சொல்லியவாறு பேசியது அதுதானென் றறிந்தேன். இந்தப் பரிதாபமான சொற்களைச் சொல்லும்படி நான் அதற்குப் பயிற்றியிருந்தேன். அது அச்சொற்களில் நன்றாய் வழக்கப்பட்டு, எனது விரலில் உட்கார்ந்து, உதட்டை என் முகத்தோடு அழுந்த வைத்துக்கொண்டு: "ஏழை ருபின் குறூஸோ! நீ இப்பொழுது எங்கே இருக்கின்றாய்? நீ எங்கிருந்து வந்தவன்? இங்கே வந்த வகை என்ன?" என்னும் வாக்கியங்களையும், நான் அதற்குப் பழக்கிய வேறு வாக்கியங்களையும் சொல்வது சகஜந்தான்.

நான் கேட்ட சொற்கள் பிறந்தது கிளி வாக்கினின்றொழிய, மற்றப்படி யல்லவென்று எனக்குத் திட்டமாய்த் தெரிந்தும், எனது அச்சந் தெளிவதற்கு நாழிகை சென்றது. அந்தக் கிளி இவ்விடத்திற்கு வந்த வகை என்ன? வேறு இடங்களுக்குச் செல்லாமல் அது இவ்விடத்திலேயே உலாவித் திரிவதற்கு நிமித்தமென்ன? என்று எண்ணி முதலில் திகைத்தேன். அப்புறம் அது என்னிடத்தில் விசுவாசமுள்ள கிளிப் பட்சியன்றி, மற்றெதுவு மல்லவென ஐயந்திரிபறக் கண்டு, திகைப்பு நீங்கி, என் கரத்தை நீட்டி: "பால்!" என்று அதன் பெயரைச் சொல்லி அழைத்தேன். நட்பு நீங்காதிருக்கும்

அந்த ஜந்து க்ஷணமே பறந்துவந்து, வழக்கப்படி எனது பெருவிரலில் இருந்து: "ஏழை ரூபின் குரூஸோ, நீ இங்கே வந்த வகை என்ன? நீ முன் எங்கிருந்தவன்?" என்று பேசியது. நான் திரும்பி வந்ததைப்பற்றி இவ்வாறு அதற்கு அடங்காத சந்தோஷமுண்டானதாகத் தோன்றியதனால், நான் அதை வீட்டுக்குக் கொண்டுபோனேன்.

இம்முறை கடலோடி நிலையற்றலைந்து பட்ட பாடுகள் இவ்வளவிற் போதும். இனிக் கொஞ்சக்காலமட்டும் கடலோடுவதைப்பற்றி நினைக்கவேண்டுவதில்லை. எனக்கு நேரிட்ட அபாயங்களையும், நான் பட்ட கஷ்டங்களையும் செயலொழிந்து உட்கார்ந்திருந்து சிந்தித்தாலும், பலநாள் வரையிற் செல்லும். தீவின் இப்பக்கத்தில் எனது ஓடத்தைக் கொண்டுவந்து சேர்த்தேனானால், எனக்கு மிகவும் திருப்தியுண்டாகும். அப்படிக் கொண்டுவந்து சேர்க்கக்கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. நான் போய்வந்த தீவின் கிழக்குப் பக்கத்தில் இனி அச்சமின்றித் துணிந்து போகக்கூடாதென்று அறிவேனே. அதை நினைக்கவே, என்னுள்ளம் சோர்ந்து, சரீரம் விறைத்துப்போம். தீவின் எதிர்ப்பக்கம் எத்தன்மையுள்ளதென்றறியேன். மேற்குப் பக்கத்தில் நீரோட்டம் தீவின் கரைக்கு நெருங்கி எவ்வளவு விரைவாய் ஓடிற்றோ, கிழக்குப் பக்கத்திலும் கரைக்கு நேர்முகமாய் அவ்வளவு விரைவாய் ஓடுவதாக உத்தேசித்தாலும், தீவின் கரை நெருங்க, அது ஓடத்தை அடித்துக்கொண்டு போய்விடும். இந்த அபாயத்திற்கும், தீவிற்கு எட்டாக்கையில் நீரோட்டத்தில் தள்ளுண்டுபோகும் அபாயத்திற்கு விலகி வந்தேனே அதற்கும், பேதமில்லை. ஆனதுகொண்டு, இச்சிந்தனைகளை அழுத்திச் சீர்தூக்கிப் பார்த்து, எனக்கு ஓடமும் வேண்டாம், அலைச்சலும் வேண்டாமென்று தீர்மானித்தேன். குறித்த ஓடத்தைச்செய்து முடிக்கச் சென்ற மாசமெத்தனை? அதைக் கடலிலிறக்கச் சென்ற மாசமெத்தனை? ஆனாலும், அதை நினைத்து ஆம் பயனென்ன?

இவ்வாறு எனது ஆசையை அடக்கி, மனதைக் கட்டி, ஒரு வருஷவரையில் ஓட உலாவ வெளிப்படாமல் ஒதுங்கியிருந்தேன். எனது நிலைமையைக்குறித்து என் மனம் பதற

வில்லை. திருவுள்ளத்தின் செயலால் எனக்கு வரும் நன்மைகளை அனுபவித்துத் தீமைகளைத் தாங்கவேண்டுமென்று என்னைத் தேற்றினேன். மனுஷர் சகவாசமில்லாத குறையொன்று தவிர, வேறு குறை ஏதுமில்லாதவன்போல் இருந்தேன்.

எனக்கு ஆவசியகமான கருவி முதலியவைகளைச் செய்யச் செய்ய, அத்தொழிலில் என் கை நன்றாய்ப் படிந்தது. தச்சருக்குரிய தொழிற் கருவிகள் மிகவுஞ் சிலமாத்திரம் என்னிடத்திலிருந்தன; ஆனாலும், சமயத்தில் எவ்விதத் தச்சுவேலையும் நாணயமாய்ச் செய்யுந் திறமுடையவனானேன்.

அன்றியும், மட்கலங்கள் செய்வதிலும் என் கை திருந்தியது. இவ்வேலையில் எனக்கு இத்தனை தேர்ச்சி யுண்டாகுமென்று ஆதியில் நான் நினைத்திருக்கவில்லை. பாண்டங்களைச் சக்கரத்தி னுதவியாற் செய்யும் வகை அறிந்தேன். அறிந்த பின் வேலை மிகவு மெளிதாயிற்று. பாண்டங்களும் நன்றாய் அமைந்தன. முன்பு செய்தவைகள் அவலட்சணமாயிருந்தன. இப்பொழுது செய்தவைகளோ, திரண்டு அந்த சந்தமுள்ளவைகளா யிருந்தன. சுங்கான் ஒன்று செய்தபொழுது, எனக்கு மனமடங்காத சந்தோஷமுண்டாயிற்று. மற்றெந்தக் கைவேலையிலும் நான் அத்தனை அபிமானம் வைக்கவில்லை. வனைந்தபொழுது, அது மிகவும் அவலட்சணமாயிருந்தது. வெந்ததிலும் யாதொரு விசேஷமில்லை. மற்றப் பாண்டங்களைப்போல வெந்து சிவந்தது. அது நன்றாய் உரத்து, அதன் துவாரத்தின்வழியாய்ப் புகை தடையின்றிக் ஆகருஷிக்கப்பட்டதனால், எனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. நான் எப்பொழுதும் சுங்கான் பிடிப்பது வழக்கம். உருவிற் சுங்கான்களிருந்தன. முதலில் நான் அவைகளை எடுத்துக் கொண்டுவர மறந்துபோனேன். இத்தீவில் புகையிலைச் செடி யுண்டென்று எனக்கெப்படித் தெரியும்? பிறகு உருவைச் சோதித்துப் பார்த்தவிடத்திற் சுங்கானொன்றும் அகப்படவில்லை.

கொடிகளாற் கூடை முதலிய முடைவதிலும் என் கை நன்றாய்ப் படிந்தது. எனது யுக்திக்குத் தோன்றியபடி எனக்குத் தேவையான கூடைகளைத் திரளாய் முடைந்தேன்.

அவைகள் அத்தனை சிறந்தவைகளல்ல; பண்டங்கள் வைத்திருக்கவும், வெளியில் ஏதுங் கண்டால், அதை எடுத்து வைத்துக்கொண்டு வரவு முதவிய கொள்கலங்கள். மைதானத்தில் வெள்ளாடு சுட்டுக் கொன்றால், நான் அதை ஒரு மரத்திற் றூக்கி, தோல் உரித்துப் பக்குவப்படுத்தி, மாமிசத்தைத் துண்டு துண்டாய் வெட்டி, கூடைக்குள் வைத்து வீட்டுக்குக் கொண்டுவருவேன். ஆமை பிடித்தால், அதை வெட்டி முட்டைகளை எடுத்து, என் செலவிற்குப் போதுமான இரண்டொரு துண்டு இறைச்சி வெட்டி, கூடைக்குள் வைத்து, வீட்டுக்குக் கொண்டுவருவேன். மீந்த மாமிசத்தை அவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் போவேன். கதிரைக் காய்ந்தபின் கசக்கித் தூற்றி, அள்ளுந் தானியத்தையும் பண்டசாலையிலல்ல, குழிந்து அகன்ற கூடைகளில் வைத்திருப்பேன்.

இக்காலத்தில் எனது வெடிமருந்து கொஞ்சங் குறைய முழுதும் செலவழிந்துபோயிற்று. இக்குறையைத் தீர்ப்பது அசாத்தியமாயிருந்தது. வெடிமருந்து முற்றிலும் செலவழிந்தபின், வெள்ளாடு சுடுவதற்கு என்ன செய்வேனென்று நினைத்துக் கலங்கினேன். நான் இத்தீவில் வந்த மூன்றும் வருஷம் ஒரு வெள்ளாட்டு மறிக்குட்டியை வசப்படுத்தி வளர்த்துக்கொண்டு வந்ததாகச் சொன்னேனே. அதற்கு ஜதையாக ஒரு கடாக்குட்டி சேகரிக்க நினைத்து, எத்தனையோ பிரயத்தனங்கள் செய்தும், ஒன்று மகப்படவில்லை. வர வர எனது மறிக்குட்டி வளர்ந்து வயசு முதிர்ந்தது. அதைக் கொன்றுதின்ன எனக்கு மனம் வரவில்லை. ஆகவே, அது என் வசத்தில் நின்று கிழ ஆடாய் இறந்துபோயிற்று.

நான் இத்தீவிற் பதினொரு வருஷகாலமாய்க் குடியிருந்து பயின்றதனாலும், வெடிமருந்து வர வரச் செலவழிந்துபோனதனாலும், கண்ணி வைத்து வெள்ளாடுகளை உயிருடன் பிடிக்கும் வகை என்னவென்று தீர்க்காலோசனை பண்ணத் தொடங்கினேன். முக்கியமாய் ஒரு சினையாட்டை அகப்படுத்த அபேட்சித்தேன்.

இதன்பொருட்டு ஆடு பிடிக்கக் கண்ணி உண்டாக்கி, இரைபோட்டு வைத்தேன். இரண்டொரு முறை ஆடுகள்

அக்கண்ணியில் அகப்பட்டும், கண்ணிக்கயிறு பலமில்லா திருந்ததனுல், இரையைப் பட்சித்து, கயிற்றை அறுத்து, ஓடித் தப்பிவிட்டன.

பின்பு எனது அபிப்பிராயத்தை நிறைவேற்றுதற்குக் கண்ணி யுதவாதென்று கண்டு, படுகுழி வெட்டிச் சோதனை செய்யக் கருதி, ஆடுகள் மேய்ந்துகொண்டு நிற்கக் கண்ட விடங்களிற் பெருங் குழிகள் பல அகழ்ந்து, அக்குழிகளின் மேல் நான் முடைந்த கரப்புக் கூடுகளைக் கவிழ்த்து, அவற் றின்மீது பாரம் வைத்தேன். பொறி ஏற்ருமல் யவைக்கதி ரும், காய்ந்த நெல்லும் பலமுறை தூவினேன். பின்பு அடிச்சுவடு கண்டதனுல், ஆடுகள் உட்சென்று தானியத்தைத் தின்றுவிட்டனவென்று எனக்குத் திருஷ்டாந்தப்பட்டது. அப்புறம் ஒரு இரவில் மூன்று பொறி ஏற்றி, இரை தூவி வைத்து, மற்றநாட் காலையிற் போய்ப் பார்த்தேன். அப் பொறிகளனைத்தும் நான் ஏற்றியபடி இருந்தன. இரை யாகத் தூவின தானியத்தை ஆடுகள் சுத்தமாய்ப் பட்சித்துப் போட்டன. இதுகண்டு என் மனந்தளர்ந்தும், வேறு பொறி ஏற்றி வைத்தேன். ஏற்றிய விவரத்தைச் சொல்லில் பெருகு மாதலாற், சுருக்கிச் சொல்லுகிறேன். ஒருநாட்காலையிற் பொறிகளைப் பார்க்கப் போனபொழுது, அவற்றி லொன்றிற் பாரிய கிழ ஆட்டுக்கடா வொன்றும், மற்றுென்றிற் குட்டிகள் மூன்றும் அகப்பட்டு நின்றன. அக்குட்டிகளில் கடா ஒன்று, மறி இரண்டு.

கிழக்கடாவைக் கையாடக் கூடாதிருந்தது. அதனிடத் தில் மிகுந்த உக்கிரம் விளங்கியதனுல், நான் படுகுழியி லிறங்கி அதைப் பிடித்துக் கொண்டுவரப் பயப்பட்டேன். எளிதிற் கொல்லமாட்டுவேன், எனது அபிப்பிராயம் கொல் வதல்லவே; கொன்ருல், ஆடுகள் விர்த்தியாவதெப்படி? இதை நினைத்து, ஓடித் தப்பும்படி நான் கூட்டைத் திறந்துவிட் டேன். அது கெடிகலங்கி, அந்தக்ஷணமே ஓடிப் பறந்தது. பசி வந்திட பஞ்சானனமாகிய சிங்கமும் அடங்கி வசப் படுமென்று நான் அப்பொழுது அறியவில்லை; பிற்பாடு அறிந் தேன். மூன்று நாலு நாள்வரையில் நான் அதைக் குழிக்

குள்ளே நிற்கவிட்டு இரை ஒன்றும் போடாமல், அதன்மேற் கொஞ்சந் தண்ணீர் காட்டித் தானியமும் சொற்பம் போட்டால், அது கொழுப்படங்கிக் குட்டிகளில் ஒன்றைப்போலச் சாதுவாகும். அன்பாய் வளர்த்தால் ஆட்டு ஜாதி அதிக அறிவும், சாதுவாகி வசப்படும் தன்மையுமுள்ளது.

முதல்முறையாதலால், அகப்பட்ட அவ்வாட்டுக்கடாவை வசப்படுத்த வகைதெரியாமல் ஓடித் தப்பும்படி திறந்துவிட்டு, குட்டிகள் நின்ற குழியிலிறங்கி, அவற்றை ஒவ்வொன்ருய்ப் பிடித்து மூன்றையும் அடுத்துக் கட்டி, மிகுந்த பிரயாசத்துடன் வீட்டிற் கொண்டுவந்து சேர்த்தேன்.

பலநாள்வரையில் அவைகள் ஒன்றுந் தின்னவில்லை. நாள்தோறும் தானியத்தை அவைகளுக்குமுன் போட்டுவைத்ததனால், தின்று ருசிகண்டு என்னுடன் பழகின. சில ஆடுகளைப் பிடித்து வசப்படுத்தி வளர்த்தால், அவை வர வரப் பெருகி, என் வீட்டில் ஒரு மந்தை சேரும். மருந்து ரவை இல்லாதிருக்குங்காலத்தில் இந்த யுத்தி செய்வதனாலன்றி, வேறுவிதத்தால் எனக்கு ஆட்டு மாமிசம் அகப்படாதென்று கண்டேன்.

பழகி வசப்பட்ட ஆடுகளை வசப்படாதவைகளுடன் கலக்கவிட்டால், வசப்பட்டவைகள் வளர வளரத் தங்களினத்துடன் சேர்ந்துபோமாதலால், நான் பிடித்து வசப்படுத்திய ஆடுகளைப் பிரத்தியேகமான இடத்தில் விட்டு வளர்க்கவேண்டுமென்று எனக்குள்ளே யுத்தி பிறந்தது. ஆதலால், பலமான கிராதி அடைத்தாவது, வேலி அடைத்தாவது, அவ்வடைப்புக்குள் எனது ஆடுகளை விடுவது ஆவசியகமாயிருந்தது. இப்படிச் செய்தால், அடைப்புக்குள்ளிருப்பவைகள் வெளிப்படுவதும், வெளியில் உள்ளவைகள் வேலியை முறித்து உட்செல்வதும் கூடாது.

நான் ஒருவன் ஆளுதவியின்றி என் கையாற் செய்து முடிக்க, இவ்வேலை அற்பவேலையா? அற்பமாயிருப்பினும், பாரமாயிருப்பினும் ஆவசியகமான கருமத்தை எவ்வளவ வருத்தப்பட்டும் செய்யத்தானே வேண்டும். ஆதலால், அடைப்புண்டாக்குவதற்கு முதலில் மேயப் புல்லும், குடிக்

கத் தண்ணீரும், படுத்து இளைப்பாற நிழலொதுக்குமுள்ள தகுதியான இடம் பார்த்தேன்.

பசும் புல்லடர்ந்த ஒரு மைதானத்தில் சுத்த ஜலமுள்ள சிற்ருறுகள் இரண்டு மூன்று இருந்தன. அதன் ஒரு பக்கம் விருட்சங்களடர்ந்த காடு. மேற்சொல்லிய புல்வளம், நீர் வளம், நிழல்வளம் மூன்றும் அம்மைதானத்தி லமைந்ததனுல், நான் அதை வளைத்து அடைக்கத் தொடங்கினேன். நான் அடைக்கக் கருதிய இடத்தின் சுற்றளவு இரண்டு மைலுக்குக் குறையாது. ஆடு மாடுகளை வசப்படுத்தி விட்டிருக்கும் அடைப்புகளின் தன்மையை அறிந்தவர்கள் எனது யோசனைத் தாழ்வைக்குறித்து நகைப்பார்கள். கால நஷ்டத்தைப்பற்றி யல்ல, இரண்டு மைலானுலும் சரி, பத்து மைலானுலும் சரி, எனக்கு வேறுவேலை என்ன? இரண்டு மைல் விஸ்தாரமுள்ள அடைப்புக்குள் விட்டிருக்கும் ஆடுகளை வேண்டும்பொழுது எளிதில் தொடர்ந்து பிடிக்கலாமா? இரண்டு மைல் சுற்றளவு அடைப்புக்குள் சஞ்சரிப்பதற்கும், அடைப்பின்றி இத்தீவில் எங்கும் சஞ்சரிப்பதற்கும் பேதமில்லை. இவ்வடைப்புக்குள் நிற்கும் ஆடுகள் மனுஷர் கைவசப்படாத காட்டாடுகளைப்போலவே யிருக்கும். இதை எண்ணுமல் அபுத்திபூர்வமாய் நான் வேலியடைக்கத் தொடங்கியதைப்பற்றித்தான் இச்செய்தி கேட்கும் அறிவுடையோர் என்னை முற்புத்தி இல்லாத மூடனென்று எண்ணுவார்கள்.

வேலை தொடங்கி ஐம்பது கஜ தூரமட்டும் வேலியடைத்தபின், இந்த யோசனை எனக்குண்டாயிற்று. உண்டான க்ஷணமே நான் அதை நிறுத்தி, முதலில் நூற்றைம்பது கஜ நீளமும், நூறு கஜ அகலமுமுள்ள இடத்தை வளைத்து அடைத்தால், எனக்குத் தகுதியான காலவரையில் ஆகாரத்திற்கு வேண்டும் ஆடுகளை அதற்குள் விட்டு வளர்க்கலாமென்றும், மந்தை பெருகும்பொழுது பின்னும் அதிக இடத்தைச் சேர்க்கலாமென்றுந் தீர்மானித்தேன்.

புத்திபூர்வமாய்ச் செய்த இந்த நிர்ணயப்படி திடசித்தத்துடன் வேலை தொடங்கினேன். மேற்சொல்லிய பரிமாண

முள்ள நிலத்தில் வேலி அடைக்க மூன்று மாசஞ் சென்றது. வேலி அடைத்து முடிகிறவரையில் அந்நிலத்தில் வளமான இடம் பார்த்து, ஆட்டுக்குட்டிகள் மூன்றையும் கயிற்றிற் கட்டி, உலாவி மேயவிட்டேன். அன்றியும், அவைகள் என்னுடன் எளிதிற் பயிலும்பொருட்டுக் கூடியவரையில் எனக்குச் சமீபத்தில் நின்று மேயும்படி செய்தேன். பெரும் பாலும் யவைக்கதிரையாவது, நெல்லையாவது நான் கொண்டு போய்க் கொடுக்க, அவைகள் அச்சந் தெளிந்து, என் கையில் இரையைத் தின்றன. இப்படிப் பயின்றதனால், வேலியடைத்து முடிந்தபின், நான் அவைகளைக் கட்டாமல் அடைப்புக்குள் விட்டிருக்கையில், என்னைக் காணும்பொழு தெல்லாம் கைத்தீன் வாங்கித் தின்னும்படி அவைகள் அழுது கொண்டு ஆவலுடன் என்னைத் தொடரும்.

எனது அபிப்பிராயத்திற்கு இவ்வடைப்பு அனுகூலப்பட்டது. ஒன்றரை வருஷத்திற்குள் இவ்வாடுகள் பெருகி, குட்டிகளும் வளர்ந்தவைகளுமாகப் பன்னிரண்டுருக்கள் ஆயின. பின்னும் இரண்டு வருஷம் சென்றபின் நான் அப்போதப் போது பிடித்து அடித்துத் தின்றவைகள் போக, நின்ற உரு நாற்பத்து மூன்று. அதன்மேல் நான் அவைகளுக்கு மேய்ச் சலுக்கு ஐந்து அடைப்புக ளுண்டாக்கினேன். அந்தந்த அடைப்புக்குள் வேண்டும்பொழுது செலுத்திவிட்டுப் பிடிக் கும்படி படல்களாற் சிறு பட்டிகள் அடைத்து வைத்தேன். ஒரு அடைப்பினின்று மற்றொரு அடைப்புக்குப் போவதற்கு வாசல் விட்டு, படல் கட்டியிருந்தேன்.

இம்மாத்திரமல்ல, இஷ்டமானபொழுது ஆகாரத்திற்கு ஆட்டு மாமிசமன்றி, பாலும் சம்பூரணமாய்க் கிடைத்தது. ஆதியில் நான் இதைக்குறித்துச் சொப்பனத்திலும் எண்ண வில்லை. பாலைப்பற்றிய சிந்தனை என்னுள்ளத்திற் பிறந்த வுடன் நான் அதிசயித்து உவப்புற்றேன். பாலில் வெண் ணெய் எடுக்கவும், பாலடைக்கட்டி செய்யவுந் தொடங்கி னேன். சிலவேளை நாளொன்றுக்கு நான் கறக்கும் பால் இரண் டொரு கலன் வரையிலுண்டு. ஜீவகோடிகளுக்கு அதன தன் ஜாதிப் பண்புக்குரிய போஜன பதார்த்தங்களைக் கொடுக்

கும் பகவான் அவைகளை உபயோகப்படுத்தும் வகையையும் உணர்த்துவது இயற்கையேயன்றோ? முன் ஒருபொழுதும் நான் பசுப்பால் கறந்ததுமில்லை, ஆட்டுப்பால் கறந்ததுமில்லை, எவராவது வெண்ணெய் எடுப்பதை, அல்லது பாலடைக் கட்டி செய்வதைக் கண்டதுமில்லை. இப்படியிருந்தும் பால் கறக்க எளிதிற் பயின்றேன். பலகாற் பரீட்சைசெய்து பால் பழுதாய்ப்போயினும், காலக்கிரமத்திற் கைபடிந்து வெண்ணெய் எடுக்கவும், பாலடைக்கட்டி செய்யவும் திறமுடையவனானேன். அதன்பின் இவ்விரண்டும் எனக்கு எப்பொழுதுங் குறையில்லாதிருந்தன.

சிருஷ்டி வர்க்கங்களுக்கு மிகுந்த ஆபத்து வந்திருக்குங் காலத்திலும் சர்வத்திற்கும் வல்ல கடவுள் அவைகள்மீதிரங்கி, அவைகளை மிகுந்த அன்பாய் ஆதரிக்கமாட்டுவாரே! அவர் நாம் அனுபவிக்குங் கொடிய உபத்திரவங்களை நமக்கு இன்பமாகத் தோற்றுவிக்க வல்லவர். இருட்டு அறைகளிலும், சிறைச்சாலைகளிலும் இருப்பவர்களுக்கு அதிசயமான நன்மைகளைச் செய்து, தம்மைப் புகழ்ந்தேற்றும்படி அவர்கள் உள்ளத்தை அருள் சுரந்தேவும் சக்தியுள்ளவர்! ஆதியிற் பசியால் வருந்தி யிறப்பதொழிய, வேறு கதி யில்லையென்று நான் பரிதபித்தேங்கிய இவ்வனுந்தரத்தில் எனக்குப் போஜனமாயத்தப்படுத்திக் கொடுக்கப்பட்டது.

நானும், எனது சிறிய குடும்பமும் ஓரிடத்திற் கூடியிருந்து போஜனம் செய்வதைக் கண்டால், விருப்பு வெறுப்பில்லாத சன்னியாசியும் அதிசயித்து மகிழுவான். இத்தீவு முழுதிற்கும் அரசனும் இறைவனுமாகப் பெற்றதே எனது பெருந்தகைமை. நான் எனது பிரஜைகள் அனைவருடைய ஜீவனையும் காக்கவும் அழிக்கவும் சர்வாதிகார முடையவனாயிருந்தேன். இஷ்டப்பிரகாரம் எந்த ஜீவனையும் தூக்கிற் போடவும், ஜீவனையும் சுவாதீனத்தையும் வாங்கிக்கொள்ளவும், கொடுக்கவும், எடுத்துக்கொள்ளவும் எனக்குத் திராணியுண்டு. எனது பிரஜைகளுக்குட் கலகம் செய்வார் எவருமில்லை.

இம்மாத்திரமல்ல, எனது தாசர்கள் சூழ்ந்து நின்று ஏவல் செய்ய, ஏக சக்கரவர்த்திபோலிருந்து, மிகச் சம்பிரமமாய்

உண்டு வாழ்ந்தேன். என்னுடன் தாராளமாய்ப் பேச இடம் பெற்ற தோழன் நான் வளர்த்த கிளி ஒன்றே. எனது நாய் வயசு முதிர்ந்து, தளர்ந்து, தன் இனத்தை விர்த்தி செய்யும் படி பெண் நாய் முகத்தை என்றுங் காணுதிருந்து, எப்பொழுதும் எனது வலப்புறத்தில் உட்கார்ந்த வண்ணமாயிருந்தது. எனது போஜன பீடத்தின் இருபக்கங்களிலும் இரண்டு பூனைகள் உட்கார்ந்து, அடிக்கடி நான் போடுந் துணிக்கைகளை ஆவலுடன் தின்று இவ்வுபகாரத்தை நன்கு மதித்தன.

இந்தப் பூனைகள் ஆதியில் உருவினின்று நான் கரைக்குக் கொண்டுவந்த இரண்டு பூனைகளல்ல; அவை இரண்டும் இறந்துபோயின. எனது வாசஸ்தானத்திற்குச் சமீபத்தில் நானே அவைகளை எடுத்து அடக்கம்பண்ணினேன். இறக்குமுன் அவற்றில் ஒன்று குட்டிபோட்டது. அதனுடன் பொலிந்த விலங்குஜாதி ஏதென்றறியேன். அதன் சந்ததியில் இவ்விரண்டைமாத்திரம் நான் வசப்படுத்தி வளர்த்தேன். மற்றவைகள் எனது வீட்டைவிட்டு நீங்கிக் காட்டுப்பூனைகளாயின. போனபின்னும் அவைகள் பெரும்பாலும் என் வீட்டுக்குள் வரத் தலைப்பட்டு, சொத்தைக் கொள்ளை யடித்ததனுல், அநேக பூனைகளைச் சுட்டுக் கொன்றேன். அதன்மேல் மீந்தவைகள் என்னிடத்திற்கு வரவேயில்லை. மேற்சொல்லியவாறு ஏவல் கேட்போர் பலர் சூழ, ஒருவிதத்திலுங் குறையின்றி உண்டு உடுத்துச் சுகித்திருந்தேன். ஜன சகவாசமில்லாததன்றி, எனக்கு வேறு குறையில்லை. இக்குறையும் கொஞ்சக்காலத்திற்குள் நிவிர்த்தியாயிற்று. சகவாசஞ் செய்வதற்கு மனுஷர் திரளாய்க் கூடுவார்களென்று தோன்றியது.

# 11. அத்தியாயம்.

க

*எனது அங்க விவரணம். வாசஸ்தான விவரணமும், அடைப்புகளின் விவ ரணமும். நான் கடற்கரையில் மானிடன் காலடிச் சுவடு கண்டு, திகைத்தேங்கியது. அதைப்பற்றி எனக்குண்டான சிந்தனைகள். கூடிய வரையில் ஜாக்கிரதை செய்தது.*

எனது ஓடத்தை வைத்திருந்து கையாளவேண்டுமென்று எனக்குச் சற்றுப் பதைப்புண்டானதையும், இனி அதிலேறிச் சந்தேகமும் அபாயகரமுமான பிரயாணம் செய்வதற்கு எனக்கு மனமில்லாதிருந்ததையும் முன் வெளியிட்டேனே. ஆனதுபற்றிச் சில வேளை நான் அடங்கியிருந்து, அவ்வோடத்தைக் கரை நெருங்கச் செலுத்திக்கொண்டு தீவின் இக் கரையில் சேர்க்கும் வகை ஏதென்று சிந்தனை செய்தேன். சில வேளை ஓடம் இல்லாதிருப்பினும் பெரிதல்லவென்று எண்ணி, சிந்தனையற்றிருந்தேன். முந்தின பிரயாணத்திற் கடற்கரையின் நேர்மை கூர்மை, சாய்வு சரிவு எவ்வகையென்றும், நீரோட்டம் எத்திசை முகமாய்ப் பெருகியதென்றும் பார்த்தறியும்பொருட்டு, கரை அடுத்திருந்த ஒரு குன்றின் மேலேறின சங்கதி தெரிவித்தேனே. அக்கரைக்குப்போக வேண்டுமென்று அளவற்ற ஆவலும் சிந்தையுமுடையவனானேன். இந்த அவா நாளுக்குநாள் அதிகரித்தது. ஆனது கொண்டு, அவ்விடத்திற்குக் கடற்கரை மார்க்கமாய்ப் பிரயாணப்பட்டேன். இங்கிலாந்திலிருக்கும் எவராவது எனது அலங்கோலத்தைக் கண்டால் திகைத்து மயங்குவார், அல்லது கெக்கலி கொட்டி நகைப்பார். நான் உலாவி வரும் பொழுது பெரும்பாலும் தரித்துநின்று, என் கோலத்தை உற்றுப்பார்த்து, இவ்வித ஆடை அலங்காரமுடையவனுய் யார்க் ஷயர் மாகாணத்திற் பிரயாணம் செய்வேனுகில், பார்ப்பவர்களுக்கு மிக்க விநோதமாயிருக்குமேயென்று எண்ணிப் புன்னகை செய்தேன். எனது பூஷணுதிகளைக்குறித்து அடியிற் சொல்லும் வரலாறுகளைச் சற்றுக் கேளுங்கள்.

நான் சிரசிலணிந்த வெள்ளாட்டுத் தோற்குல்லாப் பருத்து உயர்ந்து இலட்சணமற்றிருந்தது. அதன் அடித்தொங்கல்

வெயிலுக்கு ஒதுக்காகவும், மழைத்துளியைக் கழுத்தில் விழ வொட்டாமல் அப்புறத்தில் தள்ளிவிடவுந் தக்கதாக நீண்டு சரிந்திருந்தது. இத்தேசப் புறங்களில் வஸ்திரத்திற்குள் மறைந்திருக்கும் உடம்பி னுறுப்புகளில் மழைத்துளி விழும் போதுண்டாகுங் குளிருபத்திரவத்திற் கீடான தீங்கு மற்றொன்றில்லை.

நான் அணிந்த ஆட்டுத்தோல் மார்புச்சட்டை எனது நடுத்தொடைவரையில் நீண்டிருந்தது. காற்சட்டை குறுகி முழங்காற் பொருத்துவரையில் எட்டியது. அது ஒரு கிழ ஆட்டுக்கடாத் தோலினால் தைக்கப்பட்டதனால், அத்தோலின்மீதுள்ள நீண்ட ரோமத்திற்குள் முழங்காற் பொருத்தின் கீழும் கால் சற்றுத் தூரம் மறைந்தது. ஆனதனால், நான் தரித்த குறுங் காற்சட்டை சாதாரணமாய் எவர்களும் தரிக்கும் நெடுங் காற்சட்டைக்குச் சமானமாயிருந்தது. பாத கோசமும் பாதரட்சையும் எனக்கில்லை. குதிகனத்த நெடும் பாதரட்சைபோல் எனது பாதத்தையும், முழந்தாளின்கீழ் காலையும் ஒருவாறு மறைக்கும்பொருட்டு அவலட்சணமாய் ஒரு ஜோடு தொடுதோல் செய்து இட்டிருந்தேன். அதற்கு என்ன பெயர் சொல்லத் தகுமென்று எனக்குத் தோன்றவில்லை. அது ஒன்றுமாத்திரமா, எனது உடம்பை மூடிய வஸ்திரங்களனைத்தும் குரூபமாகத்தானே இருந்தன.

காய்ந்த வெள்ளாட்டுத்தோலிற் செய்த அகலமான கச்சொன்று இடையிற் கட்டியிருந்தேன். அதற்குப் பூட்டில்லை. இரண்டு வார் கட்டி இழுத்து இறுக்கப்பட்டது. அதன் இருவிலாப் புறத்திலும் ஒருவிதத் தெறிப்பூட்டு இரண்டு செய்து, அத்தெறிகளிற் கத்தியாவது குத்துவாளாவதல்ல, ஒன்றில் மாமரியும் குறுகிய வாளொன்றும், ஒன்றிற் கைக்கோடரி ஒன்றும் மாட்டப்பட்டிருந்தன. அகலக் குறைவான மற்றொரு தோற்கச்சுத் தோளில் தொங்கும்படி போட்டு, இருமுனைகளையும் மேற்சொல்லியவாறு இறுக்கிக் கட்டியிருந்தேன். அதன் முனையில் எனது இடது கக்கத்தின்கீழ் இரண்டு ஆட்டுத் தோற்பைகள் தொங்கின. ஒன்று வெடிமருந்துப் பை, ஒன்று ரவைப் பை. முதுகுப் புறத்திற்

கூடையும், தோளில் துப்பாக்கியும் வைத்துக்கொண்டு, சற்று வது சாங்கமின்றி அவலட்சணமாய் அகன்ற ஆட்டுத்தோற் குடை பிடித்துக்கொண்டு, போக்கு வரவு செய்தேன். அவ லட்சணமாயிருந்தும், முதலாவது துப்பாக்கி, இரண்டாவது குடை, இவ்விரண்டுந்தானே எனக்கு ஆவசியகமான உப கரணங்கள். மேனியை மினுக்குவதிற் சிந்தனையற்று, சம ராத்திர ரேகைக்கு ஒன்பது பத்துப்பாகை தூரத்திற்குள் சஞ்சரித்த எனது முகம் வெள்ளை மனுஷரும் நிகிரோவரும் கூடி வாழ்ந்து விர்த்திசெய்யும் புத்திரர் புத்திரிகளாகிய வர்ண சாங்கரியருடைய முகத்தைப்போலக் கறுத்திருக்கவேண்டு மே. அவ்வளவு கறுக்கவில்லை. எனது தாடி ரோமம் காற் கஜ நீளத்திற்கு வளருமட்டும் அதைக் கத்தரிக்காமல் விட் டேன். பின்பு சவரகன் கத்தியும் கத்தரிக்கோலும் வேண்டு மளவிற்கு இருந்ததனால், நான் அதைக் குறுக வெட்டி, மீசையிற் கத்திபோடாமல், அதை வளர்த்து, ஸல்லி துறை யில் நான் கண்ட துர்க்கியர் சிலர் வைத்திருக்கும் அகன்ற மீசையைப்போலப் பணிக்காக்கினேன். துர்க்கியரன்றி, ஸல்லி துறையடுத்த நாட்டில் சஞ்சரிக்கும் மகமதியர் மீசை வைப்பது வழக்கமல்ல. எனது மீசை, அல்லது கிருதா வின் நீளத்தையும், அதன் சாயலையும் இங்கிலாந்திலிருப்ப வர்கள் கண்டால், ஏங்கித் திகைப்பார்கள்; ஆனாலும், அவை கள் எனது குல்லாவைத் தூக்கத்தக்க வளவிற்கு நீண்ட வைகளென்று சொல்வேனோ? சொல்லேன்.

நான் இதுவரையிற் சொன்னவையெல்லாம் அயற்சார் பான இடைச் சங்கதிகளேதவிர, நேரே வர்ணிக்கத்தொடங் கிய எனது ரூபத்தைப் பற்றியவைகளல்ல. நான் சஞ்ச ரித்த விடத்தில் என்னைக் காண்பவர் எவரு மில்லாதத னால், நான் குரூபியாயிருந்தாலுமென்ன? சுரூபியாயிருந் தாலுமென்ன? இரண்டு மொன்றுதான். இந்த நியாயத்தைப் பற்றி எனது அங்கத்தைக்குறித்து இனி ஒன்றும் சொல்லாது விடுகிறேன். மேலே விவரணமாய்க் கூறிய பூஷணாதிகளைத் தரித்து, ஐந்து ஆறு நாள்வரையில் இரண்டாவது பிரயா ணம் செய்தேன். முதலிற் கடற்கரை மார்க்கமாய்ச் சென்று, மலையிலேறும்படி, எனது ஓடத்தை நிறுத்தி நங்கூரம்போட்ட

விடத்தை இலக்காய் வைத்துப் போனேன். இம்முறை ஓடத்தைப் பத்திரமாய்ப் பார்க்கவேண்டு மென்னும் காதலில்லாததனால், குறுக்குவழியாய்ச் சென்று, முன்னேறிய அவ்வளவு உயரத்திற்கு மலையேறி, கடலுக்குள் ஒற்றி நீண்டிருந்ததும், நான் ஓடமேறிச் சுற்றி வந்ததுமாகிய பார்த்தொடர் முனையைப் பார்த்தபொழுது, கடல் அடங்கிச் சாந்தமாயிருப்பதையும், அலைக்கிளர்ச்சியாவது, சலனமாவது, நீர்ப்பெருக்காவது இல்லாதிருப்பதையுங் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

இதன் காரணம் ஏதென்று எனக்குத் தோன்றவில்லை. பொறுத்திருந்தாயினும் பார்வையிட்டு, நீரோடுந் திசை விகற்பத்தால் இவ்வேற்றுமை யுண்டாயிருக்குமோவென்று அறிய நிர்ணயித்தேன். அந்த க்ஷணமே அதன் காரணம் எனக்கு மயக்கமற விளங்கிற்று. வற்று நீரோட்டம் மேற்குத் திசையினின்று பெருகத் தொடங்கி, கரையிலுள்ள பெரிய நதியினின்று வேகமாய்ப் பெருகும் வெள்ளத்துடன் கலப்பதனால், இந்த நீரோட்ட முண்டாகவேண்டுமென்றும், மேற்காற்று உரத்து அடித்தால் கரையடுத்து நீர் ஓடுகிறதென்றும், வாடைக் காற்று பலமாய் அடித்தால் கரைக்கு எட்ட ஓடுகிறதென்றும் அறிந்தேன். சாயரக்ஷை இதற்குத் திருஷ்டாந்தம் கண்டேன். சாயங்காலபரியந்தம் அவ்விடத்தில் உலாவிக்கொண்டு நின்று, மீண்டும் மலையேறிப் பார்த்தபொழுது, வற்றுநீர் ஓடத் தொடங்கியது. அது கரைக்குச் சமீபத்திலல்ல, ஒன்றரை மைல் தூரத்தில் எட்ட ஓடிற்று. நான் ஓடம் செலுத்திக்கொண்டு போனபொழுதோ, நீர் கரை நெருங்க ஓடி, ஓடத்தை விரைவாய் அடித்துக்கொண்டுபோயிற்று. காலபேத மறிந்து நீர் வற்றும் வேளையிற் போவேனானால், அப்படியாகாது.

வற்றுவேளைக்கும் பெருக்குவேளைக்கும் திட்டமாய் விவரமறிந்தால், எனது ஓடத்தை எளிதில் திருப்பி, தீவைச் சுற்றி, முன்னின்ற விடத்திற் கொண்டுவந்து சேர்க்கலாமென்று நான் கண்ட காட்சியால் எனக்கு மனவுறுதி யுண்டாயிற்று. இந்த யுக்திப்பிரகாரம் செய்யக் கருதியபொழுது, முன்பு எனக்கு நேர்ந்த விபத்தை நினைத்து, திகில

டைந்தேன். அப்புறம் அதைப்பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் என் மனம் பதறிற்று. பதறியும், எனது அபிப்பிராயத்தை நான் விட்டுவிடவில்லை. வேறு ஒரு நிர்ணயஞ் செய்தேன். அதில் ஏதும் அபாயமில்லை; கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருந்தது. அது மற்றொரு ஓடம் செய்வதுதான். செய்தால், முந்தின ஓடம் தீவின் அப்புறத்திற்கும், இது இப்புறத்திற்கும் எனக்கு உபயோகப்படும்.

இக்காலத்தில் நான் சஞ்சரித்த தீவில் எனக்கிருந்த தோட்டங்கள் இரண்டு. ஒன்று மலைக்கீழ் மதில் சூழ்ந்த சிறிய கோட்டை, அல்லது கூடாரம். அதன் பின்பக்கத்தில் ஒரு குகை. இப்பொழுதோ அக்குகை ஒன்றிற்குள் ஒன்றாய்ப் பல அடுக்கறைகளாய் விஸ்தரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் அதிகம் உலர்ந்து விஸ்தரித்திருந்த ஒரு அறையின் கதவு எனது கோட்டைச் சுவர் மலையுடன் பொருந்திய விடத்திற்கு அப்புறம் வெளிப்படும் வாசலாய் உபயோகப்பட்டது. அவ்வறையில் அடர்த்தியாய் வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் இதற்குமுன் ஓரிடத்தில் நான் விவரித்த பெரிய மட்பாண்டங்களும், பதினாலு பதினைந்து அகன்ற கூடைகளுமே. ஒவ்வொன்று ஐந்து ஆறு புஷல் தானியம் பிடிக்கும். அக்கூடைகளில் நான் எனது போஜன பதார்த்தங்களை வைத்திருந்தேன். எனது முக்கியமான போஜன பதார்த்தம் தாள் நீக்கிக் குறுகக் கொய்த தானியக் கதிரும், கையாற் கசக்கி மணியாக்கின தானியமுந்தான்.

எனது வீட்டிற்குப் புறமதிலாய் அடைத்த கிராதி மரங்கள் பருத்துத் தழைத்துக் கிளைத்து மிகவும் அடர்ந்திருந்ததனால், மைதானத்தில் நின்று பார்ப்பவர்களுக்கு அக்கிராதி வேலிக்குள்ளிருக்கும் எனது வீடு சற்றாயினுந் தோன்றாது.

இவ்வீட்டுக்குச் சமீபத்தில் வெளித்தரைக்கு உள்ளிட்டுப் பள்ளநிலத்தில் இரண்டு வயல்களை வருஷந்தோறும் வெட்டிக் கொத்தி எருவிட்டு, விதைக்கும் காலத்தில் விதைத்து, அறுக்குங் காலத்தில் அறுப்பறுத்து, அனுபவித்துக்கொண்டு வந்தேன். பின்னும் அதிக தானியம் வேண்டுமானால், பக்கத்தில் அதிக நிலஞ் சேர்த்துப் பயிர் செய்துவருவேன்.

இதன்றி, எனது நாட்டு மண்டபத்திற்குச் சமீபத்திலும் பக்குவமான தோட்டம் இருந்தது. முதலில் நான் உண்டாக்கின பன்னசாலையின் வேலியை அப்போதப்போது அளவான உயரத்தில் மட்டமாய் நறுக்கிச் சிறப்பித்தேன். ஏணி எப்பொழுதும் வேலிக்குட்புறத்திற் சார்த்தப்பட்டிருந்தது. ஆதியிலே சிறு கொம்புகளாயிருந்த வேலிக்கால்கள் வர வரப் பருத்து ஊத்து உயர்ந்து அடர்ந்தன. அவைகள் பக்கத்திற் படர்ந்து நெருங்கிக் கூடலாகிக் குளிர்ந்த நிழலொதுக்குண்டாம்படி, உயர்ந்த கொம்புகளைப் பக்குவமாய் நறுக்கித் தள்ளி வளர்த்தேன். இதன் நடுவில் எனது கூடாரமிருந்தது. கூடாரமென்றால், நாட்டிய கால்களின்மீது நிழலுக்காக விரித்துக் கட்டிய கப்பற்பாய். அது ஒருபொழுதும் பழுதாகவில்லை. இவ்விதானத்தின் கீழே நான் சுட்டுக் கொன்ற விலங்குகளின் தோலுறையிற் பஞ்சுபோல மிருதுவான வஸ்துக்கள் பொதிந்து செய்த சார்மணைக் கட்டிலொன்று வைத்திருந்தேன். கடலோடிகள் உருவிற்படுக்கும் கம்பளி யொன்றும், போர்த்துக்கொள்ளும்படி உருக்காவற் கடலோடிகள் தரிக்கும் பெரிய அங்கி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன. எனது பிரதான வாசஸ்தலத்தினின்று நான் எங்கேயாவது வேலை முகாந்தரமாய்ப் போயிருக்கும் வேளையில் இந்த நாட்டு மண்டபந்தான் எனது வாசஸ்தானம்.

இதன் பக்கத்தில் ஆடுகளை விட்டு அடைக்கும் அடைப்புகள் இருந்தன. அவ்வடைப்பு வேலையில் நான் மிகுந்த கஷ்டப்பட்டதனால், வேலிக் கால்களினிடையிற் சிறிது வெளியிருந்தது கண்டு, ஆடுகள் வெளிப்படுமென்று விசனப்பட்டு, அவ்வேலியின் புறத்திற் சிறு கொம்புகளை நெருக்கமாய் நாட்டினேன். நாட்டியபின், அது வேலியல்ல, பலகை அடைத்த கிராதிக்குச் சமானமாயிற்று. ஒரு கை உட்செல்வதற்காயினும் இடைவெளி யில்லை. அவ்வேலிக் கால்கள் அடுத்து வரும் மழைக்காலத்தில் வளர்ந்து, கிளைத்து, பலத்து, மதிலினும் அதிக உறுதியாயின.

நான் செயலற்றுச் சோம்பியிராமல், எனது சுகஜீவனத்திற்கு ஆவசியமாகத் தோன்றும் எதையும் கஷ்டப்பட்டுச் செய்து நிறைவேற்றினே னென்பதற்கு இதுவே சாட்சி. பக

ரும். எனது வீட்டிற்குச் சமீபத்தில் எனக்குப் படிந்து வசப்பட்ட ஆடுகளை வளர்த்து விர்த்திசெய்துகொண்டு வருவது, இத்தீவில் நாற்பது வருஷம் சஞ்சரித்தாலும், அதுவரையிற் பதங்கெடாத மாமிசமும், பாலும், வெண்ணெயும், பாலடைக் கட்டியும் பக்கத்திற் பத்திரமாய் வைத்திருப்பதற்குச் சமானமாம். ஆடுகள் எவ்விதத்திலும் வெளிப்பட்டு விலகாதிருக்கும்படி அடைப்பைப் பலப்படுத்தி, பழுதகற்றிக் கொண்டு வருவேனாகில், வேண்டும்பொழுது பிடித்து அனுபவிக்கும்படி அவ்வாடுகள் எப்பொழுதும் என் சமீபத்திலிருக்குமென்று உறுதியாய் நம்பி, மேலும் மேலும் கால்களை நாட்டி, வேலியைத் திடப்படுத்தினேன். எனது அவாவினால் அளவிற்கு அதிக நெருக்கமாய்க் கால்களை நாட்டியது பற்றி, பிற்பாடு அவைகளிற் சிலவற்றைப் பிடுங்கி எறிந்து விட்டேன்.

மேலும், இவ்விடத்தில் எனது திராட்சவனமிருந்தது. திராட்சப்பழங்களைப் பறித்து, வற்றல்போட்டு, மாரிகாலத்திற்கு வேண்டுமென்று வைத்திருந்தேன். அதுதான் மழைக்காலத்தில் எனது முக்கியமான ஆகாரம். ஆகார வர்க்கங்களில் அதைப்போல நாவிற்கிதமும், ருசிகரமுமான பதார்த்தமில்லை. அது நாவிற்கிதமா யிருந்ததுமன்றி, வியாதிக்கு ஔஷதமும், சுகத்திற்கு அனுகூலமும், சரீரபுஷ்டி தருவதும், தேக உஷ்ணத்தை அடக்குவதுமாயிருந்தது.

இந்நாட்டு மண்டபம் எனது மலைக்கோட்டைக்கும், ஓடம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கும் மத்திய ஸ்தானமாதலால், நான் ஓடத்தைப் பார்க்கப் போகும்பொழுதெல்லாம் இடைவழியில் இவ்வீட்டில் தங்கினேன். நான் பெரும்பாலும் ஓடத்தைப் போய்ப் பார்த்து, அதன் உபகரணங்கள் அனைத்தையும் பழுதின்றிக் காத்துக்கொண்டு வந்தேன். சிலவேளை உல்லாசத்திற்கு ஓடமேறிப் போவதுமுண்டு. முன்போல அபாயகரமான பிரயாணம் செய்வதற்கு என் மனம் சரிப்படவில்லை. கரையினின்று இரண்டொரு கல்லெறி தூரத்திற்கு அப்புறம் நான் ஒருபொழுதும் ஓடத்தைச் செலுத்திப் போகவில்லை. போனால், எனக்குத் தோன்றுதபடி நீரோட்டமா

வது, கடுங்காற்றுவது ஓடத்தை அடித்துக்கொண்டுபோய் நெடுங்கடலில் விடுமென்றும், வேறு ஏதாயினும் விபத்து நேரிடு மென்றும் அச்சமுற்றிருந்தேன். இதுநிற்க, இப்பால் எனக்குச் சம்பவித்த நூதன ஆபத்துகளையும், நான் கண்ட காட்சிகளையும், எனது அனுபவத்தையும் சொல்லுகிறேன்.

ஒருநாள் மத்தியானம் ஓடமிருக்கும் இடத்திற்குப் போகையில், கடற்கரை மணலில் ஒரு மனுஷனுடைய காலடிச் சுவடு இருந்தது கண்டு, பிரமையடைந்து, இடி விழுந்தவனைப்போலும், ஆவேசங் கண்டவனைப்போலும் திகைத்து நின்றேன். எவராவது பேசும் சத்தம் கேட்குமென்று உற்றுக் கேட்டேன். எவரையாவது காணலாமென்று சுற்றிலும் பார்த்தேன். ஒன்றுங் கேட்கவுமில்லை, எவரையுங் காணவுமில்லை. மேட்டில் ஏறி நின்று எட்டப் பார்த்தேன். கரைக்கு நெருங்கியும் தொலைத்தும் போய்ப் பார்த்தேன். எங்கே போயுமென்ன? நான் கண்ட அடிச்சுவடு ஒன்றுதவிர, மற்றொன்றும் என் கண்ணுக்குத் தோன்றவில்லை. பின்னும் அடிச்சுவடிருக்கிறதோவென்றும், நான் கண்டது மனோபாவனையாயிருக்குமோவென்றும் திட்டமாய் அறியும்படி மீண்டும் அவ்வடிச்சுவட்டைப் போய்ப் பார்த்தேன். மனோபாவனையென்று சொல்வதற் கேதுவில்லை. கால் விரல், குதிங்கால், காலின் படம், உள்ளங்கால் முதலிய உறுப்புகளின் அச்சு அடையாளம் சிறிதாயினும் மயக்கமின்றி, அவ்வடிச்சுவடு பரிஷ்காரமாய் விளங்கியது. அவ்விடத்தில் மனுஷர் அடிச்சுவடு வந்தவகை என்னவென்று நான் அறியவுமில்லை, மனோபாவனை பண்ணவுமில்லை. திகைத்து மயங்கிய என் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிற்று. சற்றுநேரம் பிரக்ஞை தப்பியிருந்தேன். அப்புறம் மலைக்கோட்டைக்குத் திரும்பினேன். திரும்பிப் போகையில், அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பைசாசம் என்பதுபோல், என் கண்ணுக் கெதிர்ப்பட்ட புதர், விருட்சம், தறித்த மரத்தின் அடி இவைகளனைத்தையும் மனுஷனென்று எண்ணி, அத்தியந்த திகிலடைந்தேன். அச்சத்தினால் அடிக்கொருமுறை திரும்பிப் பார்த்தவண்ணமாய்ப் போனேன். ஏங்கித் திகைத்த என் மனதிற்குத் தோன்றிய பற்பல பயங்கரமான வடிவுகளை

வர்ணிப்பது அசாத்தியம். நிமிஷந்தோறும் என்னுள்ளத்திற் பிறந்த விகாரமான பாவனைகள் அநேகம். யுத்தி புத்திக் கிசையாத ஆதாரமற்ற வீண் நினைவுகள் பல.

கோட்டை கிட்டியபொழுது, பிடிக்கத் தொடர்ந்து ஓடி வருபவர்களின் கண்ணுக்குத் தப்பக் கருதும் திருடனைப் போலக் கோட்டைக்குட் பறந்தோடினேன். நான் ஆரம்பத் திலுண்டாக்கிவைத்த ஏணிவழியாய் மதிலேறி உட்சென் றேனோ, பிறகு கோட்டை வாசலாய் ஏற்பட்ட மலைத்துவா ரத்தில் நுழைந்து புகுந்தேனோ, எப்படிச் செய்தேனென்று எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை வேட்டைக்காரர் தொ டர்வது கண்டு, தன் வளைக்கு விரைந்தோடும் முயலுக்கும், நாய் வேகமாய் வருவது கண்டு, தன் குழிக்குப் பறந்தோடும் நரிக்கும் மிகுந்த திகிலுண்டென்று சொல்வார்களே; அத் திகிலும், நான் எனது வீட்டிற்கு ஓடிவந்தபொழுது, எனக்கு உண்டாயிருந்த அளவற்ற அச்சத்திற் கீடல்ல.

அன்றிரவு எனக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. என் திகில் உண்டானதற்கு நிமித்தமாகிய அடிச்சுவட்டைக் கண் டவிடம் தொலைந்தும், எனது கிலேசந் தொலையாமற் பின் னும் வளர்ந்தது. இது இயற்கைக்கும் விரோதம், அனுபவத் திற்கும் விரோதமே. அச்சத்தால் என் மனம் மயங்கித் தடு மாறியதனால், அடிச்சுவடு கண்டவிடம் எட்டாக்கையிலிருந் தும், பயங்கரமான மனோபாவனைகள் என் நெஞ்சை விட்டு இன்னும் நீங்கவில்லை. நான் கண்டது பைசாசத்தின் அடிச் சுவடென்று சிலவேளை உத்தேசித்தேன். அவ்வுத்தேசம் எனது யுத்தி புத்திக்கும் சமாதானமாயிருந்தது. பைசாசமன்றி, மற்றேதாயினும் மானிட வடிவு தாங்கி அவ்விடத்திற்கு வருவதெப்படி? வந்து இறங்கின உரு எங்கே? வேறு அடிச்சுவடுகள் இல்லையே. எந்த மனுஷனாவது அவ்விடத் திற்கு வரக்கூடுமா? அதுநிற்க, அடிச்சுவட்டைக் காண்ப தற்கு எவருமில்லாத இடத்திற் பிசாசு மானிடவேஷந் தரித்து வரக்கூடுமென்று உத்தேசிப்பதற்கும் ஏதுவில்லை. நான் அதைக் காண்பேனென்று பிசாசுக்கு எப்படித் தெரி யும்? ஆனதுகொண்டு, இவ்வுத்தேசமும் எனது பிரமை யை நீக்கவில்லை. என்னைப் பயப்படுத்த வேண்டுமானால்,

ஒரே ஒரு அடிச்சுவட்டினுலன்றி, வேறு வழி பிசாசுக்குத் தெரியாதா? எளிதிற் செய்யத்தக்க எண்ணிறந்த உபாயங்கள் அதற்குத் தெரியுமே. தீவின் எதிர்க்கரையில் நான் இருந்ததனுல், அக்கரையில் ஏதும் அச்சக்குறி காண்பிக்காமல், நான் காணுதற்கரிய தூரமான எதிர்க்கரையில் தன்னடிச்சுவட்டை வெளியிடுவதற்குப் பிசாசு அத்தனை மூடத்தனமுள்ளதா? அதுவும் காற்று உரக்கும்பொழுது பொங்கிப் புரளும் அலை வாரிக்கொண்டு போகத்தக்க கடற்கரை மணலில் தன் பாதத்தின் அடையாளத்தை வைத்திருக்குமா? காரியத்தின் தன்மையை யோசிக்குமிடத்து, இவ்வுத்தேசம் யுத்திபுத்திக்கு ஒப்பவுமில்லை, பிசாசின் மாயத்தைக்குறித்துச் சாதாரணமாய் மனுஷர் எண்ணும் எண்ணங்களுக்கு ஒத்திருக்கவுமில்லை.

இத்தன்மையான பல நியாயங்களை நினைத்து, அது பைசாசமல்லவென்றும், அதனிலுங் கொடிய அபாயகரமான ஏதோ ஒரு சிருஷ்டியென்றும் அனுமிதிசெய்தேன். வேறு சிருஷ்டி என்பது கடலின் எதிர்க்கரையை யடுத்த கண்டத்திற் சஞ்சரிக்கும் மிலேச்சர். அவர்கள் ஓடமேறிக் கடலில் உலாவும் பொழுது; நீரோட்டத்தின் வேகத்தினுலாவது, எதிர் காற்றின் கடுமையினுலாவது ஓடம் தள்ளுண்டு இக்கரை சேர, அவர்களிறங்கி, இது நிர்மானுஷியமான தீவென்று கண்டு, மீண்டும் ஓடமேறிப் போயிருப்பார்கள். மிலேச்சருடன் சகவாசஞ்செய்ய என் மனம் உடன்படாதே. அவ்வண்ணமே இத்தீவிற் சஞ்சரிக்க அவர்கள் மனமும் இசையாது.

இவ்வெண்ணங்களைப் பெயர்த்துப் பெயர்த்து, நான் பலவாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவர்கள் கரைப்பட்டபொழுது நான் அவ்விடத்தில் நிற்காததைப்பற்றியும், அவர்கள் எனது ஓடத்தைக் காணுததைப்பற்றியும் களிகூர்ந்து, கடவுளைத் துதித்தேன். ஓடத்தைக் கண்டால், இவ்விடத்தில் மனுஷர் சஞ்சரிப்ப தறிந்து, ஒருவேளை அவர்கள் மனுஷரைத் தேடி, உள்நாட்டிற்கு வந்தாலும் வருவார்கள். அவர்கள் ஓடத்தைக் கண்டு, இத்தீவில் மனுஷர் இருப்பதாகச் சித்தஞ்செய்து போயிருப்பார்களானுல், இனித் திரளா

கச் சேர்ந்து வந்து, என்னைப் பிடித்துப் பட்சிப்பார்களே. என்னைக் காணுதிருப்பினும், ஆட்டுமந்தைகள் விட்டு அடைத் திருக்கும் எனது அடைப்பையாவது கண்டு, தானியத்தை நாசப்படுத்தி, நான் வளர்த்த ஆடுகளைப் பிடித்துக்கொண்டு போக, அன்னம் ஆகாரத்திற்கு வழியின்றி, பட்டினியால் வருந்தி இறந்துபோவேனேயென்று நினைத்து, ஏக்கமுற்றேன். என் நெஞ்சு புண்பட்டது.

இவ்வச்சம் என் நெஞ்சை வருத்தவே, எனது புக்திக்கு ரிய நம்பிக்கை முழுதும் பறந்துபோயிற்று. கடவுள் செய்த நன்மைகளை அனுபவத்திற் கண்டறிந்து அதிசயித்து, அவரே எனது தஞ்சமென்று எனக்குண்டாயிருந்த திடநம்பிக்கை வெயிலைக் கண்ட பனிபோல் அகன்றது. நாளதுவரையில் அற்புதமாய் அமுதளித்து ஆதரித்த ஜீவகாருண்யராகிய கட வுள் எனக்கு ஈந்தருளிய போஜனபதார்த்த முதலியவைகளைப் பிறர் அபகரிக்காதபடி காக்க வல்லவரென்று எண்ணுமல், எனது நம்பிக்கையைக் கைவிட்டேன். ஒரு போகத்து விளை பயிர் அறுக்கப்படுமுன்னே அதற்கேதும் இடையூறு வந்தா லும் வருமென்று நினைத்து, விளைச்சல் அதிகம் காணும்படி அதிக நிலத்திற் பயிர் செய்யாமல், அந்தந்தப் போகத்தில் மறுபோகத்து விளைச்சல் வருமளவும் என் செலவிற்குக் கட்டிவரத்தக்க அவ்வளவு தானியத்தைமாத்திரம் நான் விதைத்துச் செயலற்றுச் சோம்பியிருந்தது புத்தியல்லவென்று நானே என்பேரிற் குற்றம் பாரித்தேன். இக்குற்றம் என் மேற் சார்வது நியாயந்தானென்றெண்ணி, இனிமேல் ஏதும் இடையூறு நேர்ந்தால், நான் அன்னம் ஆகாரத்திற்கு வழி யின்றி இறந்துபோகாதிருக்கும்படி வருஷந்தோறும் இரண்டு மூன்று வருஷச் செலவிற்குப் போதுமான விளைச்சல் காணத் தக்க வளவு நிலத்தைச் சாகுபடி செய்யத் தீர்மானித்தேன்.

மனுஷர் வாணுள் சாணளவு குறுகியிருந்தும், அதற்குள் அவர்களுக்குத் திருவுள்ளத்தின் செயலால் வரும் நன்மை தீமை, பெருமை சிறுமை, இன்பம் துன்பம் எத்தனை விகற்ப மாயிருக்கின்றன! நமது நிலைமை அப்போதப்போது மாறுப டவே, அததற்கு ஏற்க வெவ்வேறு குணுகுணங்களை நமக்குள்

தோற்றுவிக்கும் நானுவித மூலங்கள் எத்தனை அந்தரங்கமா னவைகள்! நாம் இன்று விரும்புவதை நாளை வெறுக்கிறோம். இன்றைக்கு வேண்டுமென்று நாடுவதை நாளைக்கு வேண்டா மென்று தவிர்க்கிறோம். இன்றைக்கு நமது நெஞ்சு அன்பு கூர்வது நாளைக்கு நமக்கு அச்சந்தருகின்றது. அதை நினைக் கவே நமக்கு நடுக்க முண்டாகின்றது. இக்கொள்கை இச்ச மயத்தில் என்மட்டில் ஐயந்திரிபறப் பூர்த்தியாய்த் திருஷ் டாந்தப்பட்டது. எப்படியென்று சொல்லுகிறேன்: மனுஷசக வாசமின்றி, கடல் சூழ்ந்த இத்தீவில் மனுஷர் முகங்காணு மல், ஏகாந்தமாயிருந்து சீரழிந்ததைப்பற்றி நான் மிகுந்த மனோபத்திரவப்பட்டவன். மனுஷருடனுவது, மற்ற ஜீவகோ டிகளுடனுவது சஞ்சரிக்க அபாத்திரனென்று கடவுள் என்னை இச்சீர்கெட்ட நிலைமையில் வைத்ததாக எண்ணி, பரிதபித் தவன். ஸ்திரீ புருஷராகிய மானிடஜாதியில் ஒருவரையா வது காண இடம்பெறுவேனுகில், பிராணதண்டனைத் தீர்ப் புப் பெற்றவன் பிழைத்திருக்க இடம்பெற்றால், அவனுக்குண் டாகும் சந்தோஷம் எத்தன்மையதோ, அத்தன்மையான சந் தோஷம் எனக்குண்டாமென்றும், அதிலு முயர்ந்த ஆனந்த பதவி ஆத்மகோடிகள் மறுமையில் அடையும் முக்தி ஒன்று தவிர, வேறில்லையென்றும் நினைத்திருந்தவன். இவ்வித அனு பவமும் மனநிலைமையும் உடையவனுயிருந்த எனக்கு, இப் பொழுது மானிடராக் குறித்து நினைக்கவே, மிகுந்த அச்ச முண்டாயிற்று. என் சரீரங் குளிரோடி விறைத்து நடுங் கிற்று. மனுஷர் சத்தம் கேட்டல்ல, அவர்கள் உருவைக் கண்டல்ல, இத்தீவில் ஒரே ஒரு வெற்றடிச் சுவடு கண்ட மாத்திரத்திற் பதறி உதறி ஒடுங்கி உருவழிந்து போவதற்கு எத்தனமாயிருந்தேன்.

இம்மையில் மனுஷருடைய மனோபாவனைகளும் கிருத்தி யங்களும் எப்பொழுதும் சமானமாயிராமல், காலத்திற்குக் காலம் மேற்சொல்லியவாறு வேறுபடும். முதலில் எனக்குண் டான பிரமை சற்றுத் தெளியவும், என் நெஞ்சிற் பற்பல விநோத யோசனைகளுண்டாயின. என் சிந்தை சென்ற துறையை அடியிற் சற்று விவரமாய்ச் சொல்லுகிறேன்:— அள வற்ற ஞானமும் ஜீவகாருண்யமுமுள்ள கடவுள் எனக்கு

விதித்த நிலைமை இதுதான். நிரந்தர ஞானியாகிய அவர் எனக்கு இப்பெயர்ப்பட்ட பல துர்க்கதிகளை ஏதுகாரணத்தால் வருவித்தாரென்று முன்னதாகக் கண்டறியும் சக்தி எனக்கில்லையே. ஆதலால், சர்வாதிகாரியாகிய கடவுள் எனக்கு இன்னின்ன ஆபத்துக்களை வருவிக்கவேண்டுவதேனென்று ஆட்சேபனை சொல்லக்கூடாது. அவர் எனது சிருஷ்டிகர்; நான் அவர் சிருஷ்டி. சிருஷ்டியைத் தமது யுக்தப்பிரகாரம் ஆண்டு நடத்தும் சர்வ சுதந்தரம் சிருஷ்டிகருக் குண்டென்பதற்கு ஐயமில்லையே. அன்றியும், நான் அதிக்கிரமித்து நடந்து, என்னைப் படைத்த மகத்தான கடவுளுக்குத் துரோகியாய்ப் போனதனால், அவர் தமது யுக்தப்படி என்னை எவ்வாறுவது தண்டிப்பது நியாயந்தான். நான் அவர் கற்பனைகளைக் கடந்து பாபிஷ்டனானதனால், என்மீது உக்கிரங்கொண்டு அவர் எனக்கு விதிக்கும் தண்டனையை மனத்தாழ்மையாய்த் தாங்குவது எனது கடன்.

மேலும், என்னை முறைமையாய்த் தண்டித்து எனக்குத் துன்பம் வருவித்த நீதியும் சர்வ சக்தியுமுள்ள கடவுள் எனக்கு மீட்சி தரவும் திராணியுள்ளவர். அவர் இச்சீர்கெட்ட நிலைமையினின்று என்னை விடுதலை செய்யாதிருப்பினும், அவருடைய திருவுள்ளத்தின் செயலுக்குப் பூர்த்தியாய் மனம்பொறுத்து அமைந்து நடப்பது எனது கடமையே. அதுவுமன்றி, அவரே எனது தஞ்சமென்று நம்பிப் பிரார்த்தனைசெய்து, அன்றன்று அவர் தேவ எத்தனமாய் எனக்குணர்த்தும் கற்பனைகளையும், வெளியிடும் விதிகளையும் மனமடங்கிக் கைக்கொள்வதும் எனது பாரந்தான்.

இச்சிந்தனைகள் பல நாழிகை, தினம், வாரமாத்திரமல்ல, பல மாசவரையில் என்னுள்ளத்தைவிட்டு நீங்காதிருந்தன. இச்சமயத்தில் நான் பெயர்த்துப் பெயர்த்துச் சிந்தனை செய்ததனால் விளைந்த விசேஷ சித்தி ஒன்றை இவ்விடத்திற் சொல்லாதொழிவது முறைமையல்ல. அது இது: ஒருநாள் அதிகாலையில் நான் படுத்த படுக்கையை விட்டெழுந்திருக்குமுன் மிலேச்சர் அடிச்சுவடு கண்டதைப்பற்றி எனக்கு நேரிடுமபாயத்தை நினைத்துக் கிலேசமுற்று, மனந்தடுமாறி

னேன். தடுமாறும்பொழுது, "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என் மகிமையைப் பிரகாசிக்கப்பண்ணுவாய்" என்னும் வேதவாக்கியம் எனது ஞாபகத்தில் வந்தது.

வந்தவுடன் நான் அச்சந்தெளிந்து, களிகூர்ந்து எழுந்து, எனக்கு விடுதலை செய்தருளும்படி ஆவலுடனும், மனவுறுதியுடனும் கடவுளைப் பிரார்த்தித்தேன். பிரார்த்தனை முடிந்தபின் வாசிக்கும்படி வேத புத்தகத்தை எடுத்துத் திறந்து பார்த்தபொழுது: "கர்த்தாவை நோக்கிக் காத்திரு, திடங்கொள், அவர் உன் மனதை ஸ்திரப்படுத்துவார், கர்த்தாவையே காத்திரு என்கிறேன்" என்னும் வாக்கியம் முதல் முதல் என் கண்ணுக்கு எதிர்ப்பட்டது. இவ்வாக்கியத்தை வாசித்தவுடன் என் மனதிற்குண்டான ஆறுதல் இவ்வளவென்று சொல்லக்கூடாது. கடவுளைத் துதித்து, புத்தகத்தை வைத்துவிட்டு, அப்புறம் துயரொழிந்திருந்தேன். அச்சமயத்தில் என் துயர் முற்றிலும் நீங்கிற்று.

மேற்சொல்லிய நினைவுகளும், கிலேசமும், சிந்தனைகளும் எனக்குள்ளுண்டாயிருக்கும்பொழுது, ஒருநாள் இது எல்லாம் வியர்த்தமான மனோபாவனையென்றும், எனக்குத் தோன்றிய அடிச்சுவடு நான் ஓடம்விட்டு இறங்கியபொழுது பதிந்த என் காலடிச் சுவடென்றும் எண்ணி, சற்று மனந்தேறினேன். மேலும், அடிச்சுவடு கண்ட விடத்தின்வழியாய் ஓடமேறப்போன நான், ஓடத்தினின்று இறங்கிய பின்னும் அந்த மார்க்கமாய் வந்திருக்கலாமே; அது எனது காலடிச் சுவடேயன்றி மற்றப்படியல்ல. இதுவரையில் நான் நினைத்தது சுத்த அபத்தம். வேதாளங்களையும் ஆவேசங்களையும் பற்றிக் கதை கற்பித்துச் சொல்லத் தொடங்கி, சொல்லும்பொழுதே கேட்பவர்களிலும் பதின்மடங் கதிகமாய்ப் பயப்படுகின்ற மூடனுக்குச் சமானமாய் எனது அடியைக் கண்டு, திகைத்து, துன்புற்று, சீரழிந்தேன் என எண்ணினேன்.

அதன்மேல் நான் சற்று வீரதீரமுடையவனாய் மீண்டும் தீவில் உலாவத் தொடங்கினேன். மூன்று பகலும் இரவும் கோட்டைக்குள் அடங்கியிருந்து அன்னமாகாரமில்லாதது

பற்றி, எனக்குப் பசிக்களை மேலிட்டது. வீட்டுக்குட் சில யவைப்பணிகாரமும் சுத்த ஜலமுமன்றி, மற்றொரு பதார்த்த மில்லை. அன்றியும், சாயரக்ஷைதோறும் நான் பால் கறந்த ஆடுகளை மூன்று நாள்வரையிற் பால் கறக்காது விட்டத னால், மடியிற் பால் கட்டி அவைகள் வேதனைப்பட்டன. சில ஆடுகளுக்குப் பால் வற்றியேபோயிற்று.

தன் நிழலைக் கண்டஞ்சும் நிர்மூடனைப்போல, நான் என் காலடிச் சுவட்டைக் கண்டு ஏங்குவதற்கு நிமித்தமில்லை யென்று என்னைத் தேற்றி, வெளிப்பட்டு, ஆடுகளில் பால் கறக்கும்படி எனது நாட்டு மண்டபத்திற்குப் போனேன். போகும்வழியில் எனக்குப் பின்னும் அச்சமுண்டாயிற்று. எவராயினும் என்னைத் தொடர்ந்து வருவாரென்று அடிக்கடி திரும்பிப் பார்த்தேன். கொண்டுபோன கூடையை வைத்து விட்டு, ஓடித் தப்ப நினைத்தேன். இதைக் கேட்பவர்கள் இந்தத் துரோகியுடைய நெஞ்சே இவனை வருத்தியதனால், இவனுக்கிவ்வளவு துன்பமுண்டாயிற்றென்றும், எளிதில் நீங் காத திகில் சமீபகாலத்தில் இவனுக்குண்டாயிருக்கவேண்டு மென்றும் எண்ணுவார்கள். அது வாஸ்தவந்தான்.

இரண்டு மூன்று நாள்வரையில் நான் அதிசயம் ஒன் றையுங் காணாததனாற், சற்றே சித்தந் தெளிந்து, அஞ்சுவ தற்கு வாஸ்தவமான காரணமில்லையென்றும், எனது மனோ பாவனையே அச்சத்தை வருவித்ததென்றும் நினைத்தேன்; நினைத்தும், கடற்கரைக்குப் போய் அவ்வடிச்சுவட்டின் மேல் எனது பாதத்தை வைத்து, அது எனது அடிச்சுவடோ வென்பதற்குச் சாட்சி காணுமளவும் எனக்குப் பூர்த்தி யான நம்பிக்கை உண்டாகவில்லை. ஆனதனாற், கடற்கரைக் குப் போய் அவ்விடத்தைப் பார்த்தேன். அது நான் ஓடம் விட் டிறங்கியபொழுது உலாவின கரையாகத் தோன்ற வில்லை. அடிச்சுவட்டின்மேல் எனது பாதத்தை வைத்து அளவு பார்த்தேன். அது எனது அடியிலும் இருமடங்கு பெரிதாயிருந்தது. இவ்விருவித ஏதுக்களையும் எண்ணி, எனக்கு முன்னிலும் அதிக திகிலுண்டாயிற்று. என் கண் ணுக்கு ஆகாயம் எங்கும் பைசாசு மயமாயிருந்தது. நளிர்

சுரங் கண்டு வருந்துபவனைப்போல், என் சரீரம் அச்சத் தாற் குளிரோடி விறைத்து நடுங்கிற்று. ஒருவனாவது பல ராவது அக்கரையிலிறங்கினதற்கு ஐயமில்லையென்றும், அல் லது அத்தீவில் மனுஷர் குடியிருக்கிறார்களென்றும், நினைக் காதவேளையில் அவர்கள் என்னை அகப்படுத்திக்கொள்வார் களென்றும் உறுதியாய் நம்பி வீட்டுக்குத் திரும்பிப் போ னேன். இனி வரும் அபாயத்திற்குத் தப்பித்துக்கொள்வ தற்குச் செய்யவேண்டுவது இன்னதென்று நானறியவில்லை.

அச்சத்தாற் பதறுவோர் செய்யும் நிர்ணயங்கள் அற்ப மாவது பயனற்றவைகளென்று யுத்திபுத்தியுடையோர் நகைப் பார்களே! அச்சமுள்ளவர்களுக்கு அறிவு துணை நில்லாது. சத்துருக்கள் ஆட்டுமந்தையைக் கண்டு அதையாயினும், வேறு எந்த இரையையாயினும் அகப்படுத்திப் பட்சிக்கும் பொருட்டு அடுத்தடுத்து இத்தீவிற்கு வாராதபடி, இந்த க்ஷண மே அடைப்பை வெட்டிப் பிரித்து, ஆடுகளைக் காட்டில் துரத்திவிடவேண்டுமென்று முதலில் எண்ணினேன். அப் புறம் விளையும் தானியத்தை அவர்கள் காணக்கூடுமென் றெண்ணி, விளைபயிரை அழித்து, நிலத்தை அகழ்ந்து புரட்ட நினைத்தேன். பின்பு பகைவர் நான் குடியிருக்கு மடையாளத்தைக் கண்டு, வீட்டுக்கு நெருங்கி வந்து, என்னை அகப்படுத்துவார்களென் றெண்ணி, ஆலசியமின்றி எனது பன்னசாலையையும் கூடாரத்தையும் நாசமாக்கக் கருதினேன்.

நான் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த அன்றிரா முழுதும் என்னுள்ளத்திற் குடிகொண்ட சிந்தனைகள் இவைகளே. எனக்குண்டான அச்சம் வர வர அதிகரித்தது. முன் போல் என் எண்ணத்தில் திகிலுண்டாக்கும் விகாரக் காட் சிகள் தோன்றின. அபாயத்தைக் கண்ணுக்கெதிரே காண் பவர்களுக்குண்டாம் அச்சத்திலும், காணாதவர்களுக்கு மிகக் கொடிய அச்சம் உண்டாகும். தீங்கு அனுபவிப்பவர் களுக்குண்டாகும் உபத்திரவத்திலும், தீங்கு வருமென்று கிலேசமுறுவோர் படும் உபத்திரவம் மிகக் கொடியது. இதற்குமுன் எனக்கு ஆபத்து வந்த சமயங்களில் திருவுள்

ளத்தின் செயலால் வருவதெல்லாம் எனக்கு நன்மையாய் முடியுமென்று சிந்தித்து, என் நெஞ்சைத் தேற்றிக்கொண்டு வந்தேனே. இச்சமயத்தில் அவ்விதச் சிந்தனை எனக்குண் டாகவில்லை. பெலிஸ்தியர் தன்மேற் படையெடுத்து வர, கடவுளும் தன்னைக் கைவிட்டாரென்று முறையிட்ட சவு லைப்போலிருந்தேன். எனது ஆபத்தை நினைந்து, என்னை அதற்கு விலக்கிக் காக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்து, அவர் சித்தத்திற்கமைந்து, இவ்வாறு என் நெஞ்சைத் தேற்ற நான் நினைக்கவில்லை. இப்படிச் செய்திருப்பேனானல், அவர் என்னை ஆதரித்து, என் சஞ்சலத்தை நீக்குவார், அல்லது அதைத் தாங்கத்தக்க மனவுறுதியைத் தருவார்.

மேற்சொல்லியவாறு இராமுழுதும் பல நினைவுகளால் என் மனம் நிலையற்றுலைந்ததனால், எனக்குத் தூக்கம் வர வில்லை. காலையில் அயர்ந்து தூங்கினேன். தூக்கம் தெளிந்து எழுந்தபின், எனது அச்சமு மொருவாறு தெளிந்தது. பிற்பாடு நான் பதறாதிருந்து, காரியாகாரியங்களைக் குறித்துத் தீர்க்க யோசனை செய்து, பின்வருமாறு நிச்சயித்தேன்: மிகுந்த இன்பமும் செழுமையும், கண்டத்திற்குச் சமீபமுமான இத்தீவில் மானிடர் சுத்தமாய்ப் போக்கு வரவு செய்வதில்லை யென்று சொல்வது பொருந்தாது. இங்கே நிலைமையாய் எவருங் குடியேறாதிருந்தும், கண்டத்தினின்று மனுஷர் செ லுத்திவரும் ஓடங்கள் இக்கரைக்கு எட்ட வரும்பொழுது, எதிர்காற்று அவைகளை அடித்துக்கொண்டுவந்து இக்கரை சேர்க்கவுங் கூடும்; அல்லது அவர்கள் தாமே வேண்டுமென்று ஓடத்தைக் கரைக்கு நேர்முகமாய்த் திரும்பிச் செலுத்திக் கொண்டு வந்தாலும் வருவார்கள். நான் இவ்விடத்திற்கு வந்து சேர்ந்து பதினைந்து வருஷமாயிற்று. இதற்குமுன் மனுஷரையல்ல, அவர்கள் நிழலையும் இங்கே கண்டதில்லை. மேற்சொல்லிய ஒவ்வாக் காற்று முதலிய காரணங்களால் ஓடம் இக்கரையிற் சேர்ந்திருப்பினும், கரைப்படுவதற்கு இவ் விடம் தமக்கு உபயோகமற்றதென்று, அவர்கள் மீண்டும் ஓடத்தைத் திருப்பிச் செலுத்திக்கொண்டு போயிருப்பார்கள். நிலையற்றுத் திரியும் கடலோடிகள் கருதாவண்ணம் காற்று, அலை முதலிய காரணங்களால் இக்கரையடைந்து இறங்கி,

இராத்தங்கி, மற்றநாட் காலையிற் காற்றும் நீரோட்டமும் வளப்படும் சமயத்தில் ஓடமேறிப் போயிருக்கவுங் கூடும். இப்படி இருக்குமானால், எனக்கு அச்சமுண்டாவது நியாயந்தான். ஆதலால், இனி நான் அவர்கள் கண்ணுக்கெதிர்ப் படாமல், கூடியவரையிற் ஜாக்கிரதையாயிருந்து, ஒதுக்கிடந் தேடிச் சஞ்சரிக்க ஏதும் வகை செய்யவேண்டும்.

மேற்சொல்லியபடி அனுமிதிசெய்து சற்றே பதைப்பற்றிருக்கையில், எனது குகையை விஸ்தாரமாய் அகழ்ந்ததும், குகைக்கோட்டை மலையுடன் பொருந்திய விடத்திற்கு அப்புறம் ஒரு வாசல் வைத்ததும் தகுதியல்லவென்று மிகவும் மனஸ்தாபப்பட்டேன். இதைப் பின்னும் அழுத்திச் சிந்திக்குமளவில். பன்னிரண்டு வருஷத்திற்குமுன் நான் நாட்டிய இரட்டை நிரை விருட்சங்க ளிருக்குமிடத்தில் மண்டலார்த்தவடிவாய் இன்னும் ஒரு கோட்டை.க்கு மதிலெழுப்ப வேண்டுமென்று தீர்மானித்தேன். மேற்சொல்லிய இரு நிரை மரங்கள் அடர்த்தியாய் நாட்டப்பட்டிருந்தன. அவைகளுக்கிடையில் அங்கங்கே சில தூண்கள் நாட்டினால், அவைகளே அதிக அகலமும் அரணிப்புமுள்ள மதிலாகுமென்றெண்ணி, இந்தப்பிரகாரம் செய்தேன்.

ஆகவே, எனது கோட்டைக்கு இரண்டடுக்கு மதில்களிருந்தன. புறமதிலின் இடையில் மரக்கட்டைகளும், பழைய அமார்களும், வேறு பலமுள்ள வஸ்துக்களும் பொதிந்து, அதை அடர்த்தியும் கனமுமுள்ளதாக்கினேன். இம் மதிலில் என் கை நுழையத்தக்க ஏழு துவாரங்களுண்டாக்கினேன். இம்மதிலின் உட்புறத்து அடியிற் குகையினின்று மண்ணகழ்ந்து கொண்டுவந்து போட்டு, காலால் மிதித்து, உரப்பித்து, மதிலைப் பத்தடி கனதியுள்ளதாக்கினேன். மேற்படி ஏழு துவாரங்களினூடே நான் உருவினின்று கொண்டுவந்த ஏழு துப்பாக்கிகளை இரண்டு நிமிஷத்திற்குளெல்லாம் வெடி தீரத்தக்கதாக வளமான தட்டுகள் செய்து இசைத்து வைத்தேன். இம்மதில் செய்து முடிக்கப் பல மாசவரையிற் சென்றது. வருந்தி உழைத்து மதில் வேலையை நிறைவேற்றுமளவும் எனக்கு அச்சந் தெளியவில்லை.

இவ்வேலை முடிந்தபின் எவராவது இத்தீவில் வந்தால், இப்புறமதில் அவர் கண்ணுக் கெதிர்ப்படாவண்ணம் மதிலுக்கு வெளியே நான்கு திக்கிலும் இருபதினாயிரம் நீரலரிக் கொம்புகளை நெருங்க நாட்டினேன். இச்செடி விரைவில் ஓங்கி வளர்ந்து கிளைக்குந் தன்மையுள்ளது. மேலும், சுவருக்கும் அம்மரங்களுக்குமிடையிற் கொஞ்சத்தூரம் தரையை வெட்டவெளியாய் விட்டிருந்தேன். பகைஞர் வரில், அவரை முன்னாடி எளிதிற் காணும்பொருட்டும், மர ஒதுக்கில் அவர் மறையாதிருக்கும்பொருட்டும் இப்படிச் செய்தேன்.

இரண்டு வருஷத்திற்குள் அம்மரங்கள் வளர்ந்து நெருங்கிப் பெருந் தோப்பாயின. ஐந்து ஆறு வருஷகாலத்தில் ஊடறுத்துச் செல்வதற்கரிய அடர்ந்த பெருங்காடு என் வீட்டுக் கெதிரே இருந்தது. அதைக் காண்பவன் அதற்கு இப்புறம் எதுமிருக்குமென் றெண்ணான். மனுஷர் வாசஸ்தானம் இருக்குமென்று சொப்பனத்திலும் நினையான். வெளிப்படுவதற்கும் உட்செல்வதற்கும் நான் வாசல் வைக்கவில்லை. மலையின் அடித்தரையிற் சற்றுப் பதிவாயிருந்த இடம் பார்த்து, அதில் ஒரு ஏணியை நிறுத்திச் சார்த்தினேன். அப்புறம் மலை உள்ளே கவிந்திருந்தது. அவ்விடத்தில் மற்றொரு ஏணி வைத்துச் சார்த்தினேன். இவ்விரண்டு ஏணிகளில் ஏறி நான் வெளிப்படுவதும் உட்செல்லுவதுமாயிருந்தேன். வேண்டும்பொழுதன்றி, மற்ற வேளைகளில் ஏணிகளை அவ்விடத்தினின்று பெயர்த்து, தரையில் வைத்திருந்தேன். எவனாவது உட்செல்லத் துணிவானாகில், அவன் உருண்டு புரண்டு காயப்பட்டு வருந்துவானென்பதற்குச் சந்தேகமில்லை. ஒருபடி அபாயமின்றி உட்செல்லினும், அது எனது புறமதிலுக்கு வெளிப்பக்கந்தானே; பயப்படுதற்கு நிமித்தம் இல்லை.

சத்துரு பயமின்றி க்ஷேமமாயிருக்கும்பொருட்டு, எனது அறிவுக்குத் தோன்றிய உபாயங்களனைத்தும் செய்தேன். அச்சமுற்ற எனது மனோபாவனைகளை வாஸ்தவமாய்க் கொண்டு, நான் செய்த எத்தனங்களனைத்தும் நியாயமாய்ச் செய்யத் தக்கவைகளேயென்று நாளடைவில் நடந்த சங்கதிகளால் தோன்றும்.

இவ்வேலை நடந்தேறியபொழுது, நான் எனது இதரமான அலுவல்களைக்குறித்து அஜாக்கிரதையாயிருக்கவில்லை. ஆட்டுமெந்தையைக்குறித்து நான் மிகவும் சிந்தனையாயிருந்தேன். வெடிமருந்து ரவைச் செலவின்றி ஒன்றுவிட்டு ஒருநாள் எனக்கு அவைகளால் இஷ்டமான அளவிற்கு மாமிசம் கிடைத்தது. முன்போலக் காட்டாடு சுடுவதற்கு நான் வெயிலில் திரிந்து இளைப்புற நிமித்தமில்லையே. ஆதலால், எனக்கு இவ்வளவு அனுகூலமான அவ்வாடுகளை உபேட்சித்துப் போக்கடிப்பதற்கும், பிறகு வேறு காட்டாடுகளைப் பிடித்து வசப்படுத்துவதற்கும் நான் விரும்பவில்லை.

இதன்பொருட்டு வெகுநேரம் மனம் பதறுதிருந்து சிந்தனை செய்தபின், இவ்வாடுகளை இடையூறின்றிக் காக்கும் வகை இரண்டு எனது யுத்திக்குத் தோன்றின. வசதியான ஓரிடத்தில் நிலவறை அகழ்ந்து, ஆடுகளை இராத்திரிகாலத்தில் அவ்வறைக்குள் விட்டு அடைப்பது ஒரு வகை. ஒதுக்கிடம் பார்த்து ஒன்றுக்கொன்று தூரமாய் இரண்டு மூன்று அடைப்புகளுண்டாக்கி, ஒவ்வொரு அடைப்பில் அதமம் ஆறு ஆட்டுக்குட்டிகளை விட்டு வளர்ப்பது மற்றொரு வகை. இப்படிச் செய்தால், பழைய அடைப்புக்குட் சஞ்சரிக்கும் பெருமந்தைக்கு ஏதும் இடையூறுவரினும், இவ்விளங் குட்டிகள் காலக்கிரமத்தில் எனக்கு எவ்வளவும் வருத்தமின்றி விர்த்தியாகுமே. இந்த யுத்திப்பிரகாரம் செய்வதற்கு நாட்படும்; மிகுந்த சிரமப்படவேண்டும்; ஆனாலும், சிரமத்தைப் பொருள் செய்யாமல் இப்படிச் செய்வதே புத்தியென் றெண்ணினேன்.

வளமான ஒதுக்கிடம் காணச் சிலநாட் சென்றது. ஒரு முறை நான் தீவின் கீழ்ப்பக்கத்தினின்று வீட்டுக்குத் திரும்பிவருகிற மார்க்கத்தில் நெருங்கிய காட்டிற் சேர்ந்து, வழி தெரியாமல் மயங்கி நின்றதாக முன்பு சொன்னேனே. அக்காட்டின் மத்தியிற் செழுமையான தரை மூன்று ஏக்கர்வரையில் வெளியாயிருந்தது. அதன் நான்கெல்லைகளிலும் காடு செறிந்திருந்ததனால், அதுவே அடைப்புக்குச் சமானமாயிற்று. முந்தின அடைப்புகளை உண்டாக்குதற்கு உழைத்

ததுபோல், இதில் நான் உழைக்க வேண்டுவதில்லை. ஆகவே, இதுவே என் கருத்துக்கேற்ற இடமென்று குறித்தேன்.

ஆலசியமின்றி அந்த க்ஷணமே அவ்விடத்தைக் கெட்டியாய் வளைத்து அடைக்கத் தொடங்கி, ஒரு மாசத்திற்குள் வேலையை முடித்து, காட்டுத்தன்மை நீங்கி எனக்கு வசப்பட்ட பத்து மறியாடுகளையும், இரண்டு கடாக்களையும் அதற்குள் விட்டு, பின்னும் வேலியை உரப்பித்து, முன் சொல்லிய அடைப்பின் வேலிக்குச் சமானமாக்கினேன். பாபரப்பின்றிப் பொறுத்திருந்து இப்படி நேர்த்தி செய்வதற்குச் சற்று அதிக காலஞ்சென்றது.

## 12. அத்தியாயம்.

கடலில் ஓடம் ஒன்றைக் கண்டது. கரையில் நரமாமிசபட்சணிகள் தின்றுவிட்ட உச்சிட்டங்களைக் கண்டது. அதைக்குறித்துத் திகிலடைந்தது. முன்னிலும் அதிக ஆயுத வர்க்கங்களைத் தரித்தது. ஒரு வெள்ளாட்டைக் கண்டு கெடிகலங்கினது. நூதன குகையொன்றைக் கண்டு, அதை எனக்கு வெடிமருந்துக் களஞ்சியமாய்க் கொண்டது. மிலேச்சரைக் குறித்துண்டான திகில் ஒருவாறு தணிந்தது.

இதுவரையில் இத்தீவில் நான் மனுக்குலத்தில் எவரையுங் கண்டதில்லை; ஒரு மனுஷனுடைய வெறும் காலடிச் சுவட்டைக் கண்டு அஞ்சியதனால், இவ்வளவு பிரயாசப்பட்டுழைக்கும்படி நேரிட்டது. இரண்டு வருஷகாலமாய் இந்தக் கிலேசம் என்னைவிட்டு நீங்காதிருந்ததுபற்றி, எனக்கு முன்னிருந்த ஆறுதலில்லை. இரவும் பகலும் இடையின்றி மனுஷருக்கு அஞ்சித் திகைத்திருக்கும் எனக்கு ஆறுதலுண்டாவது எப்படி? என் மனம் கிலேசத்தால் மயங்கித் தடுமாறவே, தெய்வபக்திக்குரிய சிந்தனைகள் ஒழிந்துபோயின. நரமாமிசபட்சணிகளாகிய மிலேச்சர் என்னை அகப்படுத்திக் கொள்வார்களென் றெண்ணி ஏக்கமுற்றுத் தியங்கிய என் மனம் பரசிந்தனைகளில் பிரவர்த்திக்கவில்லை. அச்சிந்தனைகளிற் செல்வதற்கு முன்பு சாதாரணமாய் எனக்குண்டா

யிருந்த அடக்கமும் அமைதியும் இல்லையே. எப்பொழுதாயினும் கடவுளைப் பிரார்த்திக்கையில், எனதுள்ளம் நான்கு திக்கிலும் அபாயத்தைக் கண்டு துன்புற்று வருந்தும் அவஸ்தையிலிருந்தது. பொழுது விடியுமுன் வனவேடர் என்னைக் கொன்று பட்சிப்பார்களென்று இராத்திரிதோறு மெண்ணி, துயிலொழிந்து பரிதபித்தேன். மனக்கலக்கமின்றி, தேவனருளிய நல்வரங்களை நன்குமதித்து, அவரில் அன்புகூர்ந்து, ஆசை வைத்திருக்கும்பொழுதன்றி, ஏங்கித் தடுமாறும்பொழுது பிரார்த்தனை செய்வதற்கிசையாது. மாணத்தறுவாயிலிருக்கும் வியாதிஸ்தன் தன் பாவத்திற்காக மெய்மனஸ்தாபப்படுவது கூடாதே. அதுபோல, தனக்கு ஆபத்து வந்ததென்று திகில் பிடித்திருப்பவன் ஆறித் தேறி, பக்தியாய்க் கடவுளைப் பிரார்த்திப்பதும் கூடாது. வியாதி உடலை வருத்தும்; சஞ்சலம் உள்ளத்தை வருத்தும். வியாதிஸ்தருக்குள்ள சரீரபலக்ஷயத்திலும், சஞ்சலப்படுவோர்க்குள்ள மனோபலக்ஷயம் அதிகம். கடவுளைப் பிரார்த்திப்பது மனதின் கிருத்தியம். அங்க சேஷ்டையால் அமையாது. இதற்கெல்லாம் எனது அனுபவமே சாட்சி.

இனி விட்ட குறையினின்று என் சரித்திர வரலாறுகளைச் சொல்லுகிறேன். எனது ஆடுகளிற் சிலவற்றை மேற்சொல்லியவாறு அபாயமற்ற ஒதுக்கிடத்தி லடைத்தபின், பின்னும் ஒரு வளமான அடைக்கல ஸ்தானந் தேடி, தீவில் நெடுந்தூரம் உலாவிப் பார்த்தேன். போகப் போகத் தீவின் மேற்குக்கரைக்கு நேர்முகமாய் நான் இதற்குமுன் ஒருபொழுதும் செல்லாத இடத்திற் சேர்ந்து, நெடுங்கடலை எறிட்டுப் பார்த்தேன். எட்டாக்கையில் ஓடமொன்று நிற்பதுபோல் என் கண்ணுக்குத் தோன்றிற்று. அது ஓடமோ, அல்லவோவென்று திட்டமாய் எனக்குத் தெரியவில்லை. நான் முன்பு கடலோடிகள் பெட்டியிற் கண்டு எடுத்துக் கொண்டுவந்த இரண்டொரு தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் வீட்டிலிருந்தன. அவைகளை இங்கே கொண்டுவரவில்லை; ஆனதுபற்றி, குன்றினின்று இறங்கினேன். இறங்க இறங்க, ஓடம் என் கண்ணுக்கு மறைந்தது. பின்பு நான் அதைக்குறித்து நினைக்கவில்லை. இனி வெளிப்படும்பொழுதெல்லாம் எனது அங்கி

யுறையில் தூரதிருஷ்டிக் கண்ணாடியொன்று ஆவசியகம் வைத்திருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்தேன். குன்றை விட் டிறங்கி நான் முன் ஒருபொழுதும் போகாத தீவின் அந்தத்திற் சேர்ந்தபின், பின் வருமாறு சிந்தித்தேன். ஒரு மனுஷனுடைய காலடிச் சுவட்டை இத்தீவிற் கண்டதைப் பற்றி எனக்கு ஆச்சரியமுண்டானதற்கு நிமித்தமில்லை. இத்தீவில் மிலேச்சர் எப்பொழுதும் வாராதபக்கத்தில் என்னைக் கொண்டுவந்து சேர்த்தது தேவன் எனக்குச் செய்த உபகாரங்களுள் விசேஷ உபகாரம். அக்கண்டத்தினின்று பிரயாணப்படும் ஓடங்கள் நெடுங்கடலில் எட்டாக்கையிற் சேரும் பொழுது, ஒரு துறையி லடைவதற்கு அடிக்கடி இக்கரைக்கு நேர்முகமாய்த் திரும்பி வருவதுண்டு. மேலும், மிலேச்சர்கள் பெரும்பாலும் ஓடமேறிச் சமுத்திரத்திற் சண்டை செய்வது வழக்கம். வெற்றி சிறந்த பட்சத்தார் தாம் சிறைபிடித்தவர்களை இக்கரைக்குக் கொண்டுவந்து நரமாமிசத்தைப் பட்சிப்பது அந்தப் புலையருக்கு வழக்கமாதலால், அடித்துக் கொன்று பட்சித்துப் போவார்கள். இவ்வரலாறுகளைச் சங்கதித் தொடர்ச்சி கண்டு சொல்வேன்.

மேற்சொல்லியபடி நான் ஏறி இறங்கிய குன்றின் அடி இத்தீவின் தென்மேற்குக் கரை. அந்தக் கரையிற் சேர்ந்த பொழுது, கபாலம், கை, கால், மானிடதேகத்து மற்ற உறுப்புகளின் எலும்புகள் கரையில் எங்கும் சிதறுண்டிருந்ததையும், நெருப்பு மூட்டி எரித்த ஓரிடத்தையும், கத்தி கட்டிச் சேவலகளைச் [illegible]க்குவிடும களரியைப்போல விருத்தாகாரமாய் நிலம் ஓரிடத்தில் அகழப்பட்டிருந்ததையுங் கண்டு, திகைத்து நடுங்கிப் பதறினேன். எனக்குண்டான திகிலைச் சொல்வதற்கு நா வெழவில்லை. மேற்சொல்லிய வட்டக்குழியில் அந்தப் புல்லர்கள் உட்கார்ந்து, தாம் கொன்ற மனுஷருடைய மாமிசத்தைத் தின்றார்களென்று உத்தேசித்தேன்.

இவைகளைக் கண்டு மிகுந்த ஆச்சரிய பரவசமடைந்ததனால், எனக்கு நேரிடும் அபாயத்தைப்பற்றி யுண்டான அச்சத்தை நெடுநேரமட்டும் மறந்துபோனேன். மனுஷர் இவ்வாறு சீர்கெட்டு, துஷ்ட விலங்குகளைப்பார்க்கிலும் இழிந்து, பரம துஷ்டராகி, இத்தன்மையான கொடிய கிருத்தியங்

களைச் செய்வார்களாவென்று எண்ண, எனக்கு ஆச்சரியம் மீறி, முன்னுள்ள அச்சம் அதற்குள் அமிழ்ந்தி மறைந்தது. நரமாமிச பட்சணிகளைக்குறித்து நான் பெரும்பாலுங் கேட்டிருந்தும், அவர்கள் கொடிய கிருத்தியங்களின் அடையாளங்களை இதற்குமுன் கண்டதில்லையே. எனக்குண்டான ஆச்சரியத்தைத் தொடர்ச்சியாய்ச் சொல்வதற்கு அவகாசமில்லை; சுருக்கத்தில் முடிக்கிறேன். அந்தப் பயங்கரமான காட்சியைப் பார்த்துக்கொண்டு நிற்க என் கண் சகிக்கவில்லை. குடல் புரண்டு வாய் குமட்டித்தது. மயங்கி விழுதற்கு எத்தனமாயிருக்கையில், நன்ருய் வாந்தி செய்தேன். வாந்தி செய்தபின் எனக்குண்டான வருத்தம் சற்றுத் தீர்ந்தது. அப்புறம் அங்கே நிற்கச் சகிக்காததனுல், மீண்டும் குன்றில் விரைந்தேறி வீட்டுக்குத் திரும்பினேன்.

அந்தக் கரை மறையுந்தூரத்திற் சென்றபின் சற்றுநேரம் திகைத்து நின்று, பின்னுந் தெளிந்து, வானத்தை அண்ணுந்து பார்த்து, எனதுள்ளம் கரைந்துருக, கண்ணீர் ஆருய்ப்பெருகக் கடவுளைப் பிரார்த்தித்தேன். இத்தன்மையான கொடிய நிஷ்டூரங்களிற் பயின்ற புலையர் சஞ்சரிக்குந் தேசத்திற் பிறவாமல், சன்மார்க்கர் சஞ்சரிக்கும் தேசத்திற் பிறந்து வளரும்படி எனக்கு அனுக்கிரகம் செய்தவர் அவர்; இத்தீவில் எனது தற்கால ஸ்திதி மிகுந்த நிர்ப்பந்தமுள்ளதாயிருந்தும், இவ்விடத்திலும் பலவித சுகானுபவங்களை என்மீதிரங்கித் தருபவர் அவர்; நான் படும் துன்பத்திலும் அனுபவிக்கும் சுகம் அதிகம்; முக்கியமாய் இந்தக் கஷ்டதசையி லிருக்கும் பொழுதும் தம்மை அறிந்து, சித்தம் தெளிந்து, மனந்தேறி, தமது ஆசீர்வாதம் பின்னும் எனக்குண்டாமென்று நம்பித் துயரொழிந்திருக்கச் செய்பவரும் அவரே. இவ்வாறு உள்ளந் தேறியிருப்பது பெரும் பாக்கியம். நான் இதற்குமுன் பட்ட துன்பங்கள், இனிமேல் படும் துன்பங்களனைத்தும் இப்பாக்கியத்துடன் ஒத்துப்பார்க்குமிடத்தில், அற்பமாகத் தோன்றும். இந்த நன்றிகளனைத்தையும் எண்ணி, கடவுளுக்குத் துதி செலுத்தினேன்.

கடவுள் செய்த நன்றிகளை உணர்ந்து, அவரைத் துதிக்கும் அபேட்சையுடையவனுய் எனது துருக்கத்திற்குப் போய்ச்

சேர்ந்து, இனி அச்சமில்லையென்று ஆறித் தேறியிருந்தேன். நான் கண்ட காட்சிகளைக் கருத்தாய்ச் சிந்திக்குமிடத்தில், எனக்கு அபாயமுண்டாமென்று அஞ்சுவதற்கு நிமித்தமேது? மேற்சொல்லிய துஷ்டர்கள் இங்கே தமக்கேதும் வேண்டு மென்றாயினும், வேண்டும் பொருள் இருக்குமென்றாயினும், ஏதாவது அகப்படுமென்றாயினும் இத்தீவிற்கு வந்தவர்களல்ல. அவர்கள் காடடர்ந்த கரையிற் பெரும்பாலும் இறங்கியிருப் பார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை. அவ்விடத்தில் அவர் களுக்குதவும் பொருளொன்றையும் அவர்கள் கண்டிரார் கள். நான் இவ்விடத்திற் சேர்ந்து பதினெட்டு வருஷம் சென்றும், இதற்குமுன் மனுஷர் அடிச்சுவட்டை ஒரு பொழுதுங் கண்டதில்லை. வேணுமென்று அவர்களுக்கெதிரே போகாதிருப்பேனாகில், இன்னும் பதினெட்டு வருஷம் இங் கிருந்தாலும் அவர்கள் என்னைக் காண்பதரிது. துஷ்டரல் லாத மனுஷரைக் கண்டு, அவர்களுடன் அறிமுகமானால், எனக்கனுகூலந்தான். நரமாமிச பட்சணிகளாகிய கொடிய மிலேச்சர் கண்ணுக்கெதிரே நான் வலியப் போகவேண்டுவ தென்ன? கூடியவரையில் அவர்களுக்கு ஒளித்திருப்பதல் லவோ புத்தி?

அக்கொடிய வனவேடரையும், விலங்குகளைப்போல் இரக் கமின்றி அவர்கள் ஒருவரை ஒருவர் கொன்று பட்சிக்கும் துர்வழக்கத்தையும் நினைக்க நினைக்க, எனக்கு அவர்களைக் குறித்து மிகுந்த வெறுப்புண்டாயிற்று. இரண்டு வருஷவ ரையில் நான் இதே சிந்தனையாயிருந்து துக்கித்தேன். எனது துருக்கத்தையும், பன்னசாலையாகிய நாட்டுவாசஸ்தானத்தை யும், காட்டுக்குள்ளிருக்கும் அடைப்பையும் விட்டு வேறு இடங்களுக்கு வெளிப்படவில்லை. ஆடுகளை அடைக்கும்பொ ழுதன்றி, நான் அவ்வடைப்புக்குப் போனதேயில்லை. அடிக் கடி வெளிப்பட்டால், ஒருவேளை அந்தப் பிசாசுகள் எதிர்ப் படுமென்று அச்சமுற்றிருந்தேன். கொடியராகிய அம்மி லேச்சருக்கும் பிசாசுக்கும் பேதமில்லை. இந்த இரண்டு வருஷகாலவரையில் எனது ஓடத்தைப் பார்க்கப் போகவு மில்லை. புதிதாய் ஒன்று செய்வது உத்தமமென்றெண்ணி னேன். பழைய ஓடத்தைத் தீவைச் சுற்றிச் செலுத்திக்

கொண்டுவரச் சம்பவித்தால், கடலில் ஒருவேளை மிலேச்சர் என்னைக் கண்டுபிடித்து, கொன்று பட்சிப்பார்களே.

மிலேச்சர் ஒருபொழுதும் என்னைக் காணமாட்டார்களென் றெண்ணியிருந்ததனால், நாளாவர்த்தியில் அவர்களைக் குறித்துஎனக்குண்டானகிலேசம்நீங்க,முன்போலச்சலிப்பற்றிருந்தேன். ஒருவேளை கண்டாலும் காண்பார்களேயென்று முன்னிலும் அதிக ஜாக்கிரதையாயிருந்தேன். வெடிச்சத்தங் கேட்பார்களென்று நான் துப்பாக்கிப் பிரயோகத்தை விட்டு விட்டேன். ஆடுகளைப் பிடித்து வசப்படுத்தி வளர்க்கும்படி கடவுள் எனக்குச் சமயத்தில் புத்தி வருவித்தது அதிசய நன்மையென்று இப்பொழுதே எனக்குத் திருட்டாந்தப்பட்டது. ஆகாரத்திற்கு வேண்டும் மாமிசம் எளிதில் அகப்பட்டதனால், துப்பாக்கிகொண்டு காட்டில் உலாவிச் சுடுவதற்கு நிமித்தமில்லையே. அன்றியும், இரண்டொருமுறை படுகுழி வெட்டி, கண்ணிவைத்து, ஆடு பிடித்தேன். ஆகவே, இரண்டு வருஷவரையில் நான் துப்பாக்கிகொண்டு வெளிப்பட்டதொழிய, மருந்து ரவை கெட்டித்து வெடி தீர்க்கவேயில்லை. வெளிப்படும்பொழுதெல்லாம் ஆட்டுத்தோல் இடைக்கச்சில், உருவினின்று கொண்டுவந்த கைத்துப்பாக்கிகள் மூன்றில் இரண்டும், பளிங்குபோலத் துலங்கத் தீட்டிய பெரும் சமுதாடு ஒன்றும் இசைத்துக் கட்டிக்கொண்டு போனேன். சமுதாட்டுக்கு உறை இல்லை. இவ்வித யுத்தசன்னத்தனாய் வெளிப்படும் என்னை எவனாவது கண்டாற் கலங்கித் திகைத்து விழுவதன்றி, எதிர்க்கமாட்டுவானா?

நான் இப்படி ஜாக்கிரதை செய்து, முன்போல் ஆறித்தேறி நாட்கழித்தேன். இவை எல்லாவற்றையும் நினைத்து, எப்பொழுதும் நிர்ப்பந்த ஸ்திதியிலிருந்து வருந்துபவர்களிலும் எனது நிலைமை உசிதமென்றும், கடவுள் எனக்கு இதனிலுங் கொடிய ஆபத்துக்களை வருவிக்க வல்லவராயிருந்தும், என்மீதிரங்கி இவ்விதச் சுகசீரில் என்னை வைத்தது எனது பாக்கியந்தானென்றுங் கண்டேன். அன்றியும், தம்மிலும் அதிக செல்வர் அனுபவிக்கும் சுகத்தையும், தாம் அனுபவிக்கும் அற்ப துக்கத்தையும் நினைத்து, தமக்கு அச்சுகம் இல்

லேயேயென்று துன்பப்பட்டு, குறை கூறும் மனுஷர் தம்மிலும் ஈனஸ்திதியுடையோர் படும் துயரத்தை எண்ணுவார்களானல், அவர்கள் பெருத பற்பல சுகங்களைத் தாம் பெற்று அனுபவிப்பதைப்பற்றி மகிழ்கூர்ந்து,சகடவுளைப் போற்றுவார்களே என்பதாக என்னுள்ளத்திற் சிந்தனை பிறந்தது.

எனது தற்கால ஸ்திதியில் எனக்கு ஆவசியகமாய் என்னென்ன வேண்டுமோ, பெரும்பாலும் அவைகள் இருந்தன. அன்றியும், மேற்சொல்லிய துஷ்டராகிய மிலேச்சருக்கஞ்சி, அவர்கள் வசப்படாமற் தப்பித்துக்கொள்ளும்படி காதலித்துக் கருத்துக்கொண்டிருந்ததனால், எனது சுகானுபவங்களுக்குரிய சாதனங்களை உண்டாக்கும் யுத்திக்கூர்மை மழுங்கியது. யவையை ஊறவைத்து, அதில் பீர் என்னும் சாராயமிறக்கும்படி யுத்தி செய்யவேண்டுமென்று நான் இதற்குமுன் எண்ணியிருந்த யோசனையை விட்டுவிட்டேன். அது வியர்த்தமான நினைவு. அவ்வெண்ணத்தைச் சாதிக்கக் கருதியது மௌட்டியந்தான். பீர் சாராயமிறக்கினல், அதை வைத்திருப்பதற்குப் பீப்பாக்கள் வேண்டும். பீப்பாச் செய்வதற்குப் பல நாளல்ல, வாரமல்ல, பல மாசவரையிற் பிரயத்தனம் செய்தும், அது செய்யும் வகை எனது யுத்திக்குள் அமையவில்லையென்று இதற்குமுன் ஓரிடத்திற் சொன்னேனே. மேலும், வடிக்கும் சாராயத்தைப் பழுதின்றிக் காக்கும்படி அதிலிடுவதற்கு ஹாப் என்னும் பூண்டு வேண்டும். அதை நொதிக்கப்பண்ணுவதற்குப் பிளா இடவேண்டும். காய்ச்சுவதற்குக் கொப்பரை வேண்டும். இவை ஒன்றுக்கும் வழியில்லை. பீர் சாராயம் செய்வதைப்பற்றி எனக்கு எண்ணமுண்டாயிருக்கையில், மிலேச்சர் பயம் அதற்குப் பிரதிபந்தமாய் நேரிட்டது. அல்லாவிடில், நான் ஏதும் வகைசெய்து சாராயமிறக்கி வைத்திருக்கவுங் கூடும். நினைத்த கருமத்தை எவ்விதத்திலும் நிறைவேற்றுதிருப்பது எனது சுபாவமல்லவே.

இப்பொழுது எனது யுத்தி ஒரு நூதன துறையில் இறங்கியது. ஜீவதயை சிறிதுமின்றி எந்த மனுஷனையாவது பிடித்துக்கொண்டு, இக்கரைக்கு வந்து, கொன்று பட்சிக்க எத்தனப்

படும் கோர கர்மிகளாகிய மிலேச்சரைக் கொன்று, அம்மனுஷனைத் தப்புவிக்கும் வகை என்னவென்று சிந்திக்கத் தொடங்கினேன். இராப்பகல் எனக்கு இது ஒன்று தவிர, வேறு விசாரமில்லை. அவர்களை நாசம் செய்வதற்காயினும், அது முடியாதாகில், இனி இக்கரைக்கு வராதபடி மிரட்டித் துரத்துவதற்காயினும் நான் நினைத்த உபாயங்களையும் சாதனங்களையும் ஒவ்வொன்ருய் எழுதில், அவை இப்புத்தகத்துள் அமையா. இதனிலும் பெரிய புத்தகம் எழுதவேண்டும். அந்த உபாயங்களனைத்தும் பயன்படாமற்போயின. நானும் ஆளுடன் ஆளாய் அவர்களுக்குட் போயிருந்தாலன்றி, நான் நினைத்த உபாயங்கள் பலிப்பதரிது. வில்வித்தையிற் கை தேர்ந்த மிலேச்சர் இருபது முப்பது பெயர் அம்பும் வில்லும் வைத்திருக்கும்பொழுது, நான் ஒருவன் அவர்களுக்குட் போய், அவர்களை மேற்கொள்ளலாகுமா? துப்பாக்கிப் பிரயோகத்தில் எனக்குள்ள சாமர்த்தியம் அஸ்திரப் பிரயோகத்தில் அவர்களுக்குமுண்டே. அவர்கள் ஒரு இலக்கைக் குறித்து, அம்பு எய்வார்களாளுல், அது தப்பாமல் அவ்விலக்கைத் தொளைக்கும்.

அவர்கள் நெருப்பு மூட்டி எரிக்குமிடத்தில் ஒரு குழி அகழ்ந்து, அதற்குள் ஐந்து ஆறு ருத்தல் வெடிமருந்து போட்டுக் கெட்டித்து மறைத்துவைத்தால், அவர்கள் நெருப்பு மூட்டும்பொழுது, மருந்துபற்றிச் சீறி வெடித்து, பக்கத்திலுள்ள யாவரையும் கொல்லுமென்று சிலவேளை யுத்தி செய்தேன். சிந்திக்குமளவில் அந்த யுத்தி பொருந்தவில்லை. வரவரச் செலவழிந்து, இப்பொழுது என்னிடத்தில் ஒரு பீப்பா மருந்துமாத்திர மிருந்தது. அதில் ஐந்து ஆறு ருத்தலை இவ் விதத்தில் வியர்த்தமாய் இறைப்பதற்கு என் மனமிசையவில்லை. அன்றியும் புதைத்துவைக்கும் மருந்து நெருப்புப் பற்றி, அவர்கள் கிட்ட நிற்கும்பொழுது வெடிக்குமென்பதற்கு நிசமென்ன? ஒருவேளை அவர்கள் சற்று எட்ட நிற்கும்பொழுது மருந்து பற்றிச் சீறி வெடிக்க, அவர்கள் திடுக்கிட்டு விலகித் தப்பித்துக்கொள்ளினுங் கொள்வார்களே. அதனிமித்தம் இனி இத்தீவிற்கு வாராமல் விடுவார்களா? இல்லை இல்லை. இந்த உபாயம் ஏற்காதென்று தள்ளிவிட்டு, பின்

னும் ஒரு யுத்தி நினைத்தேன். அது இது: எனது மூன்று துப்பாக்கிகளிலும் இரண்டு இரண்டுதரம் வெடி தீரும்படி குண்டு மருந்து கெட்டித்து, புதர் ஒதுக்கிற் பதிவிருந்து, மிலேச்சர்கள் துஷ்ட கிருத்தியம் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் வெடி தீர்த்தால், ஒவ்வொரு வெடிக்கு இரண்டு மூன்று பெயராவது விழுவார்களென்பதற்கு ஐயமில்லை. அதன்மேல் எனது மூன்று கைத்துப்பாக்கிகளையும் கத்தியையுங்கொண்டு விரைந்தோடி, அவர்களுக்குட் சேர்ந்தால், இருபது பெயர் இருந்தாலும், அனைவரையும் தப்பவொட்டாமற் சங்கரிப்பேன் என்பதாக எனக்குள்ளே பிறந்த இந்த யுத்தி ஏற்ற யுத்தியென்று தோன்றியது. இராப்பகல் இதுவே சிந்தனையாயிருந்தேன். சிலவேளை நான் அவர்கள்மேற் குண்டு பிரயோகிக்க எத்தனப்படுவதாகச் சொப்பனங் கண்டதுமுண்டு.

இந்த உபாயத்தை என் மனமழுந்த நினைத்துக்கொண்டிருந்ததனால், வளமான ஒதுக்கிடங் கண்டு, பதிவிருந்து, மிலேச்சர் வருஞ்சமயம் பார்த்திருக்கும்படி பலநாள்வரையில் உலாவித் திரிந்தேன். முன்பு மனுஷர் சரீர உறுப்புகளைக் கண்ட விடத்திற்கு அடிக்கடி போனேன். நாளடைவில் அவ்விடம் எனக்கு நன்றாய் வழக்கப்பட்டது. அந்தக் கொலைஞர்பேரில் க்ஷாத்திரங்கொண்டு, இருபது முப்பது பெயரை என் கத்திக்கிரை கொடுக்கவேண்டுமென்று பிரதிக்கினை செய்திருந்தும், அவ்விடத்திற்குப் போய் ஜீவதாட்சணியமில்லாத விலங்குகளோடொத்த அந்த ராக்ஷதர்கள் ஒருவரை ஒருவர் கொன்று தின்றுவிட்ட உடற்குறைகளைக் கண்டமாத்திரத்தில் எனதுள்ளம் பதைத்து அச்சம் மேலிட, க்ஷாத்திரத்தை மறந்தேன்.

பலநாள்வரையில் தேடித் திரிந்து, ஒருநாள் குன்றின் சார்பில் வளமான விடங் கண்டேன். அவ்விடத்திற் பதிவிருந்தால், ஓடம் வருவது தெரியும். வருஞ்சமயத்தில் மிலேச்சர் கரைப்படுமுன் ஒளித்துப் பதுங்கி விரைந்தோடி, அடர்ந்த காட்டில் நுழைந்து, ஒருவன் ஒளித்திருக்கப் போந்த விஸ்தாரமுள்ளதாய் அங்கிருக்கும் ஒரு பள்ளத்தில் இறங்கிப் பதுங்கியிருந்து, அவர்கள் செய்யும் கொலைத்தொழிலைக் கருத்

தாய்க் கண்டு, அவர்கள் நெருங்கி யிருக்கும்பொழுது சிரசுகளை இலக்காய்க் குறித்து வெடி தீர்ப்பேனனால், தவருமற் குண்டுகள் சிரசைத் தொளைக்கும். எல்லாரும் விழாதிருந்தாலும், முதல் வெடிக்கு மூன்று நாலுபெயராவது காயப்படுவார்கள்.

இவ்விடத்திலேயே எனது க்ஷாத்திரத்தைச் சாதிக்கவேண்டுமென்று நிர்ணயித்து, இரண்டு பெருந் துப்பாக்கிகளிலும், ஒரு குருவிக் குழாய்த் துப்பாக்கியிலும் மருந்து குண்டு கெட்டித்து எத்தனஞ்செய்தேன். பெருந் துப்பாக்கிகளில் அண்டாகாரமான குண்டு இவ்விரண்டும், கைத்துப்பாக்கிக் குண்டினளவான சிறிய குண்டு ஐவ்வைந்தும், குருவிக் குழாய்த் துப்பாக்கியில் ஒரு கை நிறைந்த பெரிய ரவையுங் கெட்டித்தேன். கைத்துப்பாக்கி ஒவ்வொன்றிலும் நந்நாலு குண்டு கெட்டித்தேன். மூன்று வெடி தீர்க்கப் போதுமான குண்டு, மருந்து, ரவை எடுத்துக்கொண்டு பிரயாணம் போவதற்கு எத்தனித்தேன்.

இந்தப்பிரகாரம் விவரணமாய் நான் குறிப்பித்த உபாயம் வாஸ்தவமாய் நிறைவேறுமுன் எனது மனோபாவனையிற் பலிதமாயிற்று. காலைதோறும் எனது துருக்கத்தினின்று வெளிப்பட்டு, குன்றின் சிகரத்திலேறி, கடலில் ஓடம் செல்வது, தீவிற்கு நெருங்கி வருவது, அதற்கு எதிரே எட்ட நிற்பது தெரிகிறதோவென்று பார்த்துக்கொண்டுவந்தேன். துருக்கத்திற்கும் மலைச்சிகரத்திற்கும் தூரம் மூன்று மூன்றரை மைல். இரண்டு மூன்று மாசவரையிற் பிரதிதினமும் காலையில் அவ்விடத்திற்குப் போய், கரையிலாவது, அதன் சமீபத்திலாவது கடலில் வெறுங்கண்ணுக்கு எட்டும் தூரத்திலாவது, தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியாற் கண்ணுக்கு எட்டுந்தூரத்திலாவது ஒரு உருவையும் காணமல் வீட்டுக்குத் திரும்பி வந்தேன். இவ்வாறு இருவிழியும் கம்பி பூக்கப் பார்த்துக் கொண்டிருந்து, ஏதும் காணமல் திரும்பி வருவது எனக்குக் கஷ்டமாயிருந்தது.

மிலேச்சர் ஓடம் வருவது வாராததைப் பார்க்கும்படி கரையடுத்த குன்றுக்குப் பிரதிதினமும் நான் போய்க்கொண்டி

ருந்த காலவரையில் எனது அபிப்பிராயம் சிறிதாயினும் இளக்கவில்லை. அம்மிலேச்சர் சுபாவத்திற்கு விரோதமாய் மனுஷரைக் கொன்று தின்னுங் கொடிய வழக்கத்தைப்பற்றி எனக்கு ஆரம்பத்திலுண்டான அச்சத்தையும் வெறுப்பையும் எண்ணி, இருபது பெயரானாலும் சரி, முப்பது பெயரானாலும் சரி, அந்த நிர்வாணிகளாகிய ராட்சதர்களைத் தாட்சணியமின்றிச் சங்கரிக்கவேண்டுமென்று நான் செய்த பிரதிக்கினை என் மனதிற்குச் சமாதானமாகவேயிருந்தது. அவர்களைக் கொல்வது தர்மமோ அதர்மமோவென்று நான் சீர்தூக்கிப் பார்க்கவில்லை. இப்பிரபஞ்சத்தைக் கிரமமாய் நடத்தி வரும் சர்வஞ்ஞராகிய கடவுள் அவர்களுக்கு நிர்த்தாட்சணியமும் மாறுபாடுமான குரூரகுணத்தையே தர்மமென்றெண்ணி, கடைப்பிடியாய்த் தலைமேற்கொண்டொழுகும் இயற்கையறிவைக் கொடுத்திருப்பதையும், தொன்றுதொட்டு அவர்கள் சுபாவம் மாறுபட்டு இழிந்ததனால், அவர்கள் துர்க்குணத்தில் முதிர்ந்து பரிதாபமின்றிப் படுகொலை செய்துவருவதையும் நான் நினைக்கவில்லை. காலைதோறும் நான் குன்றேறி ஓடம் வரும் வருமென்று பார்த்தும், ஒருநாளாவது வாராததனால், என் மனம் சலித்தது. சலிக்கவே, மிலேச்சரைக் கொல்ல வேண்டுமென்று எனக்குட் பிறந்த அபிப்பிராயமும் மாறுபடத் தொடங்கிற்று. நான் செய்ய நினைத்திருப்பது என்னவென்றும், பல யுகமளவும் கடவுள் தண்டிக்காமல் தாம் பிறருக்கு விதிக்கும் பிராணதண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றும் சேவகர்போல, கொலைத்தொழில் புரிவதற் கிடங்கொடுத்த மேற்படி மிலேச்சரைக் குற்றவாளிகளென்று தீர்க்கவும் சங்கரிக்கவும் எனக்கு என்ன அதிகாரம் அல்லது சுதந்தரமிருக்கிறதென்றும், அவர்கள் எனக்கு என்ன குறை செய்தார்களென்றும், அவர்கள் ஆளுடன் ஆள் கலந்து ஒருவரை ஒருவர் கொலைசெய்த வழக்கிற் பிரவேசிப்பதற்கு எனக்கு என்ன உரிமை யுண்டென்றும் ஆறி அமர்ந்து யோசித்தேன். பெரும்பாலும் இவ்விஷயத்தைக்குறித்து என்னுள்ளத்திற் பிறந்த நியாயதோரணை இது: இக்கொடிய மிலேச்சர் விஷயத்திற் கடவுள் செய்யும் தீர்ப்பு இன்னதென்று எனக்கு எப்படித் தெரியும்? மனுஷரைக் கொன்று தின்பது குற்றமென்று அவர்

கள் எண்ணியிருக்கவில்லை. இது நிசம். அவர்கள் ஜீவசாட்சி இதைக்குறித்து அவர்களைக் கண்டிக்கவுமில்லை, அவர்கள் இயற்கையறிவு இது தோஷமென்று விளக்கவுமில்லை. கொலை செய்வது அபராதமென்று அறியார்கள். நீதி பரிபாலனஞ் செய்யும் கடவுள் விதித்த கற்பனையை எண்ணுமல் நாம் திரளான பாவங்களைச் செய்யவில்லையா? அதுபோல், அவர்கள் செய்வதும் தேவநீதிக்கு விரோதமே. கோழியைக் கழுத்தறுப்பதும், அதன் மாமிசத்தைப் புசிப்பதும் நமக்கு எப்படியோ, சண்டையிற் சிறைபிடிக்கும் மனுஷனைக் கொல்வதும், அவன் மாமிசத்தைப் புசிப்பதும் அவர்களுக்கும் அப்படித்தான். அது தோஷமென்று அவர்கள் நினைக்கிறதேயில்லை.

இவ்வாறு சற்றுத்தூரம் நான் யோசித்துப் பார்த்தஅளவில், மேற்படி மிலேச்சர்கள் கொலைபாதகரென்று நான் நினைத்தது தவறென்பதாக எனக்கு நிச்சயப்பட்டது. கிறிஸ்துசமயிகள் படைமுகத்திற் பிடிக்கும் சிறைகளைப் பிராணவதை செய்வதும், திரளான பகைஞர் படைக்கலங்களைப் பாதத்தண்டை வைத்துத் தலைவணங்கி அடிப்படினும், அவர்கள் அனைவரையுங் கழுத்தறுத்துக் கொல்வதும் சகஜந்தானே. இப்படிப் பிராணசேதம் வருவிக்கும் கிறிஸ்தவர்கள் கொலைபாதகரென்று நாம் சொல்வதில்லையே. ஆகவே, அம்மிலேச்சரும் கொலைபாதகரல்லவென்றுஎனக்குச்சித்தாந்தப்பட்டது.

மேலும், அவர்கள் நரவதைசெய்யும் வழக்கம் கொடிதும் இழிவுமாயிருந்தும், அதனுல் எனக்கு வரும் குறை என்ன? அவர்கள் எனக்கு எவ்வளவும் தீங்கு செய்யவில்லை. எனக்கு ஏதும் தீங்குசெய்ய வந்தால், அல்லது என்னுயிரைக் காக்கும்பொருட்டு அவர்களைச் சங்கரிப்பது ஆவசியகமாகத்தோன்றினுல், ஒருபட்சம் நான் நினைத்தபடி செய்வதற்கு நியாயமுண்டு. இதுவரையில் எனக்கு அவர்களால் ஏதும் அபாயமில்லை; நான் இங்கே இருப்பது அவர்களுக்குத் தெரியவே தெரியாது; எனக்கு ஏதும் செய்யவேண்டுமென்று அவர்கள் சொப்பனத்திலு மெண்ணவில்லை. ஆதலால், நான் அவர்களைச் சங்கரிப்பது தர்மமல்ல; தர்மமென்று சொல்வில், அமெரிக்காவில் லட்சக்கணக்கான மிலேச்சரை ஸ்பானிய ஜாதியார்

வதை செய்ததும் தர்மமாகவேண்டுமே. அம்மிலேச்சர்கள் விக்கிரகங்களை ஆராதித்து, விலங்கினு மிழிந்து, விக்கிரகங்களுக்கு நரபலி யிடுவது முதலிய பல குரூர கிருத்தியங்களைச் செய்தும், ஸ்பானியருக்குக் குற்றம் குறை ஏதும் செய்யாதிருக்க, இவர்கள் அவர்களைப் பற்றறச் சங்கரித்தது பாதகமென்றும், கடவுளுக்கும் மனுஷருக்கும் ஏற்காத படுகொலையென்றும், அபூர்வ குரூரச் செய்கையென்றும் ஐரோப்பாவிலுள்ள இதரமான கிறிஸ்த ஜாதியார்களன்றி, தற்காலத்தில் ஸ்பானிய ஜாதியார்கள் கூடப் பலவாறு கண்டித்து, மனம் பதைத்து வெளியிட்டிருக்கிறார்களே. ஜீவ தயையுள்ள மனுஷரனைவரும், தம்முயிரைப்போலப் பிறர் உயிரைச் சன்மானித்திருக்கும் கிறிஸ்தவர்களும் இதனிமித்தம் ஸ்பானியரை நினைக்கும்பொழுது, அச்சமுற்றுக் கலங்கிப் பதறுகிறார்களே. ஆபத்தனுபவிக்கும் பெயரைக் கண்டால், அவர்கள்மேற் பரிவுகூர்ந்து பரிதபிக்காத வன்னெஞ்சராகிய கொடிய மனுக்குலத்தார்க்கு ஸ்பானிய ராச்சியமா சிறந்த இருப்பிடமாகவேண்டுமென்று எண்ணித் திகைக்கிறார்கள். ஜீவதயையுடைய மனுஷர் ஆபத்துப்படும் பெயரைக் காணும் பொழுது, அவர்கள்மீதிரங்கிப் பரிவுகூர்வது இயற்கையே என்பதாக என்னுள்ளத்திற் பல சிந்தனைகளுண்டாயின.

இச்சிந்தனைகள் என்னுள்ளத்தில் அழுந்த, மிலேச்சரைச் சங்கரிப்பதைப்பற்றி எனக்குண்டான அபிப்பிராயத்தை அவ்வளவில் நிறுத்திவிட்டேன். சிறிது சிறிதாய் அவ்வெண்ணத்தை நான் மறந்துவிட்டேன். மிலேச்சரைச் சுட்டுக் கொல்லச் சங்கற்பம் செய்தது தகாதென்றும், அவர்கள் முதலில் எனக்கேதும் தீங்குசெய்ய வந்தால் என்னால் ஆகத் தக்க உபாயஞ்செய்து, அவர்களைத் தடுப்பது தகுமேயொழிய, வலிய அவர்களுடன் சண்டை தொடுப்பது அதிக்கிரமமென்றும், அவர்கள் என்னைக் கண்டுபிடித்தால், நான் இன்னது செய்யவேண்டுமென்று அறிவேனென்றும் அனுமிதிசெய்தேன்.

அன்றியும், எனக்குள்ளே பிறந்த நியாயதோரணையாவது: இப்படிச் செய்வதனால் எனக்கு நாசமுண்டாவதொழிய, மீட்சி இல்லை. மிலேச்சர் இக்கரையிலிறங்கும் சமயம்தோ

றும் அவர்கள் எல்லாரையும் அப்பப்போதே சங்கரிக்கமாட்டு வேணுகில், என் பாக்கியந்தான். ஒருவனுவது என் கைக்குத் தப்பித் திரும்பிப்போய் நடந்த சங்கதிகளைத் தன் தேசத்த வர்களுக்குச் சொல்லச் சம்பவித்தால், அவர்கள் ஆக்ரோஷங் கொண்டு, திரண்டுவந்து, சினந்து சீறி, என்மேற் பழிவாங்கு வார்கள். ஆகவே, தப்பாமல் அவர்களாற் பிராணவதை செய்யப்படுவேன். இவ்வாறு எனதுயிருக்கு நானே வலிய நாசத்தை வருவித்துக்கொள்வதற்கு நிமித்தமில்லையே.

காரியத்தைத் தீரத் தெளியச் சிந்தித்துப் பின்வருமாறு சித்தஞ்செய்தேன். இவ்விஷயத்தில் எந்த ரூபமாயாவது நான் லக்ஷியம் வைத்துத் தலையிடுவது தர்மமுமல்ல, புத்தியு மல்ல. என்னுல் இயலும் வகை யாவும் செய்து, நான் அவர் கள் கண்ணுக்கெதிர்ப்படாமல் மறைந்திருக்கவேண்டும். இத் தீவில் மானிடர் சஞ்சரிப்பதுண்டென்று அவர்கள் உத்தே சிப்பதற்குரிய சொற்ப அடையாளமாவது தோன்ருதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இதுதான் நான் கடைப் பிடியாய் எண்ணிச் செய்யத்தகுங் கருமம்.

புத்திபூர்வமாய்ச் செய்த இச்சங்கற்பம் பக்திபூர்வமாய்ப் பார்க்குமிடத்திலும் எனக்குச் சம்மதமாயிருந்தது. எனக் குத் தீங்கு சிறிதுஞ் செய்யாத வனவேடரை வதைசெய்யும் படி நான் பற்பல கொடிய வுபாயங்கள் செய்தது சுத்த அதிக் கிரமமென்று எனக்குப் பலவாறு திருஷ்டாந்தப்பட்டது. அவர்கள் ஒருவருக்கொருவர் செய்த தீமையைக்குறித்து விசாரிப்பதற்கு நான் யாவன்? எனக்கென்ன சுதந்தரமிருக் கிறது? அவர்கள் ஜாதியார்கள் செய்த நிஷ்டூரங்களுக்குக் கடவுள் அவர்கள் ஜாதியாரைக்கொண்டே நீதிப்படி அவர் களைத் தமது திருச்சித்தத்திற் கேற்கும்வண்ணம் தண்டித்து வருகிருர்.

இந்த நியாயதோரணை எனக்கு இப்பொழுது பரிஷ்கார மாய் விளங்கிற்று. முன்பு நான் பிரதிக்கினை செய்தபிரகா ரம் அவர்களை வதை செய்திருப்பேனுகில், வேணுமென்று கொலைசெய்யும் துரோகிக்கு வருங்கதியே எனது கதியாகும். அப்படிச் செய்யாமல், சமயத்திற் சித்தம் தெளிந்து தப்பித்

துக்கொண்டதைப்பற்றி, என் மனம் பூரண திருப்தி அடைந்தது. அப்புறம் நான் முழந்தாளில் நின்று, மனந்தாழ்ந்து, கடவுளைப் பிரார்த்தித்து, கொலைபாதகம் செய்யாதபடி என்னை விலக்கிக் காத்ததற்காக அவருக்குத் துதி செலுத்தினேன். வனவேடர் கைவசப்படாதிருக்கவும், தற்காப்பின்பொருட்டு அவர்கள் பிராணனை வாங்குவது திருவுள்ளத்திற் கேற்குமென்று திருஷ்டாந்தமாய்க் கண்டு, அவர்களைச் சங்கரிப்ப தொழிய, மற்றப்படி அவர்கள்மேற் கை வைக்காதிருக்கவும் எனக்கு நற்புத்தி தந்து என்னை நல்வழிப்படுத்தி யருளவேண்டுமென்று இரந்து கேட்டேன்.

இதற்குப்பின் கிட்டத்தட்ட ஒரு வருஷவரையில் என் மனம் மேற்சொல்லிய துறையை விட்டு நீங்காதிருந்தது. நான் அவர்களைக் கண்டுபிடிக்கத்தக்க சாதனங்களைக் கனவிலும் நாடவில்லை. கடலில் அவர்கள் ஓடம் வருவது வராததைப் பார்க்கவாயினும், அவர்கள் கரையிலிறங்கி இருந்தது இராததைக் கண்டு அறியவாயினும் ஒரு வருஷவரையில் ஒரு முறையாவது நான் மலை ஏறவில்லை. குன்றேறிப்போய்ப் பார்க்கச்சம்பவித்தால், சமயம் கண்டு அவர்கள்மேல் விழுந்து, அவர்களைச் சங்கரிப்பதற்கு என் மனம் வசைந்தாலும் வசையும். இதை நினைந்துதான் முன் வழக்கப்பிரகாரம் குன்றேறிப்போவதை நிறுத்தினேன். எனது ஓடத்தைச் செலுத்திக்கொண்டு வருவதற்குமாத்திரம் நான் ஒருமுறை மேற்குக் கடற்கரைக்குப் போனேன். போய் அதைச் செலுத்திக்கொண்டு, கீழ்கரையிற் சில உயர்ந்த மலைகளின் ஒதுக்கில் ஒரு சிறு குடாவில் நிறுத்திக் கட்டினேன். அங்கே நீரோட்டம் மிகு தீவிரமாயிருந்ததனால், மிலேச்சர்கள் எவ்விதத்திலாயினும் ஓடமேறி வரத் துணியவுமாட்டார்கள்; துணிவிருந்தாலும் அவர்கள் மனம் அதற்கு இசையவுமாட்டாதென்று அறிந்தேன்.

ஓடத்திற்குரிய உபகாரணம் ஒன்றையும் விட்டுவிடாமல் பாய்மரம், பாய், நங்கூரம் முதலிய சமஸ்த சாமான்களையும் ஓடத்திலேற்றிக்கொண்டு வந்தேன். நங்கூரம் சற்று நாணயமற்றதானாலும், அதை நான் என்னாற் கூடியவரையிற் பணிக்

காய்ச் செய்து வைத்திருந்தேன். மிலேச்சர் வந்தால், அவர்கள் இந்தக் கருவிகளையாவது, ஓடத்தையாவது, தீவில் மனுஷர் சஞ்சரிக்கும் எவ்வகை அடையாளத்தையாவது காணுத படி இவைகள் எல்லாவற்றையும் இக்கரைக்குக் கொண்டு வந்தேன்.

மேலும், நான் முன்போல நெருங்கி வெளிப்படாமல் எனது குகைக்குள்ளிருந்தேன். ஆட்டுப்பால் கறப்பதற்கும், எனது மந்தையைப் பார்த்துக்கொண்டு வருவதற்கும்மாத்திரம் அடுத்தடுத்துப் போனேன். ஆட்டுமந்தைகள் தீவின் எதிர்ப்பக்கத்தில் நடுக்காட்டில் எட்டாக்கையில் இருந்ததனுல், அங்கே ஏதுமபாயமுண்டாமென்று அஞ்சுவதற்கு நிமித்தமில்லை. சிலவேளை இத்தீவிலிறங்கும் மிலேச்சர்கள் இங்கே தமக்கு ஏதும் வேண்டுமென்று நாடி வருகிறதில்லையே. ஆதலால், அவர்கள் கரைப்பக்கத்தில் தங்கிப் போவதொழிய, நடுத்தீவில் உலாவித் திரியார்கள். அவர்களைக்குறித்து எனக்கு அச்சமும் ஜாக்கிரதையு முண்டானதற்குப்பின்னும் அவர்கள் இத்தீவில் வந்து இறங்கியிருப்பார்க ளென்பதற்கு ஐயமில்லை. நான் முன்பு நிராயுதபாணியாகவும் நிர்வாணியாகவும் உலாவித் திரிந்தபொழுது, சடிதியில் அவர்கள் எனக்கெதிர்ப்பட்டால், எனது கதி என்னவாகும்? அவர்கள் என்னை என்னபாடு படுத்தார்கள்? சிறிய ரவை கெட்டித்துக் கொண்டுபோன ஒரே ஒரு துப்பாக்கி அச்சமயத்தில் எனக்குதவுமா? தீவில் அங்கங்கே திரிந்து, ஏதும் எனக்கு உபயோகமான பொருள் அகப்படுமென்று பார்த்துக்கொண்டு வந்தேனே. அன்றியும், ஒருவனுடைய காலடிச்சுவட்டைக் கண்டபொழுது, பதினைந்து இருபது மிலேச்சர் விரைந்தோடி என்னைத் தொடர்ந்து வந்தால், நான் தப்பித்துக்கொள்ள மாட்டுவேனு? அவ்வேளையில் என் மனம் பதைத்துத் துடித்து வருந்துமேயென்றெண்ணி, அத்தியந்த திகிலடைந்தேன்.

அவர்கள் என்னைக் கண்டு, தொடர்ந்தால், அதற்கென்ன உபாயம் செய்யமாட்டுவேன்; நான் அவர்களோடு எதிர்க்க வல்லவனல்லவே. இயன்ற மாத்திரம் ஏதும் உபாயம் செய்வதற்குச் சமயத்தில் எனக்கு ஸ்திரசித்த மிராதே. தீர்க்க சிந்த

னையும் சாதகனுபாயமும் செய்து, இப்பொழுது எனக்கு வந்திருக்கும் அற்ப புத்தியாவது அவ்வேளையில் வராதே என்பதாகச் சற்றே அழுத்தமாய் நினைக்கும்பொழுது, என் மனம் முறிந்து நிலையழிய, எளிதில் நீங்காத்துயரம் மேலிட்டது. அன்னியவிஷயத்தில் மனதைச் செல்லவிடாமல் இதொன்றையே ஊன்றி நினைக்க, தாங்குதற்கரிய துக்கமுண்டாயிற்று. அது விரைவில் ஆறவில்லை. வர வர என் சித்தந் திரும்பி, அத்துக்கத்தை மறந்து, கடவுள் செய்த அதிசய நன்மைகளை நினைந்து அவரைத் துதித்தது. அவர் என்னைப் பலவித அபாயங்களுக்கு விலக்கி, தோன்ருவண்ணம் நேரிட்ட பாரமான தீங்குகளைத் தடுத்து, அருள் சுரந்து என்னைக் காத்தாரே. நினையாதிருக்கும்பொழுது துர்ச்சனரால் நேரிடும் தீங்குகளை நிவிர்த்திக்கு முபாயஞ் செய்ய எனக்கு நிர்வாகமேது?

பிரபஞ்ச வியாபாரத்தில் மனுஷருக்கு நேரிடும் ஆபத்துகளை நரஜீவதயாபரராகிய கடவுள் பலவாறு விலக்கிவருவதை நான் முதலிற் கண்டுணர்ந்தபொழுது, என் நெஞ்சில் பிறந்த நினைவுகள் இச்சமயத்திலு முண்டாயின. அவைகளைச் சுருக்கிச் சொல்லுகிறேன். சிலவேளை நமக்கு வரும் கஷ்ட தசை அதிசயமானவிதமாய் நீங்குகின்றது. மேலும் இந்த மார்க்கமோ, அந்த மார்க்கமோ எதிற் செல்லத் தகுமென்று திட்டமாய் அறிவது சந்தேகமாயிருக்கும்பொழுது, நமது மனம் ஒரு மார்க்கத்தை நாட, ஏதோ அந்தரங்கமான பிரபோதம் நமக்குட் பிறந்து நம்மை மற்ற மார்க்கத்திற் செலுத்துகின்றது. அன்றியும் நமது புத்தி, சித்தம், கருமம் இம்மூன்றும் ஒத்து ஒரு வழியைச் சார்ந்து நிற்க, நமக்குள்ளே சடிதியில் அபூர்வ மதி பிறந்து, நம்மை அவ்வழியில் செல்லவிடாமல் மற்ற வழியிற் செலுத்துவதுமுண்டு. அதன் மூலம் யாதென்றும், அது எவரா லுற்பத்தியானதென்றும் நமக்குத் தெரியாதிருக்கும். நமது ஆசையும் மனமும் சென்ற துறையில் இறங்கியிருப்போமானல் நாசமாய்ப் போவோமென்று பிறகிட்டு நமக்குத் தோன்றும். இவ்வகையான பல சிந்தனைகள் எனக்குண்டானதனுல், இனி என் நெஞ்சில் அந்தரங்கமான பிரபோதமாவது ஏவுதலாவது உற்பத்தியாகி ஒன்றைச்

செய்ய, அல்லது செய்யாதுவிட, ஒரு மார்க்கத்திற் செல்ல, அல்லது வேறு மார்க்கத்திற் செல்ல என்னைத் தூண்டும் பொழுது, நான் அதேபிரகாரம் நடக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். மேற்குறித்த அந்தரங்க ஞானம் எனக்குட் பிறந்த க்ஷணமே அதன் காரண காரிய தாற்பரியங்களைக் குறித்து ஒன்றும் நினைக்காமல் அதன் வழியிற் சென்றேன். இப்படி நடந்ததனால் எனக்கனுகூல முண்டாயிற்றென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்க ளுண்டு. முக்கியமாய்த் துயர் நிறைந்த இத்தீவில் நானிறங்கிச் சஞ்சரித்த காலத்தில் பின்னிட்டு எனக்குண்டான காரியசித்தி கொஞ்சமல்ல. இப்பொழுது எனக்குண்டாயிருக்கின்ற தெளிந்த புத்தி முன்பிருக்குமானால், பல சமயங்களில் மேற்சொல்லிய விதியைச் சார்ந்து நடந்ததனால், அடைந்த சுகத்திற்குத் திருஷ்டாந்தங் காணலாம். புத்தி பூர்வமாய் நடப்பதற்கு ஒருபொழுதும் சமயம் முந்திப் போகாதே; ஆதலால், என்னைப்போலும் பலவித அபூர்வ கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, அல்லது சாதாரண ஆபத்துக்குட்பட்டு, எதையும் தீரத் தெளியச் சிந்திக்கப் பயின்ற பெயர்கள் அனைவருக்கும் நான் சொல்லும் புத்தி இது: தெய்வமூலமாய் வருகின்ற அவ்வித அந்தரங்க யுக்திகளை அற்பமென்று தள்ளாதிருங்கள். அவை அதரிசனமான எவ்விதச் சுத்த சைதந்ய வஸ்துவினிடத்தினின்று வந்தாலுமென்ன? அதைப்பற்றி நாம் சிந்திப்பதுமில்லை, அதன் நியாயம் நமக்குத் தோன்றவுமாட்டாது; ஆனாலும், ஒன்று நிசம். சரீரிகளாகிய மனுஷர்களுக்கும், அசரீரிகளாகிய ஆவிகளுக்கும் அந்தரங்க சம்பாஷணை நடக்கின்றதென்பதற்கு அந்த நூதன யுக்திகளே சாட்சி. இச்சாட்சிக்கு ஆக்ஷேபம் இல்லை. மனுஷர் சஞ்சரிக்காத இவ்வனத்தில் நான் ஏகாங்கியாய் நாட்கழித்த பிற்காலத்தில், எனக்குச் சம்பவித்த அநேக சங்கதிகளை இதற்குத் திருஷ்டாந்தங்களாய்ச் சமயங் கண்டு சொல்வேன்.

எனக்கு மிகுந்த மனக்கவலையும், அடுத்தடுத்து அபாயங்களும், அவைகளைத் தவிர்க்கும் வகையைக்குறித்துப் பல சிந்தனைகளும் உண்டானதுபற்றி, எனது பிற்கால சுகானுபவங்களின்பொருட்டு நான் முன்பு செய்யத்தொடங்கின

சாதனேபாயங்களை மறந்துவிட்டேன். அவைகளை மறப்பது ஆச்சரியமல்லவே. போஜனபதார்த்தம் சேகரிப்பதைப்பற்றி யல்ல, மிலேச்சர் கைக்குத் தப்பிப் பிழைத்திருக்கவேண்டு மென்பதைப் பற்றியே எனக்கு அதிக சிந்தனை உண்டா யிற்று. எவருக்காவது சத்தம் கேட்குமென்று ஆணி அடிப் பது, மரக்கிளை தறிப்பது, துப்பாக்கி வெடி தீர்ப்பது இவை களெல்லாவற்றையும் நிறுத்திவிட்டேன். பகலிற் புகை நெ டுந்தூரம் தோன்றுமாதலால், அதை எவராவது கண்டு, நான் இருக்குமிடத்திற்கு வருவார்களென்றெண்ணி ஏங்கி, நெருப்பெரிப்பதையும் நிறுத்திவிட்டேன். பானை, சட்டி, சுங்கான்முதலிய மட்பாண்டங்கள் சுடுவதற்கு வழக்கமான இடத்தை விட்டு, காட்டில் எனது நூதன அறைக்குள் சூளை வைத்தேன். அவ்விடத்திற்குப் போய்ச் சில தினங்கள் சென் றபின், தரைக்குள்ளே நெடுந்தூரமட்டும் தானுய் உண்டான ஒரு குகை இருக்கக் கண்டு, கவலையற்று ஆறுதலடைந்தேன். அக்குகையின் வாயிலில் எந்த மிலேச்சன் போய் நிற்பினும், அஞ்சிப் பின்னிடுவதொழிய, உட்செல்லத் துணியான். அபாயத்திற்கு விலகியிருக்கத்தக்க அடைக்கல ஸ்தான மன்றி, மற்றென்றும் முக்கியமாய் வேண்டுவதில்லையென்றி ருந்த என்போலியர் தவிர, மற்றெவனும் அதிற் பிரவேசிக்கத் துணியான்.

இக்குகையின் வாய் பெருமலை அடியில் இருந்தது. அங் கே கரிசுடும்படி பாரிய விருட்சக் கிளைகளைத் தற்செயலாய்ப் போய்த் தறித்துக்கொண்டிருந்தேன். திருவுள்ளத்தின் செய லால் எதையாயினும் நான் செய்ததாக, எவ்விடத்திற்காயி னும் போனதாக உறுதி சொல்வதற்குத் தகுதியான நியாயங் காணுததனுல், தற்செயலாய் அவ்விடத்திற்குப் போனேன் என்றேன். மரக்கிளை தறித்த தோரணையைச் சொல்லுமுன், கரிசுடுதற்கு நிமித்த மின்னதென்று வெளியிடுகிறேன்.

நான் குடியிருக்குமிடத்தில் விறகு கட்டைகளில் நெ ருப்பு மூட்டி எரித்தால், தூரத்தில் எவராவது புகையைக் கண்டு, என்னிடத்திற்கு வருவாறென்றெண்ணி, அச்சமுற் றிருந்தேனே. அதற்குப் பயந்து, ரொட்டி சுட்டுத் தின்ன

மலும், மாமிசமுதலிய பதார்த்தங்களைச் சமைத்துப் புசியா மலும் பட்டினியிருந்து வருத்தப்படலாமா? கூடாது. ஆனது கொண்டு, இங்கிலாந்தில் இருப்பவர்கள் கழுப்பற்றையில் நெருப்பு மூட்டி விறகைச் சுட்டுக் கரியாக்குவதுபோல, நானும் இவ்விடத்திற் கரிசுட யுக்தி செய்தேன். சுட்டு, நெருப்பை அவித்தபின், கரியைச் சேர்த்து வீட்டுக்குக் கொண்டுபோவதற்குப்பத்திரப்படுத்தினேன். சமையல்முதலிய வேலைகளுக்குக் கரியில் நெருப்பு மூட்டினால், புகை எழும்பாதென்னும் உறுதியைச் சார்ந்து, இப்படிச் செய்தேன்.

இனி மரக்கிளை தறித்த கதையை விட்ட குறையினின்று சொல்லுகிறேன். தறித்துக்கொண்டு நிற்கும்பொழுது, சிறு தூறு ஒன்றின் பருத்த கொம்பின் ஒதுக்கில் ஒரு குழி இருந்தது கண்டு, அதை நன்றாய்ப் பார்க்கக் கருதி, ஒருபடி அதன் வாயிற்போய் நின்று பார்த்தேன். அது என்னைப்போல் இரண்டுபெயர் தலைதட்டாமல் நிமிர்ந்து நிற்கத்தக்க ஆழ நீளமுள்ளதாயிருந்தது. அக்குகையின் உள்ளிடம் சுத்த இருள்மயமாயிருந்தது. ஒன்றுந் தெரியவில்லை. அகன்று திரண்ட கண்கள் இரண்டு நட்சத்திரங்களைப்போல விட்டு விட்டுப் பிரகாசித்தன. அவை மானிடன் ஒருவன் கண்ணோ, பைசாசத்தின் கண்ணோ அறியேன். குகைவாயிலின் வழியாய்ச் செல்லும் ஒளியில் அவ்விழிகளின் ஒளி நேரே பாய்ந்து பிரதிவிம்பித்தது. அக்கண்களைக் கண்டவுடன் நான் திகில்பிடித்து வெளிப்பட விரைந்தேன்.

சற்றுப் பொறுத்து நின்று அச்சம் தெளிந்தபின், என்னைப்போலச் சர்வ முட்டாளைக் கண்டதில்லையென்றும், பைசாசத்தைக் கண்டு, இப்படிப் பயப்படும் நான் இருபது வருஷம் இத்தீவில் ஏகாந்தமாய்ச் சஞ்சரித்ததெப்படியென்றும் என்னைக் கண்டித்து, என்னைப்பார்க்கிலும் அதிக பயங்கரமுள்ளதொன்றும் இக்குகையிலில்லையென்று நம்பத் துணிவுற்றேன். பின்பு தீரம் கைவிடாமல் என் நெஞ்சைத் திடப்படுத்தி, ஜுவாலித்தெரியும் பெரு நெருப்புக்கொள்ளியொன்று கைக்கொண்டு, மீண்டும் உள்ளே போனேன். மூன்றடி பெயர்த்து வைக்குமுன் மரணவேதனைப்படும் ஒருவன் நெட்

டியிர்ப்பதுபோல, வெடித்த சத்தம் பிறந்தது. பின்பு பெரு மூச்சு விட்டு, பேசும் சக்தியின்றி உளறுவதுபோலக் கர்ன கடூரமான சத்தம் பிறந்தது. அதைக் கேட்டவுடன் முன் போல் என் நெஞ்சு பதறிற்று. பதறவே, நான் முன்வைத்த அடியைப் பெயர்த்து வைத்துப் பின்னிட்டேன். அச்சத் தால் என் சரீரம் விறைத்து வெயர்த்தது. எனது ரோமம் சிலிர்த்து, முரணுன பன்றி மயிர்போல விறைத்தெழுந்தது. அச்சமயத்தில் என் சிரசிற் குல்லா விருக்குமானல், சடிதி யிற் சிலிர்த்த ரோமம் அதை அதிர்ச்சியாய் வீசி அப்புறப் படுத்து மென்பதற்கு ஐயமில்லை. இவ்வாறு எனக்குத் திகிலுண்டாயிருந்தும், நான் பின்னும் என் நெஞ்சைத் திடப் படுத்தி, சர்வ சக்தியுள்ள கடவுள் எங்கும் வியாபித்திருந்து, என்னை ஆதரிக்க வல்லவராயிருக்கிறரென்றெண்ணி, எனக்கு நானே தைரியஞ் சொல்லி, மறுபடியுங் குகைக்குள்ளே போக முன்னிட்டுத் திரும்பினேன். கையிலிருந்த நெருப்புக்கொள் ளியை என் தலைமட்டத்திற்குமேல் உயர்த்திப் பிடித்து உற் றுப் பார்த்தபொழுது, ஒரு பிரமாண்டமான கிழ ஆட்டுக் கடா பலக்ஷயமடைந்து, இளைத்து வருந்திப் பெருமூச்செ றிந்து, மாணவேதனைப்பட்டுப் படுத்திருந்தது கண்டேன்.

அதற்கு எழுந்திருக்கும் சக்தி யுண்டோவென்று அறி யும்படி அதைச் சற்றுத் தள்ளிவிட்டேன். அது எழுந்து நிற்கப் பார்த்தும், வசமில்லாதிருந்தது. இக்கடாவைக் கண்டு எனக்குச் சொல்வதற்கரிய திகிலுண்டானதுபோல், இவ் விடத்திற்கு எவராவது மிலேச்சர் வரத் துணிந்தால், அவ ருக்குந் திகிலுண்டாமென் றெண்ணி, கடாவைப் படுத்த வண்ணமாயிருக்க விடுவதே உத்தமமென்று நினைத்தேன்.

மேற்சொல்லியபடி என்னைப் பிடித்த மாணக்கெடி தொ லைந்தபின், குகையை ஏற இறங்க நான்கு திக்கிலும் பார்த் தேன். அது மிகச் சிறிதாயிருந்தது. ஆகப் பன்னிரண்டடி விஸ்தாரமிருக்கும். அது சதுரமுமல்ல, விருத்தமுமல்ல; விகார வடிவுள்ளதாயிருந்தது. மனுஷர் கைப்படாமல் தானே யுண்டான குகைக்கு வடிவு வரையறை ஏது? அதன் அப் புறத்திலும் சற்றுப் பதிவான ஒரு குகை இருந்தது. சிறு

குழந்தைகளைப்போலக் கை கால் மடக்கித் தவழ்ந்தாலன்றி, அதற்குட் செல்வது அசாத்தியம். அதில் நுழைந்தால், எவ்விடத்திற் சேரலாமென்று எனக்குத் தெரியவில்லை. மேலும், என் வசத்தில் தீபமுமில்லை. ஆனதனால், அன்றைக்கு அதிற் பிரவேசியாமல், மற்றநாள் தீபமும் சக்கிமுக்கியுங் கொண்டு வந்து நுழைந்து பார்க்கத் தீர்மானித்தேன். சக்கிமுக்கிப் பெட்டி துப்பாக்கிப் பூட்டினாற் செய்து, அதிற் பஞ்சு இட்டு வைத்திருந்தேன்.

மற்றநாள் வெள்ளாட்டின் நிணத்தால் நான் செய்து வைத்திருந்த மெழுகு வர்த்திகள் ஆறு கொண்டுபோய்க் கொளுத்தி நாய் தவழ்வதுபோல, மேற்குறித்த பதிவான குகைக்குட் பத்துக்கஜ தூரம் தவழ்ந்து போனேன். அது எவ்வளவு தூரத்திற்கு எட்டுமென்றும், அதற்கப்புறம் இருப்பது என்னவென்றும் அறியாமல் துணிந்துபோவதனால், ஏதேனும் அபாயம் வரினும் வருமென்று நினைத்தேன். சங்கடமான இடத்தைத் தாண்டிச் சென்றபின், அக்குகையின் முகடு வர வர இருபதடிவரையில் அகன்று விஸ்தரித்தது. அந்தக் குகையின் இருபக்கங்களும் முகடும் கண்ணுக்கு மிக அலங்காரமாயிருந்தன. அவ்வளவு சிறந்த காட்சியை நான் அத்தீவில் எங்கும் கண்டதில்லை. எனது கையிலிருந்த இரண்டு ஆட்டு நிண வர்த்திகளின் ஒளியால் குகை மதில்களினின்று லக்ஷக்கணக்கான தீபங்கள் பிரதிவிம்பித்தன. இத்தனை பிரதிவிம்பங்கள் உற்பத்தியாதற்கு நிமித்தமாய் அம்மலைக் குகையிலிருந்தது வயிர ரத்தினமோ, மாணிக்கமுதலிய வேறு ரத்தினங்களோ, பொற்பொடியோ அறியேன். ஒருவேளை பொன் அம்மலையில் விளைகிறதென்று உத்தேசித்தேன்.

இருளடர்ந்தும், குகைகளுக்குள் அது கண்ணுக்கு மிகவும் இன்பமாயிருந்தது. அதன் அடித்தரை உலர்ந்து ஒப்பமாயிருந்தது. அது பொடிக் கற்பாங்கு நிலம். ஆகவே, அருவருப்புண்டாக்கத்தக்க ஜந்து அங்கொன்றுமில்லை. அதன் முகட்டின் பக்கங்களிலும் ஈரம் சுவறியிருக்கவில்லை. அதன் வாசல்மாத்திரம் நுழைந்து போவதற்குச் சங்கடமாயிருந்தது. அந்தக் குகை அச்சமற்று அடங்கியிருப்பதற்குத்

தகுதியான அடைக்கல ஸ்தானமென்று கண்டு, நான் சந்தோஷப்பட்டு, என்னிடத்திலுள்ள சில வஸ்துக்களை அவ்விடத்திற் கொண்டுபோய்ப் பத்திரப்படுத்தத் தீர்மானித்தேன். முக்கியமாய் வெடிமருந்து வைத்திருந்த பீப்பாவையும், குருவிக் குழாய்த் துப்பாக்கி இரண்டையும், பெருந்துப்பாக்கிகள் மூன்றையும் நான் அவ்விடத்திற் கொண்டுபோய் வைக்கத் தீர்மானித்தேன். எனக்குள்ள குருவிக் குழாய்த் துப்பாக்கிகள் ஆக மூன்று; பெருந் துப்பாக்கிகள் எட்டு. அவற்றுள், மேற்சொல்லிய மூன்று ஒழிந்த மற்ற ஐந்தும் எனது கோட்டையின் புறமதிலிற் பீரங்கிகள்போல நினைக்கும்பொழுது தடையின்றி வெடி தீர்ப்பதற்கு எத்தனமாய் நாட்டப்பட்டிருந்தன. சமயங்கண்டு அவைகளை எடுத்துக் கொண்டுபோகவேண்டுமானாலும், எளிதில் எடுக்கத் தக்கதாயிருந்தது.

வெடிமருந்துப் பீப்பாவைப் பெயர்த்துக் கொண்டுபோக எத்தனித்த சமயத்தில் பீப்பாவைத் திறந்து பார்த்தேன். அந்தப் பீப்பா நான் உருவினின்று எடுத்துவந்தது. உருவில் இருந்தபொழுது, அதற்குள் ஈரம் சுவறியது. பீப்பாவை உடைத்துப் பார்த்தஅளவில், அதன் நான்கு பக்கத்திலும் மருந்தில் மூன்று நாலு அங்குலம் அளவிற்கு நீர் ஏறி, மருந்து கட்டியாய் இறுகி விறைத்திருந்தது. அதற்குள்ளிருந்த மருந்து அறுபது ருத்தல் வரையிலுண்டு. அதில் ஒரு பழுதுமில்லை. ஓட்டுக்குள்ளிருக்கும் பருப்பை அவ்வோடு பழுதின்றிக் காப்பதுபோல, பீப்பாவின் மத்தியிலுள்ள மருந்தை அதன் நான்கு பக்கத்திலும் நீர் ஏறி உலர்ந்து இறுகிய மருந்து இடையூறின்றிக் காத்தது. அப்பொழுது நான் அம்மருந்தைச் சங்கடமின்றிக் கொண்டுபோய்ச் சேர்த்தேன். ஏதாயினும் அபாயமுண்டாமென்று அஞ்சியதனால், அப்புறம் நான் கோட்டைக்குள் இரண்டு மூன்று ருத்தல் மருந்துக்கு அதிகம் வைத்திருக்கவில்லை. உருக்கிக் குண்டு வார்க்கும்படி வைத்திருந்த காரீயத்தையும் குகைக்குட் கொண்டுபோய்ச் சேர்த்தேன்.

மனுஷர் எவரும் போகக்கூடாத மலைக் குகைகளிலும் பொந்துகளிலும் பூர்வகாலத்தில் ராட்சதர்கள் சஞ்சரிப்பதுண்டென்று சொல்வார்களே. நானும் அவர்களைப்போல்

ராட்சதனென்று எண்ணி நிர்ப்பயமாயிருந்தேன். நான் இங்கிருக்கும்பொழுது, மிலேச்சர் ஐஞ்ஞூறுபெயர் என்னைத் தொடர்ந்துவரினும், காணமாட்டார்கள். காணினும், என்னை அகப்படுத்தும்படி இவ்விடத்திற்கு வர அவர்களுக்குத் துணிவுண்டாகாது.

மாணத்தறுவாயிலிருந்த கிழ ஆட்டுக்கடா மற்றநாள் குகைவாயில் இறந்துபோயிற்று. இறந்த விடத்திலேயே நான் எளிதிற் குழி பறித்து, முடை நாற்றம் வீசாதபடி அதை அடக்கம்பண்ணினேன். இழுத்து வெளிப்படுத்துவது சங்கடமாதலால் இப்படிச் செய்தேன்.

# 13. அத்தியாயம்.

*தீவிற் குடியேறிய இருபத்து மூன்றாவது வருஷத்தில் எனது நிலைமை இன்னதென்பது. தீவில் நான் சஞ்சரித்த பக்கத்தில் ஒன்பது நிர்வாண மிலேச்சர்கள் நெருப்பெரித்து, அதைச் சூழ்ந்து நிற்கக் கண்டது. அவர்கள் செய்த ஆரூத் துக்கத்தை வருவிக்கும் செய்கையைப்பார்த்துப் பயப்பட்டது. இனி வரும் சண்டாளரை என்னபாடுபட்டாவது சங்கரிக்கச் சங்கற்பம் செய்தது. கடலிற் சற்று எட்டாக்கையில் மரக்கலமொன்று சேதப்பட்டது. அம்மரக்கலத்திற்குப் போய், அது ஸ்பாணியர் நாவாயென்றறிந்தது. அவ்வுருவிற் பலவிதச் சாமான்களைக் கண்டெடுத்தது.*

நிகழும் வருஷம் நான் இத்தீவில் வந்திறங்கிய இருபத்து மூன்றாவது வருஷம். இத்தனை காலவரையில் நான் இங்கிருந்து பயின்றதனால், இதுவே எனது ஜனன தேசம்போலாயிற்று. இவ்விடத்திற்கு மிலேச்சர் வந்து கலகம் செய்து, என்னை நிலைகுலையார்களென்று எனக்கு உறுதியாய்த் தெரியவருமானால், நான் கிலேசமற்று வாழ்நாளறுதிவரையில் இங்கிருந்து, குகையில் இறந்த கிழ ஆட்டைப்போல் இவ்விடத்திலேயே இறக்க விரும்புவேன். நாளடைவில் சில காலக்ஷேபங்களைப் பயின்றுவந்தேன். அதனால் எனது காலம் எனக்கு இன்பமாய் எளிதில் தொலைந்தது. முதலில் பால் என்னும் எனது கிளிக்குப் பேச்சுப் பழக்கின சங்கதியை

முன்பு குறிப்பித்தேனே. அது வரவரத் தீர்க்கமாகவும் திருத்தமாகவும் பேசியது கேட்டு, உவப்புற்றேன். அந்தக் கிளி சரியாய் இருபத்தாறு வருஷம் என்னுடன் சஞ்சரித்தது. பின்னும் எத்தனை வருஷம் அது இருக்கக்கூடுமோ அறியேன். கிளிக்குப் பருவம் நூறென்று பிரேஜில் நாட்டார் சொல்வார்கள். நான் வளர்த்த கிளிகளிற் சில நாளது வரையில் அத்தீவில் இறவாதிருந்து, ஏழை ரூபின்ஸன் குறூஸோவைப் பெயர் சொல்லி அழைக்கவுங் கூடும். எந்த அங்கிலேயனுக்காவது அவ்விடத்திற்குப் போய், அக்கிளிகள் பேசுவதைக் கேட்கும் துர்ப்பாக்கியம் உண்டாகாதிருக்கக் கடவது. எவனாவது அக்கிளி பேசுவதைக் கேட்பானானால், அது கிளியல்ல, பைசாசமென்றே உறுதியாய் நம்புவான். எனது நாய் பதினாறு வருஷமளவும் என்னைவிட்டு நீங்காத நட்புள்ள தோழனாயிருந்து, பருவம் முதிர்ந்து இறந்துபோயிற்று. எனது பூனைகள் நாளடைவில் விர்த்தியானதையும், என்னையும் என் சொத்துகளையும் பட்சிக்கத் தலைப்பட்டதனால், அவற்றில் அநேகத்தை நான் சுட்டுக் கொன்றதையும் முன்பு வெளியிட்டேனே. நான் கொண்டுவந்த கிழப்பூனைகள் இரண்டும் இறந்துபோனபின் மற்றவைகளை மிரட்டித் துரத்திவிட்டேன். அவைகளுக்கு இரை ஒன்றுங் கொடுக்கவில்லை. அதனிமித்தம் அவைகள் என்னைவிட்டுப் பிரிந்து காட்டுப்பூனைகளாயின. எனக்கு இஷ்டமான இரண்டு மூன்று பூனைகள்மாத்திரம் என்னுடன் பழகி எனக்கு வசப்பட்டிருந்தன. அவைகள் போட்ட குட்டிகள் அனைத்தையும் நான் கடலில் அமிழ்த்திக் கொன்றேன். அந்த இரண்டு மூன்று பூனைகள் எனது குடும்பத்தாருக்குச் சமானமாயிருந்தன. அன்றியும், இரண்டு மூன்று வெள்ளாட்டுக் குட்டிகளை வீட்டிற் கைத்தீன் கொடுத்து வளர்த்தேன். ஒருவாறு பேசப் பயின்று, என்னை ரூபின்ஸன் குறூஸோ என்று அழைத்த கிளிகள் அநேகமிருந்தன. அவை ஒன்றும் நான் முதலில் வளர்த்த கிளிக்குச் சமானமல்ல. அதற்குப் பேச்சுப் பழக்குவதற்கு நான் உழைத்ததுபோல், அவைகளை வருந்திப் பயிற்றவில்லை. மேலும், கடற்கரையிற் சில கடற்பட்சிகளையும் பிடித்து, சிறகு வெட்டிவிட்டிருந்து, வளர்த்துக்கொண்டு வந்தேன்.

அப்பட்சிகளின் ஜாதி விவரமறியேன். எனது கோட்டை மதிலுக்குப் புறத்தில் நான் நாட்டின சிறு கிளைகள் காலக் கிரமத்தில் தழைத்து அடர்ந்து, பெருந் தோப்பாயின. அத் தோப்பில் மேற்சொல்லிய பட்சிகள் உல்லாசமாய்ச் சஞ்ச ரித்து, வர வர விர்த்தியாயின. அவைகள் அங்கிருந்தது எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. மிலேச்சர் பயம் ஒன்று மாத்திர மில்லாதிருக்குமானால், மேற்சொல்லியபடி எனக்கு ஒரு குறையுமிராது.

நாம் எண்ணியவாறு எப்பொழுதும் நடக்குமா? எனது எண்ணமொன்று, திருவுள்ளத்தின் செயலொன்றாய் முடிந் தன. எனது சரித்திரத்தை வாசிப்பவர்கள் அனைவரும் அதில் முக்கியமாய் ஒரு விசேஷத்தைக் காண்பார்கள். கூடிய பிரயத்தனங்கள் செய்து நாம் தவிர்க்கக் கருதும் ஆபத்து எதுவோ, அது பெரும்பாலும் நமது தடையில் நிற்காமல் நமக்குச் சம்பவிக்கின்றது. சம்பவிக்கும்பொழுது, அது நமக்கு மிகுந்த திகில் வருவித்து நம்மை வருத்தும். பின் னும் அதுவே நம்மை உபத்திரவத்தினின்று விலக்கிப் பூர்வ சுகநிலைமை அடைவிக்கும் சாதனமுமாகும். நிர்நிமித் தமாகத் தோன்றும் எனது நிலைமையில் எனக்கு அனுபவப் பட்ட சங்கதிகள் பலவற்றை இதற்குத் திருஷ்டாந்தமாய் எடுத்துச் சொல்லமாட்டுவேன்; ஆனாலும், இந்தத் தீவில் நான் ஏகாந்தமாய் நாட்கழித்த கடைசிக்காலத்திற் சம்பவித்த சங் கதிகளே இதற்கு முக்கியமான திருஷ்டாந்தங்களாம்.

மேற்சொல்லியபடி நான் இத்தீவிற் சேர்ந்த இருபத்து மூன்றாவது வருஷம் டிஸெம்பர்மீ ஒருநாள் அதிகாலையில் அறுப்பறுக்க வயலுக்குப் போம்பொழுது, கடற்கரையில் இரண்டு மைல் தூரத்தில் நெருப்பெரிந்த வெளிச்சத்தைக் கண்டு, திகைத்து நின்றேன். அது இதற்குமுன் மிலேச்சர் கள் சிலர் இறங்கியிருந்ததைப்பற்றி நான் சில அடையாளங் கள் கண்ட இடக்குறிப்புத்தான். அவ்விடம் தீவின் ஒரு அந்தம். வெளிச்சம் தோன்றியது தீவின் எதிர்ப்பக்கத்தி லல்ல, நான் சஞ்சரிக்கும் பக்கத்திலேதான். இதைக்குறித்து எனக்குப் பின்னும் அதிக திகிலுண்டாயிற்று.

சடிதியிற் கண்ட வெளிச்சத்தைப்பற்றி எனக்குண்டான அச்சம் இவ்வளவென்றில்லை. மிலேச்சர் என்னை அகப்படுத்திக்கொள்வார்களென்று வெளிப்படத் துணியாமல் தோப்புக்குள் நின்றேன். இந்த மிலேச்சர்கள் தீவில் எங்கும் உலாவி வரும்பொழுது, எனது விளைபயிரை, அரிதாளை, எனது கைத்தொழிலாலாகிய அடைப்பு முதலியவைகளைக் காண்பார்களானால், இங்கே ஜன சஞ்சாரமுண்டென் றெண்ணிச் சோதனை செய்து, என்னைக் கண்டு அகப்படுத்துகிறவரையில், இத்தீவை விட்டுப் போகார்களேயென்று நினைக்க, அச்சம் என்னும் அக்கினியால் என்னுள்ளம் வெந்தது; மனம் பதைத்தது. உடனே கோட்டைக்குத் திரும்பி, மதிலேறி, ஏணி வழியாய் இறங்கி, ஏணியை இறக்கி, கீழே சார்த்தி வைத்தேன். கோட்டைப் புறமதிலின் வெளிப்பக்கத்தில் நூதனக் காட்சி யொன்றுந் தோன்றாமல், கண்ணுக் கெதிர்ப்படும் அனைத்தும் காடு செடித் தன்மையாய்த் தோன்றும்படி ஜாக்கிரதை செய்தேன்.

கோட்டைக்குட் போய், பகைவரை உட்செல்லவொட்டாமல் தடுக்கத்தகு முபாயங்கள் செய்தேன். பீரங்கிக்கு ஒப்பாய் மதிற்றுவாரத்தில் வைத்த துப்பாக்கிகளிலும், கைத்துப்பாக்கிகள் அனைத்திலும் மருந்து குண்டு கெட்டித்து, எனது பிராணன் இவ்வுடம்பை விட்டு நீங்குமளவும் பகைவர் கைவசப்படாமல் தப்பிக்கொள்ள வகைசெய்யத் தீர்மானித்தேன். மிலேச்சர் கையில் என்னை அகப்படுத்தாமல் என்மீதிரங்கி, எனக்குத் தஞ்சமாய் நின்று, என்னைக் காத்தருள வேண்டுமென்று, வாக்கும் மனமு மொத்துக்கடவுளைப் பிரார்த்தித்தேன். இரண்டு மணிநேரம் இப்படிச் செய்தபின், பகைவர் செய்தி கேட்க எனக்குப் பதைப்புண்டாயிற்று. அந்தரங்கத்தில் அவர்கள் விருத்தாந்தங்களைக் கண்டறிந்து வந்து சொல்வதற்கு ஒற்றர் எவருமில்லையே.

பின்னும் சற்றுவேளை உட்கார்ந்தவண்ணமாயிருந்து, செய்வதென்னவென்று சிந்திக்குமளவில், இனி எவ்விதத்திலும் பகைவரைக் குறித்துச் செய்தி அறிய வகை பார்க்கவேண்டுமென்று எனக்கு எண்ணமுண்டாயிற்று. ஒன்றும் அறியாதிருக்க என் மனம் சகிக்கவில்லை. திடீரென வெழுந்து, ஏணி

யை நிறுத்தி, ஏறி, மறுபடி ஏணியைத் தூக்கி, மேலே நிறுத்தி ஏறி, மலைச்சிகரத்திற் சேர்ந்து, அங்கியுறைக்குள்ளிருந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியை எடுத்து, வயிறு தரையில் அழுந்தும்படி முகம் குப்புறப்படுத்து, வெளிச்சம் தோன்றிய இடக்குறிப்பைப் பார்த்தேன். நிர்வாணிகளாகிய மிலேச்சர் குறையாமல் ஒன்பதுபெயர் நெருப்பெரித்து, அதைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் உட்கார்ந்தது குளிர் காயவல்ல. உஷ்ணகாலத்திற் குளிர் ஏது. நரமாமிசத்தைச் சுடுவதற்கென்று உத்தேசித்தேன். அவர்கள் பிரேதத்தையாவது, மனுஷரையாவது கொண்டுவந்திருப்பார்களென்று காணப்பட்டது.

அவர்கள் ஏறிவந்த ஓடங்களிரண்டு. அவ்வோடங்கள் கரை ஏறும்படி இழுத்து விடப்பட்டிருந்தன. கடல் வற்றுநேரமாதலால், பெருக்கு வரும்பொழுது ஓடமேறிச் செல்லும்படி காத்திருந்தார்கள்போலும். மிலேச்சரைக் காண்பதே உயிரை வருத்துங் காட்சி. அதுவும் நான் இருக்கும் பக்கத்தில் அத்தனை சமீபத்திற் கண்டால், எனது நெஞ்சு என்ன பாடுதான் படாது. காரியத்தை நன்ருய்ச் சீர்தூக்கிப்பார்த்து அவர்கள் கடல்நீர் வற்றும் வேளையிலன்றி, பெருகும் நேரத்தில் வருகிறதில்லையென்று நிச்சயித்து, சற்று மனம் தேறியிருந்தேன். இனி அவர்கள் கடல்நீர் வற்றும் நேரத்தில் வந்து இறங்கியிருப்பதாக அறிந்தாலன்றி, மற்றப்படி பெருக்குவேளையில் அச்சமின்றி வெளியிற் போகலாமென்று எனக்குள்ளே யுக்தி பிறந்தது. பின்பு நான் பெருக்குவேளையிற் கிலேசமற்று வயலுக்குப் போய், அறுப்பறுத்தேன்.

நான் எண்ணியவாறே நடந்தது. கடல்நீர் மேற்குமுகமாய்ப் பெருகத் தொடங்கிய க்ஷணமே அவர்கள் எல்லாரும் ஓடமேறி, தண்டு வலித்துச் சென்ருர்கள். ஓடம் ஏற ஒரு மணி ஒன்றரை மணி நேரத்திற்குமுன் அவர்கள் நடனம் செய்தார்கள். அவர்கள் செய்த அபிநயங்கள் அனைத்தையும் எனது கண்ணாடியால் எளிதிற் கண்டேன். அவர்கள் சுத்த நிர்வாணிகள். ஸ்திரீ புருஷர் விகற்பந் தோன்றவில்லை.

அவர்கள் ஓடமேறிச் சென்றதைக் கண்டவுடன் நான் எனது இருதோள்களிலும் பெருந் துப்பாக்கிகளும், இடைக்

கச்சில் கைத்துப்பாக்கிக ளிரண்டும், இடுப்பில் உருவின பெருங் கத்தி ஒன்றும் வைத்துக்கொண்டு, முதலில் மிலேச்சர் குறிப்புத் தோன்றிய குன்றுக்கு அதிகதியாய்ப் போனேன். யுத்த ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு போனதனால், அவ்விடத்திற் சேர இரண்டு மணி நேரம் சென்றது. சேர்ந்தபொழுது, முன்கண்ட ஓடங்களன்றி, பின்னும் மூன்று ஓடங்கள் வந்திருந்ததாக அறிந்தேன். சமுத்திரத்திற் சற்றுத் தூரத்திற் கண்ணெறிந்து பார்த்தஅளவில், அவ்வோடங்கள் அனைத்தும் ஒன்றாய்ச் சேர்ந்து, கண்டத்தின் கரைக்கு நேர்முகமாய்ச் சென்றது கண்டேன்.

கரையில் மனுஷர் உதிரமும், எலும்புகளும், மிலேச்சர் தின்று கழித்துவிட்ட மாமிச உச்சிட்டங்களும் இருப்பது கண்டு, அவர்கள் செய்த கொலைத்தொழிலை நினைத்துப் பதறி யுதறிக் கலக்கமுற்றேன். நரமாமிசத்தைப் பட்சித்துக் களிகூர்ந்து நடித்த பாதகரை எண்ணி எனக்கு மிகுந்த உக்கிரமுண்டாயிற்று. இனி அவர்கள் எத்தனைபெயர் திரண்டு வரினும், அந்தத் துரோகிகளைக் கண்ட க்ஷணமே சங்கரிக்க வேண்டுமென்று சங்கற்பம் செய்து, அதற்குபாயம் பண்ணினேன். அன்றுமுதல் பதினைந்து மாசவரையில் நான் கரையில் அவர்கள் அடிச்சுவடுகளையாவது, வேறு அடையாளங்களையாவது காணவேயில்லை: ஆனதுபற்றி, அம்மிலேச்சர் இத்தீவிற்கு அபூர்வமாய் வருவதொழிய, அடுத்தடுத்து வருவதில்லையென் றறிந்தேன். மழைகாலத்தில் அவர்கள் தூரப் பிரயாணம் செய்யார்கள். அவர்களைக் காணாதிருந்தும், நினையாதிருக்கும் வேளையிற் சடிதியில் வந்து, என்னை அகப்படுத்திக் கொள்வார்களென்று இராப்பகல் எப்பொழுதும் அஞ்சித் துன்பப்பட்டேன். தீங்கு அனுபவிப்பதிலும் தீங்கு வருமென்றெண்ணித் தடுமாறுவதே அதிக மனத்துன்பத்தை விளைவிக்குமென்று என்மட்டில் திருஷ்டாந்த பூர்வமாய் அறிந்தேன்.

மேற்குறித்த பதினைந்து மாசகாலவரையில் அவர்களை வதைசெய்ய வேண்டுமென்னும் அபிப்பிராயமே என்னுள்ளத்தில் மேலிட்டிருந்தது. பெரும்பாலும் பயனுள்ள விஷ

யங்களிற் சிந்தை செலுத்தாமல், இனி அவர்கள் முன்போல் இரண்டு மூன்று கூட்டங்களாய்ப் பிரிந்து சிதறி வருவார்களானால், அவர்களைத் தப்பவிடாமற் சங்கரிக்கத்தக்க உபாயமென்னவென்று சூழ்ச்சியாய் விசாரித்து, யோசித்துக்கொண்டிருந்தேன். ஒரு முறை பத்துப் பன்னிரண்டுபெயர் ஒரு கூட்டமாய் வர, நான் அவர்களைக் கொன்றால், அவ்வளவில் அவர்கள் இத்தீவிற்கு வரும் வழக்கம் ஒழிந்துபோகாதே. மற்றநாளோ, அடுத்தவாரத்திலோ, மாசத்திலோ வருவார்கள். அவர்கள் வர வர, நானும் அவர்களைச் சங்கரித்துக்கொண்டு வருவேன். ஆகவே, மனுஷரைக் கொன்று பட்சிக்கும் அவர்களுக்கும், அவர்களைச் சங்கரிக்கும் எனக்கும் பேதமென்ன? இருதிறத்தாரும் கொலைபாதகர்தாம். ஒருவேளை அவர்களிலும் நானே முதிர்ந்த பாதகனுவே னென்பதாக நான் சொப்பனத்திலும் நினைக்கவில்லை.

ஜீவதயை சிறிதுமில்லாத அந்தப் பரம துஷ்டர்கள் என்னை இன்றைக்கோ, நாளைக்கோ, இன்னும் சில தினங்கள் சென்றோ பிடித்துக் கொன்று பட்சிப்பார்களென்று எப்பொழுதும் எண்ணி, கலங்கித் திகைத்திருந்தேன். அபூர்வமாய் வெளிப்படும் சமயந்தோறும் மிலேச்சர் எதிர்ப்படுவார்களென்றெண்ணி, நான்கு திக்கிலும் கருத்தாய்ப் பார்த்தவண்ணமாகப் போவேன். இப்படி இருக்குங்காலத்தில் காட்டாடுகளைக் கைவசப்படுத்தி வளர்த்துக்கொண்டு வந்தது புண்பட்ட எனது நெஞ்சுக்கு மிகுந்த ஆறுதலாயிருந்தது. வெடிச்சத்தம் கேட்டுக் கெடி கலங்காதபடி, மிலேச்சர் இறங்குங் கரைப்பக்கத்தில் நான் துப்பாக்கி வெடிதீர்க்கத் துணியவேயில்லை. முதல் முறை வெடிச்சத்தங் கேட்டு, அவர்கள் மிரண்டு ஓடித் தப்பினும், பின்பு இருநூறு முந்நூறு ஓடம் நிறைந்த ஜனங்கள் சில தினங்களில் இக்கரையில் வந்து சேர்ந்தால், எனது கதி பரிதபிக்கத் தக்கதாகுமே என்பதாகத் தீரத் தெளியச் சிந்தனைசெய்து, எவ்விதத்திலும் நான் அக்கரையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில்லையென்றுறுதிபண்ணினேன்.

பின்னும் அவர்களை இத்தீவிற் காணப் பதினைந்து மாசம் சென்றது. கண்ட சங்கதி வரலாற்றைச் சீக்கிரத்திற் சொல்

வேன். ஒருவேளை இதற்கிடையில் அவர்கள் இரண்டொரு முறை வந்து போயிருக்கவுங் கூடும். வந்திருப்பார்களானல், கரையில் தங்கவில்லை; தங்கியிருப்பினும், எனக்கு அரவந் தோன்றவில்லை. நான் இக்கரையடைந்த இருபத்து நாலாவது வருஷம் மேமாசத்தில் எனக்கும் அவர்களுக்கும் மிகக் கடுமையான சண்டை நடந்தது. அதைக்குறித்துக் கதைத் தொடர்ச்சியிற் சொல்வேன்.

மேலே குறிப்பித்த பதினைந்து பதினறு மாசகாலத்தில் எனக்குண்டான சஞ்சலம் இவ்வளவென்றில்லை. நான் ஒரு பொழுதும் அயர்ந்து தூங்கவில்லை. பெரும்பாலும் பயங்கரமான சொப்பனங்கள் கண்டேன். சிலவேளை கனுக்கண்டு பயந்து துடித்துப் பதைத்து எழுந்ததுமுண்டு. பகலில் என் மனம் சொல்வதற்கரிய உபத்திரவத்தில் மூழ்கிற்று. இரவில் மிலேச்சரைக் கொல்வதாகவும், கொல்வதற்கு முகாந்தரம் இன்னின்னவென்பதாகவும் கனுக் கண்டேன். நல்லது, இதைச் சற்று நிறுத்தி, இடையில் ஒரு சங்கதி சொல்வேன். மேமீ 16வ பகல் முழுதும் பிரசண்டமாருத மடித்தது. அன்றிரவு அதனுடன் மேகம் மின்னி முழங்கி, கடும்புய லடித்தது. அதன் முகாந்தரம் இன்னதென்றறியேன். நான் வேத புத்தகத்தை வாசித்து, எனது தற்கால ஸ்திதியைப்பற்றி ஆழ்ந்த சிந்தையாயிருக்கும்பொழுது, கடலிற் பீரங்கி வெடி தீர்ந்த சத்தங் கேட்டுத் திடுக்கிட்டேன்.

இவ்வெடிச்சத்தம் கேட்டதனுல் எனக்குண்டான மனக்கிளர்ச்சி ஒருவிதம், முன்பு மிலேச்சரைக் குறித்து எனக்குண்டான திகில் ஒருவிதம். இப்பொழுது எனக்கு நூதன சிந்தனைக ளுண்டாயின. மிக விரைந்து எழுந்து, நொடிக்குள்ளே ஏணியைச் சார்த்தி, குன்றின் சிகரத்திலேறி, கடலைப் பார்த்தேன். பீரங்கித் திரிவாய் மருந்தில் நெருப்புப் பற்றி மினுங்கிய வெளிச்சந் தோன்றிற்று. அரை நிமிஷத்திற்குள் பின்னும் ஒரு பீரங்கி வெடிச்சத்தம் கேட்டது. அது முன்பு கடலில் நீர்ப்பெருக்கு எனது ஓடத்தை வேகமாய் அடித்துக் கொண்டுபோய்விட்ட விடத்திற் பிறந்ததாகத் தோன்றிற்று.

சமுத்திரத்தில் ஏதோ ஒரு கப்பல் அவதிப்பட்டதாகவும், அதில் உள்ளவர்கள் சற்று எட்ட நிற்கும் மற்றொரு கப்பலுக்குத் தங்கள் பிராண ஆபத்தைக் குறிப்பித்து, உற்ற சமயத்தில் உதவிகேட்கும் சின்னமாகப் பீரங்கி வெடி தீர்த்ததாகவும் உடனே நினைத்தேன். அவர்களுக் குதவிசெய்யுந் திராணி எனக்கு இல்லாதிருப்பினும், அவர்களால் எனக்கு ஏதாயினும் சகாயமுண்டாகக் கூடுமென்றெண்ணினேன். அவ்வேளையில் எனக்கு இம்மட்டில் திடசித்த முண்டாயிருந்தது. சமீபத்திலுள்ள உலர்ந்த விறகு கட்டைகள் எல்லாவற்றையும் துரிதமாய் எடுத்துக்கொண்டுபோய், மலைமேற் பெருங் குப்பலாய் அடுக்கி, நெருப்பு மூட்டினேன். விறகு ஈரப்பசுமையின்றி அறக் காய்ந்திருந்ததனால், எளிதில் நெருப்புப் பற்றி, சுவாலித்தெரிந்தது. காற்று உரத்தடித்தும், நெருப்புச் சிதறாமல் நின்றெரிந்தது. அதனால், கரைக்குச் சமீபத்திற் கப்பல் நிற்பது மெய்யானால், கடலோடிகள் இவ்வெளிச்சத்தைச் சந்தேகமின்றிக் காண்பார்களென்று நினைத்தேன். நெருப்பு வளர்ந்து சுவாலித்தெரியவும், பின்னும் ஒரு பீரங்கி வெடி யதிர்ச்சி கேட்டது. அப்புறம் திட்டுத் திட்டென்று பின்னும் பல வெடிகள் கேட்டு, எனது செவிகள் அதிர்ந்தன. ஆனதுகொண்டு, கடலோடிகள் இவ்வெளிச்சத்தைக் கண்டார்களென்று எனக்குச் சித்தப்பட்டது. பொழுது விடியும் வரையிலும் அவிந்துபோகவிடாமல் விறகிட்டு, தீ வளர்த்துக் கொண்டிருந்தேன். சூரியோதயமாகி ஆகாயத்தில் மப்பு நீங்கியபின், தீவின் கீழ்த்திசைமுகமாய்க் கடலில் நெடுந்தூரத்தில் ஏதோ என் கண்ணுக்குத் தட்டுப்பட்டது. அது மாக்கலத்தின் பாயோ, அதன் அடிப்பாகமோ திட்டமாய் இன்னதென்று தெரியவில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கும் தோன்றவில்லை. அது மிகவும் எட்டாக்கையில் இருந்ததனாலும், ஆகாயத்தில் மப்பு மந்தாரம் நீங்கி வெளுப்பு ஏறாததனாலும் அதைக்குறித்து இத்தனை மயக்கமுண்டாயிற்று.

அன்று பகல் முழுதும் அடிக்கடி பார்த்தேன். நான் கண்ட பொருள் நின்ற இடத்தை விட்டுப் பெயராதிருந்ததனால், கப்பல் நங்கூரம்போட்டு நிற்கிறதென்று நிச்சயித்தேன். இவ்வளவில் எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. அது இன்

னதென்று திட்டமாய் நிதானிக்கக் கருதி, துப்பாக்கி எடுத்துக்கொண்டு, தீவின் தென் கீழ்க்கரையில் முன்பு ஓடு நீர்ப்பெருக்கு என்னைத் தள்ளிக் கொண்டுபோய்விட்ட ஓதுங்குப் பார்த்தொடரிருக்கு மிடத்திற்கு விரைந்தோடினேன். அவ்விடத்திற் சேருமுன் ஆகாயம் சுத்தமாய் வெளுத்தது. கண்ணொளிபாயாத கன இருளடர்ந்த ராத்திரிகாலத்திற் கப்பலொன்று பார் தட்டிச் சேதப்பட்டிருந்தது கண்டு, பரிதபித்தேன். அதுதான் நான் ஓடமேறிப் போனபொழுது கண்ட பார். வேகமாயோடும் நீர் அதில் மடங்கித் திரும்பியதனுல், எனக்கு முன்பு நேரிட்ட சொல்வதற்கரிய பிராணபாய ஸ்திதியினின்று மீட்சி பெற்றேனென்று இதற்குமுன் ஓரிடத்திற் சொன்னேனே.

ஆகவே, மேற்சொல்லிய பார்த்தொடரால் எனக்குப் பிராணரட்சையும், அம்மரக்கலத்தி லிருந்தவர்களுக்குப் பிராணநாசமு முண்டாயின. இராத்திரி இருளடர்ந்து கொண்டற் காற்றுப் பலத்து அடித்ததனுல், ஜலத்தில் மறைந்திருந்த பார்த்தொடர்க் குறிப்பைக் காணுமல், கப்பலை அவர்கள் செலுத்த, அது பார்த்தொடரில் தாக்கி ஏறியதாயிருக்கவேண்டும். இந்தத் தீவை அவர்கள் கண்டிருக்கமாட்டார்கள். காண்பார்களானுல், ஓடமேறிக் கரையடைந்து தப்பித்துக்கொள்வார்களே. முக்கியமாய் நான் வளர்த்த பெருநெருப்பு வெளிச்சத்தைக் கண்டபொழுது, உதவிசெய்யக் கேட்கும் சின்னமாகிய பீரங்கி வெடி தீர்த்ததைக்குறித்து எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணினேன். வெளிச்சத்தைக் கண்டவுடன் திடீரென ஓடமேறிக் கரை பிடிக்க விரைந்து செலுத்திக்கொண்டு வரும்பொழுது, பொங்கிப் புரளும் அலைக்கிளர்ச்சியால் ஓடங் கவிழ்ந்து முழுகி இறந்தார்களோ, திரை வளர்ந்து உருவில் தாக்க, ஓடம் சின்னுபின்னமாய் உடைந்ததோ, அவர்களே வலியத் தங்கள் ஓடத்தைக் கடலில் வீசினுர்களோ, சமீபத்தில் நின்ற வேறு கப்பற்காரர்கள் பீரங்கி வெடி கேட்டு வந்து அவர்களைத் தங்கள் மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு போனுர்களோ, ஓடத்தில் இறங்கிப் போகும்பொழுது, ஓடம் நீர்ப்பெருக்குத் திசைமுகமாய்ச் சென்று அகாதமான சமுத்திரத்தி லிறங்கி நாசப்பட்டதோ, அவர்கள்

அங்கே பசிதாகம் தீர்க்க வழியின்றி வருந்தி, ஒருவனை ஒருவர் பட்சிக்கும் விபரீத புத்தி அவர்களுக்கு வந்ததோ எனப் பலவாறெண்ணித் தடுமாறினேன்.

இவைகளெல்லாம் உத்தேசமே தவிர, ஒன்றுவது உறுதியல்லவே. அவர்கள் படும் துன்பத்தைக் கண்டு பரிதபிப்பதொழிய, மற்றப்படி அவர்களுக்குச் சகாயம் செய்யுந் திராணி எனக்கேது. இக்கரைக்குச் சமீபத்தில் உடைந்து சேதப்பட்ட இரண்டு உருக்களிலிருந்த ஜனங்கள் பலரில் நான் ஒருவன்தவிர, மற்றெவரும் கரையேறவில்லையே. என்னை மாத்திரம் கடவுள் இந்தப் பாழ்ந்தீவில் ஏகாந்தமாய்ச் சகல சுகானுபவங்களும் பெற்று வாழ்ந்திருக்கச் செய்ததுபற்றி, நான் அவர் திருநாமத்தை மேலுமேலும் பரிவுகூர்ந்து வாழ்த்தித் துதிக்கவேண்டுமல்லவா வென்றெண்ணி, ராத்திரி உடைந்த கப்பலைக் கண்டு, நற்புத்தியடைந்தேன். அன்றியும், எவ்வகை ஈனஸ்திதியிலிருப்பவர்களும், கஷ்டதசை யடைந்து வருந்துவோரும் அவரவர் நிலைமைக்கேற்க ஏதாயினும் நல்வரங்களைத் தேவமூலமாய்ப் பெற்று அனுபவியாதிருக்கிறதுமில்லை, தம்மிலும் அதிக ஈனஸ்திதியிலிருந்து வருந்துவோரைக் காணுதிருப்பதுமில்லை. மேன்மை கீழ்மை, இன்பம் துன்பம் ஒருவர் பக்கமல்ல.

சேதப்பட்ட கப்பலிலிருந்தவர்களில் ஒருவனுவது தப்பிப் பிழைத்திருப்பதாய் உத்தேசிப்பதற்கு ஆதாரமில்லாதிருந்தது. பக்கத்தில் வேறு மரக்கலம் நின்று, உற்ற சமயத்தில் நெருங்கிச் சென்று, அவர்களை ஏற்றிக் கொண்டுபோனுற் போயிருக்கலாமேதவிர, மற்றப்படி அவர்கள் ஜீவனேடிருப்பதாக எண்ணுவதற் கிடமில்லையே. வேறு கப்பல் வந்து அவர்களுக் குதவிற்றென்று கொள்வதற்கு உறுதியென்ன? வேறு மரக்கலத்தின் அச்சு அடையாளம் அணுவும் எனக்குத் தோன்றவில்லையே.

சிலவேளை எனக்குண்டான அபூர்வ ஆவல் தணியா ஆசை இவ்வளவென்று சொல்வதற்கு ஏற்ற சொற்களில்லை. "ஆ! கடலோடிகள் இருவரல்ல ஒரே ஒருவன்மாத்திரம் தப்பிப் பிழைத்து என்னிடத்திற்கு வருவானுகில், எனக்கும்

ஒரு தோழனிருக்கிறுன், நானும் ஒருவனுடன் சகவாசம் பண்ணுகிறேன் என மனமகிழ்ந்து, அவனுடன் சம்பாஷித்துச் சுகித்திருப்பேனே!" என்பதாகச் சிந்தனே ஓடிற்று. நான் இத்தீவிற் சேர்ந்து, ஏகாங்கியாய் நாட்கழிக்கத் தொடங்கி இத்தனைவருஷஞ் சென்றும், மனுஷர் சகவாசம் வேண்டுமென்று இதற்குமுன் எனக்கு இவ்வித அடங்காத இச்சையுண்டானதுமில்லே, மனுஷர் சகவாசம் எனக்கில்லாததுபற்றி நான் மாறுத் துயரடைந்ததுமில்லே.

நாம் அளவற்ற ஆவலுடன் இச்சிக்கும் பொருள் கண்ணுக்கெதிரே தோன்றுதிருப்பினும், மனோபாவனேயால் தோற்றுவிக்கப்படும். ஆசை செல்லுந் துறையில் மனமும் விரைந்தோடி, இச்சித்தபொருளே இறுகத் தழுவி அனுபவிக்கப் பார்க்கும். இச்சித்தவிஷயம் எதிர்ப்படாதிருந்தால், மீளாத் துயரடைந்து வருந்தும்.

ஒருவனுவது பிழைத்திருப்பானுகில், எனது பாக்கியந் தான்! என்பதாக அநேகந்தரம் அடுத்தடுத்துச் சொல்லி ஆவலித்தேன். எனது ஆசைக்கிளர்ச்சியினுல் இச்சொற்களேச் சொல்லும்பொழுது, விரல்கள் அகங்கையி லழுந்தும்படி இரு கைகளேயும் இறுக்கிப் பிடித்துப் பிசைந்தேன். அவ்வேளேயில் ஏதும் நுண்பொருள் என் கைக்குளிருந்தால், நான் அறியாவண்ணம் அது கசங்கித் தூளாய்ப்போம். பல்லுடன் பல்கிட்டி இறுக மூடிய வாயைச் சற்றுநேரமட்டும் திறக்கக்கூடாதிருந்தது.

பிராணிகுண தர்மநூல் உணர்ந்த நிபுணருக்கன்றி, எனக்கு மேற்சொல்லிய குணத்தின் காரண வரலாறு தெரியாது. நான் அனுபவித்ததைச் சொன்னேன். அது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. அதற்கு மூலமின்னதென் றறியேன். எனது ஆசைப் பெருக்கத்தினுலும், மனோபாவனேயினுலும் என்னேப்போலும் கிறிஸ்து சமயி ஒருவன் இவ்விடத்திற்கு வந்து, நாமிருவரும் சம்பாஷித்து உறவாடி உவப்புறுவதாய் எனது நெஞ்சிற் பலித்ததென்று நம்புகிறேன்.

கரும்பை நினேத்து விரலேக் கடித்தாற் பயனென்ன, தித்திக்குமா? முடியாத கருமம் என்றும் முடியாது. கண்டு

கலந்துபேசிச் சுகிக்கும் நல்வரம் பெறுவதற்கு எனக்கு அதிர்ஷ்டமில்லை, அல்லது அவர்களுக்கு அதிர்ஷ்டமில்லை, அல்லது இருதிறத்தார்க்கும் அதிர்ஷ்டமில்லை. நான் இத்தீவினின்று பிரயாணப்படுகிறவரையில் அவ்வுருவிலிருந்த கடலோடிகளில் எவராவது தப்பிப் பிழைத்திருப்பதாக அறியவில்லை. சில தினங்கள் சென்றபின், ஒரே ஒரு சிறுவனுடைய உடல் கப்பலுடைந்த ஸ்தானத்திற்குக் கிட்டிய தீவின் அந்தத்திற் கரையடைந்தது கண்டேன். கடலோடிகள் தரிக்கும் மார்பங்கி ஒன்றும், முழந்தாள்வரையிற் சணனூற் காலங்கியும், சணனூல் நெசவான உள்ளங்கி யொன்றுந்தவிர, வேறு வஸ்திரங்களை அந்தப் பிரேதத்தில் நான் காணவில்லை. தேச விவரம், ஜாதி விவரம் அறியும்படி ஒரு குறிப்பையும் நான் காணவில்லை. அங்கியுறைக்குள் நாணயம் இரண்டும், புகை பிடிக்கும் சுங்கான் ஒன்றுமிருந்தன. அந்த நாணயத்தைப் பார்க்கிலும் சுங்கான் எனக்குப் பதின்மடங் கருமை.

காற்றும் கடலும் அடங்கிச் சாந்தமாயிருந்ததனால், எனக்குதவும் பொருள் ஏதாயினும் அகப்படுமென்றும், கடலோடிகளில் எவனாவது பிழைத்திருப்பது கண்டால், நான் அவனைக் கரையேற்றி, மரணபரியந்தம் அவனுடன் சகவாசஞ் செய்து, சுகித்திருக்கலாமென்றும் நினைத்து, எனதோடத்தில் ஏறிப்போய் உடைந்த உருவைப் பார்க்கப் பேராசைகொண்டிருந்தேன். ஓடமேறிப் போகவேண்டுமென்னும் ஆசையால் என்னுள்ளம் நிறைந்ததுபற்றி, இராப்பகல் அவ்வொரு நினைவொழிய மறு நினைவற்றிருந்தேன். இந்த அபிப்பிராயம் வரவரப் பலத்து முதிர்ந்ததனால், அது கடவுள்மூலமாய் உற்பத்தியானதென்றும், அதற்கு இடங்கொடாதிருப்பது தோஷமென்றும், திருவுள்ளத்தின்செயலால் வருவது வருமென்று மெண்ணி, ஓடமேறிப் போகத் தீர்மானித்தேன்.

எனதுள்ளத்திற் பிறந்த அபிப்பிராயம் சற்று மிளக்கவில்லை. நான் வீட்டுக்கு விரைந்துபோய், பிரயாணத்திற்குரிய எத்தனங்களனைத்தும் செய்து, ரொட்டி, ஒரு குடம் சுத்த ஜலம், ஓடம் செலுத்துவதற்குத் திசையறிகருவி, ஒரு புட்டி றம்சாராயம், (இதில் செலவழிந்ததுபோகப் பின்னும்

அதிகம் வைத்திருந்தேன்.) ஒரு கூடை திராட்சப்பழ வற்றல், பின்னும் ஆவசியகமான பொருள்வகை இவை யாவுமெடுத்துக்கொண்டு, ஓடக்கரைக்குப் போய், அதிலூறிய ஜலத்தை இறைத்தபின், அதைக் கடலிலிறக்கி, கொண்டுபோன பண்டபதார்த்தங்களை ஏற்றி, பின்னும் வேண்டும் பொருளெடுத்து வரும்படி வீட்டுக்குத் திரும்பினேன். இரண்டாந்தரம் நான் மெய் வெயர்க்க வருந்தி எடுத்துக்கொண்டு போய் ஓடத்திலேற்றிய பொருட்கள் ஒரு பை அரிசி, வெயிலுக்குப் பிடிக்கக் குடை, பின்னுமொரு குடம் தண்ணீர், சிறு யவை ரொட்டி பின்னு மிருபத்துநாலு, வெள்ளாட்டுப் பால் ஒரு புட்டி, பாலடைக்கட்டி ஒன்று. சிந்தாயாத்திரையாய்ப் போய்ச் சேரும்படி கடவுளைப் பிரார்த்தித்து, ஓடமேறி, கரையோரமாய்த் தண்டு வலித்துக் கொண்டுபோய், தீவின் வடகிழக்கு அந்தத்திற் சேர்ந்தேன். அங்கிருந்து ஆழ்ந்த சமுத்திரத்தில் ஓடத்தைத் திருப்பிச் செலுத்த என் மனந்துணியவில்லை. சற்றுத் தூரத்தில் தீவின் இருபக்கத்திலும் வேகமாய் நீர் பெருகுவது கண்டு, எனக்கு முன் ஒரு முறை நேரிட்ட பிராண சங்கடத்தை நினைத்துக் கெடிகலங்கி மனத்தளர்ச்சி யடைந்தேன். அவ்விரு நீர்ப்பெருக்குகளில் எதிலாயினும் எனது ஓடமிறங்கினுல், பெரும் சமுத்திரத்தில் தீவின் கரை மறைய எட்டாக்கையில் விரைவாய்த் தள்ளிக் கொண்டு போகப்படுமென்றும், சடிதியிற் காற்றுக் கிளம்பி உரத்தால், எனது சிற்றோடங் கவிழ்ந்து நான் முழுகி இறந்து போவேனென்றும் நினைத்து ஏங்கினேன்.

இந்த நினைவுகளால் என் மனம் வருந்தியதினிமித்தம், துணிந்து செய்யத்தொடங்கிய கருமத்தை முடியாதென்று நிறுத்திவிட்டு, கரையொதுக்கில் ஓடத்தை ஒதுக்கி நிறுத்தி, கரையிலிறங்கி, அங்குள்ள மேட்டுநிலத்தில் உட்கார்ந்து, "கூழுக்குமாசை மீசைக்குமாசை" என்னும் பழமொழிப்படி, பிரயாணம் போவதற்குப் போராசையும், அதில் நேரிடுமபாயத்தை நினைத்து அச்சமுமுள்ளவனுயிருந்தேன். இவ்வண்ணம் ஆழ்ந்த சிந்தனையாயிருக்கையில், நீரோட்டத்திசை மாறியதும், நீர்ப்பெருக்கு வந்ததுங் கண்டேன். நீர் வற்றுமளவும் ஓடமேறிச் செல்வதற் கிசையாது. உயர்ந்த மேட்டு

நிலத்தில் ஏறி நின்று பார்த்தால், கடல் பெருகத் தொடங்கிய பொழுது நீரோடிய திசை இன்னதென் றறியலாமென்றும், ஓடத்தை விரைவிற் கரைக்கு ஒதுக்கிவிடத்தக்க நீரோட்டம் இன்னதென்று நிதானிக்கலாமென்றும் நினைத்தேன். எனக்குள் இந்த நினைவு பிறந்தவுடன் இரண்டு திக்கிலுங் கடலை நெடுந்தூரவரையில் தடையின்றிக் காணத்தக்க சிறு குன்றொன்று என் கண்ணுக் கெதிர்ப்பட்டது. அதில் ஏறி நின்று பார்த்தபொழுது, நீரோடும் திசைகளின் குறிப்பையும், திரும்பி வரும்பொழுது இன்ன திசைமுகமாய் ஓடத்தைச் செலுத்தவேண்டுமென்னும் குறிப்பையும் பிரத்தியட்சமாய்க் கண்டேன். மேலும், கடல் வற்றும்பொழுது நீரோடத் தொடங்குமிடம் தீவின் தெனமுனைக்கு நெருங்கியிருந்ததென்று கண்டு, கடல் பெருகும்பொழுது வடபாகத்தின் கரைக்குச் சமீபத்தில் நீரோடும் இடக்குறிப்பிருக்குமென்று நிதானித்து, திரும்பி வரும்பொழுது, தீவின் வடபக்கத்தைச் சார்ந்து ஓடத்தைச் செலுத்தினுல், இடையூறின்றிக் கரைசேரலாமென் றறிந்தேன்.

நான் கண்டறிந்தவைகளால் எனது மயக்கந் தெளிய, மனந் தேறிற்று. மற்றநாட் காலையில் நீரோடும் சமயம் பார்த்துப் பிரயாணப்பட நிர்ணயித்து. அன்றிரவு இதற்கு முன் ஓரிடத்தில் நான் குறிப்பித்த கப்பற் காவற்சேவகர் தரிக்கும் பெரிய அங்கி தரித்து, ஓடத்திற் படுத்து நித்திரை செய்து, அதிகாலையிற் பிரயாணப்பட்டேன். முதலில் நேர் வடக்காகக் கடலிற் சற்று எட்டப் போனேன். கிழக்கு முகமாயோடிய நீர்ப்பெருக்கில் இறங்கியபொழுது, ஓடம் தீவிரகதியாய்ச் சென்றது. முன்பு தெற்குமுகமாய் ஓடிய நீர்ப்பெருக்கிற் சேர்ந்தபொழுது, என்னை மீறி ஓடம் அதிகதியாய்ச் சென்றதே; இப்பொழுது அத்தனை விரைவாய் ஓடவில்லை. பலமாய்த் தண்டு வலித்து, உடைந்த உருவுக்கு நேரே ஓடத்தைச் செலுத்தி, இரண்டு மணி நேரத்திற்குட் போய்ச் சேர்ந்தேன்.

அது பட்டிருந்த பாட்டைப் பார்த்துப் பரிதபித்தேன். ...னிய கப்பலின் சாயலுடைத்தாயிருந்த அவ்வுரு இர...ு பார்களினிடையில் அகப்பட்டுக் கெட்டியாய்ப்

பொறுத்து நின்றது. அதன் அபரமும் பின்னணியமும் எறிதிரை தாக்கிச் சின்னபின்னமாய் உடைந்துபோயின. பார் தட்டிப் பொறுத்த அதன் முன்னணியம் வேகமாய்த் தாக்கிய அதிர்ச்சியினாற் சேதப்பட்டிருந்தது. தலைப் பாய்மரமும் முற் பாய்மரமும் அடியோடே முறிந்துபோயிருந்தன. அணியப் பாய்மரமோ பழுதின்றிப் பலமாயிருந்தது. நாவாய்த் தலையும், அதன் இரு கன்னமும் உறுதியாயிருந்தன. உருவிற்கு நெருங்கிப் போனபொழுது, அதிலிருந்த நாய் ஒன்று என்னைக் கண்டு, பரிதாபமாய்க் குலைத்து அழுதது. நான் அதைக் குறிப்பினால் வரவழைக்கவும், அது கடலிற் குதித்து, நீந்தி வந்தது. நான் அதைத் தூக்கி ஓடத்திலேற்றி, பசி தாகத்தால் வாடி மெலிந்து குறைப்பிராணியாயிருந்தது கண்டு, முதலில் ஒரு ரொட்டி எடுத்துப் போட்டேன். பதினைந்து நாள்வரையிற் பட்டினியிருந்து பனியில் விறைத்த ஓநாயைப்போல் அடங்காத ஆவலுடன் அது அந்த ரொட்டியைப் பரபரென்று தின்றது. பிறகு அவ்வெளிய பிராணிக்குக் கொஞ்சத் தண்ணீர் குடிக்கக் கொடுத்தேன். அதற்கிஷ்டமானவளவு குடிக்க விடுவேனாகில், விலாப்புடைக்கக் குடித்து அதன் வயிறு வெடித்துப்போகு மென்பதற்கு ஐயமில்லை. அந்த நாய்க்குத் தாகம் அவ்வளவு மேலிட்டிருந்தது.

பிற்பாடு உருவிலேறிப் பார்த்தபொழுது, மடைப்பள்ளியறையில் இரண்டு பிரேதங்கள் ஒன்றையொன்று இறுகத் தழுவியபடி ஜலத்தில் மிதந்தன. மரக்கலம் பார் தட்டியபொழுது புயலடித்ததனால், அலை பொங்கிப் புரண்டு உருவில் நீர் இறைத்தவண்ணமாயிருக்க, அங்கிருந்த கடலோடிகள் ஏறிய நீரில் மூழ்கித் திக்குமுக்காடி இறந்தார்கள் போலும். அவ்வுருவில் ஏறியவர்களிற் பிராணகண்டம் தப்பிப் பிழைத்திருந்தது மேற்சொல்லிய நாயொன்றே. அங்கிருந்த சரக்கு முதலிய பண்டபதார்த்தங்களனைத்தும் நீர் ஊறி, பழுதாய்ப் போயின. அடியிற் சாராயப் பீப்பாக்கள் சில இருந்தன அது திராட்சரச பானமோ, பிராண்டி என்னும் சாராய[illegible] அறியேன். கடல் வற்றும் நேரத்தில் வெள்ளம் வடிந்தோடி[illegible] பின், அப்பீப்பாக்களை வெளியாய்க் கண்டேன். மிக[illegible]

பாரித்தவைகளானதால், அவைகளைப் பெயர்க்கக் கூடா திருந்தது. கடலோடிகளுடைய பெட்டிகள் சிலவற்றைக் கண்டு, இரண்டை எடுத்து ஓடத்திலேற்றினேன். உள்ளி ருந்த பொருள் இன்னதென்று அறியும்படி நான் திறந்து பார்க்கவில்லை.

பின்பு அந்தப் பெட்டிகளைத் திறந்து, அங்கிருந்த பொருள் வகையைக் கண்டு, சேதப்பட்ட அவ்வுருவில் மிகுந்த திரவி யம் ஏறியதென் றுத்தேசித்தேன். அந்த நாவாயின் பின்னணி யம் பார் தட்டிப் பழுதின்றிப் பொறுத்து நிற்கவும், முன் னணியம் உடைந்துபோகவும் சம்பவித்தால், இந்தப் பிரயா ணத்தில் திரண்ட திரவியம் எனது கையிற் சிக்குமென்பதற்கு ஐயமில்லை. கப்பல் திரும்பிநின்ற திக்கு நிலையைப் பார்க்கு மளவில், அது மேக்ஸிகோ கடற்குடாவிலுள்ள கியூபா தீவின் ராஜதானியாகிய ஹவனு துறை கண்டு, ஸ்பானிய துறைக் குப் போகும்படி பிரேஜில் பிரதேசத்திற்கு அப்புறத்தில் தென்அமெரிக்காக்கண்டத்தின் தென்பாகத்திலுள்ளபியுஎனஸ் ஏர்ஸ் துறையினின்ருவது, ரையோ டி லாபிலாத்தா துறையி னின்ருவது பிரயாணப்பட்டிருக்கவேண்டுமென்று என் புத்தி யிற்பட்டது. அதிலுள்ள திரண்ட திரவியப்பொருள் வகை அனைத்தும் உப்புநீரூறி, ஒருவருக்கு முதவாமற்போயின. நான் பிரேதமாய்க் கண்ட இருவரொழிந்த மற்றவர்களுக்கு என்ன சம்பவித்ததென்றறியேன்.

முன்பின் இருபது கலன் சாராயம் விட்டடைத்த சிறிய பீப்பா ஒன்றைக் கண்டெடுத்து, அதையும் ஒருபடி ஓடத் தில் இறக்கி வைத்தேன். அன்றியும், அறைக்குட் சில பெருந்துப்பாக்கிகளும், பாரிய வெடிமருந்துக் கொம்பொன் றும் இருந்தன. செலவில்லாததனுல் துப்பாக்கிகளை விட்டு, மருந்துக் கொம்பைமாத்திர மெடுத்தேன். அதற்குள் மருந்து நாலு ருத்தல்வரையி லிருந்தது. மேலும், எரிதழற் கரண்டி ஒன்றும், எனக்கு மிகவும் உதவியான குறடு ஒன்றும், சிறிய பித்தளைக் கொப்பரை இரண்டும், பலகாரம் சுடும் செப்புப் பாத்திரமொன்றும், இறைச்சி சுடுங் கருவி ஒன்றும் அகப்பட் டன. நாயையும், மேற்சொல்லிய பண்டபதார்த்தங்களையும் ஏற்றிக்கொண்டு, கரைமுகமாய் நீரோட்டம் திரும்பியத

ஞல், ஓடத்தைத் திருப்பிச் சூரியன் அஸ்தமிக்க ஒரு மணி நேரத்திற்குமுன் மிகவும் இளைப்புற்றுக் கரைபிடித்தேன்.

அன்றிரவு ஓடத்திற் படுத்து நித்திரைசெய்து, மற்றநாட் காலையிலெழுந்திருந்து, எனக்கு அகப்பட்ட பண்டபதார்த்த முதலியவைகளை மலைக்கோட்டைக்குக் கொண்டுபோகாமல், சமீபகாலத்திற் கண்ட குகைக்குள் க்ஷேமித்து வைக்கத் தீர்மானித்தேன். இளம் பசி ஆறியபின், சரக்கை இறக்கி ஒவ்வொன்ருகச் சோதனை செய்தேன். பீப்பாவில் இருந்தது சுவையற்ற ஒருவகை ரம் சாராயம். அது பிரேஜில் நாட்டில் இருந்தபொழுது, நான் பானம்செய்த சாராயத்தின் தன்மையுள்ளதல்ல. பெட்டிகள் இரண்டிலும் என் செலவிற்குதவும் பொருள்வகை பல இருந்தன. ஒரு பெட்டியில் வாசனை ஊட்டிய உசிதமான தீம்பானீயம் விட்டு அடைத்த புட்டிகள் அநேகமிருந்தன. ஒவ்வொரு புட்டியிலும் ஒன்றரைப்படி பானீயம்வரையில் விட்டடைத்து, அதன் வாய்க்கு வெள்ளித்தகட்டு மூடி இடப்பட்டிருந்தது. மேலும், அதிரசவர்க்கம் வைத்து உப்புநீர் உட்செல்லாதபடி மேற்சொல்லியவாறு வெள்ளித்தகட்டு வாய்மூடி இடப்பட்ட கலயங்கள் இரண்டிருந்தன. அவ்வித மூடியில்லாத மற்றிரண்டு கலயங்களில் நீர் ஏறிப் பலகாரம் பழுதாய்ப்போயிற்று. மிக நாணயமான சில உள்ளங்கிகளும், பதினெட்டு வெள்ளைச் சணனூற் கைக்குட்டைகளும், சாயக் கழுத்துக் குட்டைகளு மிருந்தன. உள்ளங்கிகள் அகப்பட்டது என் பாக்கியந்தான். உஷ்ணகாலத்தில் வெயர்க்கும்பொழுது, முகந் துடைப்பதற்கு அந்தக் கைக்குட்டைகள் எனக் குபயோகப்பட்டன. பெட்டியின் அறைக்குள் மூன்று பை நிறைய ஒருவித நாணயமிருந்தது. ஆக மொத்தம் ஆயிரத் தொருநூறு. ஒரு பைக்குள் பதினுறு ரூபாய் மோரா ஆறும், சில சிறு பொற்பாளங்களும் ஒரு கடிதச் சுருளிலிருந்தன. அவைகள் எல்லாங்கூடி ஒரு ருத்தல் இருக்கும்.

மற்றப் பெட்டிக்குள்ளிருந்த வஸ்திரங்கள் சில எனக்கு உபயோகமற்றவைகள். அதிற் சாமானிய வெடிமருந்து இல்லை. பளிங்கு மினுக்கிட்ட வெடிமருந்து இரண்டு ருத்தல் வரையில் மூன்று குண்டிகைகளி லிருந்தது. சமயத்திற்

குருவிக் குழாய்த் துப்பாக்கிகளில் கெட்டித்து வெடி தீர்க்கும்படி அவ்வெடிமருந்து அங்கே வைக்கப்பட்டிருந்தது போலும். இக்குறிகளால் அந்தப் பெட்டி உபபீரங்கிச் சேவகனுடையதென்று யூகித்தேன். இத்தனை கஷ்டப்பட்டு ஓடமேறி உருவிற்குப் போய் வந்தும், என் செலவிற்கு முக்கியமாய் உதவும் பொருள் அதிகம் அகப்படவில்லை. நான் எடுத்துவந்த நாணயம் எனக்கு எவ்விதத்திலும் உபயோகப்படாது. அது எனது காலிற்படும் துகளுக்குச் சமானம். அங்கிலேய பாதரட்சையும் பாதகோசமும் அநேக வருஷ காலமாய் எனக்ககப்படவில்லை. மூன்று நாலு ஜோடு கிடைக்குமானுல், அந்தப் பணம் முழுதையும் கொடுத்தாவது வாங்கிக்கொள்வேன். மடைப்பள்ளியறையிற் கண்ட பிரேதங்களின் காலிலிருந்த இரண்டு ஜோடு பாதரட்சைகளையும், ஒரு பெட்டிக்குள்ளிருந்த இரண்டு ஜோடு பாதரட்சைகளையும் எடுத்து உபயோகப்படுத்தினேன். அவைகள் கனதியற்ற ஒற்றைத் தோலடிப் பாதரட்சைகள். அங்கிலேய பாதரட்சைகளைப்போலக் காலுக்குச் சொகுசானவைகளுமல்ல, விரைவில் தேய்ந்துபோகாமல் நாட்பட இருக்கத் தக்கவைகளுமல்ல. கடலோடியுடைய பெட்டிக்குள் நாணயம் ஐம்பதிருந்தது. பொன் இல்லை. இந்தப் பெட்டிக்காரன் மூன் சொல்லிய பெட்டிக்காரனைப்போலப் பணக்காரனல்லவென்று எண்ணுகிறேன். அவன் உத்தியோகஸ்தன்போலும்.

உதவாதென்று எறிந்துவிடாமல், அகப்பட்ட பணத்தைச் சுமந்துகொண்டுபோய்க் குகையிற் பத்திரமாய் வைத்தேன். இதுவன்றி, முன்பு எங்கள் உருவிற் கண்டு எடுத்துக்கொண்டுவந்த பணமும் என் வசமிருந்தது. கப்பலின் பின்னணியம் பார்தட்டிப் பொறுத்துநிற்கச் சம்பவித்தால், எனது ஓடத்தில் அடுத்தடுத்து அநேக நடை ஏற்றிக் கொண்டுவரத் தக்க ரொக்கம் அகப்படுமென்றும், அதை நான் குகைக்குட் க்ஷேமித்துவைத்தால், இங்கிலாந்திற்குத் திரும்பிப் போக விடம்பெறினும், மறு பயணம் வருமளவும் அது குகையிற் பத்திரமாயிருக்குமென்றும் நினைத்து, உருவின் பின்னணியம் சேதப்பட்டது எனது துர்ப்பாக்கியமென்று பரிதபித்தேன்.

கிடைத்த பொருளனைத்தையுங் கொண்டுபோய் க்ஷேமித் தபின், கடற்கரைக்குத் திரும்பி, ஓடமேறி, அதை முன் நின்ற துறைக்குச் செலுத்திக் கொண்டுபோய்க் கட்டி, அதன் மேல் எனது பூர்வ வாசஸ்தானத்திற்கு விரைந்து போனேன். அங்கே நூதனமொன்றையும் நான் காணவில்லை. முன் னிருந்தபடி யாவும் க்ஷேமமாகவும் அமைதியாகவுமிருந்தன. பின்பு நான் இளைப்பாறி, முன்போல் அடங்கியிருந்து, குடும்ப காரியங்களைச் சிதறவிடாமல் நிர்வகித்துக்கொண்டு, சில காலவரையில் கிலேசமற்றிருந்தேன். முன்னிலும் அதிக ஜாக்கிரதையாயிருந்து, அடிக்கடி மலைச் சிகரமேறி, ஆட்கு றிப்புச் சோதனை பார்த்தேன். முன்போல நான் நெருங்கி வெளிப்படவில்லை. தீவின் கீழ்ப்பாகத்தில் மிலேச்சர் ஒரு பொழுதும் வருவதில்லையென் றறிந்ததனால், ஏதும் வேலை முகாந்தரமாய் அவ்விடத்திற்குப் போம்பொழுது, சர்வாயுத வர்க்கம் தரிக்காமல் நிர்ப்பயமாய்ப் போனேன். மற்றப் பக்கத்துக்கு நான் போவதேயில்லை. அரிதாய்ப் போகும் பொழுது, துப்பாக்கி கத்தி முதலிய சர்வாயுதங்களுந் தரித் துக்கொண்டு அதிக ஜாக்கிரதையாய்ப் போய் வருவேன்.

## 14. அத்தியாயம்.

எனக்கு உண்டான சிந்தனைகள். அபூர்வ சொப்பனம் கண்டது. ஐந்து ஓடங்களில் மிலேச்சர் வந்து கரையேறியதைக் கண்டது. அவர்கள் கதியற்ற இரண்டு பெயரை ஓடத்தினின்று இறக்கிக் கொன்று பட்சிக்கும் படி கரையேற்றியதை நான் நின்ற இடத்தில் நின்றபடி கண்டது. ஒரு வன் அவர்கள் கைக்கு விலகி எனது இடத்திற்கு நேர்முகமாய் வர, இரு வர் அவனைத் தொடர்ந்தது. தொடர்ந்தோரைச் சங்கரிக்கவும், அவன் உயிரைக் காக்கவும் நான் பிரயத்தனஞ் செய்தது. அவனுக்குச் சுக்கிர னென்று நாமதாரணம் செய்ததும், அவன் எனக்கு உண்மையும் யோக்கி யதையுமுள்ள தொண்டனானதும்.

பின்னும் இரண்டு வருஷம் செல்லுகிறவரையில் எனது நிலைமை மேற்சொல்லியபிரகாரம் இருந்தது. துர்ப்பாக் கியனாய்ப் பிறந்த எனது கெடுமதியே எனக்கு நேரிட்ட ஆபத் துகளனைத்திற்கும் காரணமென்று எப்பொழுதும் திருஷ்

டாந்தபூர்வமாய் எனக்குத் தெரியுமே. அக்கெடுமதியால் இந்தத் தீவினின்று விலகி மீட்சி யடைதற்கு என்னென்ன உபாய சாதனங்களுண்டென்று இந்த இரண்டு வருஷ முழுதும் என் மனம் சிந்தித்தவண்ணமாயிருந்தது. உடைந்த உருவில் எனக்குதவும் பொருள் ஒன்றுமில்லாததனால், நேரிடும் அபாயத்தை எண்ணாமல், மீண்டும் அவ்வுருவிற்கு ஓடமேறிப் போவது அனர்த்தமென்று விவேகந் தடுக்க, அத்தடையைப் பொருள்செய்யாமல் சில வேளை பின்னும் ஒரு பிரயாணம் போக நினைத்தேன். சில வேளைகளில் வேறிடங்களுக்குப் பிரயாணப்படக் கருதினேன். ஸல்லி துறையினின்று ஏறி ஒளித்து ஓடின ஓடம் என் வசமிருந்தால், இலக்கின்றிச் சேருமிடத்திற் சேரட்டுமென்று நான் அதிலேறிச் சமுத்திர யாத்திரை செய்வேன் என்பதற்கு ஐயமில்லை.

மனுஷரிற் பெரும்பான்மையோர் தமது நிலைமை காரியாகாரியங்களின் இயற்கைப்படி கடவுள்மூலமாய் ஏற்பட்டதென் றெண்ணித் திருப்தியடையாமல் மனக்குறை கொள்வதும், கொள்ளைநோய்க்குச் சமானமாகிய அம்மனக்குறையே அவர்களுக்கு நேரிடும் கஷ்ட நஷ்டங்கள் ஆபத்துகளிற் பாதியை விளைவிக்கிற காரணமாயிருப்பதும் வாஸ்தவமென்று மெய்ப்பிக்கும் ஞாபக முத்திரை நான்தான். எனது பூர்வ நிலைமையையும், தந்தை புகட்டிய நற்புத்தியைப் பாவக் குணத்தின் சேஷ்டையால் நான் அலட்சியம் செய்ததையும் இவ்விடத்தில் யோசியாதுவிடினும், அதன்பின் அடுத்தடுத்து நெறி தவறி நடந்ததனாலேதான் எனக்கு இந்தக் கஷ்ட தசை வந்தது. திருவுள்ளத்தின் செயலால் பிரேஜில் நாட்டிற் சேர்ந்து பயிர்த்தொழில் செய்யத் தொடங்கி, அது அனுகூலப்படுமென்று கண்ட நான் எனது பொருளாசையை மீறவொட்டாமல் அடக்கி, உள்ளது போதுமென்று ரமித்திருந்து, சிறிது சிறிதாய்ச் சேரும் திரவியத்தைச் சிதைக்காமல் திரட்டி வைத்திருப்பேனானால், இதற்குள் நான் பிரேஜில் நாட்டில் பணமுதலிட்டுப் பயிர் செய்விக்கும் பாரிய வர்த்தகனாவேனே. நான் அங்கிருந்த சொற்பகாலத்தில் எனக்குண்டான அபிவிருத்தி அதிகம். பதைக்காமற் பொறுத்திருந்து, என் காரியத்தைச் சீராய் நிறைவேற்றி வருவேனானால், இப்

பொழுது பதின்மூன்று லக்ஷத்து ஐம்பதினுயிரம் ரூபாய் வரையில் ரொக்கம் வைத்திருப்பேன். பிரேஜில் நாட்டில் கிரயத்திற்கு நிலம் வாங்கிக் கிருஷித்தொழிற்குரிய உபகரணங்களனைத்தையும் குறைவறச் சேகரித்துப் பயிர்செய்து, அது நாளொரு வண்ணமாய்ச் சேஷ்டித்து வருவது கண்ட நான், பதைக்காமற் புத்திபூர்வமாய் நடந்து சலியா முயற்சி செய்தால், இருந்தவிடத்தில் எனது ரொக்கம் விர்த்தியாகாதா? தோட்டத்தில் வேலைசெய்வதற்கு வர்த்தகர் நமது வாசலிற் கொண்டுவந்து விற்கும் நிகிரோவரைக் கிரயங் கொடுத்து வாங்கக்கூடாதா? இதை எண்ணுமல், என் சீரைத் தளம்பவிட்டு, நிகிரோவரைக் கிரயத்திற்கு வாங்கும்படி வர்த்தகருடைய காரியகர்த்தனுய் ஏற்பட்டு, நான் கப்பல் ஏறி, கினியாவிற்குப் போகத் துணிந்த முகாந்தரமென்ன? இது என் மதிகேடல்லவா? அற்ப சகாய விலைகொடுத்து வாங்கக் கருதி, எவருமற்ற நான் ஆழ்ந்த சமுத்திரத்தில் ஆசையின் வசப்பட்டுப்போனது புத்தி யல்லவென்று எவரும் சொல்வார்கள்.

பின் வருவதை எண்ணுமல் மனம்போன வழியில் துணிந்து செல்வது இளைஞரியற்கை. பருவம் ஏற ஏற, அவர்கள் தமது துர்மதியால் விளைந்த கஷ்ட நஷ்டங்களைத் திருஷ்டாந்த பூர்வமாய்க் கண்டு சீர்ப்படுவார்கள். இவ்வாறு தாம் பட்ட பாட்டை எண்ணி, சித்தம் தெளிந்து சீர்ப்படுவது பருவமேறிய ஆடவர் இயற்கை. எனது நிலைமை இத்தன்மையதாயிருந்தது. என் புத்தி மாருட்டம் நன்ருய் வேரூன்றி நிலைப்பட்டதனுல், எனது நிலைமையை எண்ணி என் மனம் எப்பொழுதுங் குறைகூறியது. இவ்விடத்தினின்று விலகும் சாதன சாத்தியங்களைக் குறித்து நான் இடைவிடாமற் சிந்தித்துக்கொண்டிருந்தேன். குறைக் கதையை வாசிப்பவர்களுக்கு இன்பமுண்டாம்படி, நான் இத்தீவை விட்டு விலகுவதற்கு நிர்மதியாய்ச் செய்த வுபாயத்தைக்குறித்து ஆரம்பத்தில் எனக்கு உண்டான சிந்தனைகளையும், நான் நடந்த வகையையும், அதன் நியாயவாதாரத்தையும் சுருக்கிச் சொல்வேன்.

உடைந்த உருவிற்குப் போய் வந்து, ஓடத்தை வழக்கமான துறையிற் கட்டி, எனது வாசஸ்தானத்திற்குத் திரும்பி

அடங்கியிருந்து, முன்போல நாட் கழித்தேனே. இதற்கு முன் இருந்ததற்கு இப்பொழுது என் வசமிருந்த திரவியம் அதிகமாயினும், நான் எவ்வளவும் தனவானுகவில்லை. ஸ்பானிய தேசத்தார் பிரு நாட்டிற்குப் போகுமுன், அங்குள்ள இந்தியருக்கு எப்படியோ, அப்படியே எனக்கும் இந்தப் பணம் பிரயோசனப்படாதிருந்தது.

இப்பாழ்ந்தீவில் நான் ஏகாந்தமாய்ச் சஞ்சரித்த இருபத்து நாலாவது வருஷம் மார்ச்சு மாசம் மழைகாலத்தில் ஒருநாள் இரவு நான் தூங்குமஞ்சத்தில் நித்திரை செய்யப் படுத்திருந்தேன். இராமுழுதும் கண்ணேடு கண் மூடவில்லை, விழித்தவண்ணமாயிருந்தேன். எனக்கு எவ்வளவும் சௌக்கியத் தாழ்வில்லை. சரீர வருத்தம், வியாதி, நோய் எதுவுமில்லை. விசேஷ மனத்துன்பமுமில்லை. எனக்கு நித்திரை வராத முகாந்தரம் இன்னதென்று சொல்லுகிறேன்.

அன்றிரவு எனது உள்ளத்திலும் ஞாபகத்திலும் நிகழ்ந்த எண்ணிறந்த நினைவுகளை ஒவ்வொன்ருய்ச் சொல்வது சாத்தியமுமல்ல, ஆவசியகமுமல்ல. நான் இத்தீவில் வந்து இறங்கிய நாள்முதற் சம்பவித்த சங்கதிகளையும், அதுமுதல் இது பரியந்தம் நடந்த வரலாறுகளையும் சுருக்கத்திற் சிந்தனை செய்தேன். நான் இத்தீவிற் கால்வைத்த நாள்முதல் பல வருஷமளவும் என் மனம் மகிழ்ந்து சுகிக்கும்படி எனக்குண்டான அபிவிருத்திகளையும், கடற்கரை மணலில் மானிடர் காலடிச் சுவடு கண்டதினம் தொடங்கி இடையருது எனக்கு நேர்ந்த துயரத்தையும், அச்சத்தையும், விசாரத்தையும் இணையாக வைத்துத் தாரதம்மியம் பார்த்தேன். மிலேச்சர்கள் நான் இத்தீவிற் சேர்ந்தபின் பலமுறை இவ்விடத்திற்கு வந்திருப்பார்கள். திரளாகச் சேர்ந்து வந்திருக்கவுங்கூடும். காலடிச் சுவடு காணுமுன் அவர்களைக்குறித்து நினைக்கவும் அஞ்சவும் நிமித்தமில்லையே. ஆனதுபற்றி, நான் கிலேசமற்றிருந்ததாக வெளியிட்டேன். எனக்கு நேரிடு மபாயம் எப்பொழுதும் ஒன்றுதான். இன்ன அபாயம் நேரிட்டதென்று அறியாததனுல், வாஸ்தவமாய் ஏதும் அபாயமில்லாதவன்போலச் சந்துஷ்டியாயிருந்தேன். இதை ஆதாரமாய்க் கொண்டு, என் மனதில் அநேக பிரயோஜனகரமான சிந்தனைகளுண்டாயின.

அவற்றுட் பின்வருவது முக்கியம். பூலோகத்தில் மனுஷனை ஆண்டு நடத்திவரும் கடவுள் அவர்கள் திருஷ்டியையும் அறிவையும் ஒடுக்கி வரையறுத்திருப்பது அவர்களுக்குச் சொல்லி முடியாத நன்மையே. லக்ஷக்கணக்கான ஆபத்துகள், அபாயங்கள் எத்திக்கிலும் மனுஷனைச் சூழ்ந்து நெருங்கியிருக்கின்றன. அவன் அவைகளைக் காண்பானாகில், கண்ட க்ஷணமே கலக்கமுற்றுத் திகைத்து மனம் குன்றிச் சீரழிவான். அவனுக்கு நேரிடும் ஆபத்துகள் அவன் திருஷ்டிக்குத் தோன்றாமலும், தன்னைச் சூழுந் தீங்கொன்றையும் அறியாமலும் இருப்பதனால், அவன் சஞ்சலமின்றிச் சாந்தமாயிருக்கிறான்.

சற்றுநேரம் இச்சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்த்தபின், இத்தனை வருஷகாலமாய் இந்தப் பாழ்ந்தீவில் எனக்கு நேரிட்டிருந்த விக்கினத்தையும், சிறுமலைச் சிகரத்தின் மறைவிலும், பெருமரத்தினுதுக்கிலும், இருளடர்ந்த இரவின் புறத்திலும் நரமாமிச பட்சணிகளாகிய மிலேச்சர் கைவசப்படுதல் என்னும் பயங்கரமான கொடிய நாசம் எனது திருஷ்டிக்கு மறைந்திருக்கையில், நான் நிர்ப்பயமாகவும், மனவமைதியாகவும் அங்கங்கே உலாவித் திரிந்ததையும் நினைத்து நினைத்து, திகைத்து மயங்கினேன். வெள்ளாட்டையாவது, கடலாமையையாவது நான் பிடிக்கும்பொழுது எனக்குள்ள தாற்பரியம் எதுவோ, அதுவே மிலேச்சர் என்னை அகப்படுத்தும்பொழுது அவர்கள் தாற்பரியமுமாம். புரு முதலிய பட்சிகளைக் கொன்று தின்பது பாதகமென்று நான் நினைப்பதில்லையே. அதுபோல், என்னைக் கொன்று பட்சிப்பதும் பாதகமென்று அவர்கள் எண்ணார்கள். நானறியாவண்ணம் கடவுள் என்னை அம்மிலேச்சர் கைப்படாமற் பாதுகாத்து வராவிடில், பதைக்கத் துடிக்கக் கொன்று பட்சிக்கும் அவர்களுக் கிரையாவேன் என்பதற்குச் சங்கையில்லை. இதை நினைத்து, மனமிரங்கி என்னை ரக்ஷித்த எப்பொருட்கு மிறைவனுடைய திருநாமத்தை மனப்பூர்வமாய்ச் சொல்லி, துதித்தேன்.

இவ்வெண்ணங்களைத் தீரத் தெளிய என் மனம் சிந்தனை செய்தபின், சீர்கெட்ட துரோகிகளாகிய மிலேச்சருடைய செய்கிருத்தியங்களைக் குறித்துச் சிந்தித்தேன். சமஸ்த வுல

கங்களையும், அவற்றிலுள்ள சராசரங்களையும் சீர் தாழ்வின்றிக் கிரமமாய் ஆண்டு நடத்திவரும் ஞானமே திருவடிவாயுள்ள மெய்ப்பரன் இம்மிலேச்சரை விலங்குகளினு மிழிந்த அறிவினராக்கி, தம்மினத்தைத் தாமே பரிதபிக்காமற்கொன்று பட்சிக்கும்படி கைவிட்ட காரணமென்னவென்று விசாரித்து யோசித்தேன். இவ்விஷயசம்பந்தமாய் அவ்வேளையில் பயனற்ற சில கேள்விகள் என்னுள்ளத்திற் பிறந்தன. இந்தப் பரம துஷ்டர் சஞ்சரிக்குந் தேசம் எது? இத்தீவின் கரைக்கும், அவர்கள் இருந்த தேசத்திற்கும் தூரமென்ன? தங்கள் இருப்பிடத்தைவிட்டு, அச்சமின்றி அவர்கள் இவ்வளவு தூரம் வந்த காரணமென்ன? அவர்கள் வைத்து ஆளும் ஓடம் எத்தன்மையானது? அவர்களைப்போல நானும் இவ்விடத்தினின்று அவர்கள் தேசத்திற்குப் போவதற்குரிய பிரயத்தனங்கள் செய்வதற்குத் தடை என்ன?

அவர்கள் தேசத்திற்குப் போகச் சம்பவித்தால், நான் என்ன செய்வேன்? மிலேச்சர் கைவசப்பட்டால் எனக்கு வரும் கதி என்ன? அவர்கள் என்னைப் பிடிக்கத் தொடர்ந்தால் தப்பித்துக்கொள்ளும் வகை என்ன? தப்பித்துக்கொள்ளும் வகையறியாமல், நான் அவர்கள் தேசத்திலிறங்கி அவர்கள் கையில் அகப்படாதிருப்பது எப்படி? அவர்கள் கைவசப் படாதிருப்பினும், ஆகாரத்திற் கென்னசெய்வேன்? எவ்விடத்திற்குப் போவேன் என்பதாக இச்சிந்தனைகளில் ஒன்றுவது எனக்குண்டாகவில்லை. இவைகளைக்குறித்து நான் நினைக்கவேயில்லை. ஓடமேறி அக்கரைசேரும் எண்ணமொன்றே என்னுள்ளத்திற் குடிகொண்டிருந்தது. எனது நிலைமையைப் போல நிர்ப்பந்த நிலைமை எவருக்கு மில்லையென்றும், இதனினுங் கொடிய வேதனையுள்ள அவஸ்தை மரணந்தவிர வேறில்லையென்றும், கண்டத்தின் கரை யேறுவேனாகில், எனக்கேதும் சகாயங் கிடைக்குமென்றும், முன்பு ஆபிரிக்க கரையில் ஓடம் செலுத்திக் கொண்டுபோனபொழுது மனுஷர் சஞ்சரிக்குமிடம் எதிர்ப்பட்டதுபோல், இப்பொழுதும் கரையோரமாய் ஓடம் ஏறிப்போனால், மனுஷர் சஞ்சரிக்குமிடத்தைக் கண்டு, அவர்களால் உதவி பெறலாகுமென்றும், ஒருவேளை சமுத்திர மார்க்கத்தில் கிறிஸ்தவர்கள் உருவைக் கண்டால்,

அவர்கள் என்னைத் தங்கள் உருவில் ஏற்றிக்கொண்டு போவார்களென்றும், ஆபத்து அனுபவிக்கும் அகதியாகிய எனக்குப் பின்னும் கொடிய ஆபத்தாகிய மரணம் நேரிடில், நான் படும் துயரங்களனைத்தும் அம்மட்டில் ஒழிந்துபோமென்றும் நினைத்தேன். என் மனம் கலக்கமுற்றுத் திகைத்ததனால், இந்த நினைவுகள் எனக்குண்டாயின. கருத்தாய்க் கேளுங்கள். நாட்படக் கிலேசத்தில் மூழ்கி இனி மீட்சியில்லையென்று துன்புற்றதனாலும், எவனையாவது கண்டு கலந்து பேசி, எனது ஜன்மதேசத்தில் நிகழும் சங்கதிகளை விசாரித்தறிந்து, இவ்வருஞ்சிறை மீளும்வகை இன்னதென்று தெளியக்கருதி, ஓடமேறிச் சேதப்பட்ட உருவிற்குப் போயும் எனது அபிப்பிராயம் சிதறியதனாலும் என் மனம் நிலையற்றுப் பதைத்தது. மேற்சொல்லிய நினைவுகளால் சுழிக்காற்றில் அகப்பட்ட சருகுபோல் எனதுள்ளம் சுழன்றது. திருவுள்ளத்தின் செயலால் வருவது வருமென்றெண்ணி, மனந்தேறிக் கலக்கமற்றிருக்கும் அனுபவம் இப்பொழுது எனக்கில்லாதொழிந்தது. தெப்பத்தில் ஏறி, சமுத்திரத்தின் அக்கரையிலுள்ள துறையிற் சேரும் ஆசை வளர வளர, அதன் வசப்பட்டேன். எனது நினைவை வேறு துறையிற் செலுத்தத் திராணியற்றிருந்தேன்.

இரண்டு மணி நேரத்திற்கதிகமாய் இந்த எண்ணமே என் நெஞ்சி லழுந்தி, ஆசை யதிகரிக்க, என் உதிரம் கொதித்து; சுர வியாதிஸ்தனைப்போலக் கைந்நாடி படபடென்று அடித்தது. ஊன்றிச் சிந்தனை செய்ததனால், உற்சாகங்குன்றி இளைப்புற்று அயர்ந்து தூங்கினேன். எனதுள்ளத்தில் அழுந்திய சிந்தனையைக்குறித்துச் சொப்பனம் காண்பேனென்று இதை வாசிப்பவர்கள் உத்தேசிக்கவுங்கூடும். நான் கண்ட சொப்பனம் அதைப்பற்றியுமல்ல, அதற்குச் சம்பந்தமான யாதொன்றைப்பற்றியுமல்ல. கண்ட கனவைச் சொல்லுகிறேன். ஒரு நாட் காலையில் வழக்கப்பிரகாரம் கோட்டையினின்று வெளிப்பட்டு உலாவும்பொழுது பதினொரு மிலேச்சர்கள் இரண்டு ஓடத்தில் ஏறி, கொன்று பட்சிக்கும்படி ஒருவனை ஏற்றிக் கொண்டுவந்து கரையில் இறங்கினார்கள். சடிதியில் அம்மிலேச்சன் அவர்கள் கைக்குத் தப்பிப் பிழைக்கும்படி ஓடிப்

பறந்தான். அவன் எனது கோட்டை மதிலுக்கு எதிர்த் தோப்பில் ஒளித்திருக்கும்படி ஒன்றியாய் ஓடிவந்து நின் றதைக் கண்டு, அவனிடத்திற்குப் போய், அவனைப் பட்ச மாய்ப் பார்த்து, தேற்றினேன். அந்த மார்க்கத்தில் மற்ற மிலேச்சர்கள் அவனைத் தொடர்ந்து வந்ததாய் எனக்குத் தோன்றவில்லை. என்னைக் கண்டவுடன் தனக்குதவிசெய் யும்படி பிரார்த்திப்பவன்போல், அவன் எனக்கு எதிரே முழந்தாளில் நின்றான். அதுகண்டு, நான் அவனுக்கு எனது ஏணியைக் காட்டி, அவனை அதன்வழியாய் இறக்கி, குகைக்குள்ளே கொண்டுபோய்ச் சேர்த்தேன். அன்றுமுதல் அவன் எனக்குக் குற்றேவல் செய்துகொண்டு வந்தான். அவன் என் வசப்பட்ட க்ஷணமே, "இனி நான் அக்கரைக்கு அச்சமின்றி ஓடமேறிப் போகலாமே. இவன் ஓடத்தைச் செலுத்திக்கொண்டு போவான். அன்றியும், இன்னது செய் யவேண்டுமென்றும், போஜன பதார்த்தங்களைச் சம்பாதிக்கும் படி, இன்னவிடத்திற்குப் போகவேண்டுமென்றும், மிலேச் சர் இருப்பதனால் இன்னவிடத்திற்குப் போகக்கூடாதென் றும், அச்சமின்றி இன்னின்ன விடங்களுக்குப் போகலா மென்றும், இன்னின்ன இடங்களைக் கனவிலும் நினைக்கக் கூடாதென்றும் எனக்கு யுக்தி சொல்வானே" என்பதாக நினைத்தேன். இம்மட்டில் நித்திரை தெளிந்து எழுந்தேன். அந்த நிமிஷத்தில் எனக்கு மீட்சி யுண்டாமென்பதைக்குறித்து ஆனந்த பரவசமடைந்தேன். நித்திரை மயக்கம் நீங்கி, என தறிவு எனக்கு வந்தபின், நான் கண்டது சொப்பனமென் றறிந்து, துக்க சமுத்திரத்தில் மூழ்கி மனந்தளர்ந்து வருந்தி னேன்.

பின்பு மிலேச்சர் கொன்று பட்சிக்க இக்கரைக்குக் கொண் டுவருங் கைதிகளில் ஒருவனைக் கூடிய பிரயத்தனம் செய்து என் வசப்படுத்தினாலன்றி, எனக்கு மீட்சி யில்லையென்று அனுமிதி செய்தேன். இப்படிச் செய்வதற்குப் பாரமான சங் கடம் ஒன்றுண்டென்று எனது எண்ணத்திற்பட்டது. அவர் கள் எல்லாரையு மெதிர்த்துச் சர்வ சங்காரஞ் செய்தாலொ ழிய, நான் நினைத்த கருமம் நேராய் முடியாது. வந்திறங் கும் சர்வ மிலேச்சரையும் தாக்கிச் சங்கரிப்பது அசாத்தியம்.

அன்றியும், இப்படிச் செய்வது அதர்மமென்று நினைத்தேன். என் பிராணனைக் காத்துக்கொள்ளும் பொருட்டேயாயினும், இத்தனைபெயரை உதிரமாறுப் பெருகும்படி சங்கரிப்பதைக்குறித்து நினைக்கவே, என் மனம் பதைபதைத்துத் துடித்தது. இதைக்குறித்து என்னுள்ளத்திற் பிறந்த ஆக்ஷேபங்களை முன்பு வெளியிட்டதனால், திரும்பிச் சொல்வது ஆவசியகமல்ல. என்னைக் கொன்று பட்சிக்க வரும் துரோகிகள் வாய்க்கு இரையாகாதபடி, நான் உற்ற சமயத்தில் அவர்களைக் கொன்று என் பிராணனைக் காத்துக்கொள்வது பாதகமல்லவென்று ஒருபட்சத்தில் எனக்கு நியாயந் தோன்றிற்று. தோன்றியும், என் உயிரைக் காக்கும்படி நரவதை செய்வதைக்குறித்து நினைக்கவே, என் மனந் திகைத்தது. நெடுநாள்வரையில் இதற்கு என் மன முடன்படவில்லை.

இருபட்சத்து நியாயங்களையும் நெடுநாள்வரையில் என்னுள்ளத்தி லிருத்தி, சிலவேளை ஒரு பட்சத்தைச் சார்ந்து துணிவதும், சிலவேளை அதைத் தள்ளி எதிர்ப் பட்சத்தைச் சார்ந்து கலக்கமுறுவதுமாயிருந்தேன். கடைசியில் இச்சிறையிருப்பினின்று மீட்சியடையும் பேராசை மேற்கொண்டதனால், மிலேச்சரில் ஒருவனை எவ்விதத்திலும் எத்தனை கஷ்ட நஷ்டப்பட்டாவது கைவசப்படுத்த நிர்ணயித்தேன். அதன்மேல் எவ்வாறு கைவசப்படுத்துவதென்று யோசிக்கத் தொடங்கினேன். இதைக்குறித்துத் தவறுமற் பலிக்கத்தக்க யுக்தி செய்வது கூடாதே. ஆதலால், நான் எப்பொழுதும் ஜாக்கிரதை செய்து, மிலேச்சர் இக்கரைப்படும் சமயம் பார்த்துக்கொண்டிருந்தால், அச்சமயத்தில் இன்னது செய்யத் தகுமென்று எனக்கு யுக்தி பிறக்குமென்பதாக நிச்சயித்தேன்.

மேற்சொல்லிய நிர்ணயங்களைக் கடைப்பிடியாய்க் கொண்டு, மிலேச்சர் வரும் சமயம் பார்த்திருந்தேன். நாட்பட்டதனால், என் மனம் சலித்தது. தீவின் மேற்கு முனைக்கும் தென்மேற்கு முனைக்கும் பிரதிதினமும் போய்க் காத்து நின்று பார்த்தும், மிலேச்சர் ஓட மொன்றையுங் காணவேயில்லை. நான் இப்படி மிலேச்சர் வரவை எதிர் பார்க்கத் தொடங்கி ஒன்றரை வருஷத்திற்கு அதிகஞ் சென்றதனால்,

எனதூக்கம் அழிந்து துயரம் பெருகிற்று. எனதுள்ளத்திற் பிறந்த ஆசையோ ஒழிந்துபோகவில்லை. காலம் ஏற ஏற, அது வளர்ந்தது. முன்பு நான் மிலேச்சரைக் காணுமலும், அவர்கள் என்னைக் காணுமலும் இருக்கும்படி இடையின்றி ஜாக்கிரதை செய்ததுபோல், இப்பொழுது நான் அவர்களைக் காணும்படி அபேட்சித்து, என்னுற்கூடிய பிரயத்தனங்களெல்லாம் செய்தேன்.

மேலும், ஒருவனல்ல, இரண்டு பெயரல்ல, மூன்று பெயர் அகப்படினும், நான் அவர்களை அடிப்படுத்தி ஆட்கொண்டு சொற்கேட்கும்படி செய்து, எனக்கு அவர்களால் ஏதும் தீங்கு நேரிடாதபடி யுக்தி செய்வதற்கு நிர்வாகமுண்டென்று நினைத்தேன். மேலே குறிப்பித்த உபாய சாதனங்களை நினைத்து உவப்புற்று, மிலேச்சர் வருவார் வருவாரென் றெதிர்பார்த்திருந்தும், நெடுநாள்வரையில் எவரும் வாராததுபற்றி, எனது உபாயங்கள் பயன்படா தொழிந்தன.

இந்த அபிப்பிராயத்தை ஒன்றரை வருஷமட்டும் எனதுள்ளத்தில் இருத்தியும், சமயமில்லாததனுல், அது சுவையற்றுப் பாழாய்ப்போயிற்று. இப்படியிருக்கையில், ஒரு நாள் அதிகாலையில் தீவில் நான் இருக்கும் பக்கத்தில் ஐந்தோடங்கள் நெருங்கிக் கரையடைந் திருந்தது கண்டேன். வந்து இறங்கிய ஜனங்கள் என் கண்ணுக் கெதிர்ப்படவில்லை. அவர்கள் பெரும்பாலும் ஓடமொன்றுக்கு நாலு பெயராவது, ஆறு பெயராவது, அதற்கதிகம் பெயராவது ஏறிவருவது அறிவேனே. இவ்வைந்து ஓடத்திலும் முப்பது பெயர் வரையில் வந்திருப்பார்களென் றுத்தேசித்து, ஆளுதவியற்ற நான் ஒருவன் இருபது முப்பது பெயரோடு எதிர்த்து, அவர்களை மேற்கொள்வதற் கிசையாதென்றெண்ணிச் சற்றுக் கலங்கினேன். கலக்கமும் கிலேசமுமடைந்து, கோட்டையி லடங்கியிருந்தும், முன்பு நான் எத்தனம் செய்து வைத்த யுத்தாயுதங்களை அதற்குரிய ஸ்தானத்தில் வைத்து, பயம் நேரிடும்பொழுது தடையின்றிச் சண்டை செய்வதற்கு ஆயத்தமாயிருந்தேன். நெடுநேரமட்டும் காத்திருந்து, அவர்கள் சத்தம் அற்பமாயினுங் கேளாததனுல், சற்றுப்

பதைத்து, ஏணியினடியில் துப்பாக்கிகளை வைத்துவிட்டு, குன்றேறி, அதன் சிகரத்தி னொதுக்கில் மறைந்து நின்று, தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்த்தேன். அங்கே கூடி நின்றவர்கள் முப்பது பெயர். அவர்கள் நெருப்புமூட்டி எரித்து, இறைச்சி சமைத்து, அந்நெருப்பைச் சூழ நின்று, தங்கள் ஜாதி வழக்கத்திற்குரிய பலவித விரூபமான கோரணிகள், அபிநயங்கள் செய்து நடித்தார்கள். சமைத்த இறைச்சி இன்னதென்றும், அதை அவர்கள் சமைத்த வகை இன்னதென்றும் அறியேன்.

நான் பார்த்துக்கொண்டு நிற்க, அவர்கள் கொலைசெய்யும்படி ஓடத்தினின்று அகதிகள் இரண்டு பெயரைப் பிடித்துக் கொண்டுவந்து, குறுந்தண்டினாலோ, மரக்கத்தியினாலோ அந்த க்ஷணமே ஒருவனை அடித்து வெட்டிக் கொன்று, பிரேதமாய் விழுத்தினார்கள். மரத்தினால் வாளுண்டாக்கிப் பிரயோகிப்பது அவர்கள் வழக்கம். இரண்டு மூன்று பெயர் அந்தப் பிரேதத்தைத் தோலுரித்துச் சமைக்கும்படி துண்டு துண்டாய் வெட்டினார்கள். அவ்வேலை நிறைவேறுமட்டும் மற்றவனைப் பக்கத்தில் நிற்க விட்டார்கள். அவர்கள் எல்லாரும் நரமாமிசத்தைச் சமைக்கும்படி துண்டிப்பதிற் பராக்காயிருந்தது கண்டு, அவ்வகதி இதுதான் சமயமென்று சடிதியில் வாயுகதியாய்க் கடற்கரை மணற்றரையில் எனது வாசஸ்தானத்திற்கு நேர்முகமாய் விரைந்தோடி வந்தான்.

அவன் என்னிடத்திற்கு அதிகதியாய் ஓடி வருவதையும், அவர்களெல்லாரும் அவனைத் தொடர்வதையுங் கண்டு, எனக்கு அத்தியந்த திகிலுண்டாயிற்று. மிலேச்சன் ஒருவன் எனது தோப்பில் ஓடிவந்து ஒளித்து நின்றதாக நான் கண்ட கனா நிறைவேறுமென் றெண்ணினேன். மற்ற மிலேச்சர்கள் அவனைத் தொடர்ந்து வரவுமில்லை, தோப்பிற் காணவுமில்லை என்பதாகக் கனாக் கண்டேனே. இதேபிரகாரம் நடக்கவில்லை. பின்னும் சற்றுநேரம் பார்த்துக்கொண்டு நிற்கையில், மூன்று பெயர்மாத்திரம் அவனைத் தொடர்ந்தார்கள். அவன் மிகுந்த விரைவாயோடி அவர்களுக்கு எட்டாக்கையில் வெகுதூரம் வந்துவிட்டான். பின்னும் அணா

மணி நேரம் மூச்சடக்கி ஓடுவானானல், அப்புறம் அவர்களில் எவனாவது அவனைக் கண்டுபிடிப்பது அசாத்தியந்தான். இதை நினைத்துப் பதறாமல் நின்று, சித்தம் தெளிந்து, தீரமடைந்தேன்.

உடைந்த உருவினின்று எடுத்துவந்த சாக்குகளை இறக்கிய கதைத் தொடர்ச்சியை இப்புத்தகத்தின் முற்பாகத்திற் சொன்னபொழுது, நான் குறிப்பித்த நீரோடை அவர்களுக்கும், எனது மண்டபத்திற்கு மிடையில் இருந்தது. பிழைக்கக் கருதி உயிரொட்டி ஓடிவரும் அகதி நீந்தப் பயின்றிருந்தாலன்றி, அவ்வோடைக்கரையில் அவனைத் தொடரும் மிலேச்சர் கைக்குத் தப்புவது அசாத்தியமென்று திட்டமா யறிவேன். அப்பொழுது அவ்வாய்க்காலிற் பிரவாகம் வந்திருந்தும், அவ்வல்லாளர் கண்டன் சிறிது மச்சமின்றி, அதிலிறங்கி, இருபத்தெட்டு முப்பது தாண்டில் நீந்திக் கரையேறிச் சற்றும் இளைக்காமல் அபூர்வகதியாய் ஓடிவந்தான். தொடர்ந்த மூவரில் இருவர் வாய்க்காலி லிறங்கி நீந்தினார்கள். மற்றவன் நீந்தப் பயின்றவனல்ல; ஆனதுபற்றி, அக்கரையில் அவர்களைப் பார்த்தவண்ணமாய் நின்று, சற்றுச் சென்றபின் திரும்பி, மெதுவாய்ப் போய்விட்டான். அம்மட்டில் அவன் அதிர்ஷ்டசாலியென்றே சொல்லவேண்டும்.

வாய்க்காலி லிறங்கி நீந்தின இரண்டுபெயர் அதைத் தாண்டிக் கரைசேர்ந்த மனுஷனைப்போல் அத்தனை விரைவாய் நீந்தவில்லை. அவர்கள் அதைத் தாண்டுவதற்கு அவனுக்குச் சென்ற நேரத்தைப்போலப் பின்னுமொரு பங்குக்கு அதிகஞ் சென்றது. ஒருவனை எனக்கு ஏவற்காரனாகவாயினும், தோழனாகவாயினும், சகாயனாகவாயினும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற சமய மிதுதானென்றும், இவ்வெளிய மனுஷனுடைய பிராணனை இரட்சிக்கும்படி எனக்குத் தேவமூலமாய் உத்தரவு பிறந்திருப்பது இச்சங்கதிகளால் திருஷ்டாந்தப்படுகிறதென்றும் என்னுள்ளத்தில் உறுதியான வுணர்ச்சியும், அபேட்சையும் உண்டாயின. அந்தக்ஷணமே கூடிய விரைவில் ஏணியினடியில் வைத்த துப்பாக்கி யிரண்டையுமெடுத்துக்கொண்டு, ஏணியேறி, குன்றின் சிகரத்திற் சேர்ந்து,

கடற்கரைக் கெதிரான அதன் சாரலிற் குறுக்கு மார்க்கம் பிடித்து, விரைவி லிறங்கி, தொடரும் மிலேச்சருக்கும், தொடரப்படும் மிலேச்சனுக்கும் இடைவழியிற் சேர்ந்து, ஓடிப் பறந்த மனுஷனை உரத்துக் கூவி அழைத்தேன். அவன் முதலில் என்னைத் திரும்பிப் பார்த்து, அம்மிலேச்சருக் கஞ்சினபடி எனக்கு மஞ்சிப் பதறினான். திரும்பி என் கிட்ட நெருங்கி வரும்படி கைச்சமிக்கை காட்டினேன். அன்றியும், தொடர்ந்த இருவரிடத்திற்கு மெதுவாய்ப் போய், அவர்களில் முந்தி வந்தவன்மேற் பாய்ந்துவிழுந்து, எனது துப்பாக்கியின் அடிக்கட்டையால் ஒரு அடி யடித்து, அவனைத் தரையில் விழுத்தினேன். மற்ற மிலேச்சர்களுக்கு வெடியதிர்ச்சி கேட்குமென்று நான் அவனைச் சுட்டுக் கொல்ல விரும்பவில்லை. அவர்கள் நிற்குந்தூரத்தில் வெடியதிர்ச்சி கேட்பதும், புகை தோன்றுவதும் சந்தேகந்தான். ஒருவனை அடித்து விழுத்த, மற்றவன் கெடிகலங்கி நின்றான். நான் அவனிடத்திற்கு விரைந்து சென்றேன். நான் சற்று நெருங்கிப் போகையில், அவன் தன் வில்லில் நாணேற்றி, என்மேல் அஸ்திரப் பிரயோகஞ் செய்வதற்கு எத்தனித்தது கண்டு, இனித் தாமதிக்கலாகாதென் றெண்ணி, அவனுக்கு ஒரு குண்டு பிரயோகித்தேன். உடனே பிரேதமாய்ச் சரிந்தான். அவ்விருவருக்கும் பயந்து ஓடின மேற்சொல்லிய எளிய மிலேச்சன் தரித்து நின்று, தன் பகைஞ ரிருவரும் விழுந்திறந்தது கண்டு, (இருவரும் இறந்தார்களென்றே நினைத்தான்.) எனது துப்பாக்கியில் மருந்து பற்றி யெரிந்த வெளிச்சத்தையும், வெடி யதிர்ச்சியையுங் கண்டு, கேட்டு, திகைத்து, மரம்போல விறைத்து நின்றான். அவனுக்கு என்னிடத்திற்கு வர மன மொப்பவில்லை; ஓடுவதற்குக் கால் வழங்கவுமில்லை. நான் திரும்பவும் உரத்துக் கூவி வரவழைத்தேன். நெருங்கி வரும்படி சமிக்கை செய்தேன். எளிதிற் குறிப்பறிந்து, சற்றுத்தூரம் வருவதும், இடையில் நிற்பதும், பின்னும் சற்றுத்தூரம் வருவதும், அப்புறம் நிற்பதுமாயிருந்தான். நான் தன்னைக் கைது செய்து, பகைஞரிருவரையுங் கொன்றபடி கொல்வேனென்று அவன் நினைத்து, மனம் பதறி நின்றான்போலும். பின்னும் நான் அவனைச்

சமிக்ஞைச் செய்து வரவழைத்தேன். சஞ்சலித்த அவன் நெஞ்சைத் தேற்றும்படி பலவிதக் குறிப்புகள் செய்தேன். செய்யவும், அவன் நெருங்கி வந்து, பத்துப் பன்னிரண்டடிக்கு ஒரு முறை தன் பிராணனை யிரட்சித்ததற்காக எனக்கு வந்தனம் சொல்லும் பாவனையாக முழந்தாள் மடக்கி நின்றான். நான் முகமலர்ச்சியுடன் அவனைப் பட்சமாய்ப் பார்த்து, பின்னும் கிட்ட வரும்படி கைச்சமிக்கை செய்தேன். வரவர நெருங்கி எனது அடியிற் சேர்ந்தபின், அவன் தாள் மடக்கி, முழந்தாளில் நின்று, தரையை முத்திசெய்து, தன் சிரசைத் தரையில் வைத்து, என் பாதத்தை எடுத்துப் பிடித்துத் தன் சிரசின்மேல் வைத்தான். இது என்றும் எனக்கு அடிமைத்தொழில் செய்வதாகப் பிரமாணிக்கம் செய்யும் பாவனைபோலும். நான் அவனைத் தூக்கி நிறுத்தி, பாராட்டி, பலவாறு தேற்றினேன். இம்மட்டில் என் காரியம் நிறைவேறிற்றென்று செயலொழிந் திருப்பதற் கிசையவில்லை. துப்பாக்கியின் அடிக்கட்டையால் அடித்து விழுத்தின மிலேச் சனிறந்தான் என்றேனே, அவன் இறக்கவில்லை. பட்ட அடியால் ஸ்மரணைதப்பிக் கிடந்தான். அறிவு தெளிந்தபின் அவன் ஜீவனோடிருப்பதாகத் தெரியவந்தது. அவனை இம்மனுஷனுக்குக் காட்டி, அவன் இன்னும் சாகவில்லையென்று குறிப்பித்தேன். அவன் எனக்கு ஏதோ சொன்னான். அவனுடைய அபிப்பிராயம் எனக்குத் தோன்றாதிருந்தும், இருபத்தைந்து வருஷகாலமாய் என் சத்தமொழிய, வேற்று மனுஷர் சத்தங் கேளாத என் செவிக்கு அவன் பேச்சொலி மிகவும் இன்பமாயிருந்தது. இவ்வித சிந்தனைகள் செய்வதற்கு அது சமயமல்லவே. நான் துப்பாக்கியால் அடித்து விழுத்திய மிலேச்சன் களைதெளிந்தெழுந்து உட்கார்ந்திருக்க, என்னிடத்திற் சரணடைந்த ஏழை மிலேச்சன் பயந்து நடுங்கினான். அதை நான் கண்டு, அறிவு தெளிந்த மிலேச்சனைச் சுட்டுக் கொல்லக் கருதும் பாவனையாக மற்றத் துப்பாக்கியை அவனுக்கு இலக்காய்ப் பிடித்தேன். அப்பொழுது என்னிடத்திற் சரணடைந்த மிலேச்சன் எனது இடைக்கச்சில் தொங்கிய உறையில்லாக் கத்தியைக் கேட்டு வாங்கும் பாவனையாகக் குறிப்பித்தான். அவன் கருத்துப்பிரகாரம் கத்தியைக் கொடுக்க,

அவன் அதை வாங்கின க்ஷணமே விரைந்தோடி, ஒரு வீச்சில் பகைஞனுடைய சிரசை யறுத்தான். அவன் கத்தியை வீசி, சிரசறுத்த அதிசய சாமர்த்தியத்தைக் கண்டு, வழக்கமாய்ப் பிராணதண்டனை நிறைவேற்றும் பெயர்களுக்குமில்லாத இவ்வரிய சாமர்த்தியம் மரவாளன்றி, எஃகிற் செய்த கத்தியைப் பிறந்தநாள்முதல் இதுவரையிற் காணாத இம்மிலேச்சனுக்கு எவ்வாறுண்டாயிற்றென்று மிகவும் ஆச்சரியப்பட்டேன். வாள் வித்தையில் இம்மிலேச்சனுக்கு அருஞ் சமர்த்துண்டாயிருந்ததைக் கண்டால், எவரும் அதிசயப்படுவார்கள். மிலேச்சர்கள் வழங்கும் மரவாள் அதிக வுறுதியும், பலமும், கூர்மையுமுள்ளதென்றும், அவர்கள் அதனால் ஒரு வீச்சில் சிரத்தையன்றிக் கரத்தையும் அறுக்கமாட்டுவார்களென்றும் பிற்பாடு எனக்குத் தெரியவந்தது. சிரமறுத்தவுடன் அவன் பெற்ற ஜெயத்தைக் குறிப்பிக்குமாறு சிரித்துக்கொண்டுவந்து, பல அபிநயங்கள் செய்து, அறுத்த தலையையும் கத்தியையும் எனது பாதத்தண்டை வைத்தான்.

மற்ற இந்தியனை இத்தனைதூரத்தில் நின்று நான் கொன்றதைப்பற்றி, அவனுக்கு அடங்காத ஆச்சரியமுண்டானதனால், பிரேதத்தைக் கைவிரலாற் சுட்டி, கிட்டப் போய்ப் பார்க்கும்படி இடந்தரவேண்டுமென்று குறிப்பிற் கேட்டான். போகச் சொல்லிக் குறிப்பித்தேன். அவன் போய்ப் பார்த்து, சற்றுநேரம் பிரமித்து நின்று, புரட்டிப் புரட்டி, மார்பிற் குண்டு பாய்ந்த துவாரத்தைப் பார்த்தான். இரத்தம் அதிகம் வடிந்திருக்கவில்லை. உள்ளே வடிந்த இரத்தம் வெளிப்படாமல் தடைப்பட்டிருந்தது. பிராணவாசனை சிறிதுமின்றிப் பிரேதம் விறைத்துப்போயிற்று. பின்பு அங்கிருந்த வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டுவந்தான். நான் வீட்டுக்குப் போகத் திரும்பி, பின்னும் மிலேச்சர் வரக் கூடுமென்று குறிப்பில் தெரிவித்து, என்னைத் தொடரும்படி அவனுக்குச் சமிக்கை செய்தேன்.

இனி மிலேச்சர் வந்தால், அவர்கள் காணாதபடி அப்பிரேதங்களை மணலில் க்ஷேமிக்கவேண்டுமென்று அவன் குறிப்பித்தபடி, க்ஷேமிக்கச்சொன்னேன். உடனே அம்மிலேச்சன்

மணலைத் தோண்டி, பிரேதங்களை ஒவ்வொன்றாய்க் கால்மணி நேரத்திற்குள் புதைத்தான். பின்பு நான் அவனை அழைத்துக்கொண்டு துருக்கத்திற்கல்ல, தீவின் மத்தியிலுள்ள எனது குகைக்குப் போனேன். ஆகவே, சொப்பனத்தில் மிலேச்சன் எனது தோப்பில் அடைக்கலம் புகுந்தானெனக் கண்ட அம்சத்தை நான் நிறைவேற விடவில்லை.

ஓடிக் களைத்திருந்த அவனுக்கு ரொட்டியும், ஒரு குலை திராட்சப் பழமும் தின்னக் கொடுத்து, தாகசாந்திக்கு ஒரு மிடறு தண்ணீர் குடிக்கக் கொடுத்தேன். பசியாறிக் களை தெளிந்தபின், நான் சிலவேளை கம்பளம் விரித்துப் படுத்திருந்த வைக்கோற் கட்டிலிற் படுத்து நித்திரை செய்யும்படி குறிப்பிக்க, என்னிடத்திற் சரணடைந்த ஏழை மிலேச்சன் படுத்துத் தூங்கினான்.

அவன் கை கால் முதலிய உறுப்புகள் நீண்டு, சரீரம் அதிகம் ஸ்தூலிக்காமல் நெடியனாய் வளர்ந்த சொரூபி. அவனுக்கு என் மதிப்பில் இருபத்தாறு பருவமுண்டு. அவன் முகம் களையுள்ளதாயிருந்தது. சினக்குறிப்புச் சிறிதுமில்லை. அவனிடத்தில் ஆண் தகைமை விளங்கியது. முகத்திற் புன்னகைச் குறி தோன்றும்பொழுது, அவன் இனிய குணமுள்ள மிருதுவான ஐரோப்பியனுக்குச் சமானமாயிருந்தான். அவன் சிரசின் ரோமம் ஆட்டு ரோமம்போலச் சுருளாமல் நீண்டு கறுத்திருந்தது. அவன் அகன்ற ஏறு நெற்றியும், விவேகம் விளங்கித் துலங்குங் கூர்மையான விழிகளுமுடையவன். அவன் மேனி இத்தன்மையுள்ளதென்று திட்டமாய்ச் சொல்வதற் கிசையாது. அது கண்ணுக்கு அழகான இருண்டமான் நிறத்தின் மினுக்குள்ளதாயிருந்தது. பிரேஜிலியர், வர்ஜினியர் முதலிய அமெரிக்க இந்தியர் மேனியைப்போல், அவலட்சணமான வெளிறிய மான் நிறமுடையதல்ல. அவன் திரண்டு புஷ்டித்த முகமும், நிகிரோவர் மூக்கைப்போலச் சப்பளியாமற் சிறுத்த மூக்கும் சிறந்த வாயும், மெல்லுதடும், ஒழுங்குடைத்தாகி, யானைத் தந்தம்போல வெண்மையான அழகிய பல்லுமுடையவன். அரைமணி நேரத்திற்குச் சற்று அதிகம் அயர்ந்து தூங்காமல் இளந்தூக்கந் தூங்கி

எழுந்து, குகையினின்று வெளிப்பட்டு, பக்கத்திலுள்ள அடைப்பில் ஆடுகளில் பால் கறந்துகொண்டிருந்த என்னைக் கண்டு, ஓடிவந்து, தரையிற் படுத்து, பலவித அங்கசேஷ்டைகள் செய்து, நான் செய்த நன்றிலைய மனத்தாழ்மையாய் வெளியிடும் பாவனை காட்டினான். பின்பு தன் வாணுள றுதிவரையில் எனக்கமைந்து தொண்டு செய்து, என தடிப்பட்டு நடப்பதாகப் பலவாறு குறிப்பித்தான். அவன் குறிப்புகளிற் பலவற்றை நானறிந்து, அவனிடத்தில் எனக்கு மிகுந்த இஷ்டமுண்டாயிருப்பதாகத் தெரிவித்தேன். கொஞ்சக் காலத்திற்குள் இருவரும் சம்பாஷிக்கும்படி நான் அவனுக்குப் பேச்சுப் பழக்கினேன். நான் அவனைப் பகைஞர் கைக்குத் தப்புவித்து ஆட்கொண்டது சுக்கிர வாரமாதலால், அத்தினத்தின் குறிப்பை ஞாபகத்திலிருத்தும்பொருட்டு அவனுக்குச் சுக்கிரனென்று நாமகரணஞ் செய்தேன். ஆண்டை என்னும் பதத்தை உச்சரிக்கப் பயிற்றி, அதுவே எனது நாமமென்று அவனுக் குணர்த்தினேன். ஆம், அல்ல என்னும் சொற்களைக் கற்பித்து, அவற்றின் பொருளைத் தெரிவித்தேன். ஒரு மட்கலயத்திற் பாலை வார்த்து, ரொட்டியை அதிலூறப் போட்டு, நான் அதைப் பருகி, ரொட்டியைத் தின்று காட்டி, அவ்வாறு செய்யும்படி அவனுக்கும் பழக்கினேன். பிறகு அவன் நான் செய்தபடி ரொட்டியைப் பாலில் தோய்த்துத் தின்று, அது ருசிகரமாயிருக்கிறதென்று ஜாடை காண்பித்தான்.

அன்றிரா முழுதும் அவனுடன் அங்கிருந்து, மற்றநாள் அதிகாலையில் என்னுடன் வரச் சமிக்கை செய்து, உடுக்க வஸ்திரங் கொடுப்பதாகத் தெரிவித்தேன். சுத்த நிர்வாணியாயிருந்த அவனுக்கு என் சொல் உவந்தது. முதல்நாள் பகைஞர் இருவர் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற் போகும்பொழுது, அவன் அவ்விடக் குறிப்பைக் காட்டி, குறிப்பறியும்படி தான் வைத்த அடையாளத்தைக் காண்பித்து, அப்பிரேதங்களைக் கிளறி எடுத்துப் புசிக்கவேண்டுமென்று எனக்கு இங்கிதங் காட்டினான். அதைப்பற்றி எனக்கு மிகுந்த கடுப்பும் அரோசிகமு முண்டாயிருப்பதாக நான் வெளியிட்டு, நரமாமிச போசனத்தை நினைக்கவே என்

குடல் புரண்டு வாய்க் குமட்டலுண்டாமென்று காண்பித்து, அங்கே நிற்காமல் வரும்படி கரக்கம்பஞ் செய்தேன். அந்த க்ஷணமே அவன் தடைசொல்லாமல் என் சொற்கேட்டு வந்துவிட்டான். நாங்களிருவரும் மலைச்சிகரத்தி லேறியபின், அவனுடைய பகைஞர் போய்விட்டார்களாவென்று தூரதிருஷ்டிக் கண்ணுடியாற் பார்த்தேன். அவர்களையாவது, ஓடத்தையாவது காணவில்லை. அதனால், அவர்கள் கூட்டாளிகளிருவரையுந் தேடிப் பார்க்க நினைக்காமல் போய்விட்டார்களென்று சங்கையின்றித் தெரியவந்தது. அவர்கள் இறங்கி நின்ற இடக்குறிப்பு மயக்கமறத் தோன்றியது.

இம்மட்டில் எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. அச்சந் தெளிந்து அதிக தீரம் எனக்குண்டானதனால், அவ்விடத்திற்குப் போய், நடந்த வரலாறுகளைப் பூர்த்தியா யறிந்து வரும்படி, நானும் சுக்கிரனும் ஆயுதபாணிகளாய்ப் போனோம். சுக்கிரன் கையில் உருவின கத்தியைக் கொடுத்தேன். வில்லும் அம்பும் அவன் முதுகில் தொங்கும்படி கட்டிக்கொண்டு வந்தான். அவன் வில்வித்தையில் கைதேர்ந்தவ னென்றறிந்தேன். மேலும், என் துப்பாக்கிகளில் ஒன்றை அவன் கையிற் கொடுத்து, மற்றிரண்டையும் நானெடுத்துக்கொண்டு, இருவரும் அவ்விடத்திற்குப் போனோம். போய்ச் சேர்ந்தபொழுது, அங்கே கண்ட அச்சக் காட்சியினால் எனது உதிரம் நரம்புகளிற் குளிர்ந்து தடைபட்டு நிற்க, சரீரம் விறைத்து உதறிற்று. எனது மனம் குன்றிப்போயிற்று. நான் கண்ட காட்சி என்மட்டில் மிகுந்த துயர் தருங் காட்சியாயிருந்தது. சுக்கிரனுக்கு அதைப்பற்றி ஒன்றுமில்லை. அவ்விடத்தில் மனுஷர் எலும்புகள் நிறைந்திருந்தன. தரை உதிரமயமாயிருந்தது. பெருமாமிசத் துண்டுகள் வெந்தவைகளும், வெட்டுண்டு கிழிந்தவைகளும், தின்றுவிட்ட துணிக்கைகளுமாய்ச் சிதறுண்டிருந்தன. பகைஞரை ஜெயித்தபின், அவர்கள் உல்லாசமாய் விருந்துண்டதற்கு அநேக திருட்டாந்தங்களைக் கண்டோம். நான் கண்ட கபாலங்கள் மூன்று. கரங்கள் ஐந்து. கால் எலும்புகள் பாத எலும்புகள் மூன்று நாலு. வேறு சரீர அவயவங்கள் அநேகம். அப்பொழுது சுக்கிரன் இங்கித பாஷையில் எனக்குத் தெரிவித்த சங்கதியைச்

சொல்லுகிறேன். "எங்கள் தேசத்து அடுத்த நாட்டதிப திக்கும் இம்மிலேச்சருக்கும் மிகக் கடுமையான சண்டை நடந்தது. நான் அவ்வரசன் பக்கத்தாரில் ஒருவன். பகைஞர்கள் சண்டையில் அநேகரைச் சிறைபிடித்துக் கொன்று பட்சிக்கும்படி நான்கு திக்கிலுங் கொண்டுபோனார்கள். இவ்விடத்திற்கு அவர்கள் சிறைபிடித்துக் கொண்டுவந்தவர்கள் நான்கு பெயர். மூன்று பெயரை அவர்கள் கொன்று பட்சித்தார்கள். நான்காவது மனுஷன் நான்தான்."

கபாலம், எலும்பு, மாமிசம், உச்சிட்டம் முதலாய் அங்கிருந்த உறுப்புகளனைத்தையும் சுக்கிரனைக்கொண்டு ஒன்றாய்ச் சேர்த்து, ஒரு குப்பலாய்ப் போடுவித்து, நெருப்பு வைத்து, சாம்பலாகிறவரையில் தகிப்பித்தேன். பிறந்த நாள்முதல் நரமாமிசந் தின்று பயின்ற சுக்கிரன் கண்ணும் மனமும் மாமிசத்திலேயே நாட்டமாயிருந்தனவென்று அவன் முகக்குறியால் எனக்கு வெளிப்பட்டது. நரமாமிசத்தை நினைக்கவும் கண்ணுக்கெதிரிற் காணவும், எனக்கு மிகுந்த அரோசிகமும் வாய்க்குமட்டலும் உண்டானதைக் கண்டு, அவன் அதன்மேலுள்ள ஆசையை எனக்கு வாக்குமூலமாய் வெளியிடத் துணியவில்லை. மாமிசத்தைப் புசிக்க எத்தனப்படுவானாகில், அந்த க்ஷணமே அவனைப் பிராணவதை செய்வதாகக் குறிப்பாய் அவனுக்குத் தெரிவித்தேன்.

மாமிச தகனம் செய்தபின் துருக்கத்திற்கு வந்தோம். அப்புறம் சுக்கிரனுக்கு வஸ்திராதிகளை எத்தனஞ் செய்யத் தொடங்கினேன். முதல் முதல் சேதப்பட்ட உருவில், பீரங்கிச் சேவகன் பெட்டியிற் கண்டெடுத்த சணனூல் நெசவுக் காற்சட்டையைச் சுக்கிரனுக்கு அளவாக வெட்டித் தைத்துக் கொடுத்தேன். பின்பு வெள்ளாட்டுத்தோலில் மார்க்கவசமொன்று தைத்தேன். நாளாவர்த்தியில் எனது வஸ்திரங்களை நானே தைக்கப் பயின்றதனால், தையல் வேலையில் எனக்கு ஒருவாறு கை படிந்திருந்தது. முயலின் தோலினால் அவன் சிரசுக்களவாய்ச் சிறந்த குல்லா வொன்று செய்துகொடுத்தேன். ஆண்டையைப்போல் அடிமையும் காலங்கி மார்க்கவசந்தரித்து, சிரசிற் குல்லா இட்டுச் சிறப்பாயிருந்ததுபற்றி, அவனுக்கு மிகுந்த உல்லாசமுண்டாயிற்று.

ஆரம்பத்தில் நூதனமாய் அங்கிதரித் துலாவுவது அவனுக்குச் சங்கடமாகத் தோன்றிற்று. மார்பங்கியின் கையுறைகள் அவன் தோளிலும், புயத்திலும் அழுந்தி அவனைச் சற்று வருத்தின. அங்கிக் கையுறையைப் பிரித்துச் சற்று நெகிழ்ச்சியாய்த் தைத்துக் கொடுத்தேன். வர வர வழக்கப்பட்டதனால், அப்புறம் அங்கி தரிப்பது அவனுக்குச் சொகுசாயிருந்தது.

நானும் அவனும் குகையில் வந்து சேர்ந்த மற்றநாள் அவனை எவ்விடத்தி லிருத்தவேண்டுமென்று சிந்திக்கத் தொடங்கினேன். அவனுக்கு ஏதும் சுகத்தாழ்வின்றி, நானும் கிலேசமற்றிருக்கும்பொருட்டு, கோட்டையின் அகமதிலுக்கும் புறமதிலுக்கும் இடைவெளியில் ஒரு சிறு கூடாரத்தை எத்தனஞ்செய்து, அதில் அவனைக் குடியிருத்தினேன். அங்கிருந்து குகைக்குட் செல்லும்படி ஏற்பட்டிருந்த வாசலில் ஒருவிதமாய்ச் செய்த வாசற்காலை நாட்டி, பலகைக் கதவொன் றிணைத்து, வாசல் மட்டத்திற்குச் சற்று உட்பட அதைக் குகைக்குள்ளிருந்து திறக்கும்படி மாட்டினேன். இராத்திரிகாலத்தில் நான் கதவைச் சாத்தித் தாழடைத்து, ஏணிகளை உள்ளே வைத்துக்கொண்டேன். ஆனதுபற்றி, சுக்கிரன் எனது அகமதிலைத் தாண்டிக் குகைக்குள் ஒருவிதத்திலும் வருவதற் கிசையாது. ஒருவேளை வருத்தப்பட்டு ஏறிவரத் துணிவானானால், நான் எவ்வளவு அயர்ந்த நித்திரை செய்யினும், அரவங்கேட்டு விழிக்காதிரேன். எனது முதலாவது மதிலில் நீளமான கொம்புகள் வைத்து, குன்றின் சாரலிற் சார்த்தித் தாழ்வாரமிறக்கிக் குறுக்குச் சலாகை பரவி, நாணலைப்போல் உறுதியுள்ள வைக்கோலை அடர்த்தியாய்ப் போட்டு வேய்ந்திருந்தேன். அத்தாழ்வாரத்திற்குள் என் கூடாரம் முழுது மடங்கியிருந்தது. ஏணி யேறி உட்செல்வதற்கும் வெளிப்படுவதற்கும் ஏற்பட்டிருந்த வாசலில் ஒருவிதக் கள்ளக் கதவு போட்டிருந்தேன். அதை வெளியில் நின்று எவராயினுந் திறந்தால், அது உடனே பொறிந்து பொத்தென விழுந்துபோம். விழும் சத்தங் கேட்டு நான் விழித்துக்கொள்வேன். எனது ஆயுதவர்க்கங்களை இராத்திரிதோறும் குகைக்குள் வைத்திருந்தேன்.

இவ்வித ஜாக்கிரதை யொன்றும் செய்வதற்கு நிமித்த மில்லையே. சுக்கிரனிலும் அதிக விசுவாசமும், நேசமும், உண்மையுமுள்ள ஏவலாள் எவர்க்கு மிருந்ததில்லை. சுக்கிர னிடத்திற் கோபகுணமாவது, மூர்க்கமாவது, கபடமாவது இல்லை. அவன் எனது சொற்கேட்டு, என் கருத்தறிந்து, என்னை யுபசரித்து நடந்தான். அவன் என்னைத் தந்தை யடைவா யெண்ணி, என்மேல் அதிக பட்சமும் பற்றும் உடையவனுயிருந்தான். சமயத்தில் தன் ஜீவனைக் கொடுத்தா யினும் என்னைக் காப்பாற்றுவதற்குப் பின்னிடான். அவன் இவ்வித அபூர்வ குணாதிசயங்க ளுடையவனென்று எனக்கு ஐயந்திரிபறப் பலவாறு திருஷ்டாந்தப்பட்டதனுல், அவனுல் எனக்கேதாயினும் தீங்கு நேரிடுமென்று அற்பமும் கிலேசப் படவேண்டியதில்லை என்பதாக அறிந்தேன்.

சர்வ சிருஷ்டிகளையும் அததற்கேற்றபடி பாதுகாத்து ஆண்டு நடத்திவருங் கடவுள், திரளான மிலேச்சர்கள் தமது அந்தக்கரணங்களையும் மனே சக்திகளையும் விஷயங்களிற் செலுத்தி, பயன்பெறு மியற்கையை அவர்களுக்கு மறுத்ததற் குத் திருவுள்ளத்தில் தோன்றிய காரணம் ஏதோ 'வறியேன்; ஆனுலும், எங்களைப்போல் அவர்களுக்கும் எள்ளளவும் குறை வின்றி அந்திக்கரணங்களும், அறிவும், இச்சைகளும், பட்ச குணமும், உபகாரகுணமும், தமக்குத் தீங்கு செய்தவர்களுக் குத் தீங்குசெய்யும் நினைவும், செய்நன்றி மறவாத சிறந்த வறி வும், கபடமற்ற தன்மையும், நேர்மையும், நன்மை செய்தற் கும், பிறர் செய்யும் நன்மையைப் பெற்றனுபவித்தற்குமுரிய நிர்வாகமும் கடவுள்மூலமாய் உண்டாயிருக்கின்றன வென் பதாகப் பெரும்பாலும் நினைத்து, அதிசயித்தேன். நமது அந்தக்கரணங்கள் தேவாவியாகிய மகத்தான ஞானதீபத்தி னெளியினுலும், திருவாக்காகிய சத்திய வேத வுணர்ச்சியி னுலும், நமதறிவினுலும் மயக்கம் நீங்கித் தெளிந்திருந்தும், அவைகளெல்லாவற்றையும் அபசாரப்படுத்துகிறோம்; நம்மை ஈடேற்றத்தக்க உணர்ச்சியைக் கடவுள் நமக்கு அனுக்கிரகஞ் செய்தபடியே, லட்சா லட்சம் பெயராகிய மிலேச்சருக்கும் அனுக்கிரகஞ் செய்திருப்பாரானுல், அவர்கள் அவ்வுணர்ச் சியை நன்குமதித்துப் போற்றி, முறைமையாய் உபயோகப்

படுத்துவார்களே: அவர்களுக்கு இம்மேலான அறிவைக் கடவுள் மறைத்த காரணமென்னவென்று சமயாசமயங்களிற் சிந்தனை செய்து துயரப்பட்டேன்.

மேற்சொல்லியவாறு சிந்தனை செய்யும் சமயங்களிற் கடவுள் சிறந்த ஞான ஒளியைச் சிலருக் கனுக்கிரகித்து, சிலருக்கு மறுத்து, அவ்விருதிறத்தாரையும் நியாயாதாரமின்றி ஏக நிபந்தனைக் குட்படுத்துவது முறைமையல்லவே என்பதாகத் தேவ அதிகாரத்தைக்குறித்து நான் அதிக்கிரமித்து நினைத்ததுமுண்டு; ஆனாலும், எனது சிந்தனைகளை இவ்வாறு அதிக்கிரமிக்க விடாமல், பின் சொல்லப்படும் அனுமிதிகளாற் பந்தனஞ்செய்து நிறுத்திவேன். முதலாவது, இம்மிலேச்சர்களை நியாயந்தீர்த்துத் தண்டனைக்குள்ளாக்கும்படி ஏற்பட்டிருக்கின்ற ஞான அருணோதயமும் நிபந்தனையும் இன்னின்னவென்றறியோம். அளவற்ற பரிசுத்த குணமும் நீதியும் கடவுளுக் கியற்கையாதலால், அவர் இம்மிலேச்சரைத் தமது சந்நிதானத்தினின்று விலகும்படி தீர்ப்புச் செய்திருப்பாரானால், வேதத்திற் சொல்லியபடி அவர்களுக்குப் பிரமாணமாயேற்பட்ட சொற்ப அறிவை அலட்சியஞ்செய்து பாபிஷ்டர்களானதே அதன் காரணமாயிருக்கலாம். மேலும், அவர்களுக்கேற்பட்டிருக்கும் நிபந்தனைகளின் மூலாதாரம் நமது புத்திக்குத் தோன்றாதிருந்தும், அந்நிபந்தனைகள் முறைமையானவைகளென்று அவர்கள் அறிவு ஒப்புக்கொள்ளவுங் கூடும். இரண்டாவது, கடவுள் குலாலன். மனுஷர் அவர் வினையும் பாண்டத்திற்கு மூலகாரணமாகிய களிமண். பாண்டம் குலாலனைப் பார்த்து: "நீ என்னை இவ்வாறுருவாக்கின காரணமென்ன?" என்று கேட்பது முறையல்லவே.

இதை இம்மட்டில் நிறுத்திவிடுகிறேன். நூதனமாய் வரப்பெற்ற எனது தோழனைப்பற்றி எனக்கு அவனிடத்தில் விசேஷமான சந்தோஷமுண்டாயிற்று. அவனால் அதிக பயனும், மெய்யுதவியும், சகாயமும உண்டாகும்பொருட்டு, அவனுக்கென்னென்ன கற்பிக்கத் தகுமோ, அவையனைத்தையும் சிரத்தையாய்க் கற்பித்துவந்தேன். முக்கியமாய்த் தடையின்றிப் பேசவும், நான் சொல்வதை அறியவும் அவனுக்குப் பயிற்

றினேன். கற்பிக்கப்படுவதை எளிதில் கற்குந்திறம் அவனைப்போல் எவருக்குமில்லை. நான் சொல்வது அவனுக்குப் புலப்படும்பொழுதும், தன் கருத்தை அவன் எனக்குப் புலப்படுத்தும்பொழுதும் அவனுக்கு மிகுந்த உல்லாசமும், மனக்கிளர்ச்சியும், உவப்புமுண்டாயின. அவன் சலிக்காமல் எப்பொழுதும் இதில் ஜாக்கிரதையாயிருந்தான். ஆனதுபற்றி, அவனுடன் பேசுவது எனக்கு மிகவு மின்பமாயிருந்தது. இப்பொழுது எனக்கு மனக்குறை ஏதுமில்லை. இனி மிலேச்சரால் எனக்கு இடையூறு சம்பவிக்காதிருக்குமானால், இறக்குமளவும் இவ்விடத்திலேயே சஞ்சரித்தாலும் பிரமாதமில்லையென்று எண்ணியிருந்தேன்.

## 15. அத்தியாயம்.

*மிலேச்சர் நரமாமிசபட்சணம் செய்வது எனக்கு அரோசிகமாயிருக்கிறதென்று, நான் சுக்கிரனுக்கு வருந்தி யுணர்த்தியது. துப்பாக்கியின் நாசபலத்தைக் கண்டு, சுக்கிரன் பிரமையடைந்து, அது மனம் புத்தி சித்தமுள்ள பிராணியென் றெண்ணினது. அவன் பன்னிப் பன்னி அங்கிலேய பாஷை பேசப் பயின்றது. இருவருக்கும் சம்பாஷணை நடந்தது. நான் அவனுக்குச் சமய விஷயத்தை உணர்த்தியதும், அவன் அதை உணருந் தகைமையுள்ளவனென்று கண்டதும். தன் தேசத்திற்கு வந்து நாளதுவரையில் அங்கே சஞ்சரித்த சில வெள்ளை மனுஷர் வரலாறுகளை அவன் எனக்குச் சொல்லியது.*

கோட்டைக்குத் திரும்பி இரண்டு மூன்றுநாட் சென்றபின், பயங்கரமான விதமாய் மனுஷரைக் கொன்று, அவர்கள் மாமிசத்தைப் புசிக்கப் பயின்று, அதில் ருசி கண்ட சுக்கிரனுக்கு இனிமேல் நரமாமிசத்தில் நாட்டமும் இச்சையுமில்லாதிருக்கும்படி வேறு மாமிசத்தை அவனுக்குத் தின்னக் கொடுத்து, அதில் ஆசை மூட்டவேண்டுமென் றெண்ணி, ஒருநாள் அவனைக் காட்டுக்கழைத்துக் கொண்டுபோனேன். எனது மந்தையில் ஒரு ஆட்டுக்குட்டியைக் கழுத்தறுத்து வீட்டுக்குக் கொண்டுவந்து சமைக்கக் கருதிப் போனேன்.

போகையில், மாநிழல் ஒதுக்கில் ஒரு வெள்ளாட்டு மறியும், அதன் குட்டிகளும் படுத்திருக்கக் கண்டு, நான் சுக்கிரனைப் பிடித்து அசையாமல் நிற்கச்சொல்லி, அக்குட்டிகளில் ஒன்றைத் துப்பாக்கியாற் சுட்டு விழுத்தினேன். தன் பகைஞனாகிய மிலேச்சனை நான் கொன்றதைச் சற்றுத் தூரத்தில் நின்று கண்டும், கொன்ற வகை இன்னதென்றறி யாதிருந்த பேதையாகிய சுக்கிரன், ஆச்சரிய பரவசத்தாற் கலக்கமுற்று நடுங்கித் திகைத்து நின்றதைக் கண்டு, அவன் மனம் சலித்துத் தளர்ந்துபோமென்று நினைத்தேன். நான் சுட்ட ஆட்டுக்குட்டியை அவன் காணவுமில்லை, அது இறந்த தென் றறியவுமில்லை. தன் மார்க்கவசத்தைத் திடீரெனப் பிரித்து, தன் உடம்பிற் காயம் பட்டதோவென்று பார்த்து, தன்னைக் கொல்லும்படி நான் கருத்துக்கொண்டிருப்பதாக நினைத்துப் பதறினான். என் பாதத்தண்டை தாள்மடக்கி நின்று, எனது முழந்தாளைத் தொட்டு, ஓயாமல் என்னென்ன வோ சொல்லிக்கொண்டிருந்தான். அதன் பொருள் எனக் குத் தெரியாது. தன்னை வதைக்காதிருக்கும்படி பிரார்த்தனை செய்தானென்று மொத்தார்த்தம் பண்ணினேன்.

நான் அவனுக்குத் தீங்கொன்றும் செய்யேனென் றுணர்த் தும் வகையை விரைவிலறிந்து, அவன் கையைப் பிடித்து, அவனைப் பார்த்து நகைத்து, குண்டுபட்டு விழுந்த ஆட்டுக் குட்டியை விரற் குறிப்பாற் காண்பித்து, ஓடிப்போய் அதை யெடுத்து வரும்படி சொல்ல, எடுத்துக் கொண்டுவந்தான். பின்பு அக்குட்டி எவ்வாறு கொல்லப்பட்டதென்று அவன் அதைப் பார்த்துப் பார்த்து, அதிசயித்துக்கொண்டு நிற்கை யில், திரும்பவும் துப்பாக்கியில் மருந்து கெட்டித்து வைத் திருந்தேன். சற்றுச் சென்றபின், பருந்தின் சாயலான பெரிய பட்சி ஒன்று துப்பாக்கிக் குண்டுபாயுந் தூரத்திற்குள் ஒரு விருட்சத்தில் இருந்தது கண்டு, துப்பாக்கிப் பிரயோகஞ் செய்வதைச் சுக்கிரனுக் குணர்த்தும்படி அவனை மீண்டும் என தருகில் வரச்சொல்லி, பட்சிக்கிலக்காய்த் துப்பாக்கியைப் பிடித்து, அவனுக்குத் துப்பாக்கியையும், பட்சியையும், அதன்கீழ்த் தரையையுங் காட்டி, அத்துப்பாக்கியால் அந்தப் பட்சியைச் சுட்டு, அவ்விடத்தில் விழுத்துவேனென்று குறிப்

பித்தபின், அவனுக்கு எனது மனக்குறிப்புத் தெரிந்ததறிந்து, அவன் பார்த்துக்கொண்டு நிற்கச் சுட்டேன். அந்தக்ஷணமே கிளிப்பட்சி விழுந்தது கண்டான். பருந்தின் சாயலான பாரிய பட்சி என்றேனே; அது பருந்தல்ல, கிளி. நான் எவ்வளவுணர்த்தியும், அவனுக்குப் பயந்தெளியவில்லை. பட்சி விழுந்ததைக் கண்டவுடன் கெடிகலங்கி நின்றான். துப்பாக்கியில் நான் மருந்து கெட்டித்ததைக் காணுததனால், அவனுக்கு மிகுந்த பிரமை யுண்டாயிற்று. சமீபத்திலாயினும் தூரத்திலாயினும் நிற்கும் மனுஷர், நாற்கால் விலங்கு, பட்சி முதலிய எந்தப் பிராணியையும் வதை செய்யத்தக்க அதிசய பிராணநாச சஞ்சிதம் ஏதோ அத்துப்பாக்கிக்குள்ளிருக்கவேண்டுமென் றெண்ணி, ஏக்கம் பிடித்து நின்றான். இதைக்குறித்து அவனுக்குண்டான பிரமை தீர வெகுகாலம் சென்றது. நான் இடம் கொடுப்பேனுகில், சுக்கிரன் எனக்கும் துப்பாக்கிக்கும் தேவ வழிபாடு செய்வான் என்பதற்கையமில்லை. அன்றுமுதல் பலநாள் வரையில் அவன் துப்பாக்கியைத் தொடுவதற்காயினும் துணியவில்லை. தனித்திருக்கும்பொழுது, அவன் அத்துப்பாக்கியுடன் சம்பாஷணை செய்து, அது தனக்குத்தரம் சொல்வதாய் எண்ணியிருப்பதைக் கண்டு, அவன் என்னுடன் பேசப் பயின்றபின், உனக்கும் துப்பாக்கிக்கும் நடந்த சம்பாஷணை என்னவென்று கேட்டதற்கு, என் பிராணனை வதைக்காதிருக்கும்படி பிரார்த்தித்தேன் என்றான்.

இதைக்குறித்து அவனுக்குண்டான ஆச்சரிய பரவசம் சற்றுத் தெளிந்தபின், நான் சுட்டு விழுத்திய பட்சியை ஓடிப்போய் எடுத்துவரச் சொன்னேன். குறைப்பிராணியாய் விழுந்த கிளி துடித்துப் பதைத்துச் சிறகடித்து, விழுந்த இடத்திற்குச் சற்றுத்தூரம் தத்திப் போய் மறைந்திருந்ததனுல், அவன் அதைத் தேடிப் பார்த்து எடுத்து வருவதற்குச் சிறிதுநேரஞ் சென்றது. எடுத்து வந்தபின், துப்பாக்கிப் பிரயோகத்தின் சூழ்ச்சமறியாத அவன் காணுதபடி மீண்டும் மருந்து கெட்டித்து, இனி என் கண்ணுக்கெதிர்ப்படும் பிராணியைச் சுடுவதற் கெத்தனமாய் நின்றேன். ஒன்றையுங் காணவில்லை. ஆனதுகொண்டு, ஆட்டுக்குட்டியை எடுத்து

வீட்டுக்குத் திரும்பினேம். அன்று சாயரட்சை நான் தோலுரித்து, இறைச்சியைத் துண்டு துண்டாய் வெட்டி, ஒரு பாண்டத்திற் கறி சமைத்து, மற்றொரு பாண்டத்தில் ருசிகரமான சாறு வைத்தேன். சமைத்த கறியில் நான் கொஞ்சம் தின்று, பின்பு சுக்கிரனுக்குங் கொடுத்தேன். அவன் அதை மகிழ்ச்சியாய் வாங்கித் தின்றான். அவன் நாவிற்கு அவ்விறைச்சி இதமாயிருந்ததாக விள்ங்கிற்று. இறைச்சியுடன் உப்புச் சேர்த்து நான் தின்றதைக் கண்டு, அவன் மிகவு மாச்சரியப்பட்டு, உப்புத் தின்னத் தகாதென்று எனக்குக் குறிப்பித்தான். கொஞ்ச உப்பை அவன் வாயிற் போட்டேன். அவன் உடனே அருவருத்து உமிழ்ந்து, காறித் துப்பி, நல்ல தண்ணீரால் வாய் அலசிக் கொப்பளித்தான். பின்பு நான் உப்பு இல்லாமல் இறைச்சியைமாத்திரம் எனது வாயிலிட்டு, அவன் செய்தபடி அருவருத்துமிழ்ந்து காறித் துப்பினேன். அவனுக்கு உப்பைக்குறித்து அருவருப்புண்டானதுபோல், உப்பிடாத இறைச்சியைப்பற்றி எனக்கும் அருவருப்புண்டாயிற்றென்று பலநாள் வரையிற் பலவாறு குறிப்பித்தும், உப்பினிடத்தில் அவனுக்கு இச்சையுண்டாகவேயில்லை. நெடுநாள்வரையில் அவன் இறைச்சிக்காவது சாற்றுக்காவது உப்பிட்டுச் சாப்பிடவில்லை. நாட்பட்ட பின் மிகவும் கொஞ்ச உப்புமாத்திரம் சேர்த்துண்ணப் பயின்றான்.

இன்றையதினம் அவனுக்கு இறைச்சி வேகவைத்துச் சாறு காய்ச்சி ஊட்டியதனால், மற்றநாள் ஒரு துண்டு இறைச்சியைப் பொரிங்கறி செய்து கொடுக்க நினைத்தேன். அடுப்பு மூட்டி, அதன் இருபக்கத்திலும் இரண்டு கொம்புகள் நாட்டி, அக்கொம்புகளிற் குறுக்குக் கொம்பொன்று மாட்டி, அதன் மத்தியிற் கயிறு கட்டித் தொங்கவிட்டு, தொங்கும் முனையில் இறைச்சித் துண்டைக் கட்டினேன். எரியும் அடுப்பின் அனல் ஊஞ்சல்போல் ஆடிய இறைச்சித் துண்டில் ஏற ஏற, அது நன்றாய் வெந்தது. இந்த யுத்தியைக் கண்டு, சுக்கிரன் மிகவும் அதிசயப்பட்டான். மேற்சொல்லியபிரகாரம் இங்கிலாந்தில் பலர் இறைச்சி சுட்டது பார்த்திருக்கிறேன். வெந்தபின், அவன் அவ்விறைச்சியைத் தின்று, நாவிற்கு ருசி தட்டியதனால், அதை எனக்கு நானுவிதக்

குறிப்புகளால் தெரிவித்தான். பின்பு நரமாமிசத்தை இனி ஒருபொழுதும் தான் பட்சிப்பதில்லையென்று அவன் வற்புறுத்திச் சொன்னது கேட்டுச் சந்துஷ்டி யடைந்தேன்.

மற்றநாள் அவனைக்கொண்டு இதற்குமுன்னேரிடத்தில் நான் சொல்லியபடி போரடிப்பித்து, தானியத்தைத் தூற்றுவித்தேன். தானியத்தின் மாவில் ரொட்டி சுட்டுத் தின்னலாமென்று நான் அவனுக் குணர்த்தி, போரடித்துத் தூற்றிக் காண்பிக்க, அவன் நான் செய்தபடி சாமர்த்தியமாய் அவ்வேலையைச் செய்தான். பிறகு மாவரைத்துப் பிசைந்து புளிக்கவைத்து ரொட்டி சுட்டுக் காண்பித்தேன், கொஞ்சக் காலத்திற்குள் இவ்வேலைகளனைத்தையும் சுக்கிரன் என்னைப் போலப் பழுதின்றிச் செய்வதற்கு நிர்வாகியானான்.

இனி இரண்டு பெயருடைய ஆகாரச் செலவிற்குக் கட்டிவரத்தக்க தானியம் வேண்டுமாதலால், அதிக நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யக் கருதி, அதிக பரப்புள்ள நிலம் இன்னதென்று கண்டு, முன்போல வேலி யடைக்கத் தொடங்கினேன். இவ்வேலையைச் சுக்கிரன் வருத்தம் பாராமல், மனப்பூர்வமாகவும் சந்துஷ்டியாகவும் செய்தான். இதுவரையில் ஏகாந்தியாயிருந்த என்னுடன் நீயும் வந்து கூடியதனால், இருவருக்கும் அன்னச் செலவிற்குப் போதுமான தானியம் விளைவிக்கும்பொருட்டு, முன் பயிர் செய்த நிலத்துடன் இந்நிலத்தையும் நூதனமாய்ச் சேர்த்து அடைக்கத் தொடங்கினேனென்று அவனுக்குச் சொன்னேன். நான் சொன்னது அவனுக்கு நன்றாய்ப் புலப்பட்டது. என்னிமித்தம் நீர் முன்னிலும் அதிக வேலை செய்யச் சம்பவித்ததனால், இன்னது செய்யவேண்டுமென்று சொல்வீரானால், நான் வருத்தம் பாராட்டாமல் உமக்காக மிக வருந்தி யுழைப்பேனென்று எனக்கறிக்கை செய்தான்.

இத்தீவிற் சஞ்சரித்தகாலத்தில் இவ்வருஷம்போல் எவ்வருஷத்திலும் எனக்கு அதிக இன்பம் உண்டானதில்லை. சுக்கிரன் ஒருவாறு பேசுவதற்கும், நான் எடுத்துவரச்சொல்லும் பொருள்களின் பெயர் விவரத்தையும், நான் அவனை அப்போதப்போது அனுப்புமிடங்களின் குறிப்பையும் அறி

வதற்கும் பயின்றிருந்தான். அவன் என்னுடனே தாராளமாய்ப் பேசுவான். ஆகவே, பல வருஷவளையில் எவருடனும் பேசாமல் மௌனமாயிருந்த நான் இவனிமித்தம் எனது ஜன்ம பாஷையைப் பேசத் தொடங்கினேன். அவனுடன் பேசுவது எனக்கின்பமாயிருந்ததுந்தவிர, அவனைக்குறித்து எனக்கு மிகுந்த திருப்தியுமுண்டாயிற்று. அவன் கபடமற்ற எதார்த்தவாதியென்று வர வரச் சாட்சி பூர்வமாய்க் கண்டு, அவனிடத்தில் நெஞ்சார அன்புகூர்ந்தேன். அவனும் இதற்குமுன் என்னைப்போல் எவரையும் நேசித்ததில்லையென்று அவன் நடக்கையினால் நாளாவர்த்தியிற் கண்டறிந்து நம்பினேன்.

மீண்டும் தன் தேசத்திற்குப் போக அவனுக்கு அபிலாசை யுண்டாவெனப் பரீட்சித்து அறிய விரும்பினேன். நான் கேட்கு மெந்தக் கேள்விக்கும் தடையின்றி உத்தரம் சொல்லத்தக்கதாக நான் அவனுக்கு அங்கிலேய பாஷையைக் கற்பித்திருந்தேன். உன் ஜாதியார் யுத்தத்தில் ஒரு பொழுதும் ஜெயம்பெற்றதில்லையாவென்று நான் கேட்டதற்கு, அவன் புன்னகைசெய்து: "ஆமாம், சண்டை செய்யும் பொழுதெல்லாம் நாங்களே சத்துரு ஜெயமடைந்து வருகிறோம்" என்றான். இவ்வாறு எனக்கும் அவனுக்கும் பின் வரும் சம்பாஷணை நடந்தது:—"நல்லது சுக்கிரா, நீங்கள் சண்டையில் எப்பொழுதும் சத்துரு ஜெயமடைவது மெய்யானால், சத்துருக்கள் உன்னைக் கைதுசெய்த வகை என்ன?"

சுக்கிரன்.—என்னைக் கைது செய்தது பெரிதல்ல, எனது ஜாதியார் பகைஞரை நன்றாய்த் தோற்கடித்தார்கள்.

ஆண்டை.—தோற்கடித்தார்களா? எப்படி? உனது ஜாதியார் பகைஞரைத் தோற்கடித்தால், நீ அவர்கள் கைவசப்பட்ட வகை என்ன?

சுக்கிரன்.—எனது ஜாதியார் அங்கங்கே கூட்டம் கூட்டமாய்ப் பிரிந்து, பகைஞருடன் சமர் செய்தார்கள். நான் சேர்ந்த கூட்டத்தில் பகைஞர் தொகை அதிகப்பட்டது. அதனிமித்தம் அவர்கள் என்னுடன் பின்னும் மூவரைச் சிறைபிடித்தார்கள். சற்றுத் தூரத்தில் நடந்த சண்டையில்

பகைஞர் தொகையிலும் எனது ஜாதியார் தொகை அதிகம். அங்கே பகைஞர் ஆயிரம் இரண்டாயிரம்பெயர் எனது ஜாதியாராற் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

**ஆண்டை.**—சத்துருக்கள் வசத்தினின்று உன் பட்சத்தார் உன்னைச் சிறை மீட்காதிருந்த காரணமென்ன?

**சுக்கிரன்.**—சத்துருக்கள் என்னையும், மற்றக் கைதிகள் மூவரையும் விரைவிற் கொண்டோடி, ஓடத்தில் ஏற்றி, இக் கரைப்படுத்தினார்கள். அப்பொழுது அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதற்கு என் ஜாதியார் வசம் ஓடமில்லை.

**ஆண்டை.**—சொல்லக் கேள் சுக்கிரா, சிறைபிடிப்பவர்களை உன் ஜாதியார் என்ன செய்வார்கள்? இக்கரையில் வந்த உனது பகைஞர் கைதிகள் மூவரையும் பட்சித்தபடி, எங்கேயாவது கொண்டுபோய்ப் பட்சிப்பார்களா?

**சுக்கிரன்.**—ஆம், எனது ஜாதியாரும் நரமாமிசபக்ஷிணிகள்தான். கைதிகளனைவரையும் பட்சிப்பார்கள்.

**ஆண்டை.**—அவர்கள் கைதிகளை எங்கே கொண்டுபோவார்கள்?

**சுக்கிரன்.**—தமக்கிஷ்டமான எவ்விடத்திற்கும் கொண்டுபோவார்கள்.

**ஆண்டை.**—இவ்விடத்திற்கு வருவார்களா?

**சுக்கிரன்.**—ஆமாம், இவ்விடத்திற்கும் வருவார்கள், மற்றெவ்விடத்திற்கும் போவார்கள்.

**ஆண்டை.**—நீயும் அவர்களுடன் இவ்விடத்திற்கு வந்திருப்பாயா?

**சுக்கிரன்.**—ஆம், வந்திருக்கிறேன். இப்படிச் சொல்லும்பொழுது, தீவின் வடமேற்குக் கரையைக் கைவிரலாற் சுட்டிக் குறிப்பித்தான். அதுதான் அவர்கள் வழக்கமாய் வந்திறங்கும் இடமென்று காணப்படுகின்றது.

பகைஞராகிய மிலேச்சர் சுக்கிரனைச் சிறைபிடித்துப் பட்சித்துக் கொண்டாடும்படி இக்கரையில் வந்திறங்கியதுபோல, சுக்கிரனும் சிறைகளைக் கொன்று பட்சிக்கும்படி தன் இனத்

தாராகிய மிலேச்சருடன் தீவின் எதிர்க்கரையில் முன்பு
வந்திருப்பதாக அவன் வாய்ப்பிறப்பா லறிந்தேன். சிறிது
காலஞ் சென்றபின், நான் அச்சமின்றி அவனை அவ்விடத்
திற்கு இட்டுக்கொண்டு போனபொழுது, அவன் இடக்குறிப்
பறிந்து, அங்கே தானும், தன் இனத்தாராகிய மிலேச்சரும்
முன்னொருமுறை இருபத்துமூன்று கைதிகளைக் கொண்டு
வந்து அடித்துக் கொன்று புசித்ததாகச் சொன்னான். அன்றி
யும், அவர்களில் ஆடவர் இருபதுபெயர், ஸ்திரீகள் இரண்டு
பெயர், குழந்தை ஒன்றென்று விளக்கிச் சொன்னான். அந்நி
லய பாஷையில் இருபதைக் குறிக்கும் இலக்கப்பெயர் அவ
னுக்குத் தெரியாததனால், அவன் இருபது கல் எடுத்து,
ஒட்டநிரையாக வைத்து, என்னை ஒவ்வொன்றாய் எண்ணிப்
பார்க்கச் சொல்லச்சொன்னான்.

பின்வரும் விஷயத்திற்கு முகவுரையாய் மேற்...
வாக்கியத்தை இவ்விடத்திற் சொன்னேன். இ... ரமென்
முடிந்தபின் ...த்த தீவினின்று அ...
னவென்றும், ...த்திற் செலுத்திக் கொண்டுபோகு மோ
டங்கள் பெரும்பாலும் சேதப்படுவ தில்லையாவென்றும் உசா
வினேன். அதற்கு அவன் விக்கினம் ஒன்றுமில்லை, ஒரு
ஓடமாவது சேதப்பட்டதுமில்லை; கடலிற் சற்று எட்டப்
போகும்பொழுது நீர்ப்பெருக்குண்டாகிறது. அந்நீர்ப்பெ
ருக்கும் காற்றும் ஒருமுகமாய்த் திரும்பி, பிரதிதினமும்
முன்னேரம் ஒரு கரைக்கும், பின்னேரம் எதிர்க்கரைக்கும்
செல்லுமென்றான்.

நீர் பெருகுவதையும் வற்றுவதையும் அவன் குறிப்பித்த
தாக முதலில் எனது எண்ணத்திற் பட்டது. பின்பு மகா
நதியாகிய ஓரோநகோ ஆற்றின் மிகுந்த பெருக்கினாலும்,
வற்றினாலும், அவன் சொல்லிய நீர்ப்பெருக்கும் காற்றும்
உண்டாயினவென் றறிந்தேன். அந்நதியின் முகத்துவாரத்
தில் இத்தீவிருக்கிறதென்றும், மேற்கிலும் வடமேற்கிலும்
தெரிகிற கரை திரினிடாட் என்னும் பெருந்தீவென்றும், அது
இந்நதியின் முகத்துவாரத்து வடவந்தத்திலிருக்கிறதென்றும்
நினைத்தேன். அத்தேசம், அதன் குடிகள், அதைச் சூழ்ந்த
கடல், கரையடுத்த நாடு, நகர், சமீபத்திற் சஞ்சரிக்கும் ஜன

விவரம் முதலிய விஷயங்களைக்குறித்துச் சுக்கிரனிடத்திற் பலவாறு விசாரணை செய்தேன். கேட்ட விஷயங்களைப் பற்றி அறிந்த வரலாறுகளனைத்தையும் அற்பமாவது சூது நினைக்காமல் மனமும் வாக்கும் ஒத்துச் சொன்னான். மிலேச் சருக்குள் வழங்கிய ஜாதி விகற்பங்களின் அந்தந்தப் பெய ரைச் சொல்லும்படி கேட்டேன். கரிபர் என்னும் பெயர் ஒன்றைமாத்திரம் சொன்னான். ஒரோநகோ நதியின் முகத் துவா[illegible] கியானு வரைக்கும், அப்புறம் சேண்ட் மார்தா வரைக்கும் அ[illegible]ருப்பதாகத் தென் அமெரிக்க படத்தில் விளங்கிய கரிபியனா அவன் குறிப்பித்ததாக எளிதி லறிந்தேன். சந்திரன் அஸ்தமிக்குமிடத்திற்கு அப்புற நெடுந்தூரத்தில் என்னைப்போலத் தாடி வளர்த்த வெள்ளை மனுஷர் சஞ்சரிப்பதாகவும், அவர்கள் எண்ணிறந்த [illegible] களைச் சங்கரித்ததாகவும் சுக்கிரன் எனக்குச் சொ[illegible]ன். [illegible] [illegible]க்கிலைச் சேர்ந்த அ[illegible] [illegible] நிஷ்டூரமாய் வதை[illegible]தனாலும், தொன்றுதொட்டுச் சர்வ ஜாதியார்களும் [illegible] வரலாற்றைத் தலைமுறை தலைமுறையாய் அறி[illegible]னாலும் அவன் சொல்லிய வெள்ளை மனுஷர் [illegible]யர் என்றே அர்த்தம் பண்ணிக்கொண்டேன் [illegible] ரோமம் வளர்த்த வெள்ளை மனுஷரென்று சொ[illegible]பொழுது, வளர்ந்து நெருங்கிய எனது மீசையைத் தன் விரலாற் குறிப்பித்தான். கிருதா வைப்பற்றி முன்பு சொன்னேனே.

நான் இந்தத் தீவை விட்டு நீங்கி, அத்தேசத்திற்குப் போய், அவ்வெள்ளை மனுஷருடன் சேரத்தக்க வகை யின்ன தென்று சொல்வாயா எனக் கேட்டதற்கு, சுக்கிரன்: "ஆமாம், இரண்டு ஓடம் ஏறிப் போகலாம்" என்றான். அவன் இரண்டு ஓடமென்று சொன்னதற்கு அர்த்தமின்னதென்று என் புத் தியிற் படவில்லை. பின்பு பலவாறு விசாரித்து யோசித்தவள வில், இரண்டு ஓடத்தின் அளவிற்கு இடமகன்று பாரித்த புணையையே அவன் இரண்டோடமென்று சொன்னதாக அர்த்தம்பண்ணினேன்.

சுக்கிரன் சொல்லிய இச்சங்கதி என் செவிக்கு இன்பமா யிருந்தது. எத்தனைகாலம் சென்றாலும், நான் இங்கிருந்து

இவ்வெளிய மிலேச்சனுதவியால் தப்பித்துக்கொள்வதற்குச் சமயம் நேரிடுமென்று இக்காலந்தொடங்கி எனதுள்ளத்திற்கு இதமான நம்பிக்கை யுண்டாயிற்று.

சீக்கிரன் நாட்பட என்னுடன் சகவாசஞ்செய்து, எனது பாஷையிற் பேசப் பழகி, நாமிருவரும் கலந்து சம்பாஷித்துக்கொண்டுவருகையில், சமயார்த்தமான விஷயங்களைப் பற்றிய மூலாதாரங்களை நான் அவனுக்குணர்த்தாமல் விடவில்லை. ஒருநாள் நான் அவனைப் பார்த்து, உன்னைப் படைத்தவர் யாவரென்று கேட்டேன். இந்தக் கேள்வி பேதையாகிய அம்மிலேச்சனுக்குப் புலப்படவில்லை. உன் தந்தை யாவனென்று கேட்டதாக நினைத்தான்போலும். எனது கேள்வியை வேறு ரூபமாய்க் கேட்டால் அது அவனுக்குப் புலப்படுமென்றெண்ணி, இந்தக் கடலையும், நீ சஞ்சரிக்கும் பூமியையும், குன்றுகளையும், வானத்தையும் சிருஷ்டித்தவர் யாவரென்று கேட்டேன். சமுத்திரம், பூமி, சந்திரன், நட்சத்திர கணங்கள் முதலிய சமஸ்த வஸ்துக்களும் உண்டாகு முன் தொடங்கிஇருக்கின்ற மகாத்மாவாகிய ஒரு விருத்தரே சிருஷ்டித்தாரென்றும், அவர் பெயர் பிணமக்கி என்றும் விடை கூறினன். இவ்விருத்தர் சமஸ்த வஸ்துக்களையும் படைத்தவரானால், அவைகள் அவரை வழிபடாத முகாந்தரமென்னவென்று கேட்டேன். அவன் கௌரவமான சிந்தனையில் மூழ்கியவன்போலும், தன் நெஞ்சறிய எவ்வகைத் தீங்கையும் செய்யாதவன்போலும் “சகல வஸ்துக்களும் அவ் விருத்தரைப் பயபக்தியாய் ஆராதிக்கின்றன” என்றான். உன் தேசத்தில் இறந்த மனுஷர் எவ்விடத்திற்காவது போய் விட்டார்களாவென்று வினவியதற்கு அவன், ஆம், அவர்கள் எல்லாரும் பிணமக்கியிடத்திற் போய்ச் சோந்தார்களென்று விடை கொடுத்தான். மிலேச்சராற் பட்சிக்கப்பட்ட மனுஷரும் அவரிடத்திற்குப் போனார்களாவென்று கேட்டதற்கு ஆம் என்றான்.

மேற்சொல்லிய கேள்விமூலமாய் அவனுடைய ஆத்மார்த்தமான அறிவின் தரம் இவ்வளவென்று கண்டு, அதை அஸ்திவாரமாய்க்கொண்டு, மெய்ச்சோதியாகிய கடவுளைப்பற்றி

அவனுக்குணர்த்தத் தொடங்கினேன். நான் வானத்தை அண்ணாந்து பார்த்து, சர்வத்தையும் சிருஷ்டித்த மகத்தான கடவுள் அதோ அங்கிருக்கின்றார். தமது சர்வ சக்தியினாலும், ஞானத்தினாலும், பூலோகத்தைச் சிருஷ்டித்த அவர் அவைகளைக்கொண்டே அதை ஆண்டு நடத்திவருகிறார்; அவர் சர்வ சாமர்த்தியர், நமக்கு எல்லாஞ்செய்ய வல்லவர், எதையும் அனுக்கிரகிக்கத் திராணியுள்ளவர், நம்மிடத்தினின்று எதையுமெடுத்துக்கொள்ள அதிகாரமுள்ளவர் என்பதாகச் சொல்லி இவ்வாறு வர வர அவன் மனக்கண்ணைத் திறந்தேன். நம்மைப் பாவச் சிறையிருப்பினின்று மீட்கும்பொருட்டு யேசுக் கிறிஸ்து பூலோகத்தில் மானிட வடிவு தாங்கிவந்ததையும், கடவுளுக்கு நாம் பிரார்த்தனை செய்தற்குரிய விதத்தையும், நாம் இங்கிருந்து செய்யும் பிரார்த்தனைகள் பரமண்டலத்தில் அவர் செவிக்கெட்டு மென்பதையுங்குறித்து நான் சொன்ன வரலாறுகளை அவன் கருத்தாய்க் கேட்டு, அங்கிகரித்துக் களிகூர்ந்தான். அதன்பின் ஒருநாள் சுக்கிரன் சற்றுத்தூரத்திற் பெரிய பர்வதங்களிற் சஞ்சரிக்கின்ற பினமக்கியிடத்திற்கு நாங்கள் போய் ஏதும் சொன்னால், அவருக்கு அது கேட்கும். இங்கிருந்து சொல்வது ஒன்றுங் கேளாது. நீர் சொல்லுங் கடவுள் சூரிய மண்டலத்திற்கும் அப்புறத்தினின்று பூலோகத்தில் மனுஷர் செய்யும் பிரார்த்தனைகளைக் கேட்க வல்லவரானால், அவர் பினமக்கியிலும் அதிக மகத்துவமுள்ளவராயிருக்கவேண்டும் என மொழிந்தான். நீ எப்பொழுதாயினும் பினமக்கியிடத்திற் பேசும்படி பர்வதங்களுக்குப் போனதுண்டாவென்று விசாரித்தேன். சுக்கிரன் போகவில்லை, வாலிபர் போவது வழக்கமல்ல. பருவம் முதிர்ந்த *உவுகாகியர் அன்றி, மற்றவர்கள் அவ்விடத்திற்குப் போகிறதில்லை. அவர்கள்மலையேறிப் பிரார்த்தனைசெய்து, பினமக்கியுடைய வாய்ப் பிறப்பைத் திரும்பி வரும்பொழுது எங்களுக்குத் தெரிவிப்பார்கள் என்றான். பூலோகத்தில் மனவிருணிறைந்த பேதைமையுள்ள புறச்சமயவாதிகளுக்குள்ளும் புரோகித ஜாலமுண்டென்றும், புரோகிதர்கள் சீஷருக்குத் தம்மிடத்தில் எப்

---

* குருமார்.

பொழுதும் அபிமானமுண்டாக்குவித்து, அதை நிலைப்படுத்தும்பொருட்டுச் சமயார்த்த விஷயங்களை அவர்களுக்கு வெளியிடாமல் அந்தரங்கப்படுத்தும் கொள்கை பூலோகத்தில் எச்சமயவாதிகளுக்குள்ளும், விலங்கினுஞ் சீரழிந்து துஷ்டகிருத்தியங்கள் செய்யும் மிலேச்சருக்குள்ளும் உண்டென்றும் சுக்கிரன் வாய்ப்பிறப்பால் யூகித்தறிந்தேன்.

இது புரோகிதர் கபடமென்று சுக்கிரனுக்குணர்த்தி, அவன் மயக்கத்தைத் தெளிவிக்கக் கருதி, அவனுக்குப் பின்வருமாறு புத்தி புகட்டினேன்:—உங்கள் புரோகிதர்கள் மலையேறி, பிளுமக்கியைப் பிரார்த்திக்கும்படி போவதாகச் சொல்வது உங்களை வஞ்சிக்கும்படி சொல்லும் சுத்த அபத்தம். அவர்கள் அங்கிருந்து வரும்பொழுது, பிளுமக்கியுடைய வாக்கினின்று பிறந்த உத்தரமென்று உங்களுக்குத் தெரிவிப்பது பின்னுமபத்தம். அவர்கள எவரோடாவது பேசுவதும், உத்தரம் பிறப்பதும் மெய்யானால், அவர் கடவுளல்ல, பைசாசமாயிருக்கவேண்டுமென்பதாக அவனுக்குத் தெரிவித்தபின், பிசாசையும், அதன் பூர்வ நிலைமையையும், அது பரமண்டலத்திற்கு அதிபதியாகிய கடவுளுக்குத் துரோகஞ் செய்ததையும், மனுஷரிடத்திற் பகை சாதிப்பதையும், அதன் காரணத்தையும், நிர்மூடர் சஞ்சரிக்கும் தேசங்களில் தானே கடவுளென்று தலைப்பட்டு, அவர்களால் ஆராதனை பெறுவதையும், மனுஷர் அறிவு மயங்கி நாசமுறுவதற்கு அது செய்யுமளவற்ற தந்திரங்களையும், நம்மை நாமே வஞ்சித்து, மனப்பூர்வமாய் நாசம் வருவித்துக்கொள்ளத்தக்கதாக, குருவி பிடிக்க வேடன் கண்ணியேற்றுவதுபோல், நம்மை அகப்படுத்துவதற்கு உபாயமாய்க் கண்ணி யேற்றும்பொருட்டு, அது அந்தரங்கத்தில் எங்கள் குணகுணங்களையும், இச்சைகளையும் கிரகித்துக்கொள்வதையும்பற்றி, எனக்கும் அவனுக்கும் நெடுநேரமட்டும் சம்பாஷணை நடந்தது.

கடவுள் ஒருவர் உண்டென்பதைப்பற்றி அவன் மனதில் உபயுக்த வுணர்ச்சிகளை அழுந்தப் புகட்டுவது எளிதும், பிசாசைக்குறித்துச் சொல்வதை அவ்வாறு அழுத்துவது அரிதுமாயிருந்தன. மகத்தான மூலகாரணரும், சர்வ அதி

கார சாமர்த்தியரும், அந்தரங்க அத்தியட்ச சர்வேஸ்வராரு மாகிய கடவுள் ஒருவர் இருப்பது ஆவசியகமென்றாயினும், நம்மைச் சிருஷ்டித்த அக்கடவுளுக்கு அர்ச்சனை செய்வது தர்மமும் முறைமையுமாயிருக்கிறதென்றாயினும் திருஷ்டாந்த பூர்வமாய் நான் அவனுக்குச் சொல்லிய நியாயத்தோரணை கள் அனைத்திற்கும் இந்தப் பிரபஞ்சவியற்கை உபபலமாயிருந் தது. அப தேவதையாகிய பிசாசையும், அதன் பூர்வ ஸ்திதி யையும், அது உண்டென்பதையும், அதற்கு இயற்கையான குணங்களையும், முக்கியமாய்த் தீங்கு செய்யவும், நம்மைக் கொண்டு தீங்கு செய்விக்கவும், அதற்கு விசேஷ பிரியம் உண் டாயிருப்பதையுங்குறித்து நான் சொன்ன வரலாறுகளுக்கு மேற்குறித்த உபபலம் ஒன்றுமில்லை. அறிவிலியாகிய அம்மி லேச்சன் தன் நினைவில் இயற்கையாய்த்தோன்றிய நிர்த்தோ ஷமான ஒரு கேள்வி கேட்டபொழுது, அதற்கு உத்தரஞ் சொல்லத் தெரியாமல் மிகவும் மனந்தடுமாறினேன்.

ஈஸ்வர சக்தியைக்குறித்தும், அவருடைய சர்வ சாமர்த் தியத்தைக்குறித்தும், பாவத்தினிடத்தில் அவருக்குண்டா கும் மிகுந்த அரோசிகத்தைக்குறித்தும், அவர் அக்கிரமஞ் செய்பவர்களைப் பட்சிக்கும் அக்கினியாயிருப்பதைக்குறித் தும், மனுஷர் முதலிய சிருஷ்டிவர்க்கங்க ளனைத்தையும் கணப்பொழுதில் படைத்த அவர் கணப்பொழுதிலேயே அழிக்க வல்லவரென்பதைக்குறித்தும் நான் சுக்கிரனுக்கு வெகுவாய்ச் சொல்ல, அவன் சித்திரப் பிரதிமைபோலடங்கி யிருந்து, அதிக பயபக்தியுடன் கேட்டான். பிற்பாடு, பிசாசு மனுஷர் உள்ளத்திற் பிரவேசித்து, ஈஸ்வர விரோதியாகி, அவருடைய நல்லபிப்பிராயங்களை வியர்த்தமாக்கும்பொருட் டும், பூலோகத்தில் கிறிஸ்துவின் அரசாட்சியை நாசமாக்கிப் பின்னும் பல துர்க்கிருத்தியங்கள் செய்யும்பொருட்டும் துரோ கம் நினைத்து, தன்னாலாகும் சாமர்த்தியங்க ளனைத்தையும் செய்கிறதென்று சுக்கிரனுக்குத் தெளியச் சொன்னேன். அது கேட்டு, அவன்: "நல்லது, ஈஸ்வரர் மிகுந்த பலமும் மகத் துவமு முள்ளவரென்றீரே; பிசாசுக்குள்ள பல பராக்கிரமங் கள் அவருக்கில்லையா?" என வினவினான். அவ்வினாவிற்கு நான் "உண்டு உண்டு, சொல்லக் கேள் சுக்கிரா, கடவுள்

பிசாசிலும் பராக்கிரமசாலி; அவர் அதற்கு மேற்பட்டவர். இந்த நியாயத்தைச் சிந்தையில் வைத்தே, பிசாசைக் காலால் மிதிக்கவும், அதன் நயவஞ்சனைகளுக் கிடங்கொடாமல் உறுதியாய் நிற்கும்படி நடக்கு மனத்திடனளிக்கவும், அது பிரயோகிக்கும் அக்கினி அஸ்திரங்களை அவிக்கவும்வேண்டுமென்று நாம் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்" என விடை கொடுத்தேன். இம்மட்டில் சுக்கிரன் சம்பாஷணையை நிறுத்தவில்லை. "கடவுள் பிசாசிலும் அதிக பராக்கிரம முடையவரென்பது மெய்யானல், அது மேலுமேலும் துர்ச்சனனுகாதபடி அவர் அதை உடனே சங்காரம்பண்ணுதிருப்பதேன்?" எனப் பின்னுமொரு கேள்வி கேட்டான்.

இதற்குத்தரம் சொல்வது எளிதாயிருந்தும், எனக்குத் தெரியாமற் சற்றுத் தடுமாறினேன். நான் பருவத்தில் முதிர்ந்தும், வைதீக சாஸ்திரத்திற் பாலமாணக்கனு யிருந்ததனுல், வாதானுவாதம் செய்து சந்தேகந் தீர்க்கவும், உணர்தற்கரிய விஷயங்களைச் சிக்கறுத்துத் தெளிவிக்கவும் வல்லவாகியல்லவே. சொல்லத்தகும் விடை இன்னதென்று தெரியாததனுல், கேளாதவன்போல் அந்த வினவைத் திரும்பவும் கேட்கச் சொன்னேன். தன் கேள்விக்குத்தரம் அறிவதற்கு அபேட்சித்திருந்த சுக்கிரன் முன் கேட்டபடி சொற்சிதைவாய்ச் சொன்னுன். அதற்குள் என் புத்தி சற்றுத் தெளிந்தது. "கடவுள் பிசாசை யுகாந்தத்திற் கடுமையாய்த் தண்டிப்பார்: அவர் அதற்கு நியாயத்தீர்ப்புக்காலம் வருமளவும் தண்டனை விதிக்காமல் விட்டு, அப்புறம் என்று மவியாமல் நின்றெரியும் அகாதமான தீக்கடலில் அதைத் தள்ளுவார்" என்று சொன்னேன். இவ்வுத்தரம் அவனுக்குத் திருப்திகரமாயிருக்கவில்லை. அவன் என் சொல்லைத் திருப்பிச்சொல்லி, "யுகாந்தமளவும் தண்டிக்காமல் விடுவதா! இது எனக்குத் தெளியவில்லை. கடவுள் பிசாசை இப்பொழுது, இதற்கு நெடுங்காலத்திற்குமுன் ஏன் சங்கரிக்கவில்லை?" என்று பின்னுங் கேள்வி கேட்டான். "இந்தக் கேள்வி கேட்கிற நீ தேவ கட்டளையை மீறி, தீவினை செய்யும் உன்னையும் என்னையும் அவர் உடனே அழிக்காதிருப்பதேன் என்றும் கேட்கலாமே; நாம் மனஸ்தாபப்பட்டுப் பாவ மன்னிப்புப் பெறும்பொருட்

டுக் காப்பாற்றப்பட்டிருக்கிறோம்" என்றேன். அவன் சற்று வேளை மௌனமாயிருந்து சிந்தித்து, மிகப் பரிவுகூர்ந்து, "கெட்டி கெட்டி, நன்றாயிருக்கின்றது; அப்படியானால், நீரும், நானும், பிசாசும், அதிக்கிரமம் செய்தவர்கள் அனைவரும் ஜீவனோடு காக்கப்பட்டிருக்கிறோமே. பாவத்திற்காக மனஸ்தாபப்படுவோமானால், கடவுள் எல்லாருக்கும் மன்னிப்புக்கொடுப்பார்" என்றான். நான் சொன்ன நியாயத்தை அவன் வாய்ச்சொல் இவ்வாறு மேற்கொண்டது. இயற்கை அறிவுடையோர் சிருஷ்டிவர்க்கங்களின் கிரமத்தைக் கண்டு, சர்வ அண்டங்களுக்கும் அதிபதியாகிய கடவுள் ஒருவர் உண்டென்றும், நாம் மனம் புத்தி சித்தமுடையோராதலால், அவரைத் தகுதியாய்த் தாழ்ந்து பணிந்து பூசிக்கவேண்டுமென்று மறியலாகுமாயினும், திருவாக்கொழிய, மற்றொன்றும் யேசுக்கிறிஸ்துவைப்பற்றியும், அவர் நமக்காக உதிரக்கிரயங் கொடுத்துப்பெற்ற பாவச்சிறை மீட்சிக் கிரமத்தைப் பற்றியும், நூதன உடன்படிக்கையைப்பற்றியும், சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற தேவனுடைய திருப்பாதபடியில் மத்தியஸ்தஞ் செய்பவரைப்பற்றியும் நமக்குணர்த்தாது, தேவமூலமாய் வெளிப்படும் வாக்கு ஒன்றொழிய, மற்றெதுவும் மேற்சொல்லிய விஷயங்களை நமதுள்ளத்திற் புகட்டாதென்று சொல்லுகிறேன். ஆதலால், நமது கர்த்தரும், ஆத்ம ரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷம் என்னப்படும் திருவாக்காகிய வேதநூலும், தமது தொண்டருக்கு வழிகாட்டி, அவர்கள் நெஞ்சைச் சுத்திகரிக்கும்படி அனுப்புவதாகக் கடவுளால் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட தேவ ஆவியுமே கடவுளைப்பற்றிய ஞானவுணர்ச்சியையும், ஆத்மரட்சைக்குரிய சாதனங்களையும், மனுஷர் நெஞ்சில் உணர்த்துபவைகளாம் என்பதற்குச் சுக்கிரன் வாக்குமூலமாய்ப் பிறந்த சொற்களே எனக்குச் சாட்சிப்பிரமாணமாயின.

ஆனதன்மையால், சடிதியில் ஏதோ கருமத்தைப்பற்றி வெளிப்படுவதுபோல, நான் எனக்கும் சுக்கிரனுக்கும் நடந்த சம்வாதத்தை இம்மட்டில் நிறுத்தி, விரைந்தெழுந்து, சுக்கிரனை ஏதோ அலுவலின்பேரில் தூரமானவிடத்திற்கு அனுப்பிவிட்டு, அதிக பயபக்தியோடு பின் வருமாறு கடவுளைப்

பிரார்த்தித்தேன்:—"சர்வ லோகாதிபதியாகிய கடவுளே, பேதையாகிய இம்மிலேச்சனுக்கு ஞான உணர்ச்சிகளைப் போதிக்கும்படி உமதடியானுக்குத் திராணி யளித்தருளும்; கிறிஸ்துமூலமாய் உம்மை அறியும் அறிவாகிய ஞானசோதியை அடைவதற்கு, அறிவு சிறிதுமில்லாத இவ்வேழையின் இருதயத்திற்கு உமது ஆவியின் ஒத்தாசையை அனுக்கிரகித்தருளும்; அவன் மனக்குறையின்றி, தன் நிலைமை தெய்வமூலமா யேற்பட்டதென்றெண்ணி, திருப்தியாயிருக்கச் செய்தருளும்; நான் சொல்வதை அவன் மனம் உண்மையென்று ஒப்புக்கொள்ளவும், அவனுக்கு ஞானதிருஷ்டி வுண்டாகவும், அவன் ஆத்மரட்சை பெறவும் தக்கதாக உமது திருவாக்கின் பொருளை நான் அவனுக்கு ஏற்கும்வண்ணம் போதிக்கும்படி எனக்கு ஞானவரந் தந்தருளும்." அவன் திரும்பி வந்தபின், உலக ரட்சகரால் மனுஷருக்குப் பாவச்சிறை மீட்புண்டானதைப்பற்றியும், கடவுளிடத்திற்கு மனந்திரும்பி, மகிமையுள்ள கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்று தேவமூலமாய்ப் பிரசங்கிக்கப்பட்ட சுத்த சுவிசேஷத்தின் கோட்பாடுகளைப்பற்றியும் நெடுநேரமட்டும் அவனுடன் சம்பாஷித்தேன். நம்மைப் பாவச்சிறையிருப்பினின்று மீட்ட மகிமைதங்கிய ரட்சகர் தேவதூதர் வடிவு தாங்கிவராமல், ஆபிரகாமின் குடும்பத்தில் மானிடவடிவு தாங்கிவந்த காரணம் இன்னதென்றும், அந்தக்காரணத்தால், தேவதுரோகிகளாகிச் சீரழிந்த தேவதூதருக்கு மேற்சொல்லிய சிறைமீட்சியிற் பாத்தியமில்லையென்றும், லோகரட்சகர் மார்க்கம் தப்பிப்போன ஆட்டுமந்தையைப்போல, நிலையற்றுச் சிதறுண்டிருந்த மனுமக்களிடத்திற்கு வந்தாரென்றும் என் புத்திக்கெட்டியமட்டும் அவனுக்கு விவரணமாய்ச் சொன்னேன். இவ்விஷயங்களுக்குச் சம்பந்தமான வேறு பல வரலாறுகளையுந் தெரிவித்தேன்.

பேதையாகிய சுக்கிரனுக்கு நான் பலவாறுணர்த்திய விஷயங்களில் எனது அறிவு சொற்பமும், நிஷ்கபடம் அதிகமுமாயிருந்தனவென்று கடவுள் சாட்சியாய்ச் சொல்லுகிறேன். அவனுக்கு அந்தந்தப் பொருளை விவரித்துச் சொல்லும்பொழுது, கருத்தாயாராய்ந்து, தீரத் தெளியச் சிந்தித்துச்

சொன்னதனுல், முன்பு நானறியாதவைகளும், பூர்த்தியாய்ச் சிந்திக்காதவைகளுமான அநேக விஷயங்களை நூதனமாய் எளிதில் அறிந்தேன். இதற்கு என்னைப்போல் அநேகர் தங்கள் அனுபவத்திற் சாட்சி கண்டிருப்பார்களென்று நம்புகிறேன். இச்சமயத்தில் நான் இவ்விஷய விசாரணை செய்தபொழுது, அவற்றில் என் மனம் பிரவர்த்தித்ததுபோல், அத்தனை சிரத்தையாய் முன் ஒருபொழுதும் பிரவர்த்தித்ததில்லை. ஆகவே, நானுணர்த்திய சத்தியங்களால் அந்தச் சீர்கெட்ட மிலேச்சன் சிறந்தாலுமென்ன, இழிந்தாலுமென்ன, அவன் என்னிடத்திற்கு வந்ததினுலேயே நான் அச்சத்தியங்களை அறியப்பெற்றதனுல், அவன் வந்தது எனக்குப் பிரயோசனகரமாய்ப் பலித்ததென்று கடவுளுக்குத் துதி செலுத்துவது நியாயமே. முன்பு எனக்குண்டாயிருந்த துக்கச்சுமை சற்றுக் குறைந்தது. எனது வாசஸ்தானத்தில் எனக்குண்டான சுகானுபவங்களுக்கு அளவில்லை. நான் ஏகாந்தமாய்க் குடியேறிய இத்தீவில் இருக்கும்பொழுது, பாமார்த்த சிந்தனை யுடையவனுகி, என்னை இவ்விடத்திற் கழைத்து வந்த தேவனுடைய திருக்கரத்தை நாடினேன்; அன்றியும் இப்பொழுது திருவுள்ளத்தின் செயலால் அறிவிலியாகிய மிலேச்சனொருவனுடைய ஆத்துமாவை ரட்சிக்கவும், நித்தியஜீவனுக்கு அஸ்திவாரமாகிய கிறிஸ்து யேசுவைப் பற்றுமறிவு அவனுக்குண்டாகத்தக்கதாகச் சமயத்தைப்பற்றியும், கிறிஸ்துவேத உபதேசங்களைப்பற்றியும் வாஸ்தவமான அறிவைப் புகட்டவும் இடம்பெற்றேன். திருவுள்ளத்தின் செயலால் என் மூலமாகவே அவனுக்கு ஆத்மாட்சை யுண்டாமெனினும் ஒருவாறு பொருந்தும். இம்மேலான சிலாக்கியங்களை நினைத்து நினைத்து, எனதுள்ளம் மிகக் களிகூர்ந்தது. இப்பாழ்ந்தீவில் இருக்கும் என்னைப்போலச் சொல்வதற்கரிய கொடிய உபத்திரவப்படுவார் எவருமில்லையென் றெண்ணி, முன் பலமுறை பரிதபித்த நான் இப்பொழுது இத்தீவிற்கு வந்தது எனது பெரும்பாக்கியமென்று அடிக்கடி நினைத்து, ஆனந்த பரவசமடைந்தேன்.

இப்பால் நான் இத்தீவிற் சஞ்சரித்த காலமெல்லாம் எனது சிலாக்கியங்களை நினைத்து மகிழ்கூர்ந்து, எல்லாம்

வல்ல கடவுளை வாழ்த்திக்கொண்டு வந்தேன். நானும் சுக்கிரனும் இத்தீவிற் சகவாசம் செய்த காலம் மூன்று வருஷம். மனுஷர் பூமண்டலத்திற் சஞ்சரிக்கும்பொழுது பூரண மனப்பாக்கியமடைவது சாத்தியமாகுமானால், இம்மூன்று வருஷவரையில் எனக்கும் சுக்கிரனுக்கும் நடந்த சம்பாஷணைகளின் மூலமாய் இருவருக்கும் சம்பூரண மனப்பாக்கிய முண்டாயிற்றென்று சொல்லமாட்டேன். மிலேச்சன் இப்பொழுது என்னிலு மதிக கிறிஸ்த பத்தனானான். நாங்கள் இருவரும் பாவத்திற்காக மெய்மனஸ்தாபப்பட்டு, இரட்சண்ய மார்க்கத்தைக் கண்டு, துயரம் நீங்கிய தெய்வ தொண்டர்களா யிருந்தோமென்று இறைவன் அருளைச் சார்ந்து நம்புகிறேன். வாசிப்பதற்கு எங்கள் வசம் சத்திய வேத புத்தகமிருந்தது. எங்கள் உள்ளத்தில் ஞான முணர்த்துவதற்குத் தேவாவிக்கு இங்கிலாந்து சமீபமும், இத்தீவு தூரமுமல்லவே.

நான் எப்பொழுதும் சத்திய வேத புத்தகத்தைக் கிரமமாய் வாசித்து, அவ்வாக்கியங்களின் பொருளை எனக்குத் தெரிந்தமட்டும் சுக்கிரனுக்குப் போதித்துக்கொண்டு வந்தேன். அன்றியும், மேற்சொல்லியபடி அப்போதப்போது சுக்கிரன் பயபக்தியாய் வேதப் பொருளைக்குறித்துப் பல கேள்விகள் கேட்டதனால், வேதத்தை நன்றாய் வாசித்து, கருத்தாய்ச் சிந்தனை செய்து, அதிக விற்பத்தி யுடையவனானேன். அவன் என்னிடத்தில் வந்து சேராதிருந்தால், எனக்கு இவ்வளவு விற்பத்தி யுண்டாகாது. நிர்மானுஷியமான இந்தத் தீவிலிருக்கும்பொழுது அனுபவசித்தமாயறிந்த மற்றொரு முக்கியமான விஷயத்தை இவ்விடத்திற் சொல்லாமல் விடுவது தகுதியல்லவென்று எண்ணுகிறேன். கடவுளைப்பற்றி நாம் அறிவதற்கு ஆவசியகமானது எதுவோ அதுவும், கிறிஸ்து யேசுமூலமாய் ஏற்பட்ட ஆத்ம ரட்சிப்பை யுணர்த்தும் கொள்கை எதுவோ அதுவும் வேதாகமத்தில் தெளிவாய் உணர்த்தப்பட்டிருக்கின்றன. அவைகளை எவரும் எளிதில் உணர்ந்து அங்கிகரித்துக்கொள்ளலாம். எனக்குக் கிறிஸ்துமார்க்க சத்தியங்களைக்குறித்துக் குருவுபதேசம் எள்ளளவுமில்லை. வியாக்கியானப் புத்தகங்களின் உதவியுமில்லை. வேதவாக்கியத்தை நானே வாசித்து, பாவத்திற்கா

கக் கபடமின்றி மனஸ்தாபப்படுவதும், ஜீவனும் ஆத்ம ரட்சிப்பும் அடையும்பொருட்டுப் பரம ரட்சகனை மனப்பூர்வமாய் விசுவாசத்தாற் பற்றுவதுமாகிய முக்கியமான கிருத்தியங்களை மயக்கமின்றிப் பயில்வதற்கு நான் செய்யவேண்டிய கடமை இன்னதென்று பூர்த்தியாயறிந்து, பயின்று, நற்குண நற்செய்கைகளில் வரவரத் தேறி, கடவுள் விதித்த கற்பனைக ளனைத்தையும் கைக்கொண்டு சீர்ப்பட்டேன். அன்றியும், மயக்கமின்றி நான் கற்ற அறிவை மிலேச்சனுக்குப் போதிக்க, அவன் மனவிருள் நீங்கி, ஞானதிருஷ்டி யடைந்து, நற்குண நற்செய்கைகளில் திருந்தி, பக்தியுள்ள கிறிஸ்தவனானான். என்காலத்தில் அவனைப்போலும் நிஷ்களங்கமான பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் பலரை நான் காணவில்லை. இவ்வாறு மனுஷர் எளிதில் வேதக் கொள்கைகளை யுணர்ந்து சீர்படத்தக்கதாக இடம் பெற்றிருப்பது ஒப்பற்ற சிலாக்கியந்தான்.

மதக்கோட்பாடுகளின் நுட்பங்களைக்குறித்தும், திருச்சபை யாட்சிவிதிகளைக்குறித்தும் பூலோகத்திலுண்டான தர்க்கங்களும், விவாதங்களும், கலகமும், வாக்குவாதமும் நிஷ்பிரயோஜனமானவைகள். அவைகளை நாம் விசாரித்து அறிவது ஆவசியகமல்ல. அவைகள் பயனற்றவைகளென்று நான் ஒருவனல்ல, எவர்களும் சொல்வார்கள். முத்திநெறியை மயக்கமின்றித் தெரிவிக்கும் திருவாக்குநூல் எங்கள் வசமிருந்தது. அன்றியும், தேவாவியானவர் தமது திருவசனத்தால் எங்களுக்கு நற்போதனை செய்து, சத்திய மார்க்கத்திலெங்களை நடத்தி, திருவசனத்திற் கற்றறிந்த கற்பனைகளுக்கு மனப்பூர்வமாய் அமைந்தொழுகச் செய்தாரென்று உள்ளங்குளிர நினைத்துக் கலக்கமற்றிருந்தோம். இது எங்கள் மூலமாயல்ல, தேவ கடாட்ச மூலமாய்ப் பெற்ற பாக்கியம். சமய சம்பந்தமான விவாத விஷயங்களால் பூலோகத்தில் எங்கும் தலைதடுமாற்ற முண்டாயிருக்கின்றது. அவ்விஷயங்களை யுணர்த்தும் புத்தகங்களை நாங்கள் சேகரித்து வாசித்து, விவரணமா யறிந்திருப்பினும், அவற்றால் அற்பமாவது பயனுண்டென்று எனக்குத் தோன்றவில்லை. இதுவரையில் சமய சம்பந்தமான சங்கதிகளைச் சொன்னேன். இனி

எங்கள் சரித்திரத்தைச் சொல்வேன். அந்தந்தப் பாகத்தை அதனதன் காலக்கிரமம் தவருமற் சொல்லவேண்டுமே.

சுக்கிரனும் நானும் நாளுக்குநாள் ஒருவரோடொருவர் கலந்துறவாடி நன்ருய்ப் பயில்வதற்குள் நான் சொல்லும் மெதையும் அறியவும், சிறந்த வாசகநடையாய்ப் பேசத் தெரியாதிருப்பினும், தன் கருத்தைத் தடையின்றி எனக்குத் தெரிவிக்கவும் தக்கதாக அவனுக்கு அங்கிலேய பாஷையில் வாக்குத்திற முண்டாயிற்று. பின்பு எனது சரித்திர வரலாறுகளை அவனுக்குச் சொன்னேன். சரித்திரம் என்ருல் முழுதுமல்ல, நான் இத்தீவில் வந்து சேர்ந்ததும், இங்கிருந்து நாட்கழித்ததும், வந்தது முதல் இதுவரையிற் சென்ற காலவளவும் ஆகிய வரலாறுகளைச் சொன்னேன். துப்பாக்கியில் மருந்து குண்டு கெட்டித்து வெடி தீர்க்கும் சூழ்ச்சத்தையும் அவனுக்குத் தெரிவித்து, துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யப் பயிற்றினேன். அது அவனுக்கு முன்பு பரம ரகசியமாயிருந்தது. நான் அவனுக்கு ஒரு கத்தி கொடுத்தேன். அதை அவன் வாங்கிப் பார்த்து, மிகவும் பிரீதியாய் வைத்திருந்தான். மேலும், இடையிற் கட்டும் கச்சு ஒன்றுண்டாக்கி, அதில் உடைவாள் உறையொன்று தைத்துத் தொங்கும்படி இசைத்துக் கொடுத்து, அவ்வுறையில் உடைவாளல்ல, கைக்கோடரியொன்று வைத்திருக்கக் கொடுத்தேன். சில வேலைகளுக்கு உடைவாளைப்போலக் கைக்கோடரியு முதவும். பல சமயங்களில் உடைவாளினும் கைக்கோடரி மிகவு முபயோகமான ஆயுதமாம்.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அந்தந்தத் தேச விவரத்தையும், முக்கியமாய் எனது ஜனனதேசமாகிய இங்கிலாந்தின் வளத்தையுங்குறித்து அவனுக்குச் சொன்னேன். அங்கிலேயர் குடித்தனஞ்செய்யுங் கிரமம், தேவாராதனைசெய்யும் முறை, ஒருவரை ஒருவர் உபசரித்தொழுகும் தன்மை, சர்வ தேசங்களுக்கும் மரக்கலமேறிப்போய் வர்த்தகம் செய்யும் வகை முதலிய வரலாறுகளைச் சொன்னேன். நான் ஓடமேறிப் போய்ப் பார்த்த உடைந்த மரக்கலத்தைக்குறித்து அறிந்த சங்கதிகளைச் சொல்லி, கூடியவரையில் அது நின்ற

இடக்குறிப்பைக் காண்பித்தேன். அம்மரக்கலம் சின்னு பின்னமாயுடைந்து வெகு காலத்திற்குமுன் சிதறுண்டு போயிற்று.

உடைந்த எங்கள் ஓடத்தின் குறையுருவையுங் காண்பித்தேன். நான் கரையடைந்து சிலநாட் சென்றபின், எனது முழுப்பலத்தாலும் அசைக்கக்கூடாதிருந்த அவ்வோடத்தின் குறையுரு இப்பொழுது சின்னுபின்னமா யுடைந்துபோயிற்று. மீந்திருந்த குறையுருவைக் கண்டவுடன் சுக்கிரன் சற்றுவேளை ஒன்றும் பேசாமல் அதைப் பார்த்துக்கொண்டு நின்முன். எதைப்பற்றிச் சிந்தனையாயிருக்கிருயென்று கேட்டேன். அதற்கு அவன்: "இம்மாதிரியான ஓடம் எங்கள் தேசத்திற்கு வந்தது பார்த்திருக்கிறேன்" என்முன்.

அவன் சொன்னது கொச்சையாயிருந்ததனுல், அதன் அர்த்தம் எனக்குத் தெரியவில்லை. பிறகு நான் பூராயமாய் விசாரித்ததனுல், இவ்வோடத்தின் சாயலுள்ள ஓடமொன்று தன் தேசத்தின் கரையில் கடுங்காற்முல் தள்ளுண்டு வந்து நின்றதைத் தான் கண்டதாக விவரமாய்ச் சொன்னுன். ஐரோப்பியர் மரக்கலம் மிலேச்சர் தேசத்தின் கரையடுத்த சமுத்திரத்திற் சேதப்பட்டதாகவும், அதைச்சேர்ந்த ஓடம் கட்டவிழ்ந்து கரைசேர்ந்ததாகவும் நினைத்தேன். அதில் எவராவது தப்பிப் பிழைத்துக் கரைசேர்ந்திருப்பாரென்முயினும், அவர் எவ்விடத்தினின்று பிரயாணப்பட்டு வந்திருப்பாரென்முயினும் நினைக்க எனது புலன் செல்லவில்லை. அதனுல், ஓடம் எத்தன்மையதென்றுமாத்திரம் விசாரித்தேன்.

சுக்கிரன் அவ்வோடத்தின் சாயல் இப்படிப்பட்டதென்று விவரணமாய்ச் சொன்னுன். அன்றியும், "வெள்ளை மனுஷரை அபாயகரமான ஜலகண்ட மரணத்தினின்று ரட்சித்தோம்" எனச் சற்றுத் தாபமாய்ச் சொன்னுன். மனுஷர் கரையடைந்திருப்பார்களென்று உடனே எனது கருத்திற் பட்டது. அவ்வோடத்திலும் வெள்ளை மனுஷர் இருந்தார்களாவென்று கேட்டேன்: சுக்கிரன் "ஆம், ஓடம் நிறைய வெள்ளை மனுஷர் இருந்தார்கள்" என்முன். எத்தனை பெயரென்று கேட்க, கைவிரல் எண்ணி, பதினேழு பெயரைக் குறிப்பித்தான். அவர்கள் எங்கேயென்று கேட்டேன்.

அவன்: "ஜீவனோடிருக்கிறார்கள்; எனது ஜாதி ஜனத்துடன் சஞ்சரிக்கிறார்கள்" என்றான்.

அவன் சொன்னது கேட்டு, என் நெஞ்சில் நூதன சிந்தனைகளுண்டாயின. இத்தீவின் கரை தெரியுந் தூரத்தில் பார்தட்டிச் சேதப்பட்டு நின்ற கப்பலிலிருந்தவர்களே, இனிக் கப்பலுக்கு மீட்சியில்லையென்று கண்டு, ஓடத்திலேறித் தப்பிப் பிழைத்துக் கரைப்பட்டு, மிலேச்சருக்குட் சேர்ந்து சஞ்சரிக்கும் வெள்ளை மனுஷரென்று நினைத்தேன்.

அவர்கள் கதி என்னவென்று திட்டமாய் விசாரித்தேன். அதற்கு அவன் நாளதுவரையில் அங்கேதான் இருக்கிறார்கள். அவர்கள் அவ்விடம் சேர்ந்து நாலு வருஷமாகிறது. மிலேச்சர் விக்கினமொன்றும் செய்யாமல், அவர்களுக்கு வேண்டும் போஜனபதார்த்தங்களைக் கொடுத்தார்களென்று சுக்கிரன் சொன்னான். மிலேச்சர் அம்மனுஷரைக் கொன்று பட்சிக்காமல் விட்ட காரணமென்னவென்று விசாரித்தேன். "இருதிறத்தாரும் சகோதரரானார்கள். சண்டை செய்ய வரும் பகைவரிற் சிறைபிடித்தவர்களை யன்றி, இதரமான மனுஷரை மிலேச்சர் கொன்று பட்சிக்கிறதில்லை" என்று சுக்கிரன் உத்தரம் சொன்னான். இருதிறத்தாரும் சகோதரரானார்களென்று அவன் சொன்னதற்கு, சமாதான உடன்படிக்கை செய்ததாக அர்த்தம்பண்ணினேன்.

பின்னும் சற்று அதிககாலஞ் சென்றபின், ஒருநாள் சுக்கிரன் இத்தீவின் கீழ்கரையிலுள்ள சிறுமலைச் சிகரத்தில் ஏறி நின்றான். மப்புமந்தார மில்லாதிருக்கும்பொழுது நான் மலைச்சிகரத்தில் நின்று அமெரிக்க கண்டத்தின் கரையைக் கண்டதாக முன்னோரிடத்திற் குறிப்பித்தேனே. அதுதான் இம்மலை. கடலும் காற்றும் அடங்கி, ஆகாயம் வெளுத்திருந்தது. சுக்கிரன் கண்டத்தின் கரைக்கு நேர்முகமாய் நின்று, கருத்தைப் பொருத்திப்பார்த்து, ஆச்சரிய பரவசமுடையவனாய், பாய்ந்து குதித்து நடனம் செய்து, சற்றுத் தூரத்தில் நின்ற என்னை உரத்துக் கூவி அழைத்தான். சங்கதியென்னவென்று கேட்டேன். "சந்தோஷமானேன்! மகிழ்ச்சியடைந்தேன்! அதோ எனது தேசம், அதோ எனது ஜாதியார்!" என்றான். மீண்டும் தன் தேசத்திற்குப் போய்ச்

சஞ்சரிக்க அபேட்சித்தவன்போல், அவன் முகத்தில் அபூர்வ சந்தோஷக்குறி விளங்கியது. அவன் கண்கள் அகக்களிப்பை விளக்கித் துலங்கின. அவனுக்கு மிகுந்த அவா உண்டாயிருந்ததாக அவன் முகக்குறிப்பால் தோன்றிற்று. இந்தக் குணம் குறிகளைச் சுக்கிரனிடத்திற் கண்டு, சற்றுச் சந்தேகமுண்டானதனுல், என் மனம் முன்போலச் சுகமாயிருக்கவில்லை. எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணினேன். சுக்கிரன் ஜனனதேசத்திற்குத் திரும்பிப் போகச் சம்பவித்தால், சமயார்த்தமாய் அறிந்த விஷயங்களனைத்தையும், நான் செய்த நன்றிகளையும் மறந்து, தன் தேசத்தவர்களுக்கு என்னைக்குறித்துச் சொல்லி, நூறு இருநூறு பெயருடன் இத்தீவிற்கு வந்து, என்னைக் கொன்று பட்சித்து, எல்லாரும் விருந்துகொண்டாடுவார்களென்றும், போர்க்களத்திற் சிறைபிடிப்பவர்களைக் கொன்று பட்சிக்கும்பொழுது களிப்புறுவதுபோல், என்னைப் பட்சிக்கும்பொழுதும் சுக்கிரன் களிகூர்ந்திருப்பானென்றும் உறுதியாய் நம்பினேன்.

இவ்வாறு எனக்குத் துரோகம் செய்வானென்று எண்ணினது எனது தோஷந்தான். இதைப் பிற்பாடறிந்து மிகவும் துக்கப்பட்டேன்; ஆனுலும், சில வாரமளவும் சந்தேகம் என் நெஞ்சிற் குடிகொண்டு, நாளுக்குநாள் விர்த்தியானதனுல், நான் முன்போல் அவனுடன் பட்சமாய்ப் பேசி உறவாடவில்லை. முன்னிலும் சற்று அதிக சாவதானமாயிருந்தேன். இப்படிச் செய்தது என் குற்றந்தான். செய்நன்றி மறவாத எதார்த்தவாதியாகிய சுக்கிரன் துரோகமொன்றும் நினைக்கவில்லை. பக்தியுள்ள கிறிஸ்து தொண்டனும், செய்நன்றி மறவாத சினேகனும், சிந்திக்க நினைக்கத்தகும் உத்தம சிந்தனைகளுள்ளவனுமா யிருந்தானென்று பிற்பாடு எனக்குப் பூர்த்தியாய்த் தெரியவந்தது.

அவனைக்குறித்துச் சந்தேக விபரீதங் கொண்டிருக்குங் காலத்தில், மனக்கருத்தறியும்படி பிரதிதினமும் உபாயமாய்ப் பல கேள்விகள் கேட்டேன். அவன் சொன்னதொன்றும் எனது சந்தேகத்தை மூட்டி விர்த்தி செய்வதற்கு ஏதுவாயிருக்கவில்லை. கபடமின்றி அவன் சொன்னவைகள் எல்லாம் எதார்த்தமாயிருந்தன. சிலநாள் வரையிற் சந்தேகத்

தால் என் மனம் துன்பப்பட்டும், அவனுடைய நிஷ்களங்கமான குணத்தைக் கண்டு சந்தேகம் நிவிர்த்தியாகவே, மறுபடியும் அவனுக்கு உத்தம நண்பனுனேன். எனக்கு மனத்துன்ப முண்டானதென்று அவன் சிறிது மறியவில்லை. ஆகவே, அவனைக்குறித்துச் சூது நினைக்க நிமித்தமில்லையே.

வேறொருநாள் அம்மலையில் இருவரு முலாவிக்கொண்டிருந்தோம். கடலில் மூடுபனிப் புகார் அடர்ந்திருந்ததனுல், கண்டத்தின் கரை தெரியவில்லை. "சுக்கிரா! இங்கே வா, நீ உனது ஜனனதேசத்திற் போய்ச் சேர்ந்து, உனது ஜாதி ஜனத்துடன் கூடிவாழ விரும்புகிருயா?" என்று விசாரித்தேன். அவன் அதற்கு: "ஆம் என் ஜாதி ஜனத்துடன் சேர்வது எனக்கு மிகவும் சந்தோஷம்" என்றுன். "உனது ஜனன தேசத்திற்குப் போய் என்ன செய்வாய்? திரும்பவும் சீர்கெட்டு, விலங்கின் தன்மையுள்ளவனுய் நரமாமிச போஜனம் செய்து மிலேச்சனுக நாட்கழிப்பாயா?" என்று வினுவினேன். அவனுக்கு ஏதோ மனக்கவலை யுண்டாயிருப்பதாக அவன் முகத்தில் விளங்கியது. தலை அசைத்து, அவன், "இல்லை இல்லை! நற்குண நற்செய்கையுள்ளவர்களாயிருக்கவும், கடவுளைப் பிரார்த்திக்கவும், இனி நரமாமிச போஜனம் செய்யாமல், தானியத்தை அரைத்து, மாவில் ரொட்டி சுட்டு, அதையும் ஆடுமாடுகளின் மாமிசத்தையும் பாலையும் உண்ணவும் வேண்டுமென்று என் தேசத்தவர்களுக்குச் சொல்வேன்" என்று உத்தரம் சொன்னுன். "அப்படிச் சொல்வாயானுல், அவர்கள் உன்னைக் கொல்வார்களே!" என்று நான் சொன்னது கேட்டு, அவன் சற்றுநேரம் அடக்கமாயிருந்து சிந்தனை செய்து, "இல்லை, அவர்கள் என்னைப் பிராணவதை செய்யார்கள், நான் சொல்வதற்குச் செவிகொடுத்து அறிவாளிகளாக விரும்புவார்கள். ஓடத்தில் வந்திறங்கின தாடி வளர்த்த வெள்ளை மனுஷரிடத்தில் அவர்கள் வெகு காரியங்களைக் கேட்டு அறிந்து விற்பத்தியடைந்திருக்கிருர்கள்" என்பதாக வெளியிட்டான். அப்படியானுல், அவர்களிடத்திற் போய்ச் சேர உனக்கு இஷ்டமாயிருக்கிறதாவென்று நான் கேட்க, அவன் முறுவலித்து, இவ்வளவு தூரம் நீந்திப்போகத் தனக்கு வசமில்லை என்றுன். நான்

ஒரு ஓடம் செய்து கொடுத்தால் அதிலேறிப் போவதற்குத் தடையென்னவென்று விசாரித்தேன். அதற்கு அவன், நீரும் கூட வருவீரானால், இருவரும் போவோம் என்றான். "நானும் கூட வரவா! என்னைக் கண்ட க்ஷணமே கொன்று பட்சிப்பார்களே! அதற்கு நிவிர்த்தி யென்ன" என்றேன். சுக்கிரன், "இல்லை இல்லை! அவர்கள் உம்மைப் பட்சிக்காமல், உம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்கும்படி செய்வேன்" எனக் கூறினான். பகைஞரைக் கொன்று தன் ஜீவனைக் காத்த வரலாறுகளை அவர்களுக்குச் சொல்லி, அவர்கள் கருத்தைக் கவர்ந்து என்னிடத்தில் அன்புகூரும்படி செய்வதே அவனுடைய தாற்பரியமென் றறிந்தேன். மனத்துயரடைந்து ஆதரவற்றவர்களாய்க் கரைசேர்ந்த பதினேழு தாடி ரோமம் வளர்த்த வெள்ளை மனுஷருக்குத் தன் ஜாதியார் செய்த உபசாரத்தையும் சகாயத்தையும்பற்றி விவரணமாய்ச் சொன்னான்.

அவன் இவ்வாறு விவரமாய்க் குறிப்பித்த வெள்ளை மனுஷர் ஸ்பானியர், அல்லது போர்த்துக்கேயர் என்று உறுதியாய் நம்பினேன். கண்டத்தின் கரைக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள இத்தீவில் ஏகாந்தமாயிருக்கும் அகதியாகிய எனக்குத் துணை நிற்பார் எவருமில்லை. எப்படியாவது அக்கரை பிடித்து, அவர்களுடன் சேர்ந்தால், அங்கிருந்து, அவர்கள் துணையைச் சார்ந்து, சிறையிருக்கும் துயரம் நீங்கி, ஜனனதேசத்திற்குப் போய்ச் சேரலாகுமாதலால், அக்கரை சேர வகை பார்க்கவேண்டுமென்று இக்காலந்தொடங்கி எனக்கு ஆவலுண்டாயிருந்தது. சில தினங்கள் சென்றபின், நான் சுக்கிரனை ஓடம் விட்டிருந்த கடற்கரைக்கழைத்துக்கொண்டுபோய், உனது ஜனனதேசத்திற்கு ஏறிப் போவதற்கு உனக்கு ஒரு ஓடந்தருவேனென்று சொல்லி, ஜலத்தில் மூழ்கியிருந்த ஓடத்திலேறிய ஜலத்தை இறைத்து, வெளியிட்டு நிமிர்த்தி, அவனுக்குக் காண்பித்தபின், இருவரும் அதில் ஏறினோம்.

ஓடம் செலுத்தும் திறத்தில் அவன் எனக்கு இருமடங்கு சமர்த்தனென்றும், மிகுந்த விரைவாய்ச் செலுத்தமாட்டுவானென்றும் திருஷ்டாந்தமாய்க் கண்டு, "நல்லது சுக்கிரா,

இனித் தடை என்ன, இவ்வோடத்தைச் செலுத்திக்கொண்டு, இருவரும் உனது தேசத்திற்குப் போவோமா" என்று கேட்டேன். நான் இவ்வாறு கேட்டதைப்பற்றி, அவன் உற்சாக மழிந்தவன்போல் ஒன்றும் பேசாதிருந்தான். இவ்வளவு தூரம் அச்சமின்றி ஓடுவதற்கு அவ்வோடம் மிகச் சிறிய தென்று நினைத்தான்போலும். அதனிலும் பெரிய ஓடம் மற்றொன்றிருப்பதாகச் சொன்னேன். நான் முன்பு பல நாள் வருந்திச் சமைத்து, கடலிலிறக்க முடியாதென்று விட்ட ஓடமிருந்த இடத்திற்கு மற்றநாள் அவனை அழைத்துக் கொண்டுபோய்க் காண்பித்தேன். அதைக் கண்டவுடன் அது நமது காரியத்திற்கு உதவுமென்று சொன்னான். அவ்வோடம் தேடுவாரற்று, இருபத்திரண்டு இருபத்துமூன்று வருஷகாலமாய் வெயிலிலிருந்து, விறகுபோற் காய்ந்து முறுகி வெடித்து, ஒருவாறு உட்கிப்போயிற்று. சுக்கிரன் "இவ்வோடத்தில் ஏறிப் போகலாம்; இதில் நமக்கு வேண்டுமளவிற்குப் போஜனபதார்த்தமும், பானவர்க்கங்களும், ரொட்டி முதலானவைகளும் ஏற்றிக்கொண்டு போகலாம்" என்றான்.

# 16. அத்தியாயம்.

அக்கரையிலுள்ள கண்டத்திற்கு நான் போகத் தீர்மானித்தது. இருபது பெயர் ஏறத்தக்க ஓடமொன்றைச் சுக்கிரனும் நானும் சிருஷ்டித்தது. அதைச் செலுத்தும் சாமர்த்தியம் அவனிடத்தில் விளங்கியது. மூன்றோடத்தில் வந்து மிலேச்சர் கரை ஏறிய செய்தியைச் சுக்கிரன் வந்து எனக்குச் சொல்லியது. விரைந்துபோய் அவர்களைச் சங்கரிக்க நிர்ணயித்தது. அந்தத் துரோகிகள்மேல் சுக்கிரனும் நானும் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்து, எளிய ஸ்பானியன் ஒருவனை ரட்சித்தது. இறந்தவர்கள் காயம்பட்டவர்களின் தொகை வகை விவரம். ஒரு ஓடத்தில் கதியற்ற இந்தியன் ஒருவன் கட்டுண்டிருக்கக் கண்டதும், அவன் சுக்கிரனது தந்தையென் றறிந்ததும்.

நானு காரியங்களையும் நன்றாய் யோசித்தபின், சுக்கிரனுடனே அமெரிக்கா கண்டத்திற்குப் போவதுதான் உத்தமமென்று உறுதியாய் எண்ணி, நாமிருவரும் கண்ட ஓடத்தினளவு பருமமுள்ள நூதன ஓடமொன்றைச் செய்து

முடிக்கவும், நீ அதில் ஏறி உனது வீட்டிற்குப் போகவும் வேண்டுமென்று சொன்னேன். அவன் வாக்கினின்று அதற்கு உத்தரமொன்றும் பிறக்கவில்லை. அவனுக்கு ஆழ்ந்த சிந்தனையும் துக்கமும் உண்டாயிருப்பதாக அவன் முகத்தில் விளங்கியது கண்டு, உனக்கு என்னவென்று கேட்டேன். அப்பொழுது அவன், "நீர் சுக்கிரன்பேரில் உக்கிராவேசம் கொள்வதற்கு நிமித்தமென்ன? நான் என்ன குறை செய்தேன்?" என்பதாக என்னைத் திருப்பிக் கேட்டான். அதற்கு நான் உன் தாற்பரியமென்னவென்று கேட்டு, எனக்கு உன்னிடத்தில் எவ்வளவும் கோபமில்லை என்றேன். "கோபம் இல்லையா!" என்று இச்சொற்களைப் பலகால் வற்புறுத்திச் சொல்லி, "சுக்கிரனாகிய என்னை எனது ஜாதி ஜனத்தாரிடத்திற்கு அனுப்பிவிடும் முகாந்தரமென்ன?" என்று கேட்டான். "முகாந்தரம் என்னவென்று கேட்கிறாய் சுக்கிரா? உன் தேசத்திற் சஞ்சரிக்க உனக்கு இஷ்டமாயிருக்கிறதென்று நீயே சொல்லவில்லையா?" என விசாரித்தேன். "ஆமாம், இருவரும் அவ்விடத்திற் சஞ்சரிப்பது எனக்கு இஷ்டந்தான். எஜமானும் என் கூட வராதிருந்தால், எனக்கு அங்கே போக இஷ்டமில்லை" என்றான். என்னை விட்டு ஒன்றியாய்ப் போக அவன் ஒருபொழுதும் நினைக்கவில்லை. "நான் அவ்விடத்திற்குப் போகவா! போய் என்னசெய்வேன்? சுக்கிரா" என வினவினேன். இதைக்குறித்து அவன் பொறுத்து யோசிக்காமல், பின் வருமாறு உத்தரம் சொன்னான்:—"அங்கிருப்பவர்களுக்கு உமது மூலமாய் அதிக நன்மையுண்டாம்; அந்தக் காட்டுத்தன்மையுள்ள மிலேச்சருக்கு நீர் நற்புத்திகளைப் புகட்டினால், அவர்கள் நற்குண நற்செய்கைகளிற் பயில்வார்கள்; மயங்கியிருக்கும் அவர்கள் புத்தி தெளியும்; துஷ்ட கிருத்தியங்களை விட்டுச் சாந்தகுணமுள்ளவர்களாய்ச் சீர்ப்படுவார்கள். கடவுளை யறியவும், அவரைப் பிரார்த்திக்கவும், பரிசுத்தராய் ஒழுகவும் நீர் அவர்களுக்குப் போதிப்பீர்" எனப் பகர்ந்தான். "ஐயோ சுக்கிரா, நீ சொல்வது இன்னதென்றறியாய்; நிர்மூடனாகிய எனக்கு என்ன தெரியும்?" என்று நான் சொல்ல, அவன்: "ஆமாம், நீர் எனக்கு நற்போதனைகள் செய்தீர்; அவ்வாறே

அவர்களுக்கும் நற்போதனை செய்வதற்கு உம்மாலாகும்" என்று உத்தரம் சொல்ல, "இல்லை இல்லை, நான் வரவில்லை, நீமாத்திரம் போகவேண்டும். நான் முன்பு ஏகாந்தமாய் இங்கிருந்தபடி இருப்பேன்" என்றேன். இச்சொற்கேட்டு, அவன் மனந்தடுமாறியதனால், இடைக்கச்சில் வழக்கமாய் மாட்டிக்கொண்டுபோகும் கைக்கோடரி ஒன்றை விரைந்து ஓடிப்போய் எடுத்துவந்து என்னிடத்திற் கொடுத்தான். "நான் இதனால் என்னசெய்யச் சொல்லுகிறாய்?" என்றேன். "சுக்கிரனைப் பிடித்துத் தறித்துக் கொல்லும்" என்று அவன் சொல்ல, "நான் உன்னைக் கொல்வதற்கு நிமித்தமென்ன?" என்று கேட்டேன். "நீர் என்னகாரணத்தால் சுக்கிரனை அனுப்பிவிடுகிறீர்? சுக்கிரனை அனுப்பவேண்டாம், சுக்கிரனைப் பிடித்துக் கொல்லும்" என விரைவில் உத்தரம் சொன்னான். இது பரிகாசப் பேச்சல்ல; அவன் தன் நெஞ்சின் அபிப்பிராயத்தை உள்ளபடி வெளியிட்டான். அவன் கண் கலங்கிக் கண்ணீர் ததும்பியதே இதற்குச் சாட்சி. அவனுக்கு என்னிடத்தில் மிகுந்த ஆசாபாச முண்டாயிருப்பதையும், அவன் சித்தம் சஞ்சலிக்காமல் ஸ்திரப்பட்டிருப்பதையும் பரிஷ்காரமாய்க் கண்டு, என்னுடன் சகவாசம் செய்ய இஷ்டமாயிருந்தால், நான் அவனை அனுப்பிவிடுவதில்லையென்று அப்பொழுதும் சொன்னேன்; அதற்குப் பின்னும் பல சமயங்களிற் சொன்னேன்.

மொத்தத்திற் சொல்லில், அவனுக்கு என்னிடத்தில் ஸ்திரமான நட்புண்டாயிருப்பதாகவும், அவன் எவ்விதத்திலும் என்னை விட்டுப் பிரியானென்பதாகவும் அவன் வாக்கு மூலத்தால் ஐயந்திரிபறக் கண்டதனால், மிகுந்த ஜனாபிமானமும், என்மூலமாய்த் தன் தேசத்தவர்களுக்கு நன்மையுண்டாமென்று பரிவுகூர்ந்து நம்பியதுமே ஜனனதேசத்திற்குப் போகும்படி அவனுக்கு இஷ்டமுண்டானதற்கு அஸ்திவாரமென்று கண்டேன். அவன் தேசத்தவர்களுக்கு நன்மைசெய்யும் வகை இன்னதென்று எனக்குச் சொப்பனத்திலும் தெரியாததனால், அவர்களுக்கு நன்மை செய்வதற்கு நான் அற்பமாயினும் நினைக்கவுமில்லை, கருதவுமில்லை, நாடவுமில்லை. தாடி ரோமம் வளர்த்த வெள்ளை மனுஷர் பதினேழு

பெயர் தன் தேசத்தில் வந்து சஞ்சரிக்கும் சங்கதியை அவன் எனக்கு வெளியிட்டபொழுது, நான் அவர்களிடத்திற்கு எவ்வாறுவது போய்ச் சேர்ந்து, அவர்கள்மூலமாய்த் தப்பித்துக் கொள்ளவேண்டுமென்று எனக்கு மிகுந்த அபேட்சை யுண்டானதாக முன்பு சொன்னேனே. அந்த அபேட்சை வர வர வளர்ந்து, பலத்து, முதிர்ந்தது. ஆனதுபற்றி, அப்பியந்தமின்றி நானும் சுக்கிரனும் தகுதியான பரு மரம் பார்த்துத் தறிக்கவும், பிரயாணத்திற்கு வளமான பெரும் புணை யொன்று செய்யவும் தொடங்கினோம். ஓடங்கள்மாத்திரமல்ல, ஒரு சேனை சண்டைக்கப்பல்கள் செய்யினும், அவைகளுக்கு வேண்டிய தகுதியான மரங்கள் தீவில் எங்கும் திரளாயிருந்தன. கடற்கரைக்குச் சமீபத்தில் மரந்தறித்து ஓடம் சமைத்தால் அதை முன்போலச் சங்கடப்படாமல் எளிதாய்க் கடலி லிறக்குவதற்கு இசையுமென்றெண்ணி, கடற்கரைப் பக்கத்தில் மரம் பார்த்துத் தறிப்பது முக்கியமென்று என் சிந்தையிற்பட்டது.

இன்னஜாதி மரம் ஓடத்திற்காகுமென்று என்னிலும் சுக்கிரனுக்கு அதிக திட்டமாய்த் தெரிந்தது. கடைசியில் சுக்கிரன் ஒரு மரத்தைக் குறித்து, அதுதான் ஓடத்திற்குத் தறிக்கத்தகும் என்றான். இருவரும் அதைத் தறித்து விழுத்தினோம். அம்மரம் பஸ்திக் எனப் பெயர் வழங்கும் மரத்திற்குச் சமானமாயிருந்தது. அது ஒருவாறு அந்த ஜாதி மரத்தைப்போலும், ஒருவாறு நிகராகுவா மரத்தைப்போலும் இருந்தது. நிறத்திலும் மணத்திலும் அது நிகராகுவா மரத்தை ஒத்திருந்தது. அதன் பெயர் இன்னதென்று எனக்கு நாளதுவரையில் தெரியாது. சுக்கிரன் இம்மரத்தின் உள்வைரத்தைச் சுட்டெரித்துக் குழாயாக்கி, ஓட மமைக்கவேண்டும் என்றான். சுட்டெரித்து ஓடம் சமைப்பதிலும், உளி கோடரி முதலிய ஆயுதங்களால் அடித்துக் கொத்திக் குடைந்தெடுப்பது எளிதென்று சொல்லி, ஆயுதங் கைக்கொண்டு வேலைசெய்யப் பயிற்றினேன். அவன் எளிதிற் பயின்று வேலையிற் கைபடிந்தான். ஒரு மாசவரையில் இருவரும் வருந்தி உழைத்து ஓடம் செய்து முடித்தோம். கோடாரியால் அதன் புறத்தைக் கொத்தி மெருகிட்டு, உருவாக்கியபின், ஓடம் மிக

வும் அழகாய் அமைந்தது. அப்புறம் அடியில் பாரிய உருளை மரங்களைக் குறுக்கே மாட்டி, ஓடத்தைக் கிளப்பி, அங்குலம் அங்குலமாய்ப் பெயர்த்துத் தள்ளிக் கொண்டுபோய், ஜலத்தில் இறக்குவதற்குக் கொஞ்சங் குறையப் பதினாலுநாள் சென்றது.

கடலில் இறக்கியபின் அத்தனை பாரிய ஓடத்தை எனது கையாளாகிய சுக்கிரன் மிகுந்த சாமர்த்தியத்துடன் விரைவில் திருப்பி, தண்டு வலித்துச் செலுத்தி நிர்வகித்த விந்தையைக் கண்டு பிரமை யடைந்தேன். நாம் இருவரும் அதில் அச்சமின்றி ஏறி அக்கரைக்குப் போகலாமாவென்று கேட்டேன். "ஆம், சண்டமாருதமடித்தாலும் அஞ்சுவதற்கு நிமித்தமில்லை. அச்சமின்றித் தாராளமாய்ப் போகலாம்" என்றான். இம்மட்டில் நான் திருப்தி யடைந்திருக்கவில்லை. ஓடத்திற்குப் பாய்மரமொன்றும், பாயும் உண்டாக்கவும், நங்கூரமும் அமாரும் சேகரித்திசைக்கவும் வேண்டுமென்று எண்ணியிருந்தேன். பாய்மரம் தேடுவது பாரமல்ல. தேவதாருக்கள் தீவில் திரளாயிருந்தன. கடற்கரைக்குச் சமீபத்தில் நேர்மையான இளந் தேவதாரு ஒன்றைக் கண்டு, சுக்கிரனைக்கொண்டு தறிப்பித்து, அதைப் பணிக்காய் வெட்டிப் பாய்மரமாக வமைக்கும்படி சொன்னேன். பாய் சேகரிப்பதைப்பற்றித்தான் எனக்கு மிகுந்த விசாரமுண்டாயிற்று. பழைய பாய்த் துண்டுகள் திரளாயிருந்தன. அவைகளை இருபத்தாறு வருஷவரையில் வைத்திருந்தும், எனக்கு எப்பொழுதாயினும் உதவுமென்று எண்ணாததனால், நான் பழுதாகாதபடி பத்திரப்படுத்தவில்லை. உட்கி உதவாமற்போமென்று நம்பியிருந்தேன். ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்க்குமளவில், அநேகந் துண்டுகள் எனது கருமத்திற்குபயோகப்படத் தக்கவைகள் அல்லவென்று கண்டேன். ஒருவாறு உதவத்தக்க இரண்டு துண்டுகளைக் கண்டெடுத்து, எனக்குத் தெரிந்தமட்டும் தைத்துப் பக்குவப்படுத்தத் தொடங்கினேன். தகுதியான ஊசியில்லை. ஒருவிதமாய் வருந்தித் தைத்துப் பொருத்தி, முக்கோணவடிவான அந்தசந்தமற்ற பாயொன்றை அமைத்தேன். இங்கிலாந்தில் இந்தரூபமான பாய்க்கு ஆட்டுத் தோற்பாய் எனப் பெயர் வழங்கும். இந்தப் பாயைக்

கோணாந்தரமான கொம்பில் இசைத்து, ஓடத்தின் பக்கத்தில் குறுங்கொம்பு குறுக்கே வைத்து, அதிற் கட்டி, நாவாய் செலுத்த எண்ணியிருந்தேன். அங்கிலேய மரக்கலங்களைச் சேர்ந்த பாரிய வள்ளங்களுக்கு இந்தரூபமான பாய் கட்டு வார்கள். இச்சரித்திர புத்தகத்தின் ஆரம்பத்தில் குறிப்பித்த படி பார்பேரி தேசத்தினின்று ஓடமேறி ஒளித்தோடியபொழுது, நான் அதிற் கட்டிய பாய் இத்தன்மையுள்ளதாகவே யிருந்தது. ஆகவே, இவ்விதப் பாய் தூக்கி ஓடம் செலுத்தப் பயின்றிருந்தேன்.

பாய்மரம் வெட்டிப் பக்குவமாய் ஓடத்தில் இசைத்து, பாய் தைத்து, மற்றும் ஆவசியகமான சீரனைத்துந் தேடி எத்தனப்படுவதற்குச் சற்றுக் குறைய இரண்டு மாசம் சென்றது. காற்று வாட்டத்தில் ஓடத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டில், அதற்குதவியாகப் பாய்மரம் கட்டும் பக்கக் கயிறொன்றும், முற்பாயொன்றும் உண்டாக்கினேன். முக்கியமாய் ஓடம் திருப்புவதற்குப் பின்னணியத்தில் சுக்கானென்று பொருத்தினேன். கைபடியாத எனக்கு ஓடாவியாகும் திறமேது. இந்தச் சீர்கள் யாவும் ஓடத்திற்கு இன்றியமையாத சாதனங்களென் றறிந்ததனால், எத்தனையோ சூழ்ச்சங்கள் உபாயங்கள் செய்து, அவற்றுள் பல வியர்த்தமாய் முடிந்தும், சலிக்காமல் உழைத்துக் கடைசியில் ஒருவாறு நானெடுத்த கருமத்தை முடித்தேன். ஓடம் சமைப்பதற்கு நான் உழைத்ததும், அதற்குரிய உபகரணங்கள் தேடுவதற்கு உழைத்ததும் ஒன்றுக்கொன்று சமானமென்று சொல்லலாம்

இவ்வேலைகள் அனைத்தும் செய்து முடிந்தபின், எனது ஓடம் செலுத்தும் வகையைச் சுக்கிரனுக்குப் பயிற்றவேண்டியிருந்தது. தண்டு வலித்து ஓடம் செலுத்த அவன் நன்றாய் வழக்கப்பட்டிருந்தும், பாய் தூக்க, இறக்க, சுக்கான் பிடிக்க, திருப்ப வகை அறியாதிருந்தான். நான் சுக்கான் பிடித்து ஓடம் செலுத்திக்கொண்டு போனதையும், திருப்பிக்கொண்டு வந்ததையும், இருபுறத்திற்கும் பாய் மாற்றினதையும், அதில் ஓடம் சென்ற திசைக்கு ஏற்றபடி காற்றுப் பிடித்ததையும் கண்டபொழுது, அவன் அதிக பிரமை

யடைந்து நின்றான். பின்பு நாளுக்குநாள் கண்டு பயின்று, கைதேர்ந்த கடலோடியானான். திசையறி கருவிப் பிரயோக மாத்திரம் அவனுக்குப் பயிற்றக் கூடாதிருந்தது. மழைக் காலத்திலன்றி, மற்றப் பருவங்களில் மப்பு மந்தாரமாவது, மூடுபனியாவது பெரும்பாலும் அங்கே இல்லை. இரவில் நட்சத்திரமும், பகலில் கரையும் பரிஷ்காரமாய்த் தெரியும். மழைக்காலத்தில் எவரும் கரை மார்க்கமாயாவது, கடல் மார்க்கமாயாவது பிரயாணம் செய்ய நினைக்கிறதில்லை. ஆன துபற்றித் திசையறி கருவியைப் பிரயோகிக்க நிமித்தமில் லையே.

இத்தீவில் எனது சிறையிருப்புத் தொடங்கி இருபத்தாறு வருஷம் சென்று, இருபத்தேழாவது வருஷம் பிறந்தது. சென்ற மூன்று வருஷம் சுக்கிரன் என்னுடன் சகவாசம் செய்து, எனது குடித்தன முறை முன் இருந்ததற்கு வித்தி யாசப்பட்டதனால், அம்மூன்று வருஷத்தையும் எனது சிறை யிருப்புக் காலக் கணக்கினின்று தள்ளவேண்டும். முன் போல வருஷோற்சவ தினத்தைக் கொண்டாடி, கடவுள் எனக்கு மனது இரங்கிச் செய்த பற்பல அனுக்கிரகங்களை நினைத்து, அவரை வணங்கித் துதித்தேன். முன்பு அவர் எனக் குச் செய்த நன்மைகளை அறிக்கையிட்டு, அவரை வணங் கித் துதிக்க நிமித்தமிருந்தால், இப்பொழுது அவர் தமது தெய்வச்செயலால் என்னை அன்பாய் ஆதரித்து வருவதற்கு விசேஷ திருஷ்டாந்தங்களைக் கண்டிருப்பதனாலும், இனி விரைவில் சிறை மீளுவேனென்று எனக்கு நம்பிக்கை உண் டாயிருப்பதனாலும் இந்த நன்றிகளைச் சிந்தையில் வைத்துக் கடவுளை முன்னிலும் அதிகமாய்த் துதித்துப் போற்றுவது நியாயமே. இன்னும் ஒரு வருஷத்திற்குள் நான் இந்தச் சிறைச்சாலையினின்று விடுதலை பெறுவேன் என்பதாக என் னுள்ளத்தில் அழியாத நம்பிக்கை உண்டாயிற்று; ஆனாலும், இந்த நம்பிக்கையைச் சார்ந்து, நான் செயலற்றிருக்கவில்லை. வழக்கப்படி கிருஷித்தொழில் செய்து, தரை அகழ்ந்து, கொம்பு நட்டு, வேலி அடைத்துக்கொண்டு வந்தேன். அன்றி யும், திராட்சப்பழம் பறித்து, உலர்த்தி, பதஞ்செய்து, பின் னும் ஆவசியகமான வேலைகளனைத்தையும் நிறைவேற்றினேன்.

இதற்குள் மழைகாலம் அடுத்ததனுல், பெரும்பாலும் வெளிப்படாமல் வீட்டிலிருந்தேன். நூதனமாய்ச் சமைத்த ஓடத்தை எனது சிறையிருப்புத் தொடங்கியகாலத்தில் உருவினின்று கட்டி ஏறிவந்த தெப்பம் கரைபிடித்த நீரோடையில் திருப்பிக் கொண்டுவந்து, நீர்ப் பெருக்குவேளையில் கரையில் அலேஎட்டுந் தூரத்தில் அதை இழுத்துக் கரையேற்றி, ஓடம் நின்று மிதக்கத்தக்க விஸ்தாரமுள்ள தரையைச் சுக்கிரனைக்கொண்டு அகழ்வித்தேன். கடல் வற்றும் வேளையில் நீர் ஏருதபடி அவ்விடத்தின் ஓரத்தில் பலமான அணை கட்டினேம். ஆகவே, எங்கள் ஓடம் கடற்கரைப் புறத்தில் அலைக்குத் தப்பி, வெறுந்தரையில் நின்றது. அது மழையில் நனையாதபடி திரளான மரக்கிளைகளை வெட்டிக் கொண்டுபோய், அடர்த்தியாய் அடுக்கி, வீடு வேய்ந்தது போல், அதை மூடிக் கட்டியபின், சிறை மீட்சிப் பிரயாணம்போகக் கருதி, நோவெம்பர், டிஸெம்பர் மாசங்கள் வருமளவும் காத்திருந்தோம்.

மழைகாலமொழிந்து, மேற்சொல்லிய மாசங்கள் வந்ததனுல், பிரயாணம் போவதற்குப் பிரதிதினமும் பிரயத்தனம் செய்தேன். முதலில் பிரயாணத்திற்கு வேண்டும் போஜன பதார்த்தம் முதலியவைகளை இரண்டொரு வாரத்திற்குச் சேகரித்து ஓடத்திலேற்றவும், அப்புறம் அணையை வெட்டிப் பிரித்து, ஓடத்தைக் கடலிலிறக்கவும் அபிப்பிராயப்பட்டேன். பெரும்பாலும் வாரத்திற்கு ஒருமுறை நாங்கள் கடல் ஆமை பிடித்து, அதன் முட்டைகளையும் மாமிசத்தையும் சமைத்துப் புசிப்பது வழக்கம். ஒருநாட் காலையில் நான் யாத்திரைக்கு எத்தனமான ஏதோ வேலை செய்துகொண்டிருக்கையில், சுக்கிரனைக் கடற்கரைக்குப் போய் ஆமை பிடித்து வரச்சொன்னேன். அவன் போய், அடிக்குள்ளே திரும்பி, ஓடிப் பறந்து வந்து, புற மதிலை, அல்லது வேலியைத் தாண்டி, உள்ளே குதித்தான். தரையில் அவன் அடி தங்கவில்லை; அவன் அவ்வளவு அதிகதியாய் ஓடி வந்து, சங்கதி என்னவென்று நான் கேட்குமுன்: "எஜமானே! எஜமானே! துக்கம் மேலிட்டது! தீமை வந்தது!" என்று பதறி உதறி ஓலமிட்டான். "சங்கதி என்ன சுக்கிரா, பதருமற் சொல்"

என்று கேட்டேன். அதற்கு அவன்: "சொல்வது என்ன? அதோ பாரும்! ஓடம் ஒன்று, இரண்டு, மூன்று! ஒன்று, இரண்டு, மூன்று!" என்றான். இப்படிச் சொன்னதனால், ஆறு ஓடங்களைக் கண்டானென்று அனுமிதிசெய்து, விவரமாய்ச் சொல்லக் கேட்டேன். வந்த ஓடங்கள் ஆக மூன்று என அவன் வாக்குமூலமாய் அறிந்து: "சுக்கிரா, இங்கே வா, அஞ்சாதே" என்று அவனை ஆற்றித் தேற்றினேன். அவனுக்கு அற்பமாயினும் அச்சந் தெளியவில்லை. மிலேச்சர் தன்னைத் தேடிப் பிடித்துச் சின்னாபின்னமாய் அறுத்துப் பட்சிக்க வந்தார்களென்று நினைத்து, பதைத்தான். அவன் நெஞ்சு பதறியதையும், கைகால் உதறியதையுங் கண்டு, கலக்கமுற்று, இதற்கு என்ன பரிகாரஞ் செய்வதென்று சற்றுச் சிந்தனைசெய்து, பின்பு பகைவரால் உனக்கு வரும் தீங்கு எனக்கில்லையா, பயப்படாதேயென்று அபயம் சொல்லி, அவனைத் தேற்றினேன். மேலும், "சுக்கிரா, நாம் அவர்களைச் சண்டை செய்து வெல்லும்படி பிரதிக்கினை செய்ய வேண்டும். சண்டை செய்ய மாட்டுவாயா?" என்று கேட்க, அவன்: "துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பயின்றிருக்கிறேன்; ஆனாலும் என்ன, பகைஞர் திரளாய் வந்திருக்கிறார்களே" என்றான். "திரளாய் வந்தது பெரிதல்ல, குண்டுபட்டு இறப்பவர்கள் போக, அதற்குத் தப்பியிருப்பவர்கள் துப்பாக்கி வெடி அதிர்ச்சி கேட்டுக் கெடிகலங்குவார்கள்" என்று சொல்லி, உனக்கு ஒரு தீங்கு வராமல் நான் காத்துக் கொள்வேன்; நீ எனக்குத் தீங்கு வராமற் காத்து எனது அருகில் நின்று, என் சொற்படி தவறாமல் நடப்பாயா? என விசாரித்தேன். "என் பிராணனைத் தப்புவித்த ஆண்டையே, நீர் என்னைச் சாகச்சொல்லினும் சாவேன்" என்றான். பின்பு ஒரு திராம் ரம்சாராயங் கொண்டுவந்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்தேன். மிதமாய்ச் செலவு செய்துவந்ததனால், வேண்டும் அளவிற்குச் சாராயம் என் வசத்திலிருந்தது. அவன் சாராயம் குடித்தபின், நாங்கள் வழக்கமாய் வெளியிற் கொண்டுபோகும் குருவிக்குழாய்த் துப்பாக்கிகள் இரண்டையுமெடுத்து, மருந்துபோட்டு, கைத்துப்பாக்கிக் குண்டின் அளவான குண்டுகள் கெட்டிக்கச்சொல்லி, நான் நாலு பெருங்

துப்பாக்கிகளை எடுத்து, ஒவ்வொன்றிலும் அண்டவடிவான இவ்விரண்டு பெருங் குண்டுகளும், ஐவ்வைந்து சிறு குண்டுகளும் கெட்டித்து, பின்பு கைத்துப்பாக்கிகள் இரண்டில் ஒவ்வொன்றுக்கு இவ்விரண்டு குண்டு போட்டு, வழக்கப்படி உறையில்லாப் பெருங்கத்தியை எனது இடைக்கச்சில் மாட்டி, சுக்கிரனுக்குக் கைக்கோடரியைக் கொடுத்தேன்.

மேற்சொல்லிய பிரயத்தனங்கள் செய்தவுடன் தூரதிருஷ்டிக் கண்ணுடி எடுத்து, மலைச்சிகரமேறி, அதன் பக்கத்தில் நின்று, குறிப்பாய்ப் பார்த்தேன். கரையில் எனக்குத் தெரிந்த ஓடங்கள் மூன்று, நின்ற மிலேச்சர் இருபத்தொரு பெயர், கைதிகள் மூன்று பெயர்; அவர்கள் யுத்தத்தில் கைது செய்த அம்மூன்று பெயரையும் வெட்டிக் கொன்று விருந்துண்டு கொண்டாடுவதற்கு வந்திருப்பதாகத் தோன்றியது. புத்திகெட்ட அம்மிலேச்சர் துஷ்ட விலங்குகளைப்போல மனுஷரைத் துடிக்கப் பதைக்கக் கழுத்தறுத்து, அவர்கள் மாமிசத்தைப் புசிப்பது வழக்கந்தானே.

மேலும், முன்பு சுக்கிரன் ஓடிப் பறந்து எனது சரணடைந்தபொழுது, மிலேச்சர் இறங்கிய துறையிலல்ல, எனது ஓடம் நின்ற நீரோடைக்குச் சமீபத்தில் அவர்கள் இப்பொழுது இறங்கி நின்றதையுங் கண்டேன். அவ்விடத்தில் கரை சற்றுப் பள்ளமாயிருந்தது. அன்றியும், கடற்கரைபரியந்தம் காடு அடர்ந்திருந்தது. மேற்படி மிலேச்சர் இவ்விடத்திற் கொண்டாட வந்த விருந்தின் குரூரமான தன்மையைக்குறித்து எனக்கு மிகுந்த அரோசிகமுண்டாயிருந்ததனுலும், அடர்ந்த காட்டின் ஒதுக்கில் அவர்கள் கண்ணுக்கு மறைந்து நிற்பது சாத்தியமாயிருந்ததனுலும், நான் குன்றை விட்டிறங்கிப் போய், சுக்கிரனைக் கண்டு, சுக்கிரா, கடற்கரைக்குப் போய் மிலேச்சரைச் சங்கரிக்கச் சித்தமாயிருக்கிறேன். நீயும் என்னுடன் வந்து, என் பக்கத்தில் நிற்பாயாவென்று கேட்டேன். அவனுக்குண்டாயிருந்த அச்சந் தெளிந்து நான் கொடுத்த சாராயத்தை உட்கொண்டதனுல் உற்சாகம் பிறந்தது. அவன் நீர் என்னை இறக்கச்சொல்லுனுலும் க்ஷணமே இறப்பேனென்று முகமலர்ந்து சொன்னுன்.

எனது உக்கிராவேசம் தணியுமுன், குண்டு மருந்து கெட்
டித்திருந்த துப்பாக்கிமுதலிய படைக்கலங்களை மேற்சொல்
லியபடி இருவரும் எடுத்துக்கொண்டு புறப்படுதற் கெத்தனித்
தோம். இடைக்கச்சில் மாட்டுவதற்குக் கைத்துப்பாக்கி
யொன்றும், தோளில் வைத்துக்கொண்டு வருவதற்குப் பெருந்
துப்பாக்கிகள் மூன்றும் சுக்கிரனுக்குக் கொடுத்தேன். நா
னும் அவ்வாறே கைத்துப்பாக்கி ஒன்றும், பெருந் துப்பாக்கி
கள் மூன்றும் எடுத்துக்கொண்டு, இருவரும் பிரயாணப்பட்
டோம். எனது அங்கி உறைக்குள் ரம் சாராயப்புட்டி ஒன்
றிருந்தது. வெடிமருந்தும் குண்டுகளும் வைத்துக் கட்டிய
பெரும் பை ஒன்றைச் சுக்கிரன் கொண்டுவந்தான். என்னை
விட்டு விலகாமல் என்பின் வரவும், நான் சொல்லுமளவும்
ஒன்றும் செய்யாதிருக்கவும், வாய் திறவாமல் மௌனமாயி
ருக்கவும் அவனுக்கு வற்புறுத்திச் சொன்னேன். இந்தப்
படி யுத்த சன்னத்தராய் இருவரும் மிலேச்சர் கண்ணுக்
கெதிர்ப்படாமல் குண்டுபாயும் தூரத்திற் சேரும்பொருட்டு,
எங்களுக்கு வலதுபக்கத்தில் ஒரு மைல் தூரமளவிற்குப்
போய், நீரோடையைத் தாண்டிக் காட்டிற் சேர்ந்தோம்.

போகையில், முன்பு எனக்குண்டாயிருந்த நினைவுகள்
மீண்டும் பிறந்ததனால், நான் செய்த நிர்ணய பலம் தளர்ச்சி
யடைந்தது. மிலேச்சர் திரளாய் வந்திருப்பதனால், நான்
அவர்களை எதிர்க்கும் தரமல்லவென்று எனக்கு எவ்வளவும்
அச்சமுண்டாகவில்லை. ஆயுதபாணிகளல்லாத அவர்களைப்
பிறர் சகாயமின்றி நான் ஒருவன்மாத்திரம் சண்டை
செய்ய வரினும் ஜயம் பெறுவதற்கு எனக்குத் திறமை போ
தும். எனது நெஞ்சிற் பிறந்த எண்ணம் இது. மிலேச்ச
ரைக் கொன்று, அவர்கள் உதிரப்பழிக்கு ஆளாவதற்கு நிமித்
தமென்ன? ஆவசியகமென்ன? அவர்கள் எனக்குத் தீங்கு
செய்யவுமில்லை, செய்ய நினைக்கவுமில்லை. என்மட்டில்
அவர்கள் நிஷ்கபடிகள். அவர்கள் பயிலும் துஷ்ட கிருத்தி
யங்களே அவர்களுக்கு நாசமாய் விளையும். அவர்களையும்,
அவர்கள் தேசத்தவர்களையும் மதிகெட்டுக் குரூரச்செய்கை
களிற் பயிலும்படி கடவுள் கைவிட்டார் என்பதற்கு அவர்
கள் குரூராசாரமே அழியா முத்திரையாயிருக்கின்றது. அவர்

கள் குற்றச்செய்கைகளைக்குறித்து நியாயந் தீர்க்கவும், நீதிப்படி அவர்களுக்குப் பிராணதண்டனை செய்யவும் கடவுள் என்னை நியாயாதிபதியாக ஏற்படுத்தவில்லையே. அவர் திருச்சித்தத்திற்கு யுக்தமான காலத்தில் தாமே அவர்கள் அதிக்கிரமங்களைத் திட்டமாய் விசாரித்து, தேசத்தார் அனைவரும் செய்த குற்றத்திற்குத் தேசத்தார் அனைவருக்குமேற்ற தண்டனை செய்வார். அத்தண்டனை விதிக்கப்படுமுன் அவர்களைத் தண்டிப்பது எனது கடமையல்லவே. பகிரங்கத்தில் அவர்கள் பகைஞனும், அவர்களுடன் சண்டை தொடுத்திருப்பவனுமாகிய சுக்கிரன் தன்மட்டில் அவர்களைத் தாக்கிச் சங்கரிக்கத் துணிவது நியாயந்தான். எனக்கு அவர்கள் தீங்கொன்றும் செய்யவில்லையே என்பதாக இவ்வித நினைவுகள் வழிமுடிய என் நெஞ்சில் உறைக்கும்படி அழுந்தியதனால், அவர்களுக்கு நெருங்கிப்போய், ஒளித்து நின்று, அவர்கள் குரூரவிருந்து கொண்டாடுவதைக் கண்டு, அப்புறம் திருவுள்ளத்தின் செயலால் எனக்குண்டாகும் நிர்ணயத்தைச் சார்ந்து நடக்கவும், தகுதியான நியாயமுண்டென்று எனக்குறுதியான நூதன அபிப்பிராயம் உண்டானாலன்றி, நான் அவர்கள்விஷயத்திற் பிரவேசியாதிருக்கவும் தீர்மானித்தேன்.

இவ்வாறு சங்கற்பம் செய்து, கூடியவளாயிற் ஜாக்கிரதையுடன் மௌனமாய் இருவரும் வனத்திற் புகுந்து, நிற்காமல் நடந்து, வனத்தின் எதிர்ப்பக்கத்திற் சேர்ந்தோம். சுக்கிரன் என்னை விட்டு விலகாமல், எனது அடிமேல் அடி எடுத்து வைத்து வந்தான். எங்களுக்கும் மிலேச்சருக்கும் இடையில் அவ்வனத்தின் ஒரு கோடி தவிர, வேறு ஒதுக்கில்லை. இவ்விடத்தில் சத்தம் கேளாமல் சுக்கிரனை அழைத்து, வனத்தின் மூலையில் ஒரு பாரிய விருட்சத்தைக் காட்டி, நீ அவ்விருட்சம் நிற்குமிடத்திற் போய், மிலேச்சர் செய்வது இன்னதென்று பார்த்து வந்து எனக்குச் சொல்லென் றனுப்ப, அவன் போய்ப்பார்த்து வந்து, அவர்கள் நெருப்பெரித்து, அதைச் சூழ இருந்து, தாம் கொன்ற கைதிகளில் ஒருவனுடைய மாமிசத்தைத் தின்கிறார்களென்றும், சற்றுத்தூரத்தில் கட்டுண்டிருக்கும் மற்றொரு கைதியை இனி அடித்துக் கொல்வார்களென்றும் எனக்குச் செய்தி தெரிவித்தான்.

அவன் சொற் கேட்டவுடன் எனதுள்ளம் எரிந்து கரைந்து உருகிற்று. மேலும், கட்டுண்டிருப்பவன் மிலேச்சனல்ல, ஓடத்தில் உயிர் பிழைத்து மிலேச்சர் கரையையடைந்த தாடி ரோமம் வளர்த்த வெள்ளை மனுஷரில் ஒருவன் என்றான். தாடி வளர்த்த வெள்ளை மனுஷன் என்ற சத்தங் கேட்ட வுடன், நான் பயந்து நடுங்கிப் பதைப்புற்று, மா ஒதுக்கிற் போய் நின்று, ஆடை தரித்த ஐரோப்பிய வெள்ளை மனுஷ னொருவன் கடற்கரையில் நாணற்போன்ற ஏதோ கொடிக ளாற் கைகால் பந்திக்கப்பட்டிருப்பதைத் தூரதிருஷ்டிக் கண் ணாடியால் பரிஷ்காரமாய்க் கண்டேன்.

பின்னும் ஐம்பதுகஜ தூரத்தில் ஒரு மாமும், அதற்கு அப்புறம் சிறு புதருமிருந்தன. அவ்விடத்திற் சேர்ந்தால், எங்களுக்கும் மிலேச்சருக்குமுள்ள தூரம் குண்டுசெல்லும் தூரத்திற் பாதிஅளவாய்க் குறுகுமென்றும், அவர்கள் கண் ணுக்கெதிர்ப்படாமற் போகலாமென்றும் சற்றுத்தூரம் போனபொழுது எனக்குத் தெரியவந்தது. ஆனதனால், எனக் குள் மூண்டு எரிந்த கோபாக்கினியைச் சிறிதடக்கி, இரு பது அடித் தூரம் தாண்டிப்போகவும், சிறு தூறு எதிர்ப்பட் டது. மற்ற மாம் கிட்டுமளவும் அந்தத் தூறு தொடர்ச்சியா யிருந்தது. அதற்கு அப்புறம் தரை சற்று மேடாயிருந்தது. அம்மேட்டுக்கும், மிலேச்சர் இடத்திற்கும் தூரம் எண்பது கஜம். மேடு ஏறியபின், அவர்களைக் கண்ணுக்கெதிரே நின்றாற்போலப் பூர்த்தியாய்க் கண்டேன்.

இனி க்ஷணப்பொழுதாயினும் தாமசமாய் நிற்கத் தகாது. அக்கொடிய துரோகிகளில் பத்தொன்பதுபெயர் தரையில் நெருங்கி உட்கார்ந்திருக்க, இரண்டுபெயர் துர்ப்பாக்கிய முள்ள அவ்வெளிய கிறிஸ்தவனைக் கொன்று, உறுப்பு உறுப் பாய் அறுத்துச் சுட்டுத் தின்னக் கொண்டுவ நம்படி போய், பந் திக்கப்பட்ட அவன் பாதங்களின் கடடவிழ்க்கும்படி குனிந் தார்கள். அந்தக்ஷணமே நான் சுக்கிரனைப் பார்த்து: "கேள் சுக்கிரா, இனி நான் உனக்குக் கற்பிக்கும்வண்ணம் செய்" என்ன, சுக்கிரன் ஆகட்டுமென்றான். பின்பு: "நான் செய் கிறபடி நீயும் தவறாமற் செய்வாயாக" என்று சுக்கிரனுக்கு

வற்புறுத்திச் சொல்லி, பெருந் துப்பாக்கிகளில் ஒன்றையும், குருவிக்குழாய்த் துப்பாக்கியையும் தரையில் வைத்தேன். சுக்கிரனும் அப்படிச் செய்தான். மற்றப் பெருந் துப்பாக்கியை மிலேச்சருக்குக் குறி தப்பாமல் பிடித்து, சுக்கிரனையும் அவ்வண்ணம் செய்யச் சொல்லி, குண்டு பிரயோகிக்க எத்தனமாவென்று கேட்டேன். ஆம் என்றான். அப்படியானால், வெடிதீரென்று சொல்லி, நானும் வெடி தீர்த்தேன்.

சுக்கிரன் இலக்குப்பார்த்துப் பிரயோகித்த குண்டு சற்றுந் தவறாமல் குறித்த இலக்கிற் பாய்ந்ததனால், அவன் இலக்குக் குறித்தவிடத்தில் நின்ற மிலேச்சரில் இரண்டுபெயர் இறந்தார்கள்; மூன்றுபெயர் காயம்பட்டார்கள். நான் இலக்குவைத்துச் சுட்டது அத்தனை நன்றாய்ப் பலிக்கவில்லை. என் கைத்துப்பாக்கியால் இறந்தவன் ஒருவன்; காயம்பட்டவர்கள் இருவர். சடிதியில் தமக்கு நேரிட்ட கொடிய உபத்திரவத்தைக்குறித்து மிலேச்சர் பட்ட பாட்டையும், அவர்களுக்குண்டான அத்தியந்த திகிலேயுங்குறித்துச் சொல்ல வேண்டுவதென்ன? காயப்படாத மிலேச்சர் அனைவரும் குதித்தெழுந்து, பாய்ந்து, பதறி, உதறி, பிராண நாசகாரணம் எத்திசையி லுண்டாயிற்றென அறியாததனால், ஒரு திசைக்கும் ஓடாமல் தடுமாறினார்கள். சுக்கிரன் கண் அவர்கள் மேற் பாய்ந்தவண்ணமாயிருந்தது. அவன் என் சொற்படி செய்ய எத்தனமாய் நின்றான். வெடி தீர்த்தவுடன் நான் துப்பாக்கியைத் தரையில் வைத்துவிட்டு, குருவிக்குழாய்த் துப்பாக்கியை எடுத்து, குதிரை வில்லை இழுத்து, மயங்கித் தடுமாறி நின்ற மிலேச்சருக்கு இலக்காய்ப் பிடிக்க, சுக்கிரனும் அவ்வாறே செய்தான். "ஆயத்தமா" என, "ஆம்" என்றான். "தேவனுடைய திருநாமத்தைச் சிந்தையில் வைத்து வெடிதீர்" என்றேன். உடனே இருவரும் வெடி தீர்த்தோம். இத்துப்பாக்கிகளில் கெட்டித்த குண்டுகள் சிறிய கைத்துப்பாக்கிக் குண்டுகளாதலால், இரண்டுபெயர் மாத்திரம் இறந்தார்கள். காயப்பட்டு, பதறி, கதறி, குளறி, கூவி, பித்தங்கொண்டவர்கள்போலப் பிதற்றி, அங்கமெல்லாம் உதிரம் வடிய ஆகுலித்தவர்கள் அநேகர். அவர்களில் பின்னும் மூன்றுபெயர் குறைப்பிராணிகளாய் விழுந்தார்கள்.

வெடி தீர்ந்த துப்பாக்கிகளை வைத்துவிட்டு, குண்டு மருந்து கெட்டித்திருந்த பெருந் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, சுக்கிரனை அடுத்துத் தொடர்ந்துவரச் சொல்லி, விரைந்தோடி, வனத்தினின்று வெளிப்பட்டு, மிலேச்சர் என்னைக் கண்டார்களென் றறிந்தவுடன் நெடுங்குரல் பாய்ச்சிக் கூவினேன். மனம் சலிக்காமல் மிகுந்த தீரத்துடன் அடி பிடித்து என்னைத் தொடர்ந்துவந்த சுக்கிரனும் அவ்வாறே குரவையிட்டான். வாயுவேகத்திற்குச் சமானமாய் விரைந்தோடுவதற்கு எங்கள் படைக்கலங்கள் பிரதிபந்தமாயிருந்ததனுல், மிலேச்சரிருந்த இடத்திற்கும் சமுத்திரத்திற்கும் இடையில் கடற்கரையில் பந்திக்கப்பட்டிருந்த கைதியிடத்திற்குக் கூடியவரையில் விரைந்து சென்றேன். அவனைக் கழுத்தறுக்கப் போயிருந்த சண்டாளர் இருவரும் முதல் முறை தீர்ந்த வெடிச்சத்தம் கேட்டவுடன் கலங்கித் திகைத்து, காலொடு கால் பின்னக் கடற்கரைக்கோடி, ஓடத்திற் பாய்ந்தார்கள். பின்னும் மூன்றுபெயர் அதேபிரகாரம் செய்தார்கள். நெருங்கிப்போய் அவர்களைச் சுட்டு விழுத்தச் சொல்ல, சுக்கிரன் என் சொற்குறிப்பறிந்து, நாற்பது கஜ தூரம் ஓடி, அவர்களுக்குச் சமீபத்திற் சேர்ந்தவுடன் வெடி தீர்த்தான். எல்லாரும் ஓடத்திற்குள் சரிந்து குப்பலாய் விழுந்தார்கள். யாவரும் இறந்தார்களென்று எண்ணினேன். சற்றுச் சென்று இரண்டுபெயர் எழுந்திருந்தார்கள். இறந்தவர்கள் இரண்டுபெயர், காயம்பட்டவன் ஒருவன். அவனும் ஓடத்தின் அடியில் பிரேதம்போலவே கிடந்தான்.

எனது கையாளாகிய சுக்கிரன் அவர்களுக்கு இலக்குப் பிடித்து வெடிதீர்க்க, நான் கத்தியை உருவி, கைதியினுடைய கை கால்கள் பந்திக்கப்பட்டிருந்த கொடிகளை அறுத்து, அவனைத் தூக்கி நிறுத்தி, போர்த்துக்கேய பாஷையில் நீ யாவனென்று கேட்டேன். அதற்கு அவன் லத்தீன் பாஷையில் கிறிஸ்தசமயி என்றான். கை கால் சோர்ந்து பலக்ஷயமாயிருந்ததனுல், பதறாமல் நிற்கவாயினும், என்னுடன் வார்த்தையாடவாயினும் அவனுக்கு வசமில்லாதிருந்தது. அங்கி உறைக்குள் வைத்திருந்த சாராயப் புட்டியை எடுத்து அவன் கையிற் கொடுத்துக் குடிக்கச்சொல்லிக் குறிப்பித்து, ஒரு துண்டு

ரொட்டியுங் கொடுத்தேன். அதைத் தின்று, சாராயம் குடித்துச் சோர்வு தெளிந்தபின், உன் தேசம் என்னவென்று கேட்டேன். "எஸ்பஞேலி" என்ருன். பின்னும் சற்றுக் களையாறி, தன்னைச் சத்துருக்கள் கைக்குத் தப்புவித்த நன்றியை என்றும் மறவாமல், தான் எனக்குப் பாத்தியப்பட் டிருப்பதாகப் பல சாடைகளால் தெரிவித்தான். அவன் வாய்ப்பிறப்பைக் கேட்டு, நான், "துரையே, பேசிக்கொண்டு நிற்பதற்கு அவகாசமில்லை; பிற்பாடு பேசுவோம். இப்பொழுது சண்டை செய்யவேண்டுமே. உமக்குப் பலமிருந்தால், இந்தக் கைத்துப்பாக்கியையும் கத்தியையும் எடுத்து வைத்திரும்" என்று எனக்குத் தெரிந்தமட்டும் ஸ்பாணிய பாஷையிற் சொன்னேன். அவன் எனக்கு வந்தனம் சொல்லி, குறித்த படைக்கலங்கள் இரண்டையும் கைக்கொண்டவுடன் அவனுக்கு நூதன உற்சாகம் பிறந்தது. உக்கிராவேசத்துடன் அவன் பகைவர்மேல் பாய்ந்து விழுந்து, சீறிச் சினந்து, இரண்டுபெயரை நொடிப்பொழுதில் துண்டித்தான். வாஸ்தவம் இதுதான். இந்தக் கெடுதிகள் எல்லாம் சடிதியில் சம்பவித்ததனுல், வெடிச்சத்தம் கேட்ட க்ஷணமே இழிஞராகிய அம்மிலேச்சர் அஞ்சித் திகைத்து மனம் தடுமாறினர்கள். ஓடித் தப்புவதற்கு அவர்களுக்கு உற்சாகம் சிறிதும் இல்லாதொழிந்தது. பிரயோகிக்கும் குண்டை ஏறவொட்டாமல் தடுக்கும் தன்மை அவர்கள் உடலுக்கேது. சுக்கிரன் ஓடத்தில் சுட்டு விழுத்தின ஐந்துபெயரும் இவர்களைப் போலவே திகைத்துத் தெறிகெட்டிருந்தார்கள். மூன்றுபெயர் குண்டுபட்டுக் கும்பம் சரிந்து விழவே, மற்ற இருவரும் கெடிகலங்கி விழுந்தார்கள்.

எனது கைத்துப்பாக்கியையும் கத்தியையும் ஸ்பானியன் வசத்தில் ஒப்புவித்ததனுல், சமயத்திற்கு வேண்டுமென்று நான் வைத்திருந்த துப்பாக்கியை வெடி தீர்க்காதிருந்தேன். ஆதலால், நாங்கள் முதலில் நின்று துப்பாக்கி வெடி தீர்த்த மரத்தடியில் வைத்திருந்த படைக்கலங்களைச் சுக்கிரனைக் கொண்டு விரைவில் எடுப்பித்து, நான் வைத்திருந்த பெருந் துப்பாக்கியை அவன் கையிற் கொடுத்து, அவன் எடுத்துக் கொண்டுவந்த துப்பாக்கிகள் எல்லாவற்றிலும் உட்கார்ந்தி

ருந்து குண்டு மருந்து கெட்டித்தேன். துப்பாக்கி வேண்டும் பொழுது வரும்படி அவர்கள் இருவருக்கும் சொன்னேன். மருந்து கெட்டித்துக்கொண்டிருக்கையில், ஸ்பானியனுக்கும் மிலேச்சன் ஒருவனுக்கும் மிகவும் உக்கிரமாய்ச் சண்டை நடந்தது. மிலேச்சன் ஸ்பானியன்மேற் பாய்ந்து, பருத்த மரவாளொன்றைச் சுழற்றி, அவனைக் கழுத்தறுக்க எத்தனப்பட்டான். முன்பு உற்றசமயத்தில் உயிர்த்துணையாய்ச் சென்று நான் அவனை இரட்சிக்காவிடில், அவன் உடலைப் பிளக்கும் வாள் அதுவே. சரீர பலம் குன்றியும், சிங்கேற்றுக்குச் சமானமான வீரதீரமுள்ள ஸ்பானியன் நெடுநேரமட்டும் மிலேச்சனைத் தடுத்து, அவனுக்குத் தலையில் இரண்டு வெட்டு வெட்டிப் படுகாயங்கள் உண்டாயிருந்தன. காயப்பட்டும், மிலேச்சன் உடல் இறுகித் திரண்டு பருத்த புயபல பராக்கிரமனுதலால், நெருங்கிக் கைகலந்து, களைப்புற்ற ஸ்பானியனைக் கட்டித் தழுவி விழுத்தி, அவன் கீழும், தான் மேலுமாய் இருக்கையில், ஸ்பானியன் கைக்கொண்டிருந்த கத்தியைத் திருகிப் பறிக்கப் பார்த்தான். ஸ்பானியன் புத்திபூர்வமாய்க் கத்தியைக் கைநெகிழவிட்டு, இடைக்கச்சில் மாட்டியிருந்த கைத்துப்பாக்கியைத் திடீரென இழுத்தெடுத்து, அவன் உடலைத் தொளைக்கும்படி குண்டு பிரயோகித்தான். ஸ்பானியனுக்குத் துணை நிற்க ஓடின நான் நெருங்கிச் செல்லுமுன் மிலேச்சன் குண்டுபட்டிறந்தான்.

இஷ்டப்பிரகாரம் செய்வதற்கு இடம்பெற்றிருந்த சுக்கிரன் ஓடிப் பறந்த துரோகிகளைத் தொடர்ந்தான். அவனுக்குக் கைக்கோடரி ஒன்றொழிய, வேறு ஆயுதபலமில்லை. அந்தக் கைக்கோடரியால் அவன் முன்பு காயம்பட்டு விழுந்த மூன்றுபெயரையும், பின்னும் தனக்கு எதிர்ப்பட்ட யாவரையும் தறித்துக் கொன்றான். ஸ்பானியன் என்னிடத்திற்கு வந்து, குருவிக்குழாய்த் துப்பாக்கி ஒன்று வாங்கிக் கொண்டு போய், மிலேச்சர் இருவரைத் தொடர்ந்து சுட்டுக் காயப்படுத்தினான். அவனுக்கு ஓட வசமில்லாததனால், காயம்பட்ட அவர்கள் வனத்திற்குள் ஓடி மறைந்தார்கள். மறையவே, சுக்கிரன் இளஞ் சிங்கத்திற்கொப்பாய்க் கர்ச்சித்து, விரைந்து தொடர்ந்துபோய், அவர்களில் ஒருவனைக் கோட

ரிக்கு இரையாகும்படி வெட்டி விழுத்தினன். மற்றவன் அதிகதியாய் ஓடிப் பறந்து, முன்பட்ட காயத்தைப் பொருள் செய்யாமல், கடலிற் பாய்ந்து, உயிரொட்டி நீந்தி, ஓடத்தில் இருந்தவர்களுடன் சேர்ந்தான். ஓடத்தில் இருந்தவர்கள் மூன்றுபெயர். அவர்களில் ஒருவன் காயம்பட்டவன், அவன் இறந்தானோ பிழைத்தானோ அறியோம். ஓடத்தில் வந்து இறங்கிய மிலேச்சர் இருபத்தொருபெயரில் எங்கள் கைத்குத் தப்பினவர்கள் அம்மூன்றுபெயர் மாத்திரமே. இறந்தவர்களும், காயம்பட்டவர்களும், எங்கள் கைக்குத் தப்பினவர்களுமாகிய மிலேச்சர் கணக்கு விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| மாத்தடியில் நின்று பிரயோகித்த குண்டுபட்டு இறந்தவர்கள்.......... .......... ... ......... | 3 |
| இரண்டாம்தரம் தீர்த்த வெடியில் இறந்தவர்கள்.... | 2 |
| ஓடத்தில் சுக்கிரனுல் வதைக்கப்பட்டவர்கள்.......... | 2 |
| முதலில் காயம்பட்டவர்களில் மேற்படியானுல் கொல்லப்பட்டவர்கள்.......... | 2 |
| வனத்தில் மேற்படியானுல் பிராணவதை செய்யப்பட்டவன் .......... | 1 |
| ஸ்பானியன் படைக்கலத்திற்கு இரையானவர்கள். | 3 |
| பட்ட காயத்தால் இங்கும் அங்கும் விழுந்திருப்பது கண்டு, கொல்லப்பட்டவர்களும், சுக்கிரன் தொடர்ந்துபோய்க் கொன்றவர்களும் .......... | 4 |
| ஓடத்தில் எங்கள் கைக்குத் தப்பிப் பிழைத்தவர்கள் (ஒருவன் தப்பிப் பிழைத்திருப்பினும் காயம்பட்டவன்) .......... | 4 |
| ஆகத் தொகை...... | 21 |

ஓடத்தில் இருந்த மிலேச்சர்கள் துப்பாக்கிக் குண்டுக்கு எட்டாத்தூரத்திற் சேரும்படி துரிதமாய்த் தண்டு வலித்துச் சென்றூர்கள். சுக்கிரன் அவர்களுக்கிலக்காய் இரண்டு மூன்று வெடி தீர்த்தும், எவருக்கும் குண்டுபடவில்லையென்று எண்ணுகிறேன். அவர்களைத் தப்பவிட்டால், அவர்கள் நடந்த சங்கதிகளைச் சொல்லி, இருநூறு முந்நூறு ஓடங்களில் தங்கள் தேசத்து மிலேச்சர்களை அழைத்துக்கொண்டுவந்து எங்களைக் கொன்று பட்சிப்பார்களே; அத்தனை ஜனத்திரளுக்கு

எங்களால் வகை சொல்லலாகுமாவென நினைத்து, கலக்க முற்றிருந்தேன். கரையில் நின்ற ஒரு ஓடத்திலேறி, அவர்களைத் தொடர்ந்து கைது செய்யவேண்டுமென்று சுக்கிரன் வற்புறுத்திச் சொன்னான். நான் அதற்குடன்பட்டு, கடற்கரைக்குத் துரிதமாய் ஓடி, ஒரு ஓடத்திற் பாய்ந்து சுக்கிரனையும் வரச்சொன்னேன். அவ்வோடத்தில் ஸ்பானியனைப் போல, கொலை செய்யப்படுவதற்குக் கை கால் பந்திக்கப் பட்டிருந்த மற்றொரு அகதி நடந்த சங்கதி இன்னதென்று அறியாமல் திகில் பிடித்து இறந்தவன்போலக் கிடந்தான். அவன் கால் கைகள் கழுத்தோடு அடுக்க வைத்துக் கட்டப் பட்டிருந்ததனால், தலை நிமிர்ந்து கரையை எட்டிப் பார்க்கக்கூடாதபடி விறைத்துக் குறை உயிருடையவனாயிருந்தான். மிலேச்சரைத் தொடரும்படி ஓடமேறிய நான் அங்கிருந்த இம்மிலேச்சனைக்கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

உடனே கொடிகளை வெட்டி, அவனைக் கட்டவிழ்த்து, எழுந்து நிற்கும்படி தூக்கிவிடப் பார்த்தேன். எழுந்து நிற்க அவனுக்குக் கால் வழங்கவுமில்லை, பேச நா வழங்கவுமில்லை. தன்னைச் சங்கரிக்கும்படி கட்டவிழ்த்தேனென்று எண்ணி, பரிதபித்து அழுதான்.

சுக்கிரன் ஓடத்தில் வந்தவுடன், நான் உன்னைக் கொல்வதற்கல்ல, ரட்சிக்க வந்தவனென்று சுக்கிரனைக்கொண்டு அவனுக்குச் சொல்லுவித்தேன். பின்பு சாராயப் புட்டியை எடுத்து, ஒரு திராம் குடிக்கக் கொடுப்பித்தேன். சாராயம் குடித்ததனாலும், சத்துருக்கள் வசத்தினின்று விடுதலை பெற்ற மங்கல வார்த்தை கேட்டதனாலும் அவன் அச்சம் தெளிந்து, உற்சாகத்துடன் எழுந்து, உட்கார்ந்திருந்தான். சுக்கிரன் அம்மனுஷனுடைய முகத்தை ஏற இறங்கப் பார்த்து, அவன் வாய்ப்பிறப்பைக் கேட்டவுடன் பட்ட பாடுகளைக் காணும் எவர்களும் மனதுருகி, கண்ணீர் ஆறாய் வடியக் கதறி அழுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. அம்மிலேச்சனுக்குச் சுக்கிரன் முத்தம் கொடுத்தான்; அவனைக் கட்டித் தழுவி அணைத்தான்; கதறி அழுதான்; மகிழ்ந்து நகைத்தான்; அகங்

களித்து ஆரவாரித்தான்; துள்ளிக் குதித்து ஆடினான்; ஆனந் தங்கொண்டு பாடினான்; பரிவுகூர்ந்து ஓலமிட்டான்; காங் களைப் பிசைந்து முறுக்கினான்; ஆவலங்கொட்டித் தன் தலை யில் அடித்தான்; உன்மத்தனைப்போலப் பின்னும் பாடித் துள் ளிப் பாய்ந்தான். உனக்குண்டான அதிசயம் என்னவென்று நான் பலதரங் கேட்டும், என் சொல் அவன் செவி யேற வில்லை. நெடுநேரஞ் சென்றபின், அவன் பதைப்புச் சற்று அடங்கியபொழுது, அம்மிலேச்சன் தன் தகப்பனென்று வெளியிட்டான்.

தந்தையைக் கண்டதனாலும், அவன் கொலைபாதகரால் சங்கரிக்கப்படும் கண்டம் தப்பிப் பிழைத்ததனாலும், அறிவி லியாகிய இவ்வேடனுக்கு உண்டான ஆனந்த பரவசத்தை யும், இவனிடத்தில் விளங்கிய புத்திர பக்தியையும் கண்ட பொழுது, என் நெஞ்சுருகியது இவ்வண்ணமென்று நாவி னால் வர்ணிப்பது எளிதல்ல. பின்பு சுக்கிரன் மிகப் பரிவு கூர்ந்து, பக்தியோடு தந்தைக்குச் செய்த பணிவிடைகளின் தன்மையை ஒருவாறுவது சொல்வது அசாத்தியம். அவன் நெடுநேரமட்டும் ஓடத்தில் ஏறுவதும் இறங்குவதுமாயிருந் தான். ஏறும்பொழுது, தந்தை அருகில் உட்கார்ந்து, தன் மார்பு அங்கியைக் களைந்து, தகப்பன் தலையைத் தன் மார் போடணைத்து, அரைமணி நேரமட்டும் பிடித்துக்கொண் டிருந்து களையாற்றினான். பின்பு கட்டுண்டு விறைத்திருந்த கைகளையும் கால்களையும் சூடு பிறக்கத் தன் கையால் தேய்த்து நோவாற்றினான். நான் அதைக் கண்டு, காலுக்கும் கைக் கும் தேய்க்கும்படி புட்டியில் இருந்த சாராயத்திற் கொஞ் சங் கொடுத்தேன். சாராயம் தேய்த்ததனால், கால்வலி கை வலி அவனுக்கு எளிதில் தீர்ந்தது.

இதற்குள் மிலேச்சர் ஓடம் கண்ணுக்கெட்டாத்தூரத்தில் ஓடி மறைந்தது. சடிதியில் நேரிட்ட மேற்சொல்லிய தடை யினால், அவர்களைத் தொடரும் கருத்தை மறந்தோம். தொ டாமல் விட்டது அனுகூலந்தான். பிற்பாடு இரண்டுமணி நேரத்திற்குள் காற்றுக் கிளம்பி, இரா முழுதும் கடும் புயல் அடித்தது. மிலேச்சர் காற்பங்கு வழி செல்லுமுன், வட மேற்குத் திசையினின்று காற்றுக் கிளம்பிப் புயல் அடித்தத

ணுல், அத்திசைக்கு நேர்முகமாய்ச் சென்ற அவர்கள் ஓடம் தப்பாதென்றும், அவர்கள் தங்கள் கரையில் சிந்தாயாத்திரையாய்ச் சேர்ந்திருக்கமாட்டார்களென்றும் எண்ணுகிறேன்.

இனிச் சுக்கிரன் சங்கதி சொல்வேன். அவன் தகப்பன் மேல் நாட்டமாயிருந்து, வேண்டிய பக்குவங்கள் பணிவிடைகள் பலவும் செய்ததனுல், அவன் ஆவல் தீருமளவும் நான் அவனுக்கு ஒன்றும் சொல்லாதிருந்து, அப்புறம் சுக்கிரா என்று அழைத்தேன். குதித்துப் பாய்ந்து நகைத்துக் குதுகுலித்து வந்தான். உன் தகப்பனுக்கு ரொட்டி கொடுத்தாயாவென்று கேட்டேன். அவன் சிரக்கம்பம் செய்து, "ரொட்டி எது, வைத்திருந்ததை நாயினும் கடையனுகிய நான் தின்றுவிட்டேனே" என்முன். பிறகு நான் கொண்டு போய் வைத்திருந்த சிறிய பைக்குள் ஒரு ரொட்டி எடுத்துக் கொடுத்தேன். அன்றியும், சுக்கிரனுக்கு ஒரு திராம் சாராயங் கொடுத்தேன். அவன் அதைத் தான் குடியாமல் தகப்பனுக்குக் குடிக்கக் கொடுத்தான். மேலும், எனது அங்கி உறைக்குள் இருந்த திராட்சப்பழ வற்றற் குலே இரண்டு மூன்றில் ஒரு கை நிறைந்த வற்றலைச் சுக்கிரன் கையிற் கொடுக்க, அவன் அதைத் தகப்பனுக்குக் கொடுத்த க்ஷணமே ஓடத்தை விட்டிறங்கி, ஏதோ மருள் பிடித்தவன்போலத் தலை தெறிக்க ஓடினுன். ஓட்டத்தில் அவனுக்கு எவரும் இணையல்ல. அவன் வாயுவேகம் மனுேவேகத்திலும் அதிகமதிகமாய் ஓடிப் பறந்து, நொடிப்பொழுதில் கண்ணுக்கு எட்டாத்தூரத்தில் மறைந்தான். சற்றுத்தூரம் நான் அவனைத் தொடர்ந்து ஓடியோடி உரத்துக் கூவி அழைத்தும், அவன் திரும்பிப் பார்க்கவுமில்லை. அவன் ஏது வருகிறது? மூச்சடக்கி ஓடி, கால் மணி நேரம் சென்றபின் திரும்பி வந்தான்; வருகையில் அத்தனை விரைவாய் ஓடவில்லை. வர வர வேகந் தணிந்தது. கையில் ஏதோ எடுத்துக்கொண்டு வந்ததனுல், முன்போலத் துரிதமாய் ஓடுவதற்கு இசையவில்லை.

நேரே என்னிடத்திற்கு வந்தான். அவன் வீட்டுக்குப் போய், மட்குடம் எடுத்து, தகப்பனுக்குத் தாகசாந்திக்குச் சுத்த ஜலம் மொண்டுவந்தான். அன்றியும், ரொட்டி இரண்டு

கொண்டுவந்து எனக்குக் கொடுத்து, தண்ணீரைத் தகப்பனுக்குக் கொடுக்கக் கொண்டுபோனான். எனக்கும் தாகம் அதிகமாயிருந்ததனால், ஒரு மிடறு தண்ணீர் குடித்தேன். சாராயம் குடித்தல்ல, தண்ணீர் குடித்து, சுக்கிரன் தகப்பன் சோகம் நன்றாய்த் தெளிந்தது. தண்ணீர் குடிக்குமுன் கடுந்தாகத்தால் அவன் மூர்ச்சித்துக் கிடந்தான்.

சுக்கிரன் தகப்பன் ஜலபானம் செய்தபின், குடத்தில் இன்னும் தண்ணீர் இருக்கிறதாவென்று நான் சுக்கிரனை அழைத்துக் கேட்க, "ஆம்" என்றான். உன் தகப்பனைப் போலக் கடுந்தாகத்தால் வருந்துகின்ற அந்த ஸ்பானியனுக்கு அதைக் கொண்டுபோய்க் கொடு என்றேன். மேலும், சுக்கிரன் எடுத்துவந்த ரொட்டிகளிலும் ஒன்றைக் கொடுத்தனுப்பினேன். ஸ்பானியன் மிகச் சோர்ந்து, மர நிழலிற் பசும் புற்றரையிற் படுத்திருந்தான். அவன் கை கால்கள் முரட்டுத்தனமாய்க் காட்டுக்கொடிகளால் இறுக்கிக் கட்டப்பட்டிருந்ததனால், வீங்கி விறகுதடிபோல விறைத்திருந்தன. சுக்கிரன் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுத்தபொழுது, ஸ்பானியன் எழுந்து உட்கார்ந்து, ஜலபானம் செய்து, ரொட்டியை வாங்கித் தின்றான். அச்சமயத்தில் நானும் அவனிடத்திற்குப் போய், ஒரு கைநிறைந்த திராட்சப்பழ வற்றல் கொடுத்தேன். நான் செய்த நன்றியை அவன் மறவாமல் நன்கு மதித்திருப்பதாக அவன் என்னை ஏறிட்டுப் பார்த்தபொழுது, அவன் முகமலர்ச்சியினால் திருஷ்டாந்தமாய் அறிந்தேன். அந்த ஸ்பானியன் உற்சாகமாய் ஓடிப் பகைவரைச் சங்கரித்தும், மிகவும் பலக்ஷயமாயிருந்ததனால் எழுந்து நிற்க அவன் கால் வழங்கவில்லை. இரண்டொருமுறை எழுந்து நிற்க முயன்றும், அவனால் ஆகவில்லை. அவன் கணைக்கால்கள் அதிகமாய் வீங்கி, அவனுக்கு மிகுந்த வருத்தமுண்டாயிருந்தது. ஆனதுபற்றி, நான் அவனை உட்கார்ந்திருக்கச் சொல்லி, சுக்கிரனைக்கொண்டு அவன் காலில் சாராயம் ஊற்றித் தேய்ப்பித்தேன்.

தேய்க்கையில், இரண்டொரு நிமிஷத்திற் கொருமுறை புத்திர பக்தி மறவாத ஏழை மிலேச்சனாகிய சுக்கிரன் தன் தகப்பன் இன்னும் ஓடத்தில் உட்கார்ந்தபடி யிருக்கிறானா,

இல்லையாவென்று திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு முறை திரும்பிப் பார்த்தபொழுது, தகப்பன் உட்கார்ந்திருக்க வில்லையென்று கண்டு, திடீரென எழுந்து, ஒன்றும் சொல்லாமல் ஓரு தாண்டில் மின்போலத் தகப்பனிடத்திற்கோடிப் பறந்து, தகப்பன் படுத்து இளைப்பாறுவது கண்டு, நிற்காமல் உடனே என்னிடத்திற்கு வந்தான். சுக்கிரன் ஓடும்பொழுது கண்வேகத்திலும், அவன் கால்வேகம் மிஞ்சியதனால், தரையில் எடுத்தடி வைத்தது தெரியவில்லை. பின்பு நான் ஸ்பாணியனைப் பார்த்து, உன்னைச் சுக்கிரன் தூக்கி நிறுத்திக் கைலாகு கொடுத்து, ஓடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து, ஓடத்தைத் திருப்பிச் செலுத்தி எங்கள் வீட்டில் கொண்டுவந்து விடுவான்; அங்கே நான் வேண்டும் பக்குவங்கள் செய்து, உன்னை ஆதரிப்பேனென்று சொன்னேன். சொன்னவுடன் சரீரம் இறுகித் திரண்டு பருத்த பலபராக்கிரமனாகிய சுக்கிரன் ஸ்பாணியனைத் தூக்கி, தன் முதுகில் ஏற்றி, சுமந்து கொண்டுபோய், மெதுவாய் இறக்கி, அணியத்தட்டில் தகப்பனுக்கருகில் உட்காரவைத்து, கால் இரண்டையும் ஓடத்தின் அகத்திற் பொறுத்திருக்கச்செய்து, தான் ஜலத்தி லிறங்கி, ஓடத்தைச் சற்றுத்தூரம் தள்ளிக்கொண்டுபோய் விட்டு, ஏறிக் கரையோரமாய்த் தண்டு வலித்துச் செலுத்தி, ஆள்நடை விரைவிலும் அதிக விரைவாய் எங்கள் துறையில் வந்து சேர்ந்தான். காற்றுச் சற்றுக் கடுமையாய் வீசியும், அவன் கைச்சாமர்த்தியத்தால் சீக்கிரம் ஓடம் வந்து சேர்ந்தது. இருவரையும் ஓடத்திலிருக்கவிட்டு, கரையிலிறங்கி மற்ற ஓடத்தைத் திருப்பிக் கொண்டுவரும்படி மீண்டும் அவ்விடத்திற் கோடினான். கரைமார்க்கமாய் வந்த நான் அவனுக் கெதிர்ப்பட்டபொழுது, திரும்பி எவ்விடத்திற்குப் போகிறாயென்று கேட்க, இன்னும் ஒரு ஓடத்தைச் செலுத்திவரப் போகிறேனென்று வாயுவேகமாய்ப் பறந்தான். ஓட்டத்தில் அவனை வெல்லத்தக்க மனுஷரும் இல்லை, குதிரைகளும் இல்லை. கால்நடையாய்ப் போன நானும் துறை சேர, அவன் இரண்டாந்தரம் செலுத்திக்கொண்டுவந்த ஓடமும் சேர்ந்தது. பின்பு அவன் என்னை வீட்டுக்குப் போகும்படி கரக்கம்பத்தாற் குறிப்பித்து, எங்கள் புது விருந்தார்கள் இரு

வரையும் ஓடத்தினின்று இறக்கிக் கரைசேர்த்தான். அவர்கள் இருவரும் நடக்க வசமில்லாதிருந்தார்கள்; ஆனதுபற்றி, அவர்களை வீட்டிற் கொண்டுவந்து சேர்க்க வகைதெரியாமல் சுக்கிரன் மலைத்து நின்றான்.

இதற்கு நிவிர்த்தி என்னவென்று நான் சற்றுநேரம் யோசித்து, அவர்களைக் கடற்கரையில் உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு, என்னிடத்திற்கு வரும்படி சுக்கிரனுக்குக் கேட்க உரத்துச் சொன்னேன். அவர்களை ஏற்றிக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நான் அதிசீக்கிரத்தில் ஒரு கைவண்டி செய்து, அதை நானும் சுக்கிரனும் கொண்டுபோய், அவர்களை ஏற்றி, இருவரும் தள்ளிக்கொண்டுவந்து, கோட்டை மதிலின் புறத்திற் சேர்த்தோம். அப்புறம் மதிலைத் தாண்டி உட்செல்வது கஷ்டசாத்தியமாயிருந்தது. முன்பு கடற்கரையினின்று இவ்விடத்தில் கொண்டுவருவதற்கு உபாயமென்னவென்று சற்றுநேரம் அழுத்திச் சிந்தித்தஅளவில் தக்க உபாயம் எனக்குத் தெரியவந்ததே. அது பெரிதல்ல, மதில் தாண்டி உட்செல்வதற்கு உபாயமில்லை. அவர்கள்நிமித்தம் மதிலை இடித்து விழுத்த என் மனமுடன்படவில்லை. ஆதலால், வெளி மதிலுக்கும் சிறு தோப்புக்கு மிடையிலுள்ள மைதானத்திற் சிறந்த கூடாரமொன்று உண்டாக்கி, பழைய கப்பற் பாய்களால் அதை மூடி, மரக்கிளைகளால் வேய்ந்து, வைக்கோல் மெத்தைகள் இரண்டு செய்து, அம்மெத்தைகளின்மீது கம்பளம் விரித்து, விருந்தர்களைப் படுக்கவைத்து, போர்த்துக்கொள்ளும்படி வேறு இரண்டு கம்பளம் கொடுத்தோம். இவ்வேலை முழுதும் இரண்டு மணி நேரத்திற்குள் நிறைவேறிற்று.

இப்பொழுது எனது தீவிற் குடியேறித் திரண்ட பிரஜாதனம்பெற்ற எனக்குக் குறையில்லையென்று ஆனந்தங்கொண்டேன். வேந்தனுக்கு ஒப்பாயிருந்தேனென்று நான் பெரும்பாலும் நினைத்த நினைவு இவ்வாறே எனக்கு மகிழ்ச்சியுண்டாம்படி பலித்தது. முதலாவது, இத்தேசம் முழுதும் எனது சொத்து. அரசாளும் சுதந்தரம் எனக்குண்டென்பதற்கு ஆக்ஷேபமில்லை. இரண்டாவது, எனது பிரஜைகள் எனது

அடிப்பட்டவர்கள். நானே அவர்களுக்கு ஏகச் சக்கரவர்த்தியும், பிரமாணம் விதிக்கிறவனுமாயிருந்தேன். அவர்களெல்லாரும் எனது மூலமாய் உயிர் தப்பிப் பிழைத்தவர்கள். என்னிமித்தம் இறந்துபோகும்படி நேரிட்டால், அவர்கள் எதிர்பேசாமல் இறப்பதற்கு எத்தனமாயிருந்தார்கள். எனது பிரஜைகள் மூவரும் வெவ்வேறு மதஸ்தர்கள். இது பின்னும் அதிசயந்தான். சுக்கிரன் கிறிஸ்து சமயி; நரமாமிச பட்சணியாகிய அவன் தந்தை அஞ்ஞானி; ஸ்பானியன் ரோமான் மதஸ்தன்; ஆனாலும், அவரவர் இஷ்டப்படி தேவாராதனை செய்வதற்கு எனது பிரஜைகளுக்கு நான் சுதந்தரம் கொடுத்திருந்தேன். இனி முக்கிய பட்சமான சங்கதியைச் சொல்லவேண்டுமே.

சிறைமீட்சி அடைந்து, சமீபமலங்குன்றியிருந்த இரண்டு பெயரையும் நான் பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்த்து, அவர்களுக்கு இல்லிடம் சமைத்து, படுத்திளைப்பாறப் பக்குவமான மெத்தைகள் சேகரித்தபின், அவர்களுக்கு ஆகாரம் ஏதாயினும் எத்தனம் செய்விக்க நினைத்தேன். முதலில் எனது பிரதான மந்தையில் சுக்கிரனைக்கொண்டு ஒரு வயதுள்ள வெள்ளாட்டுக்குட்டி ஒன்று பிடிப்பித்து அறுக்கச் சொல்லி, அதன் பின்கால்தொடை மாமிசத்தைத் துண்டு துண்டாய் வெட்டி, சுக்கிரனைக்கொண்டு சமைப்பித்து, எலும்பில் சாறு வைப்பித்தேன். அந்தச் சாற்றில் யவையும் அரிசியும் இடுவித்தேன். வெளியில் அடுப்புமூட்டிக் கறி சமைத்துச் சாறுவைத்து முடிந்தபின், புதுக் கூடாரத்திற்குட் கொண்டுபோய், யாவரும் உட்கார்ந்து பந்திபோஜனம் செய்தோம். போஜனகாலத்தில் நான் அவர்களுக்கு நல்வார்த்தை சொல்லி, அவர்களைத் தேற்றினேன். எனக்கும் அவர்களுக்கும் சுக்கிரன் துவிபாஷிகனாயிருந்தான். ஸ்பானியன் மிலேச்சர் தேசத்தில் சஞ்சரித்ததனால், அவர்கள் பாஷை பேசப் பயின்றிருந்தான்.

போஜனம் செய்தானபின், அவகாசமில்லாததனால் எடுத்துவராமல் யுத்தகளத்தில் வைத்துவிட்டு வந்த படைக்கலங்களை ஒரு ஓடத்திலேறிப் போய் எடுத்துவாவென்று சுக்

கிரனுக்குச் சொன்னேன். மற்றநாள் அங்கங்கே மைதானத்தில் மடிந்த மிலேச்சர் பிரேதங்கள் பதங்கெட்டுத் துர்நாற்றம் வீசாதபடி அவைகளையும், அதற்குமுன் அம்மிலேச்சர் குரூர விருந்துண்டு உச்சிட்டமாய் விட்டிருந்த சரீர வுறுப்புகளையும் சுக்கிரனை அனுப்பி அடக்கம் செய்வித்தேன். அவ்வுச்சிட்டங்கள் க்ஷேமிக்கப்படுமுன்னமே நாறத் தொடங்கின. மூச்சடக்கி அவைகளை க்ஷேமிப்பதற்கு என் மனமுடன்படாது. அன்றியும், அந்த மார்க்கமாய்ப் போனால், அவைகளைக் காண என் கண் சகியாது. எனது சொற்படி காலந்தவறாமல் சுக்கிரன் பிரேதக்ஷேமம் செய்து, மிலேச்சர் அடையாளம் அவ்விடத்திற் சிறிதுமில்லாதபடி சுத்திபண்ணினான். ஆகவே, நான் மறுபடி அவ்விடத்திற்குப் போனபொழுது, வனத்தின் ஒரு கோணத்தை இலக்காய் வைத்து இடக்குறிப்பறிந்ததொழிய, அவ்விடத்தைக் குறிப்பிக்கத்தக்க அடையாளங்கள் மற்றொன்றையும் நான் காணவில்லை.

இப்பால் எனது நூதன பிரஜைகள் இருவருடன் சம்பாஷிக்கத் தொடங்கினேன். முதல் முதல் ஓடமேறித் தப்பித்துக்கொண்ட மிலேச்சரைக்குறித்து உனது அபிப்பிராயமென்ன? எங்களைக் கொன்று பட்சிக்கும்படி திரளான மனுஷரைச் சேர்த்துக்கொண்டு வருவார்களா என, சுக்கிரனைக் கொண்டு அவன் தகப்பனைக் கேட்பித்தேன். அதற்கு அவன் ஓடத்திற்போன மிலேச்சர்கள் அன்றிரவடித்த புயலுக்குத் தப்பிப் பிழைத்திருக்கமாட்டார்கள். சமுத்திரத்தில் முழுகி இறந்துபோவார்கள். அது தப்பினால், ஓடம் தெற்குமுகமாய்ச் சென்று, அங்குள்ள துறைகளிலொன்றிற் சேரும். சேர்ந்தால், அங்கிருப்பவர்கள் அவர்களைக் கொன்று பட்சித்துப்போடுவார்கள். ஒருவேளை அவர்கள் தப்பிப்பிழைத்துக் கரைசேர்வார்களானால், என்ன செய்வார்களோ அறியேன்; ஆனாலும், நீங்கள் அவர்கள்மேற் பாய்ந்து விழுந்து அடித்த பராக்கிரமத்தையும், வெடி அதிர்ச்சியையும், மேகம் மின்னியதுபோல் எரிந்த வெளிச்சத்தையும் ஓடத்திலிருந்த மிலேச்சர்கள் கண்டு கேட்டுக் கெடிகலங்கித் திகைத்ததனால், தம்முடன் பிரயாணப்பட்ட மனுஷர் மானிடர் கையால் வதைக்கப்படவில்லை; மேகம் முழங்கி இடிவிழுந்து

இறந்துபோனார்களென்று தங்கள் தேசத்தவர்களுக்குச் சொல்வார்கள். உங்கள் இருவரையும் கண்டபொழுது, நீங்கள் படைக்கலம் தரித்த மனுஷரல்ல, எங்களைச் சங்கரிக்கும்படி தேவலோகத்தினின்று வந்த துஷ்ட தேவதைகளென்று அவர்கள் பேசினது கேட்டேன். மானிடர் நெருங்கி வந்து கைகலந்து, கத்தி முதலிய படைக்கலங்களாற் பகைஞரைச் சங்கரிப்பதொழிய, நீங்கள் செய்தபிரகாரம் கை ஓங்காமல் தூரத்தில் நின்று அக்கினியாஸ்திரம் பிரயோகித்து, மேகம் முழங்குவதுபோல் இரைந்து பேசக்கூடுமென்று அவர்கள் சொப்பனத்திலும் எண்ணார்கள். இந்த எண்ணம் அவர்களுக்கு வரவே வராது என்றான். விருத்த தசை அடைந்த இம்மிலேச்சன் சொன்னது வாஸ்தவமென்று பிற்பாடு கேள்விமூலமாய் அறிந்தேன். அவ்விடத்தில் சஞ்சரிக்கும் மிலேச்சர் அதற்குப்பின் ஒருபொழுதும் இத்தீவிற்கு வரத் துணியவில்லையென்றும், ஓடமேறிப்போய்க் கரைசேர்ந்த நான்குபெயர் சொல்லிய பயங்கரமான சங்கதியைக் கேட்ட மிலேச்சர்கள் திகிலடைந்து, இனி அந்த மந்திரபூமிக்கு எவன் போவானே, அவன் தேவர்கள் பிரயோகிக்கும் அக்கினியாஸ்திரங்களாற் சங்கரிக்கப்படுவது நிஜமென அவர்கள் உறுதியாய் நம்பினார்களென்றும் இதரமானபெயர்கள் சொல்லக் கேட்டேன்.

இச்சங்கதி எனக்கு நாட்சென்று தெரியவந்தது. தீவிலிருக்கும்பொழுது நெடுநாள்வரையில் மிலேச்சரைக் குறித்து இராப்பகல் எப்பொழுதும் ஏக்கமுற்றிருந்தேன். நானும், எனது சேனாவீரர்களும் மிகுந்த ஜாக்கிரதையாயிருந்தோம். நாங்கள் நாலுபெயர் இருந்ததனால், மிலேச்சர் நூறுபெயர் எந்நேரத்தில் வந்தாலும், அந்நேரம் அச்சமின்றி வெளிப்பட்டு, அவர்களோடு எதிர்த்துச் சண்டை செய்யும் சாமர்த்தியம் எங்களுக்குண்டு.

சிலநாள்வரையில் ஜாக்கிரதையாயிருந்தும், மிலேச்சர் ஓடம் வாராததனால், அவர்கள் வரவைக்குறித்துண்டாயிருந்த அச்சம் நாளடைவில் தொலைந்தது. இதுநிற்க, நான் மிலேச்சர் தேசத்திற்குப் போகச் சம்பவித்தால்,

அவர்கள் தன்னிமித்தம் என்னை உபசரித்து, எனக்கு மரியாதை பண்ணுவார்களென்று சுக்கிரனுடைய தகப்பன் நிச்சயித்துச் சொன்னான். ஆனதுபற்றி, முன்பு நினைத்தபடி கண்டத்திற்குப் பிரயாணப்பட வேண்டுமென்று எனக்குள்ளே சிந்தனை யுண்டாயிற்று.

## 17. அத்தியாயம்.

தன் தேசத்தவர்கள் இன்னும் பதினாறுபெயர் அம்மிலேச்சரோடிருப்பதாக மேற்படி ஸ்பானியன் எனக்குச் சொல்லியது. அந்த ஸ்பானியனும், சுக்கிரன் தகப்பனும் ஆயுதபாணிகளாய் ஓடமேறி, கண்டத்திற்குத் தூதுபோனது. கரைக்குச் சமீபத்தில் அங்கிலேய மரக்கலமொன்று நங்கூரம்போட்டு நின்றதைக் கண்டது. கடலோடிகள் ஓடத்தில் மூன்று கைதிகளை ஏற்றிக் கொண்டுவந்து கரையேறினது. ஓடத்தைக் கரையிலேற்றி, அவர்கள் காட்டில் உலாவித் திரிந்தது. நான் அக்கைதிகளைக் கண்டதும், அவர்களில் ஒருவன் அவ்வுருவின் மாலுமியென்றும், ஒருவன் உபமாலுமியென்றும், மற்றவன் பிரயாணிகனென்றும் அறிந்ததும். கலகக்காரராகிய கடலோடிகளைக் கைது செய்தது.

சற்றுவேளை இந்த நினைவுகளை நிறுத்தி ஸ்பானியனுடன் சம்பாஷணை செய்தேன். ஸ்பானியரும் போர்த்துக்கேயரும் பின்னும் பதினாறுபெயர் கப்பற் சேதப்பட்டு, கடுங்காற்றால் மிலேச்சர் கரையடைந்து, அங்கு அவர்களுடன் சண்டை சச்சரவின்றிச் சமாதானமாயிருப்பதாகவும், ஜீவனம் செய்வதற்கு ஆவசியகமான பண்ட பதார்த்தங்களின்மையால் மிக வருத்தப்படுவதாகவும் அவன் வாக்குமூலமாய் அறிந்தேன். உங்கள் பிரயாண வரலாறுகளை விவரணமாய்ச் சொல்லென்று நான் கேட்க, அந்த ஸ்பானியன் பின்வருமாறு ஆதியோடந்தமாய்ச் சொன்னான்:—“எங்கள் ஜனனதேசம் ஸ்பானியா. நாங்கள் கடலோடிகள். ரியோ டி லா பிலாத்தா துறையில் தோலும் வெள்ளியும் ஏற்றிக்கொண்டு, ஹவனா துறைக்குப் பிரயாணப்பட்டோம். இந்தச் சரக்குகளை அங்கே இறக்குமதி செய்தபின், அங்குள்ள சீமைச் சரக்குகளை வாங்கிக்கொண்டு திரும்பி வரும்படி முதலாளி உத்தரவு

செய்திருந்தார். உருவைச் செலுத்திக்கொண்டு போகையில், சமுத்திரமார்க்கத்தில் உடைந்து சேதப்பட்ட மற்ளொரு மரக்கலத்தினின்று உயிர் தப்பிப் பிழைத்த போர்த்துக்கேய கடலோடிகள் ஐந்துபெயரைக் கண்டு, எங்கள் உருவிலேற்றிக்கொண்டு போனோம். அப்புறம் எங்கள் உருவும் சேதப்பட்டது. எங்கள் மனுஷர் ஐந்துபெயர் முழுகி இறந்துபோனார்கள். தெய்வ கடாட்சத்தால் தப்பிப்பிழைத்த நாங்கள் சொல்வதற்கரிய பாரதூரமான பற்பல பிராண சங்கடப்பட்டு, பசியால் வருந்தி, கடைசியில் பொங்கிப் புரளும் அலைவீச்சினால் நரமாம்ச பட்சணிகளாகிய மிலேச்சர் கரையில் ஒதுக்கி விடப்பட்டோம். அங்கே அவர்களுக்குப் பட்சணமாவதே நமது கதியென்று நிமிஷந்தோறும் நினைத்து ஏக்கமுற்றிருந்தோம்.

“எங்கள் வசம் இருந்த வெடிமருந்து கொஞ்சங் குறைய முழுதும் உப்புத்தண்ணீரில் நனைந்து பழுதாய்ப் போயிற்று. பழுது படாதிருந்தது சொற்ப மருந்து. கரையடைந்தபின் அம்மருந்து செலவாகிறவரையில் இரண்டொருநாள் ஆகாரத்திற்குதவும் பட்சி முதலியவைகளைச் சுட்டுத் தின்றோம்” என்றான்.

மிலேச்சர்நாட்டில் உங்களுக்கு என்னகதி வருமென்று எண்ணினீர்கள். அவ்விடத்தினின்று தப்பித்துக்கொள்வதற்கு நீங்கள் ஏதாயினும் உபாயம் செய்யவில்லையா? என, நான் கேட்ட கேள்விக்கு, ஸ்பானியன்: “செய்யாமல் என்ன, பலவித யோசனைகள் செய்தோம். எங்களிடத்தில் மரக்கலமும் இல்லை, மரக்கலம் சமைத்தற்குரிய கருவிகளும் இல்லை, போஜனபதார்த்தம் ஒன்றுமில்லை. ஆனதுபற்றி, எங்கள் யோசனை சித்தியாகாதென்றும், எங்களுக்கு மீட்சியில்லையென்றும் கண்டு பரிதபித்துக் கண்ணீர் விட்டோம்” என மொழிந்தான்.

அப்புறம் நான் அவனைப்பார்த்து, இங்கே வா, நீயும் உனது ஜனங்களும் மிலேச்சர் தேசத்தினின்று விலகித் தப்பித்துக்கொள்வதற்கு ஒரு யுத்தி சொல்லுகிறேன் கேள். அதை நன்றாய்ச் சீர்தூக்கிச் சிந்தித்து, ஏற்குமோ ஏற்காதோ

வென்று சொல்லு. நீங்கள் அனைவரும் இவ்விடத்தில் வந்து சேர்ந்தால், எளிதில் தப்பித்துக்கொள்ளக் கூடாதா? நான் உங்களிடத்திற்கு வரவும், உங்களை நம்பி எனது பிராணனை உங்கள் கையில் ஒப்புவிக்கவும் அஞ்சுகிறேன். ஒருவேளை நீங்கள் சர்ப்பனை நினைத்து எனக்குத் தீங்கு செய்தால், உங்களைக் கேட்பவர் ஆர்? செய்நன்றி மறவாதிருப்பது மனுஷர் ஜன்மகுணமல்ல; பெரும்பாலும் மனுஷர் தமக்குப் பிறர் செய்த உபகாரங்களைச் சிந்தையில் வைத்து, தாமும் எப்பொழுதும் அவர்களுக்குப் பிரதி உபகாரிகளாயிருக்கிறதில்லை. பிறரால் [illegible] உபகாரம் பெற நாடினால், அவர்களுக்கு இதவசனம் சொல்லி, ஏற்கும்வண்ணம் ஒப்புக்கு நடப்பார்கள். அங்கிலேயன் எவனாவது நியூ ஸ்பானியாவில் சேர்வதுண்டானால், மிகக் கொடிய ஆபத்து ஆவசியகத்தினால் அவன் அங்கடைந்திருப்பினும், ஸ்பானியர்கள் அவனைக் கைதுசெய்து வருத்துவதற்கு ஐயமில்லை. தவறுமல் இதுவே அவன் கதியாகும். புறதேசத்தில் துஷ்ட மிலேச்சருக்குட் சஞ்சரித்து உபத்திரவப்படும் உங்களை அவர்கள் கைக்கு உபாயமாய்த் தப்புவித்து நியூ ஸ்பானியாவிற் கொண்டுபோய்ச் சேர்த்தபின், விஷ சர்ப்பம் பால் வார்த்து வளர்த்தவனைக் கடித்துக் கொல்வதுபோல, நீங்கள் உங்கள் பிராணோபகாரியாகிய என்னைப் பிராணபரியந்தம் சிறையிருத்துவீர்களானால், இதை என் மனம் சகியாது. கோழிக்குஞ்சைச் சடிதியில் விழுந்தடித்து, கூர்மையான கால் நகங்கள் ஏறும்படி இருபாதங்களின் இடையே இடுக்கிக் கொண்டுபோய்த் துடிக்கப் பதைக்கப் பட்சிக்கும் பருந்தைப்போலும் இரக்கம் சிறிதுமில்லாத உங்கள் குருக்கள் வசப்பட்டு, அவர்கள் நியாய சபையாரால் பாஷண்டியென்று தீர்க்கப்பட்டு, குரூரதண்டனை பெறுவதிலும், மிலேச்சர் கையில் அகப்பட்டு, அவர்களுக்குப் பட்சணமாவதில் ஒரு தாழ்வுமில்லை. இப்படி வருமென்று என் மனம் அஞ்சித் தடுமாறுகின்றது. இவ்வாறு அஞ்சுதற்கு நிமித்தமில்லாதிருக்குமானால், உனது ஜனங்களை இங்கே வரவழைத்து, நாமெல்லாரும் கூடி, பாரிய ஓடமொன்று சிருஷ்டித்து, தெற்கே பிரேஜில் பிரதேசத்திற்காவது, வடக்கே இருக்கும்

தீவுகளுக்காவது, ஸ்பானிய கரைக்காவது அவ்வோடத்தி லேறி, எளிதிற் போய்ச் சேரலாம். ஆனாலும், எனது படைக் கலங்களனைத்தையும் கைக்கொண்டு நான் செய்த உபகாரத் திற்குப் பிரதியாக நீங்கள் என்னைப் பலாத்காரமாய்ப் பிடி த்து, உங்கள் தேசத்திற்குக் கொண்டுபோய், எனக்கு நிஷ்டூ ரம் செய்வீர்களானால், அப்புறம் நான் இருந்தென்ன, இறந் தென்ன என அழுத்திச் சொன்னேன்.

அவன் கபடம் சிறிதுமின்றி மிக யுத்தியாய்ப் பின்வரு மாறு உத்தரம் சொன்னான். “மிலேச்சர் நாட்டில் சேர்ந்த என் தேசஸ்தர்கள் நிர்ப்பந்தமான ஸ்திதியிலிருந்து வருந்து வதனால், மனதிரங்கி அவர்களை விடுதலைசெய்யும் உத்தமபுரு ஷனுக்கு அபகாரம் செய்ய நினைப்பது அவர்களுக்கு வெறுப் பாயிருக்குமென்று நம்புகிறேன்; உமக்கு இஷ்டமானால், நான் இவ்விருத்தனுடன் மிலேச்சர் நாட்டுக்குப் போய், அவர்க ளைக் கண்டு, இச்சங்கதியைக்குறித்துப் பேசி, அவர்கள் அபிப்பிராயமறிந்து வந்து சொல்லுவேன்; உம்மைத் தங்கள் அதிபதியாக மதித்து, உமது சொற்கேட்டு, உமக்குக் கன விலும் துரோகம் நினையாமல், கிறிஸ்து மதஸ்தர்கள் சஞ்ச ரிக்கும் எத்தேசத்திற்குப் போவது உமக்குச் சம்மதமோ, அத்தேசத்திற்கே உம்முடன் போய் க்ஷேமமாய்ச் சேருகிற வரையில் உமது ஏவற்படி தவறாமல் நடப்பதாகப் புண்ணிய சமஸ்காரங்களைக்கொண்டும், சுத்த சுவிசேஷத்தைக்கொண் டும் திடநிச்சயபூர்வமாய்ப் பிரமாணிக்கஞ்செய்வித்து, உடன் படிக்கைப் பத்திரமெழுதி, அவர்கள் கையொப்பமிடுவித்து வாங்கிவருவேன்.

“அன்றியும், நீர் போகச்சொன்னாலொழிய, எனது வாழ் நாள் அறுதிமட்டும் நான் உம்மை விட்டுப் பிரியேனென்றும், என் தேசஸ்தர்கள் அற்பமாயினும் உமக்குத் துரோகம் செய் வார்களானால், நான் உமக்குத் துணைநின்று என் உதிரம் துளி துளியாய்ச் சிந்தி, எனது உடம்பு வெற்றெலும்பாய் உலருமட்டும் அவர்களுடன் சண்டை செய்வேனென்றும் என்மட்டில் பிரமாணிக்க பூர்வமாய் வாக்குத்தத்தம் செய்கி றேன்.

"மேலும், அவர்கள் அனைவரும் மரியாதை தவறுத எதார்த்தவாதிகள். கையுதவிக்கு ஆயுதபலமாவது, உடுக்க ஆடையாவது, உண்ண ஆகாரமாவது இல்லாதவர்களாய் மிலேச்சர் அதிகாரத்திற்குட்பட்டிருந்து, அவர்கள் யுக்தமே தமக்கு விதியாய்க்கொண்டு, ஜனனதேசத்திற்கு இனித் திரும்பிப் போக இடம்பெறுவது அசாத்தியமென்று துயரடைந்து துன்பசாகரத்தில் மூழ்கியிருக்கிறுர்கள். புண்ணிய புருஷராகிய நீர் பரிவுகூர்ந்து, அவர்களைச் சிறை மீட்கத் தலைப்படுவீராஞல், இனிப் பிழைப்பினும் இறப்பினும் நீரே தங்கள் தஞ்சமென்றெண்ணி, உமது அடியாராய் நடப்பார்களென்று பூர்த்தியாய் நம்புகிறேன்" என்றுன்.

இவ்வாக்குறுதி கேட்டபின், கூடிய, பிரயத்தனஞ்செய்து, அவர்களை விடுதலைபண்ணவும், அவர்களோடு உடன்படிக்கை செய்து வரும்படி கிழ மிலேச்சனையும், ஸ்பானியனையும் ஸ்தானுதிபதிகளா யனுப்பவும் தீர்மானித்தேன். பிரயாணத்திற்கு வேண்டும் எத்தனங்கள் யாவும் செய்தபின், புத்திபூர்வமாகவும் நிஷ்கபடமாகவும் ஸ்பானியன் வாக்கினின்று பிறந்த ஆக்ஷேபம் ஒன்றை நான் பூர்த்தியாய் நம்பி, அவன் கூட்டாளிகளைச் சிறைமீட்கும் முயற்சியை அதமும் ஆறு மாசவரையில் நிறுத்திவிட்டேன். ஆக்ஷேபம் இதுதான்.

ஸ்பானியன் எங்களிடத்திற் சேர்ந்து முன்பின் ஒரு மாசம் சென்றது. இக்காலவரையில் ஈஸ்வர சகாயத்தால் ஆகாரத்திற்கு வேண்டியவைகளை நான் சேகரித்து வைத்திருந்தது இவ்வகையென்று அவனுக்கு வெளியிட்டேன். நான் கட்டி வைத்திருந்த யவையும் நெல்லும் இவ்வளவென்று அவன் திட்டமாய்க் கண்டான். நான் ஒருவன் மாத்திர மிங்கிருந்தால், அவை என் செலவிற்கும் கண்டு, மிஞ்சும். இப்பொழுது என்னுடன் பின்னும் மூன்றுபெயர் என் குடும்பத்திற் சேர்ந்திருந்தார்களே. ஆக எங்கள் நான்கு பெயருக்கும் இத்தானியம் மிதமாய்ச் செலவு செய்தாலன்றி, செலவிற்குக் கட்டாது. இப்படியாஞல், எங்களுடன் மிலேச்சர் தேசத்தில் இருக்கின்ற ஸ்பானியர் பதினன்குபெயரும் வந்து சேர்ந்தால், ஆகப் பதினெட்டுப்

பெயருக்கும் உண்டிக்கு வகையில்லையே. அன்றியும், எல்லாரும் வந்து சேர்ந்தபின் வளமான ஓடமொன்று நிர்மாணித்து, அமெரிக்காவில் கிறிஸ்த சமயிகள் சஞ்சரிக்கும் எந்தப் பிரதேசத்திற்காயினும் பிரயாணப்படுவோமானால், உருவலிருக்கும் வரையிலாவது எனது தானியம் உண்டிச் செலவிற்குக் காணாதே. இந்த நியாயங்களை எடுத்துக்காட்டி, மேற்படி ஸ்பானியன் என்னிடத்திலுள்ள விதை தானியத்திற்கு அளவான நிலத்தைத் தானும், மற்ற இருவரும் கொத்தி வெட்டிப் பண்படுத்தி, விதைக்கவும், அது பயிராகி வளர்ந்து விளைந்தபின் அறுத்து, தானியத்தைக் களஞ்சியத்திற் சேர்த்துவைத்து, அப்புறம் தன் தேசஸ்தர்களை அழைத்துவரவும் இடந்தரவேண்டுமென்று கேட்டான். இப்படிச் செய்யாமல், இப்பொழுதே அவர்களை அழைத்துவரச் சம்பவித்தால், களஞ்சியத்திலிருக்கும் சொற்ப தானியம் சீக்கிரத்திற் செலவழிந்துபோமாதலால், பசி வருத்தம் பொறுக்காமல், அவர்கள் மனம் வேறுபட்டு ஒருவேளை கலகம் செய்வார்களென்றும், சிறை உபத்திரவம் நீங்க, தரித்திர உபத்திரவம் வந்ததென்று குறைகூறி, சொற்கேளாமல் அதிக்கிரமிப்பார்களென்றும் சொன்னான். மேலும், “எகிப்து தேசத்தினின்று சிறைமீண்டு வந்தபொழுது இஸ்ரவேல்புத்திரர் மகிழ்கூர்ந்தும், வனாந்தரத்தில் ஆகாரத்திற்கு கஷ்டப்பட்டபொழுது, தங்களைச் சிறைமீட்ட தேவனை மதிக்காமற் கலகம் செய்தது அறியீரா” என்றான்.

இவ்வாறு ஸ்பானியன் சமயோசிதமாய்ச் சொல்லிய சற்புத்தியை நான் இன்பமாய்க் கேட்டு, அவனிடத்திற் சற்றுவது கபடமில்லையென்று பூர்த்தியாய் நம்பினேன். ஆனது கொண்டு, நாங்கள் நாலுபெயரும் என் வசமிருந்த மரப்பாரைகளால் நிலமகழ்ந்து பண்படுத்திப் பக்குவம் பண்ண ஒரு மாசம் சென்றது. அடுத்து விதைப்புக்காலம் வந்ததனால், இருபத்திரண்டு புஷல் யவையும், பதினாறுசாடி நெல்லும் விதைத்தோம். இதற்கு அதிக தானியம் விதைப்பதற்கு இசையாது. விதை தானியத்தைப் பிரத்தியேகமாய் எடுத்துவைத்த நாள்முதல் விதைத்த தானியம் விளைகிற வரையில் சரியாய் ஆறுமாசம். ஆகாரத்திற்கு வைத்திருந்த

தானியம் ஆறுமாசவரையில் எங்கள் செலவிற்குக் கட்டி வாராது. இத்தேசத்தில் விதைத்த தானியம் விளைவதற்கு ஆறுமாசம் செல்லாது.

எனது தீவின் குடித்தொகை விர்த்தியானதனால், திரளான மிலேச்சர் வந்தாலன்றி, எங்கள் நால்வரையும் அவர்கள் எவ்விதத்திலும் மேற்கொள்ள முடியாதென்றெண்ணி, தீவில் எங்கும் அச்சமின்றிக் கருமத்தின்பேரில் போக வர இருந்தோம். இவ்விடத்தினின்று சீக்கிரத்தில் விலகி விடுதலை பெறவேண்டுமென்று நாங்கள் எண்ணியிருந்ததனால், அதற்குரிய சாதனங்களைத் தேடவேண்டுமென்று எப்பொழுதும் சிந்தையாயிருந்தேன். ஓடத்திற்கு வளமான மரங்களை அங்கங்கே குறித்து, சுக்கிரனையும், அவன் தகப்பனையுங் கொண்டு தறிப்பித்தேன். எனது அபிப்பிராயங்களை நான் ஸ்பானியனுக்குச் சொல்ல, அவன் அத்தியக்ஷனாய் நின்று, யுத்தி சொல்லி, அவர்களைக்கொண்டு வேலை செய்வித்தான். முன்பு நான் ஆளுதவியின்றித் தன்னந்தனியே மரந்தறித்து விழுத்தி, ஒவ்வொரு மரத்தில் ஒவ்வொரு பலகை வெட்டி ஒப்பமிட்டவகையை அவர்களுக்குணர்த்த, அவர்கள் நாளடைவில் ஜவரமான சிந்தூரமரந் தறித்து, பன்னிரண்டு பெரும் பலகை வெட்டிச் சீர்ப்படுத்தினார்கள். பலகை ஒன்றின் நீளம் முப்பத்தைந்தடி, அகலம் இரண்டடி, கனம் இரண்டுமுதல் நாலு அங்குலமட்டும். மரந்தறித்து இந்தப் பலகைகளை வெட்டிச் சீர்ப்படுத்துவதற்கு எவ்வளவு வருத்தப்பட்டுழைக்கவேண்டுமென்பதை இக்கதையை வாசிப்பவர் தாமே நிதானிக்கலாம்.

இவ்வேலை நடக்குங்காலத்தில், நான் வசப்படுத்தி வளர்த்த சிறிய ஆட்டுமந்தையை விர்த்தியாக்குவதற்கு யுத்தி செய்தேன். நாளொன்றுக்கு இருவர் விழுக்காடு சுக்கிரனும் ஸ்பானியனும், நானும் சுக்கிரனும் மாறி மாறித் துப்பாக்கிகொண்டு காட்டுக்குப் போய், எதிர்ப்படும் ஆடுகளைச் சுட்டு விழுத்தினோம். குட்டிகளைக் கொல்லாமல் கொண்டுவந்து, மந்தையிற் சேர்த்தோம். இவ்வாறு நாளடைவில் சேர்ந்த புதுக் குட்டிகள் இருபது. இதுவும் பெரிதல்ல,

திராட்சப்பழக் குலைகளை வெயிலில் உலர்த்துங்காலம் வந்தபொழுது, திரளான குலைகளைப் பறிப்பித்து, வெயிலில் தூக்கி உலர்த்துவித்து, அறுபது எண்பது பீப்பாக்கள் நிறையச் சேர்த்து வைத்தேன். திராட்சப்பழ வற்றலால் விசேஷித்த அலிகன்ட் நகரத்திற்குப் போனாலும், இவ்வளவு அகப்படுவது அசாத்தியம். இவ்வற்றலும் ரொட்டியுந்தான் எங்கள் முக்கியமான போஜனம். இவ்வுணவு நாவிற்கிதமும் சரீர புஷ்டி தருவதுமாயிருந்தது.

விதைத்த தானியம் நன்றாய் விளைந்து, அறுக்கப் பருவமாயிற்று. இந்தப்போகத்து விளைச்சல் அத்தனை உத்கிர்ஷ்டமானதல்ல; ஆனாலும் தாழ்வில்லை. விளைந்த மணி எங்கள் செலவிற்குப் பூர்த்தியாய்க் காணும். விதைத்த யவை இருபத்திரண்டு புஷல். அறுத்துப் போரடித்துத் தேறினது இருநூற்றிருபது புஷலுக்கு அதிகம். நெல்லும் இந்தப் பிரமாணமாய் விளைந்தது. இவ்விரண்டுவகைத் தானியமும் மேற்சொல்லிய பதினாறு ஸ்பானியரும் என் குடும்பத்திற் சேர்ந்தாலும், மறுபோகத்து விளைச்சல் வருமளவும் எங்கள் எல்லாருக்கும் ஆகாரச்செலவிற்குப் போதும். நாங்கள் பிரயாணத்திற்கு எத்தனித்தாலும், மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு போய், அமெரிக்காவில் எந்தப் பிரதேசத்துக் கரையிலாயினும் சேருமளவும் எங்கள் செலவுக்குக் கட்டிவரும். போரடித்து, தானியத்தை வீட்டிற் கொண்டுவந்து சேர்த்தபின், அதை வைக்கும்படி என் வசமிருந்த கூடைகள் போதாமையால், பின்னும் சில கூடைகளைக் கொடிகளால் முடைந்தோம். நேர்த்தியாய்க் கூடைகள் முடைவதில் ஸ்பானியன் கை நன்றாய் வழக்கப்பட்டிருந்தது. இக்கொடிகளால் கொத்தளமுதலிய காவல் அரண் ஏதாயினும் நான் கட்டாதிருந்ததைப்பற்றி அவன் குறை கூறினான். அவ்வித அரண்களைச் சமைப்பது ஆவசியகமல்லவென்று கண்டேன். வரும் விருந்தினர்களுக்குப் போந்தமட்டும் தானியமுதலிய போஜன பதார்த்தங்கள் சேகரித்து முடிந்ததனால், இனி அமெரிக்க கண்டத்திற்குப் போய், அங்கிருக்கும் உனது மனுஷரை இக்கரைக்குக் கொண்டுவரும்படி உன்னாற் கூடிய பிரயத்தனங்களைச் செய்யென்று ஸ்பானியனுக்கு விடை கொடுத்தேன். தன்

னைச் சிறைமீட்கும்படி தூதனுப்பி, இத்தீவிற்கு வரவழைக்கும் தர்மகுணசீலனைக் காணும்பொழுது, தான் அவனுக்கு எவ்விதத் தீங்கும் செய்வதில்லையென்றும், அவனுடன் சண்டையிடுவதில்லையென்றும், அவனைத் தாக்குவதில்லையென்றும் உனக்கும் இம்மிலேச்சனுக்கும் எதிரில் நின்று பிரமாணக்கம் செய்வதற்கு உடன்படாத ஒருவனையும் நீ இங்கே கொண்டுவரக்கூடாது. மேலும், அந்த ஸ்பானியர்கள் மேற்படி புண்ணிய புருஷனுக்கு எவரையும் தீங்கு செய்யவொட்டாமல் தடுத்துத் துணை நின்று, எவ்விடத்திற்குப் போனாலும் அவன் சொற்கேட்டு, அவனுக்கடங்கி நடப்பதாக உடன்படிக்கைப்பத்திரம் எழுதிக் கையொப்பமிட்டு உங்களிடத்தில் ஒப்புவிக்க, அதை நீங்கள் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்றும், ஸ்பானியனுக்குத் திட்டமாய் நிபந்தனை செய்து ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தேன். எழுதும் இறகுக்கும் மைக்கும் வழியில்லாதிருந்த மேற்படி ஸ்பானியர்கள் உடன்படிக்கைப்பத்திர மெழுதிக்கொடுப்பது எப்படியென்று நான் கேட்கவுமில்லை, ஸ்பானியன் கேட்கவுமில்லை.

இவ்வரையறைகளைக் கேட்டபின் ஸ்பானியனும், விருத்தனுகிய மிலேச்சனும் (சுக்கிரன் தந்தை) முன்பு இத்தீவிற் பட்சிக்கப்படுவதற்குச் சிறைபிடித்து ஏற்றிக்கொண்டு வரப்பட்ட ஓடங்களிலொன்றில் ஏறிப் பிரயாணப்பட்டார்கள்.

ஓடம் ஏறும்பொழுது, நான் அவர்களுக்குத் தலைக்கு ஒரு தீத்தட்டிக்கற் பெருந்துப்பாக்கியும், எட்டு வெடி தீர்க்கப் போதுமான மருந்து குண்டும் கொடுத்து, இம்மருந்தையாவது குண்டுகளையாவது ஆவசியகமின்றி வியர்த்தமாய்ச் செலவு செய்யாமல் உற்ற சமயத்திற்கு வேண்டுமென்று வைத்திருங்கள் எனத் திட்டம் சொல்லி அனுப்பினேன்.

நான் இத்தீவில் அகஸ்மாத்தாய் வந்து சேர்ந்து இருபத்தேழு வருஷம் பூர்த்தியாய் நிறைவேறி, பின்னும் சில தினங்கள் சென்றன. சென்றும், இச்சிறையிருப்பு நீங்கி ஈடேறும் பொருட்டு இதற்குமுன் நான் எவ்வித முயற்சியும் செய்யாதனால், இம்முயற்சியைப்பற்றி என்னுள்ளம் களிகூர்ந்தது. பலதினங்கள்வரையில் அவர்களுக்கும், எட்டு நாள்வரை

யில் அவர்கள் அழைத்துவரும் மனுஷருக்கும் ஊண்செல விற்குப் போதுமான ரொட்டியும், திராட்சப்பழ வற்றலும் கொடுத்து, சிந்தாயாத்திரையாய்ப் போய் வாருங்களென்று வாழ்த்தி அனுப்பினேன். மேலும், திரும்பி வரும்பொழுது, கரை கிட்டுமுன்னே வருபவர்கள் நீங்கள்தாமென்று நானு றுதியாய் அறியும்படி எவ்விதத் துவஜம் ஏற்றவேண்டுமென்று அவர்களுக்கு விவரமாய்ச் சொல்லிவைத்தேன். என் கணக் குப்படி அவர்கள் பிரயாணப்பட்டது அக்டோபர் மாசம். அன்று பூரண சந்திரன்; வளக்காற்று வீசியது. தினக்கண க்கு முன் ஒருமுறை பிசகிப்போனதனால், பின்பு எனக்குத் திட்டமாய்த் தெரியவில்லை. வருஷக்கணக்கும் அத்தனை வரையறையாய் நான் வைக்கவில்லை. பிற்பாடு நான் எழு திவைத்த கணக்கைப் பரீக்ஷைபார்த்து, வருஷக்கணக்கிற் பிசகில்லையென்று கண்டேன். எட்டுநாள்வரையில் அவர் கள் வரவை எதிர்பார்த்திருந்தேன். எட்டாம்நாள் அபூர் வமான விபத்து ஒன்று அகஸ்மாத்தாய் நேரிட்டது. இதற்கு முன் இத்தன்மையான ஆபத்துப் பூலோகத்தில் எவர்களுக் காயினும் சம்பவித்ததைக் கண்டது கேட்டதில்லை. ஒரு நாட் காலையில் நான் அயர்ந்து தூங்கும்பொழுது, எனது அடியான் சுக்கிரன் ஓடிப் பறந்துவந்து, "ஆண்டை ஆண் டை, வந்துவிட்டார்கள், வந்துவிட்டார்கள்!" என்று உரக் கக் கூப்பிட்டான்.

உடனே நான் துடித்துப் பதைத்து எழுந்து, துரிதமாய் வஸ்திரம் தரித்து, ஒன்றுக்கு மஞ்சாமல் எனது சிறு தோப் புக்கூடாகப் போனேன். இத்தோப்பு நாளாவர்த்தியில் நன் ருய் அடர்ந்து படர்ந்திருந்தது. நான் வெளிப்படும்பொ ழுது, படைக்கலங்க ளில்லாமற்போவது வழக்கமல்ல. இச் சமயத்தில்மாத்திரம் நிராயுதனாய்ப் போனேன். ஆனது பற்றியே ஒன்றுக்கும் அஞ்சாமற் போனேன் என்றேன். கடற்கரையை எட்டிப் பார்த்தபொழுது, ஓடம் ஒன்று கரைக்கு நாலரைமைல் தூரத்தில் அணியப் பாய்தூக்கி, அளவாய் வீசிய வளக்காற்றில் கரைக்கு நேர்முகமாய் வரக் கண்டு ஆச்சரியப்பட்டேன். பின்னும் சற்றுக் கருத்தாய்ப் பார்த்தவளவில், அவ்வோடம் நடுக்கடலி லிருந்தல்ல, இத்

தீவின் தெற்கு அந்தத்தினின்று வருவதாகத் தோன்றிற்று. அந்தக்ஷணமே நான் சுக்கிரனை வரவழைத்து, ஓடத்தில் வருபவர்கள் நாம் எதிர்பார்த்திருக்கும் ஜனங்களல்ல, அவர்கள் மித்துருக்களென்றும் சத்துருக்களென்றும் விவரம் தெரியவில்லை, பதறாமல் பதிவிருப்பாயாகவென்று சொன்னேன்.

அப்புறம் அவர்கள் யாவரென்று அறிந்து சந்தேகம் தெளியும்பொருட்டுத் திரும்பி வந்து, தூரதிருஷ்டிக் கண்ணாடி எடுத்துக்கொண்டு, ஏணியை நிறுத்தி, குன்றின் சிகரத்திலேறினேன். ஏதாயினும் அபாயம் நேரிட்டிருப்பதாக எனக்குள்ளே சந்தேகமுண்டாகிறபொழுது, நான் குன்றின் சிகரமேறி, என்னை எவரும் காணாதபடி மலை ஒதுக்கில் மறைந்து நின்று, தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்ப்பது வழக்கம்.

மலைச்சிகரத்தில் நான் அடியெடுத்து வைக்கும்பொழுதே, எனக்கு ஏழரைமைல் தூரத்தில் தென்கீழ்த்திசையில் சற்றே தெற்கை நாடி ஒரு கப்பல் நங்கூரம்போட்டு நிற்பது என் கண்ணுக்குத் தெளியத் தோன்றிற்று. அதற்கும் கரைக்கும் தூரம் நாலரைமைலுக்கு அதிகமிராது. தூரதிருஷ்டிக் கண்ணாடியாற் பார்த்து, அது அங்கிலேய கப்பலென்றும், அவ்வோடம் அதைச் சேர்ந்த நெட்டோடமென்றும் பரிஷ்காரமா யறிந்தேன்.

கப்பலைக் கண்டதும், அதில் இருப்பவர்கள் எனது ஜனன தேசத்தாரென்றும், எனக்கு மித்திரரென்றும் நம்புவதற்கு ஆதாரமிருந்ததும், சொல்வதற்கு அரிய சந்தோஷமேயாயினும், அவ்வேளையில் எனக்கு உண்டான மனத்தடுமாற்றம் இவ்வளவென்று வெளியிடுவது அசாத்தியம்; ஆனாலும், எனது நெஞ்சில் பிறந்த சந்தேகம் முழுதும் நீங்கவில்லை. அவர்கள் எங்கிருந்து வந்தவர்களென்று அறியேனே. ஆனதுபற்றி, ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். எனக்குள்ளே பின்வரும் சிந்தனைகள் பிறந்தன. அங்கிலேய கப்பல் இவ்விடத்திற்கு வர நிமித்தமென்ன? அங்கிலேயர் வர்த்தக முகாந்தரமாய் எத்தேசத்திற்காயினும் போக்கு வரவு செய்வதற்கு இது மார்க்கமல்லவே. அடித்த காற்றில் அவதிப்பட்டு உரு இக்கரையில் ஒதுங்கிற்றென்று

கொள்ளில் புயலடிக்கவில்லையே. அவ்வுருவில் இருக்கும் கடலோடிகள் வாஸ்தவமாய் அங்கிலேயராஞல், அவர்கள் இங்கே வந்தது நன்மைக்கல்ல, ஏதாயினும் துரோகம் செய்யக் கருதி வந்திருப்பார்கள். அப்பெயர்ப்பட்ட கொள்ளைக்காரர், கொலைபாதகர் வசத்தில் வலியப்போய்ச் சிக்கிக் கொள்வது புத்தியல்ல. பதருமல் நின்றவிடத்தில் நிற்பதே உத்தமம்.

எவனுக்காவது ஆபத்து அபாயங்கள் உண்டாகுமுன்னதாகவே சில அற்ப குறிகள் தோன்றும்பொழுது, அவைகளை வியர்த்தமென்றெண்ணி, அவன் அலட்சியஞ் செய்யவொண்ணுது. ஆபத்து வருமுன் அதை உணர்த்தும் ஜாடைகள், குறிகள் உண்டாவது வாஸ்தவமே. காரியா காரியங்களின் நடைக்கிரமத்தைத் திட்டமாய் விசாரித்தறியும் அனுபவமுடையோர் இதற்கு ஆக்ஷேபம் சொல்லார். அக்குறிகள் அகோசரமான உலகத்தின் அந்தரங்க சங்கதிகளை வெளியிடுபவைகளும், அசரீரி வாக்குமாயிருக்கின்றன வென்பதற்கு ஐயமில்லை. அபாயமுண்டாகுமுன் அதைக்குறித்து அந்தக் குறிகள் நம்மை எச்சரிக்கும் தன்மையுள்ளவைகளாய் விளங்கிஞல், அவை நமது க்ஷேமத்தின்பொருட்டு நமது நன்மையை விரும்பும் அசரீரியாகிய ஏதோ ஒரு வஸ்துவினிடத்தினின்று வந்தனவென்று நாம் உத்தேசித்தால் என்ன? அதில் என்ன தாழ்விருக்கிறது? அந்த வஸ்து சாக்ஷாத் கடவுள் தாமோ, சற்றுத் தாழ்ந்த பதவியில் இருப்பதோவென்று நாம் விசாரிப்பது விஷயமல்ல.

இந்த நியாயத்தோரணை சரிதானென்று இச்சமயத்தில் எனக்கு நேரிட்டிருந்த ஆபத்திஞலே பூர்த்தியாய் உறுதிப்பட்டது; அந்தரங்கமான இவ்வெச்சரிப்பு எங்கிருந்து வந்தாலுமென்ன, அதை நான் சிந்தையிற்கொண்டு, கூடியவரையில் ஜாக்கிரதை செய்யாதிருப்பேஞஞல், எனக்கு வரும் நாசத்திற்கு ஒருபொழுதும் மீட்சியில்லை. முந்தின ஆபத்திலும் அதுவே மிகப் பரிதபிக்கத்தக்கதாகும். இதன் உண்மை பின்சொல்லப்படும் சங்கதிகளால் உங்களுக்குத் தோன்றும்.

நான் அவ்விடத்தினின்று பார்க்கத் தொடங்கிச் சற்று நேரத்திற்குள் ஓடம் கரைக்கு நெருங்கி வந்தது. அதில் இருந்தவர்கள் கரையிலிறங்க வசதியான துறையைக் கண்டு, அதில் ஓடத்தை யொதுக்கும்படி கணி நெருங்கச் செலுத்தினார்கள்போலும். அவர்கள் கடலிற் சற்று எட்டவிராததனால், முன்பு நான் என் தெப்பங்களை ஒதுக்கிக் கரையேற்றின சிறு குடா அவர்களுக்குத் தெரியவில்லை. எனக்கு அரைமைல் தூரத்தில் ஓடத்தைக் கடற்கரையில் ஒதுக்கினார்கள். அவர்கள் அவ்விடத்தில் நின்றுவிட்டது எனது அதிர்ஷ்டந்தான். எனது வீட்டிற்கு முற்றம்போல் அத்தனை சமீபத்திலுள்ள மேற்சொல்லிய சிறு குடாவில் ஓடமொதுங்கச் சம்பவித்தால், அவர்கள் கரையிலிறங்கினவுடனே என்னை அடித்து, வீட்டினின்று துரத்தி, என் சொத்துக்கள் அனைத்தையும் சூறையாடிக் கொண்டுபோவார்கள். கரையிலிறங்கியபின், அவர்களிற் பெரும்பான்மையோர் அங்கிலேயரென்று பூர்த்தியாய் நம்பினேன். இரண்டொருவர் உலாந்த தேசத்தாரென்று நினைத்தேன்; அது பிசகு. அவர்கள் ஆகப் பதினொருபெயர். மூன்றுபெயர் ஆயுதபாணிகளல்ல; பந்திக்கப்பட்டிருந்தார்கள்போலும். முதலில் நாலைந்துபெயர் கரையிலிறங்கி, கைதிகளாகிய அம்மூன்று பெயரையும் இறக்கினார்கள். அம்மூவரில் ஒருவன் மிகத் துயரடைந்து வருந்தி, பரிதாபமாய்க் கெஞ்சும் பாவனையான சேஷ்டைகள் பண்ணினான். மற்ற இரண்டுபெயரும் அவனைப்போல் அத்தனை அதிகம் வருந்தவில்லை; பரிதாபப்படும் கோலமாய் நின்று, அடிக்கொருமுறை தங்கள் கைகளை உயர்த்தினார்கள்.

அவர்களைக் கண்டவுடன், என் மனம் பதறிக் கலங்கிற்று. அவர்கள் இன்னார் இனையரென்றும், இங்கே வந்த காரண மின்னதென்றும் எனக்குத் தெரியவில்லை. சுக்கிரன், "எஜமானே! மிலேச்சரைப்போல் அங்கிலேயரும் மனுஷரைச் சிறைபிடித்து அடித்துக் கொன்று தின்பது வழக்கந்தான். அதற்குத் திருஷ்டாந்தம் கண்ணுக்கெதிரே காண்கிறோமே" என அங்கிலேய பாஷையிற் சொன்னான். அதற்கு நான், "ஏன் இப்படிச் சொல்லுகிறாய் சுக்கிரா, அவர்கள் அம்மனுஷரைப் பட்சிப்பார்களென்று எண்ணுகிறாயா?" என்று

கேட்க, "ஆம், பட்சிப்பார்கள்" என்றான். "இல்லை இல்லை, அவர்களைக் கொலை செய்வார்கள்போலும். பட்சிக்கவே மாட்டார்கள். இது நிசமென்று நம்பு, சுக்கிரா" என வெளியிட்டேன்.

நாங்களிருவரும் மேற்சொல்லியவாறு உத்தர பிரதியுத்தரங்கள் செய்தும், என் மனம் அவர்களைக்குறித்து அஞ்சிக் கலங்கிற்று. கைதிகள் மூவரும் க்ஷணமே கொல்லப்படுவார்களென்று நினைத்தேன். காரியத்தின் உண்மை இன்னதென்று எனக்குத் தோன்றவில்லை. அந்தச் சண்டாளத் துரோகிகளில் ஒருவன் பெருஞ் சமுதாடு கைக்கொண்டு, ஆதரவற்ற கைதிகளில் ஒருவனை வெட்டும்படி ஓங்கினான். க்ஷணமே கைதி வெட்டுண்டு இறப்பானென்று நினைக்கவும், என் தேகத்தின் உதிரம் குளிர்ந்து, சரீரம் விறைத்தது.

இச்சமயத்தில் அந்த ஸ்பானியனும், அவனுடன் போன மிலேச்சனும் இங்கிருந்தார்களில்லையே; அல்லது இந்தத் துரோகிகள் காணுதபடி குண்டுபாயுந் தூரத்திற் போக வழியிருக்குமானால், நான் படைக்கல பலமில்லாத அவர்களைச் சுட்டுக் கொன்று, கைதிகள் மூவரையும் ரட்சிப்பேனே எனப் பரிவுகூர்ந்து நினைத்தேன்; ஆனாலும், சமயத்தில் இதற்கு இன்னபடி செய்யவேண்டுமென்று எனக்குத் தகுதியான யுத்தி பிறந்தது.

அகந்தையுள்ள அக்கடலோடிகள் கைதிகள் மூவருக்கும் மேற்சொல்லியவாறு துராகிர்தம் செய்தபின், அவர்களை இஷ்டமானவிடத்திற்குப் போகவிட்டு, தேச வளப்பம் கண்டறியக் கருத்துள்ளவர்கள்போல் அங்கங்கே ஓடி உலாவித் திரிந்தார்கள். கைதிகள் மூவரும் துயரடைந்து வருந்துவோர்போலத் தரையில் உட்கார்ந்து, ஆழ்ந்த சிந்தனையாயிருந்தார்கள்.

அவர்களைக் கண்டவுடன், நான் ஆதியில் இத்தீவின் கரையடைந்து நான்கு திக்கையும் பார்த்தபொழுது, இனி ஈடேற வகையில்லையென்று தவித்து, சுற்றிலும் பார்த்துப் பதறியதும், எனக்கு அத்தியந்த திகிலுண்டானதும், துஷ்ட மிரு

கங்கள் பட்சிக்குமென்று மரத்திலேறி இராமுழுதும் அங்கிருந்ததும் ஆகிய இந்த நினைவுகள் எல்லாம் எனது ஞாபகத்தில் வந்தன.

நாட்பட எனக்கு ஆகாரத்திற்குதவியான பல பேரோஜன பதார்த்தங்களை நான் எளிதிற் கைக்கொள்ளும்படி தேவாதீனமாய் இக்கப்பல் புயலில் அகப்பட்டு, வெள்ளப் பெருக்கில் தள்ளுண்டு கரை நெருங்க வந்து நிற்கிறதென்று அறியாமல், அன்றிராத்திரி என் மனம் தடுமாறியவண்ணம், மேற்சொல்லிய அகதிகளாகிய கைதிகள் மூவரும் தாம் விரைவில் விடுதலைபெற்று, ஆகாரத்திற்கு முட்டுப்பாடின்றி ஆறித்தேறி, கடைத்தேறுவதற்குச் சமயம் வாய்த்ததென்று அறியாமல், தங்களுக்குத் தப்பும் வகையில்லையென்று எண்ணி, மனம் பதறித் தத்தளித்தார்கள்.

இனி நடப்பது இன்னதென்று நமக்கு எள்ளளவும் தெரியாது. ஆனதுபற்றி, ஜீவகோடிகளனைத்தையும் சிருஷ்டித்த மகத்தான கடவுள் நம்மைக் கைவிடாரென்று பூர்த்தியாய் நம்பி, நாம் கலக்கமற்றிருப்பதற்குப் பல முகாந்தரங்களுண்டு. அவர் தமது சிருஷ்டிகளைச் சிறிதும் ஆதரவின்றிக் கலங்கவிடார். மிகக் கொடிய ஆபத்து விபத்துகள் வருங்காலத்திலும், அவர் அவர்களுக்கு ஏதாயினும் சகாயம் செய்வார். அவர்கள் சமீபத்தில் தமக்கு மீட்சியில்லையென்று பதறிக் கதறும்பொழுது, அவர்களுக்கு அதிசீக்கிரம் மீட்சியுண்டாவதுமுண்டு. இது பெரிது அல்ல, தங்கள் நாசத்தை விளைவிக்குமென்று அவர்கள் எண்ணிய சாதனங்களே அவர்களைக் கடைத்தேறப்பண்ணும் சாதனங்களாய்ப் பலிப்பதுமுண்டு.

அவர்கள் கரைப்பட்டபொழுது, கடற்பெருக்கு முதிர்ந்த வேளை. தாம் கொண்டுவந்த கைதிகளுடன் பேசுவதிலும், தேசத்தின் வளமுதலிய வரலாறுகளை அங்கங்கே உலாவித் திரிந்து பார்ப்பதிலும் அவர்கள் பராக்காயிருக்கப் பெருகிய நீர் வற்றியது. வற்றவே, ஓடம் தரையிற் பொறுத்து நின்றது. ஓடத்தில் இருந்த இரண்டுபெயர் மிதந்தப்பிச் சாராயங் குடித்ததனால், மயங்கி அயர்ந்து தூங்கினார்கள். இது

எனக்குப் பிறகு தெரியவந்தது. முந்தி விழித்தெழுந்தவன் ஓடம் தரையிற் பொறுத்து நிலைபெயராதிருந்தது கண்டு, கரையில் அங்கங்கே திரிந்தவர்களைத் துரிதமாய்க் கூவியழைக்க, அவர்கள் எல்லாரும் அதிசீக்கிர மோடிப்போய், ஓடத்தைத் தள்ளி, தண்ணீரி லிறக்கிவிடக் கூடியவரையிற் பிரயத்தனம் செய்தார்கள். ஓடம் அதிக பளுவாயிருந்ததனாலும், அக்கரையில் தரை அதிக மணற்பாங்காயிருந்ததனாலும் அதைப் பெயர்த்துத்தள்ள அவர்கள் பலம் போதாதிருந்தது.

நன்றாய்க் கடலோடிப் பயின்றவர்களுக்குப் பெரும்பாலும் முன் புத்தி இல்லை. இக்கடலோடிகள் ஓடம் தள்ளுவதற்கிசையாதென்று அதை விட்டுத் திரும்பி, மீண்டும் அவரவரே உலாவித் திரிந்து, அதிசயம் பார்த்தார்கள். சிலர் ஓடத்தின் பக்கத்தில் நிற்கையில், கரை ஏறி உலாவப் போனவர்களில் ஒருவன் உரத்துக் கூப்பிட்டு: "ஜாக், இப்பொழுது ஓடம் தள்ளமுடியாது; வீண் முயற்சியை விட்டுவிடுங்கள், விடீர்களா? இனிக் கடல் பெருகும்பொழுது ஓடம் மிதக்கும்" என்று சொன்னது கேட்டேன். இதனால் அவர்கள் எத்தேசத்தவர்களென்று திருஷ்டாந்தபூர்வமாய் அறிந்தேன்.

நான் இன்னும் கோட்டைக்குள் அடங்கியிருந்ததேயன்றி வெளிப்படவில்லை. நான் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த குன்றுச் சிகரத்தின் எல்லைக்கு அப்புறம் ஒரு அடிதூரம் தாண்டிச் செல்லவுமில்லை. எனது கோட்டை மிக அரணிப்புள்ளதாயிருந்ததை எண்ணி, ஆனந்தங்கொண்டேன். ஓடம் மிதக்க இன்னும் பத்தும்மணிநேரம் செல்லுமென்றும், அதற்குள் சூரியன் அஸ்தமித்து இருளுமென்றும், இரவில் அச்சமற்றிருந்து அவர்கள் நடக்கைகளைக் காணலாமென்றும், ஒருவரோடொருவர் பேசுவார்களானால், அவர்கள் பேச்சு எனக்குக் கேட்குமென்று மறிந்திருந்தேன்.

இப்படியிருக்கையில், முன்பு மிலேச்சருடன் சண்டை செய்ய எத்தனித்தபடி போர்க்கோலம் தரித்து எத்தனப்பட்டேன். மிலேச்சரிலும் இவர்கள் அதிக சாமர்த்தியமுள்ள பகைஞராதலால், நான் மிகவும் சாவதானமாயிருந்தேன். துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதேர்ந்து இலக்குத் தவறாமல்

சுடப் பயின்ற சுக்கிரனையும் போர்க்கோலம் தரிக்கச்சொன்னேன். குருவிக்குழாய்த் துப்பாக்கிகள் இரண்டை நான் எடுத்துக்கொண்டு, பெருந்துப்பாக்கிகள் மூன்றை அவனுக்குக் கொடுத்தேன். நான் வெள்ளாட்டுத்தோலில் தைத்த பயங்கரமான மேலங்கி தரித்து, முன்பு விவரணமாய் வெளியிட்ட பெருங் குல்லாவைச் சிரசிலிட்டு, உருவின கத்திகைக்கொண்டு, கைத்துப்பாக்கிகள் இரண்டு இடைக்கச்சில் மாட்டி, தோள் இரண்டிலும் இரண்டு துப்பாக்கிகள் வைத்துக்கொண்டு வெளிப்பட்டபொழுது, என் கோலத்தைக் காணும் எவரும் அஞ்சி அதிரும்படியாயிருந்தது.

அஸ்தமித்து இருளுகிறவரையில் சண்டை தொடங்கல் தகாதென்று நினைத்திருந்ததாக மேலே வெளியிட்டேனே. மதியம் திரும்பி இரண்டு மணியளவில் உஷ்ணம் அதிதீக்ஷணமாயிருக்கும்பொழுது, அவர்கள் அனைவரும் வனத்தில் அங்கங்கே திரிந்து சிதறிப் படுத்து நித்திரை செய்தார்கள்போலும். துயரத்தால் வருந்தும் கைதிகள் மூவருக்கும் தூக்கம் வருமா? அவர்கள் முன்பின் கால்மைல் தூரத்தில் ஒரு பெருமரத்தின் நிழலில் உட்கார்ந்தவண்ணமா யிருந்தார்கள். வனத்திற்புகுந்த மற்றவர்கள் கண்ணுக்குக் கைதிகள் இருந்த இடக்குறிப்பு எட்டாதென்று எண்ணுகிறேன்.

இனி நான் அவர்களுக்கு எதிரிற் போய், அவர்கள் நிலைமை இன்னதென்று கேட்டறிய நினைத்து, மேற்குறித்தபடி யுத்தசன்னத்தனாய் வெளிப்பட்டேன். எனது அடியானாகிய சுக்கிரனும் என்னைப்போல் ஆயுதபாணியாய் எதிர்ப்படும் எவரும் அஞ்சும்படியான கோலத்துடன் எனக்குப் பின் சற்றுத்தூரத்தில் வந்தான். எனது கோலம் கண்களை இமைக்காவல் உருட்டி விழித்துக்கொண்டு சடிதியில் வெளிப்படும் வேதாளத்தின் கோலத்திற் கொப்பாயிருந்தது. சுக்கிரன் அத்தனை பயங்கரமான கோலமுடையவனாய்த் தோன்றவில்லை.

நெருங்கிச் செல்லுமளவும் அவர்கள் என்னைக் காணாதபடி நான் சாவதானமாய்ப் போய், கிட்ட நின்று: "துரைகளே, நீங்கள் யாவர்?" என்று ஸ்பானிய பாஷையில் குரல் எழுப்பிக் கூவிக் கேட்டேன்.

சத்தம் கேட்டவுடன், அவர்கள் திடுக்கிட்டெழுந்து நின்று பதைப்புற்றூர்கள். திரும்பிப்பார்த்து, எனது குரூபத்தைக் கண்டபொழுது, அவர்கள் பின்னும் பத்துமடங்கு அதிகமாய்ப் பதறி உதிறிப் பதைத்துக் கலங்கினூர்கள். எனது கேள்விக்கு உத்தரம் சொல்லவில்லை. ஓடித் தப்பிக்கொள்வதற்கு எத்தனிப்பது கண்டு: "துரைகளே, என்னைக் கண்டு கலங்கவேண்டாம். நீங்கள் நினையாதிருக்கையில், உங்களுக்கு எதிர்ப்பட்ட இவன் உங்கள் பிராண சிநேகனுனூம் ஆவான்" என அங்கிலேய பாஷையிற் சொன்னேன். என் சொற்கேட்ட க்ஷணமே அம்மூவரில் ஒருவன் குல்லாவைச் சிரசினின்று எடுத்து மரியாதை செய்து: "அப்படியானூல், இவர் பரத்தினின்று இங்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டும். எங்கள் கஷ்டதசை மானிடர் சகாயத்தால் தொலையும் தரமுள்ளதல்ல" என அதிவிநய பயபக்தியாய் உரைத்தான். "சகாயம் அனைத்தும் பரத்தினின்று வருவது மெய்தான், துரையே கேளும்; உமக்குத் துணைநிற்கும் வகை இன்னதென்று வெளியிட்டு, இவ்வன்னியனிடத்தில் சகாயம் பெற்றுக்கொள்வீரா? உம்மைப் பார்த்தால், மிகத் துயரடைந்து வருந்துபவர்போலிருக்கின்றது; நீர் இக்கரையில் இறங்கினதும், உம்முடன் வந்த விலங்கினும் கொடிய துரோகிகளைக் கெஞ்சுபவர்போல மெலிந்து வணங்கி நிற்க, அவர்களில் ஒருவன் உம்மைச் சங்கரிக்கும்படி கட்கம் எடுத்துக் கையோங்கினதும் கண்டேன்" என்று சொன்னேன்.

ஆச்சரிய பரவசமடைந்த அவ்வேழைமனுஷனது இரு விழியினின்றும் கண்ணருவி பாய, "என்னுடன் பேசும் இவர் தேவனூ, மனுஷனூ? மனுஷன்தானூ, சுவர்க்க தூதரா?" என விசாரித்தான். "இதைக்குறித்து நீர் ஒன்றுக்குமஞ்ச வேண்டாம், துரையே! இவர் கடவுள் உத்தரவு பெற்று உமக்கு உதவிபுரியவந்த சுவர்க்க தூதரானூல், திவ்யமான வஸ்திர பூஷணூதிகளும், சிரேஷ்டமான படைக்கலங்களும் தரித்துவருவாரே; என்னைப்போல விரூபியாய் வந்து உமக்குத் தரிசனம் கொடுப்பாரா? உம்மை இரந்து கேட்கிறேன், ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நான் மானிடன், அங்கிலேயன், உமக்கு உதவிசெய்யக் கருதி வந்தவன்; எனது ஏவல்

கேட்பவன் இவன் ஒருவன்தான். துப்பாக்கி, கத்தி முதலிய படைக்கலங்களும், மருந்து குண்டும் வைத்திருக்கிறோம்; எங்களால் உமக்கு ஏதும் பணிவிடை வேண்டுமா? தாராளமாய்ச் சொல்லும்: உமது நிலைமை என்ன?" என்று விவரமாய்க் கேட்டேன்.

அதற்கு அவர், "சொல்லக்கேளும் ஐயா, எங்களைக் கொல்லவந்த துரோகிகள் இங்கிருக்கையில் எங்கள் விருத்தாந்தமெல்லாம் உமக்கு இரண்டொரு பேச்சிற் சொல்லித் தொலையாது, சுருக்கிச் சொல்லுகிறேன். நான் அதோ நங்கூரம்போட்டு நிற்கின்ற நாவாயின் மாலுமி; கடலோடிகள் எனது ஆக்கினையை மீறிக் கலகம் செய்து, என்னை வதைக்க முயன்றார்கள். எனது பிராணனை வதைக்காதிருக்கும்படி அவர்களை மிகப் பரிந்து கேட்டேன். கடைசியில் அவர்கள் உக்கிரம் சற்றுத் தணியவும், என்னையும், இவ்விரண்டுபெயரையும் இந்தப் பாழ்ந்தேசத்தில் கொண்டுவந்து இறக்கிவிட்டார்கள். இவர்களில் ஒருவன் எனது உருவின் உபமாலுமி. மற்றவன் பிரயாணிகன். இவ்விடத்தில் மனுஷர் சஞ்சாரமில்லையென்று கண்டு, மரணமே நமது கதியென்றிருந்தோம். இனி நமக்கு என்ன கதி வருமோ அறியோம்" என்றார்.

இச்செய்தி கேட்டு, "விலங்கோடொத்த துஷ்டராகிய உங்கள் பகைஞர் எங்கே? அவர்கள் எவ்விடத்திற்குப் போனார்கள்?" என, நான் கேட்ட கேள்விக்கு, அம்மாலுமி "துரையே, எங்கள் பகைஞர் அதோ தெரிகின்ற விருட்சமடர்ந்த அடவிக்குப் போயிருக்கிறார்கள்; நாம் இங்கே நிற்பது அவர்களுக்குத் தெரியுமென்றும், நீர் பேசுவது கேட்குமென்றும் அச்சமுற்று, எனது நெஞ்சு பதறுகின்றது. அவர்கள் உம்மைக் கண்டு, உமது குரல் கேட்டிருப்பார்களானால், இருதிறத்தாரையும் சங்கரிப்பார்களென்று சத்தியமாய்ச் சொல்லுகிறேன்" என உத்தரம் சொன்னார்.

"அவர்கள் படைக்கலம் ஏதாயினும் வைத்திருக்கிறார்களா?" என்று நான் கேட்க, மாலுமி, "அவர்கள் கொண்டுவந்த துப்பாக்கிகள் ஆக மூன்று. ஒன்றை ஓடத்தில் வைத்துவிட்டுப் போனார்கள்" என விடை கொடுத்தார். "ஆகட்

டும், இனி நீர் எதற்கு மஞ்சவேண்டாம். என்னவந்தாலும், நானே நிர்வகிப்பேன்; அவர்கள் எல்லாரும் அயர்ந்து தூங்குகிறார்கள்; அனைவரையும் எளிதிற் சங்கரிக்கலாம்; உமது இஷ்டமென்ன? அவர்களைச் சங்கரிப்பதா, சிறைபிடிப்பதா? சொல்லும்" என அவருடைய அபிப்பிராயத்தை விசாரித்தேன். அவர்களில் இரண்டுபெயர் எவருக்கும் அஞ்சாத பரம துஷ்டரென்றும், அவர்களைத் தாட்சிண்யமாய் விட்டுவிட்டால், அவர்கள் மூலமாய் வரும் தீங்கு விளையினும் விளையுமென்றும், அவர்களைச் சிறைபிடித்து வைத்தால், மற்றவர்கள் வழிக்கு வந்து, கிரமமாய்க் கீழ்ப்படிந்து தொழில் செய்வார்களென்றும் மாலுமி சொல்லக் கேட்டு, அவ்விருவர் யாவரென்று விசாரித்தேன். கண்ணுக்கெட்டாத் தூரத்தில் நிற்பதனால், அவர் குணம் குறிகளைச் சரியாய் வெளியிடுதற் கிசையாதென்றும், நான் என்னசெய்யச் சொன்னாலும், என் சொற்படி செய்வதே தமது கருத்தென்றும் மாலுமி சொன்னார். அதுகேட்டு: "நல்லது, ஒருவேளை எங்கள் பேச்சைக் கேட்டு எழுந்திருப்பார்கள். இங்கிருந்து விலகி, அவர்கள் கண்ணுக்கு மறைய, நமது குரல் எட்டாத தூரத்தில் போயிருந்து, அப்புறம் இன்னது செய்யவேண்டுமென்று பேசித் தீர்மானிப்போம்" என்று நான் சொல்லிப் போக, அவர்கள் மனப்பூர்வமாய் என்னைத் தொடர்ந்து வந்தார்கள். எல்லாரும் வனத்திற் புகுந்து, மேற்படி துரோகிகள் கண்ணுக்கு மறைவான விடத்தில் நின்றோம்.

பின்பு நான்: "சொல்லக்கேளும் துரையே, நீர் என்னுடன் இரண்டு சங்கேதங்கள் செய்வீரானால், நான் உம்மைச் சத்துருக்கள் வசத்தினின்று விடுதலை செய்வேன்; இது உமக்கு இஷ்டமா?" என்று கேட்டேன். குறிப்பிக்குமுன்னமே மாலுமி என் கருத்தறிந்து, "நான் எந்தக்காரியத்திலும் உமக்கு அமைந்து ஏவல் செய்வேன்; கலகத் துரோகிகள் வசத்தினின்று கப்பலைக் கைக்கொள்வோமானால், அதற்கு நீர் தாமே மாலுமி; கப்பல் நமது கைவசமாகாதிருக்கச் சம்பவித்தால்; நீர் எத்தேசத்திற்குப் போனாலும் நானும் உம்முடன் வந்து, மரணபரியந்தம் உம்மை விட்டுப் பிரியாதிருப்பேன்" என மொழிந்தான். மற்ற இருவரும் அவ்வண்ணம் சொன்னார்கள்.

அதன்மேல் நான் அவர்களை நோக்கி: "பதருமற் கேளுங் கள், நான் குறிப்பிக்கும் சங்கேதங்கள் ஆக இரண்டு; முத லாவது, நீங்கள் இத்தீவில் என்னுடனிருக்கிறவரையில் இங்கே நீங்கள் எவ்வித அதிகாரமாயினும் உடையவர்கள்போ லப் பாவித்து நடக்கக்கூடாது. உங்கள் கையில் நான் ஒப்பு விக்கும் படைக்கலங்களைக் கேட்கும்பொழுது, தடையின்றி நீங்கள் எனக்குக் கொடுத்துவிடவேண்டும். நீங்கள் இத்தீவில் எனக்காவது, என் சொத்துக்காவது தீங்கு, நஷ்டம், சேதம் ஒன்றும் செய்யப்படாது. மேலும், இங்கிருக்கையில், நான் விதிக்கும் சட்டங்களைக் கைக்கொள்ளவேண்டும். இரண் டாவது, இப்பொழுதாயினும் இனிமேலாயினும் மரக்கலம் துரோகிகள் வசத்தினின்று திருப்பிக்கொள்ளப்படுமானல், என்னையும், எனது அடியானையும் அதில் ஏற்றி, பிரயாணக் கூலி வாங்காமல் இங்கிலாந்திற் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்" என்றேன்.

மாலுமி அற்பமாவது நியாய விரோதமில்லாத இச்சங்கே தங்களுக்குத் தான் உடன்படுவதுமன்றி, பிழைத்திருக்கிற வரையில் நானே தன்னைப் பிராணபாயத்திற்குத் தப்புவித்த வனென்று நினைத்து, எப்பொழுதும் அறிக்கை செய்வதாக வும் யுக்தி புத்தியும் உண்மையுமுள்ள ஒருவன் நெஞ்சில் தோன்றும்வகைகள் எத்தனையோ, அவ்வகை அனைத்தினு லும் நிச்சயித்துக் கூறினர்.

பின்பு நான், "நல்லது, இதோ குண்டு மருந்துடன் உங்க ளுக்கு மூன்று பெருந் துப்பாக்கிகள் கொடுக்கிறேன். இனி என்னசெய்யத் தகும்? உமது அபிப்பிராயத்தைச் சொல் லும்" என்று கேட்டேன். நான் செய்யும் நன்றியை என் றும் மறவாமல் உள்ளத்தில் வைத்திருப்பதாக மாலுமி கூடிய வரையிற் பலவாறு சாட்சியிட்டு, எனது சொல்லையே தமக்கு முழுதும் பிரமாணமாய் ஒப்புக்கொண்டு நடக்க இஷ்டமா யிருப்பதாக வெளியிட்டார். பொறுத்து நின்று உபாயம் செய் வதற்கு இது சமயமல்ல. எழுந்திருக்குமுன் அவர்களைச் சுட்டு விழுத்துவதே உத்தமம்; முதல் முறை பொழியும் குண்டு வருஷத்திற்கு அவர்களில் எவராது தப்பிப் பிழைத்து

நமக்கு அடங்கி நடக்க வுடன்பட்டால், அப்புறம் அவருக்கு ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவோம். அவர்கள் குண்டுபட்டு இறப்பதும், பிழைப்பதும் திருவுள்ளத்தின் வண்ணம் ஆகக்கடவன வென்பதாக எனது அபிப்பிராயத்தைச் சொன்னேன்.

என் சொற்கேட்டு, மாலுமி: "அவர்களைக் கூடியவரையிற் பிழைத்திருக்கச் செய்வதற்கொழிய, கொல்வதற்கு என் மன முடன்படவில்லை. அவர்களில் இரண்டுபெயர் படுசண்டாளர்; அவர்களாலேதான் மரக்கலத்திற் கலகமுண்டானது. அவர்களைத் தப்பவிடுவோமானால், நமது கஷ்டதசை நீங்கவே நீங்காது. அவர்கள் மரக்கலத்திற்குப் போய், அங்கிருக்கும் அனைவரையும் அழைத்துக்கொண்டு வந்து, நம்மெல்லாரையும் நாசப்படுத்துவார்கள்" என்று மிக மரியாதையுடன் சொன்னார். "அப்படியானால், ஆவசியகத்தைப் பற்றி எனது யுத்திப்படி செய்வது முறைமைதானே. செய்தாலன்றி, நமக்குப் பிழைத்திருக்க வகையில்லை" என்றேன்; ஆனாலும், அவர்களைக் கொன்று ரத்தம் சிந்துவதற்கு மாலுமி சற்று மனம் சலித்து, பின்னும் சிந்தனையாயிருக்கக் கண்டு, இனி உங்கள் பாடு; நீங்களே போய், உங்களுக்கு வசதியானபடி நடவுங்களென்று சொன்னேன்.

நாங்களிருவரும் சம்பாஷித்துக்கொண்டிருக்கும் பொழுது, வனத்தில் நித்திரைசெய்த துரோகிகளிற் சிலர் எழுந்திருக்குமரவங்கேட்டது. அடிக்குள்ளே இரண்டு பெயர் எழுந்து நின்றது கண்டோம். அவ்விருவரில் எவனாவது நீர் குறிப்பித்த கலகத்தலைவரில் ஒருவனாவென்று நான் கேட்டதற்கு, மாலுமி: "அல்ல" என்றார். "நல்லது, இனிச் சிந்திக்கவேண்டுவதில்லை; அவர்களைத் தப்பித்துக்கொள்ளவிடும்; அவர்கள் சமயத்தில் எழுந்திருந்ததனால், திருவுள்ளத்திற்கும் அதுவே பிரீதியாகத் தோன்றுகிறது. மற்றவர்களைத் தப்ப விடுவீரானால், அது உமது தோஷமே" என மொழிந்தேன்.

எனது சொற்கேட்டு, உற்சாகமடைந்து, மாலுமியும், கூட்டாளிகளிருவரும் ஆளுக்கு ஒரு துப்பாக்கிகொண்டு,

வனத்திற் புகுந்தார்கள். மாலுமி இடைக்கச்சில் கைத்துப் பாக்கியும் ஒன்று மாட்டிக் கொண்டுபோனுர். கூட்டாளி கள் இருவரும் முன்னிட்டுப்போய் சத்தமிட்டார்கள். விழித்திருந்த கடலோடிகளில் ஒருவன் அச்சத்தம் கேட்ட க்ஷணமே திடுக்கிட்டு, திரும்பிப் பார்த்து, அவர்கள் நெருங்கி வருவது கண்டு, நித்திரை செய்தவர்கள் கேட்டு விழிக்கும் படி கூவினுன். சமயம் முந்திப்போயிற்று. கூவினக்ஷணமே மாலுமியின் கூட்டாளிகள் இருவரும் வெடிதீர்த்தார்கள். மாலுமி புத்திபூர்வமாய்த் தன் துப்பாக்கியை வெடிதீர்க்காமல் வைத்திருந்தார். மாலுமி கூட்டாளிகள் கலகத்தலைவர் இருவரையும் இலக்காய் வைத்து குறி தப்பாமல் வெடி தீர்த்ததனுல், ஒருவன் உடனே பிரேதமாக விழுந்தான்; மற்றவன் பிராணுபாயமான காயம்பட்டான். பிராணன் போகாததனுல், அவன் திடீரென எழுந்து நின்று, தனக்கு உதவி செய்யும்படி மற்றவர்களை ஆவலுடன் கூப்பிட்டான். மாலுமி அவனிடத்திற்கு நெருங்கிப்போய், உதவி செய்யும் படி ஓலமிடுவதற்குச் சமயம் முந்திப்போயிற்று. நீ செய்த துரோகத்தை மன்னிக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கவேண்டுமென்று சொல்லி, துப்பாக்கியின் அடிக்கட்டையால் அவனை அடித்து விழுத்தினுர். அப்புறம் அவனுக்குப் பேச்சு மூச்சு இல்லை. துரோகிகள் கூட்டத்தில் பின்னும் மூன்றுபெயர் இருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அற்பகாயம் பட்டது. இதற்குள்ளே நானும் அவ்விடத்திற் போய்ச் சேர்ந்தேன். சடிதியில் நேரிட்ட அபாயத்தைக்கண்டு, இனி வணங்காமல் எதிர்த்து நிற்பது வியர்த்தமென்றறிந்து, தங்கள்மீதிரங்கவேண்டுமென்று அவர்கள் கெஞ்சிக் கேட்டார்கள். அப்பொழுது மாலுமி, "நீங்கள் செய்த விசுவாச காதகத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, இனிக் கனவிலும் இவ்விதத் துரோகம் நினைப்பதில்லையென்றும், கப்பலை மற்றக் கடலோடிகள் வசத்தினின்று கைக்கொண்டு, முன்பு பிரயாணப்பட்டுவந்த ஜமேக்கா துறைக்குத் திருப்பிக் கொண்டுபோய்ச் சேர்ப்பது நிசமென்றும் பிரமாணிக்கம் செய்வீர்களானுல், உங்களைத் தப்பிப் பிழைக்கவிடுவேன்" என வற்புறுத்திச் சொன்னுர். அவர்கள் இனித்

தங்கள் நெஞ்சில் கபடமில்லையென்று ஐயந்திரிபற மெய்ப்பிக்கும்படி பலவாறு உறுதிமொழி சொன்னார்கள். அவர்கள் சொற்கேட்டு, மாலுமி நம்பி, அவர்களைக் கொல்லாமல் விடக் கருதினார். அவர் கருத்துக்கு என் மனம் உடன்படாதிருக்கவில்லை; ஆனாலும், அத்தீவில் இருக்கிறவரையில் அவர்கள் கைகளையும் கால்களையும் கட்டுவித்தேன்.

இது நடக்கும் சமயத்தில் ஓடத்தைக் கட்டி, தண்டுகளையும் பாயையும் எடுத்துவரும்படி நான் அனுப்பின சுக்கிரனும் உபமாலுமியும் கடற்கரைக்குப் போய், எனது சொற்படி எடுத்துக் கொண்டுவந்தார்கள். துரோகிகளில் மூன்றுபெயர் மற்றவர்களை விட்டுப் பிரிந்து, வனத்தில் திரிந்து, துப்பாக்கி வெடி அதிர்ச்சி கேட்டு, சற்றுநாழிகை சென்று வந்தார்கள். கூட்டாளிகளை விட்டு விலகியிருந்தது அவர்கள் அதிர்ஷ்டந்தான். முன்பு தாங்கள் சிறைபிடித்திருந்த மாலுமி இப்பொழுது தங்கள் ஜயபதியாயிருக்கக் கண்டு, அவர்கள் வழிக்கு வந்தார்கள். அவர்களையும் கைகால் கட்டிவைத்தோம். ஆகவே, பூரண ஜயமடைந்தோம்.

இனி மாலுமியும் நானும் மனம் கலந்து, அவரவர் பூர்வோத்தரங்களை வெளியிடவேண்டுமே. முதலில் நான் எனது வர்த்தமானங்களை ஆதியோடந்தமாய்ச் சொன்னேன். அவர் அதைக் கருத்தாய்க் கேட்டு, ஆச்சரிய பரவசமடைந்தார். முக்கியமாய்ப் போஜன பதார்த்தங்களும், துப்பாக்கி குண்டு மருந்துமுதலிய படைக்கலங்களும் அற்புதரூபமாய் எனக்குக் கிடைத்ததைப்பற்றி அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். எனது சரித்திரம் முழுதும் அதிசய வர்த்தமான சங்கிரகந்தானே. அதைக்கேட்டு, அவர் மனம் நெகிழ்ந்துருகியது. பிறகு அவர் தமக்கு வந்த ஆபத்தையும், அற்புதமாய் இப்பாழ்ந்தீவில் பாதுகாக்கப்பட்டிருந்த எனதுமூலமாய்த் தாம் மாணகண்டம் தப்பிப் பிழைத்ததையும் சொல்லி, இவ்வதிசயத்தை நினைத்து நினைத்து, அவர் விட்ட கண்ணீர்ப் பிரவாகத்தில் அவர் முகம் மூழ்கியது. அப்புறம் எதும் சொல்வதற்கு அவருக்கு நாவெழவில்லை.

இந்தச் சம்பாஷணை முடிந்தபின், நான் அவரையும், கூட்டாளிகளிருவரையும் எனது வீட்டிற்கு அதன் சிகரத்

தின்வழியாய் அழைத்துக் கொண்டுபோய், அங்கிருந்த ஆகாரங்களைக் கொடுத்துப் பசியாற்றியபின், அத்தீவில் நான் நெடுங்காலவரையி லிருக்கும்பொழுது யுத்தியாய்ச் செய்த சமஸ்த வேலைப்பாடுகளையுங் காண்பித்தேன்.

கண்டனவெல்லாம் அவர்களுக்கு ஆச்சரியமாகவும், நான் சொல்லக் கேட்டனவெல்லாம் அதிசயமாகவுமிருந்தன. முக்கியமாய் மாலுமி எனது விந்தையான கோட்டை கொத்தளங்களையும், விருட்சத்தோப்பின் ஒதுக்கில் எவர்க்கும் அச்சமின்றி நான் வீற்றிருந்ததையும்பற்றி மிகவும் அதிசயித்தார். விருட்சங்கள் இங்கிலாந்தைக்காட்டிலும் இத்தீவில் மிக விரைவில் வளர்வ தியற்கை. எனது விருட்சத்தோப்பு வர வர அடர்ந்து படர்ந்து, சிறு வனத்திற்கொப்பாயிற்று. அதற்குள் செல்லும்படி ஒடுக்கமான சுற்றுப்பாதை ஒன்று வைத்திருந்தேன். அம்மார்க்கம் ஒன்றுதவிர, அவ்வனத்திற்குள் போக வேறு மார்க்கமில்லை. மலைக்கோட்டையை மாலுமிக்குக் காண்பித்து, இது எனது மாளிகை, எனது வாசஸ்தானம்; அரசரிற் பெரும்பான்மையோருக்கு நாட்டுப் பிரதேசங்களிலும் சிறந்த மாட கூடங்களிருப்பது வழக்கமல்லவா? அவ்வண்ணம் இத்தீவின் மத்தியில் எனக்கும் ஒரு சிறந்த மாளிகையுண்டு. சமயாசமயங்களில் நான் அவ்விடத்திற்குப் போய்த் தங்குவேன். அதையும் உமக்குப் பின்னொரு வேளையிற் காண்பிப்பேன். இதுநிற்க, கப்பலைக் கைக்கொள்ளும் வகையைக்குறித்துச் சிந்தனை செய்வதல்லவா தற்சமயத்தில் நமது கருமமென்று சொன்னேன். மாலுமி மெய்தானென்று ஒப்புக்கொண்டு, "அதற்கு என்ன உபாயம் செய்வதென்று எனக்குச் சிறிதும் தோன்றவில்லை. இன்னும் இருபத்தாறுபெயர் உருவிலிருக்கிறார்கள். அவர்கள் பந்துக்கட்டாய்ச் சேர்ந்து என்னைக் கொல்லும்படி சதியோசனை பண்ணினவர்கள். தேசசட்ட நிபந்தனைப்படி அவர்கள் பிராண தண்டனைக் குட்பட்டவர்கள். இனி அவர்கள் உயிரைப் பொருள்செய்யாமல், கன்னெஞ்சுடையவர்களாய், கொண்டது கைவிடார்கள். தலை வணங்கி எனக்குக் கீழ்ப்படிந்தால், இங்கிலாந்திலாவது அங்கிலேயர் குடியேறிய எந்தப் பிரதேசத்திலாவது சேர்ந்தவுடன், தூக்கு

மாமே தங்கள் கதியென்று அவர்கள் அறிந்திருக்கின்றமை யால், கொண்ட கருத்தை விட்டுவிடாமல் நிறைவேற்ற வகை செய்வார்கள். நாங்கள் மூன்று நாலுபெயர் அத்தனை பெயரோ டெதிர்க்கவும், அவர்களைக் கீழ்ப்படுத்தவும் இசை யாதே" என உரைத்தார்.

அவர் சொன்னதைச் சிறிதுநேரம் சிந்தனைசெய்து, அது நியாயமான சித்தாந்தமென்று கண்டு, இனி அக்கட லோடிகள் இக்கரையிலிறங்கி எங்களைச் சங்கரிக்காதிருக்க வும், படுகுழி வெட்டி, அதற்குள் மதயானையை விழுத்தி வசப்படுத்துவதுபோல, நாங்கள் அவர்களை அகப்படுத்திக் கொள்ளவும் தகுதியான உபாயம் ஏதாயினும் தாமசமின்றிச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தேன். இப்படித் தீர்மா னம் செய்திருக்கையில், ஓடமேறிக் கரைக்குவந்த கூட்டா ளிகள் உருவிற்குத் திரும்பி வாராததைக்குறித்து அவர்கள் விசாரப்பட்டு, அதிசீக்கிரம் அவர்களைத் தேடி, சந்தேக மின்றி மற்ற ஓடத்தில் ஆயுதபாணிகளாய்க் கரைக்கு வரு வார்களென்றும், நாங்கள் அவர்களோடு எதிர்க்கும் தரமுள் ளவர்களல்லவென்றும் எனக்குள்ளே பிறந்த யுத்தியை நான் மாலுமிக்குச் சொல்ல, அவர் சரியென்று ஒப்புக்கொண்டார்.

பிற்பாடு கடற்கரையில் நிற்கின்ற ஓடத்தைக் கடலோடி கள் வந்து, ஒருவேளை கொண்டுபோனாலும் போவார்கள்; ஆதலால், அதில் உள்ள சாமான்களனைத்தையும் எடுத்துக் கொண்டு, ஓடத்தின் அடியில் பெருந்துவார முண்டாக்கி விடுவோமானால், அப்புறம் ஓடம் அவர்களுக்கு உதவாது. அடியில் துவாரமுள்ள ஓடம் கடலில் மிதவாதேயென்று நான் சொல்லி, எல்லாரும் போய் ஓடத்திலேறி, அங்கிருந்த படைக்கலமுதலிய சமஸ்த வஸ்துக்களையும் இறக்கிக் கரை சேர்த்தோம். நாங்கள் எடுத்தவைகள் ஒரு புட்டி பிராந்தி, ஒரு புட்டி ரம், பிஸ்கிட் ரொட்டிகள் சில, வெடிமருந்துக் கொம்பு ஒன்று, இரட்டுத்துணி உறையிட்ட பாரிய சர்க்க ரைக்கட்டி ஒன்று. இந்தச் சர்க்கரை ஐந்து ஆறு ருத்தல் இருக்கும்; இவைகள் எல்லாம் எனக்கு உதவின. முக்கிய மாய்ப் பிராந்தியும் சர்க்கரையும் கிடைத்ததுபற்றிச் சந்தோ

ஷப்பட்டேன். கழிந்த பல வருஷவளாயில் இவ்விரண்டும் என்னிடத்திற் சிறிதுமில்லை.

ஓடத்தின் பாய்மரம், பாய், சுக்கான் இவைகளைத் தருவித்துக்கொண்டதாக முன்பு சொன்னேனே. மேற்சொல்லிய பண்ட பதார்த்தங்களனைத்தையும் எடுத்துக்கொண்டு போய்க் கரைசேர்ந்தபின், ஓடத்தின் அடியில் பெருந்துவாரம் தொளைத்தோம். கடலோடிகள் திரளாய்ச் சேர்ந்து வந்து எங்களைக் கீழ்ப்படுத்தினும், இனி ஓடத்தைக் கொண்டு போகமாட்டார்கள். சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; மரக்கலத்தைக் கடலோடிகள் வசத்தினின்று கைக்கொள்வதற்கு நாங்கள் நிர்வாகிகளாகவேண்டுமென்பதைப்பற்றி நான் அதிகமாய் நினைக்கவில்லை. கடலோடிகள் ஓடத்தை இங்கிருக்க விட்டுப்போவார்களானால், நாங்கள் எளிதாக அதின் துவாரத்தை யடைத்து, காற்றுக்கு நேர்முகமாயிருக்கின்ற தீவுகளுக்கு அதிலேறிப்போகவும், போகும் மார்க்கத்தில் எங்கள் இஷ்டராகிய ஸ்பானியரைக் கண்டு பேசவும்வேண்டுமென்பதே எனது முக்கிய அபிப்பிராயமாயிருந்தது. நான் ஸ்பானியரை மறந்துபோகவில்லை.

## 18. அத்தியாயம்.

ஓடத்தை வரவழைச்கும் குறிப்புச் சின்னமாகிய சொடி மரக்கலத்தில் ஏற்றப்பட்டது. அதற்கு உத்தரம் பிறவாததனால், மற்றொரு ஓடம் கரைக்கனுப்பப்பட்டது. அதில் ஏறிவந்த கடலோடிகளை நாங்கள் அகப்படுத்தியதும், உருவைக் கைக்கொண்டதும்.

மேலே வெளியிட்ட எங்கள் தாற்பரியப்படி செய்வதற்கு எத்தனித்து, முதலில் யாவரும் ஒரு கையாய்ச் சேர்ந்து, ஓடத்தைத் தள்ளி கரை ஏற்றி, பெருக்குவேளையில் அது மிதந்து ஓடாவண்ணம் நீர் ஏறுமிடத்திற்கு அப்புறத்தில் விட்டு, எளிதிலடைக்கக்கூடாத பெருந்துவாரத்தை அதன் அடியில் தொளைத்தபின், நாங்கள் உட்கார்ந்து, இனி என்ன உபாயம் செய்யத்தகுமென்று சிந்தித்துக்

கொண்டிருக்கையில், கப்பலில் ஒரு பீரங்கி வெடிச்சத்தங் கேட்டது. அன்றியும், ஓடத்தை வரவழைக்கும் பாவனை யாகிய துவஜசின்னம் அணியப் பாய்மரத்தி லேற்றப்பட்டது கண்டோம். ஓடம் நின்ற இடத்தை விட்டுப் பெயராதத ஞல், கடலோடிகள் பின்னும் பலமுறை வெடிதீர்த்து, வேறு சின்னங்களால் ஓடத்தைத் திருப்பி வரும்படி குறிப்பித் தார்கள்.

எவ்வகைச் சின்னங்கள் ஏற்றியும், எத்தனை வெடிகள் தீர்த்தும் அவை வியர்த்தமாய்ப் போயின. ஓடம் நின்ற விடம் விட்டுப் பெயர்ந்து திரும்பி வாராததுகண்டு, அவர் கள் உருவிலிருந்த மற்றொரு ஓடத்தைக் கடலிலிறக்கி, கரைக்கு நேர்முகமாய்த் தண்டு வலித்து, செலுத்திக்கொண்டு வந்தார்கள். இதை நாங்கள் தூரதிருஷ்டிக் கண்ணுடியாற் பார்த்தோம். நெருங்கிவருகையில், ஓடத்தில் வெடிக்கருவி கள் வைத்துக்கொண்டு, பத்துப்பெயர் இருந்தது கண் டோம்.

கரைக்கு முன்பின் ஆறு மைல் தூரத்தில் உரு நின்ற தஞல், கடலோடிகள் ஓடம் செலுத்திக்கொண்டு வருகை யில், அவர்கள் அச்சு அடையாளம், முகச்சாயல் அனைத் தும் எங்களுக்குப் பரிஷ்காரமாய்த் தெரிந்தன. அவர்கள் ஓடம் இவ்வோடம் நின்றவிடத்திற்கு எதிர்முகமாய் வரா மல் நீர்ப்பெருக்கால் சற்றுக் கிழக்கே தள்ளுண்டு அடைந்த தஞல், முன்பு இவ்வோடம் சேர்ந்தவிடத்தில் வரும்படி அவர்கள் கரையொதுக்கில் அதைச் செலுத்திக்கொண்டு வந் தார்கள்.

இந்த முகாந்தரத்தால் அவர்கள் வருவது எங்கள் கண் ணுக்குப் பூர்த்தியாய்த் தெரிந்தது. ஓடத்தில் வரும் கட லோடிகள் இன்னின்னரென்றும், அவர்கள் குணகுணங்கள் இன்னின்னவென்றும் மாலுமி திட்டமாய்க் கண்டறிந்து, "வருபவர்களில் மூன்றுபெயர் நிஷ்கபடிகள். அவர்களை மற்றவர்கள் பந்துக்கட்டாய்த் திரண்டு, பலத்த கையினரா கிப் பயப்படுத்தி, தங்கள் சதியோசனைக்குச் சம்மதிக்கப் பண்ணினதன்றி, அவர்கள் தாமே உடன்பட்டவர்களல்ல.

மற்ற ஏழுபெயரில் ஒருவன் மரக்கலத் தளவாட விசாரணை செய்யும் பிரதான உத்தியோகஸ்தன். அவனும், மீந்த ஆறு பெயரும் மற்றக் கடலோடிகளைப்போலக் கலகம் மூட்டி நடத்தின துரோகிகள்தான். அவர்கள் துணிந்து தொடங்கிய இந்த நூதன முயற்சியை என்ன கெடுதிவரினும், கைவிடுவதில்லையென்று சங்கற்பஞ்செய்த கண்டகராயிருப்பார்களென்பதற்கு ஐயமில்லை. அந்தத் துரோகிகளை மேற்கொள்ள எங்கள் பலம் போதாதென்று மிகவும் அஞ்சுகிறேன்" என மொழிந்தார்.

மாலுமி சொல்கேட்டு, முறுவலித்து, நான், "சொல்லக்கேளும், 'முற்றும் நனைந்தவர்களுக்கு ஈரமேது?' ஆபத்து அனுபவித்து, அதில் அழுந்தியிருக்கும் எங்களுக்கு அச்சமேது? எவ்வித நிலைமையிலும் எங்கள் நிலைமை இழிந்த நிலைமையாதலால், இனி நாங்கள் இறந்தாலும் என்ன, பிழைத்தாலும் என்ன, இரண்டும் சரி. இருவிதத்தாலும் எங்கள் இடர் தொலையும். எனது ஜீவனின் காரண காரிய தாற்பரியங்களைக்குறித்து என்ன நினைக்கிறீர்? அவர்கள் கைக்குத் தப்பித்துக்கொள்ளும்படி துணிவுற்று எத்தனம் செய்வது தகுமா, தகாதா? உமது பிராணனை இரட்சிக்கும் பொருட்டு நான் இவ்விடத்திற் பாதுகாக்கப்பட்டிருந்ததாக நீர் உறுதியாய் நம்பி, சற்றுவேளைக்குமுன் உற்சாகமடைந்தீரே. அந்த நம்பிக்கை எங்கே? என்மட்டில் இனிச் சம்பவிப்பதைக்குறித்துச் சிந்திக்குமிடத்தில் ஒரு விஷயமாத்திரம் பிசகியிருப்பதாய் விளங்குகின்றது" என்று சொன்னேன். "அது என்னபிசகு!" என மாலுமி கேட்க, நான், "பிசகு இதுதான். கடலோடிகளில் மூன்று நாலுபெயர் யோக்கியரென்றும், அவர்கள் உயிரைத் தப்புவிக்கவேண்டுமென்றும் சொன்னீரே; இதுதான் எனது அபிப்பிராயத்தை முடிக்கத் தடையாகத்தோன்றும் பிசகு. அவர்கள் எல்லாரும் கலகம் செய்த துஷ்டராகிய கடலோடிகள் வகுப்பிற் சேர்ந்தவர்களானால், கடவுள்தாமே அவர்களை உமது வசம் ஒப்புவிக்கும்படி ஒன்றாகச் சேர்த்து அனுப்பியதாக நினைத்துக்கொள்வேன். இது ஒன்று நிசம். இக்கரையில் வந்திறங்கும் பிரதி மனுஷனும் நமது அடிப்படுவான். அப்புறம்

அவர்கள் நடக்கையைக் கண்டு, அவர்களைக் கொல்லினும் கொல்வோம், பிழைத்திருக்க விடினும் விடுவோம்" என்றேன்.

நான் இவ்வாக்கியங்களை முகமலர்ந்து உரக்கச் சொன்னபொழுது, மாலுமிக்குச் சோர்பு நீங்கித் தீரமுண்டானது கண்டு, உற்சாகத்துடன் எங்கள் கருமத்திற் கண்ணாயிருந்தோம். உருவினின்று ஓடம் வருவதை நாங்கள் முதலிற் கண்டவுடன், எங்கள் கைதிகளை வெவ்வேறிடங்களுக்குப் பிரித்தனுப்பி, பலமான காவலில் வைத்தோம்.

இரண்டு பெயரைக்குறித்து மாலுமிக்குச் சற்றுச் சந்தேகம் உண்டாயிருந்ததனால், அவர்களையும் விடுதலைபெற்ற மூவரில் ஒருவனையும் சுக்கிரனுடனே எனது குகைக்கு அனுப்பினேன். குகை கூப்பிடு தூரத்திற்கப்புறம் இருந்ததனால், அவர்கள் அங்கிருந்து பேசுவது கேட்கவுமாட்டாது, அவர்கள் அங்கிருப்பதை எவருங் காணவுமாட்டார்கள். குகையினின்று உபாயமாய் வெளிப்படுவார்களானால், வனத்தில் வழிபிடித்து அவர்கள் வரவுமாட்டார்கள். குகையில் அவ்விருவரையும் கட்டுண்டபடி இருத்தி, அவர்களுக்குப் போஜனபதார்த்தங்கள் கொடுத்து, அதிக்கிரமிக்காமல் அடங்கியிருப்பார்களானால், அவர்களை இரண்டொருநாளில் நிர்ப்பந்தமின்றிச் சுவாதீனமா யிருக்கவிடுவதாக வாக்குத்தத்தஞ் செய்தார்கள். ஒளித்தோட வகைசெய்வார்களானால், இரக்கமின்றி அவர்களைப் பிராணவதை செய்வதாக வற்புறுத்திச் சொன்னார்கள். அவர்கள் தங்கள் சிறையிருப்பை மனம் பதைக்காமல் பொறுமையாய்த் தாங்கிக்கொள்வதாக உண்மையாய் வாக்குத்தத்தம் செய்து, தங்களுக்குப் போஜனபதார்த்தங்கள் கொடுத்து, இரவில் தீபமேற்றுவித்து, தங் [illegible] பட்சமாய் ஆதரிக்கும் உபகாரத்தைத் தாங்கள் மறக்க [illegible] ன்று வந்தனம் சொன்னார்கள். அவர்கள் இருட் [illegible] ர்ப்பந்தப்படாதிருக்கும்படி சுக்கிரன் நாங்கள் [illegible] மெழுகுவர்த்திகளிற் சிலவற்றை அவர்களுக் [illegible] மேற்றக் கொடுத்தான். [illegible] சலில் தங்களைக் [illegible] ன்றே அவர்கள் [illegible] யிருந்தார்கள்.

மற்றக் கைதிகளுக்கு இவ்வித நிர்ப்பந்தமில்லை. இருவரை மாலுமி பூர்த்தியாய் நம்பவில்லையென்று வெளியிட்டதனுல், அவர்கள் பின்கட்டு டாருய்க் கட்டப்பட்டிருந்தது மெய்தான். மற்ற இரண்டுபெயரும் யோக்கியரென்று மாலுமி சிலாகித்துச் சொன்னுர். அன்றியும், அவர்கள் மரணபரியந்தம் எங்களை விட்டுப் பிரிவதில்லையென்று பய பக்தியாய் உறுதிமொழி சொன்னுர்கள். ஆனதுபற்றி, நான் அவர்களை எனது சேவகத்தில் அமர்த்தினேன். ஆகவே, அவர்களும், யோக்கியராகிய மூன்றுபெயரும், நாங்கள் இருவரும் சேர்ந்து, ஆக இவ்வேழுபெயரும் ஆயுதபாணிகளாயிருந்தோம். ஓடத்தில் வரும் கடலோடிகள் பதின்மரிலும் மூன்று நான்குபெயர் நிஷ்கபடிகளென்று மாலுமி சொன்னதை எண்ணி, எவ்விதத்திலும் நாங்கள் அவர்களைக் கீழ்ப்படுத்தி நிர்வகிக்கமாட்டுவோமென்று நான் உறுதியாய் நம்பியிருந்தேன்.

முந்தின ஓடம் நின்றவிடத்தில் அவர்கள் வந்து சேர்ந்தவுடன், தங்கள் ஓடத்தைக் கரைக்கு நெருக்கிச் செலுத்தி, எல்லாரு மிறங்கி, ஓடத்தை இழுத்துக் கரையேற்றியது கண்டு, சந்துஷ்டியானேன். அவர்கள் ஓடத்தைக் கரைக்குச் சற்று எட்ட நிறுத்தி, நங்கூரம் போட்டு, அதைக் காத்துக்கொள்ளும்படி ஆள்வைத்து வருவார்களானுல், நாங்கள் அதை அகப்படுத்திக்கொள்வதற் கிசையாதென்று எனக்குண்டாயிருந்த சந்தேகம் இவ்வளவில் நிவிர்த்தியாயிற்று.

கரையேறின க்ஷணமே அவர்கள் அனைவரும் மற்ற ஓடம் நின்ற விடத்திற்கு விரைந்தோடி, அதிலிருந்த உபகரணங்கள் ஒன்றுமில்லாமல் அது வெற்றோடமாயிருந்ததையும், அதனடியில் பெருந் துவாரம் தொளைக்கப்பட்டிருந்த[illegible] கண்டு, மிகவும் பிரமித்து நின்றுர்கள். அவர்களு[illegible] குறித்துப் பிரமிப்புண்டானது ஆச்சரியமல்லவே [illegible]

சற்றுநேரம் அவர்கள் இதைக்குறித்து ஆ[illegible] யில் மூழ்கி, அப்புறம் தங்கள் கூட்டாளிகள் சதத[illegible] [illegible]படி இரண்டு மூ[illegible]கமாயக் கூவினுர்கள். [illegible] குரலெ[illegible]பி உரத்த [illegible] கூவியும்,

பயனில்லா தொழிந்தது. பின்பு எல்லாரும் நெருங்கிச் சக்கர யூகமாய் நின்று, யாவரும் ஏகமாய்த் துப்பாக்கி வெடிதீர்த்தார்கள். வெடி அதிர்ச்சி எங்களுக்குக் கேட்டது. அதன் பிரதித்தொனியால் காடு செடிகள் அதிர்ந்து இரைந்தன. என்ன முயற்சி செய்தாலும், காரியமொன்றுதான்; பயனில்லை. குகையில் இருந்தவர்களுக்கு வெடி அதிர்ச்சி கேளாது. எங்கள் வசமிருந்தவர்களுக்கு நன்றாய்க் கேட்டது. கேட்டும், அவர்கள் வாய்திறக்கவும் துணியவில்லை.

இதைக்குறித்து அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டானதனால், அவர்கள் மீண்டும் ஓடத்திலேறி, உருவிற்குப் போய், முன்பு ஓடத்திற் போய்க் கரைப்பட்ட கடலோடிகள் சங்கரிக்கப்பட்டார்களென்றும், அந்தப் பேரோடத்தின் அடியில் துவாரம் இடப்பட்டதென்றும் அங்கிருந்தவர்களுக்கு அறிக்கை செய்ய நிர்ணயித்தார்கள். இதைப் பிற்பாடு அவர்கள்தாமே சொல்லக் கேட்டோம்; மேற்சொல்லியவாறே அவர்கள் தாமசமின்றி ஓடத்தைத் தள்ளி, கடலிலிறக்கி, எல்லாரும் ஏறினார்கள்.

கூட்டாளிகள் இறந்துபோனார்களென்று எண்ணி, அவர்கள் மீண்டும் உருவிற் போய்ச் சேர்ந்து பாய்தூக்கிப் பிரயாணப்படுவார்களென்றும், கைக்கொள்ளலாகுமென நம்பியிருந்த கப்பல் கைதப்பிப் போகுமென்றும் நினைத்து, மாலுமி மிகவும் ஏமாந்து தடுமாறித் திகைத்து நின்றார்; ஆனாலும், அவர்கள் ஓடமேறிப் போவதைக்குறித்து உண்டான திகைப்பும் தடுமாற்றமும் அதிசீக்கிரத்தில் ஒழிந்துபோக, அவர்கள் மீண்டும் கரையேறியது கண்டு, மாலுமிக்குப் பின்னும் அவ்வளவு திகிலுண்டாயிற்று.

அவர்கள் ஓடமேறிப் போய்ச் சிறிதுநேரம் சென்றபின், மீண்டும் எல்லாரும் அதை விட்டிறங்கி, கரையில் வருவது கண்டோம். ஓடமேறியபின், அவர்கள் தீர்க்காலோசனை செய்து, ஓடத்தில் மூன்றுபெயரை வைத்து, மற்றவர்கள் கரையேறி, தங்கள் கூட்டாளிகளைத் தேசத்தில் எங்கும் தேடிப் பார்க்கும்படி சங்கற்பஞ் செய்துவந்தார்கள்போலும்.

நாங்கள் எண்ணியிருந்ததற்கு இது மிகவும் பிரதிகூலமாய் முடிந்தது; இனிச் செய்வதென்னவென்றறியாமல் மயங்கினேம். ஓடத்தைத் தப்பவிடுவோமானால், கரையில் இறங்கிய ஏழுபெயரை அகப்படுத்துவது எங்களுக்கு அனுகூலமல்ல. ஓடத்திலிருப்பவர்கள் அதைச் செலுத்திக்கொண்டு போய், உருவிற் சேர்ந்தபின், அவர்களும், அங்கிருக்கும் மற்றவர்களும் நங்கூரம் தூக்கிப் பாய்வலித்து ஓடிப்போவார்களென்பது நிசம். அப்புறம் நாங்கள் உருவைக் கைக்கொள்வதற்குச் சமயம் முந்திப்போம்.

ஆனாலும், இனிப் பதறாமற் பொறுத்திருந்து, காரியத்தின் முடிவைக் கண்டு, சமயோசிதமாய் ஏதும் செய்வதொழிய, இதற்குபாயமில்லை. ஏழுபெயர் கரையேறி வர, ஓடத்தில் இருந்த மூன்றுபெயர் அதைக் கரைக்கு எட்டாக்கையிற் செலுத்திக்கொண்டு போய் நங்கூரம் போட்டு, மற்றவர்கள் வரவைக் காத்திருந்தார்கள். ஆனதுபற்றி, நெருங்கிப்போய் ஓடத்தில் இருப்பவர்களை அகப்படுத்துவது அசாத்தியமாயிருந்தது.

கரையேறின பெயர்கள் சிதறாமல் நெருங்கிச் சிறு மலைச் சிகரத்தின் பக்கத்திற்கு நேர்முகமாய் வந்தார்கள். அம்மலையின் கீழேதான் எனது வாசஸ்தானமிருந்தது. அவர்கள் வருவதை நாங்கள் பரிஷ்காரமாய்க் கண்டோம். அவர்களோ, எங்களைக் காண்பதற்கிசையாது. நாங்கள் அவர்களைச் சுட்டு விழுத்தும்படி கிட்டி வருவார்களானால், அல்லது முட்டின்றி வெளிப்படும்படி எட்டிப் போவார்களானால், எங்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும்.

சிறுமலைச் சிகரத்தின் பக்கத்தில் நின்று பார்த்தால், வடகீழ்த்திசையில் தரை மிகவும் தாழ்ந்திருக்கின்ற பள்ளமும் வனமும் நெடுந்தூரமட்டும் தெரியும். அவர்கள் மலைச்சிகரத்தின் பக்கத்திற் சேர்ந்தவுடன், தொண்டை வலிக்குமளவும் ஊத்துக் கூவினார்கள். கடற்கரைக்கு எட்டாக்கையிற் போகவாயினும், ஒருவரைவிட் டொருவர் விலகவாயினும் அவர்கள் மனந் துணியவில்லைப்போலும். தங்கள் காரியத்தைக்குறித்துத் தீர்க்காலோசனை செய்யும்படி ஒரு மர நிழ

லில் உட்கார்ந்திருந்தார்கள். முன்பு வனத்திற் புகுந்த கடலோடிகளைப்போல் இவர்களும் மெய்மறந்து தூங்குவார்களானால், இவர்களாலேயே எங்கள் கருமம் நிறைவேறிற்றெனத் தகும்; ஆனாலும், அபாயம் நேரிடுமென்று மிகவும் அச்சமுற்றிருந்த அவர்கள் நித்திரை செய்யத் துணியவில்லை; தங்களுக்கு நேரிடும் அபாயம் இன்னதென்று அறியவுமில்லை.

மேற்சொல்லியபடி அவர்கள் உட்கார்ந்து யோசனை செய்வதைப்பற்றி, மாலுமி என்னை நோக்கி: "ஐயா, கூட்டாளிகள் சத்தங்கேட்டு வரும்படி அவர்கள் இன்னும் ஒரு முறை யாவரும் ஏகமாய்த் துப்பாக்கி வெடிதீர்ப்பார்கள். வெடிதீரும் சமயத்தில் துரிதமாய்ப் பாய்ந்தோடி அவர்களை எதிர்ப்போமானால், சந்தேகமின்றித் தலைவணங்கி நமக்கு அடங்குவார்கள். ஆகவே, இரத்தம் சிந்தாமல் நாம் அவர்களை அகப்படுத்திக்கொள்வோம்" எனத் தகுதியான யுத்தி சொன்னார். அவர்கள் மறுபடி மருந்து கெட்டிக்குமுன் நாங்கள் நெருங்கி நின்று விரைந்தோடி அவர்களை அகப்படுத்திக்கொள்வோமானால், மாலுமி சொன்ன யுத்தி ஏற்கும்.

அவர் உத்தேசித்தபடி சம்பவிக்கவில்லை. இனிச் செய்யும் வகை இன்னதென்று தீர்மானிக்காமல் நெடுநேரமட்டும் அடங்கியிருந்தோம். கடைசியில் அஸ்தமனபரியந்தம் நாம் ஒன்றும் செய்யக்கூடாதென்றும், அஸ்தமித்தபின் அவர்கள் ஓடத்திற்குத் திரும்பாதிருந்தால், நாம் அவர்கள் நிற்குமிடத்திற்கும் கடற்கரைக்கும் இடையில் வழிபிடித்துப் போய், ஓடத்தில் இருப்பவர்களைக் கரைக்கு வரும்படி தூண்டுவதற்கு ஏதாயினும் தந்திர உபாயம் செய்யலாகுமென்றும் எனது கருத்தை என் கூட்டாளிகளுக்குச் சொன்னேன்.

அவர்கள் அவ்விடம்விட்டுப் பெயராததைக்குறித்து எங்களுக்கு மிகுந்த பதைப்பும் விசனமும் உண்டாயிருந்தும், வெகுநேரமட்டும் பொறுத்திருந்தோம். தீர்க்காலோசனை செய்தபின், அவர்கள் அனைவரும் எழுந்து கடற்கரைக்கு நேர்முகமாய்ப் போவது கண்டோம். அவ்விடத்தில் தமக்குப் பிராணபாயம் உண்டாமென்றஞ்சித் திகைத்து, கூட்டாளிகள் இறந்தார்களென்றெண்ணித் திரும்பிப் போய் உரு

விலேறி, தாம் கருதிய தேசத்திற்குப் பிரயாணம்போக அவர்கள் நிர்ணயித்ததாய்க் காணப்படுகின்றது.

கரைக்கு நேர்முகமாய் அவர்கள் போவது கண்டவுடன், கூட்டாளிகளைத் தேடிப் பார்க்கத் தொடங்கிய முயற்சியை நிறுத்திவிட்டு, மரக்கலமேறிப் பிரயாணப்படக் கருதிப்போகிறார்களென்று எண்ணினேன். வாஸ்தவமாய் அதுவே அவர்கள் கருத்து. என் கருத்தை நான் மாலுமிக்குச் சொன்னவுடன், அவர் அப்படியாகிறபட்சத்தில் தமக்கு வரும் பிரதிகூலத்தை நினைத்து, மனத்தளர்ச்சி யடைந்தார். அவர்களைத் திரும்பவும் இங்கே வரும்படி செய்தற்குரிய உபாயம் ஒன்று க்ஷணமே என் கருத்திற் பிறந்தது. அந்த உபாயத்தால் எனது கருமம் அணுவுந் தவறாமற் பலித்தது.

மேற்கேயுள்ள சிறிய நீரோடையைத் தாண்டி, முன்பு சுக்கிரன் மிலேச்சர் வசத்தினின்று விடுதலை பெற்றபொழுது, அம்மிலேச்ச ரிறங்கிய கரைக்கு நேரே போகவும், அரைமைல் தூரத்திலுள்ள சிறிய மேட்டு நிலத்திற் சேர்ந்தவுடன் கூடிய வரையிற் குரலெழுப்பிக் கூவி, அந்தச் சத்தம் கடலோடிகள் செவிப்பட்டதென்று அறியுமளவும் அங்கே தங்கி நிற்கவும், சத்தங்கேட்டுக் கடலோடிகள் அதற்குத்தரும்சொல்லும் பாவனையாய்க் கூவும் ஒலி செவிப்படும் க்ஷணமே பின்னும் ஒருதரம் கூச்சல் போடவும், அதன்மேல் கண்ணுக்கு எதிர்ப்படாமல் ஒதுங்கி நின்று, அவர்கள் சத்தமிடும் சமயந்தோறும் அவர்களைத் தீவின் அகத்தில் எட்டாக்கையில் வனத்திற்குள் சூதாய் இழுத்துக்கொள்ளும்பொருட்டுப் பிரதி சத்தமிடவும், அப்புறம் நான் சொல்லும் மார்க்கமாய் என்னிடத்திற்கு வளைந்தோடி வரவும்வேண்டுமென்று திட்டஞ்செய்து, சுக்கிரனையும் உபமாலுமியையும் அனுப்பினேன்.

கடலோடிகள் ஓடத்தில் ஏறவும், சுக்கிரனும் உபமாலுமியும் ஓஹோவென உரக்கக் கூவினார்கள். அந்த க்ஷணமே அதைக்கேட்ட கடலோடிகள் தாமும் கூவிக்கொண்டு, சத்தம் கேட்ட இடக்குறிப்பிற்கு எதிர்முகமாய் மேற்கே கடற்கரைவழியாய் விரைந்தோட, வழியில் நீரோடை எதிர்ப்பட்டது. பெருக்குவேளையா யிருந்ததனால், ஓடையைத் தாண்

டிச் செல்லக்கூடாததுபற்றிப் பின்னும் கூவினார்கள். ஓடத்தைக் கொண்டுவந்து, தங்களை ஏற்றிக்கொண்டு போகும்படி அப்படிச் செய்தார்களென் றெண்ணினேன்.

அவர்கள் ஓடமேறி, அந்த நீர்க்குடாவில் நெடுந்தூரம் போய், அதன் ஒரு கரை சேர்ந்தவுடன், முன்பு ஓடத்திலிருந்த ஒருவனைத் தங்களுடன் இறக்கிவிட்டு, மற்ற இருவரும் ஓடத்திலிருக்க, கடற்கரையிலுள்ள ஒரு சிறு மரத்தின் அடிக்கட்டையில் ஓடத்தைக் கட்டினது கண்டேன்.

இப்படி ஆகவேண்டுமென்றே நான் விரும்பியிருந்தேன். சுக்கிரனையும் உபமாலுமியையும் அவர்கள் கருமத்திற் கண்ணுயிருக்க விட்டு, மற்றவர்களை என்னுடன் இட்டுக்கொண்டு போய், ஓடக்காரர் கண்காணுமல் நீரோடையைத் தாண்டி, அவ்விருவரையும் நினையாதவேளையில் அமர்த்திக்கொண்டோம். ஒருவன் கரையிற் படுத்திருந்தான். மற்றவன் ஓடத்திலிருந்தான். கரையிற் படுத்திருந்தவன் பாதி உறக்கமும், பாதி விழிப்புமாயிருந்ததனால், எங்களைக் கண்டு திடீரென வெழுந்து, ஓட எத்தனிக்கும்சமயத்தில், எங்களுக்கு முந்திச் சென்ற மாலுமி இளஞ்சிங்கம்போல் அவன்மேற் பாய்ந்து, காலால் உதைத்து விழுத்தி, ஓடத்தில் இருந்தவனைப் பெயர் சொல்லி யழைத்து, "தலைவணங்கி நிற்பாயானால் தப்புவாய், அல்லாவிடில் நீ இறந்தவனென்றறி" என வற்புறுத்திச் சொன்னார்.

தன் கூட்டாளி காலால் உதைபட்டு விழுந்திருப்பதையும், ஆளுதவியின்றித் தனித்திருக்கும் தன்னை ஐந்துபெயர் வளைந்து அச்சுறுத்தி நிற்பதையும் கண்ணுக்கெதிரே கண்ட அந்தக் கடலோடியைத் தலைவணங்கும்படி உடன்படுத்துவதற்கு அவனுடன் வாதாடவேண்டுமா? அன்றியும், கடலோடிகளில் மூன்றுபெயர் கலகம் செய்வதற்கு மனப்பூர்வமாய் உடன்படவில்லையென்று இதற்குமுன் ஓரிடத்திற் குறிப்பிக்கப்பட்டதல்லவா? இவன் அம்மூவரில் ஒருவன்; ஆனதுகொண்டு, அவன் எங்கள் அடிப்படுவதற்கன்றி, பிற்பாடு நிஷ்கபடமாய் எங்களுடன் சேர்வதற்கும் எளிதில் உடன்பட்டான்.

இச்சங்கதிகள் நடக்கும்சமயத்தில் சுக்கிரனும், உபமாலுமியும் தங்கள் கருமத்தைச் சிதறவிடாமல் நிறைவேற்றினார்கள். அவர்கள் ஓஹோவென்று கூவக் கூவ, கடலோடிகளும் சத்தங்கேட்டுக் கூவித் தொடர்ந்ததனால், மாறி மாறி, எத்தனையோ மலைகளும் வனங்களும் தாண்டி, கை கால் அயர்ந்து மனம் சலிக்கிறவளாயில், அவர்களை நடுக்காட்டில் கொண்டுவந்து சேர்த்தார்கள். அவ்விடத்தினின்று சூரியன் அஸ்தமிக்குமுன் கடலோடிகள் ஓடக் கரைக்குத் திரும்பிப்போவது கஷ்டமென்று நிசமாய் அறிந்து, சுக்கிரனும் உபமாலுமியும் அவர்களை அங்கே நிற்கவிட்டு, மிகவும் இளைப்புற்று எங்களிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

இனிப் பொழுதுபட்டு இருளுமட்டும் அவர்கள் கண் காணமல் காவல் செய்துகொண்டு நின்று, அப்புறம் அவர்களைத் தப்பவிடாமல் துடுக்காய்ப் பாய்ந்து அமர்த்திக்கொள்வதேயொழிய, நாம் செய்யவேண்டுவது மற்றென்ன?

சுக்கிரன் என்னிடத்திற்குத் திரும்பி வந்தபின், அவர்கள் ஓடம் நின்ற இடத்திற்போய்ச் சேர்வதற்கு வெகு நாழிகை சென்றது. அவர்களில் முந்திச் சென்றவர்கள் ஓடக்கரை சேர நெடுநேரத்திற்குமுன் தம்மைத் தொடர்ந்தவர்களை நெருங்கி வரும்படி உரக்கக் கூவி அழைத்ததும், பிந்தினவர்கள் கால் வலித்து இளைப்புற்றதனால், கடுக நடக்கத் தமக்கு வசமில்லையென்று முறையிட்டு உத்தாம் சொன்னதும் கேட்டுக்கொண்டிருந்தோம். இது எங்கள் செவிக்கு மங்கல வர்த்தமானமாயிருந்தது.

கடைசியில் அவர்கள் ஓடக்கரையில் வந்து சேர்ந்தார்கள். பெருகிய கடல்நீர் வற்ற, ஓடம் தரையிற் பொறுத்து நின்றதையும், ஓடக்காரர் இருவர் அங்கில்லாதிருப்பதையும் கண்டு, அவர்கள் மனம் தடுமாறியது இவ்வளவென்று சொல்லத் தொலையாது; அவர்கள் பதறிப் பரிதபித்து, மந்திரசித்தியுள்ள மாயத்தீவில் வந்து அகப்பட்டோமென்றும், அங்கே குடிகள் இருந்தால் யாவரும் சங்கரிக்கப்படுவோமென்றும், குடிகள் இல்லாவிடில் பைசாசங்களாவது, அசரீரிகளான வனதேவதைகளாவது அவ்விடத்தில் சஞ்சரிக்குமென்றும்,

அவைகள் அனைவரையும் பிடித்துக் கொண்டுபோய்ப் பட்சிக்குமென்றும் ஒருவருக்கொருவர் சொன்ன சத்தம் எங்கள் செவிப்பட்டது.

அவர்கள் பின்னும் கூவி, தங்கள் கூட்டாளிகள் இருவரையும் அடுத்தடுத்துப் பலமுறை பெயர் சொல்லிக் கூப்பிட்டும், ஏனென்பார் எவருமில்லை. சற்றுச் சென்று, அவர்கள் நம்பிக்கையற்றுத் துயரம் மிஞ்சினவர்கள்போலக் கைகளைப் பிசைந்து முறுக்கிக்கொண்டு, இலக்கின்றி ஓடித்திரிவதும், திரும்பி ஓடத்திலேறி உட்கார்ந்து இளைப்பாறுவதும், பிறகு அதைவிட்டிறங்கி உலாவித் திரிவதுமாய் இருந்தார்கள். இது எல்லாம் மாலை வெளிச்சத்திற் கண்டோம்.

எனது கூட்டாளிகள் இனித் தாமதித்து நிற்காமல் என்னிடத்திற் செலவுபெற்று, அவர்களைப் பாய்ந்து விழுந்து அடிக்கப் பதைத்தார்கள்; ஆனாலும், கூடியவரையில் அவர்களிற் பெரும்பாலாரைச் சங்கரிக்காமல் அகப்படுத்திக்கொள்வதற்கு இஷ்டமாயிருந்தேன். முக்கியமாய்க் கடலோடிகள் ஆயுதபாணிகளாயிருந்தது அறிந்ததனால், நெருங்கிய போரில் எங்கள் பட்சத்தார் எவராயர்வது வியர்த்தமாய் மடிந்துபோக விடுவதற்கு என் மன மிணங்கவில்லை. அவர்கள் கூட்டம் கலைந்து சிதறுமளவும் பொறுத்திருந்து பார்க்கத் தீர்மானித்தேன்; ஆதலால், இலக்குத் தவறுதிருக்கும்பொருட்டு நான் என் கூட்டாளிகளைப் பின்னும் சமீபத்திற் பதிவிருத்தி, சுக்கிரனையும் மாலுமியையும் குழந்தைகள் தவழ்வதுபோலக் கைகால் மடக்கிக் கடலோடிகள் காணுதபடி தரைமட்டமாய்ப் பதிந்து, கூடியவரையில் நெருங்கிப்போகுமுன் சுடவேண்டாமென்று திட்டம்பண்ணினேன்.

அவர்கள் சிறிதுநேரமட்டும் தவழ்ந்துபோகையில், கலகத் தலைவனும், இப்பொழுது மற்றவர்களைப்பார்க்கிலும் அதிகமாய் மனம் தளர்ந்து நொந்து சலிப்புற்றவனுய் விளங்கியவனுமாகிய மரக்கல உபகரண விசாரணைக்காரன் கடலோடிகள் இருவருடன் மாலுமிக்கும் சுக்கிரனுக்கும் எதிரே நடந்துபோனுன். கலகத் துரோகிகளிற் பிரதானி இவ்வாறு தன் கைவசப்படுதற்கு எத்தனமாயிருந்ததைக் கண்டவுடன்

மாலுமிக்கு மிகுந்த பதைப்புண்டாயிற்று. இலக்குத் தவ ருமற் குண்டுபாயத்தக்க சமீபத்தில் அவன் வருமளவும் மனம் பொறுக்கவில்லை. சுக்கிரனும் மாலுமியும் மேற்படி கலகத்தலைவன் பேசின சத்தம் கேட்டதொழிய, மிகச் சமீபத்தில் வந்ததை இன்னும் காணவில்லை. பின்னும் அதிக சமீபத்தில் வந்தபின், இருவரும் துரிதமாய் எழுந்து நின்று அவர்களை இலக்காய் வைத்து வெடிதீர்த்தார்கள்.

மரக்கல உபகரண விசாரணை உத்தியோகஸ்தன் நின்ற இடத்திலேயே பிரேதமாய் விழுந்தான். மற்றவர்களில் ஒருவன் உடலிற் குண்டு பாய்ந்தது; அவன் பக்கத்தில் விழுந்து, குறைப்பிராணியாய்க் கிடந்து, இரண்டொரு மணிநேரம் சென்று இறந்தான். மூன்ருவது மனுஷன் உயிர் தப்பிப் பிழைக்க ஓட்டம்பிடித்தான்.

வெடியதிர்ச்சி கேட்டவுடன், நான் எனது சைந்நியங்களோடு அவ்விடத்திற்குப் போனேன். எங்கள் பட்டாளத்தார் தொகை எட்டு; நான் சேனாபதி; சுக்கிரன் பிரதி சேனாபதி; மாலுமி, அவருடன் வந்த இருவர், சண்டையில் நாங்கள் சிறைபிடித்த மூன்று பெயர். இம்மூவரையும் நம்பி, இவர்களிடத்திலும் படைக்கலம் கொடுத்திருந்தோம்.

நாங்கள் மேற்படி கடலோடிகள் நிற்குமிடத்தில் இருண்டபின் சேர்ந்ததனால், எங்கள் தொகை விவரம் அவர்கள் அறியார்கள். அவர்கள் ஓடத்தில் இருக்கும்படி நிறுத்திப் போன ஒருவன் இப்பொழுது எங்கள் பட்சத்தில் சேர்ந்திருந்தானே. அவனைக்கொண்டு நான் அவர்களைப் பெயர் பெயராய் அழைப்பித்து, அவர்களுடன் சம்பாஷிக்கவும், அவர்கள் சமாதானத்திற்குடன்படுவார்களாவென்று அறிந்து அறிக்கைசெய்யவும் சொன்னேன். எங்கள் இஷ்டத்தின்படி அவர்கள் சமாதானத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர்கள் நிலைமை மிகப் பரிதாபமாயிருந்ததனால், அவர்கள் கைக்கொண்ட ஆயுதங்களை ஒப்புவிக்க உடன்படுவார்களென்று நினைப்பது விபரீதமல்லவே. முதலில் ருபின்ஸன் என்பவன் ஒருவனை: "டாம் ஸ்மித்! டாம் ஸ்மித்!" எனப் பெயர் சொல்லிக் கூப்பிட, அவன் குரற் குறிப்பறிந்து,

"அது ஆர்? ரூபின்ஸனு?" என்று கேட்டான். அப்பொழுது இவன், "ஆம், ஆம்; டாம் ஸ்மித், கடவுள் ஆணைப்படி சொல்லுகிறேன், உனது படைக்கலங்களைக் கைவிட்டு அடங்கி நில்; அடங்காயானால், இந்த க்ஷணமே நீங்கள் யாவரும் இறந்தீர்கள்" என உத்தரம் சொன்னான்.

"நாங்கள் எவர்களுக்கு அடங்கவேண்டும்? அவர்கள் எங்கே?" என ஸ்மித் பின்னும் கேட்டான். அதற்கு ரூபின்ஸன், "இங்கேதான் இருக்கிறார்கள்; நமது மாலுமியும், பின்னும் ஐம்பதுபெயரும் இந்த இரண்டுமணி நேரமளவும் உங்களைத் தொடர்ந்து திரிந்தார்கள்; மரக்கல உபகரண விசாரணை உத்தியோகஸ்தன் சங்கரிக்கப்பட்டான்; வில் ப்ரை காயப்பட்டான், நான் சிறைப்பட்டேன்; நீங்கள் வணங்கி வழிக்கு வாராதிருப்பீர்களானுல், யாவருக்கும் மரணமே கதி" எனக் கூறினுன்.

அதுகேட்டு, டாம் ஸ்மித், "அவர்கள் எங்கள்மீதிரங்கி, எங்களைத் தண்டியாமல் விடுவார்களா? விடுவார்களானுல், வழிக்கு வருவோம்" என ரூபின்ஸன், "நீங்கள் வணங்கி வழிக்கு வருவதாக வாக்குத்தத்தம் செய்வீர்களானுல், நான் போய்க் கேட்டுவருவேன்" என்று சொல்லி, மாலுமியைக் கேட்க, மாலுமி தாமே "ஓஹோ ஸ்மித், என் குரற் குறிப்பு அறிவாயே; இந்த க்ஷணமே நீங்கள் கைக்கொண்ட படைக்கலங்களைத் தரையில் வைத்துவிட்டுக் கீழ்ப்படுவீர்களானுல், வில் அத்கின்ஸ் ஒருவன் தவிர, மற்றெல்லாரும் பிழைத்திருப்பீர்கள்" எனக் கூவிச் சொன்னுர்.

அதுகேட்டவுடன் வில் அத்கின்ஸ் என்பவன் "துரையே மாலுமி! கடவுள் நிமித்தமாக எனக்கு மன்னிப்புக்கொடும்! நான் என்ன துரோகம் செய்தேன்? என்னைப்போல் அவர்களும் அதிக்கிரமிகள்தானே" என்று ஓலமிட்டான். அவன் சொன்னது எதார்த்தமல்ல; கலகம் தொடங்கினபொழுது, வில் அத்கின்ஸ்தான் முதலில் மாலுமியைப் பிடித்துக் கைகளைக் கட்டி, அபவாதம் சொல்லி வைது, துராகிர்தம் செய்தவன். "உனக்குச் சங்கேதம் ஒன்றுமில்லை; படைக்கலங்களை நீ வைத்துவிடவேண்டும்; வேந்தன் மனது இரங்கிவிட்டால்,

தப்புவாய்" என மாலுமி அவனுக்குச் சொன்னார். அவர் வேந்தன் என்றது என்னை; அவர்கள் எல்லாரும் என்னை வேந்தனென்று அழைத்தார்கள்.

கதையை வளர்க்காமல் சுருக்கிச் சொல்லுகிறேன். அவர்கள் அனைவரும் படைக்கலங்களை வைத்துவிட்டு, தங்களுக்குப் பிராணதத்தம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்களுடன் சம்பாஷித்த மனுஷனையும், பின்னும் இரண்டுபெயரையும் அனுப்பி, அவர்கள் எல்லாரையும் பந்தனம் செய்வித்தேன். மேலே ஐம்பதுபெயரென்று குறிப்பித்த எனது திரண்ட சேனுவீரர் தொகை கணக்கிட்டுப் பார்த்தால், மேற்படி மூன்றுபெயருடன் ஆக எட்டு. இவ்வெட்டு ராணுவவீரரும் கிட்டப் போய், அவர்கள் யாவரையும், அவர்கள் ஓடத்தையும் கைக்கொண்டார்கள். நானும் வேறொருவனும்மாத்திரம் ராஜ தர்ம காரணார்த்தமாய் அவர்கள் கண்ணுக்கெதிர்ப்படாமல் நின்றோம்.

அப்புறம் ஓடத்தைப் பழுதுபார்த்துச் சீர்ப்படுத்துவதும், உருவைப் பிடிக்க யுத்தி செய்வதுமே எங்கள் வேலை. இப்பொழுது அவர்களுடன் சம்பாஷிப்பதற்கு மாலுமிக்கு அவகாசமிருந்ததனால், அவர்கள் தனக்குச் செய்த அபகாரங்களையும், துஷ்ட கிருத்தியங்களையும், அவர்கள் நினைத்த துரோக சிந்தனைகளையும் எடுத்துக்காட்டி, வாக்குக்கண்டனம் செய்ததுமன்றி, அவர்கள் செய்த தீவினையினால் கடைசியில் அவர்களுக்கு ஆபத்தும் கிலேசமும் சந்தேகமின்றி யுண்டாமென்றும், ஒருவேளை தூக்குமரத்தில் பிராணதண்டனைக் குட்படுவார்களென்றும் வற்புறுத்திச் சொன்னார்.

அவர்கள் யாவரும் தங்கள் குற்றத்தை நினைந்து துக்கிப்பவர்கள்போலக் காணப்பட்டதுமன்றி, தங்களை மரணத்திற்குத் தப்புவிக்கும்படி மிக வருந்தி இரந்து கேட்டார்கள். அதற்கு மாலுமி "நீங்கள் எனது சிறைகளல்ல; இத்தீவின் அதிபதியுடைய சிறைகள்; நீங்கள் இத்தீவின் கரையில் என்னை இறக்கிவிட்டபொழுது, இது நிர்மானுஷியமான பாழ்ந்தீவென்று நினைத்தீர்கள். உங்கள் நினைவொன்றும், தெய்வ சித்தம் ஒன்றுமாய் முடிந்தன. தேவ எத்தனமாய் இத்தீவு

ஜன சஞ்சாரமுள்ளதாயிருந்தது. இதன் அதிபதி அங்கிலேய துரை; அவர் இஷ்டப்பட்டால் உங்கள் அனைவரையும் இவ்விடத்தில் தூக்கிற் போடுவிப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு; ஆனாலும், அத்கின்ஸ் ஒருவனைத்தவிர, மற்றெல்லாரையும் அவர் மனதிரங்கி மரணதண்டனைக்கு விலக்கிவிட்டதனால், நீதிப்படி தண்டனை பெறுவதற்கு அவர் அவர்களை இங்கிலாந்திற்கு அனுப்புவார்போலும். மரணத்திற்கு எத்தனிக்கும்படி அத்கின்ஸுக்குச் சொல்வதற்கு எனக்கு அதிபதி கட்டளை பிறந்தது; அவன் காலையில் தூக்கிற் போடப்படுவான்" என அவர்களுக்கு வெளியிட்டார்.

இது கற்பித்துச்சொன்ன கதையாயிருந்தும், அவர் கருதியவாறு காரியத்திற் கனுகூலமாய் முடிந்தது. அத்கின்ஸ் என்பவன் இருதாளும் மடக்கி முழந்தாளில் நின்று, வேந்தனுடன் பரிந்துபேசித் தன் பிராணனைத் தப்புவிக்கும்படி மாலுமியை வேண்டினன்; மற்றெல்லாரும் கடவுள் நிமித்தம் தங்களை இங்கிலாந்திற் கனுப்பவேண்டாமென்று கெஞ்சிக் கேட்டார்கள்.

எங்கள் சிறைமீட்சிக்காலம் வந்ததென்றும், இக்கடலோடிகளைக்கொண்டு கப்பலை மனப்பூர்வமாய் எங்கள் சுவாதீனத்தில் அகப்படுத்திக்கொள்வதற்கு இவர்களை உடன்படுத்துவது மிகவும் எளிதென்றும் இப்பொழுது எனக்குள்ளே சிந்தனையுண்டானதனால், வேந்தனாகிய எனது கோலத்தை அவர்கள் காணாதிருக்கும்படி நான் இருட்டில் ஒதுங்கி, அவர்களுக்கு மறைந்து நின்று, சற்றுத்தூரத்தில் நிற்பவன்போல மாலுமியைக் கூப்பிட்டேன். உடனே நான் திட்டம்செய்து வைத்தபடி எனது மனுஷரில் ஒருவன், "ஐயா மாலுமி, வேந்தன் உம்மை வரவழைக்கிறார்" என மாலுமிக்குச் சொல்ல, அவர் "இறைவன் ஏவற்படி ஏழையேன் இந்த க்ஷணமே வருவதாகச் சமஸ்தானத்தில் தெரியப்படுத்து" என உத்தரம் சொன்னார். அவர்கள் இதைக் கேட்டு, பின்னும் அதிசயப்பட்டார்கள்; அன்றியும் சேனாதிபதியும், ராணுவவீரர் ஐம்பது பெயரும் சமீபத்தில் வந்து சேர்ந்தார்களென்று எல்லாரும் நம்பினார்கள்.

மாலுமி என்னிடத்திற்கு வந்தபொழுது, மரக்கலத்தை அகப்படுத்தும்பொருட்டு எனக்குண்டான உபாயத்தை நான் அவருக்குச் சொல்ல, அவர் அதுவே தகுதியென்று மிகவும் உவந்து, மற்றநாட் காலையில் அதை நிறைவேற்றச் சங்கற்பஞ்செய்தார்.

ஆனாலும், இந்த உபாயத்தை மிகத் தந்திரமாய் நிறைவேற்றவும், தவறாமல் சித்திபெறவும் தக்கதாக, நாங்கள் கைதிகளை இரண்டு வகுப்பினராய்ப் பிரித்து வைக்கவேண்டும். நீர் போய் அத்கின்ஸையும், அவர்களில் அதிக துஷ்டராகிய பின்னும் இருவரையும் பிடித்துப் பின்கட்டுக் கட்டி, மற்றக் கைதிகள் இருக்கும் குகைக்கனுப்பவேண்டும் என்றேன். மேற்படி மனுஷர் சுக்கிரனிடத்திலும், மாலுமியுடன் கரையில் வந்து இறங்கிய மற்ற இரண்டுபெயரிடத்திலும் ஒப்புவிக்கப்பட்டார்கள்.

அவர்கள் அம்மூவரையும் சிறைச்சாலைக் குகையிற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்; முக்கியமாய்க் கஷ்டதசையடைந்து மனம் தடுமாறும் அவர்களுக்கு அந்தச் சிறைச்சாலை பயங்கரமான ஸ்தானமாயிருந்தது.

மற்றவர்களை எனது பன்னசாலைக்குக் கொண்டுபோகக் கற்பித்தேன். இப்பன்னசாலையின் விவரம் முன்பு சொன்னேன். அதைச் சுற்றி வேலி அடைத்திருந்ததனாலும், அவர்கள் பின்கட்டுக் கட்டப்பட்டிருந்ததனாலும் அவ்விடம் பலமான சிறைச்சாலைக்குச் சமானமாயிருந்தது. அப்படியல்லாதிருப்பினும், அஞ்சுவதற்கு நிமித்தமில்லை. சீராய் நடப்பதாக உடன்பட்டிருந்தார்களே.

மற்றநாட் காலையில் இவர்களைக் கண்டு பேசி, இவர்கள் கருத்தைச் சோதித்தறிந்து, உருவிற்குப் போய் அதைக் கைவசப்படுத்த இவர்களை நம்பி அனுப்பலாகுமா, ஆகாதாவென்று அவர் கருத்தை எனக்கு வந்து தெரிவிக்கும்படி மாலுமியை அனுப்பினேன். மாலுமி போய், அவர்களைக் கண்டு பேசி அவர்கள் தனக்குச் செய்த தீங்கையும், இப்பொழுது அவர்கள் அடைந்த கதியையும், இந்த விவகாரத்தில் அவர்களைத் தப்பிப் பிழைத்திருக்க விடுவதாக மா

லுமி அவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்திருந்தும் இங்கிலாந்திற்கு அனுப்பப்படுவார்களானால், அவர்கள் சங்கிலியில் மாட்டித் தூக்கிற் போடப்படுவது நிசமென்பதையும், யாவரும் ஏகோபித்துக் கப்பலை அங்கிருக்கும் கடலோடிகள் வசத்தினின்று கைவசப்படுத்த உடன்படுவார்களானால், அவர்களுக்கு மன்னிப்புத்தரும்படி தாம் வேந்தனை உடன்படுத்துவார் என்பதையும் அவர்களுக்கு விரித்துரைத்தார்.

கஷ்டதசை அடைந்திருக்கும் அம்மனுஷர் மாலுமி சொல்லிய உபாயத்தைத் தடையின்றி அந்த க்ஷணமே அங்கிகரிப்பார்களென்று எந்தக் குழந்தையும் சொல்லுமே. அவர்கள் தாள்மடித்து, முழந்தாட்படியிட்டு: "இனி ஏதும் துரோகம்செய்யக் கருதுவோமானால், எங்களுக்குத் தேவ சாபம் வந்து, நாங்கள் எவரும்படாத பாடுபடுவோம். ஒரு துளி உதிரமாவது எங்கள் உடம்பில் இருக்குமளவும் நாங்கள் இனி வஞ்சனையின்றி உம்மைச் சார்ந்து நடப்போம். நீரே எங்களுக்கு உயிருதவி செய்தவரென்று எண்ணி, உமது உபகாரத்தை மறவாதிருந்து, நீர் இந்தப் பூலோகத்தில் எவ்விடத்திற்குப் போனாலும், உம்முடன் வருவோம். இறக்குமளவும் நீரே எங்கள் தந்தையென்று அறிக்கை செய்வோம்" என வாக்குத்தத்தம் பண்ணினார்கள்.

அதுகேட்டு, மாலுமி: "நல்லது, நான் போய், உங்கள் வாய்ப்பிறப்பை அதிபதிக்குத் தெரிவித்து, அதற்கு அவரை உடன்படுத்தும்படி ஏதும் பிரயத்தனம்செய்யக் கூடுமோவென்று பார்க்கவேண்டும்" என அவர்களுக்குச் சொல்லி, என்னிடத்திற்கு வந்து, அவர்கள் மனக்கருத்து இத்தன்மையாயிருக்கிறதென்று எனக்குத் தெரிவித்து, இனி அவர்கள் வாக்கும் மனமும் ஒத்து உண்மையாய் நடப்பார்களென்று தாம் ஐயந்திரிபற நம்புவதாகச் சொன்னார்.

ஆனாலும், முழுதும் அச்சமற்றிருக்கும்பொருட்டு, நீர் மீண்டும் அவர்களிடத்திற் போய், அவர்களில் ஐந்துபெயரைத் தெரிந்து, நாம் செய்யத்தொடங்கும் கருமத்தை முடிக்கப் போதுமான பெயருண்டென்று அவர்களுக்குத் தெரியக் காட்டி, அவ்வைந்துபெயரையும் உமக்குத் துணைவராக உரு

விற்குக் கொண்டுபோவதாகவும், மற்ற இருவரையும், குகைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட மூவரையும் மேற்படி இவருடைய நாணயத்திற்குப் பிணையாளிகளாய் அதிபதி தமது வசத்தில் வைத்திருப்பதாகவும், உருவைக் கைவசப்படுத்தும் கருமம் நிறைவேற்றப் போயிருக்கையில், அவர்கள் விசுவாச காதகரென்று தெரியவந்தால், பிணையிருக்கும் ஐந்து பெயரும் இத்தீவில் சங்கிலி தொடுத்துத் தூக்கிற் போடப் படுவார்கள் என்பதாகவும் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லி, மாலுமியை அனுப்பினேன்.

மாலுமி சொன்னது அவர்களுக்கு மிகக் கடுஞ்சொல்லாகக் காணப்பட்டது. தேசாதிபதி இவ்விஷயத்தில் சிந்தை வைத்து, தமது சொற்படி தவறுமல் நடப்பாரென்று அவர்கள் பூர்த்தியாய் நம்பினுர்கள்; ஆனுலும், இவ்வுடன்படிக்கையை ஒப்புக்கொள்வதன்றி, அவர்களுக்கு வேறு கதியில்லை. மேற்படி ஐந்துபெயரையும் உடன்படிக்கைப்பிரகாரம் செய்யச் சம்மதப்படுத்துவதற்கு மாலுமியன்றி, மற்றக் கைதிகளும் இது தங்கள் கருமமென்று பிரயத்தனம் பண்ணினுர்கள்.

எங்கள் ராணுவவீரர் பின் வருமாறு படையெடுத்துப் போதற்கு அணிவகுக்கப்பட்டார்கள்: 1—வது. மாலுமியும், உபமாலுமியும், பிரயாணிகனும். 2—வது. முதல் முறை வந்த கலகத் துரோகிகள் கூட்டத்தில் சிறைபிடிக்கப்பட்ட இரண்டுபெயர். அவர்கள் யோக்கியரென்று மாலுமி சொல்லக்கேட்டு, நான் அவர்களை விடுதலைசெய்து, அவர்கள் கையில் படைக்கலம் கொடுத்திருந்தேன். 3—வது. இதுவரையில் பின்கட்டுக் கட்டி எனது பன்னசாலையில் அடைத்திருந்த மற்ற இரண்டுபெயர்; இப்பொழுது மாலுமி கேட்டுக்கொண்டபடி அவர்களையும் விடுதலை செய்தேன். 4—வது. கடைசியாய் விடுதலைபெற்ற ஐந்துபெயர்; ஆகத் தொகை பன்னிரண்டு; இவர்களன்றி, குகைச் சிறைச்சாலையில் பிணையிருந்த கைதிகள் ஐந்துபெயர்.

இவர்களுடன் உருவிற்குப் படையெடுத்துப் போக உமக்கு இஷ்டமாயிருக்கிறதாவென்று மாலுமியைக் கேட்டேன்;

பின்னும் ஏழுபெயர் இங்கே தங்கியிருப்பதனாலும், அவர்களை அங்கங்கே பிரத்தியேகமாய் வைத்துக் காவல் செய்வதும், அவர்களுக்குப் போஜனபதார்த்தம் கொடுத்துக்கொண்டு வருவதும் இரண்டுபெயருக்குப் போதுமான வேலையாயிருப்பதனாலும், நானும், எனது அடியான் சுக்கிரனும் இவ்விடத்தைவிட்டு நீங்குவது தகுதியென்று நானெண்ணவில்லை.

குகையில் இருக்கும் ஐந்துபெயரையும் நன்றாய்க் காவல் செய்ய நிர்ணயித்தேன். சுக்கிரன் அன்றன்று இரண்டுமுறை போஜனமுதலிய ஆவசியகமான வஸ்துக்களை அவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து வருவான். மற்ற இரண்டுபெயரிடத்தில் போஜன பதார்த்தங்களைக் கொடுத்து, அவர்களை இங்கிருந்து பாதி வழிதூரம் அனுப்பினேன். அப்புறம் சுக்கிரன் வாங்கிக் கொண்டுபோனான்.

பிணையாளிகள் இருவர் கண்ணுக்கு எதிரில் நான் வெளிப்பட்டபொழுது, என்னுடன்கூட வந்த மாலுமி "இவர்தாம் உங்களைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி சமஸ்தானபதி ஏற்படுத்திய உத்தியோகஸ்தர். இவர் உத்தரவு செய்தாலன்றி, நீங்கள் எவ்விடத்திற்கும் போகக்கூடாதென்பதே சமஸ்தானபதியின் சித்தம். உத்தரவின்றி எவ்விடத்திற்காயினும் விலகுவீர்களானால், உங்களைக் கோட்டைக்குப் பிடித்துக் கொண்டுபோய், உங்கள் காலுக்கு விலங்கிடப்படும்" என்று அவர்களுக்கு அறிக்கை செய்தார்.

இதற்குமுன் அவர்கள் என்னைக் கண்டு, நானே சமஸ்தானபதியென்று அறியாதபடி, நான் உபாயமாய் அவர்கள் கண்ணுக்கு மறைந்திருந்ததனால், அவர்கள் இப்பொழுது என்னை வேற்று மனுஷனாக நினைத்தார்கள். நான் அவர்களுக்குச் சமஸ்தானபதியைக்குறித்தும், பட்டாளத்தாரைக் குறித்தும், கோட்டையைக்குறித்தும், பின்னும் பல விஷயங்களைக்குறித்தும் சமயமிருக்கும்பொழுது எல்லாம் விவரணமாய்ச் சொன்னேன்.

இப்பால் மாலுமி ஒரு ஓடத்தின் துவாரத்தைச் சங்கடமின்றி அடைப்பித்து, அதிலும், மற்ற ஓடத்திலும் போஜன பதார்த்தமுதலிய சமஸ்த வஸ்துக்களையும் ஏற்றுவித்து, அதில்

இன்னூர் இன்னூர் ஏறிப் போகவேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அவர் தம்முடன்வந்த பிரயாணியை ஒரு ஓடத்திற்கு மாலுமியாக வைத்து, பின்னும் நாலுபெயரை அதில் ஏறிப்போகத் திட்டம்செய்து, உபமாலுமியுடனும், மற்ற ஐந்துபெயருடனும் தாம் மற்ற ஓடத்தில் ஏறிப்போனூர். செய்யவேண்டிய கருமத்தைத் திட்டமாய்ச் சிந்தித்துச் சீர்தூக்கிச் சித்தஞ்செய்திருந்ததனூல், அவர்கள் அர்த்தராத்திரியளவில் உரு நிற்குமிடத்திற் போய்ச் சேர்ந்தார்கள். உருவிற்குக் கூப்பிடு தூரமட்டில் சேர்ந்தவுடன், மாலுமி ரூபின்ஸனைத் தூண்டிவிட்ட, அவன், உருவில் இருந்தவர்களை உரக்கக் கூவி வாழ்த்தி, மங்கலவார்த்தை சொல்லி, கரையில் இறங்கிய கடலோடிகளைத் தேடித்திரிந்து கண்டுபிடிக்க இத்தனை காலம் சென்றதென்றும், கடைசியில் அவர்களையும் ஓடத்தையும் பத்திரமாய்க் கொண்டுவருகிறேனென்றும் நெடுங்கதை சொல்லிக்கொண்டு வந்தான். அவர்கள் இப்படிக் கதைப்பராக்கில் இருக்க, அதற்குள்ளே ஓடம் உருவின் பக்கத்திற் சேர்ந்தது; சேர்ந்தவுடன், மாலுமியும் உபமாலுமியும் ஆயுதபாணிகளாய் முதல்முதல் உருவிலேறி, இரண்டாவது உபமாலுமியையும், கப்பலில் தச்சவேலை செய்யும் மேஸ்திரியையும் துப்பாக்கிகளின் அடிக்கட்டையால் அடித்து விழுத்தினூர்கள். மற்றவர்களும் நம்பிக்கைத்துரோகம் செய்யாமல் அவர்களுக்கு மனப்பூர்வமாய்த் துணைநின்றதனூல், யாவரும் ஒருகையாய்ச் சேர்ந்து, இரண்டாவது தட்டிலும், மேற்றட்டின் பின்னணியத்திலும் இருந்த கடலோடிகள் எல்லாரையும் அகப்படுத்தி, அப்புறம் கீழ்த்தட்டில் இருந்தவர்கள் வெளிப்படாதிருக்கும்படி அதன் கதவை அடைக்கத் தொடங்கினூர்கள்; மற்ற ஓடத்தில் வந்தவர்கள் அணியத்தின் வழியாய் உருவிலேறி, அதன் முன்னறையையும் மடைப்பள்ளியறைக்குப் போகும் வாசலையும் காவல் செய்து, அங்கே கண்ட மூன்று பெயரைச் சிறைபிடித்தார்கள்.

இது நிறைவேறி, மேற்றட்டில் எல்லாரும் பத்திரமாய் வந்து சேர்ந்தபின், மாலுமி உபமாலுமியையும், வேறு மூன்றுபெயரையும் பார்த்து, கலகம் செய்த துரோகிகள் தங்களுகக்கு நூதன மாலுமியாக ஏற்படுத்திய மனுஷனிருக்

கும் அறையின் கதவை நீங்கள் உடைத்து, பெயர்த்து, உட்செல்லுங்களென்று உத்தரவு செய்தார். அங்கே படுத்திருந்த துரோகியாகிய நூதன மாலுமி சத்தம் கேட்டுத் திடுக்கிட்டெழுந்து, அவனும், வேறு இரண்டு ஆடவரும், ஒரு சிறுவனும் ஆளுக்கு ஒரு துப்பாக்கி எடுத்தார்கள்; உபமாலுமி கட்டப்புரையால் கதவைக் குத்திப் பிளந்தெறிந்தபொழுது, நூதன மாலுமியும், அவனைச் சேர்ந்த ஆடவர்களும் இவர்களைக் குறிப்பாய் வைத்து வெடிதீர்க்க, உபமாலுமிக்குத் துப்பாக்கிக் குண்டு பட்டது; அவன் கையெலும்பு முறிந்து காயப்பட்டான். பின்னும் இரண்டு பெயர் காயப்பட்டார்கள். எவரும் சாகவில்லை.

உபமாலுமி தனக்குதவிசெய்ய அவ்வறைக்குள் வரும்படி மற்றவர்களைக் கூவி அழைத்து, தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் துரோகியாகிய நூதன மாலுமியின் சிரசை இலக்காய்க் குறித்து, குண்டு பிரயோகித்தான். குண்டுகள் அவன் வாய்வழியாய்ப் பாய்ந்து ஊடுருவி, ஒரு காதின் பக்கத்தில் பிடரிவழியாய் வெளிப்பட்டன. அப்புறம் அவனுக்குப் பேச்சு மூச்சு இல்லாதொழிந்தன; அதுகண்டு, மற்றவர்கள் ஆயுதம் கைவிட்டு, தலைவணங்கிக் கீழ்ப்படிந்தார்கள். அப்பால் எவருக்கும் பிராணசேதமின்றிக் கப்பல் சித்தியாய்க் கைவசமாக்கப்பட்டது.

கப்பலை இவ்வாறு கட்டிக்கொண்டவுடன் மாலுமி ஏழு பீரங்கி வெடிகள் தீர்ப்பித்து, தாம் ஜயம்பெற்ற சங்கதியை எனக்குக் குறிப்பித்தார். நானும் அவரும் ஏகோபித்துக் குறித்திருந்த ஜய சின்னம் இதுதான். இராத்திரி முன்பின் இரண்டு மணியாகிறவரையில், கரையில் விழித்துக்கொண்டிருந்த எனக்குப் பீரங்கி வெடி கேட்ட க்ஷணமே மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. இதிற் சந்தேக மில்லை.

பீரங்கி வெடி அதிர்ச்சியை மயக்கமறக் கேட்டபின், நான் படுத்துத் தூங்கினேன். அன்று பகல் முழுதும் நான் உழைத்து இளைப்புற்றிருந்ததனால், எனக்கு அயர்ந்த நித்திரை வந்தது. இவ்வாறு நித்திரை செய்யும்பொழுது, சடிதியில் துப்பாக்கி வெடியதிர்ச்சி கேட்டு, துரிதமாய்

விழித்தெழுந்திருக்கையில், எவரோ என்னை "சமஸ்தான பதி! சமஸ்தானபதி!" என்று கூப்பிட்ட சத்தம் கேட்டது. உடனே அது மாலுமி குரலென்றறிந்தேன். சிறுமலைச் சிகரத்தில் ஏறியபொழுது, அவர் அங்கே நின்று, உருவைக் காட்டி, என்னைக் கட்டித் தழுவி, "என்னைச் சிறை மீட்ட எனது பிரியநேசரே! அதோ உமது கப்பல் வந்து சேர்ந்தது, அது உமது சொத்துத்தான்; நாங்களும், அதைச் சேர்ந்த உபகரணங்கள் அனைத்தும் உமது சொத்துக்களே" என மொழிந்தார். நான் உருவைக் கண்ணெறிந்து பார்த்தேன். அது கரைக்கு அரைமைல் தூரத்திற்குச் சற்று அப்புறத்தில் நங்கூரம்போட்டு நின்றது. மாலுமி முதலானவர்கள் அதைக் கைவசமாக்கிக்கொண்டவுடன் நங்கூரம் தூக்கி, வளக்காற்று வீசியதனால், பாய்வலித்துச் செலுத்தி, ஒரு சிறிய நீரோடையின் முகத்துவாரத்திற்குச் சமீபத்தில் கொண்டுவந்து சேர்த்து நங்கூரம் போட்டார்கள். அப்பொழுது கடற்பெருக்கு வேளையானதுபற்றி, மாலுமி சிற்றோடமேறி, நான் ஆதியில் எனது தெப்பங்களைக் கரையேற்றினவிடத்திற்குச் சமீபத்தில் வந்து இறங்கினார். அவ்விடம் என் வாசற்படியில் இருக்கின்றதெனினும் தகும்.

உருவைக் கண்டவுடன் எனக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாக, நான் மெய்மறந்து சோர்ந்து விழுதற்கு எத்தனமாயிருந்தேன். என் சிறைமீட்சி எனது கைக்குள்ளே திருட்டாந்தமாய் விளங்கியதையும், சகல சாதனங்களும் எளிதாய் அனுகூலப்பட்டதையும், இஷ்டமான எவ்விடத்திற்கும் என்னை ஏற்றிக்கொண்டுபோதற்குப் பெருங் கப்பலொன்று எத்தனமாய் நின்றதையும் கண்டேனே. கண்டு, சிறிது நேரமட்டும் ஒரு சொல்லாவது மாலுமிக்கு உத்தரம் சொல்வதற்கு என்னால் ஆகவில்லை. அவர் என்னைப் பிடித்துக்கொள்ள, நான் அவர்மேல் சார்ந்துகொண்டு நின்றேன். அந்த ஆதரவு இல்லாதிருந்தால், தரையில் விழுந்துபோவேன்.

மாலுமி எனது பிரமையைக் கண்டு, எனக்கென்று கொண்டுவந்து அங்கி உறைக்குள் வைத்திருந்த வாசனையூட்டிய தீம்பானப் புட்டியை எடுத்து, ஒரு திராம் குடிக்

கக் கொடுத்தார். அதைப் பருகியபின், தரையில் உட்கார்ந்தேன். உடனே எனக்கு அறிவு தெளிந்தும், நெடுநேரம் செல்லுகிறவரையில், நான் அவருடன் பேசக் கூடாதிருந்தேன்.

அச்சமயத்தில் என்னைப்போல், எனது பிரிய நேசராகிய மாலுமியும் பரவசமாய் இருந்தார்; ஆனாலும், என்னைப்போல் அவருக்கு ஆச்சரியம் மிஞ்சவில்லை. அவர் என்னைத் தேற்றவும், எனது அறிவைத் தெளிவிக்கவும் எத்தனையோ ஆசை வார்த்தைகள் சொன்னார். என்னுள்ளத்தில் சடிதியில் ஆனந்தம் பிரவாகித்ததனால், எனது அந்தக்கரணங்கள் தலைதடுமாறிப்போயின. கடைசியில் உள்ளம் நிறைந்த ஆனந்தப் பிரவாகமானது கண்ணீர் அருவியாகப் பெருகியதனால், சற்றுச் சென்று பேசுவதற்கு எனக்கு நாவெழுந்தது.

அப்புறம் அவர் செய்தபடி நானும் அவரை எனது மீட்பரென்று கையால் அணைத்துத் தழுவி, நாங்கள் இருவரும் சந்தோஷம் கொண்டாடினோம். நீர் என்னைச் சிறை மீட்கும்படி கடவுள் அனுப்பிய புண்ணிய புருஷரென்று நான் உம்மை நன்கு மதித்திருக்கிறேனென்றும், நடந்த சங்கதிகள் எல்லாம் அதிசயத்தொடராக விளங்கினவென்றும், இப்பெயர்ப்பட்ட அதிசய சங்கதிகள் கடவுள் தமது அந்தரங்கமான திருக்கரத்தில் செங்கோல் ஓச்சி, இப்பூச்சக்கரத்தில் ராச்சியபாரந் தாங்குவதைக்குறித்து நமக்குப் பகர்ந்த சாட்சிகளென்றும், சர்வ சக்தராகிய கடவுளுடைய நேத்திரங்கள் பூலோகத்தில் அதிதூரமாயிருக்கும் கோணங்களில் நடக்கும் சங்கதிகளை நுட்பமாய்க் கண்டறிந்து, அவர் திருவுள்ளம் இரங்கும்பொழுது ஆபத்து அனுபவிப்பவர்களுக்கு உதவியனுப்பக் கூடுமென்பதற்குத் திருஷ்டாந்தமென்றும் நான் அவருக்குச் சொன்னேன்.

கடவுள் செய்த உபகாரத்தை நினைத்து, உள்ளங் களிகூர்ந்து, நான் அவரைத் துதித்து வணங்க மறந்துபோகவில்லை. அவர் இப்பாழ் வனாந்தரத்தில் ஆதரவற்றிருந்த எனக்கு ஆகாரமுதலிய சமஸ்த சுகானுபவ ஏதுக்களையும்

அற்புத ரூபமாய் அனுக்கிரகம் செய்தவர். அன்றியும், நமக்குக் கிட்டும் சகாயம் அனைத்திற்கும் அவரே மூலமென்று அறிக்கை செய்யவேண்டும். இப்பெயர்ப்பட்ட அதிசய ஜீவகாருண்யமுள்ள கடவுளை எவரது உள்ளம் மகிழ்ந்து வாழ்த்திக் கீர்த்தனம் செய்யாதிருக்கும்?

சற்றுவேளை நாங்கள் சம்பாஷித்தபின், இவ்வளவுகாலம் தம்மைக் கீழ்ப்படுத்தியிருந்த கலகத் துரோகிகள் உருவில் சூறையாடிவிட்ட சில போஜன பதார்த்தமுதலியவைகளை எனக்குக் கொடுக்கக் கொண்டுவந்திருப்பதாக மாலுமி சொன்னார். பின்பு அவர் ஓடத்திலிருந்தவர்களைச் சமஸ்தானபதிக்காக ஏற்றிக்கொண்டுவந்த வஸ்துக்களை இங்கெடுத்துவாருங்களென்று உரக்கச் சொன்னார். நான் அவர்களுடன் பிரயாணப்பட்டுப் போகவல்ல, இன்னும் இத்தீவிலேயே சஞ்சரிக்க எண்ணியிருந்தவன்போலும், என்னை விட்டுப் பிரிந்து அவர்கள் போக இருந்தவர்கள்போலும் இவ்வஸ்துக்கள் எனக்குக் காணிக்கையாய்க் கொண்டுவரப்பட்ட பாவனையாயிருந்தன.

மாலுமி கொண்டுவந்த வஸ்துக்களின் விவரம்:—உசிதமான வாசனை ஊட்டிய தீம்பானப் புட்டிகள் நிறைந்த பீப்பா ஒன்று; மெடீரா திராட்சாசபானப் பெரும் புட்டிகள் ஆறு; ஒவ்வொரு புட்டி அரைக்கலன் கொள்ளும்; நாணயமான புகையிலை இரண்டு ருத்தல்; உருவிலிருந்த கோ மாமிசம் பன்னிரண்டு பெருந்துண்டுகள்; பன்றி இறைச்சித் துண்டுகள் ஆறு; பயறு ஒரு பை; பிஸ்கிட் ரொட்டி முன்பின் நூற்றுப் பன்னிரண்டு ருத்தல்.

மேலும், ஒரு பெட்டி சர்க்கரை, ஒரு பெட்டி மா, ஒரு பை நிறைய எலுமிச்சங்காய், எலுமிச்சம் பழ ரசம் இரண்டு புட்டி, பின்னும் திரளான வஸ்துக்களை அவர் கொண்டுவந்தார். இவைகளன்றி, அவர் கொண்டுவந்த வேறு சில வஸ்துக்கள் எனக்கு மேற்சொல்லிய பொருள்வகையனைத்திலும் ஆயிரமடங்கு அதிகம் உபயோகமானவைகளாயிருந்தன. அவை சுத்தமான புதிய உள்ளங்கிகள் ஆறு; மிக நாணயமான கழுத்துக்குட்டைகள் ஆறு கையுறை

கள் இரண்டு ஜோடு, பாதரக்ஷை ஒரு ஜதை, சிரசில் இடும் குல்லா ஒன்று, பாதகோசம் ஒரு ஜதை, அவர் இரண்டொரு முறைமாத்திரம் தரித்த வெகு நாணயமான வஸ்திரங்கள் ஒரு கூட்டம் சுருக்கிச்சொல்லில், கேசாதிபாதாந்தம் தரிக்கும் வஸ்திரங்களனைத்தையும் அவர் எனக்குக் கொண்டுவந்து கொடுத்தார்.

கஷ்டதசை யடைந்து வருத்தப்பட்ட எனக்கு மாலுமி பட்சமாய்க் கொடுத்த இவ்வெகுமதி மிக இதமாயிருக்கு மென்று எந்தக் குழந்தையும் சொல்லுமே; ஆனாலும், நான் இப்பெயர்ப்பட்ட வஸ்திரங்களை வாங்கிந் தரித்துக்கொண்ட பொழுது, இவைகள் எனக்கு மிகுந்த வெறுப்பும், அவலட்சணமும் கூச்சமுமாயிருந்தன. இதற்குமுன் எவ்வகை வஸ்திரமாயினும் எனக்கு இவ்வாறு ஒவ்வாதிருந்ததில்லை.

இந்த உபசாரகிருத்தியங்கள் நிறைவேறி, அவர் கொண்டுவந்த உசிதமான பண்டபதார்த்த முதலியவைகளனைத்தும் எனது சிற்றறை வீட்டில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டபின், நாங்கள் சிறைபிடித்திருந்த கைதிகளை என்ன செய்வோமென்று ஆலோசிக்கத் தொடங்கினோம். அவர்களை நம்பி எங்களுடன் அழைத்துப்போகலாமா, ஆகாதா எனத் தீர்க்காலோசனை செய்வது ஆவசியகமாகவேயிருந்தது. பிரதானமாய் அவர்களில் இருவர் வணங்கி வழிக்குவராத பரமதுஷ்டரென்று எங்களுக்கே தெரியும். மேலும், இந்தச் சண்டாளருக்கு எவ்வளவும் நன்றி செய்பலாகாதென்றும், இவர்களை இட்டுக்கொண்டு போகச் சந்தர்ப்பப்பட்டால், இவர்களுக்குக் கால் விலங்கிட்டு, முதலில் எதிர்ப்படும் அங்கிலேயர் குடியேறிய பிரதேசத்திற் குற்றவிசாரணை செய்யும்பொருட்டு, நியாய சபையாரிடத்திற் கொண்டுபோய் ஒப்புவிக்கவேண்டுமென்றும் மாலுமி சொன்னார். சொல்லியும், இதைக்குறித்து அவருக்கே மிகுந்த விசாரமுண்டாயிருந்ததாக விளங்கிற்று.

பின்பு, நீர் குறிப்பித்த இருவரும் தம்மை இத்தீவிலேயே சஞ்சரிக்க விட்டுப் போகவேண்டுமென்று தாமே கேட்கும்படி நான் ஏதும் பிரயத்தனம் செய்து, அவர்களை உடன்படுத்துகிறேன்; இது உமக்கு இஷ்டமா என நான் மாலுமியைக்

கேட்க, அவர் "ஆம், அதுவே எனக்கு மிகவும் சந்தோஷம்; அதற்கு நான் மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கிறேன்" என வுரைத்தார்.

"நல்லது, நான் அவர்களை வரவழைத்து, உமக்காக அவர்களுடன் பேசுவேன்" என்று மாலுமிக்குச் சொல்லி, சுக்கிரனையும், பிணையாளிகள் இருவரையும் குகைக்குப் போய், அங்கிருந்த ஐந்துபெயரையும் பின்கட்டை அவிழ்க்காமல் பன்னசாலைக்குக் கொண்டுவந்து, நான் வருமளவும் அங்கே வைத்திருக்கச் சொன்னேன். கூட்டாளிகள் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியதனுல், மேற்படி இருவர் பிணையிருக்கும் நிர்ப்பந்தம் ஒழிந்துபோயிற்று.

சற்றுச் சென்று, நான் நூதனமாய்ப் பெற்ற ஆடைகளைத் தரித்துக்கொண்டு, அவ்விடத்திற்குப் போனேன். மீண்டும் என்னைச் சமஸ்தானபதியென்று அழைத்தார்கள். மாலுமியும் என்னுடன் வந்தார். எல்லாரும் ஓரிடமாய்க் கூடிய பின், மேற்படி ஐவரை எனக்கெதிரில் அழைப்பித்து: "நீங்கள் மாலுமிக்குத் துரோகம் செய்து அபகாரிகளாய் நடந்ததும், மரக்கலத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு ஓடினதும், பின்னும் சூறையாடுவதற்கு எத்தனித்ததும் ஆகிய சங்கதிகள் விவரணமாய்க் கேட்டிருக்கிறேன்; ஆனுலும், "அவதந்திரம் தனக்கந்தரம்" என்பதுபோல, நீங்கள் செய்த சர்ப்பனைகளே தெய்வ எத்தனமாய் உங்களை அகப்படுத்தும் கண்ணிகளாய் முடிந்தன. பிறரை விழுத்தக் கருதி, நீங்கள் வெட்டின படுகுழிக்குள் நீங்களே விழுந்தீர்கள்" என அவர்களுக்குச் சொன்னேன்.

மேலும், "எனது ஏவற்படி மரக்கலம் எங்கள் கைவசப்பட்டது. அது துறையில் வந்து நிற்கின்றது. உங்கள் நூதன மாலுமி செய்த துரோகத்திற்கு ஏற்ற பிரதியுபகாரம் பெற்முன். இதை நீங்கள் சீக்கிரத்திற் காண்பீர்கள். பாய்மரத்தின் குறுக்குக் கைக்கொம்பில் அவன் பிரேதம் தொங்குவதை நீங்கள் காண்பீர்கள். கைமெய்யாகக் கண்டுபிடித்த கடற்கள்வரென்று நான் உங்களுக்குப் பிராணதண்டனை செய்யப் போகிறேன். நான் பெற்றிருக்கும் அதிகார பத்திரத்தால்

எனக்கு இப்படிச் செய்வதற்குத் திராணியுண்டு. இது உங்களுக்கே ஐயமறத் தெரியும். நல்லது, இதற்கு நீங்கள் என்ன உத்தரம் சொல்லுகிறீர்கள்" என்று மேற்படி வரலாறுகளை அவர்களுக்குச் சொல்லி, அவர்கள் அபிப்பிராயத்தைக் கேட்டேன்.

"நாங்கள் கைதுசெய்யப்பட்டபொழுது, மாலுமி எங்கள் பிராணனைத் தப்புவிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். இப்பொழுது எங்கள்மீ திரங்கும்படி தம்மைத் தாழ்ந்து பணிந்து பிரார்த்திக்கிறோம். தமக்குச் சொல்வதற்கு இதுதவிர, மற்றொன்றுமில்லை" என்பதாக அவர்களில் ஒருவன் உத்தரம் சொன்னான். அதற்கு நான், "உங்களுக்கு என்ன இரக்கம் செய்யத் தருமென்று அறியேன்; நானுமோ இனி இங்கிருப்பதில்லை; எனது மனுஷருடன் இத்தீவை விட்டு விலகும்படி நிர்ணயித்து, மாலுமியுடன் உருவிலேறி, இங்கிலாந்திற்குப் பிரயாணம் போகப் பேசியிருக்கிறேன். மாலுமி உங்களைக் கலகம் செய்த குற்றத்திற்காகவும், கப்பலைக் கவர்ந்துகொண்டு ஓடின குற்றத்திற்காகவும் நியாயசபையில் விசாரணைக்கு ஒப்புவிக்கும்படி கால் விலங்கிட்டுக் கைதிகளாய் இங்கிலாந்திற்குக் கொண்டுபோகலாமேதவிர, மற்றப்படி சரிப்படாது. கைதிகளாய்க் கொண்டுபோய் ஒப்புவித்தால், அப்புறம் உங்களுக்கு வரும் கதி தூக்குமரந்தான். இது நிசமென்று அறிந்திருங்கள். இனி நீங்கள் என்ன செய்வது உத்தமமோ எனக்குத் தெரியாது. ஆனபடி ஆகட்டுமென்று இத்தீவில் இருக்க இஷ்டப்படுவீர்களானால், இருக்கலாம். நான் இத்தீவை விட்டுப் போக இடம் பெற்றிருப்பதனால், இனி அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. நீங்கள் இங்கிருந்து காலந்தள்ளக் கூடுமென்று எண்ணுவீர்களானால், அவ்வாறே உங்கள் பிராணனைத் தப்புவிக்க விரும்புகிறேன்" என அவர்களுக்குச் சொன்னேன். நான் சொன்ன யுத்தி அவர்களுக்கு மிகப் பிரீதியாயிருந்ததாக அவர்கள் முகக்குறிப்பால் வெளிப்பட்டது. இங்கிலாந்திற்குக் கொண்டுபோய்த் தூக்கிற் போடப்படுவதிலும், வந்தது வரட்டுமென்று துணிவுற்று இங்கிருப்பதற்கே தமக்குப் பிரீதியென்று அவர்கள் சொன்னார்கள். இப்படியானால் ஆகட்டுமென்று இம்மட்டில் பேச்சை நிறுத்தினேன்.

ஆனாலும், அவர்களை இங்கே நிறுத்திப் போவதற்கு மாலுமி மனந் துணியவில்லை. இதைக்குறித்து அவர் சிறிது ஆக்ஷேபித்ததாய்க் காணப்பட்டது. அவருடைய அபிப்பிராயத்தை அறிந்து, நான் அவருடன் சற்றுக் கோபித்துக்கொண்டவன்போல், இவர்கள் எனது சிறைகள், உமது சிறைகளல்ல; நான் இவர்களுக்கு இரக்கஞ் செய்வதாக வாக்குக் கொடுத்ததனால், என் வாக்கைத் தவறாமற் காத்துக்கொள்வேன். இதற்கு உடன்படுவது தகாதென்று நீர் நினைத்தால், நான் இவர்களைச் சிறை நீக்கி, முன்போலச் சுவாதீனராயிருக்க விடுவேன்; அது உமக்கு இஷ்டமில்லாதிருந்தால், உம்மாற் கூடிய பிரயத்தனஞ் செய்து, அவர்களைச் சிறைபிடித்துக் கொள்ளுமென்றேன்.

இவ்வாறு நான் சொன்னதைக் கேட்டு, அவர்கள் இது தமக்குப் பேருபகாரமென்று நன்குமதிப்பவர்கள்போலக் காணப்பட்டார்கள். அவர்கள் மனக்கருத்தின்வண்ணம் நான் அவர்களை விடுதலை செய்து, வனத்தில் முன்பு இருந்த இடத்திற்குப் போகச்சொல்லி, துப்பாக்கி மருந்து குண்டு நான் அவர்களுக்குக் கொடுப்பதாகவும், தகுதியென்று அங்கிகரிப்பார்களானால், செம்மையாய்க் குடித்தனம் செய்தற்குரிய சில முறைமைகளைப் போதிப்பதாகவும் வெளியிட்டேன்.

பிற்பாடு நான் கப்பலேறுவதற்கு எத்தனித்து, எனது சாமான்களை ஆயத்தம் செய்யும்பொருட்டு அன்றிரவு தீவிலேயே தங்கியிருப்பதாக மாலுமிக்குச் சொல்லி, அவரை அப்பொழுதே உருவிற்குப் போய், அதில் யாவையும் சீர்ப்படுத்தவும், மற்றநாள் நான் ஏறிப் போவதற்கு ஓடம் அனுப்பவும் சொன்னேன். மேலும், சங்கரிக்கப்பட்ட நூதன மாலுமி உடலை இம்மனுஷர் காணும்படி பாய்மரத்தின் குறுக்குக் கைக்கொம்பில் தூக்குவிக்கும்படி கற்பித்தேன்.

மாலுமி போனபின், நான் மேற்படி ஐவரை எனது அறை வீட்டிற்கு வரவழைப்பித்து, அவர்கள் சீர் நிர்வாகங்களைக் குறித்து, அவர்களுடன் பயபத்தியாய்ச் சம்பாஷித்தேன். நீங்கள் அனுசரித்த யுத்தி உசித யுத்தியென்றும், மாலுமி உங்களை உருவில் ஏற்றிக்கொண்டுபோகச் சம்பவித்தால், வாஸ்

தவமாய்த் தூக்கிற் போடப்படுவீர்களென்றும் அவர்களுக்குச் சொன்னேன். அன்றியும், உருவின் குறுக்குப் பாய்மரக் கைக்கொம்பில் அவர்கள் மாலுமி உடல் தொங்குவதை அவர்களுக்குக் காட்டி, நீங்கள் மரக்கலமேறிப் போவீர்களானால், உங்களுக்கும் இதுவே கதியென்று சொன்னேன்.

பின்பு அவர்கள் அனைவரும் இங்கிருக்க இஷ்டப்படுவதாக வெளியிட்டது கேட்டு, நான் இத்தீவில் குடித்தனம் செய்த அந்தரங்கமான வகையை இனி உங்களுக்குச் சொல்லி, மனக்குறையற்றுச் சுகித்திருக்கும் மார்க்கத்தை உணர்த்துவேன் என்றேன். அவ்வாறே அத்தீவின் சரித்திரம் முழுதையும், நான் அவ்விடத்திற் சேர்ந்த வரலாறுகளையும் அவர்களுக்குச் சொன்னேன்; எனது கோட்டை கொத்தளங்களையும், நான் ரொட்டி சுட்ட விதத்தையும், தானியம் விதைத்து விளைவித்த தோரணைகளையும், திராட்சப்பழக் குலைகளை உலர்த்தி வற்றல் உண்டாக்கின முறையையும் காண்பித்து உணர்த்தினேன். விரித்துச் சொல்லில், கதை வளரும். அவர்கள் சுகஜீவனம் செய்வதற்கு ஆவசியகமான வனைத்தையும் தெரிவித்தேன். இனி அவ்விடத்தில் வந்து சேரும் ஸ்பானியர் பதினறுபெயருடைய வரலாறுகளைச் சொன்னேன். அவர்களுக்கு ஒரு கடிதமெழுதி, அதை இவர்கள் கையில் ஒப்புவித்து, அவர்களைக் கூட்டாளிகளாய்ச் சேர்த்துச் சமாதானமாய் மனங்கலந்திருப்பதாக இவர்களைக் கொண்டு வாக்குத்தத்தம் செய்வித்தேன்.

நான் ஐவருக்கும் கொடுத்த வெடிக் கருவிகள் ஐந்து பெருந் துப்பாக்கிகளும், மூன்று குருவிக்குழாய்த் துப்பாக்கிகளும். மேலும், கத்திகள் மூன்று; வெடி மருந்துப் பீப்பா ஒன்று; நான் இங்கே வந்து சேர்ந்த இரண்டொரு வருஷத்திற்குப்பின் அதிக செலவு செய்யாமலும், பழுதாக்காமலும் வைத்திருந்ததனால், இவ்வளவு மருந்து மீந்திருந்தது. வெள்ளாடுகளைப் பிடித்து வசப்படுத்தி விர்த்திசெய்யும் வகையைத் தெரியச்சொன்னேன். அவைகளைப் பால்கறக்கும் வகை இன்னதென்றும், கொழுக்கப்பண்ணும் முறை இன்னதென்றும், வெண்ணெய் கடைந்து பாலடைகட்டி செய்யும் விதம் இன்னதென்றும் திட்டமாய் உணர்த்தினேன்.

எனது சரித்திர வாலாறுகளை ஆதியோடந்தமாய் அவர்களுக்கு விரித்துரைத்தேன். அன்றியும், இன்னும் இரண்டு பீப்பா மருந்தும், சில தோட்டப் பயிர்வர்க்கங்களின் விதையும் கொடுக்கும்படி மாலுமியை உடன்படுத்துவேன் என்றேன். அவ்விதைகள் எனக்குக் கிடைக்குமானால், மிகச் சந்தோஷப்படுவேன் என்றேன். ஆகாரத்திற்காக மாலுமி எனக்குக் கொண்டுவந்து கொடுத்த ஒரு பை பயற்றை நான் அவர்களுக்குக் கொடுத்து, அதைத் தவறாமல் விதைத்து விர்த்தி செய்யவேண்டுமென்று கற்பித்தேன்.

இவையெல்லாம் நிறைவேறியபின், மற்றநாள் நான் அவர்களை விட்டுப் பிரிந்து மரக்கலமேறினேன். உடனே பாய் வலித்து ஓட எத்தனப்பட்டோம்; ஆனாலும், அன்றிரவு நங்கூரம் தூக்கவில்லை. மற்றநாள் அதிகாலையில் மேற்சொல்லிய ஐவரில் இருவர் நீந்தி வந்து, கப்பலின் பக்கத்தில் நின்று மற்ற மூவரையுங்குறித்துப் பரிதாபமாய் அழுது முறையிட்டு, அவர்கள் தங்களைக் கொல்வார்களென்று சொல்லி, கடவுள்நிமித்தம் தங்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போகும்படி மனுப்பண்ணினார்கள். மேலும், தங்களை உடனே தூக்கிற் போடுவதாயிருந்தாலும், உருவில் ஏற்றிக்கொள்ளும்படி மாலுமியைப் பிரார்த்தித்தார்கள்.

அதுகேட்டு, மாலுமி அவர்களை உருவிலேற்றுவதற்கு எனது உத்தரவில்லாமல் தமக்கு அதிகாரமில்லையென்று போக்குச்சொன்னார்; ஆனாலும், சற்றுநேரம் உத்தர பிரதியுத்தரங்கள் செய்து, அவர்கள் இனிச் செவ்வையாய் நடப்பதாக அதிவிநய பயபக்தியோடு வாக்குத்தத்தம் பண்ணினபின், கப்பலில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். சற்றுச் சென்று நன்றாய் உறைக்கும்படி சவுக்கடி பட்டு, தீர்ந்த கள்வரென்னும் நிந்தைக்கு முட்பட்டார்கள். அதன்மேல் அவர்கள் யோக்கியராய் அடங்கி நடந்தார்கள்.

சிறிதுநேரம் சென்றபின், நான் தீவில் இருந்தவர்களுக்குக் கொடுப்பதாக வாக்கிட்ட சாமான்களை ஓடத்திலேற்றிக் கொண்டு, கரைக்குப் போனேன். நான் அவர்களுக்காக மாலுமியுடன் பரிந்து பேசியதனால், அவர் அவர்களுடைய

பெட்டிகளையும் வஸ்திரங்களையும் கூட மற்றச் சாமான்களுடன் ஓடத்தி லேற்றுவித்தார். இவ்வஸ்துகளை அவர்கள் மிகுந்த உபகாரமென்று வாங்கினார்கள். அவர்களை வரவழைத்துக்கொள்ளும்படி ஒரு மரக்கல மனுப்பச் சந்தர்ப்பப்படுமானால், நான் அவர்களை மறந்துபோவதில்லையென்று சொல்லி, அவர்கள் மனதைத் தேற்றினேன்.

# 19. அத்தியாயம்.

நான் தீவை விட்டு நீங்கிச் சமுத்திர யாத்திரை செய்தது, நாட்சென்று இங்கிலாந்திற் சேர்ந்தது. யார்க்ஷயர் மாகாணத்திற்குப் போய், என் குடும்பத்தாரிற் பெரும்பான்மையோர் இறந்துபோனார்களென் றறிந்தது. பிரேஜில் பிரதேசத்திலுள்ள என் தோட்டத்தின் வரலாறுகளை விசாரித்தறியும்பொருட்டு, லிஸ்பன் நகரத்திற்குப் போக நிர்ணயித்தது. அங்கே எனது பூர்வ இஷ்டர் ஒருவரைக் கண்டு, அவர் மூலமாய்த் திரவியஸ்தனானது. இங்கிலாந்திற்குக் கரை மார்க்கமாய்ப் பிரயாணப்பட்டது. வழியில் கோநாய்களால் உபத்திரவமுண்டானது.

நான் இத்தீவைவிட்டுக் கிளம்பியபொழுது, முன்பு வெள்ளாட்டுத்தோலில் செய்துவைத்திருந்த குல்லாவையும் குடையையும், எனது கிளிப்பட்சிகளில் ஒன்றையும் ஞாபக சின்னங்களாய் மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு போனேன். மேலும், என் வசத்தில் கொஞ்சம் நாணயம் நாட்பட உபயோகமற்றிருந்து துருப்பிடித்ததென்று இதற்குமுன் ஓரிடத்திற் சொன்னேனே. அதைச் சிறிது தேய்த்து, துரு நீக்கிக் கையாடுகிறவரையில் அது வெள்ளி நாணயமாகச் செல்லாது. அந்த நாணயத்தையும், சேதப்பட்ட ஸ்பானிய மரக்கலத்திற் கண்டெடுத்த ரொக்கத்தையும் இச்சமயத்தில் நான் கொண்டுபோக மறந்திருக்கவில்லை. உருவிலிருந்தவர்கள் வைத்த கணக்கின்படி, நான் இத்தீவை விட்டுப் பிரயாணப்பட்டது 1686-ஆம் டிஸெம்பர்மீ 19உ. இத்தீவிற் குடித்தனம் செய்தது இருபத்தெட்டு வருஷமும், இரண்டு மாசமும், பத்தொன்பது நாளும். முதல் முறை என்னைச் சிறைபிடித்து வைத்திருந்த ஸல்லி நாட்டு மகமதியர் வசத்

தினின்று நான் நெட்டோடமேறி ஒளித்தோடினதும், இரண்டாமுறை சிறையிருந்த தீவை விட்டு நீங்கி மரக்கலமேறியதும் ஒரே மாசம், ஒரே தேதி இம்மரக்கலத்தில் பிரயாணப்பட்டு நாட்சென்றபின், 1687-ஆ ஜூன்மீ 11உ இங்கிலாந்திற் சேர்ந்தேன். ஆகவே, நான் இங்கிலாந்தை விட்டு நீங்கித் தேசாந்தரம் போயிருந்த காலம் முப்பத்தைந்து வருஷம்.

இங்கிலாந்திற் சே ்தபொழுது, சமஸ்த ஜனங்களுக்கும் அன்னியனுகவே இருந்தேன். எனது உபகாரியும், நம்பிக்கைக்கு எனது ரொக்கத்தை ஒப்புக் கொண்ட உண்மை தவருத காரியகாரியுமாகிய துரைசானி ஜீவனேடிருந்தாள். அவளுக்கு நேரிட்ட ஆபத்து விபத்துகள் அனேகம். புனர் விவாகம் செய்திருந்த அவள் மீண்டும் விதவையாகி, ஜீவனம் செய்வதற்கு நிர்வாகமற்றிருந்தாள். எனக்குச் செலுத்தவேண்டிய கடன் பணத்தைக்குறித்துக் கலங்காதிருக்கும்படி நான் அவளைத் தேற்றி, எனது ரொக்கத்தைக் கேட்டு நான் அவளை வருத்துவதில்லையென்று உறுதிமொழி சொன்னேன். சொன்னதும் தவிர, முன்பு அவள் என்னிடத்தில் விசுவாசமாயிருந்து, என்னைப் பரிபாலித்த நன்றிக்குப் பிரதியுபகாரமாய் அற்பமாகிய எனது கையிருப்பு ரொக்கத்தில் அவளுக்குச் சிறிது கொடுத்து உதவினேன். அப்பொழுது எனது ரொக்கம் சொற்பமாயிருந்ததனுல், அதிக திரவியசகாயம் செய்வதற்கு என்னுலாகாது. முன்பு அவள் எனக்குத் தயைகூர்ந்து செய்த நன்றியை நான் எப்பொழுதும் மறப்பதில்லையென்று வாக்குறுதி செய்தேன். நான் அவளுக்கு உதவி செய்யத்தக்க நிர்வாகியானபொழுது, இதை மறந்துபோகவேயில்லை. பிற்பாடு யார்க்ஷயர் மாகாணத்திற்குப் போனேன்; அங்கிருந்த என் தாய் தந்தையர் முதலிய குடும்பத்தார் அனைவரும் இறந்துபோனுர்கள். என் சகோதரிகள் இருவரையும், சகோதரன் ஒருவனுடைய பிள்ளைகள் இருவரையுமாத்திரம் கண்டேன். வெகு காலத்திற்கு முன் அவர்கள் என்னை இறந்தாரில் ஒருவனுக எண்ணியிருந்ததனுல், பெற்றூர் சொத்தில் எனது பாகத்தைப் பிரத்தியேகமாய் வைத்திருக்கவில்லை. பெருக்கிச் சொல்வதற்கு நிமித்

தமென்ன? எனக்கு உதவி சகாயம் ஒன்றுமில்லை. நான் வைத்திருந்த சொற்ப திரவியம் அங்கிருந்து குடித்தனம் செய்வதற்கு எம்மாத்திரம்.

ஆனாலும், நான் செய்திருந்த நன்மைக்கு எனக்கு ஒரு பிரதியுபகாரம் கிடைத்தது. அதை நான் எதிர்பார்த்திருக்கவேயில்லை. சமயத்தில் துரோகிகள் வசத்தினின்று நான் தப்புவித்த மாலுமி தன்னையும், மற்றக் கடலோடிகளையும் நான் பிராணபாயத்திற்கு விலக்கிக் காத்த வரலாறுகளையும், கப்பலையும், அதன் சரக்குகளையும் துரோகிகள் வசத்தினின்று மீட்ட சங்கதிகளையும் கப்பலுக்கு உடையவர்களுக்கு விவரணமாய்ச் சொல்ல, அவர்களும், வியாபாரத்தில் அவர்களுடன் சம்பந்தப்பட்ட வேறு சில வர்த்தகரும் என்னை வரவழைப்பித்து, எனக்குத் தகுதியான மரியாதையோடு உபசாரவார்த்தை சொல்லி, இரண்டாயிரம் ரூபாய்வரையில் வெகுமதி கொடுத்தார்கள்.

எனக்குண்டாகும் ஆபத்துச் சம்பத்துமுதலிய நானுவிஷயங்களையும் பலவாறு தீரத் தெளியச் சிந்தித்து, குடித்தனம் செய்வதற்கு இந்த ரொக்கம் செலவிற்குக் கட்டாதென்று கண்டு, லிஸ்பன் நகரத்திற்குப் போகவும், அங்கே தகுதியானபெயரைக் கண்டு, பிரேஜில் பிரதேசத்திலுள்ள எனது தோட்டத்தின் வரலாறுகளையும், எனது கூட்டாளியின் சங்கதிகளையும் கூடியவரையில் விசாரித்தறியவும் தீர்மானித்தேன். எனது கூட்டாளி சில வருஷங்களுக்குமுன் நான் இறந்துபோனேனென்று எண்ணியிருந்ததாக உத்தேசிப்பதற்கு ஏது இருந்தது. மேற்சொல்லிய தாற்பரியத்துடன் நான் லிஸ்பனுக்குப் போகும் கப்பலில் ஏறி, அடுத்த எப்பிரில் மாசம் அவ்விடத்திற் சேர்ந்தேன். எனது அடியான் சுக்கிரனும் எச்சமயத்திலும் என்னிடத்தில் மிகுந்த விசுவாசமுள்ள தொண்டனுயிருந்து, நான் போகுமிடங்கள்தோறும் உண்மை தவறுமல் என்னுடன் வந்தான். லிஸ்பனிற் சேர்ந்தபொழுது, முன்பு ஆபிரிக்க கரைக்குச் சமீபத்தில் என்னைச் சமுத்திரமார்க்கத்திற் கண்டு தமது உருவில் ஏற்றிக் கரைசேர்த்த எனது புராதன சினேகராகிய மாலுமியிருக்கும்

இடத்தை விசாரித்தறிந்து, அவ்விடத்திற்குப் போய், அவரைக் கண்டு, களிகூர்ந்தேன். அவர் விருத்ததசை யடைந்ததனால், கடலோடும் தொழிலைக் கைவிட்டு, தமது மைந்தனை மாலுமியாக ஏற்படுத்தியிருந்தார். அவன் நடுவயசுள்ள ஆடவன். நாளதுவரையில் பிரேஜில் பிரதேசத்திற்கு வர்த்தக முகாந்தரமாய்ப் போக்கு வரவு செய்தான். வயசு முதிர்ந்த மாலுமி என்னை இன்னனென்று அறியவுமில்லை, நான் அவரை எளிதில் அறியவுமில்லை. பின்பு இருவருக்கும் ஆதியில் அறிமுகமுண்டான சங்கதித் தோரணைகளைச் சொல்லி, நான் இன்னனென்று அவருக்குத் தெரியப்படுத்தினேன்.

பழைய சிநேகத்தைப் பாராட்டி, இருவரும் பரிவுகூர்ந்து, சற்றுவேளை பேசிக்கொண்டிருந்தபின், என் தோட்டத்தையும் கூட்டாளியையுங்குறித்து விசாரித்தேன். நான் கருதிப்போன காரியம் அதுதானே. வயோதிகராகிய மாலுமி, "கழிந்த ஒன்பது வருஷ காலத்தில் நான் பிரேஜில் நாட்டுக்குப் போகவில்லை; கடைசியாய் நான் அங்கிருந்து பிரயாணப்பட்டபொழுது, உனது கூட்டாளி ஜீவனோடிருந்த தறிவேன். உனக்குப் பிரதிநிதிகளாயிருந்து, உன் பங்குக் கணக்கை எழுதி வைக்கும்படி நீ அவருடன் சம்பந்தப்படுத்திய காரியகர்த்தர்கள் இருவரும் இறந்துபோனார்கள்; அவர்கள் இறந்தும், வர வர விர்த்தியான உன் தோட்டத்தின் ஊதியம் வியர்த்தமாய்ப் போகவில்லை. அதைக்குறித்துத் தவறின்றிக் கணக்கு வைக்கப்பட்டிருக்குமென்று நம்புகிறேன். ஏறிப்போன கப்பல் சேதப்பட, நீ கடலில் முழுகி யிறந்தாயென்று சாதாரணமாய் யாவரும் எண்ணியிருந்ததனால், உனது காரியகர்த்தர்கள் தோட்டத்தில் உன் பங்கில் விளைந்த பயனைக் கணக்குப்படி புரோக்கியுரேட்டர் பிஸ்கல் என்னும் பிரதிநிதி நீதியதிபர் வசத்தில் ஒப்புவித்தார்கள். அவர் அதை மூன்று பங்காக விபாகித்து, அச்சொத்திற்கு உடையவனென்று நீ ஒருபொழுதும் வராதிருந்தால், ஒரு பங்கை அரசனுக்கும், மற்ற இரண்டு பங்கையும் வறியோர்க் குபயோகமாகவும், இந்தியரைக் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளும்பொருட்டும் செலவிடுவதற்கு ஸேன்ட் ஆகஸ்டின் என்னும் சன்

னியாசி மடத்திற்கும் கொடுத்தார். நீயாவது, உனது சொத்துக்குப் பாத்தியஸ்தர்களாவது வந்து கேட்டால், அதை ஒப்புவிக்கவேண்டுமென்றும், வருஷவாரி அதற்கு வரும் வட்டி தர்ம காரியங்களில் செலவழிந்து போகுமாதலால், அதைமாத்திரம் கொடுப்பது அசாத்தியமென்றும் திட்டம் செய்தார். குடிகள் பூஸ்திதி விளைவில் வருஷவாரி அரசனுக்குச் செலுத்தும் பகுதிப்பணக் கணக்கு வைத்திருக்கும் உக்கிராண விசாரணை உத்தியோகஸ்தனும், சன்னியாசிமடத்து வருமானத்தை வைத்து நிர்வகிக்கும் உத்தியோகஸ்தனும் வருஷாவருஷம் உனது கூட்டாளி தோட்டத்தின் பயனைக் குறித்து எழுதிக்கொடுக்கும் கணக்கை நுட்பமாய்ப் பரிசோதனை செய்து, அதில் உன் பங்குக்கு வருவது இவ்வளவென்று கண்டு, அதை வாங்கிக்கொண்டு வந்தார்கள். உனக்கு இக்கணக்கைக்குறித்து எவ்வளவும் சந்தேகமுண்டாதற்கு நிமித்தமில்லை" என்பதாகச் சொன்னார். "தோட்டம் எவ்வளவு விர்த்தியாயிற்றென்று அறிவீரா? அதை ஒரு பொருளென்று எண்ணி, அதிற் சிந்தைவைத்துப் போனால், எனக்கு ஏதும் பிரயோஜனம் கிடைக்குமா? அல்லது போன பின் நியாயமாய் என் பங்குக்கு வரும் பிரயோஜனத்தை நான் சுவாதீனமாக்கிக்கொள்வதற்கு ஏதாயினும் பிரதிபந்தம் நேரிடுமா?" என நான் கேட்டதற்கு, அவர், "உன் தோட்டத்தின் அபிவிருத்தி இவ்வளவென்று திட்டமாய் எனக்குத் தெரியாது. இது ஒன்றுமாத்திரம் அறிவேன். உன் கூட்டாளி தனக்கு வரும் பங்கைச் சேர்த்து அனுபவித்து, திரண்ட திரவியஸ்தனானான். மேலும், உன் சொத்தில் அரசனுக்குக் குறித்த மூன்றில் ஒரு பாகம் மற்றொரு சன்னியாசி மடத்திற்கோ, சமய அபிவிர்த்திக்குரிய வேறு ஸ்தாபனத்திற்கோ கொடுக்கப்பட்டதென்றும், அது வருஷவாரி இரண்டாயிரத்து எழுநூறு ரூபாய்வரையில் தொகையேறுமென்றும் கேள்விப்பட்டதாக எனக்கு ஞாபகம். சொத்துக்குடையவன் நீதானென்று சாட்சி சொல்லுவதற்கு உனது கூட்டாளி இன்றளவும் ஜீவனோடிருப்பதனாலும், உன் பெயர் அத்தேசத்துப் பிரஜைகளின் நாமாட்டவணையில் பதிந்திருப்பதனாலும் நீ உன் சொத்தைச் சுகமாய்க் கைக்கொள்வ

தற்கு எவரும் வழக்குச் சொல்லார். இதற்குச் சந்தேக மில்லை. அன்றியும், உனது காரியகர்த்தர்கள் இருவருடைய மைந்தர்கள் எதார்த்தவாதிகள், நிஷ்கபடிகள், கோடி சீமான் கள். நீ உன் சொத்தைச் சுவாதீனமாக்கிக்கொள்வதற்கு அவர்கள் உனக்கு உதவிசெய்வதும் தவிர, காலஞ்சென்ற அவர்கள் தந்தைகள் உன் காரியகர்த்தர்களாயிருக்கிற வரையில் உன் பங்குக்குச் சேர்த்து வைத்த திரண்ட பணம் இப்பொழுது தங்கள் கையிலிருப்பதனால், அதையும் உனக்குக் கொடுத்துவிடுவார்கள். அவர்கள் உன் காரியகர்த்தர்களாயிருந்தது பன்னிரண்டு வருஷமென்று எண்ணுகிறேன்" என்றார்.

அவர் சொற்கேட்டு, நான் சிறிது விசாரமும், கவலையுமுடையவனாகி, கிழ மாலுமியைப் பார்த்து: "ஐயா, நான் மரணசாதனம் எழுதினதும், போர்த்துகேய மாலுமியாகிய உம்மையே எனது சொத்திற்குச் சர்வ சுதந்தர பாத்தியஸ்தராக ஏற்படுத்தினதும் அறிவீரே. இப்படியிருக்க எனது காரியகர்த்தர்கள் என் சொத்தை மேற்சொல்லியவாறு பராதீனப்படுத்திய முகாந்தரமென்ன?" எனக் கேட்டேன்.

மாலுமி: "நீ சொல்வது மெய்தான்; நீ இறந்தாயென்பதற்குச் சாட்சி இல்லாததனால், உன் மாணத்தைக்குறித்து நிசச்செய்தி அறிகிறவரையில் நான் உனது மரண சாதன கர்மாதிகாரியாகத் தலைப்படக் கூடாதேபோயிற்று. மேலும், நெடுங்காலத்திற்குமுன் நிறைவேறிய இச்சங்கதியில் தலையிடுவதற்கு நான் இஷ்டப்படவுமில்லை; நீ எழுதிய மரண சாதனத்தை நான் கச்சேரியிற் பதியும்படி செய்ததும், என் சுதந்தரத்தைக்குறித்து வழக்குச்சொல்லியதும் மெய்தான். நீ இறந்துபோனால் அதற்கும், இறவாதிருந்தால் அதற்கும் எவ்வாறுவது திருஷ்டாந்தம் கொடுக்கக்கூடுமானால், உனது பிரதிகாரியஸ்தனாக ஏற்பட்டு, வியாச்சியம் நடத்தி, என்பேரில் தீர்ப்புப்பெற்று, சர்க்கரை சுத்திசெய்யும் ஸ்தாபனத்தைச் சுவாதீனமாக்கிக்கொண்டு, தற்காலத்தில் பிரேஜில் பிரதேசத்திற்குப் போயிருக்கும் என் மகன்வசத்தில் ஒப்புவித்து, தொழில் நடப்பிக்கும்படி திட்டம் செய்திருப்பேனே. நல்

லது, பின்னும் ஒரு செய்தி சொல்லுகிறேன். இதுவரையிற் சொன்ன சங்கதிகளைப்போல், அது உனக்கு உவப்பாயிராது போலும். உன்னை அறிந்த யாவரும் நீ இறந்துபோனாயென்று உறுதியாய் நம்பியிருந்ததனால், உனது கூட்டாளியும், காரியகர்த்தர்களும் என்னை உன் பிரதிநிதியாக வைத்து, முதல் ஆறு எட்டு வருஷங்களில் தோட்டப் பிரயோஜனத்தைக் கணக்குப்பார்த்து, உன் பங்கை என் கையிற் கொடுக்க, நான் ஒப்புக்கொண்டேன். அக்காலத்தில் வேலைகளை விர்த்தி செய்வதற்கும், சர்க்கரை சுத்தி செய்யப்படும் சாலை ஒன்று கட்டுவதற்கும், அடிமைகளைக் கிரயம் கொடுத்து வாங்குவதற்கும் பணச்செலவு அதிகம் நேரிட்டதனால், பிற்பாடு சேர்ந்த பணத்தின் அளவு முன்பு தேறவில்லை; ஆனாலும், எனது வரவு செலவைக் குறித்து உள்ளபடி எழுதிவைத்த கணக்குப் பத்திரத்தை உன்னிடத்திற் கொடுப்பேன்" என்பதாகச் சொன்னார்.

பின்னும் சிலநாள்வரையில் தள்ளாத பருவமுள்ள இவ்விஷ்டரும் நானும் சம்பாஷணை செய்தோம். பின்பு ஒரு நாள் அவர் எனது கூட்டாளியும், வர்த்தகராகிய காரியகர்த்தர்களும் முதல் ஆறு வருஷம் விளைந்த தோட்டப் பிரயோஜனத்தின் கணக்கென்று எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்த பத்திரத்தை எடுத்துக் கொண்டுவந்து காண்பித்தார். அவர்கள் அவ்வவ்வருஷத்து விளைவில் எனக்கு வரும் பங்கை விற்றுப் பணத்தை அல்ல, அந்தந்தப் பொருளையே ஒப்புவித்தார்கள். புகையிலை சுருள் சுருளாகவும், சர்க்கரை பெட்டிகளில் வைத்து அடைத்தும் ஒப்புவிக்கப்பட்டன. மேலும், சர்க்கரையைச் சுத்தி செய்து, அதில் உண்டாக்கிய ரம் சாராயம், சர்க்கரைப்பாகு முதலியவைகளும் ஒப்புவிக்கப்பட்டன. இந்தக் கணக்கைப் பார்வையிட்டபொழுது, வருஷம் ஒருவண்ணமாய்ப் பிரயோஜனம் அதிகரித்ததென்று காணப்பட்டது; ஆனாலும், மேற்சொல்லியபடி முதலில் செலவு ஏறியதனால் பிரயோஜனம் சொற்பமாகவே இருந்தது. ஆறுயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து ரூபாய் ரொக்கமும், அறுபது பெட்டி சர்க்கரையும், புகையிலை பதினைந்து இரட்டைச்சுருளும் எனக்குச் செல்லுமதியான

கணக்கில் பதிந்திருந்தது கண்டேன். அதை அவர் எனக்கு மறைக்கவில்லை. நான் பிரேஜில் பிரதேசத்தை விட்டு நீங்கி, முன்பின் பதினொரு வருஷம் சென்றபின், அவர் லிஸ்பன் நகரத்திற்குத் திரும்பிவரும் மார்க்கத்தில் கப்பல்சேதப்பட்டு, அதில் இருந்த மேற்படி சாக்குகள் கடலில் முழுகிப்போயின வென்று தெரியவந்தது. குணவாளுகிய அம்மாலுமி தமக்கு நேரிட்ட ஆபத்துகளையும், தாம் அடைந்த நஷ்டத்திற்கு ஈடாக எனது ரொக்கத்தைக் கொடுத்து, வேறொரு புதுக் கப்பலில் தாம் பங்கு கூடியதையும் சொல்லி முறையிட்டார். பின்பு அவர் "எனது பூர்வ சினேகனே, இதைக்குறித்து விய சனப்படுவதற்கு நிமித்தமில்லை. உனக்கு ஆபத்து நேரிட் டிருக்கும் இச்சமயத்தில் நான் உன்னை ஆதாவில்லாதிருக்க விடேன். எனது மகன் இக்கரை சேரும் க்ஷணமே உனக் குச் செல்லும் கடனைக் குறையாமற் செலுத்துவேன்" என்று உறுதிமொழி சொல்லி, அங்கி உறைக்குள் இருந்த பழைய பணப்பை யொன்றைத் திடீரென்றெடுத்து, இரண்டாயிரத்து ஒருநூற்று அறுபது ரூபாய் கிரயமுள்ள தங்க நாணயத்தை என் கையிற் கொடுத்து, அப்புறம் எனக்குச் செல்லவேண் டிய கடன் நிலுவைக்கு ஈடாக மேற்குறித்த கப்பல் விக்கிரய பத்திரங்கள் இரண்டை ஒப்புவித்தார். ஒன்றில் கப்பலின் காற்பங்கு அவருக்கு விற்கப்பட்டதாகவும், மற்றதில் மீந்த பங்குகள் அவர் மகனுக்கு விற்கப்பட்டதாகவும் எழுதப்பட் டிருந்தது. அக்கப்பலிலேயே அவர் மகன் பிரேஜில் பிர தேசத்திற்குப் பிரயாணம் போயிருந்தான்.

சிறுமை அடைந்த மாலுமியிடத்தில் விளங்கிய எதார்த்தத் தையும் தயையையும் கண்டு, என் மனம் சபலித்து மெழுகு போல் உருகியது. அவர் எனக்குச் செய்த உபகாரத்தையும், சமுத்திர மார்க்கத்தில் கண்டு, என்னைத் தமது மாக்கலத்தில் ஏற்றிக்கொண்டு போனதையும், எச்சமயத்திலும் அன்னதா தாவைப்போல் என்னைப் பிரதிபாலித்துக்கொண்டு வந்ததை யும், முக்கியமாய் அவர் எனக்கு நிஷ்களங்கமான மித்திரரா யிருந்ததையும் நினைவுகூர்ந்தபொழுது, அவர் வாய்ப்பிறப் பைக் கேட்டவுடன் வாய்விட்டு அலறுதிருக்க என்னுல் முடி யவில்லை. "இப்பொழுது நீர் எனக்கு இவ்வளவு ரொக்கம்

கொடுத்து, குடும்ப சம்ரக்ஷணைக்கு கஷ்டப்படாதிருக்கத் தக்க நிர்வாகியா" என்று கேட்டேன். "சுகமாய் ஜீவனம் செய்வதற்குச் சிறிது கஷ்டம் உண்டாகாமற்போகாது; ஆனாலும், இது உன் பணம், என்னிலும் உனக்கே பணமுட்டு அதிகம்" என மாலுமி சொன்னார்.

குணவானாகிய அவர் சொன்ன சொல் ஒவ்வொன்றும் மனதுருகிச் சொன்னதாய்க் காணப்பட்டது. அவர் பேசப் பேச, என் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அதைத் தடுக்க எனக்கு வசமில்லாதிருந்தது. சுருக்கத்திற் சொல்லி முடிக்கிறேன். அந்தப் பணத்தில் ஆயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபாய் எடுத்துக்கொண்டு, இறகும் மையும் தருவித்து, அதற்குப் பற்றுச்சீட்டு எழுதி, அச்சீட்டையும், மிச்சப் பணத்தையும் அவரிடத்தில் திருப்பிக் கொடுத்து, தோட்டத்தை நான் சுவாதீனமாக்கிக்கொள்ளச் சம்பவித்தால், மற்றப் பணத்தையும் திருப்பிக் கொடுத்துவிடுவேனென்றும், அவர் மகனுடைய கப்பலில் அவருக்குண்டான பாகத்தைக் குறிக்கும் விக்கிரய பத்திரத்தை நான் ஒருபொழுதும் வைத்திருக்க மாட்டேனென்றும், நிலுவை ரொக்கம் எனக்குத் தேவையாயிருந்தால், அவருடைய நாணயமே அதற்குப் பூர்த்தியான ஈடென்றும், தோட்டப் பிரயோஜனம் அகப்படுமென்று எதிர்பார்த்திருக்க ஏது உண்டென்பதாக அவர் சொல்லியபடி அது எனக்குக் கிடைத்து, அப்புறம் பணம் தேவையில்லாதிருந்தால், ஒரு துட்டாவது அவரிடத்தில் வாங்குவதில்லையென்றும் சொன்னேன். என் சொற்படி பிற்பாடு மற்றப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன்.

இது முடிந்தபின், அவ்விருத்தர் தோட்டத்தைக்குறித்து வியாச்சியம் தொடர யுத்தி சொல்லித் தரவேண்டுமாவென்று கேட்க, நான் அவ்விடத்திற்குப் போக அபிப்பிராயம் கொண்டிருப்பதாய்ச் சொன்னேன். அதற்கு அவர், "இஷ்டமானாற் போகலாம்; போகாதிருக்கிற பட்சத்தில், உன் சுதந்தத்தைக் கைக்கொள்வதற்கும், க்ஷணமே தோட்டத்தின் பயனை உன் செலவிற்கு உதவும்படி செய்வதற்கும் தகுதியான வுபாயங்கள் உண்டு" எனச் சொல்லி, **லிஸ்பன்** துறை

யில் பிரேஜில் பிரதேசத்திற்குப் பிரயாணப்பட மரக்கலங்கள் எத்தனமாய் நின்றதனால், அவர் எனது பெயரையும், நான் ஜீவனோடிருப்பதாகவும், பிரேஜில் நாட்டில் மேற்சொல்லிய தோட்டம் செய்வதற்கு நிலம் வாங்கின மனுஷன் நானே யென்பதாகவும் தாம் எழுதிய பிரமாணிக்கப் பத்திரத்தையும் அரசாட்சி டாப்பில் பதிவு செய்வித்தார். இச்சாதனத்திற்கு முறைமைப்படி சாதன விகிதலைக்கொண்டு கையொப்பம் இடுவித்து, அதனுடன் பிரதிநிதி அதிகாரபத்திரமும் சேர்ப்பித்தபின், இப்பத்திரங்களையும், தாமெழுதிய கடிதம் ஒன்றையும் பிரேஜில் நாட்டில் இருக்கும் தமக்கு அறிமுகமான ஒரு வர்த்தகரிடத்திற்கு அனுப்பச்சொல்லி, எனது தோட்டப் பிரயோஜனத்தைப்பற்றிய கணக்கு வரலாறுகள் வந்து சேருமளவும் என்னைத் தம்முடனிருக்கச்சொன்னார்.

இந்தப் பிரதிநிதி அதிகார பத்திரத்தைப்போல் அத்தனை முறைமையாய் எவ்வித உண்டியும் அங்கிகரிக்கப்பட்டதில்லை; என்னைச் சமுத்திரயாத்திரை செய்வதற்கு உடன்படுத்தி அனுப்பின காரியகர்த்தர்களின் புத்திரராகிய வர்த்தகரிடத்தினின்று பெருஞ் சிப்பமொன்று ஏழு மாசத்திற்குள் வரப் பெற்றேன். அதற்குள் பின் குறிக்கப்படும் விசேஷ கடிதங்களும் பத்திரங்களும் அடக்கம் செய்திருந்தன.

முதலாவது, ஆறு வருஷமளவும் எனது தோட்டப் பிரயோஜனத்தின் வரவு செலவுக் கணக்கு. அவர்கள் தந்தைகள் அவ்வாறு வருஷக்கணக்கை விருத்தராகிய போர்த்துகேய மாலுமியுடன் தீர்த்து, எனது வரவுக்கணக்கிற் பதிந்திருந்த நிலுவை பதினையாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது ரூபாய்.

இரண்டாவது, அப்புறம் நாலு வருஷத்துத் தோட்டப் பிரயோஜனத்தின் வரவு செலவுக் கணக்குப்பத்திரம். இந்த நாலு வருஷத்துப் பிரயோஜனமும் எனது நிக்ஷேபதாரிகள் வசத்திலிருந்தது. அதில் செலவு தள்ளி, எனது வரவுக் கணக்கில் பதிந்த நிலுவை நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று ரூபாய், எட்டு அணா. மேற்குறித்த நாலு வருஷம் கழிந்தபின், நான் இறந்தது இறவாதிருப்பது,

இறவாதிருந்தால் இருக்கும் இட விவரம் ஒன்றும் தெரிய வாரததுபற்றி, அவர்கள் அரசாட்சி முறைமைப்படி எனது தோட்டப் பிரயோஜனத்தைத் தமது வசம் ஒப்புக்கொண்டு நிர்வகித்தார்கள். ஒருவன் தன் பதியை விட்டு நீங்கிச் சஞ்சரிக்குமிடம் அறியப்படாதிருப்பதற்குத் தர்மசாஸ்திரத்தில் தேசசுதந்தர வியோகம் எனப் பெயர் வழங்கும்.

மூன்ருவது, ஸேன்ட் ஆகஸ்டின் மடாதிபதி வைத்திருந்த கணக்கு. அவர் பற்றுப் பதினறு வருஷத்திற்கு அதிக மானகாலத்தின் பிரயோஜனம்; அதில் மேற்படி தர்மசாலை விசாரணைக் கர்த்தர்களால் செலவழித்த ரொக்கம் இவ்வளவென்று கணக்கு வரையறை செய்யக்கூடாததனுல், அவர் செலவாகாமல் என் கணக்கில் தமது வசமிருந்த ரொக்கம் பதிஞேராயிரத்து எழுநூற்று எழுபத்திரண்டு ரூபாயென்று எதார்த்தமாய்ச் சொன்னூர். அரசனுக்குக் குறித்த பாகத்தின் கணக்கில் எனக்கு ஒரு காசும் வரவில்லை.

மேலும், எனது கூட்டாளி நான் ஜீவனோடிருப்பதைப் பற்றி மிகவும் உருக்கமாய் எனக்குச் சோபனம் சொல்லி, தோட்டம் வரவர விர்த்தி செய்யப்பட்ட வகையையும், வருஷமொன்றுக்கு அதன் பிரயோஜனக்கணக்கையும், தோட்டத்தின் பரப்பு விவரத்தையும், அதிற் சாகுபடியான பயிர் வகை விவரத்தையும், அதில் வேலைசெய்யும் அடிமைத் தொகை வரலாற்றையும் விவரணமாய் எழுதி, இருபத்திரண்டு சிலுவைச் சின்னமிட்டு, தேவ மாதாவை நமஸ்கரித்து வணங்கி எழுதிய கடிதமொன்று வந்து சேர்ந்தது. நான் ஜீவனோடிருந்த மங்கல சங்கதி அறிந்ததைப்பற்றி இருபத்திரண்டுமுறை தேவ மாதாவின் மந்திரத்தை ஜபித்து, வணங்கித் துதித்ததாக எழுதி அனுப்பினூர்; அன்றியும், பிரேஜில் பிரதேசத்திற்கு வந்து, சொத்தைக் கைக்கொள்ளும்படி என்னை மிகவும் அன்பாய் வருந்திக் கேட்டார். நான் வாராதிருக்கிறபட்சத்தில், என் சொத்துக்களை இன்னூர் வசம் ஒப்புவிக்கவேண்டுமென்று தமக்கு எழுதித் தெரிவிக்கச் சொன்னூர். கடைசியில் தாமும், தமது குடும்பத்தாரும் மிகுந்த மனநட்புடன் எனக்கு வந்தனம் சொல்வதாக எழு

தினர்; செம்புலித்தோல் ஏழு எனக்கு வெகுமதியாய் அனுப்பினர். அவர் ஆபிரிக்க கண்டத்திற்கு வேறொரு கப்பலை அனுப்பியிருந்ததாகவும், அவ்வுரு எனது உருவைப்போலச் சேதப்படாமல், சிந்தாயாத்திரையாய்த் திரும்பிவந்ததாகவும், இச்செம்புலித்தோல் அதன் வழியாய் வரப்பெற்றதாகவும் காணப்படுகின்றது. அல்லாமலும், அதி ருசியான ஐந்து பெட்டி நிறைந்த பலகாரமும், நாணய முத்திரை பதியாத பொற்சக்கரம் நூறும் அனுப்பினர். அச்சக்கரங்கள் போர்த்துக்கல் தேசத்தில் வழங்கும் பதின்மூன்றரை ரூபாய்க் கிரயமுள்ள மாய்டோர் என்னும் நாணயத்தின் அளவிற்குச் சற்றுச் சிறியவைகள். மேற்சொல்லிய வஸ்துக்களைக் கொண்டுவந்த மாக்கலங்களிலேயே எனது நிக்ஷேபதாரிகளாகிய வர்த்தகர் இருவர் ஆயிரத்திருநூறு பெட்டி சர்க்கரையும், எண்ணூறு சுருள் புகையிலையும், மீந்த சரக்கு விற்ற ரொக்கமும் ஏற்றி அனுப்பினர்கள். வந்த ரொக்கம் தங்க நாணயம்.

ஆதியில் யோப் என்பவனுக்குண்டாயிருந்த செல்வத்திலும், அந்தத்தில் அவன் பெற்ற செல்வம் அதிகமென்று சொல்வார்களே. என்னைக்குறித்தும் அவ்வாறே சொல்லத்தகும். காத்திராத பிரகாரம் வரப்பெற்ற செல்வப்பொருளனைத்தையும் கண்டவுடன் என் நெஞ்சு பறவை சிறகடிப்பது போலப் படபடென்று துடித்ததனால், எனக்குண்டான தடுமாற்றம் இவ்வளவென்று சொல்வது அசாத்தியம். பிரேஜில் பிரதேசத்தினின்று வரும் கப்பல்கள் சிதறுமற் கூட்டமாய் வருவது வழக்கமாதலால், கடிதமுதலிய சாதனங்களைக் கொண்டுவந்த கப்பல்களிலேயே எனது சரக்குகளும் வந்தன. கடிதமுதலிய சாதனங்கள் என் கையில் வந்து சேருமுன்னதாகச் சொத்துக்கள் எல்லாம் ஆற்றில் நின்ற மரக்கலங்களில் பத்திரமாயிருந்தன. சுருக்கிச் சொல்லுகிறேன். இச்செய்தி கேட்டவுடன் நான் முகம் வெளுத்து வாடி வியாதிஸ்தனைப்போலானேன். கிழ மாலுமி விரைந்தோடி, தீம்பானம் கொண்டுவந்து குடிக்கக் கொடுத்து, என்னை உற்சாகப்படுத்தாதிருப்பாரானல், சடிதியிலுண்டான சந்தோஷ பரவசத்தால், நான் மூர்ச்சித்து விழுந்து இறந்து போவேனென்பதற்கு ஐயமில்லை. தீம்பானம் பருகியபின்னும் நெடு

நோமட்டும் நான் மிக வருந்தித் துன்பப்பட்டேன். பிறகு வைத்தியனை வரவழைப்பித்துக் காட்ட, அவர் எனக்குச் சடிதியில் வியாதி உபத்திரவமுண்டான காரணம் இன்னதென்றறிந்து, ரத்தம் குத்தி வாங்கினர். அதன்பின் வருத்தம் நீங்கி, சொஸ்தமடைந்தேன். இவ்வாறு என் மனத்தடுமாற்றத்தால் உண்டான உபத்திரவத்தை நிவிர்த்தித்து என்னைக் குணப்படுத்தாதிருந்தால், என் பிராணன் நிற்காதென்று உறுதியாய் நம்புகிறேன்.

சடிதியில் ஐந்து லக்ஷம் ரூபாய் ரொக்கமும், பிரேஜில் பிரதேசத்தில் வருஷம் ஒன்றுக்குப் பதினுயிரம் ரூபாய்க்கு அதிக வரும்படியுள்ள பூஸ்திதியுமுடைய திரவியஸ்தனுனேன். இங்கிலாந்தில் இருக்கும் பூஸ்திதியைப்போல, பிரேஜில் நாட்டில் எனது பூஸ்திதியும் நிலைமையான பிரயோஜனம் தருவதேயாம். எனது செல்வத்தின் பெருமை இவ்வளவென்று எனக்குத் தோன்றவுமில்லை, மனம் பதறுதிருந்து அதை அனுபவித்துச் சுகிக்கும் வகை ஏதென்று தெரியவுமில்லை. எனது ஆபத்தின்காலத்தில் என்னை அன்பாய் ஆதரித்து, தொடக்கத்தில் எனக்குத் தயவு செய்து, முடிவில் எனது பொருளை எதார்த்தமாய் ஒப்புவித்த எனது பூர்வ உபகாரியும், சற்குணமுள்ள விருத்தருமாகிய மாலுமிக்கு முதல் முதல் தகுதியான பிரதியுபகாரம் செய்ய நினைத்தேன். என்னிடத்திற்கு அனுப்பப்பட்ட செல்வப்பொருளனைத்தையும் அவருக்குக் காண்பித்தேன். முதலாவது, சமஸ்த காரியங்களையும் அனுகூலமாய் நிறைவேற்றிய தெய்வ எத்தனத்தினுலும், இரண்டாவது, உமது முயற்சியினுலுமே எனக்கு இந்தத் திரண்ட செல்வம் கிடைத்ததென்றும், நீர் செய்த உபகாரத்திற்கு நூறுமடங்கு அதிக பிரதியுபகாரம் செய்ய இடம் பெற்றேனென்றும் சொன்னேன். பின்பு நான் அவரிடத்தில் வாங்கியிருந்த ஆயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபாய் ரொக்கத்தைத் திருப்பிக் கொடுத்தேன்; அப்புறம் சாதனவிகிதனை வரவழைத்து, மாலுமி வாக்குமூலமாய்ப் பிறந்த கடனிலுவைப் பணம் ஆறுயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து ரூபாயை அவர் கொடுத்துத் தீர்த்ததாகக் கடன் நிவிர்த்திப்பத்திரம் ஒன்று எழுதுவித்து, முறைமையானபடி

உறுதியாய் நிறைவேற்றுவித்தேன். அதன்மேல் வருஷந்தோறும் என் தோட்டத்தின் பிரயோஜனத்தை வரப் பற்றிக் கொள்ளும்படி நான் அவருக்கு அதிகாரங் கொடுத்து, எனது கூட்டாளி அவனை எனது காரியஸ்தராக ஒப்புக்கொண்டு, அவருடனே கணக்குத் தீர்த்து, வழக்கமாய் வரும் கப்பல்களில் தோட்டத்தின் பிரயோஜனத்தை அவரிடத்திற்கு அனுப்பவேண்டுமென்று கண்டெழுதி, பிரதிநிதி அதிகாரபத்திரம் ஒன்று சித்தஞ் செய்வித்தேன். அப்பத்திரத்தின் கடைசிப் பிரகாரணத்தில் ஆயுசுகாலபரியந்தம் வருஷவாரி எனது வருமானத்தில் ஆயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபாய் மாலுமிக்கும், அவர் இறந்தபின், அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய் அவர் மகனுக்கும் நான் கொடுத்துவருவதாகக் கண்டெழுதுவித்து, இந்தப்பிரகாரம் மாலுமி எனக்குச் செய்த உபகாரத்திற்கு ஈடு செலுத்தினேன்.

இனி நான் போவது எவ்விடத்திற்கென்றும், தெய்வ எத்தனமாய் என் வசம் சேர்ந்த சொத்தை வைத்து நிர்வகிக்கும் வகை என்னவென்றும் சிந்திக்கவேண்டியிருந்தது. தீவாந்தரத்தில் ஏகாந்தமாய் அடங்கியிருந்தபொழுது, எனக்கு இவ்வளவு மனக்கவலை யில்லை. அங்கே எனக்கு உள்ளதொழிய, மற்றொன்றும் வேண்டுவதுமில்லை; வேண்டுவதொழிய, மற்றொன்றையும் நான் வைத்திருக்கவுமில்லை. இப்பொழுதோ, சொத்தென்னும் பளுவான சுமையைச் சுமக்கலானேன்: ஆதலால், அதைப் பத்திரமாய் வைத்து நிர்வகிப்பது எவ்வகையென்று தீரத் தெளியச் சிந்திக்கப் பாத்தியப்பட்டேன். எனது ரொக்கத்தை ஒளித்துவைக்க மலைக்குகையுமில்லை, எவரும் கையாடுமுன் நாட்பட க்ஷேமித்துவைத்துத் துருப்பிடித்துக் களிம்பேற விடுவதற்குப் பூட்டுச்சாவியில்லாத ஸ்தலமுமில்லை. நான் அதை எவ்விடத்தில் வைக்கத் தகுமென்றாயினும், எவனை நம்பி ஒப்படை செய்யத் தகுமென்றாயினும் அறியவுமில்லை. எனது பூர்வ பிரதிபாலகராகிய மாலுமி எதார்த்தவாதிதான். அவர் ஒருவரே எனது தஞ்சம். இதுநிற்க, சொத்து விசாரணையின்பொருட்டு நான் பிரேஜில் பிரதேசத்திற்குப் போகவேண்டுமென்பதாய்க் காணப்பட்டது. எனது காரியங்களைச் சீராய் நிர்வ

கித்து, பிசகு தீர்த்து, என் சொத்துக்களை நம்பத்தக்க பெய ரிடத்தில் ஒப்புவிக்கிறவரையில் பிரேஜில் பிரதேசத்திற்குப் போகக் கருதுவது எப்படி? ஆதியில் எனக்கு இஷ்டமாயி ருந்த விதவை நம்பத்தக்க யோக்கியவதியென்று அறிந்தத ஞல், அவளிடத்திற் சொத்துக்களை ஒப்படைத்தால், அவள் எனக்குத் துரோகம் செய்யாளென்று முதலில் எண்ணமிட்டி ருந்தேன்; ஆனாலும், அவள் விருத்ததசை யடைந்தவள், தரித்திரம் பிடித்தவள். கடன்பட்டிருப்பினும் இருப்பாள். காரியம் இப்படி யிருப்பதனுல், சொத்துக்களைக்கொண்டு திரும்பவும் இங்கிலாந்திற்குப் போவதொழிய, வேறுபாயம் எனக்குத் தோன்றவில்லை.

இப்படித்தான் செய்யவேண்டுமென்று நான் உள்ளந் தெ ளிந்து தேறுவதற்கு நாலு ஐந்து மாசம் சென்றது. ஆத லால், முன்பு எனக்குபகாரம் செய்த விருத்தாகிய மாலுமிக் குப் பூரண திருப்தி யுண்டாம்படி நான் பிரதியுபகாரம் செய் ததுபோல், அதற்கு முந்தி எனது உபகாரியாயிருந்த புண் ணிய புருஷருடைய மனைவியாகிய அவ்வேழை விதவைக் கும், எதும் பிரதியுபகாரம் செய்யவேண்டுமென்று நினைத் தேன். அவள் க்ஷேமமாயிருந்தகாலத்தில் எனது சொத்தை ஒப்படைகொண்டு, என்னிடத்தில் விசுவாசமாயிருந்தவள்; எனக்கு நற்புத்தி போதித்தவள். ஆகவே, தாமதமின்றி லிஸ்பன் நகரத்திலிருக்கும் வர்த்தகர் ஒருவரைக்கொண்டு லண்டன் நகரத்தில் அவருடைய காரியகர்த்தருக்கு ஆயிரம் ரூபாய்க்கு உண்டி எழுதுவித்து அனுப்பினேன். அவ்வுண் டித்தொகையை மேற்படி காரியகர்த்தர் தாமே அவ்வித வையைத் தேடிப்போய்க்கண்டு, அவள் கையில் ஒப்புவிக்க வும், தரித்திரதசையில் வருந்தும் அவளுக்கு நான் ஜீவ னோடிருந்தால், பின்னும் திரவியசகாயம் செய்வேனென்று தேறுதல் சொல்லவும் அதில் விவரம் கண்டு எழுதுவித்தேன். மேலும், அந்தச்சமயத்தில் நாட்டுப்பிரதேசத்திலிருக்கும் என் சகோதரிகள் இருவருக்கும் தலைக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பினேன். அவர்கள் ஜீவனத்திற்கு கஷ்டப்படாதிருந் தும், குறையற்ற செல்வமுடையவர்களல்ல. ஒருத்தி வித வை; மற்றவள் கணவன் அவளைத் தன் பிராண நாயகியாய்

நேசித்து, ஆதரிக்கிறதில்லை. என் சுற்றத்தார், எனக்கு அறிமுகமானவர்கள் யாவருக்குள்ளும் எனது ரொக்கம் முழுதையும் நம்பி மனந் துணிந்து ஒப்புவிக்கத்தக்க யோக்கியர் எவருமில்லை. அத்தனை விசுவாச பாத்திரன் ஒருவனாவது இருந்தால், நான் என் சொத்தை ஒப்புவித்து, அது பத்திரமாயிருக்குமென்று மனந்தேறி, பிரேஜில் நாட்டுக்குப் பிரயாணம் போவேனே. இப்படிச் செய்தற்கு இசையாததுபற்றி வியாகுலப்பட்டேன்.

பிரேஜில் பிரதேசத்திற்குப் போய், அங்குள்ள குடிகளின் சுதந்தரம் எனக்கும் ஒருவாறு உண்டாயிருப்பதனால், அவ்விடத்திலேயே சஞ்சரிக்கவேண்டுமென்று ஒரு முறை நினைத்திருந்தும், அங்கிருப்பவர்கள் அனுசரிக்கும் சமயக் கொள்கைக்கு என் மனம் உடன்படாததனால், நாளாவர்த்தியில் அந்த நினைவை மறந்துவிட்டேன்; ஆனாலும், இப்பொழுது அவ்விடத்திற் போகாதபடி என்னைத் தடுத்தது சமயக் கொள்கையல்ல. முன்பு நான் அங்கிருக்கையில், எனது சமயத்தைப் பாராட்டாமல், அத்தேசத்தவர்களின் சமயாசாரத்தைச்சார்ந்து ஒழுகினேன். இப்பொழுதும் அப்படிச் செய்வதற்கு என் மனம் பின்னிடவில்லை. சிலவேளை சமீபகாலத்தில் இதைக்குறித்து அதிகமாய் எண்ணமிட்டு, உரோமான் சமையிகளுடன் சஞ்சரித்து, அத்தேசத்தில் இறந்துபோகச் சம்பவித்தாலோவென்று நினைக்கும்பொழுது, அவர்கள் சமயத்தை நான் அனுசரித்து நடந்ததைக்குறித்து எனக்கு மனஸ்தாபமுண்டாயிற்று. மரணகாலத்தில் அது எனக்கு மனப்பாக்கியம் தரத்தக்க உத்தம சமயமல்லவென்று எண்ணினேன்.

முன் சொன்னதையே திருப்பிச் சொல்லுகிறேன்; பிரேஜில் பிரயாணத்திற்குத் தடையாக நேர்ந்த முக்கிய காரணம் இதல்ல. என் சொத்துக்களை ஒப்புவித்துவிட்டுப் போவதற்கு எவருமில்லாததே அதன் காரணமாம். ஆனதுபற்றி, இங்கிலாந்திற்குப் போகத் தீர்மானித்தேன். அங்கே போய்ச் சேர்ந்தால், நம்பத்தக்கபெயரைச் சிநேகம் பண்ணியாவது, என் சுற்றத்தார் சிலரைக் கண்டாவது,

அவரிடத்தில் என் சொத்தை ஒப்புவிக்கலாகுமென்று எ
ணமிட்டு, எனது செல்வப்பொருள் அனைத்தையும் கொண்
இங்கிலாந்திற்குப் போக எத்தனப்பட்டேன்.

வீட்டுக்குத் திரும்பிப்போக ஆயத்தம் செய்யும்பெ
ருட்டு, பிரேஜில் துறையினின்று வந்த கப்பல்கள் மீண்டு
அவ்விடத்திற்குப் போக எத்தனப்பட்டதனால், அங்கிருந்
நடுவுநிலைமை தவறாமல் உள்ளபடி எனக்கு எழுதி யனு
பப்பட்ட வரவு செலவு நிலுவைக் கணக்குகளுக்கு உத்த
பத்திரம் எழுதி, அனுப்பத் தீர்மானித்தேன். முதலாவது
ஸேண்ட் ஆகஸ்டின் மடாதிபதி நம்பிக்கைத்துரோகம் செ
யாமல் நியாயமானபடி எனது தர்மச்சொத்தைச் செல
செய்து, பின்னும் ரொக்கமாய் வைத்திருக்கும் பதினோரா
ரத்து எழுநூற்று எழுபத்திரண்டு ரூபாயை எனக்குக் கெ
டுக்க வைத்திருப்பதாகத் தெரிவித்ததைப்பற்றி, அவருக்கு
பூர்த்தியாய் வந்தனம் சொல்லி, ஒரு கடிதம் எழுதினேன்
அந்தப் பணத்தில் ஆறுயிரத்து எழுநூற்று ஐம்பது ரூப
யை மடத்திற்கும், ஐயாயிரத்து இருபத்திரண்டு ரூபாயை
மடாதிபதி விதிக்கும் திட்டத்தின்பிரகாரம் வறியோர்
கும் கொடுக்கச்சொல்லி அக்கடிதத்திற் கண்டெழுதி
னேன். மேலும், எனக்காகக் கடவுளைப் பிரார்த்திக்கவும்
தேவ அனுக்கிரக முண்டாம்படி வேண்டிக்கொள்ளவும் சு
ணராகிய அந்தக் குருவை இரந்து கேட்டேன். இரண்ட
வது, எனது நிக்ஷேபதாரிகள் இருவரிடத்திலும் விளங்கி
திறம்பாத நீதியையும் எதார்த்தத்தையும் பாராட்டி, அவ
களை உபசரித்து ஒரு கடிதம் எழுதினேன். வெகுமதி ஏத
யினும் அவர்களுக்கு அனுப்புவதற்கு நிமித்தமில்லையே
கோடி சீமான்களாகிய அவர்களுக்குக் குறை என்ன? மூன்
றுவது, எனது கூட்டாளிக்கு ஒரு கடிதமெழுதி, அவ
முயற்சிசெய்து தோட்டத்தை மேலுமேலும் விர்த்தியாக்கி
னதையும், மனவுண்மை தவறாமல் அவ்வேலைக்குக் குறித்
துவைத்த முதற்பணத்தை வரவா விர்த்தி செய்ததையும்
பற்றி அவரை உபசரித்தேன். மேலும், இனி எனது பங்
கை நான் என் பூர்வ பிரதிபாலகராகிய மாலுமிக்கு எழு
திக்கொடுத்த அதிகார பத்திரத்திற் கண்டபடி, வைத்து

ர்வகித்து, இன்னும் விவரங் கண்டு, நான் எழுதுகிறவரை
ல் என் கணக்கிற்சேரும் பிரயோஜனத்தை மாலுமிக்கு
ுனுப்பச்சொல்லி எழுதினேன். நான் அவ்விடத்திற்கு
ரவும், மரணபரியந்தம் அங்கேயேயிருந்து குடித்தனம்
சய்யவும் அபிப்பிராயங் கொண்டிருப்பதாக அவருக் குறுதி
சான்னேன். அல்லாமலும், இக்கடிதத்துடன் இத்தாலிய
ட்டு வஸ்திரங்கள் சில அவர் மனைவிக்கும், புத்திரிகள்
ிருவருக்கும் சிறந்த வெகுமதிகளா யனுப்பினேன். அவ
நக்குப் புத்திரிகள் இருவருண்டென்னும் சங்கதி மாலுமி
கன் வாக்குமூலமாய் எனக்குத் தெரியவந்தது. இப்பட்டு
வஸ்திரங்களுடன் லிஸ்பன் கடைகளில் வாங்கின நாணய
ான அங்கிலேய அகல வஸ்திரங்கள் இரண்டும், உரப்
பான கறுப்புக் கம்பளங்கள் ஐந்தும், விலை உயர்ந்த பிலான்
டர்ஸ் கெண்டையும் அனுப்பினேன்.

இவ்வண்ணம் கணக்குப் பிசகு தீர்த்து, காரிய வரைய
றை செய்து, எனது சரக்குகளை விற்றுப் பணமாக்கி, அதற்
குண்டி முடித்தபின், இங்கிலாந்திற்குப் போகத்தகும் மார்க்
கம் எதுவென்று சிந்திக்கத் தொடங்கினேன். இது சங்க
டமாகவே யிருந்தது. நான் சமுத்திரயாத்திரை செய்து
வழக்கப்பட்டிருந்தும், இச்சமயத்தில் இங்கிலாந்திற்குச்
சமுத்திரமார்க்கமாய்ப் போவது எனக்குப் பிரீதியாயிருக்
கவில்லை. இதற்கு முகாந்தரம் இன்னதென்றறியேன். எனது
சாமான் மூட்டைகளைக் கப்பலில் அடுத்தடுத்து இரண்டு
மூன்று முறை ஏற்றுவதும் இறக்குவதுமாயிருந்து, கடைசி
யில் கடல் யாத்திரை செய்வதற்கு என் மனம் ஒருவிதத்
திலும் உடன்படாததனால், சரக்குகளை இறக்கி, சஞ்சல
சித்தமுடையவனாய் இருந்தேன்.

கடலில் எனக்குத் துரதிஷ்டங்கள் நேரிட்டது மெய்
தான். கடல் யாத்திரை செய்வதைக்குறித்து எனக்குண்
டான வெறுப்பிற்கு இதுவும் ஒரு முகாந்தரமாயிருக்கலாம்.
இவ்வித முக்கியமான முயற்சிகளில் எவனும் தன் எண்ணத்
தில் அழுத்தமாய்த் தோன்றும் ஏவுதல்களை அலட்சியம் செய்
யாதிருக்கக்கடவன். நான் இரண்டு கப்பல்களைத் தெரிந்து,
ஒன்றில் எனது சாமான்களை ஏற்றினேன். ஒன்றில் ஏற்

றுவதாக மாலுமியுடன் பேச்சிட்டிருந்தேன். பிறகு மே சொல்லியபடி என் மனம் தடுமாறியதுபற்றி, ஏற்றிய சர கை இறக்கினேன். பிற்பாடு அக்கப்பல்கள் இரண்டும் கை கடந்துபோயின. ஒன்றை அல்ஜீரியர் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். மற்றது டார்பேய்க்குச் சமீபத்தில் கட லில் ஒற்றி வந்திருக்கும் முனைதட்டி உடைந்தது; மூன்று பெயர்தவிர, அதிற் போனவர்கள் அனைவரும் முழுகி இறந் துபோனார்கள். ஆகவே, அவ்விரண்டு உருக்களில் எதிலா வது நான் ஏறிப் போகச் சம்பவித்தால், தௌர்ப்பாக்கிய னாவேன்.

இவ்வாறு கிலேசமுற்றிருந்து, யாவையும் எனது இஷ் டராகிய கிழ மாலுமிக்குத் தெரிவிக்க, அவர் கடல் மார்க் கமாய்ப் போகவேண்டாமென்று வற்புறுத்திச் சொல்லி, என் னைத் தடுத்து, நீ கரைமார்க்கமாய் வாதிபரியந்தம் போய், பிஸ்கே கடற்குடாவைத் தாண்டி ரோச்சேலிற் சேர்ந்தால், அங்கிருந்து அச்சமின்றிக் கரைமார்க்கமாய்ப் பாரீஸ் நக ரத்திற் சுகமாய்ப் போய்ச் சேரலாம்; அப்புறம் கலே துறைக் குப் போய்க் கப்பலேறி, டோவரில் இறங்கலாம்; அல் லது மெட்ரீட் நகரத்திற்குப் போய், அங்கிருந்து கலே துறை சேருமளவும் பிரான்சு தேசத்திற்கூடாக வழிமுடி யக் கரைமார்க்கமாய்ப் போகலாம் என்பதாகச் சொன்னார். கலே துறையில் மரக்கலமேறி டோவரிற் சேர்வதொழிய, மற்றப்படி கடல்மார்க்கமாய் நெடும்பிரயாணம் செய்வது என் மனதிற்குச் சமாதானப்படாததனால், நான் வழிமுடியக் கரைமார்க்கமாய்ப் பிரயாணம் போகவேண்டுமென்று மனந் தேறினேன். துரிதமாய்ப் போய்ச் சேர்வதற்கு நிமித்தமில் லாததனாலும், வழியிற் செல்லும் செலவை நான் பொருள் செய்யாததனாலும் இதுதான் எனக்கு இதமான மார்க்கமா யிருந்தது. இவ்வழி பின்னும் எனக்கு இன்பமாயிருக்கும் பொருட்டு, விருத்தராகிய மாலுமி என்னுடன் பிரயாணம் செய்ய இஷ்டப்பட்டிருந்த லிஸ்பன் நகரத்து வர்த்தகர் ஒரு வருடைய புத்திரராகிய அங்கிலேய துரை ஒருவரை அழைத் துக்கொண்டு வந்தார். அதன்மேல் பின்னும் இரண்டு அங்கி லேய வர்த்தகர்களும், போர்த்துகேய வாலிபர் இருவரும் எங்

களுடன் சேர்ந்தார்கள். இவ்விரண்டுபெயர் பாரீஸ் நகரம் வரையில் மாத்திரம் எங்களுடன் கூடிப்போக விருந்தார்கள். ஆகவே, ஒருவருக்கு ஒருவர் துணையாகப் பிரயாணப்படுதற்குக் கூடிய நாங்கள் ஆறுபெயர். ஏவற்காரர் ஐந்துபெயர். இவ்வைந்துபெயரில் ஒருவன் அவ்வர்த்தகர் இருவருடைய ஏவலாள். மற்றொருவன் போர்த்துகேய வாலிபருக்குக் குற்றேவல் செய்பவன். அவர்கள் செலவைச சுருக்கும்படி இருவருக்கு ஒருவன் விகிதம் இரண்டு ஏவற்காரரைத் தங்கள் சேவகத்தில் அமர்த்தினார்கள். எனது சேவகர் இரண்டுபெயர். அவர்களில் ஒருவன் வழியில் குற்றேவல் செய்யும்படி நான் வைத்துக்கொண்ட அங்கிலேய கடலோடி. மற்றவன் எனது அடியான் சுக்கிரன். அவன் இவ்விடத்திற்கு அன்னியனாதலால், வழியில் எனக்குத் தொண்டு செய்யும் திறமுள்ளவனல்ல.

இத்தனைபெயருடன் நான் லிஸ்பன் நகரத்தினின்று பிரயாணப்பட்டேன். நாங்கள் அனைவரும் குதிரை யேறி, ஆயுதபாணிகளாய்ச் சென்றதனால், ஒரு சிறிய குதிரைப் பட்டாளத்திற்குச் சமானமாயிருந்தோம். இந்தக் கூட்டத்தில் நான் பருவம் முதிர்ந்தவனாதலாலும், என் சேவகத்தில் இரண்டு வேலையாட்களிருந்ததனாலும், இந்தப் பிரயாணம் முழுதும் எனதுமூலமா யுண்டானதனாலும், என் கூட்டாளிகள் என்னையே தங்கள் ராணுவபதியென்று கௌரவப்படுத்தினார்கள்.

முன்பு சமுத்திரயாத்திரை செய்தபொழுது, நான் அன்றன்று நடந்த சங்கதிகளைச் சொல்லி, உங்களுக்கு வருத்தம் கொடுக்கவில்லையே. இப்பொழுதும் கரைமார்க்கமாய்ப் பிரயாணம் செய்தபொழுது, தினம் தினம் நிகழ்ந்த சங்கதி வரலாறுகளைச் சொல்லி, நான் உங்களைச் சலிக்கச்செய்யக் கருதவில்லை; ஆனாலும், சங்கடமான இந்த நெடும் பிரயாணத்தில் எங்களுக்குச் சம்பவித்த சில ஆபத்து விபத்துகளைச் சொல்லாமல் விடுவது தகுதியல்ல.

ஸ்பானிய ராஜதானியாகிய மேட்ரீட் நகரத்திற் போய்ச் சேர்ந்தபொழுது, நாங்கள் அவ்விடத்திற்கு அன்னியராத

லால், ஸ்பானிய அரமனைமுதலிய நூதனங்களைப் பார்க்கும்படி அங்கே சிலகாலம் தங்க விரும்பியிருந்தோம். அப்பொழுது வேனிற்காலத்தின் பிற்பாகமாதலால், நாங்கள் தீவிரம் செய்து, அக்டோபர் மாசமத்தியில் மேட்ரீட் நகரத்தை விட்டு நீங்கினோம். நவாரின் எல்லையிற் சேர்ந்தபொழுது, பிரான்சு தேசத்திற்கும் ஸ்பானியாவுக்கு மிடையில் இருக்கின்ற பிரேனீஸ் மலைத்தொடரின் பிரான்சு தேசத்திற்கு எதிர்முகமான சாரலில் உறைந்த பனி அபரிமிதமாய் வருஷிக்கிறதென்றும், பிரயாணிகள் பலர் அபாயத்திற்கு அச்சமின்றித் துணிந்துபோக முயன்றும், தங்களால் மாளாதெனக் கண்டு, பம்பிலியூனவிற்குத் திரும்பி வந்துவிட்டார்களென்றும், வழியில் எதிர்ப்பட்ட சில நகரங்களிற் செய்தி கேட்டு, அச்சமுற்றிருந்தோம்.

பம்பிலியூனவிற் சேர்ந்தபொழுது, அவ்விடத்திலும் உறைந்த பனி அதிகமாய் வருஷிக்கக் கண்டோம். வஸ்திரம் தரித்துக்கொண்டு சகித்திருக்கக் கூடாத மிகுந்த உஷ்ணமுள்ள நாட்டுப் பிரதேசங்களில் எப்பொழுதும் வாசமாயிருந்து வழக்கப்பட்ட எனக்கு அந்தக் குளிரைத் தாங்குவது மிகக் கடினமாயிருந்தது. உஷ்ணம் அதிகரித்த ஓல்ட் காஸ்டைல் என்னும் இடத்தினின்று ஆகப் பத்துத் தினங்களுக்குமுன் பிரயாணப்பட்ட நாங்கள் பிரேனீஸ் பர்வதங்களினின்று வீசும் தாங்குதற்கரிய மிகக் கடுமையான குளிர் காற்றில் அகப்பட்டு, நடுநடுங்கி, விறைத்து, கை விரல் கால் விரல்கள் சிதையத்தக்க அபாயஸ்திதியிலிருந்தபொழுது, எங்களுக்குண்டான ஆச்சரியத்திலும் உபத்திரவம் அதிகமல்ல.

பர்வதத்தொடர் உறைந்த பனிப்படலத்திற்குள் மறைந்ததைக் கண்டு, சுக்கிரன் கெடிகலங்கிக் குளிரால் விறைத்ததைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. பம்பிலியூனவிற்குப் போனால், சங்கடம் தொலையுமென்றெண்ணி அவ்விடத்திற் சேர்ந்தபொழுது, அங்கே பலநாள்வரையில் மிகக் கடுமையாய் உறைந்த பனி வருஷித்தவண்ணமாயிருந்ததுபற்றி, மாரிகாலம் பருவத்திற்குமுன் விபரீதமாய் வந்ததென்று

ஜனங்கள் சொன்னார்கள். முன்னமே போக்குவரவு செய்வ தற்குக் கடுவழியாயிருந்த சாலைகளில் இப்பொழுது சிறிதா பினும் போக்குவரவு செய்யக் கூடாதிருந்தது. விரித்துரைக் கவேண்டுவதேன்? சில விடங்களில் செல்லக்கூடாதபடி உறைந்த பனிப்படலம் மிகக் கனதியாயிருந்தது. அது வட நாட்டுப் பிரதேசங்களிலிருக்கும்வண்ணம் கற்போல் இறுகி உரத்திருக்கவில்லை. ஆதலால், அதில் அடிஎடுத்து வைக் கத் துணிந்தால், முழுகி இறந்துபோவதொழிய வேறு கதி யில்லாதிருந்தது. நாங்கள் பம்பிலியூனுவில் சரியாய் இரு பதுநாள் தங்கியிருந்தோம். மாரிகாலம் நெருங்கிவந்ததை யும், அதற்குமுன் எவ்வருஷத்திலாவது அத்தனை கடுமை யாய் ஐரோப்பாவில் மழை வருஷிக்காததனால், இனிக் குளிர் உபத்திரவம் அதிகரிப்பதொழிய குறையாதென்பதையும் கண்டு நாங்கள் பண்டரேபியாவிற்குப் போய், அங்கிருந்து போர்கூவிற்குக் கப்பலேறிப் போய்ச் சேர்வது நல்லதென்று சொன்னேன். அது மிகவும் குறுகிய பிரயாணந்தான். இதைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டிருக்கையில், பிரான் சிய துரைகள் நாலுபெயர் வந்தார்கள். ஸ்பானிய எல்லை யில் கணவாய்க்கு இப்புறத்தில் நாங்கள் தடைப்பட்டு நின் றதுபோல், அவர்களும் பிரான்சிய எல்லையில் கணவாய்க்கு அப்புறத்தில் தடைப்பட்டு நிற்கும்பொழுது, அவர்களுக்கு வழிகாட்டி ஒருவன் எதிர்ப்பட்டான். அவன் அவர்களை அழைத்துக்கொண்டு, லாங்குவிடாக் மாகாணத்தின் முனைக் குச் சமீபத்தில் உள்ள பிரதேசத்தின் மார்க்கமாய் நடந்து, பனி உபத்திரவம் அதிகம் இல்லாதவழி பிடித்துச் சென்று, மலையைத் தாண்டி, இவ்விடத்தில் கொண்டுவந்து சேர்த் தான். உறைந்த பனி அதிகரித்த விடங்களில் தாங்களும், தங்கள் குதிரைகளும் கால் புதையாமல் நடக்கத்தக்கதாக அது இறுகிக் கடினமாயிருந்ததென்று சொன்னார்கள். இச் சங்கதிகேட்டு, மேற்குறித்த வழிகாட்டியை அழைப்பித்து, எங்களுக்கு வழித்துணையாய் வரக் கேட்டோம். அதற்கு அவன், "உறைந்த பனி அபரிமிதமாயுள்ள இவ்விடங்களில் தரையில் இரைக்கு வழியின்றிப் பசியுபத்திரவத்தால் உக் கிரங்கொண்டு, எதிர்ப்படுவோரைப் பட்சிக்கும்படி, இம்மலை

யடிவாரத்தில் பெரும்பாலும் கோநாய் முதலிய துஷ்ட மிருகங்கள் வெளிப்படுவது வழக்கமாதலால், அவைகளுக்குத் தப்பித்துக்கொள்ளும்படி ஆயுத பலத்துடன் வருவீர்களானல், உறைந்த பனியுபத்திரவத்திற்கு அச்சமின்றி நான் உங்களை மேற்படி பிரான்சியர் வந்த மார்க்கமாய் அழைத்துப்போக உடன்படுவேன்" என்ருன். அதுகேட்டு, நாங்கள், "முக்கியமாய்ப் பிரான்சு தேசத்தின் எல்லையில் மலையடிவாரத்தில் வழிப்போக்கர்களுக்கு ஒருவித இருகாற் கோநாய்களால் உபத்திரவம் நேரிடுவதுண்டென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்வுபத்திரவத்திற்கு அஞ்சவேண்டாமென்று நீ எங்களுக்கு உறுதி சொல்வாயானல், கோநாய் முதலிய துஷ்ட மிருகங்களை ஜயிக்கத்தக்க ஆயுத பலத்துடன் வருவோமென்று சொன்னோம். அவன் நாங்கள் போகும் மார்க்கத்தில் அவ்வித அபாயம் ஒன்றுமில்லையென்று நிச்சயித்துச் சொன்னுன். அவன் வாய்ப்பிறப்பைக் கேட்டுத் திருப்தி அடைந்து, தாமதமின்றி அவனுடன் கூடிப் போகச் சம்மதித்தோம். அன்றியும், முன்பு போகத் துணிந்தும் மாளாததனுல், திரும்பி வந்த துரைகள் பன்னிரண்டு பெயரும் வேலைக்காரருடன் எங்கள் கூட்டத்திற் சேர்ந்து வந்தார்கள். அவர்களில் சிலர் பிரான்சியர், சிலர் ஸ்பானியர்.

மேற்சொல்லியவாறே வழித் துணைவனுடன் பம்பிலியூனவினின்று நாங்கள் பிரயாணப்பட்டது நொவம்பர்மீ 15வ. அவன் எங்களை முன்பு மெட்ரீட் நகரத்தினின்று நாங்கள் இவ்விடத்திற்கு வந்த சாலைமார்க்கமாய் இருபது மைல் தூரமட்டும் அழைத்துக்கொண்டு போனது கண்டு, எனக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. இரண்டு ஆறு தாண்டி, தரை சமமான நாட்டுப் பிரதேசத்திற் சேர்ந்தபொழுது, தேசம் உஷ்ணமாகவும், கண்ணுக்கு இன்பமாகவும் இருந்தது. உறைந்த பனி சுத்தமாய் இல்லை. அப்புறம் சடிதியில் இடப்புறமாகத் திரும்பி, அவன் வேறு ஒரு மார்க்கம் பிடித்து, மலைத்தொடருக்குச் சமீபத்தில் எங்களைக் கொண்டு போய்ச் சேர்த்தான். குன்றுகளையும், செங்குத்தான மலைகளையும் கண்டு, எங்களுக்கு மிகுந்த அச்சமுண்டானது மெய்தான்; ஆனுலும், அவன் எத்தனையோ சுற்றுச் சுழற்சி

யான மார்க்கங்களால் எங்களை இட்டுக்கொண்டு போனதனால், உறைந்த பனி அதிகமாய் இருக்குமிடத்திற் சேராமலும், மலையேறும் சங்கடம் தோன்ருமலும் அதன் கொத்தைத் தாண்டி, சடிதியில் லாங்குவிடாக், காஸ்கனி என்னும் சிறப்பும் செழுமையுமான நாட்டுப் பிரதேசங்களைக் கண்ணுக்கெதிரே காண்பித்தான். பயிர் பச்சைகள் செழித்து வளரும் பசுமையான தோற்றமுள்ள அம்மலைநாடுகள் கண்ணுக்கு அலங்காரமாயிருந்தன. நாங்கள் அந்நாடுகளில் சேர்வதற்கு இன்னும் நெடுந்தூரமட்டும் ஒப்பமற்று மேடும் பள்ளமுமாயிருந்த வழிபிடித்துப் போகவேண்டியிருந்தது. ஒரு பகலும் இரவும் வழிநடக்கக் கூடாதபடி சிறிதும் ஓயாமல் உறைந்த பனி வருஷித்ததனுல், எங்களுக்குச் சற்று மனவருத்த முண்டாயிற்று. வழித்துணைவன் இனிச் சீக்கிரத்தில் உறைந்த பனி உபத்திரவம் தொலையுமென்று எங்களைக் கிலேசமற்றிருக்கச் சொன்ஞன். வழி தொலையத் தொலைய, நாளுக்குநாள் தரை இறக்கமாயிருந்தது. வர வர வடக்குமுகமாய்ச் சென்றேம். எதற்கும் வழித்துணைவன் இருக்கிருனென்று அவனை நம்பி தொடர்ந்து போனேம்.

ஒருநாள் சாயரக்ஷை சூரியன் அஸ்தமிக்க இரண்டுமணி நேரத்திற்குமுன் எங்கள் வழித்துணைவன் சற்றே கண்ணுக்கெட்டாத் தூரத்தில் எங்களுக்கு முந்திச் செல்லும்பொழுது, சடிதியில் துஷ்ட விலங்குகளாகிய கோநாய்கள் மூன்றும், அவைகளுக்குப் பின்னே கரடி ஒன்றும் அடர்ந்த காட்டின் பக்கத்திலுள்ள ஒரு குகைக்குள்ளிருந்து வெளிப்பட்டன. அவற்றில் இரண்டு கோநாய்கள் எங்கள் வழித்துணைவனை இலக்காய்க் குறித்து, நெருங்கிப்போயின. அவன் எட்டாக் கையில் இருக்கச் சம்பவித்தால், நாங்கள் நெருங்கிப் போய், அவனைத் தப்புவிக்குமுன், அவன் கோநாய்களால் பட்சிக்கப் படுவானென்பதற்கு ஐயமில்லை. ஒரு கோநாய் வழிகாட்டி ஏறிப்போன குதிரைமேற் பாய்ந்து, அதைக் கடித்து, இறுக்கிப் பிடித்துக்கொள்ள, மற்றது அவன்மேற் பாய்ந்து நெருங்கி, அவனைப் பட்சிக்கப் போனதனுல், இடுப்பில் மாட்டியிருந்த கைத்துப்பாக்கியை இழுத்து வெடிதீர, அவனுக்கு அவகாசமில்லை, ஸ்திர சித்தமுமில்லை. அவன் மனம் பதறி,

மிகவும் உரக்கக் கூவினன். எனது அடியான் சுக்கிரன் எனக்குப்பின் நெருங்கிவந்ததனல், குதிரையை முடுக்கிச் செலுத்திக்கொண்டு முந்திப் போய், நடந்த சங்கதி என்ன வென்று பார்க்கச் சொன்னேன். விரைந்துபோய், வழி காட்டியைக் கண்டவுடன் அவனும் உரக்கக் கூவி; "எஜமானே! எஜமானே!" எனக் குரவையிட்டான். குரவையிட்டும், மனத்தீரமுடையவனுய், தடுமாறிப் பரிதபித்த வழி காட்டி நின்ற இடத்திற்கு நெருங்கிப்போய், அவன்மேல் விழுந்து தாக்கப்போன கோநாய்க்குத் தலையிற் குண்டு ஏறும்படி, தன் கைத்துப்பாக்கியால் வெடிதீர்த்தான்.

உற்ற சமயத்தில் எனதடியான் சுக்கிரன் உதவிசெய்யப் போனது பரிதாபஸ்திதியில் இருந்த வழிகாட்டியின் அதிர்ஷ்டந்தான். சுக்கிரன் தன் ஜன்மதேசத்தில் கோநாய்களைப் பெரும்பாலும் கொன்று வழக்கப்பட்டிருந்ததனல், அச்சமின்றிக் கிட்டப்போய், இந்தக் கோநாயைச் சுட்டு விழுத்தினன். அவனைத்தவிர, எங்களில் எவனுவது போகச் சம்பவித்தால், நெருங்கிச் செல்லத் துணியாமல் எட்ட நின்று சுடுவோம். சுட்டால், குண்டு கோநாய்க்குப் படாதிருக்கவுங் கூடும். இலக்குத் தவறி வழிகாட்டிக்குப் பட்டு, அவன் இறந்தாலும் இறப்பான்.

சுக்கிரன் குண்டு பிரயோகித்த வெடிஅதிர்ச்சி கேட்ட க்ஷணமே இருபக்கத்திலும் கோநாய்கள் ஊளையிட்ட மிகுந்த பயங்கரமான சத்தங் கேட்டு, நாங்கள் எல்லாரும் திடுக்கிட்டு அச்சமுற்றிருந்தோம். அச்சத்தத்தை என்னிலும் அதி வீர சூரன் கேட்பினும், பதறிக் கெடிகலங்குவான். கோநாய்கள் ஊளையிட்ட சத்தம் மலைகளில் தாக்கி அதைத்துப் பிரதிதொனி உண்டானதனல், திரளான கோநாய்கள் பக்கத்திற் சேர்ந்திருப்பதாக நினைத்தோம். நாங்கள் கிலேசமற்றிருக்கும்படி அவ்விடத்தில் கோநாய்கள் அநேக மில்லையென்று சொல்லக்கூடாது. ஒருவேளை திரளாய்ச் சேர்ந்திருக்கவுங் கூடும். எப்படியும் இந்தக் கோநாயைச் சுக்கிரன் சுட்டுக் கொன்றது கண்ட க்ஷணமே குதிரைமீதேறி, அதன் தலையைக் கௌவிப் பிடித்துக்கொண்டிருந்த மற்றக் கோநாய்

ஓட்டம் பிடித்தது. குதிரையின் தலையில் இருந்த கடிவாளத்து வார்க்குமிழில் கோநாயின் பல் ஏறியதனால், குதிரைக்குக் காயமில்லை. வழிகாட்டி உக்கிரமுள்ள கோநாயால் கையிலும், முழந்தாளுக்கு மேலே தொடையிலுமாக இரண்டிடத்திற் கடிபட்டு, மிகவுங் காயப்பட்டான். அவன் கோநாயோடு எதிர்த்து, அதன் வாய்க்குத் தப்புவித்துக் கொள்ளும்படி சிறிது பிரயத்தனம் செய்தும், குதிரை மிரண்டு தடுமாறியதனால், அவன் குலுங்கித் தரையில் விழ எத்தனமாயிருந்த சமயத்தில், சுக்கிரன் நெருங்கிப்போய், கோநாயைச் சுட்டு விழுத்தினான்.

சுக்கிரன் தீர்த்த வெடிச்சத்தம் கேட்டவுடன் நாங்கள் அலட்சியமாயிருந்து முன்போல மெதுவாய்ச் செல்வோமா? வழி சங்கடமானதாயிருந்தும், நேரிட்ட ஆபத்து என்னவென் றறியும்பொருட்டுக் குதிரைகளைக் கூடிய விரைவில் முடுக்கிச் செலுத்திக்கொண்டு போனோம். முன்பு கண்ணெறிந்து நெடுந்தூரம் பார்க்கக் கூடாதபடி தடையாயிருந்த நெருங்கிய விருட்சங்களைத் தாண்டி, மைதானத்திற் சேர்ந்தவுடன், வழிகாட்டிக்கு ஆபத்து நேரிட்டதென்றும், சுக்கிரன் அந்த ஆபத்திற்கு அவனை விலக்கிக் காத்த வகை இன்னதென்றும் மயக்கமறக் கண்டோம்; ஆனாலும், அவன் சுட்டுக் கொன்ற விலங்கு என்ன ஜாதியென்று நாங்கள் உடனேயறியவில்லை.

## 20. அத்தியாயம்.

*சுக்கிரனுக்கும், ஒரு கரடிக்கும் அபூர்வ சண்டை நடந்தது. ஒரு சேனை கோநாய்களுடன் பயங்கரமான யுத்தம் நடந்தது. இங்கிலாந்தில் க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்து, அங்கே எனது காரியங்களை நிறைவேற்றியது. நான் மணஞ்செய்ததும், எனக்குச் சந்ததி யுண்டானதும்.*

இதற்குப்பின் சுக்கிரனுக்கும் கரடிக்கும் நடந்த சண்டையில் சுக்கிரன் மிகுந்த வீரதீரமாய்ப் போர்செய்து, மிகவும் ஆச்சரியமானவிதமாய் அதை ஜயித்து, வெற்றி சிறந்தான். முன்பு இத்தனை பிரபல யுத்தம் ஒருபொழுதும்

நடந்ததில்லை. முதலில் சுக்கிரனைக் கரடி கடித்துக் கொன்றுபோடுமென்று அச்சமுற்றுத் தடுமாறினோம். அப்புறம் எங்கள் தடுமாற்றம் நீங்கிற்று. சண்டை மிகு வினோதமான வேடிக்கையாயிருந்தது. கரடி கோநாயைப்போல விரைந்து ஓடத்தக்க லேசான உடலுள்ளதல்லவே. அது தடித்துத் திமிர்த்துப் பருத்தவுடலும், மந்தகதியுமுள்ளது. ஆனதுபற்றி, அதற்குரிய முக்கிய லட்சணங்கள் இரண்டு. அவ்விரண்டுமே பெரும்பாலும் அதன் நடக்கைக்குப் பிரமாணமாம். முதலாவது, நரமாமிசத்தைப் பட்சிப்பது அதன் இயற்கையல்ல. 'பசித்தவன் தின்னாததும் இல்லை, பகைத்தவன் சொல்லாததும் இல்லை' என்னும் பழமொழிப்படி தரை எங்கும் உறைந்த பனிமயமாய் இருக்குஞ்சமயத்தில், பசி உபத்திரவத்தால் கரடிக்கு ஏதேது விபரீதமுண்டாகுமோ அறியேன்; ஆனாலும், மனுஷர் தாமாய்த் தொடர்ந்து தாக்கப்போனாலன்றிக் கரடி சாதாரணமாய் அவர்களோடு எதிர்க்கிறதில்லை. மனுஷர் கண்ணுக் கெதிரே காட்டில் கரடியைக் காணும்பொழுது, அதைத் தீண்டாமலும் அதனுடன் தலையிட்டுக்கொள்ளாமலும் இருப்பார்களானால், அது அவர்களைத் தீண்டவும் மாட்டாது, திரும்பிப் பார்க்கவும் மாட்டாது. வழியில் எதிர்ப்படும் கரடிக்கு மரியாதைத் தாழ்வொன்றும் செய்யாமல், மனுஷர் ஜாடையாய் வழிவிலகிப் போகவேண்டும். அது அற்ப அபசாரத்தையும் சகியாத மிகுந்த உரோசமுள்ள பிரபுக்குச் சமானம். எந்த ராஜகுமாரன் எதிர்ப்படினும், ஒரு அடித்தூரமாவது அது வழிவிலகிப் போகாது. கரடியைக் கண்டு பயப்படுவோர் அவ்வழியை விட்டு, வேறு வழிபிடித்து நிற்காமல் நடந்துபோகவேண்டும். தாமதித்து நின்று, விழித்தகண் ணிமைக்காமல் அதைப் பார்த்தால், அப்படிச் செய்வது நிந்தையென்று அதற்குக்கோபமுண்டாகும். கைவிரற் பரிமாணமுள்ள சிறிய குச்சையாவது அதன்மேற் பட எறிந்தால், அல்லது வீசினால், இந்த மானபங்கத்தைச் சிந்தையில் வைத்து, தன் கருமத்திற் கண்ணாயிருப்பதை விட்டு, அது அப்படிச் செய்தவனைப் பழிசாதிக்கத் தொடர்ந்துபோம். அது தனக்கு வரும் நிந்தைக்கு ஈடுசெய்து, தன் கௌரவத்தைக் காத்துக்கொள்

ளாமல் விடாது. இதுதான் அதற்குரிய முக்கிய குணம். அதற்கு ஒரு முறையாவது கோபம்மூட்டுகிறவர்களை இரா பகல் என்னும் பேதமின்றி, அது மிகத் துரிதமாய்த் தொடர்ந்துபோய் மறித்து மேல்விழுந்து, க்ஷாத்திரம் சாதிக்காமல் ஒருபொழுதும் விடாது. இப்படிச் செய்வது அதற்குரிய இரண்டாவது குணம்.

எனது அடியான் சுக்கிரன் எங்கள் வழிகாட்டியைக் கோநாய்க்குத் தப்புவித்தபின், நாங்கள் அவனிடத்திற் போய்ச் சேர்ந்தோம். அப்பொழுது சுக்கிரன் வழிகாட்டியைக் குதிரையினின்று இறக்கிவிட்டான். கோநாய் கடித்துக் காயப்பட்டுக் கெடிகலங்கி யிருந்ததனால், குதிரையினின்று இறங்க அவனுக்கு வசமில்லாதிருந்தது. மிகப் பருத்த கரடி யொன்று சடிதியிற் சற்றுத்தூரத்தில் வனத்தினின்று வெளிப்பட்டு வருவது கண்டோம். அத்தனை பிரமாண்டமான கரடியை நான் அதற்குமுன் எப்பொழுதும் கண்டதில்லை. கண்டவுடன் நாங்கள் அனைவரும் சற்றுப் பிரமை யடைந்தோம். சுக்கிரன் அதைக் கண்டபொழுது, அந்த வீரனுக்குக் களிப்பும், கனதீரமும் உண்டாயினவென்று அவன் முகக்குறியால் வெளிப்பட்டது. அவன் கரடியைக் கைவிரலாற் சுட்டி: "ஹோ, ஹோ, ஹோ!" என மூன்றுமுறை கூவி, "எஜமானே! அதனுடன் கைகலந்து சண்டை செய்வதற்கு எனது அங்கமெல்லாம் பதறுகின்றது, விடைதாரும்; வேடிக்கை காண்பித்து, உங்களைக் கெக்கலிகொட்டிச் சிரிக்கப்பண்ணுவேன்" என்று ஆவலுடன் சொன்னான்.

அந்தப் பயலுக்கு இவ்வளவு களிப்புண்டானது கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு: "அடா, முட்டாள்! கரடி உன்னைப் பட்சித்துப்போடுமே, ஏன் பதைக்கிறாய்?" என்றேன். அதற்கு அவன், "என்னைப் பட்சித்துப்போடுமா! என்னைப் பட்சித்துப்போடுமா!" என இரண்டுமுறை சொல்லி, "நான் அதைப் பட்சித்துப்போடுவேன், நான் உங்களுக்கு வேடிக்கை காண்பித்துச் சிரிப்புண்டாக்குவேன்; நீங்கள் இங்கே நில்லுங்கள், நன்றாய்ச் சிரிக்கத்தக்க வேடிக்கை பண்ணுவேன்" என மொழிந்து, தரையில் உட்கார்ந்து, க்ஷணப்

பொழுதில் தனது நெடும் பாதாட்சைகளைக் கழற்றி, அங்கி றைக்குள் வைத்திருந்த தொடுதோலை எடுத்து மாட்டிக் காண்டு, குதிரையை எனது மற்றச் சேவகனிடத்திற் கொடுத் விட்டு, துப்பாக்கி கைக்கொண்டு, வாயுவேகமாய்த் தீவி து ஓடினன்.

காடி எவர்விஷயத்திலும் தலையிட நாடாமல், தன் பராக் கில் மெல்ல நடந்துவந்தது. சுக்கிரன் சற்று நெருங்கிப் போனபின், தான் சொல்வதைக் காடி அறியுந்தரமுள்ள தென்று பாவித்து, "கேள், கேள், நான் உன்னுடன் பேசப் போகிறேன்" என்று அதற்குக் கூவிச் சொன்னன். நாங்கள் காஸ்கனிப் பக்கத்திலுள்ள மலைச்சரிவைத் தாண்டி, மிகு விஸ்தாரமான வனத்தில் இறங்கி, நெடுந்தூரத்தில் வந்தோம். அந்நாட்டுப் பிரதேசத்தின் தரை சமமாகவும், மரம் செடி அடர்ந்திராத வெளியாகவும் இருந்தது; ஆனாலும், அங்கங்கே அநேக விருக்ஷங்கள் சிதறுண்டிருந்தன. காடியிலும் அதி தீவிரமாய் ஓடின சுக்கிரன் சீக்கிரத்தில் முந்திப்போய், அதை மறித்து, பெருங் கல்லொன்று எடுத்து, இலக்குத் தவருமல் அதன் தலையிற்பட எறிந்தான். காடிக்கு அவன் எறிந்த எறி மதிலிற்படக் கல்லெறிந்ததுபோலிருந்தது. சற்றுவது உறைக்கவில்லை; ஆனாலும், சுக்கிரனுடைய அபிப்பிராயத் திற்கு அவ்வெறி அனுகூலப்பட்டது. சிறிதும் அச்ச மில்லாத அந்த வீரன் காடியைக் கல்லால் எறிந்தது காயப் படுத்த அல்ல, தன்னைத் தொடரும்படி தூண்டிவிடவும், அவ் வேடிக்கையை நாங்கள் பார்த்துச் சிரிக்கவுந்தான். எறி பட்ட காடி அவனைக் கண்டவுடன் திரும்பி, எட்டி அடி வைத்துத் தாண்டித் தாண்டி, அவனைத் தொடர்ந்து, அபூர்வ தீவிரகதியாய் ஓடிற்று. அதன் ஓட்டமும், மத்தியகதியாய்ப் பாயும் குதிரைப்பாய்ச்சலும் ஒன்றுக்கொன்று சமமாயிருக் கலாம். சுக்கிரன் துரிதமாய்ப் பறந்து, எங்களுக்கு நேரே திரும்பி, எங்கள் உதவியை நாடியவன்போல் ஓடிவந்தான். ஆனதுகொண்டு, தாமதமின்றிக் காடியைச் சுட்டு விழுத்திச் சுக்கிரனைத் தப்புவிக்க நாங்கள் அனைவரும் எண்ணமிட்டி ருந்தோம். தன் கருமத்தின்பேரில் வேறொரு மார்க்கத்தில் போன காடியைச் சுக்கிரன் எங்களிடத்திற்குத் திருப்பிக்

கொண்டுவந்ததுபற்றி எனக்குக் கடுங்கோபமுண்டாயிற். அவன் கரடியை எங்களிடத்திற்கு வரும்படி திருப்பிவிட் பின், தான் வந்தவழியை விட்டு வேறுமார்க்கம் பிடித்து போனது கண்டு, எனக்குப் பின்னும் அதிக சினம் மூண்ட அச்சமயத்தில் நான் உரக்கக் கூவி, "அடா நாயே! இப் டித்தானு நீ எங்களைச் சிரிக்கப்பண்ணுவது? இங்கே வா தொடரும் துஷ்ட விலங்கை நாங்கள் சுட்டு விழுத்தும் படி உன் குதிரைமேல் ஏறிக்கொள்" என்று சொன்னேன். எனது சொற்கேட்டு, அவன் "சுடவேண்டாம்; சுடவேண் டாம்; பதருமல் நில்லுங்கள்; வாய்கொண்டமட்டும் சிரிக்கத் தக்க வேடிக்கை காண்பீர்கள்" என்று குரல் எழுப்பிக் கூவிய பின், கரடியிலும் இருமடங்கு அதிக தீவிரமாய் ஓடும் திற முள்ளவனுதலால், எங்களுக்கு ஒரு பாரிசமாய்த் திரும்பி, தன் அபிப்பிராயத்தை நிறைவேற்றுதற்கு அனுகூலமான பாரிய சிந்தூர விருட்சம் ஒன்றைக் கண்டு, தன்னைத் தொட ரும்படி சிரக்கம்பம் செய்து, பின்னும் ஒரு பங்கு அதிக தீவிரமாய் ஓடி, அம்மரத்தின் அடிக்கு ஐந்து ஆறு கஜ தூரத் தில் துப்பாக்கியை வைத்துவிட்டு, அதி துரிதமாய் மரத்தில் ஏறினன். கரடியும் சீக்கிரத்தில் மரத்தண்டை போய்ச் சேர்ந் தது. நாங்கள் சற்றுத் தூரத்திற் போனேம். துப்பாக்கி யைக் கண்டு, கரடி தாமதித்து நின்று, மோந்து பார்த்தபின், அதைவிட்டு நீங்கி, அதன் உடல் பருத்துத் திமிர்த்துப் பளுவாயிருந்தும், ஒரு பூனையைப்போல மிக எளிதாய் மரத் தில் ஏறிற்று. எனது அடிமைப்பயல் சுக்கிரன் மரத்தில் ஏறியிருந்தது மௌட்டியமென்றெண்ணி, அவனுக்குத் தினைத் துணை அறிவாயினும் இல்லாததுபற்றி மிகுந்த பிரமை யடைந்தேன். கரடி மரமேறினது கண்டு, நாங்கள் அதற் குச் சமீபத்தில் சிரிக்கத்தக்க வேடிக்கை ஒன்றையும் சுத்த மாய்க் காணவில்லை.

நாங்கள் மரத்தண்டை சேர்ந்தபொழுது, சுக்கிரன் அம் மரத்தின் பாரிய கொம்பொன்றின் முனையிலுள்ள ஒரு சிறிய கிளையில் உட்கார்ந்திருக்க, கரடி அவனைத் தொடர்ந்து, அக்கொம்பில் பாதி தூரமளவில் போய்க்கொண்டிருந்தது. கொம்பு வரவரச் சிறுத்து மென்மையாயிருந்த விடத்தில்

காடி சேர்ந்தவுடன், சுக்கிரன் எங்களைப் பார்த்து, "ஆஹா! இனி என் சாமர்த்தியத்தைப் பாருங்கள், காடிக்கு நடனம் பழக்குகிறேன்" என்று உல்லாசமாய்ச் சொல்லி, குதித்துக் குதித்துக் கொம்பைக் கிடுகிடென்று அசைக்க, காடி தள்ளாடித் தத்தளித்தும், நிலைபெயராமல் நின்று, திரும்பிப் போகும்வகை இன்னதென்றறியும்படி பின்னிட்டுப் பார்த்து, குறுவிழி விழித்தது. அப்பொழுதுதான் மனங்கொண்ட மட்டும் சிரித்தோம்; ஆனாலும், சுக்கிரன் காடியை இம்மட்டில் விட்டுவிடவில்லை; பின்னும் எத்தனையோ வேடிக்கைகள் செய்தான். காடி அடிபெயர்த்து வைக்காமற் பொறுத்து நிற்கக் காணும்பொழுது, அவன் அதற்கு அங்கிலேய பாஷை பேசத் தெரியுமென்று எண்ணியிருந்த பாவனையாய், அதைத் திரும்பவும் கூப்பிட்டு: "என்ன! இப்பால் நீ வரவில்லையா? சித்தமிரங்கி இன்னும் கிட்ட வா" என்று உல்லங்கனம் பண்ணி, கொம்பு அசையாதபடி குதிக்காமல் நிற்பான். அவன் சொன்னதை அறிந்த பாவனையாய்க் காடி பின்னும் சற்றுக் கிட்டப் போகும். உடனே சுக்கிரன் கூத்தாடிக் குதித்துக் கொம்பை அசைக்க, காடி அந்தமட்டில் நிற்கும். தலையிற் குண்டு பிரயோகித்துக் காடியைச் சுட்டு விழுத்த இதுதான் சமயமென்று எண்ணி, நாங்கள் சுக்கிரனைக் கூப்பிட்டு, குதிக்காமல் நில், காடியைச் சுட்டு விழுத்துகிறோமென்று சொல்ல, அவன் மிகுந்த ஆவலுடன் கூவி "தர்ம துரைகளே, உங்களை வருந்தி இரந்து கேட்கிறேன்! சித்தமிரங்கி, என் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்துச் சுடாதிருங்கள். ஆத்திரப்பட நிமித்தமில்லை, நானே அதைச் சாவகாசத்திற் சுடுவேன்" என்றான். நடந்த வரலாறுகளனைத்தையும் சொல்லில், கதை நீடிக்குமாதலால், சுருக்கிச் சொல்லுகிறேன். சுக்கிரன் கூத்தாடிக் குதிக்கக் குதிக்க, காடி தள்ளாடித் தத்தளித்துத் தடுமாறியதைக் கண்டு, கெக்கலிகொட்டிச் சிரித்து எங்களுக்கும் மனம் சலித்துப்போயிற்று; ஆனாலும், அந்தப் பயல் என்ன செய்ய நினைத்திருந்தானென்று எங்களுக்குத் தெரியவில்லை. கொம்பை அசைத்துக் குலுக்கிக் காடியைத் தரையில் விழுத்தப்போகிறானென்று ஆரம்பத்தில் நினைத்திருந்தோம். இந்த உபாயத்திற்கு இளைக்

காத சூது காடிக்குத் தெரியுமென்று பிற்பாடு கண்டறிந்தோம். காடி நின்றநிலையை விட்டுப் பிரிந்து, பின்னும் சற்றுத் தூரம் போனாலல்லவா, கொம்பை அசைத்துக் குலுக்கி அதை விழுத்தலாம். பருத்துப் படர்ந்த தன் விரல் நகங்களும் பாதங்களும் கொம்பிலழுந்தும்படி, அது உறுதியாய் ஊன்றி மிதித்துக்கொண்டு, ஒரு நிலையாய் நின்றது. இந்த விளையாட்டு 'பகடியைப் பாம்பு கடித்தாற்போல்' என்னும் பழமொழிப்படி முடியுமோ, எங்களுக்கு அனுகூலமாய் முடியுமோ, எப்படி ஆகுமென்று ஒருவிதத்திலும் தெரியவில்லை. இவ்வாறு எங்களுக்குண்டான சந்தேகத்தைச் சுக்கிரன் விரைவில் தெளிவித்தான். கொம்பில் ஊன்றி நிற்கும் நிலையை விட்டுப்பெயர்ந்து கிட்ட வரும்படி இனிக் காடியை ஏமாற்றக் கூடாதென்று கண்டு, அவன் "கெட்டி கெட்டி, நீ கிட்ட வராதிருந்தால், நான் வருகிறேன்; நீ என்னிடத்திற்கு வாராதிருந்தால், நான் உன்னிடத்திற்கு வருகிறேன்" என்று சொல்லி, தன் பாரம் தாங்காமல் வளையத்தக்க கிளையின் சிறுமுனையில் போக, அது வளைந்து கீழே தொங்கி ஊஞ்சல்போலாடிற்று. ஆடவே, சுக்கிரன் வாவரக் கை சறுக்கி, கூடிய சமீபத்திற் கொம்பு வளைந்தவுடன் பிடித்த பிடியை விட்டுத் தரையிற் குதித்து, ஓடிப்போய்த் துப்பாக்கியை யெடுத்து ஒன்றுஞ் செய்யாமல் நின்றான். அவ்வேளையில் நான் "நல்லது சுக்கிரா, இனி என்ன செய்யப்போகிறாய்? நீ ஏன் அதைச் சுடவில்லை?" என்று கேட்க, அவன், "இப்பொழுது சுடவில்லை, அதற்கு இன்னும் காலம் இருக்கிறது; இப்பொழுது சுட்டால், அதைக் கொல்லக்கூடாது, சற்றுத் தாமதித்து நின்றால், உங்களுக்கு இன்னும் ஒருமுறை சிரிப்புக் காட்டுவேன்" என உத்தரம் சொன்னான். அவன் சொற்படி தவறாமற் செய்தான்; தன் பகைஞன் தரையிலிறங்கித் தப்பிவிட்டானென்று கண்டு, காடி தான் நின்ற கொம்பை விட்டு, அடிக்கடி எச்சரிக்கையாய்ப் பின்னிட்டுப் பார்த்து, இறங்கி, அடி மரத்தில் மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்து இறங்கிவரும் சமயத்தில், அது தன் பின்காலைத் தரையில் வைக்கச் சற்றுமுன் சுக்கிரன் கிட்டப்போய், அடுத்து நின்று, துப்பாக்கிக் குழாய் வாயைக் காடிச் செவித்துவாரத்தில்

நுழையும்படி பிடித்து திடீரென வெடிதீர்த்தான். அந்தக்ஷணமே காடி பிரேதமாய் விழுந்தது. விழவும், அந்தச் சூரன் இவ்வேடிக்கையைக் கண்டு, எங்களுக்குச் சிரிப்புண்டாயிற்றுவென்று அறியும்படி திரும்பிப் பார்த்து, எங்கள் முகக்குறியைக் கண்டு, குதிரை கனைப்பதுபோல் அட்டகாசம் செய்து, "எனது ஜனனதேசத்தில் காடி கொல்லும் வகை இதுதான்" என்றான். "நீங்கள் காடியைக் கொல்லும் வகை இதுதானா? உங்களிடத்தில் துப்பாக்கி இல்லையே" என்று நான் கேட்டதற்கு, சுக்கிரன் "துப்பாக்கி இல்லை, மிகப் பருத்து நீண்ட அஸ்திரங்களைப் பிரயோகித்துக் கொல்வோம்" என்றான். இது எங்களுக்கு இதமான காலக்ஷேபமாயிருந்தது; ஆனாலும், இன்னும் நாங்கள் காட்டுவழி போக இருந்ததனாலும், எங்கள் வழிகாட்டி மிகவும் காயப்பட்டதனாலும், என்ன செய்யத்தகுமென்று அறியாதிருந்தோம். கோநாய்கள் ஊளையிட்ட சத்தம் கேட்டு, அதே சிந்தனையாயிருந்தேன். முன்பு ஆபிரிக்க கரையில் துஷ்ட விலங்குகள் கனைத்த சத்தங் கேட்டு, எனக்கு மிகுந்த அச்சமுண்டானதென்று தெரிவித்தேனே. அதைத்தவிர, இக்கோநாய்கள் ஊளையிட்ட சத்தத்தைப்போல், அத்தனை பயங்கரமான முழக்கத்தை நான் எப்பொழுதும் கேட்டதில்லை.

இந்த முகாந்தரங்களாலும், அஸ்தமனகாலம் கிட்டியதனாலும், தங்கி நிற்காமல் விரைந்து சென்றோம். அல்லாவிடில், சுக்கிரன் சொன்னபடி குண்டுபட்டிறந்த பிரமாண்டமான காடியின் தோலை உரித்து எடுத்துக்கொண்டு போகாமல் விடமாட்டோம். காடித்தோல் வைத்திருந்தால், நமக்குதவும்; ஆனாலும், இன்னும் ஒன்பதுமைல் தூரம் வழிபோகவேண்டியிருந்ததனாலும், வழிகாட்டி எங்களைத் துரிதப்படுத்தியதனாலும், காடியை விட்டுவிட்டுப் பிரயாணமார்க்கத்திற் சென்றோம்.

இவ்விடத்துத் தரையும் மூடுபனிக்குள் மறைந்திருந்தது. மலைகளிலிருந்தபடி, மூடுபனி அபாயமுண்டாகத்தக்க அவ்வளவு ஆழ்ந்திருக்கவில்லை. மிருகங்களை அடித்துக் கொன்று பட்சிக்கும் கோநாய் முதலிய துஷ்ட விலங்குகள் பசி

வருத்தம் தாங்காமல் இரைதேடி, வனத்திலும் மைதானத்தி லும் வந்திருக்கின்றனவென்றும், குப்பக்காட்டுக் குடிகளைப் பயப்படுத்தி, திரளான ஆடுகளையும், குதிரைகளையும், சில மனுஷரையும் கொன்று, மிகுந்த கெடுதி செய்தனவென்றும் பிற்பாடு கேள்விப்பட்டோம். நாங்கள் போன மார்க்கத்தில் அபாயகரமான ஓரிடம் எதிர்ப்படுமென்றும், அந்நாட்டில் கோநாய்கள் திரளாய்ச் சஞ்சரிப்பதுண்டானால், அவ்வி டத்திலேயே அவைகளைக் காணலாமென்றும் எங்கள் வழி காட்டி சொன்னான். அவ்விடம் காடு சூழ்ந்த சிறு மை தானமும், அதற்கப்புறம் காட்டில் ஒருமுனை தொடங்கி எதிர்முனைபரியந்தம் ஒடுங்கி நீடித்திருக்கும் ஒற்றடிப்பாதை யுமாம். மைதானத்தைத் தாண்டி அவ்வொற்றடிப்பாதை வழியாய்ச் சென்றால், வனத்திற்கப்புறம் இருக்கும் கிரா மத்திற் சேரலாம். அங்கேதான் இராத்தங்கும்படி எண்ண மிட்டிருந்தோம். மைதானத்திற்கு இப்புறத்திலுள்ள காட் டிற் பிரவேசித்தபொழுது, பொழுதுபட அரைமணி நேர மிருந்தது. சூரியன் அஸ்தமித்துச் சற்றுச் சென்றபின், மைதானத்திற் சேர்ந்தோம். நாங்கள் முதலில் தாண்டிவந்த வனத்தில் வேறு அதிசயம் ஒன்றையுங் காணவில்லை. அவ் வனத்தின் மத்தியில் சுமார் கால்மைல் குறுக்களவுள்ள ஒரு சிறு மைதானமிருந்தது. அம்மைதானத்தில் பெரிய கோ நாய்கள் ஐந்து எங்கள் வழியில் ஒன்றன்பின் ஒன்றாய்க் குறுக்கிட்டு, ஏதோ விலங்கைக்கண்டு கொன்று பட்சிக்கும் படி விரைந்தோடின; அவைகள் எங்களைத் திரும்பிப் பார்க்க வுமில்லை; ஐந்து ஆறு நிமிஷத்திற்குள் கண்ணுக்கெட்டாத் தூரத்தில் ஓடி மறைந்தன. இதற்கிடையில் ஒன்று சொல்லு கிறேன். எங்கள் வழிகாட்டி எளிதிற் பயப்படும் இளநெஞ் சன். அவன் கோநாய்களைக் கண்டவுடன் பின்னும் அதிக கோநாய்கள் வருமென்றெண்ணி, அதற்கு எத்தனமாய் நிற்கச்சொன்னான். ஆனதுபற்றி, நாங்கள் துப்பாக்கிகளை மருந்து குண்டு கெட்டித்து எத்தனமாய் வைத்துக்கொண்டு, அதிக ஜாக்கிரதையாய்ப் போனோம். அவ்வனத்தைத் தாண் டிச்சென்று மைதானத்திற் சேருமளவும் வேறு கோநாய்க ளைக் காணவில்லை. வனத்தின் தூரம் கொஞ்சங் குறைய

ஒன்றரை மைல். மைதானத்திற் சேர்ந்தவுடன் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பதற்கு நிமித்தமுண்டென்று அறிந்தோம். முதலில் எங்களுக் கெதிர்ப்பட்டது செத்த குதிரை ஒன்று. அதை அதமம் பன்னிரண்டு கோநாய்கள் கடித்துக் கொன்று, மாமிசம் முழுதையும் பட்சித்தபின், வெற்றெலும்புகளில் ஒட்டியிருந்த சவ்வைக் கடித்து உரித்துத் தின்றுகொண்டிருந்தன. விருந்துண்பதில் பராக்காயிருந்த அவ்விலங்குகளைக் கலைப்பது புத்தியென்று நாங்கள் நினைக்கவுமில்லை, அவைகள் எங்களை லட்சியம் செய்யவுமில்லை. சுக்கிரன் அவைகளுக்குக் குண்டுப்பிரயோகம் செய்யப் பதைத்தும், நான் அவனை விடவில்லை. நினைக்காவண்ணம் நமக்கு ஒருவேளை அதிக ஆபத்து நேரிடுமென்றும், அதற்கு வகை சொல்ல எத்தனமாயிருக்கவேண்டுமென்றும் எனது எண்ணத்திற்பட்டது. மைதானத்திற் சரிபாதித்தூரம் தாண்டிப்போகுமுன், எங்கள் இடக்கைப்புறத்திலிருந்த வனத்தில் பயங்கரமான விதமாய்க் கோநாய்கள் ஊளையிடும் சத்தங் கேட்டது. பின்னும் சற்று நேரத்திற்குள் நூறு கோநாய்கள்வரையில் ராணுவ சிட்சை பயின்ற தளகர்த்தர் அணிவகுக்கும் சைந்யங்களைப் போல நெருங்கி, நிரைநிரையாக எங்களுக்கு எதிரில் வந்தன. அவைகளோடு எதிர்க்கும்வகை இன்னதென்று எனக்கு அற்பமாயினும் தெரியவில்லை. நாங்களும் நெருங்கி நிரைநிரையாய் அணிவகுத்துச் செல்வதுதான் இதற்கு உபாயமென்று நினைத்தேன். அவ்வாறே நொடிக்குள் அணிவகுத்து நின்றோம். இடையறுது சுடும்பொருட்டு, முதலில் ஒருவன் விட்டு ஒருவன் குண்டுமாரி பொழிய, மற்றவர்கள் அவ்வெடி தீர்ந்தவுடன் கோநாய்கள் பின்னிடாமல் வரச் சம்பவித்தால் தாமும் குண்டுமாரி பொழியவேண்டுமென்றும், முதலில் வெடிதீர்த்தவர்கள் தங்கள் லேசான துப்பாக்கிகளில் மீண்டும் மருந்து குண்டு கெட்டிக்கும் பாவனை பண்ணுமல், அவனவன் ஒவ்வொரு கைத்துப்பாக்கி கைக்கொண்டு வெடிதீர எத்தனமாய் நிற்கவேண்டுமென்றும், எனது பட்டாளத்தாருக்குத் திட்டம் செய்தேன். நாங்கள் அனைவரும் ஆளுக்கொரு லேசான துப்பாக்கியும், இவ்விரண்டு கைத்துப்பாக்கிகளும் வைத்திருந்தோம். இந்தக் கிரமமாய்ப்

பாதிப்பெயர் ஒருமுறையும், மற்றப் பாதிப்பெயர் ஒரு முறையுமாக வெடிதீர்த்தால், அடுத்தடுத்து ஆறுவிசை குண்டுமாரி பொழிவதற்கு நிர்வாகிகளாயிருந்தோம்; ஆனாலும், அப்படிச் செய்வதற்கு ஆவசியகமில்லையே. முதன் முறை குண்டுமாரி பொழிந்தவுடன் பகைஞராகிய கோநாய்கள் வெடியதிர்ச்சி கேட்டும், மருந்துபற்றிச் சுவாலித்தது கண்டும், திடுக்கிட்டுத் திகைத்து நின்றுவிட்டன. தலையிற் குண்டுபட்டு இறந்து விழுந்தவைகள் நாலு. வேறு சில காயம்பட்டு, ரத்தம் வடிய வடிய ஓடித் தப்பின. வடிந்த ரத்தம் உறைந்த பனியிற் படிந்திருக்கக் கண்டோம். மற்றவைகள் உடனே பின்னிடவில்லை; ஒரு நிலையாய் நின்றன. அதுகண்டு, அதிமூர்க்கமுள்ள துஷ்ட விலங்குகளுக்கு மனுஷர் குரல்கேட்கும் க்ஷணமே மிகுந்த திகிலுண்டாமென்று முன்பு கேள்விப்பட்டது எனக்கு ஞாபகமாயிருந்ததனால், எங்கள் பட்டாளத்தார் அனைவரும் மிக உரக்கக் கூவினோம். எனது அபிப்பிராயம் முழுதும் பிசகவில்லை. நாங்கள் கூவினவுடன் கோநாய்கள் பின்னிட்டு, நான்கு திக்கிலும் பார்த்தன. பின்பு பின்னணியில் இரண்டாம்முறை குண்டுமாரி பொழிவித்தேன். பொழிந்த க்ஷணமே அவைகள் ஓடிப் பறந்து, வனத்திற்போய்ச் சேர்ந்தன. ஆனதுபற்றி, மீண்டும் துப்பாக்கிகளில் குண்டுமருந்து கெட்டிக்க நமக்கு அவகாசமுண்டாயிற்று. காலத்தை வீணிற் போக்காதபடி தாமதித்து நிற்காமல் போய்க்கொண்டிருந்தோம். குண்டு மருந்து கெட்டித்து எத்தனப்படவும், நமது இடக்கை வளத்திலிருந்த அவ்வனத்திலேயே பயங்கரமான சத்தங் கேட்டது. சமீபத்திலல்ல, நாங்கள் போய்க்கொண்டிருந்த மார்க்கத்தில் அதிதூரத்திற் கேட்டது.

இரவு அடுத்து மாலை நேரமாயிற்று. அது எங்கள் பட்சத்தாருக்குப் பின்னும் பிரதிகூலந்தானே. வரவரச் சத்தம் அதிகரித்ததனால், அது துஷ்ட விலங்குகளாகிய கோநாய்கள் ஊளையிட்டுக் குளிறும் சத்தமென்று எளிதி லறிந்தோம். சடுதியாய் இரண்டு மூன்று பட்டாளம் கோநாய்கள் எங்கள் இடது பக்கத்திலும், ஒரு பட்டாளம் எங்களுக்குப் பின்னிட்டும், ஒரு பட்டாளம் எதிரிலும் வந்து,

எங்களைச் சூழ்ந்துகொண்டன. சூழ்ந்தும் அவைகள் எங்கள் மேல் வந்து விழாததனால், குதிரைகளைக் கூடியவரையில் முடுக்கிச் செலுத்திக்கொண்டு போனோம். தரை ஒப்ப மற்ற கடுவழியாயிருந்ததனால், குதிரைகள் தீவிரகதியாய்ப் பாய்வதற்குச் சந்தர்ப்பப்படவில்லை; துரிதமாய் ஓடின. இப்படிச் சென்று மைதானத்தைத் தாண்டி, அதன் எதிர்ப் பக்கத்திலுள்ள வனத்திற்குள் செல்லும் பாதை கண்ணுக் கெதிர்ப்படும் தூரத்திற் சேர்ந்தோம். அவ்வொற்றடிப் பாதைக்குச் சமீபத்திற் சேர்ந்தபொழுது, அங்கே திரளான கோநாய்கள் சிதறி நின்றது கண்டு, மிகவும் திகைத்து மயங்கினோம். சடிதியில் அவ்வனத்திற்குச் செல்லும் மற்றொரு வழியில் துப்பாக்கி வெடிதீர்ந்த சத்தங் கேட்டு, அவ்வழியைத் திரும்பிப் பார்த்தோம். க்ஷணமே கடிவாளமிட்டு ஜீனி கட்டியபடி ஒரு குதிரை வாயுவேகமாய் ஓடிப் பறந்து வந்தது. பதினாறு பதினேழு கோநாய்கள் அதிதீவிரமாய் அதைத் தொடர்ந்தன. குதிரை அவைகளிலும் அதிவிரைவாய் ஓடிற்று. நெடுநேரமட்டும் அத்தனை தீவிரமாய் ஓட வசமில்லாமல் இளைத்துப்போகுமாதலால், கோநாய்கள் அதை எவ்விதத்திலும் பிடிக்குமென்று உறுதியாய் நம்பினோம். அவைகள் குதிரையைத் தொடர்ந்து பிடித்தது மெய்தான்.

இவ்விடத்திலோ அத்தியந்த திகிலெடுக்கத்தக்க காட்சியைக் கண்டோம்; குதிரை வனத்தினின்று வெளிப்பட்ட துறையிற் சவாரிபோய்ப் பார்த்தபொழுது, செத்துக்கிடந்த மற்றொரு குதிரையையும், இரண்டு மனுஷரின் உடலையும் பிராணனைச் சூறையாடும் தன்மையுள்ள அத்துஷ்ட ஜந்துக்கள் பட்சித்தன; அவர்களில் ஒருவன் பக்கத்தில் வெடி தீர்க்கப்பட்ட துப்பாக்கி ஒன்று இருந்ததனால், அவனே எங்களுக்குக் கேட்ட வெடியைத் தீர்த்தவனென்பதற்கு ஐயமில்லை; அவன் சிரசும், அரைக்குமேற் பாதி உடலும் முற்றிலும் பட்சிக்கப்பட்டது கண்டு, கனதிகில் பிடித்து நடுங்கி நின்றோம்; இனிப் போகத்தக்க துறை எதுவென்று நாங்கள் அறியவில்லை; அந்தக் கோநாய்கள் எங்கள்மேல் விழுந்து எங்களைக் கொன்று பட்சிக்கப் பிரதிக்கினை செய்தவைகள்

போல், உடனே எங்களைச் சூழ்ந்து நெருங்கின. அவைகள் முந்நூறுவரையில் உண்டென்று உறுதியாய் நம்புகிறேன். கழிந்த வேனிற்காலத்தில் தறித்து விழுத்தப்பட்ட பெரு மரங்கள் சில வனத்திற்குட் செல்லும் துறைவாயில் சற்றுத் தூரம் விலகியிருந்தன. தற்செயலாய் அவைகள் அச்சமயத்தில் அங்கிருந்தது எங்களுக்கு மிகவும் அனுகூலமாய் முடிந்தது. அவைகளைத் தறித்தவர்கள் எடுத்துக்கொண்டு போகும்படி அவ்விடத்தில் விட்டிருந்தார்கள்போலும். நான் என் பட்டாளத்தை அம்மரங்களிருந்த எல்லைக்குள் அணிவகுத்து, ஒரு நீண்ட மரத்திற்குப்பின் நாங்கள் அனைவரும் நிரையாய் நின்று, எல்லாரையும் குதிரையைவிட்டு இறங்கச்சொல்லி, எங்களுக்கு எதிரிலிருந்த அம்மரத்தை மார்பளவு உயர்ந்த மதிலாகப் பாவித்து, நாங்கள் அதற்குள் முக்கோணவடிவாய் நின்று, குதிரைகளை மையத்தில் நிறுத்தினோம். நாங்கள் இப்படிச் செய்தது காரியத்தளவில் நன்றாய் வாய்த்தது. அந்தக் கோநாய்கள் இவ்விடத்தில் எங்கள்மேல் விழுந்து தாக்க வந்ததிலும், அதிமூர்க்கமான சண்டை ஒரு பொழுதும் நடந்தது அறியோம். அவைகள் உறுமிக்கொண்டு வந்து, தங்களுக்கு இரையாகத்தக்க மிருகத்தை அடிக்கக் கருதிப் பாய்ந்து வருவதுபோல, மார்பளவு உயர்ந்த மதிலென்று நான் குறிப்பித்த தறிமரத்தில் ஏறிக்கொண்டன. எங்களுக்குப் பின்னிட்டு நின்ற குதிரைகளைக் கண்டு, முக்கியமாய் அவைகள்மேல் விழுந்து அடிக்க நாடியே கோநாய்கள் அத்தனை மூர்க்க வெறிகொண்டு வந்தனவென்று தோன்றிற்று. உடனே முன்போல் ஒருவன் விட்டு ஒருவனைக் குண்டுமாரி பொழியும்படி என் சேனாவீரருக்குத் திட்டம் பண்ணினேன். அவர்கள் இலக்குத் தவறாமல் சுட்டதனால், முதல் வெடியில் அநேக கோநாய்கள் குண்டுபட்டு இறந்தன; ஆனாலும், பின்நின்றவைகள் முன்நின்றவைகளை முடுக்கித் தள்ளி, பிசாசுகள்போல் அவைகள் எங்கள்மேல் விழ நெருங்கிவந்ததனால், இடைவிடாமல் வெடிதீர்ப்பது ஆவசியகமாயிருந்தது.

லேசான எங்கள் பெருந்துப்பாக்கிகளால் பின்னும் ஒரு முறை குண்டுமாரி பொழிந்தபிறகு, அவைகள் சற்றுத் தாம

டெ
உத்து நின்றதுபோலிருந்தது. அவைகள் அவ்வளவி
கெட்டு ஓடுமென்று நான் எண்ணியிருந்தும், ஒரு
நாழிகைக்குள் மீண்டும் வேறு கோநாய்கள் நெருங்கி எங்க
ரித்திட்டு வந்தன. ஆனதனால், கைத்துப்பாக்கிகளா
முறை குண்டுமாரி பொழிந்தோம். இவ்வாறு
றை தீர்ந்த வெடியில் குண்டுபட்டிறந்த கோந
பதினேழு பதினெட்டு; முடமானவைகள் அதற்கு இ
அவ்வளவில் மடங்காமல், அவைகள் பின்னும் நெரு
தன. ஒருமுறை வெடிதீர்ப்பதற்குமாத்திரம் குண்டு
கெட்டிக்கப்பட்டிருந்ததனால், அவசரத்தில் வெடிதீர்த்
றுங்கையாய் நிற்பது எனக்குச் சமாதானமாயிருக்க
நாங்கள் சண்டையிட்டுக்கொண்டு நிற்கையில், எனது
யான் சுக்கிரன் அதிதீவிர கைச்சாமர்த்தியத்துடன்
பெருந் துப்பாக்கியிலும் தன் துப்பாக்கியிலும் குண்டு ம
கெட்டிக்கும் முயற்சியிற் கருத்தாயிருந்ததனால்,
விட்டு, எனது மற்றச் சேவகனை வரவழைத்து, ம
கொம்பு ஒன்று கொடுத்து, மேற்குறித்த மரத்தில்
அடிதொடங்கி நுனிவரையில் ஒருநிரை மருந்து செ
வைக்கச் சொன்னேன். அவன் அடர்த்தியாக மரு
எனது சொற்படி கொட்டிவைத்துத் திரும்பிவரவும், கோ
கள் மரத்திற்கு நெருங்க வந்து, சில அதன்மீது
குண்டு கெட்டிக்காத கைத்துப்பாக்கி ஒன்றை அம்
துப் பந்திக்கு அருகில் எட்டப் பிடித்து, வில்லைப்
றித்தேன். உடனே மருந்துபற்றி எரிந்து சுவாலித்
மரத்தின்மீது ஏறியிருந்தவைகளுக்கு நெருப்புச்
உறைத்ததனால், ஆறு ஏழு வரையில் தீவிரமாய் வெடிம
பற்றி எரிந்த அதிர்ச்சியைக் கண்டு திகைத்து, மரத்தின்
புறத்தில் எங்கள் நடுவில் அவசரத்தில் பாய்ந்து விழ,
டிக்குள்ளே நாங்கள் அவைகளைச் சங்கரித்தோம். சூ
அஸ்தமித்து இருண்டதனால், அதிக பிரகாசமாய்ப்
எறிந்த மருந்துஜுவாலையைக் கண்டு, மற்றவைகள் மி
அஞ்சி அதிர்ந்து சற்றுப் பின்னிட்டன. அந்தச்சமய
வெடிதீர்க்காமல் நாங்கள் வைத்திருந்த கைத்துப்பாக்கிக
கடைசிமுறை குண்டுமாரி பொழியச்சொன்னேன்.

ின், நாங்கள் அனைவரும் உரக்கக் கூவி, ஆர்ப்பரி
அந்த க்ஷணமே கோநாய்கள் புறங்காட்டி ஓட்ட
ன. இருபது கோநாய்கள்வலையில் காயம்பட்டு
ாகி, ஓடும் திறமின்றித் தரையிற் கிடந்து தத்தளிக்கக்
நாங்கள் பாய்ந்து நெருங்கிப்போய், கத்திகளால்
களை வெட்டிக் கொன்றோம். இதனால் எங்கள் தாற்
நிறைவேறிற்று. சாகுந்தறுவாயில் அவைகள் அலறி
ிட்ட சத்தம் கேட்டு, தம்மினத்திற்குத் துர்க்கதி
டதென்று அறிந்து, மற்றவைகள் எல்லாம் அங்கே
மல் ஓடிப் பறந்துபோயின.

ரம்பந்தொடங்கி அறுதிவரையில் நாங்கள் சங்கரித்த
ய்கள் முன்பின் அறுபது. பகற்காலமாயிருந்தால்,
ும் அத்தனை கோநாய்களைச் சந்தேகமின்றிக் கொல்
. யுத்தகளத்தில் எதிர்ப்பட்ட சத்துருக்களை இவ்
பற்றறத் தொலைத்ததனால், தாமதிக்காமல் எங்கள் மார்க்
் சென்றோம். பின்னும் மூன்று மைல் தூரம் வழி
வேண்டியிருந்ததே. போகும் மார்க்கத்தில் பல இடங்
மிருகங்களைக் கொன்று பட்சிக்கும் சுபாவமுள்ள கோ
ள் ஊளையிட்டுக் குளிறும் சத்தம் கேட்டது. சிலவேளை
வகளைக் கண்ணுக்கெதிரே கண்டதுபோலும் இருந்தது.
ந்த பனியிற் கண் கூசியதனால், அவைகள் கோநாய்கள்
ன்று நிசமாய்த் தெரியவில்லை. ஏறக்குறைய ஒருமணி
தில் இராத்தங்க நினைத்திருந்த கிராமத்திற் போய்ச்
தோம். அக்கிராமவாசிகள் அனைவரும் கனதிகி
ந்து நடுநடுங்கி, ஆயுதபாணிகளாயிருந்தார்கள். முதல்
இரவு கோநாய்களும், சில கரடிகளும் அந்தக் கிராமத்
பிரவேசித்து, அவர்களைக் கெடிகலங்கச் செய்ததனால்,
கள் ஆடுமாடுகளையும் தம்மையும் அத்துஷ்ட விலங்கு
் வாயில் அகப்படாமல் தப்புவிக்கும்பொருட்டு, இராப்
, முக்கியமாய் இராக்காலத்தில் ஆயுதபலத்துடன் விழித்
ந்து, காவல் செய்யும்படி நேரிட்டது.

ங்கள் வழிகாட்டி மேற்சொல்லியபடி இரண்டு காயம்
ருந்ததனால், அவன் கை கால் வீங்கிக் குடைச்சலெடுத்

யதுபற்றி, மற்றநாட் காலையிற் பிரயாணம்செய்ய வசமில்லாதிருந்தான். ஆதலால், அவனை அங்கே நிறுத்திவிட்டு, நூதனமாய் வேறு ஒருவனை வழிகாட்டியாய் அமர்த்திக்கொண்டு, துலூஸ் நாட்டிற்குப் போனோம். அந்நாடு சௌக்கியத்திற்கு அனுகூலமான உஷ்ணமும், செழிப்பும், சிறப்புமுள்ளதாயிருந்தது. அங்கே உறைந்த பனியுமில்லை, கோநாய் முதலிய துஷ்ட ஜந்துக்களும் இல்லை. வழியில் எங்களுக்கு நேரிட்ட ஆபத்துக்களை அங்குள்ள ஜனங்களுக்குச் சொன்னபொழுது, அவர்கள் மலையடிவாரத்திலுள்ள விஸ்தாரமான வனத்தில் முக்கியமாய் உறைந்த பனி வருஷிக்குங்காலத்தில் கோநாய்முதலிய துஷ்ட விலங்குகளால் பிரயாணிகளுக்கு உபத்திரவம் நேரிடுவது சாதாரணந்தான் என்றார்கள்; ஆனாலும், இந்தக் கடுங் குளிர்காலத்தில் எங்களை இந்த மார்க்கத்தில் கூட்டிக்கொண்டுவந்த வழிகாட்டி மடையனென்றும், நாங்கள் அனைவரும் துஷ்ட விலங்குகளால் பட்சிக்கப்படாதது அதிசயமென்றும் சொன்னார்கள். கோநாய்கள் நெருங்கி வருவதுகண்டு, நாங்கள் குதிரைகளை மத்தியில் நிறுத்தி, முக்கோணவடிவாய் அணிவகுத்து நின்ற சங்கதியைச் சொல்லக்கேட்டு, அவர்கள், "நீங்கள் அப்படிச் செய்தது முழுதும் மோசம். நீங்கள் உயிர்தப்பிப் பிழைத்துவந்தது மிகவும் ஆச்சரியந்தான். கோநாய்கள் தமக்கு இஷ்டமான இரையாகிய குதிரைகளைக் கண்டதனாலேயே அத்தனை மூர்க்கமாய் உங்கள்மேல் வந்து விழுந்தன. உறைந்த பனி வருஷிக்காத காலங்களில் அவைகள் துப்பாக்கியைக் கண்ட க்ஷணமே பயந்து நடுங்கி ஓட்டம் பிடிக்கும். கடும்பசி வருத்தத்தால் வெறிகொண்டவைகள்போலத் திரியும்சமயத்தில் குதிரைகளைக் கண்டு, கொன்று தின்னும்படி மட்டற்ற ஆவலுள்ளவைகளாயிருந்ததனால், அவைகள் தமக்கு நேரிடும் அபாயத்தைச் சற்றுவது லட்சியம் பண்ணவில்லை. அவ்வுற்றசமயத்தில் இடையின்றித் துப்பாக்கி வெடிதீர்த்து, கடைசியில் வெடிமருந்து தூவி, தந்திரமாய் அதில் நெருப்புப் பற்றுவித்து ஜயம் பெறாதிருப்பீர்களானால் உங்களை அக்கோநாய்கள் கடித்துச் சின்னாபின்னப்படுத்துவதொழிய, நீங்கள் இவ்வாறு தப்பிவருவது மிக

வரிது; ஆனாலும், நீங்கள் குதிரைகள்மீது இருந்துகொண்டே ராணுவவீரனைப்போல மனந் துணிந்து குண்டுப்பிரயோகம் செய்யச் சம்பவித்தால், அக்குதிரைகள் உங்கள் வசப்பட்டிருப்பதனால், கோநாய்களுக்கு அவைகளிடத்தில் அத்தனை நாட்டமும் துணிவு முண்டாகா. மேலும், கடைசியில் குதிரைகளை விட்டிறங்கி, நீங்கள் எல்லாரும் பிரத்தியேகமாய் ஓரிடத்தில் நெருங்கி நின்றால், அவைகள் அக்குதிரைகளைப் பட்சிக்க நாடி, அதேகவனமாய்ப் போகும். படைக்கலங்கள் வைத்திருப்பதனாலும், பன்னிரண்டு பெயர்வரையில் ஒருகையாய்ச் சேர்ந்திருப்பதனாலும், நீங்கள் அச்சமின்றி க்ஷேமமாய் வந்து சேரலாம்" என வெளியிட்டார்கள். என் மட்டில், பிறந்தநாள்முதல் இதுவரையில் எந்த ஆபத்தைக் குறித்தாயினும் இவ்வளவு திகில் உண்டாகவேயில்லை. பிசாசின் கோலமுள்ள கோநாய்கள் முந்நூற்றுக்கு அதிகம் கர்ச்சித்துக்கொண்டு, வாய்திறந்தபடி எங்களைப் பட்சிக்கப் பாய்ந்து வந்ததையும், ஓடி ஒதுங்குவதற்காயினும், ஒளித்து நிற்பதற்காயினும், எவ்வகைத் தஞ்சமு மில்லாதிருந்ததையும் கண்டபொழுது, நான் திகைத்து மயங்கி, இனி மரணமே எனது கதியென்று நினைத்திருந்தேன். 'சூடுண்ட பூனை அடுப்பங்கரை சேராது' என்னும் பழமொழிக்கு எனது அனுபவத்தில் திருஷ்டாந்தம் கண்டேன். என் மனம் பட்ட பாடு எனக்கல்லவா தெரியும். இனி எவ்வித ஆவசியகமிருந்தாலும், நான் ஒருபொழுதும் இம்மலை வழிக்கு வருவதேயில்லை. வாரத்திற்கு ஒருமுறை புயலடிக்குமென்று ஐயந்திரிபற அறிந்திருப்பினும், இனி இம்மலைவழி நடப்பதிலும் லட்சியமின்றி மூவாயிரம் மைல் தூரம் சமுத்திர யாத்திரை செய்வதே நலமென்று நினைத்தேன்.

பிரான்சு தேசத்தை ஊடறுத்துச் சென்ற மார்க்கத்தில் அபூர்வ அதிசயமொன்றையும் நான் காணவில்லை. என்னிலும் மிக்க சாதுரியராகிய வேறு பிரயாணிகள் கண்ட வரலாறுகளனைத்தையும் ஏற்குமாறு எழுதித் தெரிவித்திருக்கிறார்களே. அவைகளைத்தவிர, மற்றொன்றையும் நான் காணவில்லை. நான் துலூஸினின்று பிரயாணப்பட்டு, பாரீஸ் நகரம் சேர்ந்து, அங்கே அதிககாலம் தங்காமல் கலேயிஸுக்

குப் போய், மாக்கலமேறி, ஜனுவரிமீ 14உ டோவர் துறையில் சிந்தாயாத்திரையாய்ப் போய்ச் சேர்ந்து கரையேறினேன். நான் மேற்குறித்த பிரயாணம் செய்த காலம் கடுங்குளிர்காலம்.

நான் கருதிப் பிரயாணப்பட்ட ஸ்தானம் எதுவோ, அவ்விடத்தில் இப்பொழுது வந்து சேர்ந்தேன். கொஞ்சக்காலத்திற்குள் நூதனமாய்க் கண்டு, கைக்கொண்ட என் சொத்துக்களனைத்தும் பழுதின்றி என் வசம் சேர்ந்தன. நான் கொண்டுவந்த உண்டிகளைச் சங்கடமின்றி மாற்றி, பண மாக்கினேன்.

இங்கிலாந்தில் விருத்ததசை யடைந்த சுகுணியாகிய விதவைதான் எனக்கு முக்கியமாய் நற்புத்தி சொல்லும் மந்திரி. அவளுக்கு நான் ரொக்கம் கொடுத்தனுப்பிய நன்றியைச் சிந்தையில் வைத்து, இந்தப் பிராணோபகாரிவிஷயத்தில் என்னென்ன பாடுபட்டாலும், எவ்வளவு சிரமப்பட்டாலும் பெரிதல்லவென்று அவள் நினைத்திருந்தாள். நான் என் சொத்து முழுதையும் அவளை மனப்பூர்வமாய் நம்பி ஒப்புவித்து, என் சொத்துக்களைப் பத்திரமாய் வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்பதைக் குறித்துச் சற்றுவதும் கவலைப்படாமற் சுகித்திருந்தேன். ஆதிதொடங்கி அந்தமளவும் இந்தச் சுகுண சுகிர்த்தியங்களாற் சிறந்த பிரபுபத்தினியின் களங்கமற்ற மனநேர்மையை நினைத்து, மிகுந்த சந்துஷ்டி யடைந்தேன்.

இதன்பின் என் சொத்துக்களை இவளிடத்தில் ஒப்புவித்துவிட்டு, லிஸ்பன் நகரத்திற்குப் போகவும், அங்கிருந்து பிரேஜில் பிரதேசத்திற்குப் பிரயாணப்படவும் அபிப்பிராயங் கொண்டேன். இந்த அபிப்பிராயத்திற்குத் தடையாகச் சமயக்கொள்கையைப்பற்றிய எண்ணம் எனதுள்ளத்திற் பிறந்தது. நான் தேசாந்தரம் போயிருக்குங்காலத்தில், விசேஷமாய் ஏகாங்கியாய் நாட்கழிக்கும்பொழுது, ரோமான் சமயத்தைக் குறித்து எனக்குள்ளே சில சந்தேகங்கள் பிறந்ததனால், இனி எனது மனப்பூர்வமாய் வந்து அங்கிகரித்த மதக்கோட்பாடுகளைக் கைவிட்டு, சமயவிஷயத்தில் பிராணத்தியாகியாகி, ரோமைக் குருக்கள் சபையின் அதிகாரத்தில் இறக்க

வும், மனப்பூர்வமாய் ரோமான் சமயத்தை அனுசரித்துக்கொள்ளவும் சங்கற்பஞ் செய்தாலன்றி, நான் பிரேஜில் பிரதேசத்திற்குப் போவதுமில்லை, போய் அங்கே நிரந்தரமாய்ச் சஞ்சரிப்பதுமில்லையென்று அறிந்தேன். ஆனதன்மையால், இங்கிலாந்திலேயே சஞ்சரிக்கவும், கூடுமானால் எனது தோட்டத்தை விக்கிரயம் செய்யவும் நிர்ணயித்தேன்.

இந்த முகாந்தரத்தின்பொருட்டு நான் லிஸ்பன் நகரத்திலிருக்கும் விருத்தராகிய எனது இஷ்டருக்கு ஒரு கடிதம் எழுதி, அவர் அபிப்பிராயம் என்னவென்று கேட்டதற்கு, அவ்விஷ்டர் பதில் எழுதி "உன் தோட்டத்தை அவ்விடத்திலேயே எளிதில் விற்கக்கூடும். உனது நிட்சேபதாரிகளின் புத்திரராகிய வர்த்தகர் இருவரும் பிரேஜில் நாட்டில் சஞ்சரிப்பவர்கள்; உன் தோட்டம் என்னவிலை தாளுமென்று அவர்கள் பூர்த்தியாய் அறிந்திருக்கவேண்டும். அவர்கள் தூரம் தொலையில் அல்ல, தோட்டத்தின் எல்லையிலேயே வாசமாயிருக்கிறார்கள்; அன்றியும், அவர்கள் குறையற்ற செல்வரென்றறிவேன். ஆனதுகொண்டு, அந்தத் தோட்டம் உங்களுக்குக் கிரயத்திற்கு வேண்டுமோ என் அவர்களைக் கேட்கும்படி எனக்கு உத்தரவு செய்வாயானால் கேட்பேன்; அவர்கள் அதைக் கிரயத்திற்கு வாங்க அபேட்சித்திருப்பார்களென்று நம்புகிறேன்; உன் தோட்டம் நியாயமாய் என்னவிலை தாளுமோ, அதற்குமேல் எண்ணாயிரத்துச் சில்லறை ரூபாய்வரையில் உன் கையில் வந்து தேறுமென்பதற்கு ஐயமில்லை" எனத் தெரிவித்தார்.

நான் அப்படிச் செய்ய உடன்பட்டு, தோட்டம் வேண்டுமோவென்று அவ்வர்த்தகரைக் கேட்கும்படி எனது இஷ்டருக்கு உத்தரவு செய்ய, அவர் கடிதமெழுதிக் கேட்டார். முன்பின் எட்டுமாசம் சென்று திரும்பிவந்த கப்பலில் அவர்கள் அனுப்பிய கடிதம் வரப்பெற்று, அவர் எனக்கு நிருபம் எழுதி, வர்த்தகர் உன் தோட்டத்திற்கு ஐம்[illegible]ன்பதினாயிரத்து நூற்றிருபத்தைந்து ரூ[illegible] கொடுக்க உடன்பட்டு, இக்கிரயத்தை லிஸ்பன் நகரத்தில் இருக்கும் தங்கள் காரியகர்த்தர் ஒருவரிடத்திற்கு அனுப்பியிருக்கிறார்களென்பதாகச்

சமாசாரம் தெரிவித்தார். நான் அந்நிருபத்தைப் பார்வையிட்டு, லிஸ்பன் நகரத்தினின்று அவர்கள் அனுப்பிய விக்கிரய பத்திரத்திற்குக் கையொப்பம் வைத்து, அதை அந்தப் பெரியவரிடத்திற்குத் திருப்பி அனுப்ப, அவர் முன்பு நான் வாக்கிட்டிருந்தபடி தோட்டக்கணக்கில் ஆயுள்பரியந்தம் வருஷவாரி ஆயிரத்து முந்நூற்று ஐம்பது ரூபாய் தமக்கும், அதன்மேல் ஆயுள்பரியந்தம் வருஷவாரி அறுநூற்று எழுபத்தைந்து ரூபாய் தமது மைந்தனுக்கும் கொடுத்துவருவதாக வர்த்தகர்பேரில் கணக்கு வைத்துக்கொண்டு, எனக்குத் தோட்டத்தின க்ரயமென்று ஐம்பத்தெண்ணுயிரத்துத் தொளாயிரத்துப் பத்து ரூபாய்க்கு உண்டி செய்து அனுப்பினுர்.

எனது சரித்திரம் பலவித கஷ்ட நஷ்டங்களையும், நான் அச்சமின்றித் துணிந்து செய்த முயற்சி வரலாறுகளையும் விளக்கியது. அது தெய்வ எத்தனமாய் நிர்மாணிக்கப்பட்ட பலவர்ணமுள்ள வேலைப்பாட்டிற்குச் சமானமென்று சொல்லத் தகும். என் சரித்திரத்தில் விளங்கிய பலவிதச் சங்கதிகள் இப்பூவுலகில் எவர் சரித்திரத்திலுமில்லை. மதிகெட்டு, தாய்தந்தையர் வீட்டை விட்டு, தேசாந்தரம் போய், மேலுமேலும் கஷ்டதசை யடைந்து வருந்திய நான் கனவிலும் நினைக்காதிருக்கும் சமயத்தில் திரண்ட செல்வமுள்ள சீமானுனேன். இத்தன்மையான அபூர்வ சரித்திரத்தின் முதற்பாகத்தை இவ்வாறு சொல்லி முடித்தேன்.

பல துறையினின்று வந்து ஒன்ருகத் திரண்ட செல்வம் பெற்றிருந்ததனுல், இனிக் கெடுமதியால் எவ்வகை ஆபத்திலும் தலையிடேனென்று என் சரித்திரத்தை வாசிக்கும் எவர்களும் நினைப்பார்கள். அவர்கள் நினைப்பது இயற்கைதான். மற்றக் காரியங்களும் ஒத்திருந்தால், சந்தேகாஸ்பதமான விபரீத முயற்சிகளில் நான் ஒருபொழுதும் தலையிடேன். ஆனுலும், ஒன்றைச் சிந்திக்கவேண்டும்; நான் நாடோடியாய்த் திரிந்து வழக்கப்பட்டவன்; எனக்கு மனைவி மக்கள் இல்லை; சுற்றத்தார் அநேகரில்லை; திரவியம் எவ்வளவு சேர்ந்திருந்தும், நான் பலருடன் அறிமுகம் செய்திருக்கவில்லை; பிரேஜில் பிரதேசத்தில் எனது பூஸ்திதியை விக்கி

ரயஞ் செய்தும், அத்தேசத்தைப்பற்றிய நினைவை மறந்துவிடுவதற்கு என்னாலாகவில்லை. மீண்டும் அவ்விடத்திற்குப் பறந்தோடுவதற்கு எனக்கு ஆசை பெருகிற்று. பிரதானமாய் எனது தீவைப் போய்ப் பார்க்கவும், ஆதரவற்ற ஸ்பானியர்கள் அங்கிருப்பது இராததையும், நான் அவ்விடத்திற் குடியிருத்திவிட்டு வந்த துரோகிகளாகிய பாதகர் அவர்களுக்கு நன்று தீது செய்ததையும் அறியவும் எனக்கு அடங்காத மிகுந்த வாஞ்சை யுண்டாயிற்று. எனது பிராண சினேகியாகிய விதவை இவ்வாசையின் வழிச் செல்லவேண்டாமென்று என்னை வற்புறுத்தித் தடுத்து, பலவாறு நியாயமெடுத்துக் காட்டி, என் மனதைத் திருப்பி, கொஞ்சங்குறைய ஏழு வருஷவரையில் என்னைத் தேசாந்தரம் போகவொட்டாமல் மறித்துக்கொண்டாள். அக்காலத்தில் என் சகோதரன் ஒருவனுடைய புத்திரர் இருவரை என் வசத்தி லேற்று, ஆதரித்துக்கொண்டு வந்தேன். அவர்களில் ஜேஷ்டன் கையில் சிறிது சொத்து இருந்ததனால், நாகரிகமுள்ள துரைமகனும்படி நான் அவனுக்கு நற்பழக்கம் பயிற்றி, என் சொத்தில் ஒரு பாகத்தை அவன் சொத்துடன் சேர்த்துக்கொள்ளும்படி மரணசாதனம் எழுதி வைத்தேன். கனிஷ்டனைக் கடலோடும் தொழில் பயிற்றும்படி கப்பல் மாலுமி ஒருவரிடத்தில் ஒப்புவித்தேன். ஐந்து வருஷம் சென்றபின் அவன் விவேகமும் துணிவும், பராக்கிரம முயற்சியுமுள்ள வாலிபனென்று கண்டு, நல்ல மரக்கலமொன்றில் அவனைச் சேவகத்தில் அமர்த்துவித்து, கடலோடுதற்கு அனுப்பினேன். பிற்பாடு இவ்வாலிபன் தேசாந்தரியாய்த் திரிந்து சலித்துப் பருவமுதிர்ந்த என்னையும் கடல் யாத்திரை செய்யும்படி திருப்பிக் கொண்டான்.

இதற்கிடையில் நான் இங்கிலாந்தில் ஒருவாறு குடித்தனம் செய்துகொண்டு வந்தேன். முதலில் ஒரு பெண்ணை விவாகம் செய்தேன். எங்களுக்குப் பிறந்த பிள்ளைகள் மூன்று. புத்திரர் இருவர், புத்திரி ஒருத்தி. இவ்விவாகத்தால் எனக்கு நஷ்டமுமில்லை, திருப்தியீனமுமில்லை. பிற்பாடு என் மனைவி இறந்துபோனாள். அதன்மேல் ஸ்பானியாவிற்குக் கடல்யாத்திரை போயிருந்த என் சகோதரன் புத்திரன் மிகுந்த

லாபம் பெற்றுத் திரும்பி வந்தான். தேசாந்தரம் போவதற்கு எனக்கு ஆசை யுண்டாயிருந்ததனாலும், அவன் வருந்திக் கேட்டதனாலும், அவன் சேவகம் செய்த கப்பலில் வியாபாரச் சரக்குகள் ஏற்றிக்கொண்டு, கிழக்கிந்தியாவிற்குப் போக உடன்பட்டேன்; நான் இக்கடல்யாத்திரை செய்தது 1694-ஞ.

இந்தப் பிரயாணத்தில் நான் தீவில் நூதனமாய்க் குடியேற்றிய விடத்தைப் போய்ப் பார்த்தேன். எனக்குப்பின் அத்தீவில் குடியேறிய ஸ்பானியரைக் கண்டேன். அவர்கள் சரித்திர வரலாறுகளையும், நான் அவ்விடத்திற் குடியேற்றிவந்த சண்டாளர் வரலாறுகளையும் ஆதியோடந்தமாய்ச் சொல்லக் கேட்டேன். அந்தச் சண்டாளர் மாறி மாறி அவர்களுடன் இணங்கியதும், பிணங்கியதும், ஐக்கியமாய்க் கூடி வாழ்ந்ததும், சண்டையிட்டுப் பிரிந்ததும், கடைசியில் ஸ்பானியர் அவர்களைப் பலாத்காரமாய் நடத்தியதும், சண்டாளர் ஸ்பானியருக்குக் கீழ்ப்பட்டதும், ஸ்பானியர் அவர்களை உபகரித்து நடந்ததும் ஆகிய இச்சங்கதிகள் அனைத்திலும் என் சரித்திரத்திற் கண்டபடி பற்பல அதிசய வர்த்தமானங்களும் விபத்துகளும் அடங்கியிருப்பதனாலும், அத்தீவில் அடுத்தடுத்துப் பலமுறை இறங்கிய கரிபியருடன் அவர்கள் பிரபல யுத்தம் செய்ததனாலும், அத்தீவில் அவர்கள் பற்பல சீர்திருத்தங்கள் செய்து, ஐந்துபெயர் கண்டத்திற்குத் துணிந்து போய் ஆடவர் பதினொருபெயரையும், பெண்கள் ஐந்து பெயரையும் சிறைபிடித்துக் கொண்டுவந்து குடியேற்றி, நான் அவ்விடத்திற் போகும்பொழுது, முன்பின் இருபது குழந்தைகள்வரையில் சந்தான விர்த்தி உண்டாயிருந்ததனாலும் இவை எல்லாவற்றையும் எழுதத் தொடங்கினால், வாசிப்பவர்க்கு இதமான சரித்திர புஸ்தகமாகும்.

இத்தீவில் நான் இருபது நாள்வரையில் தங்கினேன். அவர்களுக்கு ஆவசியகமான நானாவித போஜனபதார்த்தங்களும், இங்கிலாந்தினின்று நான் ஏற்றிக்கொண்டுபோன படைக்கலம், மருந்து, ரவை, குண்டு, வஸ்திரம், தொழிற்கருவி முதலியவைகளும் கொடுத்தேன். கம்மாளர் தொழில்

செய்யும்படி மாத்தச்சன் ஒருவனையும், கருமான் ஒருவனை யும் அவர்களிடத்தில் ஒப்புவித்தேன்.

அன்றியும், அத்தேசத்தின் நிலமுழுதையும் என் சொத் தாகும்படி செய்து, நிலத்தைப் பங்கு பங்காகப் பிரித்து, அவர்களுக் கிஷ்டமான அளவு விபாகித்துக் கொடுத்து, சமஸ்த காரியங்களையும வரைய ற செய்து, அத்தீவை விட்டு விலகுவதில்லையென்று அவாகளிடத்தில் வாக்குறுதி கேட்ட பின், அவாகளை விட்டு நீங்கினேன்.

அங்கிருந்து புறப்பட்டு, பிரேஜில் பிரதேசத்தில் போய் இறங்கி, மரக்கலமொன்று கிரயத்திற்கு வாங்கி, அத்தீவிற் குடியேறும்படி பின்னும் அதிக ஜனங்களைச் சேர்த்து, அதில் ஏற்றி அனுப்பினேன். மேலும், வேலை செய்வதற்கும், இஷ்ட முள்ளவர்களுக்கு மனைவியராவதற்கும் ஏற்ற ஸ்திரீகள் ஏழு பெயரையும், வேறு போஜனபதார்த்த முதலியவைகளையும் ஏற்றி அனுப்பினேன். அங்கிலேயருக்கு இங்கிலாந்தினின்று சில ஸ்திரீகளையும், அவர்கள் தோட்டம் செய்ய முயல்வார களானால், ஆவசியகமான விதை வகை, தொழிற்கருவி வகை முதலியவைகளையும் அனுப்புவதாக வாக்குத்தத்தஞ் செய் தேன். பிற்பாடு என் வாக்கைத் தவறாமல் நிறைவேற்றி னேன். அத்தீவிற் குடியேறிய ஜனங்கள், நான் அவ்விடத் திற்குப் போய், நானே அத்தீவின் காணியாட்சிக்காரனென்று வெளியிட்டு, அவர்களை வாரக்குடிகளாகப் பாவித்துப் பூ திதி விபாகம் செய்து கொடுத்தபின், மிகுந்த யோக்கிய வும் முயற்சியுடையோராகவும் நடந்தார்கள். அன்றியு பிரேஜில் பிரதேசத்தினின்று நான் அவர்களுக்கு ஐந்து களும், ஐந்து செம்மறியாடுகளும், சில பன்றிகளும் அனு பிருந்தேன். பசுக்கள் ஐந்தில் மூன்று சினைப்பசுக்கள். தரம் அத்தீவிற்கு நான் போனபொழுது, இவ்விலங்கு மிகவும் விருத்தியாயிருந்தன.

இந்த வாலாறுகளனைத்தையும், கரிபியர் முந்நூறுபெ அவ்விடத்திற் போய் இறங்கி, அவர்கள் தோட்டங்க நாசஞ்செய்ததும், குடிகள் அத்தனைபெயருடன் இரண் முறை நெருங்கிச் சண்டைசெய்து முதலில் அபஜயப்பட்

ன்று பெயர் சங்கரிக்கப்பட்டதும், கடைசியில் புயலடித்த
ாழுது பகைஞர் ஓடங்கள் சேதப்பட்டதனால் குடிகள்
யில் இறவாதிருந்த பகைஞரைப் பட்டினியால் மெலிவித்
டு படைக்கலங்களால் சங்கரித்தும் வெற்றி சிறந்து தங்
ள் தோட்டத்தைப் பின்னும் சுவாதீனமாக்கிக்கொண்டு
நாளதுவரையில் அத்தீவில் வாசஞ்செய்ததும் ஆகிய சமஸ்த
சங்கதிகளையும், அப்புறம் பத்து வருஷவரையில் நான் செய்த
நூதன யாத்திரைகளில் நிகழ்ந்த சில அதிசய வரலாறுகளை
யும், இனி ஒருவேளை இதற்கு அனுபந்தமாய் எழுதுவேன்.

ரூபின்ஸன் குரூஸோ சரித்திரம்

முற்றியது.

S. P. C K. Press, Vepery, Madras—1906.